# தாய்வீடு

ISSN 2369-3657

THAIVEEDU | DECEMBER | 2025

தாய்வீடு | டிசம்பர் | 2025



## கடலாதிக்க மூலோபாய மையமாகத் திருகோணமலையின் நிலைமாற்றம்
- ச. சத்தியதேவன்

## திருமலை: விகாரை - விவகாரம் - விகாரம்!
- என். சரவணன்

## மையமிழக்கும் மலையகத் தேசியம்
- அருள்கார்க்கி

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*

தாய்வீடு

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

## பசி வந்திட...

டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அரசுத்தலைவராகப் பதவியேற்று ஓராண்டுகூடக் கடந்திராத நிலையிலும், அவர் உலக ஒழுங்கில் ஏற்படுத்தியுள்ள பாரதூரமான தாக்கம் மெல்லமெல்லத் துலக்கமடையத் தொடங்கியிருக்கிறது.

ஆரம்பத்தில் டிரம்ப் நேசநாடுகள், விரோதநாடுகள் என்ற பாரபட்சமின்றி அனைத்து நாடுகளுடனும் எதேச்சாதிகாரமான வரிப்போரைத் தொடுத்தபோது, கனடா உள்ளிட்ட உலக நாடுகள் அனைத்தும் அவரை எவ்வகையிலேனும் திருப்திப்படுத்தி, தத்தமது நாடுகளுக்குச் சாதகமான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களை எட்டிவிடலாம், வரிகளைத் தளர்த்திவிடலாம் என்றே எத்தனித்தன.

ஆனால், யாரையுமே மதிக்காத ஒருவரை மதித்துப் பேசுவதில் பயனில்லை என்ற தெளிவை அனேகமான நாடுகள் இப்போது எட்டிவிட்டன என்றே தோன்றுகிறது. அண்மையில் கனடியப் பிரதமர் மார்க் கார்னியிடம் ‘நீங்கள் டிரம்புடன் கடைசியாக எப்போது பேசினீர்கள்?’ என ஓர் ஊடகவியலாளர் வினவியபோது, அதற்குக் கார்னி ‘யாருக்கு அதைப்பற்றிக் கவலை? அவருடன் பேசியிருக்கிறேன். முக்கியமானபோது மறுபடி பேசுவேன்,’ எனத் தட்டிக்கழித்துப் பதில் சொன்னமை சர்ச்சைக்குள்ளாகியிருந்தாலும், டிரம்புடனான பேச்சில் பயனில்லை என்ற முடிவுக்கு அமெரிக்காவின் மிகநெருக்கமான நேசநாட்டின் தலைவர் வந்துள்ளதையே சுட்டுகிறது.

‘எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் போடக்கூடாது’ என்று ஒரு சொலவடை ஆங்கிலத்தில் உண்டு. அந்தச் சொலவடையின் அர்த்தத்தின் ஆழத்தை மேற்குலக நாடுகள் இப்போது உணர்ந்துள்ளன. அதனாற்றான் ஒவ்வொரு நாடும் அமெரிக்காவைத் தவிர்த்துத் தம்மிடையே ஒப்பந்தங்களை மேற்கொள்வதிலே முனைப்பாக உள்ளன. இந்த முயற்சியிலே பல்வேறு நாடுகளும் வெற்றியடைந்தும் வருகின்றன.

இந்தப் பொருளாதார வெற்றிகள் இந்த நாடுகளுக்கு முக்கியமானவையே. அந்நாடுகளின் முன்னேற்றத்துக்கும், அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் பேணப்படுவதற்கும் அவற்றின் பொருளாதார வளர்ச்சி இன்றியமையாததே.

ஆனால், பொருளாதார வளர்ச்சியை மட்டுமே குறிவைத்து மாறிவரும் இந்த உலக ஒழுங்கு, தன்னகத்தே பல பேராபத்துகளையும் மறைத்து வைத்திருக்கிறது. ‘பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்,’ என்பது தமிழ் முதுமொழி. பொருளாதாரத்தைத் தேங்கவிடாது காப்பாற்றவேண்டும் என்ற பசி மேற்குலக நாடுகளுக்கு ஏற்பட்டதால், பறந்துபோன பத்தில் மனித உரிமைகள் பற்றிய அக்கறையும் சுற்றுச்சூழல் பற்றிய அக்கறையும் அடக்கம் என்பது பேராபத்தானதே.

உதாரணமாக, பாரிய கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் முன்னர் அவற்றால் சுற்றுச்சுழலுக்கு ஏற்படக்கூடிய பாதகங்களை ஆராய்ந்து, அந்தப் பாதகங்களின் தாக்கத்தைக் குறைக்கவும் அவற்றுக்கான நிவாரணங்களை நடைமுறைப்படுத்தவும் கட்டாயப்படுத்தும் சட்டங்கள் பெரும்பாலும் அனைத்து வளர்சியடைந்த நாடுகளிலுமே உண்டு. ஆனால், கடந்த ஓராண்டில், பொருளாதாரத்தை நிலைநிறுத்தக் கட்டுமானப்பணிகள் துரிதப்படுத்தப்படவேண்டும் எனக் காரணங்காட்டி, இந்தச் சுற்றுச்சூழல் ஆய்வுகள் தவிர்க்கப்படுவதும் மட்டுப்படுத்தப்படுவதும் அதிகரித்துள்ளது. கனடிய அரசு, அல்பேர்ட்டா மாகாண அரசுடன் அண்மையில் செய்துகொண்ட எரிபொருள் கடத்துகுழாய் விரிவாக்க ஒப்பந்தத்தில் சுற்றுச்சூழல் பற்றிய கரிசனைகள் உதாசீனம் செய்யப்பட்டதைக் கண்டித்து கனடிய அமைச்சர் ஒருவர் பதவி விலகியிருக்கும் நிகழ்வு நிலைமையின் பாரதூரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இதுபோன்ற பெருங்கட்டுமானத் திட்டங்களில் மிதிபட்டுப்போவது சுற்றுச்சூழல் நலன் மட்டுமல்ல, அந்த நிலங்களில் வாழும் பூர்வகுடி மக்களின் நிலம் சார்ந்த உரிமைகளும்தாம். இன்னொரு புறம், சீனா போன்ற நாடுகளுடன் - அந்நாடுகளின் சந்தைகளை மட்டுமே குறிவைத்து - மேற்குலக நாடுகள் தங்கள் நல்லுறவைப் புதுப்பித்துக்கொள்ள முண்டியடிப்பதும் நிகழ்கிறது. சுற்றுச்சூழல் சார்ந்த பொறுப்பேற்றல் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக சீனாவுக்கு வகுப்பெடுத்த மேற்குலக நாடுகள் பலவும், இப்போது அந்த விடயங்கள் பற்றிக் கவலைப்படுவதை ஒத்திவைத்துள்ளன அல்லது கைவிட்டுள்ளன.

டிரம்ப் இன்னும் மூன்றாண்டுகளில் பதவிவிலகிச் சென்றுவிடுவார். அவரும் அவரின் ஒத்தூதிகளும் மூன்றாவது தவணை பற்றிய கனவிலிருந்தாலும் அண்மைய தேர்தல் பின்னடைவுகளும் கட்சிக்குள்ளான பிளவுகளும் அது சாத்தியமில்லை என்பதற்கே கட்டியம் கூறுகின்றன.

ஆனால், டிரம்ப் ஏற்படுத்தியுள்ள இந்தப் புதிய உலக ஒழுங்கின் பாதகங்களிலிருந்து உலகம் மீள அதன் பின்னும் பல்லாண்டுகளோ, பல தசாப்தங்களோகூட ஆகலாம். அந்த வகையிலே, உலகம் இப்போது இருண்டதொரு காலத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறது என்பதைவிட, இருண்டதொரு காலத்துக்குள் நுழைந்துகொண்டிருக்கிறது என்பதே சரியான கணிப்பாக இருக்கும்.

# இம்மாதத் தாய்வீட்டில்...


பசி வந்திட... 3

திருமலை: விகாரை – விவகாரம் – விகாரம்! 5
- என். சரவணன்

சூடான்:
மத்திய கிழக்கின் புதிய காலனித்துவ நாடு 14
- ரதன்

உக்ரேன் போரில் இலாபமடைந்த
தரப்புகள் எவை? ... 17
- ரூபன் சிவராஜா

ஆபிரிக்காவின் ஒளிக்கீற்று புர்கினோ பாசோ 22
- சிவா முருகுப்பிள்ளை

மையமிழக்கும் மலையகத் தேசியம் 31
- அருள்கார்க்கி

இலங்கையில் மலையகத் தமிழர் 2.8% ?
–சனத்தொகைக் கணக்கெடுப்பும் கணக்குக் காட்டுதலும் 36
-மல்லியப்புசந்தி திலகர்

காணாமற்போன மலையகத் தமிழரும்
வயதாகும் நாடும் 42
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இன்றைய உலகில் தமிழர் – தேசியம்
ஒரு மறுசிந்தனை 48
- அஜித் ராஜபக்ச
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

இந்தியாவில் காணாமற்போகும் குழந்தைகள் 52
- நெல்லை ஜெயசிங்

A House of Dynamite – டைனமைட் வீடு 56
- ரதன்

கன்னிக்கொள்ளி 60
- பஞ்சகல்யாணி

மாணவர்களின் திறமைகளை
வெளிக்கொணரவேண்டிய ஆசிரியர்கள் 61
- அகமட் பிஸ்தாமி

விமர்சனம்: ஒரு புதிய அணுகுமுறை 64
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

அசுரவேக விமானங்கள் 70
- சுப்ரமணியம் ஜெயசீலன்

சமூகவலைத்தளங்கள் எனும் சிலந்திவலையில்... 74
- சியாமளா யோகேஸ்வரன்

குளிர் காலத்துக்குத் தயாராதல் 78
- செந்தூரன் புனிதவேல்

மின்சாரப் பாவனையும்
அதிக சேமிப்புக்கான தெரிவுகளும் 80
- வேலா சுப்ரமணியம்

கீழடி – இந்திய வரலாற்றைத்
திருத்தி எழுதும் தமிழ் நாகரிகம் 83
- சிறிதரன் ஹரிஷா

மலையகப் பெண்களின் சமூக இடைவெளியும்
பயணிக்கவேண்டிய பாதையும் 86
- சரவணன் லக்ஹரன்

முக்கிய வெற்றிக் காரணிகள் 90
- நடராசா சிறிரஞ்சன்

வீரவாகுதேவர் வேள்வி 92
- நாகராசா லக்சிகா

தெற்காசிய இளைஞர் புரட்சிகளும்
ஜனநாயக அறைகூவலும் 96
- நாகராசா தனுஸ்காந்

மலையக மண்ணின் கதைசொல்லி:
இளம் இயக்குநர் செல்வகுமார் ரினோசன் 98
- நிசன்குமார் கோபிநாத்

செல்வி விஷ்ணா திரவியராஜாவின்
இசைக் கச்சேரியாக மாறிய அரங்கேற்றம் 101
- த. சிவபாலு

மலைகள் நமது இயற்கை ஆபரணங்கள் 102
- சி. நற்குணலிங்கம்

மக்கள் வாழ்வும் மறதி நோயும் 104
- குமார் புனிதவேல்

ஃபிராங்கென்ஸ்டைன் 2025 106
- ஓவியர் ஜீவா

இத்தாலியின் சின்க் டெர்ரே 109
- குரு அரவிந்தன்

சிறுவர்கள்: வாசிப்பு, நூல்கள், நூலகம் 112
- பபி இரவி

பாலேந்திராவின், 'பிரத்தியேகக் காட்சி – ஏழு நாடகங்கள்'
நூல் அறிமுகமும் அரங்க நினைவலைகள் நிகழ்வும் 114

புலம்பெயர் இலக்கியத்துக்கு
மற்றுமொரு வடிவம் சந்திரகௌரி சிவபாலன் 117
- இக்பால் அலி

கொழும்பு மாநகரசபையின் முதலாவது மாநகராதிபதி
இரத்தினசோதி சரவணமுத்து 122
- வே. விவேகானந்தன்

சொற்கலை வல்லுநர் பக்கீர்த்தம்பி 125
- இனியவன் இசாறுத்தீன்

தீதும் நன்றும் – ஒரு பார்வை 129
- சியாமளா யோகேஸ்வரன்

'மணல் கடிகை' நாவல் காட்டும்
உறவுகள் மீதான பரிசீலனை 132
- சு. வேணுகோபால்

மேடையேற்றங்களைத் தூண்டும்
பிரத்தியேகக் காட்சி 136
- துஷி ஞானப்பிரகாசம்

'ஆகிதம்' சிறுகதைகளின் தொகுப்பு
நவமகனின் தொடரும் இலக்கியப் பயணம் 138
- ந. சண்முகரத்தினம் (சமுத்திரன்)

அஷ்ரஃப் சிஹாப்தீன் கவிதைகள்:
அரசியலும் அழகியலும் 142
- ஜிஃப்ரி ஹசன்

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் 145
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

தீபாவலியும் கார்த்திகைத் தீபமும் 148
- பால. சிவகடாட்சம்

ஓவியர் 'வின்செண்ட் வான் கோ'வும்
அவரது ஓவிய வாழ்வும் 150
- பவானி சற்குணசெல்வம்

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த
கலையாகக் காமன் கூத்து 153
- அருணாசலம் லெட்சுமணன

தற்காலப் பாலஸ்தீனப் பெண் கவிதைசொல்லிகள்:
எதிர்ப்பு, நெகிழ்ச்சி, அன்றாட வாழ்வின் குரல்கள் 158
- ஈழக்கவி

வரலாற்றில் 'ஊடல்'
திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் 163
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

சொல்லத்தான் நினைக்கிறேன் 2.0 168
- அருண்மொழிவர்மன்

கடலாதிக்க மூலோபாய மையமாகத்
திருகோணமலையின் நிலைமாற்றம் 172
- ச. சத்தியதேவன்

பாரதியார் பாடிய பக்திப் பாடல் 182
- கிருங்கை சேதுபதி

ஈழத்து நவீன கவிதையில் தொன்மம் 186
- சி. ரமேஷ்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் 192
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

கம்பனின் கருவூலம் திறந்து... 196
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

முலையறுகாதை!
பெண் துயரப் பெருங்கதை 201
- மா. சித்திவினாயகம்

இந்தியன் முகாம் 204
- ஏணெஸ்ற் ஹெமிங்வே
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# திருமலை:
## விகாரை - விவகாரம் - விகாரம்!

என். சரவணன்

திருகோணமலையில் ஒரு குளிர்பான (ஜுஸ் பார்) வியாபாரத்துக்குப் பாதுகாப்பு அரணாக புத்தர் சிலை வைக் கப்பட்டதில் எழுந்ததே தற்போதைய திருமலைச் சிக்கல்.

இந்த சர்ச்சையில், சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட அந்தக் கடைகள் பற்றிய உண்மைக் கதைகள் அனைத்தும் மறைக் கப்பட்டன. தமிழ்த் தேசிய கண்ணாடிக்கு ஊடாக இனப் பெருமித, இனச்சீற்ற நிலையில் இதை அணுகினால் உண் மையைக் கண்டடைய முடியாது. அது ஒரு கண்மூடித் தனமான விடையை மட்டுமே நமக்கு அளிக்கும்.

வாய்ப்பற்று அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த இனவாதத் தரப்பினரும், அவர்களை வைத்து அரசியல் ஆதாயம் தேடி வந்தவர்களும் வேகமாக இதனை ஒரு பெரும் வாய்ப்பாக ஆக்கிக் கொள்ள முயன்றார்கள். ‘பௌத்த மதத்தைக் காப் பாற்ற நவம்பர் 21-ஆம் திகதி நுகேகொடைக்கு வாருங்கள்’ என்று சிங்கள பௌத்தப் பெரும்பான்மையினரிடம் கோரிக் கையை ராஜபக்ச தரப்பினர் வைத்தனர். அக்கூட்டத்துக்கு பெருமளவு பிக்குமாரைத் திரட்டுவதில் அவர்கள் தோல்வி கண்டபோதும், நுகேகொட கூட்டத்தில் உரையாற்றியவர்கள் பலரும் இதனை வாய்ப்பாக ஆக்கிக்கொண்டு இனவாதம் கக்கியதைக் காண முடிந்தது.

ஜனாதிபதி அனுராகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், நாமல் ராஜபக்சவுக்கு குறியீடாகக் குறிப் பட்ட ‘சின்ன அனுமன்’ என்கிற சொல் அனைத்து இனவாத சக்திகளுக்கும் பொருந்தும். நாட்டையே இனவாத தீப்பந் தத்தை வைத்துக் கொண்டு கொளுத்த முயலும் அனுமான் கள் தான்.

பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டு, உணர்வுகளைப் பயன்படுத்தி, சிங்கள பௌத்தர்களை உசுப்பேற்றுவதில் ஞானசாராக்கள், எந்தளவு திறமை சாலிகள் என்பதை வரலாறு நிரூபித்துள் ளது. இது ஒரு பழைய நாடகப் பிரதி(Drama script). ஒரங்கேற் டப்பட்ட நாடகப் பிரதி. ஆனால் காலாவதியாகாத நாடகப் பிரதி. கொஞ்சம் இடைவேளையை மட்டும் எடுத்துக்கொண்ட நாடகப் பிரதி. அதைப் பயன்படுத்திக்கொள்ள பாசிச-அர சியல் நலன்களை அடைய முற்படும் சரியான சக்திகள் வரும் போது அவர்களின் கைகளுக்குள் சிக்கிவிடுகிறது இந்த நாடகப் பிரதி.

அமைச்சர் நளிந்த கூறுவது போல இது ஒரு திடீர் சம்பவம் அல்ல. பல தொடர் சம்பவங்களின் நீட்சியாக இதனைப் பார்க்கவேண்டும். ஓரிடத்தில் நிறுத்தி ஒன்றில் மட்டும் கவனம் குவிக்கப்படுவதன் மூலம் நாம் பிழையான முடிவுகளுக்கும், தவறான வியாக்கியானங்களுக்கும் வந்து விடுகிறோம். அவ் வாறு நிகழக்கூடாது.

தற்போது இதனைப் பெரும் குழப்பகரமான நிலைக்கு கொண்டு சென்றுகொண்டிருப்பவர்கள் இதனை ‘இனமுறுகல் நிலைக்கு உயர்த்தவேண்டும்’ என்கிற நோக்கத்தை உடைய வர்களே அன்றி, திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் அல்லர்.



திருகோணமலை, சிங்களக் குடியேற்றங்களின் மூலம் வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற் காகச் சுதந்திரத்துக்கு முன் பிருந்தே இனவாத வேலைத்திட்டங்கள் மையம் கொண்ட ஒரு பகுதி. அந்த இனவாத சதியில் கணிசமான வெற் றியையும் பேரினவாதம் அடைந்திருக்கிறது. இன்று செயற்கையாக சிங்களவர்களின் பெருக் கம் உருவாக்கப்பட்ட பிரதேசம். சிங்களவர்கள் வாழும் இடங்களிலெல்லாம் உட்கட்டமைப்பின் பெயரால் பல விகாரைகள் உருவாக்கப்பட்ட பூமி. அதுமட்டுமன்றி வழிபடுவதற்கு பௌத்தர் களே இல்லாத இடங்களிலும் புத்தர் சிலை களை அமைத்து காலப்போக்கில் விகாரை களாகப் பெருப்பிக்கப்பட்டு பாழடைந்த நிலை யில் பல விகாரைகள் அங்கே உள்ளன.

அமைதிக்குப் பெயர் போன திருகோணமலை கடற்கரைக்கு அருகாமையில், Fort Frederick வீதிக்கும் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில், 'மிஹிந்துபுர மஹிந்த வங்ச குனானுஸ்மர்ன' என்ற பெயரில் 1951-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டதாகக் கூறப்படும் முதலாவது 'தஹம் பாசல' எனப்படுகிற ஞாயிறு அறநெறிப் பாட சாலை' இருக்கிறது. சுனாமிப் பேரழிவுக்கு முன் இங்கு ஒரு கட்டடம் இருந்ததாகவும், அது சுனாமியால் முற்றிலும் சேதமடைந்ததாகவும் கூறப்படுகிறது. அதன் பின்னர், கடலரிப்பைத் தடுக்க திருகோணமலை மாநகர சபை பைன்ஸ் மரங்களை நட்டுள்ளது. இன்று, அந்த முழு கரை யோரமும் பைன் மரங்களால் சூழப்பட்டு, கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தாலும் (கரையோர பாது காப்புத் திணைக்களம்) கரையோரப் பாதுகாப்புத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## காணி உரிமை சர்ச்சை:

2014-ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலத்தை 'பூஜா நிலப் பத்திரம்' மூலம், கரை யோரத்தில் இருந்த 40 பேர்சஸ் நிலத்தை 'ஶ்ரீ சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாரை'-க்கு வழங்கியிருக்கிறார். இந்த விகாரை Fort Frederick வீதியில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் அமைந் திருக்கிறது.

இங்கேதான் சர்ச்சை கிளம்பியது: இந்த 40 பேர்சஸ் நிலத் தில் எந்தவிதமான கட்டடங்களையும் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதுதான் நிதர்சனம். இந்த விடயம் 2008 செப்டம்பர் 15-ஆம் திகதி, நில அளவைத் திணைக்க ளத்தின் திருகோணமலை மாவட்ட நில ஆணையாளர் வி. முருகதாஸ் அவர்களின் கையொப்பத்துடன் வழங்கப்பட்ட நில அளவைத் திணைக்கள அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சுனாமிக்குப் பின்னர் கடலில் இருந்து 100 மீட்டருக்கு உட்பட்ட பகுதிகள் கரையோர பாது காப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலம் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டதால், இவ்வாறான நிலங்களில் கட்டுமானங்களுக்கு அனுமதி வழங்குதல் தொடர்பான பொறுப்புக் கூறல்கள் மேலும் அதிகரித்தன. ஏனெனில், எதிர் காலத்தில் மீண்டும் சுனாமி போன்ற அனர்த்தங்கள் ஏற்பட்டால், கரையோரக் கட்டடங்களில் இருப்பவர்களுக்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டால், அனுமதி வழங் கிய கரையோர பாதுகாப்புத் திணைக் களமே பொறுப்புக்கூற வேண்டிவரும்.

> “
> **சுனாமிக்குப் பின்னர் கடலில் இருந்து 100 மீட்டருக்கு உட்பட்ட பகுதிகள் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டதால், இவ்வாறான நிலங்களில் கட்டுமானங்களுக்கு அனுமதி வழங்குதல் தொடர்பான பொறுப்புக் கூறல்கள் மேலும் அதிகரித்தன.**
> ”

## சட்டவிரோதக் கடை:

இத்தகைய கடுமையான சட்டப் பின்ன ணியில், 2014-ஆம் ஆண்டு, விகா ரைக்கு மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய 40 பேர்சஸ் காணியில் ஒரு கடையினை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தன. எந்தவித அனுமதியோ, அறிவித்தல் களோ இன்றி அமைக்கப்பட்ட இந்தக் கடையை, ஆரம்பத்தில் கரையோர பாதுகாப்புத் திணைக்களம் தடுத்து நிறுத்தியது. 'இந்த நிலத்தில் கடை அமைப்பதாயின் உரிய அனுமதிக ளைப் பெற்று வந்தால், ஒரு வருடத்துக் குரிய தற்காலிக பெர்மிட் வழங்கப்படும்' என அவர்கள் நிபந்தனை விதித்தார் கள்.

இதையடுத்து, பல்வேறு நிறுவனங்க ளின் அனுமதிகள் பெறப்பட்டு அந்தக் கடை அமைக்கப்பட்டது. நகராட்சி ஆணையாளர், மாநகர சபை, பௌத்த மத அலுவல்கள் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை (MEPA), வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு என்பவற்றின் அனுமதியுடன் அக்கடை அமைக்கப்பட்டிருக்கிறது. விகாரையைச் சார்ந்தவர்களால் சமர்ப்பித்த கடையின் திட்டத்துக்கு, கரையோர பாதுகாப்புத் திணைக்களம் 127 சதுர அடிகளுக்கு மட்டுமே (CCCRN /ADC/6578) அனுமதி வழங்கியது. 'இந்த எல்லையைத் தாண்டி கடையை விஸ்தீரணம் செய்தால் அவ்வனுமதிப் பத்திரம் (பெர்மிட்) தடை செய்யப்படும்' என்றும் அதில் குறிப் பிடப்பட்டிருந்தது.

இந்தக் கடையை நடத்துபவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை பிரதேச ஒருங்கிணைப்பாளர் தீபானி லியன கேயின் மகளும் மருமகனும் ஆவர். இந்தக் கடையால் பிரதான வீதியில் இருந்து கடற்கரைக்குச் செல்லும் பாதை முற்றிலும் தடையை ஏற்படுத்தும் விதத்தில் கடைக்காரர் விஸ்தரித்துள்ளார். இந்தக் கடைக்கு எதிராக, இது ஒரு சட்ட விரோதக் கடை எனப் பலமுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. மேலும், 2023-ஆம் ஆண்டு அன்றைய ரணில் விக்கிரமசிங்க அரசின் கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த செந்தில் தொண்டமானுடன் இணைந்து தீபானி லியனகே இந்தக் காணிகளை அபகரித்துள்ளதாகவும் ஊர் மக்கள் சிலர் குற்றம் சுமத்தினார்கள்.

## அனுமதி ரத்து:

சட்டவிரோதமான கட்டுமானம் எனக் கூறி, கடையின் உரிமை யாளர் திலக் பெரேராவுக்கு எதிராக மாநகர சபை 2023-ஆம்

ஆண்டு வழக்கு தொடர்ந்தது. கரையோர பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தாலும், இந்தக் கடை தொடர்பாக மாநகர சபைக்கும் பொறுப்புகள் உள்ளன.
விகாரைக்கு வருமானம் ஈட்டித் தரும் நோக்கில் குத்தகைக்கு விடப்பட்ட இந்தக் கடை, ஆரம்பத்தில் வழங்கப்பட்ட 127 சதுர அடிகளின் எல்லையைத் தாண்டி, 400 சதுர அடிகள் வரை விஸ்தீரணம் செய்யப்பட்டது. சட்டத்தை மீறி எல்லை தாண்டி நடத்தப்பட்டதால், இரண்டாவது முறையாக அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டபோது, கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, 2025 ஜூலை 18-ஆம் திகதி அந்தப் அனுமதிப்பத்திரத்தைத் தடை செய்தார்.

இந்தத் தடைக்கு எதிராக விகாரை, கரையோர பாதுகாப்பு அதிகார சபை அங்கம் வகிக்கும் சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு மேல்முறையீடு செய்தது. எனினும், அந்த மேல்முறையீடு 2025 ஒக்ரோபர் 16-ஆம் திகதி நிராகரிக்கப்பட்டது. ஏழு நாட்களுக்குள் கடையை அகற்றிக் கொள்ளுமாறு சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கே.ஆர். உடுவாவல விகாரைக்குக் கடிதம் மூலம் அறிவித்தார். அகற்றப்படாத பட்சத்தில், சட்டத்தின்படி கடையை அகற்றுமாறு கரையோர பாதுகாப்புத் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு அவர் பணித்தார்.

## வியாபார இருப்புக்கு ஆயுதமான புத்தர் சிலை:

இந்தப் பணிப்பைத் தொடர்ந்து நவம்பர் 4-ஆம் திகதி கரையோர பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், நகராட்சி ஆணையாளர், பொலிசார் மற்றும் மாநகர சபை ஊழியர்களுடன் கட்டடத்தை அகற்றச் சென்றனர். பேச்சுவார்த்தையின்போது, ஏழு வேலை நாட்களுக்குள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக விகாரை சார்பில் தேரர்கள் உறுதியளித்தனர்.

இதற்கிடையே, விகாரையின் தலைமை தேரர் - திருகோணமலை கல்யானவன்ச திஸ்ஸ, துறைமுக பொலிஸ் நிலையத்தில், ‘இந்தக் கட்டடத்துக்கு எதிராக மாநகர சபை ஒரு வழக்குத் தொடர்ந்துள்ளதால், இது வழக்கின் சாட்சியாக உள்ளது. எனவே இதனை அகற்ற முடியாது’ என ஒரு முறைப்பாட்டை மேற்கொண்டார். எனினும், இதனை ஒரு காரணமாகக் கொண்டு சட்ட விரோதக் கட்டடத்தை அகற்றாமல் இருக்க முடியாது எனப் பொலிசார் பதிலளித்தனர்.
கரையோர பாதுகாப்புத் திணைக்களமும் பொலிசாரும் வழங்கிய 7 வேலை நாட்கள் நவம்பர் 14 வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தது. நவம்பர் 17-ஆம் நாள் - திங்கட்கிழமை, கடை அகற்றப்படவிருந்த நிலையில், நவம்பர் 16-ஆம் திகதி காலையில் - 1951-ஆம் ஆண்டு இருந்ததாகக் கூறப்படும் ‘ஞாயிறு தஹம் பாடசாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்காக’ எனக் குறிப்பிட்டு ஓர் அடிக்கல் நாட்டும் வைபவத்தை நடத்தியுள்ளனர். அதே தினம் இரவு, அந்த இடத்துக்கு ஒரு புத்தர் சிலையும் கொண்டு வந்து வைக்கப்பட்டது.

கரையோர பாதுகாப்புத் திணைக்களச் சட்டத்தின்படி, அனுமதியின்றி எந்தவொரு கட்டுமானத்தையும் அந்த எல்லையில் அமைக்க முடியாது. எனவே, நவம்பர் 16-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, கரையோர பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் உடனடியாக துறைமுக பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்தனர். இதனை துறைமுக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி R.A.J.S ரணவீர உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இம்முறைப்பாட்டை அடுத்து, திருகோணமலை உதவி பொலிஸ் அத்தியட்சகர் (SSP) தலைமையிலான பொலிஸ் குழு அங்கு சென்று, சட்டவிரோத கட்டுமானத்தை நிறுத்துமாறு விகாரைத் தரப்பைக் கேட்டுக் கொண்டது. ஆனால், அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல், இரவில் புத்தர் சிலையைக் கொண்டு வந்து வைத்தனர்.





நவம்பர் 16-ஆம் திகதி இரவு, பொலிசார் சிலையை பாதுகாப்பாகப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, பொலிஸாருக்கும் தேரர்களுக்கும் இடையே குழப்ப நிலை ஏற்பட்டது. இதில் இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மற்றும் இரண்டு தேரர்கள் காயமடைந்தனர். காயமடைந்த தேரர்கள் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மறுநாள் திங்கட்கிழமை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால பாராளுமன்றத்தில், சிலை அகற்றப்பட்டதற்கான நோக்கம் புத்தர் சிலையை பாதுகாப்பதுதான் என்று தெரிவித்தார்.

### அரசியல் அதிர்வலைகள்:

இந்தச் சம்பவங்கள் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியதுடன், அரசாங்கத்துக்கு எதிரான பாரிய குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சியினரும் தமிழ் அரசியல்வாதிகளும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து முன்வைத்தனர்.

நவம்பர் 17-ஆம் திகதி நண்பகல் ஒரு மணி அளவில், புத்தர் சிலை பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் மீண்டும் குறித்த இடத்துக்குக் கொண்டு வந்து வைக்கப்பட்டது.

நவம்பர் 16-ஆம் திகதி காலையில் அடிக்கல் நாட்டிய கிழக்கு மாகாண அமரபுர பீடத்தின் தலைமைத் தேரர்களில் ஒருவரான ‘அம்பிடியே சீலவங்ச திஸ்ஸ தேரர்’, இலங்கை பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவைச் சந்தித்து, 17-ஆம் திகதி திருகோணமலையில் நடந்த சம்பவம் குறித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர், 18-ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, ‘மிஹிந்தலை தேரர் - வலவாஹெங்குணாவெவே தம்மரதன’ மற்றும் நாமல் ராஜபக்சவுடன் கலந்துரையாடிய ‘அம்பிடியே சீலவங்ச திஸ்ஸ தேரர்’ ஆகியோர் திருகோணமலைக்கு விஜயம் செய்து, இடத்தை பார்வையிட்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தனர்.

அதேபோல், 18-ஆம் திகதி மாலையில் பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகோட அத்தே ஞானசார தேரரும் குறித்த பிரதேசத்தை பார்வையிட்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோது, இனங்களுக்கு இடையே மீண்டும் பல மோதல்களை ஏற்படுத்தக் கூடிய விதத்திலான பல கருத்துகளும் அவரது பேச்சில் காணப்பட்டன.

> “
>
> **நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும், கரையோர பாதுகாப்பு அதிகார சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கட்டுமானம் அமைப்பதாயின் உரிய அனுமதிகள் பெறப்பட வேண்டும். அந்த அடிப்படையில், தற்போது புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள கட்டடமானது முற்றிலும் சட்டவிரோதமானது ஆகும்.**
>
> ”

1981-ஆம் ஆண்டின் 57-ஆம் இலக்க கரையோர பாதுகாப்பு சட்டம் மிகவும் பலம் வாய்ந்தது. அதன் பிரகாரம் கரையோர பாதுகாப்பு அதிகார சபையின் ஆணையாளர் நாயகத்துக்கு, நீதிமன்ற அனுமதிகள் எதுவும் இல்லாமலே சட்டவிரோதமான கட்டடங்களை அகற்றுவதற்கான பணிப்பை பொலிஸாருக்கு வழங்க முடியும். நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும், கரையோர பாதுகாப்பு அதிகார சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கட்டுமானம் அமைப்பதாயின் உரிய அனுமதிகள் பெறப்பட வேண்டும். அந்த அடிப்படையில், தற்போது புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள கட்டடமானது முற்றிலும் சட்டவிரோதமானது ஆகும். இதை பொலிசார் உட்பட பல அதிகாரிகளும் உறுதிப்படுத்தினர்.

இறுதியாக, நவம்பர் 18-ஆம் திகதி காலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன தலைமையில் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் எட்டப்பட்ட முக்கிய முடிவுகள்:

- புத்தர் சிலையை விகாரைக்குச் சொந்தமான குறித்த இடத்தில் வைக்கலாம்.

- விகாரைக்குச் சொந்தமான பழைய கட்டடங்கள் இருந்ததாகக் கூறப்படும் நிலத்தை அடையாளப்படுத்தி, உரிய வகையில் எல்லைகளை அமைக்க வேண்டும்.
- அந்த நிலம் கரையோர பாதுகாப் புத்திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதி என்பதால், எந்தக் கட்டடம் அமைப்ப தாயினும், உரிய நிறுவனங்களிடமிருந் தும் சட்டப்பூர்வ அனுமதி பெறப்பட வேண்டும்.

இதைப் பற்றி ரொஷான் அக்மீமன தனது முகநூலில் இவ்வாறு குறிப்பிட்டார்:

'திருகோணமலைக்கு வெளியே இருந்து வந்த சிறு குழுவொன்று திருகோணமலைக்குள் இனவாத மோதல்களை ஏற்படுத்த முயன்றனர். இனவாத தீயால் எரிந்து இன்னும் அந்த காயங்களால் துடித்துக்கொண்டிருக் கும் திருகோணமலை மக்கள், அந்த முயற்சியை ஒன்றாகச் சேர்ந்து தோற் கடித்துள்ளனர். எங்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே நாம் இந்த தீயை அணைப்பதற்காகப் போராடியுள்ளோம். எங் கள் ஆட்சியின் கீழ் மீண்டும் இனவாதம் என்ற தீயை எரிய அல்லது அதனைப் பயன்படுத்த ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டோம்.'

**“ நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும், கரையோர பாதுகாப்பு அதிகார சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கட்டுமானம் அமைப்பதாயின் உரிய அனுமதிகள் பெறப்பட வேண்டும். அந்த அடிப்படையில், தற்போது புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ள கட்டடமானது முற்றிலும் சட்டவிரோ தமானது ஆகும். ”**

அரசியல் இலாபமீட்டும் இலகுவழியாக பௌத்த தேசிய வாதத்தை நிலைநிறுத்தி பல்லாண்டு கள் ஆகிவிட்டன. திருமலையில் இருந்து எந்தத் தமிழரும் முஸ்லிம்களும் இந்த பிரச்சினையில் சம்பந்தப்படவில்லை என்பதையும் நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.

### அரசியல் ஆதாயம் தேடுவோம்:

இந்தச் சம்பவத்தின் பின்னணியில், 'பலாங்கொடை கஸ்ஸப்ப' என்ற தேரரும் திருகோண மலை மாவட்டத்தில் சில வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட இனக் கலவரங்களின்போது தீவிரமாகச் செயற்பட்ட பலரும் மீண்டும் உயிர்பெற்றுள்ளார்கள். ஞானசார தேரரின் வருகையும் பல தேரர்களின் கருத்துகளும் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் மிகப் பெரிய பேசுபொருளாக மாறியுள்ளன.

இதன்பின், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையின் முதல் 15 நிமிடங்கள் இந்த திருகோணமலை சம்பவம் பற்றியும், இதனைக் காரணமாகக் காட்டி மீண்டும் இந்த நாட்டில் இனவாதத்தைத் தூண்ட யாராவது முயன்றால், அதற்கு எதிராகத் தற்கால தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் (NPP) நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன ஒரு முக்கிய கருத்தை வெளியிட்டிருந்தார். பிரதேசத்திற்கு வெளியிலிருந்து வந்த ஒரு குழு இனவாத மோதலை உருவாக்க முயன்றதாகவும், அம்முயற்சியைத் திருகோணமலை மக்கள் முறியடித்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இம்மாதிரியான குறுகிய சதித்திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்ற சில நபர்களைத் தடுப்பதில் திருகோணமலை மாவட்ட சாசனாரக்ஷகப் பேரவையின் செயலாளரான பௌத்த தேரர் உட்பட, திருகோணமலையின் முதிர்ந்த, அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட தேரர்களுக்கும் பங்குண்டு. உரிய நேரத்தில் இதன் உண்மை நிலையைப் பற்றிய விளக்கங்களைக் கொடுத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள்.



‘அதேபோல், திருகோணமலைக்கு வெளியிலிருந்து வந்த சிறு குழுவினர் திருகோணமலையின் ஒற்றுமையைக் குலைக்கச் சதி செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, அந்தச் சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராகத் தலையிட்ட திருகோணமலை மக்களைப் பற்றி நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். மேலும், இந்தச் சம்பவத்தை இனங்களுக்கு இடையிலான மோதலாக மாற்ற முயன்ற இனவாத அரசியல்வாதிகளின் தூண்டுதல்களுக்கு ஆளாகாத சிங்கள, தமிழ் அனைத்துச் சகோதரர்களைப் பற்றியும் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.’ என்கிறார் தேரர்.

இதில் சஜித் பிரேமதாசவும் அரசியல் இலாபம் தேடுவதற்காக பௌத்த தரப்புக்கு அநீதி நிகழ்ந்துவிட்டதாக கூறித் திரிந்தார். புத்தர் சிலை விவகாரம் தேசியப் பிரச்சினை என்றும் பௌத்தத்துக்கு முன்னுரை அளிப்பது அரசின் கடமையென்றும் அவர் அறிக்கை விடுத்தார். சஜித்துக்குள் இருக்கும் சிங்கள பௌத்த இனவாதம் அவ்வப்போது மட்டுமே வெளியில் தெரிகிறது. சஜித் பிரேமதாசா புத்தசாசன அமைச்சராக இருந்தபோது வட கிழக்கில் வெஹர விகாரைகள் ஆயிரம் (1000) அமைப்பதற்காக ரூபாய் 500 மில்லியன் ஒதுக்கி அனுமதி வழங்கினார்.

## அரசும் அரசாங்கமும்!

நீங்கள் அரசாங்கத்தைத் தான் மாற்றி இருக்கிறீர்கள். அரசையல்ல. அரசின் கட்டமைப்பையோ, அரசின் வடிவத்தையோ அரசின் பண்பையோ மாற்றவில்லை.

எந்த அரசாங்கம் வந்தாலும் நிறுவனமயப்பட்ட அந்த கட்டமைப்பில் தங்கியிருப்பதைத் தவிர வேறு வழியில்லை. NPP அரசாங்கமும் இதில் விதிவிலக்கில்லை.

> “
>
> **இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நாளாந்தம் செயற்கையாக காரணங்களை உருவாக்கிவரும் எதிர்த்தரப்புகளின் கைகளில் தற்போது இருக்கிற மிகப்பெரிய ஆயுதம் ‘பௌத்தமே’. சிங்களத்தைக்கூட ஒதுக்கிவிடலாம். ஆனால், பௌத்தம் மதத்துடன் தொடுக்கப்பட்டு புனித மேலுயர்ச்சி நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது**
>
> ”

சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தமும், அதன் கட்டமைப்பும் ஓரிரவில் தோன்றவில்லையோ. அது போல அதை ஓரிரவில் நீக்கவும் முடியாது. அது நிறுவனமயப்பட எந்தளவு விலையைக் கொடுத்ததோ அதைவிட பெரிய அளவு விலையை அதை நீக்குவதற்கும் எடுக்கும். இந்த யதார்த்தத்தைப் புரியாதவர்கள் வெறும் சம்பவங்கள், நிகழ்வுகள் என்பவற்றுக்குள் புதைந்துகொண்டு அந்த வலயத்துக்குள்ளேயே போராடிக்கொண்டு இருப்பார்கள்.

அரசு என்பது நிறுவனமயப்பட்ட பேரினவாதக் கட்டமைப்புத் தான். அதில் மாற்றங்களைக் கொண்டுவருவது அரசாங்கங்களின் பொறுப்பு. மாறாக, இதுவரை இருந்த அரசாங்கங்கள் அந்த பேரினவாத நிகழ்ச்சி நிரலில்தான் குளிர்காய்ந்தன. அதே சிங்கள பௌத்த பேரினவாத கட்டமைப்பை குளிர்வித்துத்தான் ஆட்சியைத் தக்கவைத்துக்கொண்டன.

வழமையான அரசாங்கங்களில் இருந்து நிச்சயம் இந்த அரசாங்கம் இதை அணுகுவதில் மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. அந்த மாற்றம் நம்மை நிச்சயம் முழுமையாக திருப்திப்படுத்தாது. இந்த அரசாங்கத்தைவிடச் சிறந்த அணுகுமுறையைக் கொண்ட அரசாங்கமொன்றை உருவாக்குங்கள். அதுவரை இதுவே இப்போதைக்கு இருக்கிற தெரிவு. அவ்வளவே.

இந்த அரசாங்கம் பதவியேற்றதில் இருந்து இனவாதம் தலையெடுக்க விடாதபடி பார்த்துக்கொண்டது உண்மை. காலம் காலமாக அரசாங்கத்தின் ஆதரவின்றி இனவாதம் காரியம் சாதித்ததில்லை. இந்த அரசாங்கம் அதற்கு வழிவிட்டதில்லை.

இதுவரை புறச்சூழலில் மேற்கொள்ளப்பட்ட முஸ்தீபுகள் தோல்வியுற்றன. இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நாளாந்தம் செயற்கையாக காரணங்களை உருவாக்கிவரும் எதிர்த்தரப்புகளின் கைகளில் தற்போது இருக்கிற மிகப்பெரிய ஆயுதம் ‘பௌத்தமே’. சிங்களத்தைக்கூட ஒதுக்கிவிடலாம். ஆனால், பௌத்தம் மதத்துடன் தொடுக்கப்பட்டு புனித மேலுயர்ச்சி நிலையில் வைக்கபட்டிருக்கிறது. அதில் கைவைப்பது மகாவம்சம் வழிவந்த ‘தம்மதீப’ கொள்கையில் கை வைத்ததாகும்.

எதிர்க்கட்சித் தரப்பினருக்கு இவ்விவகாரம் மிகப்பெரிய வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. புத்தர் சிலைகள், பௌத்த விகாரைகள், தொல்லியல் என்கிற பேரில் களத்தில் இறங்க மீண்டும் பெரு வாயில்கள் திருமலைக்கு ஊடாகத் திறக்கப்பட்டு விட்டன என்பது தெளிவாகத் தெரிகிறது.

இலங்கையில் புத்தரை ஆக்கிரமிப்பின் சின்னமாக ஆக்கிவிட்டதன் நீட்சியை நம்மால் நன்றாக புரிந்துகொள்ளமுடியும். வழிபட பௌத்தர்கள் இல்லாத இடங்களிலெல்லாம் புத்தர் சிலைகளையும், பௌத்த விகாரைகளையும் கட்டுவதற்கும்; அன்றைய மிஷனரி ஆக்கிரமிப்புகளுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது.

திருமலை விவகாரம் இத்தோடு முடியப்போவதில்லை. நாடளாவிய ரீதியில் சிங்கள பௌத்தத் தரப்பு எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் இனி இவற்றைக் கையாளும். அரசாங்கம் குறைந்தபட்சம் சட்டத்தின் படியும், நீதியின் படியும் இயங்குவதை உறுதிப்படுத்தவேண்டும்.

அரசியல் அதிகாரத்தை இலக்காகக் கொண்ட ஓர் அயோக்கியத்தனமான திட்டத்துக்காக, ‘உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்’ 300 உயிர்களைப் பலிகொண்டதா? என்ற கேள்வி இன்றும் நிலவுகிறது. இந்நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்ட அரசியல் ஆட்டங்களில், மீண்டும் ஒருமுறை அப்பாவி உயிர்கள் பலிகொடுக்கப்படுமா?



அனுர அரசாங்கம், முன்னைய அரசாங்கங்கள் போன்று எந்த விதமான மாற்றமும் அற்ற ஓர் அரசாங்கம் என்று நிறுவுவதில் சிங்களக் கட்சிகளுக்கு இணையாக தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகள் பெரும் பிரயத்தனம் செய்கின்றன.

இந்தக் கட்சிகள் அனைத்திற்கும் தெரியும், இந்த அரசாங்கம் நிலைக்கும் பட்சத்தில், தங்களது இருப்பு படிப்படியாக உதிர்ந்து போகும் என்பது. இவர்கள் மக்களைத் தங்கள் பக்கம் ஈர்ப்பதற்கான ஒரே வழி இன வாதம் மட்டும்தான். அதை வைத்துத்தான் சுதந்திரத்திற்குப் பின்னான இந்தக் கட்சிகளின் தங்கள் இருப்பை வைத்துக்கொள்ள முடிந்தது.

உறுதியாக வேரூன்றியிருக்கிற பேரினவாத சித்தாந்தத்துக்குள்ளும், அரச கட்டமைப்புக்குள்ளும் அரசின் வடிவமைப்புக்குள்ளும் இருந்துகொண்டுதான் அரசாங்கம் மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அவ்வாறான மாற்றங்களே இப்போது அனுர அரசினால் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள். கொள்கையளவில்கூட அதற்குத் தயாரான அரசாங்கங்கள் இதற்கு முன்னர் இருந்ததில்லை. எனவே தற்போதைய அரசாங்கத்தின் முயற்சிகளை தீவிரப்படுத்த மக்களின் பங்களிப்பும் அவசியம்.

> **புத்தர் தனக்கு சிலைகள் வைக்க சொன்னதுமில்லை. விகாரைகள் கட்டவும் சொன்னதில்லை. மாறாக தர்ம உபதேசத்தை பரப்பச் சொன்னார். அதைக் கடைப்பிடிக்கச் சொன்னார். எதை செய்யச்சொன்னாரோ அதைச் செய்வதில்லை. எதை சொல்லவில்லையோ அதைச் செய்கிறார்கள்.**

இதுவரை நிகழதாத மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. அந்த மாற்றங்களை வரவேற்று அரசாங்கத்தை பலப்படுத்தினால். மட்டுமே, நாம் எதிர்பார்க்கும் மாற்றம் நிகழும். இல்லை இன வாதத் தீயில் இந்தத் தீவு கருகிப் போவதை தடுக்க முடியாது.

## பௌத்தத்தை நீக்க முடியுமா?

பௌத்த மதத்துக்கு வழங்கப்படும் அரச முக்கியத்துவம் இனி அகற்றப்பட முடியாது. ஏன் அப்படி சொல்கிறோம். 1815-ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கையினூடாக இலங்கையில் பௌத்த மதத்துக்குரிய இடத்தைப் பாதுகாப்பதாக பிரித்தானியர்கள் வாக்குறுதியளித்த போதிலும், 1947-ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பினால் இந்த அந்தஸ்து பறிக்கப்பட்டது.

இருபத்தைந்து வருடங்களின் பின்னர், 1972-ஆம் ஆண்டு திருமதி சிறிமாவோ அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட புதிய குடியரசு அரசியலமைப்பின் மூலம் பௌத்தத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

1978-இல், ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சிக்கு வந்த பின்னர், இன்னொரு புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்பட்ட போதும் இந்த உறுப்புரையில் எந்த மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக அதை மேலும் வலுப்படுத்தக்கூடியவகையில் சக்திவாய்ந்த திருத்தம் சேர்க்கப்பட்டது.

இதற்கமைய நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தால் மாத்திரமே தற்போதைய அரசியலமைப் பின் 9-வது சரத்தை மாற்ற முடியும் அது மட்டுமன்றி அதற்காக சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் ஆணையும் பெறப்பட வேண்டும். அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து



> வழிபட பௌத்தர்கள் இல்லாத இடங்களிலெல்லாம் புத்தர் சிலைகளையும், பௌத்த விகாரைகளையும் கட்டுவதற்கும்; அன்றைய மிஷனரி ஆக்கிரமிப்புகளுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது.

பௌத்த மதத்தை நீக்குவதாக முடிவு எடுத்தாலும்கூட பெரும்பான்மை மக்களின் விருப்பமின்றி அரசியலமைப்பை மாற்ற முடியாது. சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையைக் கொண்ட இந்த நாட்டில் அது துளியும் சாத்தியமில்லை.

இன்று பௌத்த தேசியவாத சக்திகளால் இலங்கை முழுவதும் புத்தர் சிலைகளையும், பௌத்த விகாரைகளையும் பெருக்க முடிந்திருக்கிறதேயொழிய அவர்களால் புத்த தர்மத்தை பேணவோ, பாதுகாக்கவோ, பரப்பவோ முடியவில்லை. புத்தர் தனக்கு சிலைகள் வைக்க சொன்னதுமில்லை. விகாரைகள் கட்டவும் சொன்னதில்லை. மாறாக தர்ம உபதேசத்தை பரப்பச் சொன்னார். அதைக் கடைப்பிடிக்கச் சொன்னார். எதை செய்யச்சொன்னாரோ அதைச் செய்வதில்லை. எதை சொல்லவில்லையோ அதைச் செய்கிறார்கள்.

நாம் பௌத்த சக்திகளுக்கு முன்வைக்க வேண்டிய மிகவும் முக்கியமானதொரு கோரிக்கை இருக்கிறது. முதலில் பௌத்த மத அரசியலைத் துறவுங்கள். பௌத்த தர்மத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்!



sarawanan.n@thaiveedu.com





Ring of Fire-இல் இருந்து
தயாரிக்கப்பட்ட
உயிர்காக்கும் தொழில்நுட்பம்
வடக்கு ஒன்டாரியோவில் மருத்துவ சாதனங்கள் போன்ற
அத்தியாவசிய தொழில்நுட்பங்களை உருவாக்க தேவையான
முக்கிய கனிமங்கள் நிறைந்த ஒரு பகுதி உள்ளது.
PROTECT ONTARIO
இது பற்றி மேலும் அறிந்துகொள்ள: ontario.ca/RingOfFire
இது ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.
Ontario

# சூடான்:

# மத்திய கிழக்கின் புதிய காலனித்துவ நாடு

– ரதன்

சூடான் சூடு பறக்கும் சிக்கல்களைக் கொண்டுள்ளது. உலகின் பழைமைவாய்ந்த நாடுகளில் சூடானும் ஒன்று. அங்குதான் அதிகளவு பிரமிட்டுக்கள் இருக்கின்றன. பல வடிவங்களிலான பிரமிட்டுக்களை அங்கு காணலாம். அவ்வாறான பழைமைவாய்ந்த சூடான், இன்று உலகின் வறுமையான நாடுகளில் ஒன்றாக உள்ளது. அண்மைக் காலங்களில் அதிகளவு மக்கள் உள்நாட்டுப் போரினால் கொல்லப் பட்டுள்ளனர். இன அழிப்பும் அங்கு நடைபெற்றுள்ளது.

முன்னாள் சூடான் நாடு ஜூலை 9, 2011 அன்று இரண்டாகப் பிரிந்தது. இதன் விளைவாக, வடக்கில் உள்ள பகுதி சூடான் (Sudan) என்றும், புதிய நாடாகப் பிரிந்த தெற்குப் பகுதி, தெற்கு சூடான் (South Sudan) என்றும் அழைக்கப்படுகின்றன. சமய ரீதியாகப் பார்க்கும்போது, தெற்கு சூடானில் பெரும்பான்மையாக கிறிஸ்தவர்களும் பாரம்பரிய ஆப்பிரிக்க மதங்களைப் பின்பற்றுபவர்களும் வாழ்கின்றனர்; ஆனால் சூடானில் (வடக்கு பகுதி) பெரும்பான்மையினர் முஸ்லிம்கள் ஆவர். மேலும், சூடானின் மேற்குப் பிராந்தியமான டார்பரில் 2003-ஆம் ஆண்டு போர் மூண்டதுடன், அங்கு இன அழிப்புக் குற்றங்கள் (Genocide) நிகழ்ந்தன. இந்தக் காலகட்டத்தில், அரேபியரல்லாத சூடானின் பூர்வீகக் குடிகளான ஃபுர், மசலிட் மற்றும் சகாஃபா போன்ற இனக்குழுக்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் கொல்லப்பட்டனர். இது வரலாறு.



இன்று புதிதாகத் தோன்றியுள்ள பிரச்சினையை இரண்டு வரிகளில் சுருக்கமாகக் கூறலாம். இது இன்று உலகில் தோன்றியுள்ள அல்லது நடைபெறும் பல தேசிய இனப் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டதல்ல.

சூடானில் தற்போது நடந்துவரும் மோதல், நாட்டின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் அப்தெல் ஃபத்தா அல்-புர்ஹான் (Gen Abdel Fattah al-Burhan) தலைமை யிலான அரச இராணுவத்துக்கும், துணை இராணுவப் படையான துரித ஆதரவுப் படைகளுக்கும் (Rapid Support Forces - RSF) இடையிலானது. ஆர்.எஸ்.எஃப் (RSF) படைகளின் தலைவர் ஜெனரல் முகமது ஹம்டன் டிகாலோ (Gen Mohamed Hamdan Dagalo) ஆவார். இவர் பொதுவாக ஹெமெட்டி (Hemedti) என்று அழைக் கப்படுகிறார். ஆர்.எஸ்.எஃப் ஒரு சாதாரண துணைப் படையல்ல; அது பெரும் வலிமையையும் வளத்தையும் கொண்ட ஒரு கட்டமைப்பாக உள்ளது. இவர்களில் பின் சிந்தனை கொண்டவர்கள் இருக்கிறார்கள். பல தங்கச் சுரங்கங்களை RSF தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. குறிப்பாக டார்பர் பிரதேசத்திலும் அவர்களுக்குச் சொந்தமான தங்கச் சுரங்கங்கள் உள்ளன. இந்தச் சுரங்கங்களிலிருந்து ஒரு மாதத்திற்குச் சராசரியாக 150 கிலோ கிராம் தங்கம் எடுக்கப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. சூடான் முழுவதும் உள்ள சுரங்கங்களின் எண்ணிக்கையும் உற்பத்தியும் முழுமையாகக் கணக்கெடுக்கப்பட வில்லை அல்லது கணக்கெடுக்க



tg.theeban@gmail.com

முடியாதுள்ளது என சூடான் மத்திய வங்கி தெரிவித்துள் ளது. டபோரில் நடைபெற்ற இன அழிப்புக்கும், தற்சமயம் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்துக்கும் மூல காரணம் வளச் சுரண்டலாகும். இந்த வளங்களில் பல, பூர்வீகக் குடிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. எனினும், இன்று பூர்வீகக் குடிகளின் பிரதேசங்களில் பெரும்பாலானவை அரச கட்டுப்பாட்டில் உள்ளன. ஆர்.எஸ்.எப்.-இன் கட்டுப்பாட்டிலும் கனிச மானளவு பிரதேசங்கள் உள்ளன. கோடபன், டபோர், லிபிய எல்லையையண்டிய பிரதேசங்கள் போன்றவை ஆர்.எஸ். எப்.-இன் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன.

**"சூடானின் நிதி மூலதனம் முழுமையாக சூடானுக்குரியதாக இல்லை. மத்திய கிழக்கு நாடுகள் சுமார் 25 வீதமான வங்கிச் சொத்துகளைக் (banking assets) கொண்டுள்ளன. ஆர்.எஸ்.எப்.-க்கும் வங்கிச் சொத்துக்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சவூதி அரேபியாவும் சூடானின் வளங்களில் அக்கறை கொண்டுள்ளது. அக்கறை என்பது இங்கு ஆக்கிரமிப்பைக் குறிக்கும்."**

## முன் கதைச் சுருக்கம்:

1989-ஆம் ஆண்டிலிருந்து 2019 வரை சூடானை ஆட்சி செய்தவர் ஓமர் அல் பசீர். இவரது ஆட்சிக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். விளைவு இராணுவப் புரட்சி நடைபெற்றது. புதிய இராணுவ ஜனாதிபதி பதவியேற்றார். ஆரம்பத்தில் ஆர்.எஸ்.எப் ஹெமெட்டி அரசுடன் இணைந்து செயற்பட்டது. மிகக் குறுகிய காலத்திலேயே இவர்களுக்கிடையில் பிளவு ஆரம்பித்தது. ஏப்ரல் 2023-இல் அரச படைகளுக்கும் ஆர்.எஸ்.எப் படைகளுக்குமிடையில் சண்டை ஆரம்பித்தது. அது இன்றுவரை நீடிக்கின்றது.

## சூடான் யுத்தம் – யாருக்கு லாபம்:

உக்ரேன்-ரஷ்யா போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும், ரஷ்யா சர்வதேச ரீதியாக தனது செயற்பாடுகளை நிறுத்தவில்லை. சோவியத் யூனியனின் காலத்தில் சூடானுடன் ரஷ்யா நெருக்கமான உறவைக் கொண்டிருந்தது. இந்த உறவின் நீட்சியாக, ஏப்ரல் 2024-இல், ரஷ்யா சூடானின் தங்கச் சுரங்கங்களின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவுவதாக முன்வந்தது. அத்துடன் சூடானிய அரசு ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தும் வருகின்றது. இதற்கான பணத்தை ரஷ்ய நாணயமான ரூபிளில் செலுத்த சூடான் ஒத்துக்கொண்டது. உக்ரேன் போர் ஆரம்பத்தின் போது சூடான் அரசுக்கு எதிரான படைகளின் தலைவரான ஹெமெட்டி, ரஷ்யத் தலைநகரான மாஸ்கோவுக்கு சென்று தனது ஆதரவை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அப்படியிருந்தும், ரஷ்யா தொடர்ந்து சூடான் அரசுக்கும் ஆதரவையும் ஆயுதங்களையும் வழங்கி வருகிறது.

ஆர்.எஸ்.எப் படைகளுக்கு ஐக்கிய அரபு இராச்சியம் ஆயுதங்களை வழங்குவதாக மேற்கு நாடுகளின் ஊடகங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. அதே சமயம் ஐக்கிய அரபு இராச்சியம் பெருமளவு தங்கத்தை ஆர்.எஸ்.எப்.-இடமிருந்து கொள்வனவு செய்கின்றது. ஆர்.எஸ்.எப்.-க்கு ஆதரவாக ட்ரோன் தாக்குதல்களையும் ஐக்கிய அரபு இராச்சியம் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டதை ஐக்கிய அரபு இராச்சியம் மறுத்துள்ளது. இது வழமையான மறுப்புப் போன்றது. கிழக்கு லிபியாவின் ஜெனரல் கலிபா கப்ராரும் ஆர்.எஸ்.எப்.-க்கு ஆயுதங்களை வழங்குவதாக சூடானிய அரசு கூறியுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம் தொடர்ச்சியாக சூடானில் அதிகளவு முதலீட்டைச் செய்துள்ளது. 2018-ஆம் ஆண்டிலிருந்து சுமார் 6 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது. சூடானின் மத்திய வங்கியிலும் (foreign reserves) முதலீடு செய்துள்ளது. நைல் நதிக்கரை பிரதேசங்களில் விவசாயத்துக்கும் உதவிகள் செய்துள்ளது. அண்மைக் காலங்களில் ஆர்.எஸ்.எப்.-க்கு உதவிகள் செய்துவருகின்றது. அத்துடன் லிபியா, சாட், கார் (Central Africa Republic) தெற்கு சூடான், உகண்டா ஆகிய நாடுகளினூடாக ஆயுதங்களையும் இராணுவ உதவிகளையும் செய்துவருகின்றது. ரஷ்யாவின் தனியார் இராணுவமான வக்னர் படைகளும் ஆர்.எஸ்.எப்.-க்கு ஆதரவாக 2017-இலிருந்து களத்தில் உள்ளன. வக்னர் படைகளுக்கு ஐக்கிய அரபு இராச்சியமே நிதி வழங்குகின்றது. ஆர்.எஸ்.எப்.-இன் கட்டுப்பாட்டுக்குள் உள்ள தங்கச் சுரங்கங்களைப் பாதுகாக்கும் பணியிலும் வக்னர் படைகள் ஈடுபடுகின்றனர்.

ஐக்கிய அரபு இராச்சியம் தனது உணவுத் தேவைகளுக்கு வெளிநாடுகளைத் தங்கியிருக்கின்றது. அதன் தனியார் நிறுவனங்கள் உலகின் பல நாடுகளில் விவசாய நிலங்களைக் கொள்வனவு செய்து விவசாயம் செய்கின்றன. அமெரிக்கா உட்பட பல நாடுகளில் விவசாயம் செய்கின்றன. சூடான் ஆபிரிக்காவில் அதிகளவு விளை நிலங்களைக் கொண்டுள்ளது. ஐ.எச்.சி, Jenaan ஆகிய நிறுவனங்கள் 200,000 ஹெக்டெயர் நிலத்தில் விவசாயம் செய்கின்றன. சில இடங்களில் சூடானின் டால் (DAL) குழுமத்துடன் இணைந்தும் செயற்படுகின்றன. ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சூடான் ஒரு முக்கிய வளம் கொண்ட நாடு. ஐக்கிய அரபு இராச்சியம் தனது எண்ணெய்ச் செல்வத்தினால், சூடானின் வளங்களைச் சுரண்டுகின்றது.

மறுபுறத்தில் எகிப்து, சூடானிய அரசுக்கு ஆதரவு வழங்குகின்றது. எகிப்து நைல் நதி நீர்ப்பங்கீட்டுக்கும் சூடானிய அரசை தங்கியுள்ளது. இதனால் எகிப்து தொடர்ச்சியாக சூடானிய அரசுக்கு இராணுவ உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றது. சர்வதேச அரங்கில் சூடானிய அரசுக்குச் சார்பாகவும் பிரச்சாரம் செய்கின்றது. எகிப்தின் தங்க ஏற்றுமதி வணிகம் மேலும் வளர சூடானும் உதவுகின்றது.





சூடானிய அரசு, தங்கத்தை எகிப்துக்கு வழங்குகின்றது. எதிர் படைகளுக்கு சார்பாக ஐக்கிய அரபு இராச்சியம் செயற்படுவதனால், ஐக்கி அரபு இராச்சியத்துக்கு தங்கம் செல்லாமல் எகிப்துக்கு செல்வதனை, சூடானிய அரசு விரும்புகின்றது.

சூடானின் மொத்த தேசிய உற்பத்தியில் 60 வீதம் விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்வதிலிருந்து பெறப்படுகின்றது. அப்படியிருந்தும் பல இலட்சம் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். மத்திய கிழக்கு நாடுகள் சூடானிலிருந்து உணவுப் பொருட்களை பெற்று வருகின்றன.

சூடானின் நிதி மூலதனம் முழுமையாக சூடானுக்குரியதாக வில்லை. மத்திய கிழக்கு நாடுகள் சுமார் 25 வீதமான வங்கிச் சொத்துகளைக் (banking assets) கொண்டுள்ளன. ஆர்.எஸ்.எப்.-க்கும் வங்கிச் சொத்துக்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சவூதி அரேபியாவும் சூடானின் வளங்களில் அக்கறை கொண்டுள்ளது. அக்கறை என்பது இங்கு ஆக்கிரமிப்பைக் குறிக்கும். சவூதியும், ஐக்கிய அரபு இராச்சியமும் நட்பு நாடுகளாக உள்ளன. எனினும் சவூதி சூடானிய அரசுக்கு ஆதரவு வழங்குகின்றது. சவூதி அரேபியாவின் வங்கிகள் சூடானில் இயங்குகின்றன. சவூதி அரேபியாவிற்கு சூடானின் செங்கடல் பிரதேசம் முக்கியமானது. சவூதிக்கும், சூடானுக்குமிடையில் செங்கடல் உள்ளது. எனவே சுமுகமான கப்பற் போக்குவரத்துக்கும், உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற பல காரணிகளுக்கும் செங்கடல் பிரதேசம் முக்கியமானது.

சூடானில் இன்று நடைபெறும் யுத்தத்தில் எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும் பங்குள்ளது. பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டமைக்கும், இன அழிப்புக்கும் இந்த நாடுகளும் காரணமாகும். இவற்றுடன் ஆயுதங்களை இந்த நாடுகளுக்கு விற்பனை செய்த அமெரிக்காவும் அடங்கும். துரதிர்ஸ்டவசமாக இந்த மூன்று நாடுகளுடன் அமெரிக்காவும் இணைந்தே சூடானில் சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றன.

சூடானிய மக்களின் நிறம். சுமார் பத்து மாதங்களுக்கு முன்னர் பிரித்தானிய கார்டியன் பத்திரிகையின் இணையத்தளத்தில் வெளியாகிய கட்டுரையின் தலையங்கம் இது.

'If you are black, you are finished':
the ethnically targeted violence raging in Sudan.

மேற்கு நாடுகளின் ஊடகங்கள் தொடர்ச்சியாக சூடானில் ஆபிரிக்க பூர்வீகக் குடிகள் நிறரீதியாக பாகுபாட்டுக்குட்படுத்துவதாக பிரச்சாரப்படுத்துகின்றன. அதில் உண்மையுள்ளது.

ஆர்.எஸ்.எப்.-இல் அதிகளவு அரேபியர்கள் உள்ளனர் எனவும், அவர்கள் கறுப்பு நிறத்தவர்களுக்கு எதிராக செயற்படுகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுவருகின்றது. யுத்தத்தின் போது பலர் அடிமைகளாக்கப்பட்டனர். அரச படைகளிலும் அரேபியர்களே அதிகளவுள்ளனர். அவர்களாலும் பூர்வீகக் குடிகளும், ஆபிரிக்க கறுப்பினத்தவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

சூடானில் தொடர்ச்சியாக நடைபெற்ற படையெடுப்புகள் அங்குள்ள பூர்வீகக் குடிகளை இனக் கலப்பு செய்துள்ளது. இன்று சூடானில் முஸ்லிம்கள் அதிகளவில் உள்ளனர். இவர்கள் சுனி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள். நைல் நதிக் கரையோரமாக வாழும் நியுபின்ஸ் (Nubians) பூர்வீக் குடிகளில் பெரும்பாலானவர்கள் முஸ்லீம் மதத்தைப் பின்பற்றுகின்றார்கள். சூடானில் 500-க்கும் மேற்பட்ட பூர்வீகக் குடி பிரிவினர் வாழ்கின்றனர். 91 வீதமானவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகின்றார்கள். 5.4 வீதமானவர்கள் கிறீஸ்தவ மதத்தைப் பின்பற்றுகின்றார்கள்.

இன்றைய நிலைமையில் சூடானின் வளங்களின் மீது மத்திய கிழக்கு நாடுகளும் அமெரிக்காவும் அக்கறை கொண்டுள்ளமையால் அங்கு ஒரு நிரந்தர அமைதி என்பது தற்சமயம் சாத்தியமற்றேயுள்ளது. அமைதிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் குவாட் என அழைக்கப்படும் நாடுகளுக்குள் முரண்பாடுகள் உள்ளன. ஆர்.எஸ்.எப்.-ஐ தவிர்த்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டால் நிரந்தர சமாதானம் என்பது சாத்தியமற்றது. அதே சமயம் ஆர்.எஸ்.எப்.-உம் மக்கள் நலனுக்கான ஓர் அமைப்பல்ல.

இந்தப் போரின் அடிப்படையே வளங்கள்தான். குறிப்பாகத் தங்கம். வளங்கள் சுரண்டப்படும் வரை அமைதிக்கு சாத்தியமில்லை. முன்னர் ஐரோப்பிய நாடுகள் ஆபிரிக்க நாடுகளை அழித்தன. இப்பொழுது மத்திய கிழக்கு நாடுகள் அதனைச் செய்கின்றன. சூடான் இப்போது மத்திய கிழக்கு நாடுகளின் காலனித்துவ நாடாக மாறியுள்ளது. மிக விரைவில் தற்போதைய சூடானும் இரண்டாகப் பிளவு படலாம். பாதுகாப்பும், சமாதானமும் சூடானிய மக்களுக்கருகில் இல்லை.



rathan@thaiveedu.com

# உக்ரேன் போரில் இலாபமடைந்த தரப்புகள் எவை?




## ஆயுத விற்பனையின் பெருக்கமும் புதிய எரிசக்திச் சந்தையும்

– ரூபன் சிவராஜா

**அமெரிக்காவைப் பொறுத்தவரை உக்ரேன் போர், ஒருபோதும் உக்ரேனின் ஆள்புல எல்லைப் பாதுகாப்பு (நிலப்பரப்பு), அல்லது அந்நாட்டின் இறைமை (Territorial integrity or sovereignty) பற்றியதானது அல்ல என்பது வெள்ளிடை மலை. ரஷ்யாவைப் பலவீனப்படுத்தவும், சீனாவின் எழுச்சியை மறைமுக மாகத் தடுக்கவுமான அமெரிக்காவின் பாரிய புவிசார் அரசியல் நிகழ்ச்சிநிரலின் ஓர் அங்கமாகும்.**

ரஷ்ய-உக்ரேன் போர் மூன்றரை ஆண்டுகளைக் கடந்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் நிகழ்கின்ற நீடித்த மற்றும் பெரும் உயிரிழப்பு களை ஏற்படுத்தியுள்ள போருமாகும். போரில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளும் பெரும் இழப்புகளைச் சந்தித்துள்ளன. அது மட்டுமல்லாமல் ஐரோப்பா முழுவதும் கடுமையான பாதிப்பு களை எதிர்கொண்டுள்ளது. தற்போது, சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான ஆரம்பச் சூழல் எட்டப்பட்டிருக்கின் றது. நிரந்தரத் தீர்வு எட்டபப்படும் வாய்ப்புகள் குறித்த நம்பிக்கை தென்படவில்லை. டிரம்ப் நிர்வாகம் பேச்சுவார்த் தைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது. இது குழந்தை யையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் அணுகுமுறை.

பாரிய உயிரிழப்புகளோடு, கிழக்கில் பாரிய நிலப்பகுதி களையும் உக்ரேன் இழந்துள்ளது. அமெரிக்கா, ஐரோப்பா உட்பட்ட வெளியாரின் ஆதரவில் அது தங்குநிலையைக் கொண்டுள்ளது. ரஷ்யாவும் பெரும் ஆளணி இழப்புகள் மற்றும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

tg.theeban@gmail.com

### அமெரிக்க ஆயுத உற்பத்தி நிறுவனங்கள்:

உக்ரேன் போரினால் அதிக வருமானமீட்டிய நாடு அமெரிக்கா. அதன் ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் பெரும் இலாபம் ஈட்டி யுள்ளன. நோர்வே போன்ற நாடுகள் ஆயுத விற்பனை மற்றும் எரிசக்தி அதாவது எரிவாயு மூலம் பெரும் வருமா னத்தை ஈட்டியுள்ளன. இந்தப் போர், உலகளாவிய ஆயுத விற்பனை மற்றும் நாடுகளின் படைத்துறைக்கான நிதியொ துக்கீடுகள், ஆயுத தளபாடங்களின் களஞ்சியப்படுத்தல், நவீனமயப்படுத்தல்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் பெரும் இலாபமீட்டி வருகின்றன. நாடுகளின் பாதுகாப்புத்துறையை வலுப்படுத்தத் தூண்டியுள்ளதோடு, உலக அரசியலில் ஆயு தங்களை முக்கிய கருவியாகவும் உக்ரேன் போரின் விளைவு மாற்றியுள்ளது.

குறிப்பாக, ஐந்து பெரிய அமெரிக்க ஆயுத உற்பத்தி நிறு வனங்கள்: Lockheed Martin, Raytheon, Boeing, Northrop Grumman மற்றும் General Dynamics பெரும் இலாபம் ஈட்டி யுள்ளன - ஈட்டிவருகின்றன. 2022-ஆம் ஆண்டு, அமெரிக்க ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் ஏனைய நாடுகளுக்கு ஏறத் தாழ 150 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் மற்றும் இராணுவச் சேவைகளை விற்பனை செய்தன. இது அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இரட்டிப்பாக (48.6%) அதிகரித்தது. அதேவேளை, அமெரிக்கா அரசு 55 பில்லியன் டொலர் மதிப்புள்ள ஆயுதங்களை 2022-இல் விற்றது. இதுவும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரட்டிப்பு (49.1%).

ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்புத்துறைக்கான நிதியொதுக் கீடுகளை அதிகரித்ததோடு, உக்ரேனுக்கு ஆயுதங்களை உதவியாக வழங்கின. பெரும்பாலும், பழைய ஆயுதத் தள பாடங்களையே வழங்கின. ஐரோப்பிய நாடுகளின் ஆயுதக் களஞ்சியங்கள் அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்களிடமி ருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் மூலம் மீள்நிரப் பப்பட்டன. உதாரணமாக ஜேர்மன் தனது ஏவுகணைகளை (Patriot missiles) உக்ரேனுக்கு வழங்கிவிட்டு, 9 பில்லியன் டொலர்களுக்கு அமெரிக்க F-35 போர் விமானங்களைக்

கொள்வனவு செய்திருந்தது. ஏனைய நாடுகளும் இவ்வாறாக அமெரிக்காவிடமிருந்து நவீன ஆயுதத் தளபாடங்களைக் கொள்வனவு செய்தன.

அமெரிக்கா மட்டுமன்றி, ஐரோப்பிய ஆயுத உற்பத்தி நிறுவனங்களும் குறிப்பிடத்தக்க வருமானம் ஈட்டியுள்ளன. ஐரோப்பிய ஆயுத உற்பத்தியாளர்களான BAE Systems, Thales, Leonardo, Dynamit Nobel மற்றும் Krauss-Maffei Wegmann போன்றனவும் பெரியளவிலான விற்பனை ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளதற்கான தரவுகள் காணக்கிடைக்கின்றன. நோர்வேயின் Kongsberggruppen, Nammo ஆகியனவும் பெரும் இலாபமீட்டியுள்ளன.

ஐரோப்பாவிற்கான எரிவாயுச் சந்தையில் தனக்கென ஓர் இடத்தினை விரிவுபடுத்தியுள்ளது நோர்வே. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமக்கான எரிசக்திப் பாவனையில் கணிசமான அளவினை ரஸ்யாவிடமிருந்தே இறக்குமதி செய்து வந்தன. ரஷ்ய -உக்ரேன் போருக்குப் பின் ரஷ்யாவைப் புறக்கணிக்கின்ற, அதன்மீது பொருளாதார, வணிகப் புறக்கணிப்புகள், தடைகளை அமுல்படுத்துகின்ற நடவடிக்கைகளை ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்டன. அதன் பின்னணியில் ரஷ்ய எரிவாயுவிற்கு மாற்றான எரிவாயு நாடுகளைக் (வளங்களை) கண்டடைய வேண்டிய நிர்ப்பந்தம் ஐரோப்பாவிற்கு ஏற்பட்டது. நோர்வே அதனைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு தனக்கான புதிய சந்தையை விரிவுபடுத்தியுள்ளது. ரஷ்யாவுடனான எரிசக்தி உடன்படிக்கைகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் முறித்துக்கொண்டுள்ளதால், மாற்று எரிசக்தி வளங்களுக்கு அந்நாடுகள் அதிக விலையைச் செலுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் அவை அமெரிக்காவிலிருந்து அதிக விலையில் இறக்குமதி செய்யப்படுகின்றன. அத்தோடு நோர்வேயும் பெருமளவு எரிவாயுவை ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கிறது.

> “
> **போரின் விளைவாக, ஐரோப்பிய நாடுகள் பெருமெண்ணிக்கையிலான உக்ரேன் அகதிகளுக்கு தஞ்சம் வழங்க வேண்டிய நிலையும் உருவாகியது. ஆறு மில்லியனுக்கு மேற்பட்ட உக்ரேனிய அகதிகள் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர்**
> ”



2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் நோர்வே எரிவாயு ஏற்றுமதி மூலம் 1270 பில்லியன் குரோணர்களைக் கூடுதல் வருமானமாக ஈட்டியுள்ளது. இது நோர்வே நிதி அமைச்சகம் வெளியிட்ட கணக்கு. அதாவது உக்ரேன் போரின் விளைவாக எரிவாயு விற்பனையில் நோர்வே ஈட்டிய வருமானம். இந்த வருமானம் நோர்வேயின் அரசியல் விவாதங்களில் முக்கிய பேசுபொருளாக இருந்து வருகின்றது. நோர்வே, பிரித்தானியா ஆகியவை உக்ரேனுக்கு ஆளில்லா விமானங்களை அனுப்புவதில் கூட்டுப்பங்களிப்பினை ஆற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பாவின் பலவீனம் – அமெரிக்காவிற்கு இலாபம்:

போரின் மிகப்பெரிய விளைவுகளில் ஒன்று ஐரோப்பா பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியமையாகும். முதன்மையாக ரஷ்யாவுக்கு எதிரான உக்கிரேனுக்கான இராணுவ, ஆயுத ஆதரவுகள் மற்றும் வணிக-பொருளாதாரத் தடைகள் காரணமாக ஐரோப்பியப் பொருளாதாரம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அதிகரித்த செலவீனங்கள் ஐரோப்பியத் தொழில் துறைகளையும் மோசமாகப் பாதித்துள்ளன. அதேவேளை, இந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இலாபமடைந்த தரப்பு அமெரிக்கா. தனது (Liquefied natural gas – LNG) திரவ இயற்கை எரிவாயுவை அதிக விலைக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பனை செய்யத்தொடங்கியது அமெரிக்கா. பணவீக்கக் குறைப்புச் சட்டம் (Inflation Reduction Act) உட்பட தனது பொருளாதாரப் பாதுகாப்புக் கொள்கைகள் மூலம் ஐரோப்பிய முதலீடு மற்றும் தொழில்துறைகளைத் தனது பக்கம் அமெரிக்கா ஈர்த்தது. தனது திரவ இயற்கை வாயுவுக்கான பெருஞ் சந்தையை ஐரோப்பாவில் அமெரிக்கா உருவாக்கியிருக்கின்றது.

அத்தோடு, ஐரோப்பிய நாடுகள் தமது படைத்துறையை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளன. இதன் பொருட்டு, அமெரிக்க ஆயுத உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தே பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றன. ஜேர்மனி, போலந்து மற்றும் பல நேட்டோ நாடுகள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களுக்குப் பல பில்லியன் நிதியைச் செலவிட்டுள்ளன.

போரின் விளைவாக, ஐரோப்பிய நாடுகள் பெருமெண்ணிக்கையிலான உக்ரேன் அகதிகளுக்கு தஞ்சம் வழங்க

வேண்டிய நிலையும் உருவாகியது. ஆறு மில்லியனுக்கு மேற்பட்ட உக்ரேனிய அகதிகள் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர். இதே சமயம், ஐரோப்பிய அரசாங்கங்களை நோக்கி வாக்காளர்கள் கேள்வியெழுப்பியும் வருகின்றனர். அதாவது, தமது வரிப் பணத்தினை முடிவற்ற ஒரு போருக்கு எதற்காகச் செலவிட வேண்டும் என்பது அந்தக் கேள்வியாகும். ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் அரசியற் பதட்ட நிலை அதிகரித்துள்ளது. பல நாடுகளில் போராட்ட இயக்கங்கள் மற்றும் அரசியற் கட்சிகள் உக்ரேனுக்கு அளிக்கப்பட்டுவரும் நிபந்தனைகள், வரையறைகளற்ற ஆதரவுக்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றன.

> “ஐரோப்பிய ஒன்றியமும் மேற்கின் பல நாடுகளும் ரஷ்யாவுக்கு கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. ஆனால், எண்ணெய் மற்றும் எரிவாயு வருமானம் ஒப்பீட்டளவில் பெரிதாகப் பாதிப்பிற்கு உட்படவில்லை.”

### அமெரிக்க உத்தரவுகளைக் கண்மூடித்தனமாக நிறைவேற்றும் ஐரோப்பா:

சரியான மதிப்பீட்டினை முன்வைப்பதென்றால், அமெரிக்கா நேரடியாகப் போரின் விளைவுகளுக்கு முகங்கொடுக்காமல் ஐரோப்பா மீது இந்தப் போரின் பெரும் பாரத்தைச் சுமத்தியுள்ளது. ஐரோப்பாவை இதற்குள் வலிந்து இழுத்துவிட்டுள்ளது என்றும் கூறலாம். இதன் மூலம், அமெரிக்கா தன் நீண்டகால மும்முனை நிகழ்ச்சிநிரலை நிறைவேற்றுகிறது என்ற கருத்து ஆய்வாளர்கள் மட்டத்தில் நிலவுகின்றது. அதாவது, ரஷ்யாவைக் கட்டுப்படுத்துவது, சீனாவைப் பலவீனப்படுத்துவது. மற்றும், தனித்துவமான புவிசார் அரசியல் வகிபாகத்தைக் கொண்ட தரப்பாக ஐரோப்பா உருவாகுவதைத் தடுப்பது ஆகியவையே அந்த மும்முனை இலக்குகளாகும்.

அமெரிக்காவின் உத்தரவுகளைக் கண்மூடித்தனமாக நிறைவேற்றுவதை ஐரோப்பா தொடருமானால் அது பிளவுபட்ட, மூலோபாயச் சுதந்திரமற்ற, பொருளாதார ரீதியில் அமெரிக்காவிற் தங்கியிருக்கும் பிராந்தியமாக அது பலவீனமடையும் அபாயம் உள்ளது. ஐரோப்பிய நாடுகள் தமது பாதுகாப்பு அரசியலைத் தமது சுயமானதும் சுதந்திரமானதுமான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதும், நிரந்தர முரண்பாடுகளுக்கு மாறாக இராஜதந்திர, சமாதானத் தீர்வுகளை முன்னெடுப்பதே சிறந்த தெரிவாக அமையும்.

### ஐரோப்பாவுக்கான ரஷ்ய எண்ணெய், எரிசக்தி:

ஐரோப்பாவுக்கான முதன்மை எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதி நாடாக ரஷ்யா இருந்து வந்துள்ளது. குறிப்பாக, ஜேர்மனி ரஷ்ய எரிவாயுவில் பெரிதும் தங்கியிருந்தது. ஜேர்மன் நாட்டின் மொத்த எரிவாயுப் பாவனையில் 50 வீதத்திற்கும் மேலான அளவு ரஷ்ய இறக்குமதி. ரஷ்யாவின் முதன்மை ஏற்றுமதி வருமானமும் எண்ணெய் மற்றும் எரிசக்திதான். இவை ரஷ்யாவின் ஏற்றுமதி வருமானத்திற் கிட்டத்தட்ட அரைப்பங்கினைக் கொண்டுள்ளன மட்டுமல்லாமல், ரஷ்ய படைத்துறை நிதி ஒதுக்கீட்டுடனும் நெருக்கமாகப் பிணைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமும் மேற்கின் பல நாடுகளும் ரஷ்யாவுக்கு கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. ஆனால், எண்ணெய் மற்றும் எரிவாயு வருமானம் ஒப்பீட்டளவில் பெரிதாகப் பாதிப்பிற்குட்படவில்லை. அதற்கான காரணம் எளிதானது. ரஷ்ய எரிசக்திக்கு, குறிப்பாக எரிவாயுவிற்கு மாற்றான எரிசக்தி வளங்களைக் குறுகிய காலத்திற் கண்டடைவதும் உடன்படிக்கைகளை மேற்கொள்வதும் இலகுவான காரியமல்ல. எரிவாயு விநியோகத்திற்கான (இறக்குமதி) புதிய குழாய்கள் மற்றும் உகந்த தொழில்நுட்ப வசதிகளையும், அது கோருகின்ற கட்டுமானங்களை உருவாக்குவதற்கும் கால அவகாசம் தேவை.

ஐரோப்பிய ஒன்றியம் 2022-ஆம் ஆண்டு முடிவிற்குள் ரஷ்ய எரிவாயு இறக்குமதியை மூன்றில் இரண்டு பங்கு குறைக்கவும், 2030-இற்குள் முற்றிலும் விடுபடுவது என்ற இலக்கை நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கானது பாரிய அளவிலான எரிசக்திப் பாவனைக் குறைப்பினையும் மாற்றுத் திட்டங்களையும் கோருகின்றது.

2011-இல் ஜப்பானின் ஃபுகுஷிமா அணுசக்தி நிலையத்தில் (Fukushima) ஏற்பட்ட அணுஉலை விபத்திற்குப் பின்னர் அணுசக்தித் தொழிற்சாலைகள் அனைத்தினையும் மூடுகின்ற அரசியல் முடிவினை ஜேர்மன் எடுத்தது. இந்த முடிவு ரஷ்ய எரிசக்தியில் தங்கியிருக்கும் நிலையை ஜேர்மனுக்குத் தோற்றுவித்தது.

### உணவுப்பற்றாக்குறை, அதிக கார்பன் வெளியேற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி:

குறுகிய கால அடிப்படையில் ஐரோப்பா அதிகமாக கரி மற்றும் திரவ எரிவாயுப் பயன்பாட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கும். இதனால், கார்பன் வெளியேற்றம் அதிகரிக்கும். நீண்ட கால அடிப்படையில் இந்த நெருக்கடி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (Renewable energy - காற்றாலை, சூரிய சக்தி) வளர்ச்சிக்கு வழிவகுக்கும். இவை சார்ந்து, ஐரோப்பிய ஒன்றியம் பெரிய முதலீடுகளை அறிவித்துள்ளது. அத்தோடு, சில நாடுகள் ரஷ்ய எரிவாயுவிலிருந்து முற்றிலும் விடுபட்டுமுள்ளன. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உருவாக்கமே ரஷ்யாவிற் தங்கியிருப்பதிலிருந்து விடுபடுவதற்காக நிலையான தீர்வாக ஐரோப்பிய ஒன்றியத்தினாற் பார்க்கப்படுகிறது.

உக்ரேன் போர் உலகளாவிய பெருவிளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. உணவு, எரிபொருள் மற்றும் செயற்கை உரம்,







“

**உண்மையில், இது அமெரிக்காவின் போர். ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்க வல்லரசுப் போட்டியின் போரை அமெரிக்கா உக்ரேன் மீது திணித்தது. உக் ரேனைப் பலியாக்கியது, ஐரோப்பிய நாடுகளையும் அதற்குப் பகடையாக்கியது என்பதே உண்மை.**

”


போக்குவரத்துச் செலவுகளை அதிகரிக்கச் செய்துள்ளது. வறிய நாடுகளில் கடுமையாகப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய உணவுப் பாதுகாப்பையும் பெருமளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. காலநிலை மற்றும் பேண்தகு வளர்ச்சி இலக்குகள் சார்ந்த உலகளாவிய செயற்பாடுகளைத் தாமதப்படுத்துகிறது.

வறிய நாடுகள், குறிப்பாக ஆபிரிக்க நாடுகள், ரஷ்யா மற்றும் உக்ரேனில் இருந்தே கோதுமையை இறக்குமதி செய்கின்றன. இந்த நாடுகளிற் பல, தமது கோதுமைத் தேவையினை அதாவது பாதிக்கு மேற்பட்ட அளவினை மோதலில் ஈடுபட்டுள்ள இந்த இரு நாடுகளிலிருந்தே பெறுகின்றன.

## ஆயுத விற்பனை – வெளியுறவுக் கொள்கையின் கருவி:

சீனாவின் இராணுவ வளர்ச்சி குறித்து, அமெரிக்கா கவலை கொண்டுள்ளது. அதனால், இந்தோனேசியா, தாய்வான், ஜப்பான், போன்ற நாடுகளுடன் அமெரிக்கா பாரிய ஆயுத ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. சீனாவின் இராணுவ வளர்ச்சி, அதன் நவீன மயமாக்கல், தென்னாசியாவில் அதிகரித்து வரும் அதன் கடல் விரிவாக்கம் மற்றும் அதன் செல்வாக்கு குறித்த அச்சம் அமெரிக்காவிற்கு உண்டு. சவுதி-அரேபியா, எமிரேட்ஸ், இஸ்ரேல், எகிப்து உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளுடனும் அமெரிக்கா பல பில்லியன் மதிப்புள்ள ஆயுத மற்றும் படைத்துறை ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் ஆயுத விற்பனையை வெளியுறவுக் கொள்கையின் கருவிகளில் ஒன்றாகக் கையாண்டு, அமெரிக்க ஆயுத உற்பத்தித் தொழில்துறையை விரிவாக்கம் செய்தார். அமெரிக்கா தனது நட்புறவு நாடுகளிடம் ரஷ்யத் தயாரிப்பு ஆயுத தளவாடங்களைத் தவிர்த்து, அமெரிக்க ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய ஊக்குவிப்பதில் முழுமூச்சாக இறங்கியுள்ளது. அதற்கான பொருளாதார ஆதரவினையும் பயிற்சியையும் அமெரிக்காவே வழங்குகிறது.

## அமெரிக்கா, ரஷ்யா, சீனா – வல்லரசுப் போட்டியின் முரண்பாட்டுப் புள்ளி:

உக்ரேன் போரானது அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றுக்கிடையிலான வல்லரசுப் அதிகாரப் போட்டியில் முக்கியமான முரண்பாட்டுப் புள்ளியாகவும் மாறியுள்ளது. இப்போர் மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்துவருகின்றது. அமெரிக்கா தனது ஐரோப்பிய நேசநாடுகள் மீது பொருளாதார மற்றும் மனிதநேயத் தளங்களில் அவற்றின் மீது பெரும் சுமைகளை ஏற்றி வந்துள்ளது என்பது புதிய தகவல் அல்ல. ஒரு வகையில் அமெரிக்காவின் அழுத்தங்களையும் வற்புறுத்தல்களையும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எதிர்கொண்டுள்ளன. உண்மையில், இது அமெரிக்காவின் போர். ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்க வல்லரசுப் போட்டியின் போரை அமெரிக்கா உக்ரேன் மீது திணித்தது. உக்ரேனைப் பலியாக்கியது, ஐரோப்பிய நாடுகளையும் அதற்குப் பகடையாக்கியது என்பதே உண்மை.

இலாபமடைந்த தரப்புகளிற் சீனாவும் ஒன்று. ரஷ்யாவுடன் வணிக உறவை மேலும் வலுப்படுத்தியுள்ளது. ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவுடனான வணிக உறவுகளிலிருந்து வெளியேறியும் புறக்கணித்தும் வருகின்ற சூழலில், ரஷ்ய சந்தை

யில் தனக்கான இடத்தைச் சீனா பற்றிக்கொண்டுள்ளது. அத்தோடு, சீனா மத்திய ஆசிய நாடுகளிலும் தனது பொருளாதார உறவுகளை விரிவுபடுத்தி உள்ளதோடு, புதிய சந்தை வாய்ப்புகளையும் வளங்களையும் பெற்றுள்ளது.

## அமெரிக்காவின் பூகோள நலன்சார் அரசியல் இலக்குகள்:

இந்தப் போரினை அமெரிக்கா, நேட்டோவில் தனது வகிபாகத்தினை வலுப்படுத்தப் பயன்படுத்தியுள்ளது. நேட்டோ அணியினை ரஷ்ய எல்லைக்கு அருகில் கொண்டு செல்லவும் பயன்படுத்தியுள்ளது. இரண்டாம் உலகப் போர் முடிந்த தருவாயிலிருந்து நேட்டோ அமைப்பு ரீதியாக பெரிதும் வளர்ந்துள்ளது - விரிவடைந்துள்ளது. இந்த விரிவாக்கம் ரஷ்யாவில் பதட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக, கிழக்கு-ஐரோப்பிய நாடுகளை, அதாவது ரஷ்யாவின் அண்டை நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக நேட்டோவிலும், தனது நட்புசக்தியான ஐரோப்பிய ஒன்றியத்திலும் அங்கமாக்குவதில் அமெரிக்கா மும்முரமாக ஈடுபட்டு வந்தது. உக்ரேனையும் நேட்டோவில் இணைப்பது தொடர்பான விவகாரமே ரஷ்ய - உக்ரேன் போருக்கான முதன்மைக் காரணிகளில் ஒன்று. அமெரிக்காவின் நோக்கம் ரஷ்யாவின் இராணுவ பலத்தினை நிரந்தரமாக பலவீனப்படுத்துவதாகும்.

நேரடியாகச் சீனாவைப் பலவீனப்படுத்த உக்ரேன் போரை அமெரிக்கா பயன்படுத்தவில்லை. ஆனால், இந்தப் போர் உலகளாவிய அதிகாரச் சமநிலையை மாற்றியுள்ளது. அதாவது அமெரிக்கா தனது உலகளாவிய வகிபாகத்தினை வலுப்படுத்தியுள்ளது. அது சீனாவின் மூலோபாய வகிபாகத்தினை மறைமுகமாகப் பாதிக்கிறது.

அமெரிக்கா தலைமையில் மேற்குலகின் ஒன்றிணைவு, இந்தோ-பசுபிக் பெருங்கடலில் அமெரிக்கா தனது மூலோபாயக் கவனத்தினைக் குவிப்பதற்கு வழிவகுத்துள்ளது. தென் சீனக் கடல் மற்றும் தாய்வானை அண்டிய சீனாவின் நலன்களுக்கு எதிராகப் பரந்த இராஜதந்திரக்கூட்டுகளை அமெரிக்கா ஏற்படுத்தியது. ஒருங்கிணைந்த, வலுவான அமெரிக்கா தலைமையிலான கூட்டு, சீனாவின் புவிசார், நலன்சார் மூலோபாயங்களுக்கு எதிரானது. இந்தப் போர் ரஷ்யாவை அதிகம் சீனாவில் தங்குநிலையுடையதாகவும் மாற்றுகின்றது.

ரஷ்யா மீதான ஐரோப்பாவின் வணி கப் புறக்கணிப்பு, தடைச் சட்டங்கள் ரஷ்யாவைச் சீனாவின் பொருளாதார மற்றும் அரசியல் கட்டுப்பாட்டுக்குள் நெருக்கமாக கொண்டு வருகிறது. இது சீனாவை நேரடியாகப் பலவீனப்படுத்தவில்லை.

“இந்தப் போர் மூலம், ரஷ்யாவைப் பொருளாதார மற்றும் இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்துவது அமெரிக்காவினது இலக்கு. ஆனால், இந்தப் போர் பெரும் செலவை ஏற்படுத்தியுள்ளது. உக்ரேனின் சார்பில் அல்லது உக்ரேனுக்கு இராணுவ, படைபல ஆதரவு, மனிதாபிமான உதவிகள், பொருளாதார இழப்பு, அகதிகளை உள்வாங்குதல் என்னும் அடிப்படையில் அந்த விலையை ஐரோப்பாவே அதிகம் செலுத்தி வருகின்றது.”

ரஷ்யாவிடமிருந்து எரிசக்தி மற்றும் மூலப்பொருட்களை மலிவு விலையில் சீனா பெறுகிறது. சீனா ஐரோப்பா மற்றும் ஆசியா வில் கூடுதல் அரசியற் செல்வாக்கினைப் பெறுவதனால், ரஷ்யாவும் சீனாவும் இணைந்த ஒற்றை அதிகாரக் கூட்டின் உருவாக்கத்தை முன்வைத்து, அதாவது, அதனைக் காரணம்காட்டி, அமெரிக்கா தனக்கான எதிர்க் கூட்டணிகளை உருவாக்கும் முனைப்பில் கவனஞ் செலுத்தியுள்ளது.

## மும்முனை இலக்கு:

அமெரிக்காவைப் பொறுத்தவரை உக்ரேன் போர், ஒரு போதும் உக்ரேனின் ஆள்புல எல்லைப் பாதுகாப்பு (நிலப் பரப்பு), அல்லது அந்நாட்டின் இறைமை (Territorial integrity or sovereignty) பற்றியதானது அல்ல என்பது வெள்ளிடைமலை. இது ரஷ்யாவைப் பலவீனப்படுத்தவும், சீனாவின் எழுச்சியை மறைமுகமாகத் தடுக்கவுமான ஒரு பாரிய புவிசார் அரசியல் நிகழ்ச்சிநிரலின் ஓர் அங்கமாகும். ரஷ்யாவைப் பொருளாதார மற்றும் இராணுவரீதியாகத் தனிமைப்படுத்துவதில் அமெரிக்கா நீண்டகாலமாகவே பெரும் பிரயத்தனங்களைக் கொண்டுள்ளது. அதே வேளை, உலகின் முன்னணிச் சக்தியாக சீனா தன் நிலையை வலுப்படுத்துவதைத் தடுப்பதிலும் அமெரிக்கா காய்களை நகர்த்தி வருகின்றது.

இந்தப் போர் மூலம், ரஷ்யாவைப் பொருளாதார மற்றும் இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்துவது அமெரிக்காவினது இலக்கு. ஆனால், இந்தப் போர் பெரும் செலவை ஏற்படுத்தியுள்ளது. உக்ரேனின் சார்பில் அல்லது உக்ரேனுக்கு இராணுவ, படைபல ஆதரவு, மனிதாபிமான உதவிகள், பொருளாதார இழப்பு, அகதிகளை உள்வாங்குதல் என்னும் அடிப்படையில் அந்த விலையை ஐரோப்பாவே அதிகம் செலுத்தி வருகின்றது. பெரும் விலையைச் செலுத்துவதற்கு ஐரோப்பா அமெரிக்காவினால் கட்டாயப்படுத்தப்பட்டது என்பதே யதார்த்தம். ஐரோப்பாவின் பாதுகாப்பு, அதற்கு அச்சுறுத்தலாக சித்தரிக்கப்பட்ட ரஷ்ய பிம்பம், பொருளாதார நலன்கள் முதலானவை அத்தகு கட்டாயப்படுத்தல்களுக்குரிய நியாயங்களாக முன்வைக்கப்பட்டன.

போரின் ஆரம்பக் கட்டங்களில் உக்ரேனுக்கான ஆயுத வழங்கலில் அமெரிக்கா முதன்மைப் பங்களிப்பினை வழங்கியது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் பல நூற்றுக்கணக்கான பில்லியன் யூரோக்களை இராணுவ, பொருளாதார மற்றும் மனிதநேய உதவியாக உக்ரேனுக்கு வழங்க உறுதியளித்தது. அதே வேளை, ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் அதிகரித்துள்ள எரிசக்திச் செலவுகள், தொழிற்துறைப் பின்னடைவுகள், நாடுகளின் வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்பட்ட பெரும் அழுத்தம் உட்பட்ட இன்னபிற காரணிகளால் ஐரோப்பிய நாடுகள் பொருளாதார வீழ்ச்சியை - நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.



rooban.s@thaiveedu.com






# ஆபிரிக்காவின் ஒளிக் கீற்று புர்கினோ பாசோ

சிவா முருகுப்பிள்ளை

ஒரு தேசத்தை... நாட்டை... தேசிய இனத்தை பற்றி... பேசவேண்டும் என்றால் அந்த நாட்டை ஆட்சி செய்தவர்களின் வரலாற்றை பேசவேண்டும். கூடவே ஆட்சி செய்வதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டவர் பற்றியும் பேசியாக வேண்டும். அதுதான் அந்த நாட்டின் வரலாற்றை அதிகம் சிறப்பாக படம் பிடித்துக் காட்டும். அதுதான் அந்த நாட்டின் கலாச்சாரம், பண்பாட்டை எடுத்துக் கூறும். அந்த நாட்டின் வளங்கள் எவ்வாறு மக்களுக்குப் பகிரப்பட்டன அல்லது மறுக்கப்பட்டன என்பதை பற்றி பேசும். கூடவே அந்த நாட்டின் மக்களின் வளங்கள் எவ்வாறு சுரண்டப்பட்டன, வாழ்க்கை சீரழிக்கப்பட்டன என்பதைப் பற்றி பேசும். அந்த வகையாகத்தான் நாம் புர்கினோ பாசோ(Burkina Faso) என்ற மேற்கு ஆபிரிக்க நாட்டை பேச முடியும்.

இந்த நாடு புதையலுக்கு மேலே நின்று கொண்டு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தது, பல தசாப்தங்களாக. இது ஆபிரிக்க நாடுகளுக்கான பொதுப் போக்காக இருந்தாலும் புர்கினோ பாசோ எவ்வாறு ஆபிரிக்காவில் தனித்துவமாக இருக்கின்றது என்பதை நாம் பார்ப்போம்.

கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளின் துணையுடன் பிரான்சின் நேரடிக் காலனி ஆதிக்கத்தில் அல்லது நவகாலனி ஆதிக்கத்தில் தனது வளங்களை பறிகொடுத்துக்கொண்டிருந்தது அதிகம் என்பதை, இந்த நாட்டின் வரலாற்றை ஆழமாக பார்த்தால் எம்மால் உணர முடியும். கூடவே, பிரித்தானியா உட்பட்ட பல ஐரோபிய நாடுகளும் இந்த சுரண்டல்களில் இணைந்தும் செயற்பட்டன.

இதில் இந்த அனைத்து மேற்கத்திய நாடுகளும் கூட்டுக் களவாணியாகவே இருந்தனர்.

இந்த சுரண்டலின் அளவை மதிப்பிடுவதற்கு... தங்கச் சுரங்கமே இல்லாத பிரான்ஸ் நாடு இன்று உலகின் மூன்றாவது நிலையில் அதிகளவு தங்கத்தை கொண்டிருக்கும் நாடாக இருக்கின்றது என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன். அற்றில் பெரும்பகுதி இந்த புர்கினோ பாசோவின் தங்க வயல்களில் தோண்டி எடுக்கப்பட்டவைதான்.

ஆபிரிக்க தங்க வயல்களில் இருந்து பெட்டி பெட்டியாக தங்க மண்ணை அள்ளி தனது நாட்டிற்கு கொண்டு சென்று, தங்கத்தை அம்மண்ணில் இருந்து பிரித்தெடுத்தது, பிரான்ஸ். அவ்வாறு பிரிக்கப்பட்ட தங்கத்தில் பெரும்பான்மையான பங்கு தனக்கானது என்றாக சேர்த்துக் கொண்டதுதான், பிரான்ஸின் தங்கக் குவியல்.

இவ்வளவு சுரண்டல்களால் தமது செல்வங்களை பறிகொடுத்து வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் புர்கினோ பாசோ அண்மைக் காலங்களில் உலக அரங்கில் செய்திகளில் அதிகம் பேசப்படும் நாடாக மாறி இருக்கின்றது.

இதற்கான முக்கிய காரணங்களில் பிரதானமானது, அமெரிக்க அதிபர் ட்ரம், புர்கினோ பாசோ நாட்டிற்கும் அதன் தற்போதைய இளம் ஆட்சித் தலைவருக்கும் எதிராக தெரிவித்த கருத்துகளே.

அமெரிக்காவில் இருக்கும் ஆபிரிக்க குடியேற்றவாசிகளை சட்ட விரோத குடியேற்றவாசிகள் என்று பட்டம் சூட்டி, அடிமைகள் போல் விமானங்களில் ஏற்றி ஆபிரிக்காவிற்கு அனுப்பிவைக்கும் செயற்பாட்டிற்கு எதிராக, புர்கினோ பாசோ-வின் தலைவர் குரல் கொடுத்தார்.

தமது மக்களை மனிதாபிமானம் அற்ற அணுகுமுறைகளை பாவித்து, அமெரிக்கா தனது நாட்டில் இருந்து விலங்கிட்டு வெளியேற்றுகின்றது என்ற எதிர் குரல், பல அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

கூடவே, உலகின் அதி பணக்காரரான எலான் மக்ஸ், ஆபிரிக்க நாடுகளில் தனது பொருளாதார மேலெடுப்புகளை நன்றாக கால்பதிக்க முற்பட்டுகையில், புர்கினோ பாசோவின் தலைவர் அதற்கும் எதிர்ப்புக் குரல் எழுப்பி அதனை மறுதலித்தார். ஆபிரிக்க நாடுகளின் வளங்களை மறைமுகமாக சுரண்டப் போடப்படும் திட்டங்களின் வடிவமாக இதனைத் தெளிவுபடுத்தியும் இருக்கின்றார்

1984-களில் லிபியாவின் அன்றைய தலைவர் கடாபி, தனது நாட்டிற்குள் முதலீடு என்று உட்புகுவதற்கு பல்தேசிய நிறுவனங்களை அனுமதித்தது என்பது, இன்றைய அந்த நாட்டின் கீழ் நிலைக்கு இட்ட வித்தாக அமைந்தது என்பதை ஆபிரிக்க நாடுகள் தற்போது ஒரு பாடமாக எடுத்துக் கொள்கின்றன.

tg.theeban@gmail.com



அதனால்தான் எலான் மஸ்க் போன்றவர்களின் பொருளாதார முன்னெடுப்புகள் என்ற வலதுசாரிச் சுரண்டல் செயற்பாடுகளை முற்று முழுதாக மறுதலிக்கின்றனர்.

கூடவே 'எமக்கு தொழில் நுட்பத்தை கற்றுத் தாருங்கள் உங்கள் நிறுவனங்களின் கால் பதித்தல் இங்கு தேவை இல்லை' என்று அவர்களின் உழைப்புச் சுரண்டலுக்கும் வளங்களின் சுரட்டலுக்குமான வாய்ப்பை மறுத்தும் விட்டனர்.

இந்த இரு தரப்பினரும் ஆபிரிக்க நாடுகளின் வளங்களை, உழைப்பை தொடர்ந்தும் சுரண்டும் நோக்கில்த்தான் தமது பாதங்களை தொடர்ந்தும் பதிய வைக்க முயலுகின்றன.

இவற்றிற்காக இவர்கள் முன்வைக்கும் போலிக் கோசங்களாக பொருளாதார அபிவிருத்தி, வறுமையைப் போக்குதல், ஜனநாயக நடைமுறையை மேம்படுத்தல் என்பதாக தமது கால்களை அழுத்தி வைக்க தொடர்ந்தும் முயன்று வருகின்றன.

இதற்கான எதிர் வினையை புர்கினோ பாசோவின் தற்போதைய இளம் அதிபர் பகிரங்கமாக தெரிவித்து, இதற்காக அனைத்து ஆபிரிக்க நாடுகளையும் ஓரணியில் திரளுமாறும் அறைகூவல் விடுத்துள்ளார்.

அவரின் இவ்வறைகூவலுக்கு ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் இருந்தும் ஆதரவுக் குரல்கள் அரசுகளாக, தலைவர்களாக, ஆபிரிக்க மக்களாக இன்று எழுந்து வரும் சூழல், ஒரு புதிய சிந்தனைப் புயலை கிளப்பியுள்ளது.

அது ஆபிரிக்க மக்களின் வறுமையைப் போக்கும் ஒளிக்கீற்றாக மக்களால் உணரப்படுகின்றது. அத்துடன், இது தமது எதிர்கால வாழ்வில் தென்றலை வீச வைக்கும் என்று அந்த மக்கள் நம்பத் தொடங்கிவிட்டனர்.

இதனை மேற்குலகம் விரும்பவில்லை.

ஒரு காலத்தில் பிரிதானியா என்ற ஆங்கில மொழி ஆதிக்கமும், பிரான்ஸ் என்ற பிரெஞ் மொழி ஆதிக்கமும், போத்துக்கல் என்ற ஸ்பானிஸ் மொழி ஆதிக்கம் என்று, இந்நாடுகளை காலனி ஆதிக்கத்திற்குள் உள்ளாக்கி இருந்தன.

இந்தக் காலனித்துவப் பிடி, நாடுகள் சுதந்திரம் பெற்ற பின்னரும் 'மழை நின்றாலும் தூறல் நிற்கவில்லை' என்பது போல, நவ காலனித்துவம் (Neocolonialism) என்ற மறைமுக வடிவங்களில் இன்றும் தொடர்கிறது. ஆரம்பத்தில் பல்வேறு போராட்டங்களின் விளைவாக அந்நாடுகளுக்கு விடுதலை கிடைத்த போதிலும், அதே சுரண்டல்கள் வேறு வழிகளில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இந்தக் காலகட்டத்தில், பன்னாட்டு நிறுவனங்கள் முதலீடுகள் என்ற பெயரில் தங்கள் சித்து விளையாட்டுகளைத் தாராளமாகச் செய்யவும் முயலுகின்றன. குறிப்பாக, ஆப்பிரிக்க நாடுகள் பல பிரெஞ்சு காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுபடத் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்திச் சுதந்திரம் பெற்றன.

ஆனாலும், பிரான்ஸ் சுதந்திரம் வழங்கிய பின்னரும், தன் நவ காலனித்துவச் செயல்பாடுகள் மூலம் தனது மேலாதிக்கத்தைத் தொடர்கிறது. இதற்காக, அது ஆப்பிரிக்க நாடுகளில் பொம்மை அரசுகளை நிறுவியதுடன், நாடுகளின் பாதுகாப்பு என்ற பெயரில் தமது படைகளையும் தொடர்ந்து நிறுத்தி வைத்திருந்தது.

பிரான்ஸ் தம் நாட்டிற்கான 'சுதந்திரத்தை' வழங்கும் போது 'எமது வளங்களை வகை தொகையில்லாமல் அள்ளியெடுத்து விட்டு, பைபிளையும் பிரஞ்சு மொழியையுமே விட்டுச் சென்றனர்' என்பதே, ஆபிரிக்க பூர்வீக மக்களின் குரலாக இருக்கின்றது. அந்நாடுகள் தமக்கான சுயமான நாணயத்தை நிறுவுதலை மறுத்து பிரான்ஸ் நாணயமான CFA ஃப்ரங்க் (Communauté Financière Africaine) நாணயத்தை மட்டும் பாவிக்கும் பொருளாதார அடிமைத்தனத்தையும் நிறுவி விட்டே வெளியேறியது.

> **“ஒரு காலத்தில் பிரிதானியா என்ற ஆங்கில மொழி ஆதிக்கமும், பிரான்ஸ் என்ற பிரெஞ்மொழி ஆதிக்கமும், போத்துக்கல் என்ற ஸ்பானிஸ் மொழி ஆதிக்கம் என்று, இந்நாடுகளை காலனி ஆதிக்கத்திற்குள் உள்ளாக்கி இருந்தன.”**

இதற்கு அவர்கள் கூறும் காரணமாக 'உங்கள் நாட்டிற்கான பாதுகாப்பிற்காக எமது படைகளையும் நிறுத்தி வைத்திருக் கின்றோம், உங்கள் சொந்த நாணயத்தை கையாளுவதில் உங்களுக்கு போதிய அறிவு இல்லை' என்பதாகவும் கூறி வைக்கத் தவறவில்லை. சர்வதேச சமூகமும் இதில் நியாயங் களும், உண்மைகளும் உள்ளதாக காட்டிக்கொண்டனர்.

ஆனால், இவை எல்லாம் ஆபிரிக்காவில் இருக்கும் கனிம வளங்களை தொடர்ந்தும் தோண்டி எடுப்பதற்காகவே அன்றி, ஆபிரிக்க நாட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத் துவதற்காக அல்ல.

### புர்கினோ பாசோ:

வடக்கு மற்றும் வடமேற்கில் மாலி, வடகிழக்கில் நைஜர், தென்கிழக்கில் பெனின், தெற்கே டோகோ மற்றும் கானா, தென்மேற்கில் ஐவரி கோஸ்ட் என்றான நாடுகளைக் கொண்டு சகல பக்கங்களையும் தரையால் சூழப்பட்ட நாடே புர்கினோ பாசோ.

புர்கினோ பாசோவின் வடபகுதி, உலகின் பாலைவனம் என்று அறியப்படும் சஹாரா பாலைவனத்திற்கு தெற்கே உள்ள அரை வறண்ட பாலைவனத் தன்மைற்கு அருகான கால நிலையை உள்ள சஹேல் என்ற பகுதி, கிழக்கு மேற் காக பரவிக் காணப்படுகின்றது. இப்பிரதேசம் முன் ஒரு காலத்தில் வளமான விவசாய நிலங்களை கொண்டிருந்தன. காலநிலை மாற்றம் மற்றும் மரங்கள், தாவரங்கள் அழிதல் ஆகியவற்றால் இப்பகுதி பாலைவனமாக மாற்றம் அடைந்து வந்திருக்கின்றது.

இது அந்த நாட்டின் உணவு உற்பத்திக்கு ஒரு குறிப்பிடத் தக்க சவாலாக மாறி உள்ளது. வறட்சியால் மரங்கள் அழி தல் என்பதற்கு அப்பால், தமது அன்றாட பாவனைக்கான விறகிற்காக மக்கள் உயிர்த்திருக்கும் மரங்களை அதிகம் வெட்டியதும் இந்த பாலைவனமாதலை துரிதப்படுத்தியது.

அதே நேரத்தில் புர்கினோ பாசோவின் தெற்குப் பகுதி வெப் பமண்டல பகுதியான சவன்னா என்ற பெயருடன் கிழக்கு மேற்காக பரந்து காணப்படுகின்றது. இது விவசாயம் செய்யும் நிலமாக தற்போதும் உள்ளது.

புர்கினோ பாசோ கிட்டத்தட்ட 60 சதவிகிதம் அளவிற்கான மோசி என்ற தேசிய இனத்தையும் இதற்கு அப்பால் எட்டு வரையிலான சிறு சிறு தேசிய இனங்களையும் கொண்ட நாடு.

64 சதவிகிதம் வரையிலான மக்கள் இஸ்லாமியராகவும் மிகுதியில் 27 சதவிகிதமான மக்கள் கத்தோலிக்கர்களா கவும் ஏனைய 9 சதவிகித மக்கள் இயற்கை வழிபாட்டு முறையையும் பின்பற்றுபவர்களாக, பல மதப் பண்பாட்டை தன்னகத்தே கொண்ட நாடாக திகழ்கின்றது.

காலனி ஆதிக்கம் கொண்டு வந்த கத்தோலிக்க மதமும், பிரெஞ் மொழியும் இங்கு தமது மேலாண்மையைச் செலுத்தி னாலும் மொழியால் ஏற்பட்ட தாக்கத்தின் அளவிற்கு மதத் தினால் ஏற்படுத்த முடியவில்லை என்பதே இன்றைய யதார்த்தம்.

தற்போது அங்கு பெரும்பான்மை மக்கள் பேசும் மூர் என்ற மொழியுடன் மேலும் மூன்று மொழிகள் தேசிய மொழிகளாக் கப்பட்டுள்ளன.

புர்கினோ பாசோ நிலத்தின் கீழ் புதையலாகத் தங்கம் (Gold), துத்தநாகம் (Zinc), மக்னீசியம் (Manganese), தாமிரம் (Copper), சுண்ணாம்புக்கல் (Limestone), பொஸ் பேற்று (Phosphates), வெள்ளி (Lead), வனடியம் (Vana- dium), நிக்கல் (Nickel), ஈயம் (Lead), வைரம் (Daimond), களிமண் (Clay), கிரனைட் (Granite), பளிங்கு (Marble), உப்பு (Salt), மணல் மற்றும் கிரவல் போன்ற உயர்மதிப் புள்ள கனிமங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

***“அன்று வரை, வறுமையின் நிழல்கள்கூட இவர்களை விட்டு அகலவில்லை, அகலவிட வில்லை. அடிமைப்படுத்தப்பட்ட இனம் என்றான மக்களின் வாழ்வை மேப்படுத்துவதற்காக மிகத் துரிதமாக நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த தொடங்குகின்றனர் புதிய ஆட்சியாளர்கள்.”***



இவற்றில் தற்போதைய நவீன தொழில்நுட்பத் துறையில் மின்சாரக் கலங்களில் அதிகம் பாவிக்கப்படும் வனடியம் (Vanadium) கனிமம் இங்கு அதிகம் இருப்பது தங்கத்தை மீறிய கவனத்தைப் பெற்றிருக்கின்றது. இவற்றை நிலத்தடியில் இருந்து தோண்டி எடுப்பதற்கான வேலைகளை பிரான்ஸ் போன்ற நாடுகள் பல வருடங்களாக செய்து வந்தன. இதற்கான தொழில்நுட்பங்களை வழங்குவது என்றான கால் பதித்தல் இதற்கான ஆதாரத்தையும் கொடுத்திருந்தன.

சாராம்சத்தில் அரேபிய நாடுகளில் எண்ணை கிணறுகளை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா, பிரிதானியாவின் தொழில்நுட்பங்கள் பாவிக்கப்பட்டு, இன்று அரேபிய நாடுகள் அமெரிக்க, பிரிதானியாவின் செல்வாக்கு வளையத்துக்குள் இருப்பது போன்ற செயற்பாடுகளை ஒத்தது ஆபிரிக்க நாடுகளில் பிரான்ஸின் தொழில் நுட்ப வழங்கல் மேலாண்மை ஆகும்.

இந்த செயற்பாடுகள் புர்கினோ பாசோ 1960-ஆம் ஆண்டு பிரான்ஸிடம் இருந்து சுதந்திரம் அடையும் வரை, நேரடிக் காலனி ஆதிக்கமாகவும் இதன் பின்பு நவகாலனித்துவமாகவும் அங்கு சுரண்டல்கள் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில்தான் 1983-ஆம் ஆண்டு இராணுவத்தில் இருந்து இடதுசாரிச் சிந்தனையுடன் புறப்பட ஒரு புரட்சியாளன் ‘எமது வளங்கள், எமது மக்களுக்கானது... எம் மக்களின் வாழ்விற்கானது...’ என்றாக எழுந்து வந்தான். அவன்தான் தோமஸ் சங்கார (Thomas Sankara) என்ற புரட்சியாளன்.

அவனுடன் அவனது சக தோழனுமான இரு வயது குறைந்த பிளேஸ் காம்போரே (Blaise Compaoré)வுடன் இன்னும் பலரும் இணைந்து இராணுவப் புரட்சியை செய்து, மக்களுக்கான ஆட்சியை நிறுவினர். அப்போது அதுவரையும் அங்கு நிலவி வந்த பிரான்ஸின் பொம்மை ஆட்சி துரத்தியடிக்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, கல்வி அறிவு இல்லாத மக்கள் என்பதைவிட, கல்வி அறிவு கொடுக்க மறுக்கப்பட்ட, ஆனால் வலிமை மிக்க கறுப்பின உழைப்பாளர்களான புர்கினோ பாசோ மக்கள் இந்த புரட்சியைக் கொண்டாடினர்.

அன்று வரை, வறுமையின் நிழல்கள்கூட இவர்களை விட்டு அகலவில்லை, அகலவிடவில்லை. அடிமைப்படுத்தப்பட்ட இனம் என்றான மக்களின் வாழ்வை மேப்படுத்துவதற்காக மிகத் துரிதமாக நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த தொடங்குகின்றனர் புதிய ஆட்சியாளர்கள்.

இதற்கான தலைமைத்துவத்தை தோமஸ் சங்கார தனது 34 வயதில் ஆரம்பித்தார். அவரை ஆபிரிக்காவின் சேகுவேராவுடனும் கியூபாவின் பிடல் காஸ்ரோவுடனும் இணைத்துப் பார்க்கின்றது ஆபிரிக்கா. அது உலகம் முழுவதும் பரவவும் செய்கின்றது.

ஆட்சி பொறுப்பை ஏற்றதும் முதலில் நாட்டின் அனைத்து கனிம வளங்களையும் நாட்டுடமை ஆக்கினார் தோமஸ் சங்கார. சர்வதேச நிதியம் வழங்கிய அசலைத் திருப்பிச் செலுத்த முடியாத வட்டிக் கடனை, முழுமையாக திருப்பி செலுத்த முடியாது என்று அறிவித்தார்.

நாட்டில் 13 சதவிகிதம் அளவிற்கு கல்வி அறிவு பெற்றிருந்த மக்களின் கல்வி அறிவை அதிகரிக்கும் வேலைகளை ஆரம்பித்தார். இதில் அதிகம் கல்வி அறிவு அற்றவர்களாக காணப்பட்ட பெண்களுக்கு கல்வியில் முதன்மைக் கவனிப்பையும் செலுத்தினார்.

வெறும் நான்கே ஆண்டுகளில் நாட்டின் கல்வி அறிவு பெற்றவர்களின் சத விகிதம் 76 வீதமாக உயர்ந்தது. இதற்கு முன்பு இந்த மக்களிடம் அறிவில்லையா? என்றால், அறிவு உண்டு. ஆனால், வாய்ப்பு வழங்கப்படவில்லை. உழைப்பு இல்லையா? என்றால் உலகத்தில் அதிக உழைப்பை செலுத்தக்கூடிய வலிமை மரபணுவில் இருந்தது. அவர்களின் உழைப்பு சுரங்கங்களில் அடிமைகளாக்கப்பட்டு சுரண்டப்பட்டது. அவர்கள் வாழும் நாடுகளில் வளம் இல்லையா என்றால் நிலத்திற்கு கீழே தங்கப் பாளங்கள் அதிகம் இருந்தது. விவசாயம் செய்ய நிலம் இருந்தது. ஆனால், போதிய உணவில்லாமல் பஞ்சம் மட்டும் தலைவிரித்தாடியது. வறுமையான நாடு, வாழ்வு மறுக்கப்பட்ட நாடு. இருண்ட கண்டத்தில் ஒரு நாடு என்று, மேற்கத்திய ஊடகங்களால் எள்ளி நகையாடி பெயர் சூட்டி அழைக்கப்பட்டது. இதனையே ஆபிரிக்கா கண்டத்தின் அடையாளமாக உலகமும் நம்பியது.



***“எமது வளங்கள், எமது மக்களுக்கானது... எம் மக்களின் வாழ்விற்கானது... என்றாக எழுந்து வந்த தோமஸ் சங்கார என்ற புரட்சியாளன் அவனது சக தோழனுமான இரு வயது குறைந்த பிளேஸ் காம்போரேவுடன் இன்னும் பலரும் இணைந்து இராணுவப் புரட்சியை செய்து, மக்களுக்கான ஆட்சியை நிறுவினர்.”***

தனக்கான சொந்த நாணயத்தை வைத்திருக்க முடியாது என்ற கட்டுப்பாட்டில், பிரான்சின் நாணயத்தை தங்களது நாணயமாக பாவிக்க வேண்டும் என்று பிரான்ஸ் கட்டளை இட்ட, அடிமைத்தனத்தின் உச்சம் நிலவி காலம் அது. பிரான்ஸ் நாணயத்தை பாவிப்பதற்கு, புர்கினோ பாசோவில் பாவனையில் உள்ள மொத்த நாணயத்தின் அளவின் 50

**"ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், நாட்டின் பெயரை, 'அப்பர் வோல்டா' என்பதை நீக்கி, 'நேர்மையான மனிதர்களின் நிலம்' என்று பொருள்படும் 'புர்கினோ பாசோ' எனும் கௌரவமான புதிய பெயரை சூட்டினார் தோமஸ் சங்காரா."**



வீதமான அளவு பணத்தை பிரான்சின் வங்கியில் நிரந்தமாக வைப்பில் வைத்தாக வேண்டும் என்று நிபந்தனைக்குள் உள்ளாக்கப்பட்டிருந்தது.

இத்தனையும் அனுபவித்த மக்கள் ஏதும் அறியாது அடிமைத்தனம்தான் தம் வாழ்வின் இயல்பு என்றாக இருந்த போது இவர்களை தட்டி எழுப்பியவர்தான் சங்காரா.

அதுவரை, சமகாலத்தில் ஆற்றின் நீர்ப்பரப்பின் நிறம் காரணமாக கறுப்பு வோல்ட்டா, வெள்ளை வோல்ட்டா, சிவப்பு வோல்ட்டா என ஆற்றின் பகுதிகள் அழைக்கப்படுகின்ற வோல்ட்டா ஆற்றின் மேல் நீர்ப் பிடிப்புப் பகுதி (Upper Basin) என்ற புவியியல் அடையாளத்தைக் குறிக்கும் வகையில், 'அப்பர் வோல்ட்டா' (Upper Volta) என்றே அதற்கு பிரான்ஸால் அவமானமாகப் பெயரிடப்பட்டிருந்தது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், முதலில் ஓகஸ்ட் 2, 1984 அன்று, நாட்டின் பெயரை, 'அப்பர் வோல்டா' என்பதை நீக்கி, 'நேர்மையான மனிதர்களின் நிலம்' என்று பொருள்படும் 'புர்கினோ பாசோ' எனும் கௌரவமான புதிய பெயரை சூட்டினார் தோமஸ் சங்காரா. அதுதான் இன்று வரை அந்த நாட்டிற்கான பெயராகவும் நிலைத்து விட்டது.

சங்கராவின் அரசாங்கம் கூட்டுத் தலைமை ஆட்சியை நடத்துவதற்காக தேசிய புரட்சிக்கான கவுன்சிலை நிறுவிக் கொண்டது. அதன் தலைவராக சங்கரா இருந்தார். இதில் அவரின் உற்ற சகா பிளேஸ் காம்போரே இணைந்திருந்தார்.

மேலும் புரட்சியைப் பாதுகாப்பதற்கான பிரபலமான புரட்சிக் குழுக்களை நிறுவினார். புரட்சியின் முன்னோடிகள் என்ற இளைஞர் படையுடன் நாட்டைக் கட்டியமைக்க திட்டமும் உருவாக்கப்பட்டது. சங்கரா மாற்றத்திற்கான ஒரு இலட்சிய சமூக பொருளாதார திட்டத்தைத் தொடங்கினார். இது ஆப்பிரிக்க கண்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய ஒன்றாக உணரப்பட்டது.

அவரது வெளியுறவுக் கொள்கைகள் ஏகாதிபத்திய எதிர்ப்பை மையமாகக் கொண்டிருந்தன. அவரது அரசாங்கம் அனைத்து வெளிநாட்டு உதவிகளையும் நிராகரித்தது. இந்த கடன் உதவிகள் உண்மையில் அசலைக்கூடக் கட்டமுடியாத வகையில் தொடர்ந்தும் வட்டியைக் கட்டி, நாடு வங்குரோத்தை அடைச் செய்யக்கூடிய சுரண்டலைக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையை அவர் உரைத்தார்.

மேலும் வெளி நாட்டுக் கடன் வழங்கலின் போது மக்கள் நலத்திட்டங்களை நிறுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளையும் இவை கொண்டிருக்கின்றது. கூடவே, அது தேசிய மக்கள் சொத்துகளை தனியார் மயமாக்கும் கொள்கைகளை வலியுறுத்துகின்றது. இந்த தனியார் நிறுவனங்கள் மறைமுகமாக இந்த கடன் வழங்கும் நிறுவனத்தின் பினாமிகளாவும் இருக்கின்றன.

இது போன்ற அறிதல்களில் சங்காரா தெளிவாக இருந்தார்.

சர்வதேச நாணய நிதியம் (IMF), மற்றும் உலக வங்கியின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் தனது நாட்டிற்குள் தடுத்தார். அவரது உள்நாட்டுக் கொள்கைகளில் நாடு தழுவிய கல்வியறிவு பிரச்சாரம், விவசாயிகளுக்கு நில மறுபகிர்வு, ரயில்வே மற்றும் சாலை கட்டுமானம் என்பவை அடங்கும்.

மேலும் பழமைவாத நம்பிக்கையான பெண் பிறப்புறுப்பு சிதைவை தடை செய்தல், கட்டாய திருமணங்கள் மற்றும் பலதார மணம் ஆகியவற்றை நிறுத்துதல் என்று பெண்களுக்கான பல பாதுகாப்புகளை, விடுதலைகளை அவர் செயற்பாட்டிற்குள் கொண்டுவந்தார்.

நாட்டில் விவசாய தன்னிறைவை வலியுறுத்தி அதற்கான செயற்பாடுகளில் மக்களை ஈடுபடுத்தினார். 2,500,000 குழந்தைகளுக்கு மூளைக்காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல் மற்றும் தட்டம்மைக்கு எதிராக தடுப்பூசி போடுவதன் மூலம் பொது சுகாதாரத்தை மேம்படுத்தினார். சஹேலின் வளர்ந்து வரும் பாலைவனமாதலைத் தடுக்க ஒரு கோடிக்கும் மேற்பட்ட மரங்களை நடுவதும் அவரது தேசிய நிகழ்ச்சி நிரலில் அடங்கியிருந்தது.

அதனை தனது 4 வருட ஆட்சிக்குள் நிறைவேற்றியும் காட்டினார்.

> **எமக்கான பொது எதிரி செய்ய வேண்டிய வேலை, நம்மோடு ஒன்றாக இருந்தவர்களே நிறைவேற்றி எதிரிக்கு பலம் சேர்த்து வீழ்ந்து விட்ட இனமாக ஈழத் தமிழர்கள் மட்டும் அல்ல, புர்கினோ பாசோ மக்களும் இருந்தனர் என்பது இங்கு வரலாற்றில் ஒற்றுமையாகி இருக்கின்றது.**

இதனை அவர் ஆரம்பிக்கும் போது உலகமே 'புல்லே முளைக்காத பாலை வனத்தில் சோலை வனமா?' என்று எள்ளி நகையாடியது. ஆனால் அதனை அவர் தனது செயற்பாடுகளால் முறியடித்துக் காட்டினார். சங்கரா ஒவ்வொரு கிராமமும் தமக்கான மருந்தகத்தைக் கட்ட அழைப்பு விடுத்தார். மேலும் சமூகங்கள் தமக்குள் சுய தேவைக் குழுக்களை அமைத்து தங்கள் சொந்த உழைப்பைக் கொண்டு 350-க்கும் மேற்பட்ட பள்ளிகளைக் கட்டும்படி செய்தார்.

1980-களில், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இன்னும் மிகக் குறைவாக இருந்தபோது, சுற்றுச்சூழல் பாதுகாப்பை முதன்மையாகக் கருதிய சில ஆபிரிக்கத் தலைவர்களில் சங்கராவும் ஒருவர். அதற்காக மூன்று முக்கியப் போராட்டங்களில் ஈடுபட்டார்.

காட்டுத் தீயை ஏற்படுத்துதல் 'குற்றமாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படும்'. அத்துடன், கால்நடைகள் கட்டாக் காலியாக சுற்றித் திரிய அனுமதிப்பது 'மக்களின் உரிமைகளை மீறும் செயல்' என்றார். அதனை சீர் செய்ய கால் நடைத் தொழிலில் ஒழுங்கமைப்புகளை ஏற்படுத்தினார்.

சட்டவிரோத விறகு வெட்டுதலுக்கு எதிராக, புரட்சியின் தொடக்கத்தில் இருந்து பதினைந்து மாதங்களில் பத்து மில்லியன் மரங்கள் நாட்டினார். அவர் மரம் நடும் இயக்கத்தை ஆரம்பித்த போது உலகின் மிகப் பெரிய சஹாரா பாலைவனத்துடன் இணையும் இந்த வெப்ப மண்டலத்தை இவர் சோலைவனம் ஆக்குவாரா என்று உலகம் எள்ளி நகையாடியதை புறம் தள்ளித், தான்நம்பிக்கையுடன் மக்கள் இயக்கமாக செயற்படுத்தினார். தொடர்ச்சியான வறட்சியை எதிர்கொள்ள, நாட்டின் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நாட்டைக் கடந்து சுமார் ஐம்பது கிலோமீட்டர் அகலமுள்ள மரங்களால் ஆன 'பச்சைப் பட்டி' (Green Belt) அல்லது பசுமைச் சுவரை உருவாக்கவும் சங்கரா முன்மொழிந்தார். உலகின் எள்ளி நகையாடல்களை செயற்பாட்டின் ஊடு விரட்டியதை இன்று வரை பல சூழலியலாளர்கள் பெரிதும் வியந்து பாராட்டி வருகின்றனர்.

1983-க்கு முன்பு கிட்டத்தட்ட 1.1 பில்லியன் தொன்களாக இருந்த தானிய உற்பத்தி, 1987-இல் 1.6 பில்லியன் தொன்களாக உயரும் என்று கணிக்கப்பட்டது. இதனை அன்று உணவு உரிமைக்கான முன்னாள் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரான ஜீன் ஜீக்லர், நாடு 'உணவு தன்னிறைவு அடைந்து விட்டது' என்று கூறினார்.

இன்று பிரான்சில் ஆரம்பித்து பிரேசில் வரை பல கோடி டாலர்கள் கொட்டி நடத்தப்படும் சூழலியல் மாநாட்டு செயற்பாடுகளை தனது உலர் வலயத்தில், வறுமையில் இருந்த போதே ஆரம்பித்து செயற்படுத்திக் காட்டிய செயல் வீரன் தோமஸ் சங்காரா.

தமது நாட்டின் மீதான சுரண்டல்களை பணப் பட்டுவாடாக்களை தடுத்தி நிறுத்திய தோமஸ் சங்காராவை கொல்வதற்கான திட்டத்தை பிரான்ஸும் அதன் சுரண்டல் கூட்டாளிகளும் இணைந்து செயற்படுத்தினர். அதற்கு அவர்கள் அவரின் உற்ற தோழனைப் பாவித்தனர்.

ஆமாம், தோமஸ் சங்காராவின் உற்ற நண்பனும் அமைச்சரவை மந்திரியுமான பிளேஸ் காம்போரேவிற்கு பதவி, பண ஆசை காட்டி உட்சதியால் 1987-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15-ஆம் நாள் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் வைத்து கைத் துப்பாக்கியால் 'நீயா இதனைச் செய்கின்றாய்' என்று கேட்பதற்கு முன்பே... சுட்டுக் கொல்லப்பட்டார் சங்காரா.

பல இயக்கங்களாக இணைந்து ஐக்கிய முன்னணியாக போராடிய நிலையில்தான் 'நீயா இதனைச் செய்கின்றாய்' என்று குரல் எழுப்ப முன்பே, கொன்று குவித்த வரலாறு புர்கினோ பாசோ-வில் மட்டும் அல்ல... ஈழத்திலும், ஈழ விடுதலைப் போராட்டத்திலும் நடைபெற்றுத்தான் இருக்கின்றது.

இரண்டிலும் பொது எதிரிதான் இதனால் பலமும், பலனும் அடைந்தான்... தற்காலிகமாக.

எமக்கான பொது எதிரி செய்ய வேண்டிய வேலை, நம்மோடு ஒன்றாக இருந்தவர்களே நிறைவேற்றி எதிரிக்கு பலம் சேர்த்து வீழ்ந்து விட்ட இனமாக ஈழத் தமிழர்கள் மட்டும் அல்ல, புர்கினோ பாசோ மக்களும் இருந்தனர் என்பது இங்கு வரலாற்றில் ஒற்றுமையாகி இருக்கின்றது. என்ன, புர்கினோ பாசோவில் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது, ஈழத்தில் போராட்டக்காலத்தில் நடைபெற்றது.

அன்று இந்த சங்காராவின் மரணம் எவ்வாறு நடைபெற்றது என்று புதிதாக பொறுப் பேற்ற பிளேஸ் காம்போரே தலைமையிலான அரசு சொல்லா விட்டாலும். தொடர்ந்து அடுத்த 27 ஆண்டுகள் புர்கினோ பாசோ-வின் ஆட்சித் தலைவராக - பிரான்ஸ்சின் பொம்மை ஆட்சித் தலைவராக பிளேஸ் காம்போரே ஆட்சியில் இருந்தார்.

இவர் ஆட்சி செய்த 27 வருடங்களில் நாட்டில் கல்வி அறிவு பெற்றவர்களின் சத விகிதம் 78 சதவிகித்தில் இருந்து மீண்டும் 13 சதிவிகிதம் அளவிற்கு வீழ்ந்தது என்ற புள்ளி விபரத்தில் இருந்து, நாடு எவ்வளவு படுபாதாளத்திற்கு இவரால் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பதை அறிய முடியும்.

2014-ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்து மக்கள் போராட்டதினால் இவர் அகற்றப்பட்டார்.

தொடர்ந்த நிலையற்ற ஆட்சிகளின் பின்பு மீண்டும் 2022-இல் தற்போதைய நாட்டின் தலைவர் இப்ராஹிம் தாரே (Ibrahim Traore) மக்களுக்கான ஆட்சியை இராணுவப் புரட்சி மூலம் நிறுவி உள்ளார்.

உண்மையில் இந்த இராணுவப் புரட்சி, ஆட்சி மாற்றத்தின் பிரதானியாக இவர் இருந்தாலும், ஆரம்பத்தில் இந்த ஆட்சியின் தலைவர் வேறு ஒருவராக இருந்தார். ஆனால் குறுகிய காலத்தில் நாட்டை முன்னோக்கி நகர்த்தும் நோக்கில் இப்பராஹிம் தாரே நாட்டின் தலைவராக பொறுப்பேற்றார்.

நாட்டின் இராணுவத்தின் கப்ரன் தரத்தில் இருக்கும் அவர் அதற்கான மிகக் குறைந்த ஊதியம், எளிமையான வாழ்க்கை - வசதி, வதிவிடம் என்றவாறே தனது கடந்த 3 வருட ஆட்சியைத் தற்போது தொடர்கின்றார்.

ஆட்சியிற்கு வந்ததும் தனது செயற்பாடுகள் தோமஸ் சங்காராவின் வழிதான் என்று பிரகடனப்படுத்தினார்.

மேற்கத்திய அரசியல் அறிஞர்கள், புர்கினோ பாசோவின் இளம் மக்கள் தொகைதான் இப்ராஹிமின் பிரபலத்திற்கு காரணம் எனக் கூறுகின்றனர்.

போரினால் ஆன்மாவை இழந்த ஒரு நாட்டை, எப்படி உற்சாகமாக வைத்திருப்பது என்ற சூத்திரத்தையே அவர் பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர். போரினால் ஆன்மா இழந்த தேசத்தை இலங்கையிலும் தூக்கி நிறுத்த தலைவர்கள் உருவாக வேண்டும்

சமூக வலைத்தளங்களில் இப்ராஹிம் வைரலான தலைவராக உள்ளார். அவரது சாதனைகள் சமூக ஊடகங்களில் அவரது ஆதரவாளர்களால் பரப்பப்படுகின்றன. ரிகானா, கெல்லி போன்ற கருப்பின கலைஞர்கள் இப்பராஹிம் தாரேரேவைப் புகழ்ந்து பாடுவதுபோல AI-ஆல் உருவாக்கப்பட்ட வீடியோவும் உண்மைபோல பரப்பப்படுகின்றது.

ரஷ்ய ஊடகங்கள் ஆபிரிக்கா முழுவதும் இப்ராஹிமின் உரைகளைப் பரப்பி, அவரது பிம்பத்தை ஊதிப் பெரிதாக்குவதாக மேற்கத்திய விமர்சகர்கள் சாடுகின்றனர். ஆபிரிக்கா எப்போதுமே ஒரு தலைவரை எதிர்நோக்கி இருக்கிறது. அந்த இடத்தை நிரப்புவதற்கு தகுதியான ஒருவர் போலவே முளைத்தெழுகிறார் இப்ராஹிம்.

இவர் மீது இதுவரை 19 கொலை முயற்சிகள் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவற்றில் சில ஆதாரப்பூர்வமற்றவையாக தோன்றினாலும், இவற்றை கடந்து போக முடியவில்லை. எமக்கு வரலாறு முழுவதும் பிடல் காஸ்ரோவில் இருந்து தோமஸ் சங்காரா, சிலியின் சல்வடோர் அலன்டே வரையும் வரலாறு அப்படித்தான் பாடங்களை சொல்லித் தந்து இருக்கின்றது. செகுவேராவின் மரணம் இதற்கு நல்ல உதாரணம்.

கானாவின் ஜனாதிபதி ஜான் மஹாமாவின் பதவியேற்பு விழாவில், 21 நாட்டு தலைவர்கள் பங்கேற்றிருந்தனர். இப்ராஹிம் தாரே போர் சீருடை அணிந்து, தனது கைத்துப்பாக்கியுடன் வந்தபோது அரங்கம் அதிர்ந்தது. ஆப்பிரிக்காவில் அவருடைய செல்வாக்கு ஆலமரம் போல் கிளை பரப்பி வருவதற்கு அந்த நாள் சாட்சி.

இதே நிலையில்தான் 1976-ஆம் ஆண்டு கேணல் கடாபியும் இலங்கையில் நடைபெற்ற அணி சேரா மாநாட்டிற்கும் வந்திருந்தார்.

ஆனாலும், தோமஸ் சங்காராவின் கொலையுடன் அமைக்கப்பட்ட பிரான்ஸ் பொம்மை ஆட்சி முறையை மாற்றி, சங்காராவினால் முன்னெடுக்கப்பட்ட புர்கினோ பாசோவின் சுயாட்சியை, மக்கள் நலன்களை முதன்மைப்படுத்தி தொடர்கின்றார் இப்ராஹிம் தாரே.

உடனடியாக தனது நாட்டில் தங்கியிருந்த பிரான்ஸ் இராணுவத்தை வெளியேற்றினார். மேற்கத்திய நாடுகளின் பல்தேசியக் நிறுவனங்களை நாட்டுடமை ஆக்கினார். தனது நாட்டிற்கான பாதுகாப்பு தொழில் நுட்ப உதவி போன்றவற்றிற்கு ரஷ்யா, சீனா போன்ற நாடுகளுடன் நட்புப் பாராட்டி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அப்படியான ஒரு சந்தர்பத்தில் ரஷ்யாவிற்கு சென்றிருந்த வேளை அவர் அங்கு ஆற்றிய உரை உலக நாடுகளை திரும்பி பார்க்க வைத்தது

அவர் அதில் முழு ஆபிரிக்க நாடுகளுக்காகவும் குரல் கொடுக்கத் தொடங்கினார். முழு ஆபிரிக்க நாடுகளின் எழுந்து வருதலையும் உறுதிப்படுத்த இணைந்து செயற்பட



> ***“குறுகிய காலத்தில் நாட்டை முன்னோக்கி நகர்த்தும் நோக்கில் நாட்டின் தலைவராக பொறுப்பேற்ற இராணுவத்தின் கப்ரன் தரத்தில் இருக்கும் இப்பராஹிம் தாரே மிகக் குறைந்த ஊதியம், எளிமையான வாழ்க்கை - வசதி, வதிவிடம் என்றவாறே தனது கடந்த 3 வருட ஆட்சியைத் தற்போது தொடர்கின்றார்.”***

வருமாறு அழைப்பும் விடுத்தார். ஆபிரிக்க நாடுகள் வளமான நாடுகளாக இருந்தாலும் வறுமையில் வாடும் நாடுகளாகவும் கல்வி அறிவு குறைந்த நாடுகளாகவும் இருப்பதற்கான நிலமைகளை இந்த சுரண்டும் நாடுகளே அதிகம் ஏற்படுத்துகின்றன என்று அறைகூவல் விடுத்தார்.

ஆபிரிக்க மக்களைப் பற்றி இருண்ட கண்டம் என்ற பொய்ப் பிரச்சாரங்களை செய்து வரும் மேற்கத்திய ஊடகங்களாள பிபிசி (BBC) சிஎன்என் (CNN) ரைம்ஸ் (TIMES) போன்ற

மேற்கத்தியச் செய்தி நிறுவனங்களின் மீது கடுமையான தணிக்கை மற்றும் கட்டுப்பாடுகளை விதித்தார்.

தமக்கு உதவிகள் தேவை இல்லை. மாறாக தொழில் நுட் பங்களை தாருங்கள், பல்கலைக்கழகங்களை தாருங்கள், எமது மக்கள் அங்கு கல்வி கற்று எமக்கான தொழில்த்துறை தொழிநுட்பங்களை நாமே உருவாக்குகின்றோம் என்றே இதன் போது ரஷ்யா, சீனாவிடம் அவர் வேண்டுகோள் விடுத் தார். அவரின் அறை கூவல், அவர் மீதான நம்பிக்கையை அந்த நாட்டு மக்களுக்கும் ஆபிரிக்க மக்களுக்கும் ஏன் மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கும் ஏற்படுத்தி, உல கத்தை புர்கினோ பாசோவைத் திரும்பிப் பார்க்க வைத் துள்ளது.

மதச் சார்பற்ற பல தேசிய இனங்கள் வாழும் நாடாக தனது நாட்டைப் பிரகடனப்படுத்தி செயற்படுத்தி வருகின்றார்.

## இப்பிராஹிமின் அபிவிருத்தித்திட்டங்கள்:

- அதிவேக விரைவு புகையிரத சேவை. இது ஆபிரிக்கா வின் பல நாடுகளை இணைக்கும் திட்டம். 10 வருடங் களில் ஆபிரிக்காவின் உல்லாசப் பயணத்துறையை அதி கரிப்பது.
- 4000 மீற்றர் வரையிலான ஓடு தளம் கொண்ட சர்வதேச விமான நிலையத்தை உள்ளூர் மக்களை கொண்டே அமைப்பது. இதற்கான மின்சாரத்தை இயற்கையின் சூரிய வெளிச்சத்தில் இருந்து பெறுவது.
- இயற்கை கொடுக்கும் ஒவ்வொரு ஆற்றலையும் தேவை யான சக்தியாக மாற்றும் திட்டமாக காற்றாலை மின்சாரம். இது ஒரு மின்சார உற்பத்தியை பின்புலமாக நின்று தாங்கும் வகையில் அமைக்கப்படுகின்றது. இதில் அவரின் சுற்றுச் சூழலை பற்றி கருதுகோள் முக்கியத்துவம் பெறு கின்றது.
- மூடி வைக்கப்பட்டிருக்கும் தங்கச் சுரங்கங்களையும் புதிய தங்கச் சுரங்கங்களையும் உருவாக்குதல் என்று ஆரம்பித்திருக்கின்றார். இதற்கு முன்பு, தங்கத்தை பிரித் தெடுக்க வெளிநாடுகள் தங்கள் நாட்டிற்கு கொண்டு சென்று, அதிக இலாபம் சம்பாதித்ததை தடுத்து நிறுத்தி, அதனைப் பிரித்தெடுக்கும் வேலையை உள்ளூரில் ஆரம் பித்தல். இதற்கான தொழில் நுட்ப அறிவை உள்ளூர் மக்கள் பெற்று அதில் ஈடுபடுவதற்கான கல்வியை வழங் குவதில் அதிக கவனம் செலுத்துதல்.
- 5000 கிலோ மீற்றர் வரையிலான புதிய சாலை வசதிகளை ஏற்படுத்தி, உள்ளூர்ப் பயணங்கள், தொழில்கள், வேலை வாய்ப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- உணவு உற்பத்தியில் தன்னிறைவைக் காணும் முகமாக வீடு தோறும் பயிர்களை வளர்ப்போம் என்பதாக மக் களை ஊக்குவிக்கின்றார்.
- வெளி நாடுகளில் இருந்து பழைய ரயர்களை வரவழைத்து உள்நாட்டில் கிடைக்கும் ரயர்களை இணைத்து புதிய தொழில் நுட்ப முறையில் வீதிகளைப் போட்டு இருக்கிறார்.
- 30,000 பொது மக்களை திரட்டி ஒரு ஊரை சுத்தப் படுத் திக் காட்டி, எல்லா ஊரிலும் இதனை நடைமுறைப்படுத்தி நாட்டையே சுத்தப் படுத்தி இருக்கிறார்.
- தன் நாட்டு மக்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி பல தொழில் நுட்பங்களை படிக்க வைத்து, தன் நாட்டிற்கே சேவை செய்ய வைத்து இருக்கிறார்.
- ஒரே நாளில் 50 லட்சம் மரங்களை நட்டு பசுமை புரட்சியை உருவாக்கும் தோமஸ் சங்காராவின் திட்டத்தைத் தொடர உறுதியளித்துள்ளார்.
- 2050-ஆம் ஆண்டில் தன் நாடு எப்படி இருக்க வேண்டும், என்ன செய்தால் எப்படி வரும் என்று மக்களுக்கு பாடம் எடுத்து, மக்களை ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்த சொல்லி இருக்கிறார்.
- உலக வங்கிக் கடனை மறுத்து, தன் நாட்டு கனிம வளங் களை விற்க ரஷ்யா, சீனா மற்றும் பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் போட்டுள்ளார்
- வௌகடுகூ விமான நிலையத்திற்கு தோமஸ் சங்காரா வின் நினைவாக Thomas Sankara International Airport Ouagadougou எனப் பெயரிடப்பட்டது.
- மேற்கத்திய நலன்களை பாதுகாக்கும் மேற்கத்திய நாடு களால் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய குழுக்களின் நட வடிக்கைகளைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்.

இப்ராஹிமின் இரண்டு ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு, ‘போரினால் ஏற்பட்ட பஞ்சம் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத் தல்கள் இருந்தபோதிலும், 2025-இல் நாட்டின் பொருளா தாரம் வலுவடையவே செய்கிறது. உள்நாட்டு வருவாயை உயர்த்துவதிலும், பொது ஊதிய மசோதாவைக் கட்டுப்படுத் துவதிலும், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப் புக்கான செலவினங்களை அதிகரிப்பதிலும் ‘பாராட்டத்தக்க முன்னேற்றம்’ அடைந்திருக்கிறது’ என சர்வதேச நாணய நிதியம் இவரைப் பாராட்டியது.

இதேபோல அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட உலக வங்கியும் இப்ராஹிமின் ஆட்சியை பாராட்டியிருக்கிறது என் பது தவிர்க்க முடியாத புள்ளி விபரமாக உலக அரங்கில் வெளிவந்துள்ளது.

காலனித்துவ அடையாளங்களை முற்றிலுமாக ஒதுக்கும் இப்ராஹிம், வழக்கறிஞர்கள் பிரான்ஸ் கலாச்சாரமான வெள்ளை உடையணிந்து வரும் முறைமையை முழுவதுமா கவும் தடை செய்துள்ளார். இதற்கு மாற்றீடாக; புர்கினோ பாசோ-வின் பாரம்பரி உடைகளை அணியும் கலாச்சா ரத்தை ஊக்குவித்தும் வருகின்றார்.

புர்கினோ பாசோவைத் தொடர்ந்து அதன் கூட்டணி நாடு களான மாலி மற்றும் நைஜரும் இப்ராஹிமின் வழியைப் பின் பற்றுகின்றன. கடந்த 2024 மார்ச்சில் நைஜர் அதன் எல் லைக்குள் அமெரிக்க ராணுவத்தின் நடவடிக்கைகளை அனு மதிக்கும் ஒப்பந்தங்களைத் திரும்பப் பெற்றது. இதே போல செனகல் மற்றும் கோட் டி வார் நாடுகளும் தங்கள் எல்லை யில் இருந்து மேற்குலக இராணுவம் வெளியேற வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இப்ராஹிம் ஆப்பிரிக்கா முழுமையாக விடுதலைப் பெறுவ தற்கான எழுச்சியைத் தூண்டியிருக்கிறார் என அரசியல் நோக்கர்கள் புகழ்கின்றனர்.



நீண்ட காலமாக ஒவ்வொரு அரசியல் தலைவரும் கேட்கும், 'இயற்கை வளம் நிறைந்த ஆப்பிரிக்க கண்டத்தின் மக்கள் ஏன் ஏழைகளாக இருக்கிறார்கள்' என்ற கேள்வியையே இப்ராஹிமும் கேட்கிறார். ஆனால் அதனை உரக்கக் கேட்கிறார். இதிலிருந்து விடுபடுவதற்கான வேலைத் திட்டத்தை முன்வைத்து தனது நாட்டை கட்டி எழுப்புகின்றார். கூடவே ஆபிரிக்காவின் ஏனைய நாடுகளை யும் அவ்வழியைப் பின்பற்ற வருமாறு அறை கூவலும் விடுகின்றார்.

இதனால் அவர் 'புதிதாக உதித்து வந்த தோமஸ் சங்காரா' என்று அந்த நாட்டு மக்களும் ஏனைய மக்களும் இன்று பார்க்கத் தொடங் கிவிட்டனர்.

ஆபிரிக்காவிற்கான தனியான நாணயம் என்ற அவரின் அறை கூவலுக்கு ஆபிரிக்க நாடுகளிடையே ஏற்பட்டு வரும் ஆதரவு மேற் குலகால் அதிகம் வெறுக்கப்படும் விடயமாக இருக்கின்றது.

முன்னாள் லிபிய அரசின் தலைவர் கடாபியின் இது போன்ற அறை கூவலும் அதற்கான முன்னெடுப்புகளும் இந்தியாவின் முன்னாள் தலைவர் ராஜீவ் காந்தியின் தெற்கு ஆசியாவிற்கான தனியான நாணயம் என்ற அறைகூவலும் செயற்பாடுகளும் அவர்களின் மரணத்தை துரிதப்படுத்தியதில் முக்கிய பங்காற்றியது என்று அரசியல் ஆய்வாளரின் பார்வையை நாம் கடந்து போக முடியாது.

கூடவே தோமஸ் சங்காராவும் அதே போன்ற ஆபிரிக்காவிற்கான தனி நாணயம் என்ற கருதுகோளுடான செயற்பாடும் அவரின் கொலைக்குப் பின்னால் அதிகம் இருப்பதாகவும் தற்போதைய அவரின் கொலை பற்றிய விசாரணைகள் தெரியப்படுத்துள்ளன.

பெரும்பான்மையான புர்கினோ பாசோ குடிமக்கள், பிரான்சின் வெளி யுறவு அமைச்சகமான குவாய், சங்காராவின் ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்பாடு செய்வதில் காம்போரேவிற்குப் பின்னால் இருந்ததாகக் கரு துகின்றனர். 2022-ஆம் ஆண்டில், புர்கினோ பாசோவில் உள்ள ஒரு இராணுவ நீதிமன்றம், ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு பல தசாப்தங் களாக நாட்டை ஆண்ட காம்போரே, சங்கராவின் கொலைக்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றவாளி எனக் கண்டறிந்து, அவருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

இதுதான் தோமஸ் சங்காராவின் மரணத்தின் பின்பு வாழ்வு உண்டு என்ற இயங்கியல் தத்துவத்தை நிறுவுவதாகவும் அமைந்திருக் கின்றது. இதனைத்தான் நாம் வரலாறு விடுதலை செய்யும் என்ற அர்த்தத்துடன் பேசுகின்றோம்.

இது போலவே தற்போதைய தலைவருக்கும் உயிர் ஆபத்து ஏற் படலாம் என்று மக்கள் எச்சரிக்கையாக அவருக்கு பாதுகாப்பை வழங்கி வருகின்றனர். இதில் இருந்து தன்னைப் பாதுகாத்து, மக்க ளுக்கான தலைவராக தொடர்ந்தும் புக்கினா பாசோ நாட்டை ஆபி ரிக்காவின் ஒளிக் கீற்றாக தொடர்ந்தும் வெற்றி நடை போட வைப் பாரா இப்ராஹிம்? என்பதை வரலாறு நிச்சயம் சொல்லி நிற்கும்.

வரலாறு ஆபிரிக்க மக்களையும் விடுதலை செய்யும். அதற்கான அடித்தளங்கள் தற்போது புர்கினோ பாசோ-வில் இடப்பட்டு வரு கின்றன.



James@thaiveedu.com

# மையமிழக்கும் மலையகத் தேசியம்

அருள்கார்க்கி



இலங்கையின் தேயிலைத் தோட்டங்களின் முதுகெலும்பான இந்திய வம்சாவளி மலையகத் தமிழ்ச் சமூகம், கடந்த ஒரு நூற்றாண்டில் அதன் தேசிய இருப்பில் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த ஆய்வுக் கட்டுரை, 1911 முதல் 2024 வரையான காலகட்டத்தில் அரசின் கொள்கை சார்ந்த தீர்மா னங்கள், குடியுரிமை இழப்பு உடன் படிக்கைகள், மற்றும் சமூகத்தின் உள்ளார்ந்த பலவீனங்கள் என்ப வற்றால் மலையக தேசியம் அதன் புவியியல் மையத்தில் இருந்து எவ்வாறு சிதைந்தது என்பதை விரிவாக ஆராய்கிறது. 1931-இல் 15.4%-ஆக இருந்த மலையகத் தமிழரின் அளவு, 2024-இல் 2.8%-ஆகக் குறைந்தது என்ற புள்ளிவிவ ரத்தை மையமாகக் கொண்டு, இந்த வீழ்ச்சிக்கு குடியுரி மைக்கு பிந்தைய இன அடையாள மாற்றம், சமூகக் கட்டமைப்புக் குறைபாடுகள், மற்றும் அரசியல் தலைமையின் செயலற்ற தன்மை ஆகியவையே முதன்மைக் காரணங்கள் என நிறுவுகிறது.



மலையகத் தமிழர்கள், இலங்கையில் வாழும் தமிழ் பேசும் சமூகத்தில் தனித்துவமான வரலாற்றுப் பின்னணி, கலாசாரம், அரசியல் அபிலாஷைகள் மற்றும் சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளைக் கொண்ட ஒரு தேசிய இனம் (Ethno-Nation) என்ற அடையாளத்தை, நீண்ட போராட்டங்களின் விளைவாகவே நிலைநாட்டினர். மலையகத் தேசியம் என்பது, தேயிலைத் தோட்டப் பகுதிகளைப் புவியியல் மையமாகக் கொண்ட அவர்களின் தனித்துவமான அரசியல் மற்றும் கலாசார இருப்புக்கான ஒரு கோரிக் கையாகும். 1820-களில் ஆரம்பித்து இந்தியாவிலிருந்து தொழிலாளர்களாகக் கொண்டுவரப்பட்ட மலையக மக்கள், 1931-ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கணிசமான பலத்தைக் கொண்டி ருந்தனர். இந்தச் செறிவே மலையகத் தேசியத்தின் புவியியல் அடித்தளமாக விளங்கியது.



1931-இல் 15.4%-ஆக இருந்த மலையக மக்களின் சதவீதம், அவர்களை இலங்கையின் இரண்டாவது பெரிய இனக்குழுமமாக ஆக்கியது. இந்த மக்கள் தொகைப் பலம், மலையக அரசியல்வாதிகளுக்கு காலனித்துவத்துக்குப் பிந்தைய அரசியல் அதிகாரத்தில் பேரம் பேசும் சக்தியை வழங்கியது. 1948-இல் சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசாங்கங்கள் மேற்கொண்ட குடியுரிமைச் சட்டங்கள் மூலமாக, மலையகத் தமிழர்கள் ஒரே இரவில் நாடற்றவர்களாக்கப்பட்டமை (Statelessness), மலையக தேசியத்தின் அரசியல் பலத்தை நிரந்தரமாகப் பலவீனப்படுத்திய முதலாவது சட்ட ரீதியான தாக்குதலாகும்.

## அரசாங்கக் கொள்கை ரீதியான தீர்மானங்களும் வெளியேற்றமும் (1948–1984):

மலையகத் தேசியத்தின் மக்கள் தொகைப் பலம் சிதைந்ததற்கான நேரடி மற்றும் முதன்மையான காரணம், அரசாங்கத்தின் ஒப்பந்தங்கள் மூலமான வெளியேற்றக் கொள்கைகளே ஆகும். சிறிமா-சாஸ்திரி மற்றும் 1974 இந்திரா-சிறிமா ஒப்பந்தங்களின் விளைவாக, மலையக மக்களின் சனத்தொகைப் பெருக்கம் இயற்கைக்கு மாறான முறையில் எதிர்மறை வளர்ச்சி வீதத்தை அடைந்தது.

1971-1981 காலப்பகுதியில் பதிவான -3.83% என்ற அதிர்ச்சியூட்டும் எதிர்மறை வீழ்ச்சிக்கு, ஒப்பந்தங்களின் விளைவாக மலையக மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமையே காரணம். 1971 முதல் 1984 வரையான காலப்பகுதியில் மொத்தமாக 446,358 மலையக மக்கள் தாயகம் திரும்பினர். 1971-இல் 9.3%-ஆக இருந்த மலையக மக்களின் சதவீதம், 1981-இல் 5.5%-ஆகக் குறைந்தது. இந்தத் திட்டமிட்ட மக்கள் தொகை இழப்பு, மலையகத் தேசியத்தின் அரசியல் பலத்தை நிரந்தரமாகச் சிதைத்தது.

அதேபோல் அரசாங்கத்தின் நிலச் சீர்திருத்தச் சட்டங்களும், கலவரங்களும் மலையக தேசியத்தின் புவியியல் ஸ்திரத்தன்மையை சிதைத்தன. 1956, 1971 நிலச் சீர்திருத்தச் சட்ட அமுலாக்க வன்முறைகள் மற்றும் 1977 கலவரம் ஆகியவற்றின் விளைவாக கணிசமான மலையகத் தமிழ் மக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் சார்ந்த மாவட்டங்களுக்குக் குடிபெயர்ந்தனர். மலையக மக்களின் வாழ்விடங்கள் பறிக்கப்பட்டு, அபிவிருத்தி என்னும் பெயரில் அல்லது குடியேற்றத் திட்டங்கள் மூலம் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றும் முயற்சிகள் நடந்தேறின. இது, மலையக தேசியத்தின் புவியியல் உரிமைகோரலை நீர்த்துப்போகச் செய்தது.

மலையக தேசியத்தின் சனத்தொகை வீழ்ச்சிக்கு, அரசின் கொள்கைகள் மட்டுமல்லாமல், மலையக மக்களின் சமூகப் பொருளாதாரப் பின்னடைவு, ஆரோக்கியக் குறைபாடுகள் போன்ற உள்ளார்ந்த பலவீனங்களும் காரணமாக அமைந்தன. மலையக மக்களின் மக்கள் தொகை பெருக்க வீதம் குறைவாக இருப்பதற்குக் காரணம், அவர்களது வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் மோசமான ஆரோக்கியக் குறியீடுகளே ஆகும்.

| விபரம் | இலங்கை (சராசரி) | தோட்டப் புறங்கள் |
|---|---|---|
| உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் இறந்தவை (சிசுமரணம்) | 10 | 13 |
| 5 வயதுக்கு முன்னரேயே இறந்து போனவை | 11 | 15 |
| 5 வயதுக்கும் குறைந்தவர்களிடையே வளர்ச்சி குறைந்தவர்கள் (Stunting) வீதம் | 17 | 32 |
| 5 வயதுக்கும் குறைந்தவர்களிடையே குறை நிறை கொண்டவர்கள் (Under Weight) வீதம் | 21 | 30 |
| பெண்களிடையே ஏற்ற தொடர்பின்மை (BMI) வீதம் (15-49 வயது) | 9 | 22 |

*Dept.of.Census and Statistics, Srilanka, 2016*

தோட்டப்புறங்களில் ஊட்டச்சத்துக் குறைபாடு (Stunting, Underweight) தேசிய சராசரியை விட கிட்டத்தட்ட இரு மடங்காக உள்ளது. மேலும், சிசு மரண வீதம் அதிகமாக உள்ளது. இந்த மோசமான ஆரோக்கிய நிலவரங்கள், மலையகப் பெண்களின் இயற்கை இனப்பெருக்கத்தை (Natural Fertility) மட்டுப்படுத்தி, மலையக தேசியத்தின் உயிரியல் பெருக்கத்தை (Biological Growth) பலவீனப்படுத்துகின்றன. சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் நீர் வசதி போதாமை போன்ற கட்டமைப்பு குறைபாடுகளைக் கொண்ட லயன் அறைகளில் தொடரும் வாழ்க்கை, இந்த ஆரோக்கியக் குறிகாட்டிகளை மேலும் மோசமாக்குகிறது.

## புவியியல் மையச் சிதைவும் இன அடையாள மாற்றமும் (2012–2024):

சமீபத்திய 2024-ஆம் ஆண்டுக் கணிப்பீட்டுத் தரவுகள், மலையக தேசியத்தின் புவியியல் மையத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியூட்டும் வீழ்ச்சியைக் காட்டுகின்றன. இந்த வீழ்ச்சி, குடியுரிமைக்குப் பிந்தைய இன அடையாள மாற்றத்தாலேயே நிகழ்ந்துள்ளது. மலையக தேசியத்தின் கோட்டையாகக் கருதப்படும் நுவரெலியா மாவட்டத்திலேயே வீழ்ச்சி மிகவும் தீவிரமாக உள்ளது. அரசாங்கத்தின் புள்ளிவிவரத் திணைக்களம் (DCS) வெளியிட்டுள்ள 2012 மற்றும் 2024-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணிப்பீட்டுத் தரவுகள், மலையகத் தமிழ் மக்களின் எண்ணிக்கை மற்றும் வீதத்தில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகின்றன.



இனரீதியான பரம்பல் 2012 மற்றும் 2024

| இனத்தொகுதி | 2012 | | 2024 | | வருடாந்த சராசரி அதிகரிப்பு விகிதாசாரம் 2012-2024 (நூற்றுக்கு) |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் | சதவீதம் | மொத்தம் | சதவீதம் | |
| இலங்கை | 20,359,439 | 100.0 | 21,781,800 | 100.0 | 0.5 |
| சிங்களம் | 15,250,081 | 74.9 | 16,144,037 | 74.1 | 0.4 |
| இலங்கைத் தமிழ் | 2,269,266 | 11.1 | 2,681,627 | 12.3 | 1.3 |
| இந்தியத் தமிழர்/ மலையக தமிழ் | 839,504 | 4.1 | 600,360 | 2.8 | -2.6 |
| இலங்கைச் சோனகர்/ முஸ்லிம் | 1,892,638 | 9.3 | 2,283,246 | 10.5 | 1.5 |
| ஏனையவை | 107,950 | 0.5 | 72,530 | 0.3 | -3.1 |

இனரீதிக்கு ஏற்ப சனத்தொகை மற்றும் வருடாந்த சராசரி அதிகரிப்பு வீதம் 2012 மற்றும் 2024

2012-ஆம் ஆண்டில் 839,504 ஆக இருந்த இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர் எண்ணிக்கை, 2024-இல் 600,360-ஆகக் குறைந்துள்ளது. அதாவது, சுமார் 239,144 பேர் குறைந்துள் ளனர். மொத்த மக்கள் தொகையில் இவர்களின் வீதம் 4.1%-இலிருந்து 2.8%-ஆகச் சரிந்துள்ளது.

மலையக மக்களின் வருடாந்த சராசரி அதிகரிப்பு வீதம் -2.6%-ஆகக் காணப்படுவது, இது சாதாரண இயற்கையான வீழ்ச்சி அல்ல, மாறாக அடையாள மாற்றம் அல்லது பாரிய இடம்பெயர்வு மூலமாகவே ஏற்பட்டிருக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது. அதேவேளையில், இலங்கைத் தமிழரின் எண்ணிக்கை 11.1%-இலிருந்து 12.3%-ஆக அதிக ரித்துள்ளதுடன், அவர்களின் வருட சராசரி அதிகரிப்பு வீதம் 1.3%-ஆக உள்ளது. இது, மலையக மக்களின் வீழ்ச்சியும், இலங்கைத் தமிழர்களின் வளர்ச்சியும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்ற கருதுகோளை வலுப்படுத்துகிறது.

மலையக மக்கள் இலங்கைத் தமிழராகப் பதிவு செய்யப்பட் டிருப்பதன் மிகத் தெளிவான ஆதாரத்தை, அவர்கள் பெரும் பான்மையாக வாழும் மாவட்டங்களின் இன விகித மாற் றங்கள் மூலம் காணலாம்.

இந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக் கும்போது மலையக மக்களின் புவியியல் மையமான நுவரெ லியாவில், மலையகத் தமிழரின் வீதம் 53.1%-இலிருந்து

| மலையக மாவட்டங்களில் சனத்தொகைப் பரம்பல் மாற்றம் (2012 vs 2024) | மலையகத் தமிழர் (2012 %) | மலையகத் தமிழர் (2024 %) | இலங்கைத் தமிழர் (2012 %) | இலங்கைத் தமிழர் (2024 %) |
|---|---|---|---|---|
| நுவரெலியா | 53.10 | 50.00 | 4.60 | 8.30 |
| பதுளை | 18.50 | 11.00 | 2.70 | 9.40 |
| கண்டி | 6.20 | 2.60 | 5.00 | 8.40 |
| இரத்தினபுரி | 5.70 | 2.10 | 5.00 | 8.00 |

50.0%-ஆகக் குறைந்திருக்கும் அதேவேளையில், இலங்கைத் தமிழரின் வீதம் 4.6%-இலிருந்து 8.3%-ஆகக் கிட் டத்தட்ட இருமடங்காக அதிகரித்துள்ளது. பதுளை மாவட் டத்தில் மலையக மக்கள் 18.5%-இலிருந்து 11.0%-ஆகக் குறைந்துள்ள நிலையில், இலங்கைத் தமிழர் வீதம் 2.7%-இலிருந்து 9.4%-ஆக சுமார் நான்கு மடங்காக அதிகரித் துள்ளது. இந்த போக்கு மலையக மாவட்டத்தில் வசிக்கும் மக்கள், இலங்கைத் தமிழர் என்று பதிவு செய்துள்ள மையையே வெளிப்படுத்து கிறது.

சனத்தொகை வீழ்ச்சியின் அடிப்படை ஒரு புறம் சமூக-பொருளாதார இடம்பெயர்வு என்றாலும், மறுபுறம் இந்த வீழ்ச்சியின் அளவு இவ்வளவு அதிகமாக இருப்பதற்கு கணக்கெடுப்பு நடைமு றையில் ஏற்பட்ட குறைபா டுகளே காரணமாக இருக் கலாம் என்ற விமர்சனங்கள் எழுகின்றன. 1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பிலேயே, சுமார் 213,000 மலையகத் தமிழ் மக்கள் குடியுரிமை பெற்றதன் காரணமாகத் தம்மை இலங்கைத் தமிழர் எனப் பதிவு செய்திருப்பது அதிகாரபூர் வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. குடியுரிமை பெற்ற எவரும் தம்மைப் பதிவு செய்துகொள்ளும் உரிமை உள்ளது. இருப் பினும், 2024-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில், கணிப்பீட்டா ளர்களுக்குப் போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படாமை அல்லது அவர்கள் இன அடையாளத்தைப் பதிவு செய்வதில் சுயவிருப்பின் பேரில் செயற்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

மலையக மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஒருபுறம் இலங்கைத் தமிழ்ச் சமூகத்துடன் அதிக ஒருங்கிணைவை (Integration) அடைந்து வருவதாலும், மறுபுறம் 'மலையகத் தமிழர்' என்ற அடையாளம் தோட்டப்புறப் பாகுபாடு (Estate Stigma) மற்றும் குறைவான வாழ்க்கைத்தரத்தையே சுட்டுவ தாலும், அவர்கள் சுயமாகவே தம்மை இலங்கைத் தமிழர் எனப் பதிவு செய்ய முனைகின்றனர். கணிப்பீட்டாளர்கள், குறிப்பாக நகர்ப்புறங்களில், 'இந்திய வம்சாவளித் தமிழர்' என்ற வகைப்பாட்டைக் குறித்துப் பேசுவதைத் தவிர்த்து, குடி யிருப்பாளரின் குடியுரிமையை (இலங்கைக் குடியுரிமை) அடிப்படையாகக் கொண்டு, 'இலங்கைத் தமிழர்' எனப் பதிவு செய்ய ஊக்குவித்திருக்கலாம். இதனால், மலையக மக்கள் தங்கள் இன அடையாளத்தை விட தேசிய குடியுரிமையை வலியுறுத்திப் பதிவு செய்துள்ளதால், புள்ளிவிவரத்தில் மலையக மக்களின் தனிப்பட்ட எண்ணிக்கை மிகக் கடுமையாகச் சரிந்துள்ளது.

மலையக மக்களின் சனத்தொகை வீழ்ச்சி (4.1%-இலிருந்து 2.8%-ஆக) என்பது வெறுமனே புள்ளிவிவர ரீதியான சரிவு அல்ல; அது மலையகத் தேசியம் என்ற கருத்தாக்கத்தின் அரசியல் இருப்பு மீதான பலமான அச்சுறுத்த லாகும். இந்த வீழ்ச்சி, எதிர்கால தேர்தல் எல்லை நிர்ணயத்தின்போது (Electoral Delimi- tation) மலையகப் பிரதேசங்களுக்கான பாரா ளுமன்ற மற்றும் மாகாண சபை ஆசனங்களை இழக்கும் ஆபத்தை அதிகரிக்கிறது. இன அடையாள மாற்றம் என்பது கௌரவமான வாழ்வு மற்றும் சமத்துவத்துக்கான மலையக மக்களின் உளவியல் தேடலின் பிரதிபலிப்பாகும். ஆனால், இந்த மாற்றம் மலையக மக்களின் தனித்துவமான அரசியல் அதிகாரத்தைக் கரைத்து, அவர்களைப் பெரிய சமூக நீரோட் டத்தில் இணைக்கும் முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.




இம்முறை கணக்கெடுப்பை மேற்கொண்ட நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள் மீதான பரவலான விமர் சனங்கள், இந்த புள்ளிவிவ ரங்களின் நம்பகத்தன் மையைக் கேள்விக்குள்ளாக் குகின்றன. குறிப்பாக, அடையாளப் பதிவு குறித்த தெளிவின்மை, டிஜிட்டல் தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் கணிப்பீட்டாளரின் சுய அனுமானங்கள் ஆகியவை மலையக மக்களின் சனத்தொகை சரிவுக்குக் காரணங்களாக இருக்கலாம் என்ற வலுவான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

2024-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில் கணிப்பீட்டாளர்கள் வீடுகளுக்கு வருகை தராமல் தரவுகளைச் சேகரித்தனர் என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது. பல பிரதேசங்களில், குறிப்பாக தோட்டப் புறங்கள் மற்றும் நகர்ப் புறங்களில் உள்ள குடியிருப்புகளுக்கு, அரச ஊழியர்கள் முறையாக வருகை தரவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படை நோக்கமே, களத்தில் உள்ள உண்மையான எண்ணிக்கையையும், நிலையையும் பதிவு செய்வதுதான். கள விஜயங்கள் இன்றித் தரவுகள் சேகரிக்கப்படும்போது, அந்தப் பதிவின் துல்லியத் தன்மை (Accuracy) பாதிக்கப்படுகிறது. இலத்திரனியல் சாதனங்கள் ஊடாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டபோது, தகவல் வழங்கும் குடியிருப்பாளர்களுக்கு தாங்கள் வழங்கிய தகவல்கள் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா, குறிப்பாக இன அடையாளப் பிரிவு எப்படிக் குறிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளப் போதுமான வாய்ப்பை இந்த முறை வழங்கவில்லை. இதனால், கணிப்பீட்டாளரின் பிழைகள் அல்லது அனுமானங்கள் உடனடியாகச் சரிசெய் யப்படாமல் பதிவாகியிருக்கலாம்.

மறுபுறம் மலையக மக்களின் . இந்தச் சமூகத்தின் பொதுவான கல்வித் தகைமை மற்றும் சமூகப் பின்னடைவு போன்ற காரணிகள் காரணமாக, அவர்கள் தமது அடையாளத்தை ‘மலையகத் தமிழர்’ எனப் பதிவு செய்ய வேண்டிய அவசியத்தை உணராமல், வெறுமனே ‘இலங்கைத் தமிழர்’ என்ற பெரிய பிரிவின் கீழ் தம்மைப் பதிவு செய்ய இணங்கியிருக்கலாம்.

இவ்வாறான குழப்பமான நிலைமைகள் மற்றும் குடியிருப்பாளர்களின் குறைந்த கல்வித் தகைமையைப் பயன்படுத்திக் கொண்டு, கணிப்பீட்டாளர்கள் தாமாகவே இம்மக்க ளுக்கான தகவல்களை அனுமானித்து பதிவு செய்திருக்கவும் கூடும் என்ற விமர்சனம் எழுகிறது. குடியுரிமை பெற்ற அனைவரும் இலங்கைத் தமிழரே என்ற பொதுவான புரிதலின் அடிப்படையில், மலையக மக்கள் பலர் ‘இலங்கைத் தமிழர்’ எனப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது 2024-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, மலையகத் தமிழரின் சனத்தொகை சரிவைக் காட்டினாலும், இந்தக் குறைவு இயல்பானதல்ல, மாறாக நடைமுறைச் சிக் கல்கள் மற்றும் இன அடையாளப் பதிவில் ஏற்பட்ட அரசியல் சார்ந்த தெளிவின்மையே காரணம் என்பதை உறுதிப்படுத்து கிறது.

### மலையக தேசியத்தின் அரசியல் நெருக்கடி:

மைய மாவட்டங்களில் மலையக மக்களின் சதவீதம் குறைவதால், எதிர்காலத்தில் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள வரையறுக்கப்படும்போது, நுவரெலியா மற்றும் பதுளையில் மலையகச் சமூகத்திற்கான அரசியல் ஆசனங்கள் (Electoral Seats) இழக்கப்படும் ஆபத்து உள்ளது. மலையக மக்கள் தம்மை இலங்கைத் தமிழர் எனப் பதிவு செய்திருந்தாலும், இலங்கையின் தேர்தல் சட்டங்களில் ‘இன அடிப்படையிலான’ பிரதிநிதித்துவப் பாதுகாப்புகள் பல இடங்களில் இல்லை. இதனால், எண்ணிக்கை அளவில் அவர்கள் அருகிலுள்ள பெரும்பான்மை சமூகங்களுடன் கலக்க நேரிடும்போது, அவர்களின் தனித்துவமான அரசியல் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு குறைந்துவிடும். சனத்தொகை வீழ்ச்சி தொடர்ந்தால், மலையக மக்களின் அரசியல் குரல் மேலும் விளிம்புநி லைக்குத் தள்ளப்பட்டு, தேசிய முடிவெடுக்கும் தளங்களில் அவர்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் கவனத்தைப் பெறாமல் போகும் நிலை ஏற்படும்.




சனத்தொகை வீழ்ச்சி மற்றும் இன அடையாள மாற்றம் போன்ற நெருக்கடிகளை மலையக அரசியல் தலைமைத் துவம் எவ்வாறு கையாண்டது என்பது விமர்சனத்திற்கு உரிய தாகும். சனத்தொகை வீழ்ச்சி ஒரு பாரிய அரசியல் நெருக்கடி என்பதை மலையக அரசியல் கட்சிகள் பலர் அங் கீகரித்திருந்தாலும், அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் நீண்ட

> “ தேசியம் என்பது இனி நுவரெலியாவை மையப்படுத்தாமல், இலங்கையிலும், வெளிநாட்டிலும் பரவி வாழும் ஒடுக்கப்பட்ட மலையக வர்க்கத்தை இணைக்கும் ஒரு கலாசார-அரசியல் அடையாளமாக மாற வேண்டும் ”

கால மற்றும் உறுதியான கொள்கைத் திட்டங்களை வகுக்கவில்லை என்ற விமர்சனம் உண்டு. அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் திட்டங்கள் மற்றும் குறைந்தபட்ச சம்பள அதிகரிப்புக் கோரிக்கைகள் போன்றவை வரவேற்கத் தக்கவை என்றாலும், அவை மலையக மக்களின் இடம்பெயர்வுக்கு அடிப்படையான காரணங்களான சமூகப் பாகுபாடு, காணி உரிமை மறுப்பு மற்றும் கல்வி வாய்ப்புகளின் போதாமை ஆகியவற்றைத் தீர்க்கும் முழுமையான தீர்வுகளாக அமையவில்லை. அரசாங்கத்தின் வீட்டு வசதித் திட்டங்கள், மக்களுக்குத் தனி வீடுகளை வழங்கிய போதிலும், தோட்டப்புறங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதைத் தடுக்கவோ சனத்தொகைப் பரம்பலைக் கட்டுப்படுத்தவோ போதுமானதாக இல்லை. இது, அரசியல் தலைமைத்துவம் சனத்தொகை நெருக்கடியின் ஆழமான சமூகவியல் காரணிகளைப் புரிந்துகொள்ளத் தவறியதைக் காட்டுகிறது.

அதேபோல் மலையக மக்கள் தம்மை இலங்கைத் தமிழராகப் பதிவு செய்து கொண்டமை குறித்து மலையக அரசியல் தலைவர்கள் வெளிப்படையான விவாதங்களை நடத்தவில்லை. இது, அடையாள மாற்றத்தைத் தவிர்க்க முடியாத ஒன்றாக ஏற்றுக்கொண்டதன் விளைவா அல்லது வாக்கு வங்கி மீதான அச்சமா என்ற கேள்வி எழுகிறது. சனத்தொகை வீழ்ச்சி மற்றும் புவியியல் பரம்பல் சிதைவு ஆகியவை மலையக மக்களின் மிக முக்கிய மூலதனமான நிலம் மற்றும் காணி உரிமை மீதான அச்சுறுத்தல்களை மேலும் அதிகரிக்கின்றன.

தோட்டப்புறங்களில் மலையக மக்களின் சனத்தொகை குறையும்போது, தோட்ட நிலங்களை பெருந்தோட்ட நிர்வாகம் (Estate Management) அல்லது ஏனைய இனக்குழுமத்தைச் சார்ந்தவர்கள் ஆக்கிரமிப்புச் செய்வதற்கு வாய்ப்பு உருவாகிறது. சட்ட ரீதியற்ற காணி ஆக்கிரமிப்புகள் (Land Encroachment) பெருந்தோட்டப் பகுதிகளில் நீண்டகாலமாக இருக்கும் பிரச்சினை ஆகும். காணி உரிமைக்கான போராட்டம், மலையக மக்களின் ஒருமித்த பலத்தின் மூலமே வெற்றிபெற முடியும். ஆனால், சனத்தொகை குறைந்து, மக்கள் சிதறுண்டு போகும்போது, உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுக்கும் சமூகத் திரட்சியும், பலமும் வெகுவாகக் குறைந்துவிடும்.

## தேசியவாதத்தின் புதிய வடிவம்:

புவியியல் மையம் சிதைந்துள்ள நிலையில், மலையகத் தேசியம் இனி நிலப்பரப்பை (Territory) மையப்படுத்தாமல், பொதுவான ஒடுக்கப்பட்ட வர்க்க உணர்வை (Common Oppressed Class Consciousness) அடிப்படையாகக் கொள்ள வேண்டும். மலையக தேசியத்தின் சனத்தொகை நெருக்கடி என்பது, அரச கொள்கைகள், சமூகப் புறக்கணிப்பு மற்றும் புள்ளிவிவரப் பிழைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவாகும்.

மலையக மக்களின் சனத்தொகைப் பெருக்க வீதம் தேசிய சராசரியை விடக் குறைவாக இருப்பதற்கும், இடம்பெயர்வு அதிகரிப்பதற்கும் அடிப்படை காரணம், அரசின் கட்டமைப்பு ரீதியான அநீதியே ஆகும். மலையக மக்களின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான தலையாய நடவடிக்கை, காணி உரிமை வழங்குவதே ஆகும். நிரந்தர நிலத்தின் மீதான உரிமை மட்டுமே, அவர்களை ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ ஊக்குவிக்கும். வெறும் வீட்டுத் திட்டங்கள் அல்ல, ஒரு குடும்பத்தின் நிரந்தர இருப்பிடத்திற்கான அங்கீகாரமே தேவை. தோட்டத் தொழிலாளர் கூலியை அதிகரிப்பதுடன், தேசிய தொழிலாளர் சந்தை சராசரியுடன் சமப்படுத்தும் வகையில் கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும். குறைந்தபட்சக் கூலிக்கும், உண்மையான வாழ்க்கைச் செலவிற்கும் இடையிலான இடைவெளிதான் குடும்பங்களை நகரங்களை நோக்கித் தள்ளுகிறது.

லயன் அறைகள், மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட நிலையின் சின்னமாகவே இன்றும் பார்க்கப்படுகிறது. மோசமான சுகாதார மற்றும் ஆரோக்கியக் குறிகாட்டிகள் (அதிக சிசு மரணம், ஊட்டச்சத்துக் குறைபாடு) லயன் அறைகளிலேயே தொடங்குகின்றன. இந்த இழிவான வசிப்பிட முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பது, சனத்தொகையின் உள்ளார்ந்த ஆரோக்கியத்தையும், தேசிய கண்ணியத்தையும் மீட்டெடுக்கும். இந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளத் தவறினால், மலையக மக்கள் மீதான அரசு கட்டமைப்பின் புறக்கணிப்பே சனத்தொகை வீழ்ச்சிக்குக் காரணம் என்ற விமர்சனத்தை அரசு தொடர்ந்து எதிர்கொள்ளும்.

மலையகத் தேசியத்தின் எதிர்காலப் பாதை, அதன் புவியியல் மையத்தை இழந்தாலும், அதன் வர்க்க உணர்வு (Class Consciousness) மற்றும் சிவில் சமூகத்தின் போராட்டத் திறன் ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. தேசியம் என்பது இனி நுவரெலியாவை மையப்படுத்தாமல், இலங்கையிலும், வெளிநாட்டிலும் பரவி வாழும் ஒடுக்கப்பட்ட மலையக வர்க்கத்தை இணைக்கும் ஒரு கலாசார-அரசியல் அடையாளமாக மாற வேண்டும். சனத்தொகை வீழ்ச்சிக்கு எதிரான இந்தப் போராட்டம், வெறுமனே எண்ணிக்கையைப் பாதுகாப்பதற்கானதல்ல; அது கௌரவமான வாழ்வுக்கான உரிமையையும், சமூக நீதியையும் நிலைநாட்டுவதற்கான இறுதிக் கட்டப் போராட்டமாகும்.

மலையகம் 200-க்குப் பின்னான யதார்த்தம், மலையகத் தேசியம் தனது அடிப்படை இருப்புக்காகவே போராட வேண்டிய ஒரு நெருக்கடி நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த சவாலிலிருந்து மீள வேண்டுமானால், மலையக சமூகம் புவியியல் மையத்திலிருந்து வர்க்க உணர்வுக்கு நகர்ந்து, புதிய அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.



Arulkarki@thaiveedu.com

மல்லியப்புசந்தி திலகர்

# இலங்கையில் மலையகத் தமிழர் 2.8% ?

## சனத்தொகை கணக்கெடுப்பும் கணக்குக் காட்டுதலும்

### அறிமுகம்:

2024-ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற சனத்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையை இலங்கை குடித்தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்களம் வெளியிட்டுள்ளது. இதில் இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர் எனும் இன அடையாளத்தின் கீழ் சனத்தொகைக் கணக்கெடுப்புச் செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை மொத்த இலங்கைச் சனத்தொகையில் இன ரீதியாக 2.8% ஆகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக 2012-ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்புச் செய்யப்பட்டபோது இந்த வீதம் ‘இந்தியத் தமிழர்’ எனும் இன அடையாளத்தின் கீழ் 4.1% ஆகவும் அமைந்து காணப்பட்டது. இந்த வீழ்ச்சி குறித்த பல்வேறு சந்தேகங்கள், அனுமானங்கள் பேசுபொருளாகியுள்ள நிலையில், இலங்கையில் 1881-ஆம் ஆண்டு முதலாவது சனத்தொகைக் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்ட காலத்தில் இருந்து இலங்கை வாழ் இந்திய வம்சவாளியினரான மலையகத் தமிழர் களின் எண்ணிக்கையில் வந்திருக்கக் கூடிய மாற்றங்களை அவதானிப்பதன் ஊடாக அடுத்த கட்டமாக அமையக்கூடிய நகர்வுகளை ஆராயலாம்.

அட்டவணை 1-இன்படி ‘இந்தியத் தமிழர்’ எனக் கணக்கெடுப்பு செய்யப்பட்டவர்கள் 1881-ஆம் ஆண்டு தொடங்கி 1963- வரையான காலப்பகுதியில் எண்ணிக்கை அடிப்படையில் தொடர்ச்சியாக அதிகரிப்பினைப் பதிவு செய்து வந்திருப்பதனை அவதானிக்கலாம். 1881-ஆம் ஆண்டு 8900 என மலே (17,900), பறங்கியர் (14,500) இனத்தினரைவிட குறைந்த எண்ணிக்கை கொண்டவர்களாக அமைந்த இந்திய தமிழ் சனத்தொகை 1911-ஆம் ஆண்டு 531,000-ஆக அதிகரித்தது. இவ்வதிகரிப்பு மலே, பறங்கியர் இனத்தை மாத்திரமல்லாது இலங்கைச் சோனகர்கள் (266,600), இலங்கைத் தமிழர்களையும் (528,000) முந்திக்கொண்டு இலங்கையில் சிங்களவர்களுக்கு அடுத்தபடியாக இலங்கையின் சனத்தொகை எண்ணிக்கையில் இரண்டாவது நிலையில் வளர்ச்சி அடைந்தனர். 1901-க்கும் 1911-க்கும் இடையிலான 10 ஆண்டு காலப்பகுதியில் 11,900-இல் இருந்து 531,000-ஆக உயர்வடைந்தது. இந்த காலப்பகுதியிலேயே இந்தியாவில் இருந்து அதிகளவான தொழிலாளர்கள் இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு பிரித்தானியர்களால் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அடுத்த பத்து ஆண்டுகள் கழித்து 1921-இல் 602,700-ஆக இந்தியத் தமிழர் சனத்தொகை உயர்வடைந்துள்ளது. முதல்

**இலங்கையின் இன ரீதியான சனத்தொகைப் பரம்பல் (1881–2024)**

| ஆண்டு | மொத்தத் தொகை | சிங்களம் | இலங்கைத் தமிழர் | இலங்கைச் சோனகர் | இந்தியத் தமிழர் | மலே | பறங்கியர் | ஏனையர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1871 | 2400380 | - | - | - | - | - | - | - |
| 1881 | 2759738 | 1846600 | 687,200 | 84,500 | 8,900 | 17,900 | 14,500 | - |
| 1891 | 3007789 | 2041200 | 723900 | 197200 | 10100 | 21200 | 14200 | - |
| 1901 | 3565954 | 2330800 | 951700 | 228000 | 11900 | 23500 | 20000 | - |
| 1911 | 4106350 | 2715500 | 528000 | 266600 | 531000 | 13000 | 26700 | 25600 |
| 1921 | 4498605 | 3016200 | 517300 | 284900 | 602700 | 13400 | 29400 | 34600 |
| 1931 | 5306871 | 3473000 | 598900 | 325900 | 818500 | 9200 | 9200 | 27400 |
| 1946 | 6657339 | 4620500 | 733700 | 409200 | 780600 | 22500 | 41900 | 48900 |
| 1953 | 8097895 | 5616700 | 884700 | 511500 | 974100 | 25400 | 46000 | 39500 |
| 1963 | 10582064 | 7512900 | 1164700 | 682200 | 1123000 | 33400 | 45900 | 19900 |
| 1971 | 12689897 | 9131241 | 1423981 | 855724 | 1174606 | 43459 | 45376 | 15510 |
| 1981 | 14846750 | 10979561 | 1886872 | 1046926 | 818656 | 46963 | 39374 | 28398 |
| 2001 | 16929700 | 13876200 | 732100 | 1339300 | 855000 | 35300 | - | 23900 |
| 2012 | 20359439 | 15250081 | 2269266 | 1892638 | 839504 | 44130 | 38293 | 25527 |
| 2024 | | 16144037 | 2681627 | 2283246 | 600360 | - | - | 72530 |

(மேற்படி அட்டவணை பல்வேறு ஆவணங்களிலிருந்து கட்டுரையாளரால் தொகுக்கப்பட்டுள்ளது.)

அட்டவணை 1

tg.theeban@gmail.com

பத்தாண்டு காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியைவிட இவ்வதிக ரிப்பு குறைவு என்றாலும் 13.5% வளர்ச்சி வீதம் என்பது கணி சமானதே. 1931-ஆம் ஆண்டு இந்தியத் தமிழர் சனத்தொகை 818,500-ஆக பதிவு பெற்றுள்ளது. இதன்போதெல்லாம் இலங்கையின் இரண்டாவது அதிகளவான சனத்தொகை இந்தியத் தமிழர்களாகும். இந்த எண்ணிக்கையே இந்திய தமிழருக்கும் சர்வஜன வாக்குரிமையின்கீழ் ஏனைய இன மக் களைப்போலவே வாக்குரிமையைப் பெற்றுக்கொடுக்கக் காரணமானது. 1946- ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கையில் சிறிது வீழ்ச்சி கண்டு 780,600-ஆக பதிவு செய்யப்பட்டது. இந்த காலப்பகுதியில் எழுந்த இந்திய எதிர்ப்பு கோஷங் களும் இந்திய வணிகர்களின் வெளியேற்றமும் காரணமா கலாம். ஆனாலும், சுதந்திர இலங்கையின் முதலாவது பாரா ளுமன்ற காலப்பகுதியில் (1947-1952) இந்தியத் தமிழர் சனத்தொகை எண்ணிக்கை 780,600-இலிருந்து 974,100-ஆக உயர்ந்திருந்ததுடன், இந்தியத் தமிழர்கள் சார்பாக 7 நாடா ளுமன்ற பிரதிநிதிகளையும் கொண்டிருந்தது. இதனால் இந்தியத் தமிழர் எண்ணிக்கை மீதான அச்சம் இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது.

இதேகாலப்பகுதியில் இலங்கை சுதந்திரமடைந்து பிரித் தானிய ஆட்சியாளர்கள் வெளியேறிய நிலையில் 1948-ஆம் ஆண்டு முதலாவது பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட குடி யுரிமைச் சட்டம் இந்திய அடையாளம் கொண்டிருந்தவர் களின் குடியுரிமை பறிப்புக்கு காரணமானது. இதனால், சனத் தொகையில் இரண்டாம் கூடிய எண்ணிக்கையினராக இருந்த இந்தியத் தமிழர்கள் ‘நாடற்றவர்கள்’ ஆயினர். தங்க ளுக்கு அடுத்த நிலைக்கு இந்தியத் தமிழர்கள் எண்ணிக் கையில் உயர்ந்துவிட்டார்கள் என சிங்கள ஆட்சியாளர்கள் கருதியது மாத்திரமல்லாது, தங்களது இரண்டாமிடத்தை இந்தியத் தமிழர்கள் பறித்துக்கொண்டனர் எனும் மனப் பாங்கு இலங்கைத் தமிழர் மத்தியிலும் மேலோங்கியது. இதனாலேயே, அதில் ஒரு பகுதியினர் இந்தியர்களின் குடியு ரிமைப் பறிப்பு நோக்கிய குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதர வாக வாக்களித்தனர் என்பது வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னரும் பிரித்தானிய முடிக்குரிய நாடாகவே இலங்கை இருந்ததன் காரணமாக பெருந்தோட்டங்களை நடத்திவந்த பிரித்தானியக் கம்பனி களின் கீழ் இந்தியத் தமிழர்கள் தொழிலாளர்களாக வாழ்ந் தனர். 1963-ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பில் முதன்முறையாக மலையகத்தமிழர் 1123,000 என பத்து லட் சத்துக் மேற்பட்ட எண்ணிக்கைப் பதிவு செய்யப்பட்டது. இது 1953-ஆண்டு இவ்வெண்ணிக்கை 974,100 ஆகும். 10 ஆண்டு காலப்பகுதியில் இவ்வெண்ணிக்கை 15% வளர்ச்சியைக் கண்டது. இதே ஆண்டில் இலங்கைத் தமிழர் சனத்தொகை 88,4700-ஆக பதிவாகியுள்ளது.

1971-ஆம் ஆண்டு வரை சனத்தொகைக் கணக்கெடுப்புக ளின்போது சிங்களவர்கள், கீழ்நாட்டு சிங்களவர், மேல் நாட்டு (கண்டியச்) சிங்களவர் எனத் தனித்தனியாக கணக்கெடுப் புச் செய்யப்பட்டதோடு, முஸ்லிம்கள், இலங்கை முஸ்லிம் கள் - இந்திய முஸ்லிம்கள் என வெவ்வேறாகக் கணக்கெடுப் புச் செய்யப்பட்டுள்ளனர். இந்தியத் தமிழர் பிரதான இனக்கு ழுமங்களில் ஒன்றாக அல்லாது ‘குடியுரிமையற்ற இலங்கை யர்கள்’ (Non Citizens of Ceylon) என்ற அடிப்படையிலேயே கணக்கெடுப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. இதனால், இலங்கைத் தமிழர் மீண்டும் இலங்கைச் சனத்தொகையில் இரண்டாமிடத்துக்கு வந்தனர். நாடற்றவர் களாக இருந்த இந்திய தமிழர்களின் இந்த வளர்ச்சியினைப் பிறப்பு வீத அதிகரிப்பால் ஏற்பட்ட இயற்கை வளர்ச்சி வீதம் எனக் கூறலாம்.

**இலங்கையின் இன ரீதியான சனத்தொகைப் பரம்பல் (1911–2024)**

| இனம் | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 | 2001 | 2012 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த சனத்தொகை | 4106350 | 4498605 | 5306871 | 6657339 | 8097895 | 10582064 | 12689897 | 14846750 | 16929700 | 20359439 | 21781800 |
| கீழ்நாட்டு சிங்களவர் | 1716900 | 1927100 | 2216200 | 2902500 | 3469500 | 4470300 | 5425800 | - | - | - | - |
| மேல்நாட்டு சிங்களவர் | 998600 | 1089100 | 1256800 | 1718000 | 2147200 | 3042600 | 3705500 | - | - | - | - |
| சிங்களவர் | - | - | - | - | - | - | - | 10979400 | 13876200 | 15250100 | 16144037 |
| இலங்கைத் தமிழர் | 528000 | 517300 | 598900 | 733700 | 884700 | 1164700 | 1424000 | 1886900 | 732100 | 2269100 | 2681627 |
| இந்தியத்தமிழர் | 531000 | 602700 | 818500 | 780600 | 974100 | 1123000 | 1174900 | 818700 | 855000 | 839500 | - |
| இந்தியத்தமிழர் / மலையகத் தமிழர் | - | - | - | - | - | - | - | - | - | - | 600360 |
| இலங்கை முஸ்லிம் | 233900 | 251900 | 289600 | 373600 | 464000 | 626800 | 828300 | - | - | - | - |
| இந்திய முஸ்லிம் | 32700 | 33000 | 36300 | 35600 | 47500 | 55400 | 27400 | - | - | - | - |
| இலங்கை சோனகர் | | | | | | | | 1046900 | 1339300 | 1892600 | - |
| இலங்கை சோனகர் முஸ்லிம் | | | | | | | | | | | 2283246 |
| ஐரோப்பிய பர்கர் யூரேசிய மலே | 7600 | 8100 | 9200 | 5400 | 6500 | - | - | - | - | - | - |
| இலங்கைச் செட்டி | 26700 | 29400 | 32300 | 41900 | 46000 | 45900 | 45400 | 39400 | 35300 | 38200 | - |
| பரதர் | - | - | - | - | - | - | - | - | 2200 | 1700 | - |
| வேடர் | 5300 | 4500 | 5200 | 2400 | 800 | 400 | - | - | - | - | |
| ஏனையவர் | 12700 | 22000 | 27400 | 41100 | 32200 | 19500 | 15500 | 28400 | 23900 | 18200 | 72530 |

(மேற்படி அட்டவணை பல்வேறு ஆவணங்களிலிருந்து கட்டுரையாளரால் தொகுக்கப்பட்டதுடன் அண்மைய நூறுக்கு மதிப்பிடப்பட்டுள்ளது.)
Source: Census Population Housing - Final Report 2012, Population Preliminary Report - 2024

அட்டவணை 2



## இலங்கை சுதந்திரத்துக்கு பின்னதான இந்திய தமிழர் சனத்தொகையில் ஏற்பட்ட மாற்றங்கள்:

இலங்கை வாழ் இந்தியர்களின் குடியுரிமைப் பறிப்பின் பின்னரும் கூட இந்த வளர்ச்சி வீதம் பதிவானது. இது இலங்கை ஆட்சியாளர்களின் கழுகுக் கண்களை இன்னும் விரித்து பார்க்கச் செய்தது. இதன் விளைவாக எழுந்ததே 1964-ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தமாகும். இதன்படி 7:4 என்ற விகிதத்தில் இந்தியாவும் இலங்கையும் இந்தியத் தமிழர்களைப் பொறுப்பேற்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் இந்தியாவுக்கு ஐந்து லட்சத்துக்கு மேற்பட்டவர்களைத் திருப்பி அனுப்பத் திட்டமிடப்பட்டது. எனினும், எதிர்பார்த்ததுபோல இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும் கைங்கரியம் சாத்தியமாகவில்லை.

அதேநேரம், 1971-ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பில் நாடற்றவர்களான இந்தியத் தமிழர் எண்ணிக்கை 1,174,606 ஆக மீண்டும் உயர்ந்தது. இது 4.6% வளர்ச்சியாகும். மறுபுறம் இலங்கைத் தமிழர் சனத்தொகை 1,164,700-இல் இருந்து 1,423,981-ஆக உயர்வடைந்து. அச்சமயம் இலங்கை சோனகர்களின் சனத்தொகை 855,724 எனப் பதிவாகியது.

இந்தியத் தமிழர்கள் தொடர்ந்தும் மூன்றாம் இடத்திலே இருந்தனர். அவர்களது 1,174,606 எனும் எண்ணிக்கை இலங்கை அரசை மிரட்டிக்கொண்டு இருந்தது. மீண்டும் 1974-ஆம் ஆண்டு இந்திரா-சிறிமா ஒப்பந்தம் மூலம் 1964-ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தும்படி உத்வேகம் காட்டப்பட்டது. இவ்வொப்பந்தப்படி ‘ராமானுஜம்’ கப்பல் மூலம் படிப்படியாக இந்தியத் தமிழர்கள் பெருமளவில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். இதன் பிரதிபலிப்பு 1981-ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின்போது இந்தியத் தமிழர் எண்ணிக்கை 818,656-ஆக குறைவடைந்தது. ஏற்கனவே, இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கைத் தமிழர் அதனைத் தக்க வைத்துக் கொண்டதோடு இலங்கை சோனகர்கள் என ஓரணியில் திரண்டிருந்த முஸ்லிம்கள் மூன்றாம் இடத்துக்கு வந்தனர். இலங்கை முஸ்லிம், இந்திய முஸ்லிம் என வகைப்படுத்தப்பட்டிருந்தோர் முஸ்லிம்களாகக் கணக்கெடுப்பு செய்யப்பட்டவர்கள் அனைவரும் ‘இலங்கை சோனகர்கள்’ எனக் கணக்கெடுப்பு செய்யத் தொடங்கிய காலப்பகுதி இதுவாகும். முதன் முதலாக சனத்தொகைக் கணக்கெடுப்பு செய்யப்பட்ட 1881 முதல் 1981 வரையான நூறு ஆண்டு காலப்பகுதியில் இலங்கை சனத்தொகைக் கணக்கெடுப்பில் சீரான வளர்ச்சிப் போக்கைக் காட்டி வந்த ‘இந்திய தமிழர்’ எண்ணிக்கை 1981-க்குப் பின்னர் வீழ்ச்சிப்போக்கை காட்டத் தொடங்கியதோடு நான்காவது இடத்துக்கும் தள்ளப்பட்டனர்.

இதனையடுத்து 1991, 2001, காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக முறையான சனத்தொகைக் கணக்கெடுப்பு இடம்பெறவில்லை. அதனை அடுத்து 2012-ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின்போது இந்தியத் தமிழர் சனத்தொகை 30 ஆண்டுகளில் வெறும் 2.5% (ஆண்டுக்கு 0.084%) வளர்ச்சியினை மட்டுமே பதிவு செய்தனர். அதாவது, 1981-ஆம் ஆண்டு 818,656 எனும் அளவில் இருந்து 2012-ஆம் ஆண்டு 839,504 என அமைந்தது. இவ்வெண்ணிக்கை வெறும் 20,848 என அமைந்தது. இந்த குறை வளர்ச்சி வீதத்துக்கு இந்தக் காலப்பகுதியில் மலையகப் பெருந்தோட்டப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கட்டாயக் கருத்தடையே பிரதான காரணமாகும். மலையகப் பெருந்தோட்ட மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் தேசிய சுகாதார முறைமைகள் ஊடாக ஆரம்ப சுகாதார வசதிகள் வழங்கப்படாது தனியார் கம்பனிகளின் தோட்ட நிர்வாகமே சுகாதார சேவையைக் கையாள்கிற நிலையில், கட்டாயக் கருத்தடை மிக நுணுக்கமான முறையில் முன்னெக்கப்பட்டமை குறித்து பல ஆய்வுகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்திற்கான அறிக்கையிலும் 2015-ஆம் ஆண்டு இந்தத் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளது. (இது பற்றி விரிவான தனியாக கட்டுரை ஒன்றின் தேவை உள்ளதால் இங்கே குறிப்பாக மட்டும் பதிவாகிறது.)

மறுபுறமாக, ‘மலையகத் தமிழர்’ என்ற சொல்லாடல் அரசியல் அடையாளமாக எழுச்சிபெற்ற இந்த காலப்பகுதியில், சனத்தொகைக் கணக்கெடுப்பின்போது ‘இந்தியத் தமிழர்’ எனும் தெரிவுக்குப் பதிலாக ‘இலங்கைத் தமிழர்’ எனும் தெரிவின் அடிப்படையிலேயே 2012-ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, இந்தியத் தமிழர் சனத்தொகை 839,500 எனக் கணக்கெடுப்புச் செய்யப்பட்டதுடன் அதே காலப்பகுதியில் இலங்கைத் தமிழர் சனத்தொகை 2,269,100 ஆக பதிவானது.

இந்தத் தெரிவுமுறை 2024-ஆம் ஆண்டு இன்னுமொரு மாற்றத்தைக் கண்டது. இதுவரை காலமும் இந்தியத் தமிழர் எனப் பதிவு செய்யப்பட்டுவந்தமைக்கு மாறாக ‘இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர்’ என இரண்டு அடையாளங்களைக்கொண்ட ஒரு தொகுதியாகக் கணக்கெடுப்புச் செய்யப்பட்டது. இதன்படி 2024-ஆம் ஆண்டுக்கான இலங்கை சனத்தொகையில் ‘இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர்’ எண்ணிக்கை 600,360-ஆகப் பதிவாகியுள்ளது. இது 2012-ஆம் ஆண்டு கணக்கெடுப்பான 839,500 இலிருந்து 239,140-ஆல் குறைவடைந்துள்ளது. இது 39.8% வீழ்ச்சியாகும்.

## இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் கணக்கெடுப்பு எதிர்கொள்ளும் சவால்கள்:

1980-க்கு முன்னர் தொடர்ச்சியாக வளர்ச்சிப்போக்கையே காட்டி வந்த இந்தியத் தமிழர் சனத்தொகை 1981-க்குப் பின்னதாக 2024 வரையான நாற்பத்திமூன்று ஆண்டு காலப் பகுதியில் தொடர்ச்சியான வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. எண்ணிக்கை அடிப்படையில் பார்க்கும்போது 1921-ஆண்டு கணக்கெடுப்பின்போது காணப்பட்ட 602,700 எனும் அளவுக்கு அண்ணளவாக இச்சனத்தொகை 2024-ஆம் ஆண்டு 600,360-ஆக காணப்படுகிறது. சுருங்கச் சென்னால், இலங்கையில் இந்தியத் தமிழர் சனத்தொகை 1921-ஆம் ஆண்டு எண்ணிக்கை அளவுக்கு பின்னோக்கிச் சென்றுள்ளது எனலாம். இந்த நிலை தொடர்ந்தால் அடுத்த கணக்கெடுப்புச் செய்யக்கூடிய 2034-ஆம் ஆண்டு 360,000-ஆகவும் 2044-ஆம் ஆண்டு 120,000-ஆகவும் அமைவதுடன் 2048-ஆம் ஆண்டு ஆகும்போது முற்றிலுமாக இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர் என்ற இன அடையாளம் இல்லாமலாக்கப்படும் அபாயம் உள்ளது. மறுவடிவில் சொன்னால் 1948-ஆம் ஆண்டு குடியுரிமை பறிப்பின் ஊடாக இல்லாமலாக்கப்படுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி 2048-ஆம் ஆண்டு, அதாவது, நூறு ஆண்டுகள் கழித்து சாத்தியமாவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இங்கே இடம்பெறுவது உண்மையில் ஓர் இனம் இருக்கத்தக்கதாகவே அதன் அரசியல், பொருளாதார அடையாளத்தை இல்லாமல் செய்யும் நீண்டகால தத்துவார்த்த அமுல்படுத்தலாகும்.

இந்த ஏற்பாடு கடந்த நூற்றாண்டு காலமாக அந்தந்த காலப் பகுதியில் எவ்வாறு செய்யப்பட்டு வந்துள்ளன என்பதை மேலே பார்த்தோம். சுருக்கமாக மீள நினைவுபடுத்திக் கொண்டு இப்போது என்ன நடக்கிறது என ஆராயலாம்.

- 1947-1952 - குடியுரிமை பறிப்பின் ஊடான முயற்சியும் பிரித்தானியர் வசமிருந்த பெருந்தோட்டப் பொருளதாரத்தை இலங்கை அரசு கையகப்படுத்தும் திட்டமும்.
- 1964 - 1984 - இந்திய - இலங்கை ஒப்பந்தங்கள் மூலம் (1964, 1974) மூலம் இந்தியாவுக்கு நாடு கடத்துவதும் பெருந்தோட்ட பொருளதாராத்தை தேசிய மயப்படுத்துவதும்.
- 1984- 2024 - கட்டாயக் கருத்தடை மூலம் இயற்கை பிறப்பைக் கட்டுப்படுத்துவதும் பெருந்தோட்டத் தொழிற்துறையை சிறுதோட்ட உடமையாக்குவதன் மூலம் தென்பகுதிக்கு மாற்றுதலும்

2012க்குப் பின்னதான தந்திரோபாயத்தை புரிந்துகொள்ள 1981, 2012, 2024 காலப்பகுதி கணக்கெடுப்புகளின்போது மலையக மாவட்டங்கள் என அறியப்பட்ட பெருந்தோட்டங்கள் அமைந்த 11 மாவட்டங்களில் எவ்வாறு இந்தியத் தமிழர்கள்/மலையகத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் என பதிவு செய்யப்படுகிறார்கள் என்பதை அட்டவணை 3 காட்டுகிறது.

**அட்டவணை 3ன்** படி 1981-முதல் 2024-வரை மலையக மாவட்டங்கள் தோறும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை கிரமமான முறையில் அதிகரித்துக் காட்டப்பட்டு, 2024-ஆம் ஆண்டு ஏறக்குறைய 48% இலங்கைத் தமிழர்களும் 52% இந்தியத் தமிழர்கள் அல்லது மலையகத் தமிழர்களும் வாழ்வதாகக் கணக்கெடுப்புச் செய்யப்பட்டுள்ளது. எண்ணிக்கை அடிப்படையில் சொன்னால் இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் செறிவாக வாழும் 11 மாவட்டங்களின் மொத்தச் சனத்தொகை 111,5937-ஆக இருக்கும்போது அவற்றுள் 545,490 பேர் இலங்கைத் தமிழர்கள்



## இலங்கையின் மாவட்ட மட்டத்தில் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர் சனத்தொகைப் பரம்பல் (1981–2012–2024)

| | | 1981 | 1981 | 2012 | 2012 | 2024 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|
| இல | மாவட்டம் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர்/– மலையகத் தமிழர் |
| 1 | கொழும்பு | 170,590 | 19,824 | 235,090 | 24,289 | 243,856 | 15,427 |
| 2 | கம்பஹா | 48,182 | 5,919 | 81,245 | 9,137 | 97,925 | 6,575 |
| 3 | களுத்துறை | 9,744 | 33,659 | 23,035 | 23,217 | 41,361 | 7,198 |
| 4 | கண்டி | 52,791 | 98,436 | 69,210 | 85,111 | 122,772 | 38,311 |
| 5 | மாத்தளை | 20,579 | 24,912 | 24,279 | 23,238 | 42,172 | 7,716 |
| 6 | நுவரெலியா | 76,449 | 257,478 | 32,563 | 377,637 | 60,288 | 362,299 |
| 7 | காலி | 7,271 | 11,056 | 13,953 | 6,146 | 17,600 | 2,883 |
| 8 | மாத்தறை | 4,683 | 13,875 | 8,772 | 12,127 | 11,119 | 8,082 |
| 9 | அம்பாந்தோட்டை | 2,500 | 284 | 2,105 | 120 | 2,054 | 121 |
| 10 | யாழ்ப்பாணம் | 790,385 | 19,980 | 577,338 | 1,807 | 586,491 | 782 |
| 11 | மன்னார் | 54,474 | 13,850 | 80,103 | 692 | 89,992 | 319 |
| 12 | வவுனியா | 54,179 | 18,714 | 141,144 | 1,979 | 135,164 | 1,625 |
| 13 | முல்லைத்தீவு | 58,209 | 11,215 | 79,107 | 2,281 | 108,082 | 223 |
| 14 | கிளிநொச்சி | - | - | 110,494 | 1,030 | 133,023 | 685 |
| 15 | மட்டக்களப்பு | 233,713 | 4,074 | 380,930 | 2,078 | 424,710 | 992 |
| 16 | அம்பாறை | 77,826 | 1,411 | 112,457 | 846 | 125,751 | 664 |
| 17 | திருகோணமலை | 87,760 | 5,372 | 116,646 | 1,227 | 128,088 | 765 |
| 18 | குருநாகல் | 14,920 | 6,616 | 18,041 | 2,594 | 21775 | 1788 |
| 19 | புத்தளம் | 32,282 | 2,289 | 48,341 | 1,953 | 48,544 | 1,229 |
| 20 | அனுராதபுரம் | 8,026 | 719 | 4,728 | 477 | 5,063 | 412 |
| 21 | பொலன்நறுவை | 5,267 | 124 | 7,301 | 161 | 7,394 | 94 |
| 22 | பதுளை | 37,520 | 129,498 | 21,880 | 150,484 | 81,854 | 95,686 |
| 23 | மொனராகல | 5,346 | 8,859 | 8,206 | 5,001 | 14,765 | 1,249 |
| 24 | இரத்தினபுரி | 19,094 | 84,740 | 54,437 | 62,124 | 91,300 | 23,991 |
| 25 | கேகாலை | 15,074 | 45,752 | 17,861 | 43,748 | 40,484 | 21,244 |

(மேற்படி அட்டவணை பல்வேறு ஆவணங்களிலிருந்து கட்டுரையாளரால் தொகுக்கப்பட்டது.)
Source: Census Population Housing - Final Report 2012, Population Preliminary Report - 2024

அட்டவணை 3

எனப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய 570,447 பேர் இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர இலங்கையின் கொழும்பு உள்ளிட்ட மேற்குகரை மாவட்டங்களான கம்பஹா, புத்தளம் ஆகிய 3 மாவட்டங்களில் இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் என 23,231 பேரும் வடக்கு, கிழக்கு மாகாணங் களின் 8 மாவட்டங்களில் இந்தியத் தமிழர்கள் அல்லது மலையகத் தமிழர்கள் என 6,055 பேரும் பிற 3 மாவட்டங் களில் 627 பேரும் பதிவு செய்ததன் ஊடாகவே இந்தியத் தமி ழர்கள் / மலையகத் தமிழர்கள் மொத்த சனத்தொகை 600,360 என பதிவாகிறது

மலையகப் பெருந்தோட்ட மாவட்டங்களில் பதிவு செய்யப் பட்டுள்ள 545,490 இலங்கைத் தமிழர் எண்ணிக்கை, நுவரெலியா மாவட்ட மொத்த தமிழ் சனத்தொகையான 422,587-இல் 14.2% ஆகும் எனப் பதிவாகியுள்ளது. அதாவது 362,299 பேர் இந்தியத் தமிழர்கள்/ மலையகத் தமிழர்கள் என்றும், 60,288 பேர் இலங்கைத் தமிழர்கள் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதற்கடுத்த பதுளை மாவட்டத்தில் 95,686 பேர் இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் எனப் பதிவு செய்ய, 81,854 பேர் இலங்கைத் தமிழர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதாவது பதுளை மாவட்ட மொத்த தமிழ் சனத்தொகையான 177,540 எண்ணிக்கையில் 46% ஆனோர் இலங்கைத் தமிழர்கள் என்பதே இப்போதைய கணக்கெடுப்பாகும். 54% மானோரே இந்தியத் தமிழர்கள் /

> **அண்மையில் கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் எனும் திருத்தம் அந்த குழப்பத்தை மேலும் பூதாகரமாக்கியுள்ளது போலத் தெரிகிறது. இந்த மக்கள் குழுமத்தில் பெருமளவானோர் இலங்கையர் அடையாளத்தை விரும்புகின்றவர்களாகவே பதிவுகளில் இருந்து தெரிய வருகின்றது.**

மலையகத் தமிழர்கள் எனும் வகுதியில் வருகின்றனர். இந்த நிலைமை கண்டி மாவட்டத்தில் இன்னும் மாற்றலாகி மொத்த தமிழ் சனத்தொகை 161,083-ஆக பதிவாகியுள்ள நிலையில் அதில் 122,722 பேர் அதாவது 76.2%ஆனோர்; இலங்கைத் தமிழர்கள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டத்தில் மொத்த தமிழர் சனத்தொகையில் 23.8% மாத்திரமே இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் எனும் வகுதியில் அடக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு (மொத்தத் தமிழர் சனத்தொகையில்) இரத்தினபுரியில் 79%, களுத்துறையில் 85%, மாத்தளையில் 84%, காலியில் 85%, குருநாகல் 92%, மொனராகலை 92%, களுத்துறை 65% என இலங்கைத் தமிழர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவை, உண்மைக்கு மாறானது என்பதை அந்தந்த மாவட்ட மக்களும் மலையகத் தமிழர் குறித்த அக்கறை கொண்ட அனைவரும் அறிவர்.

இத்தகைய கணக்கெடுப்பு இலங்கையின் மொத்த சனத்தொகையில் ‘இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள்’ எண்ணிக்கை 2.8 வீதம் குறைவடைந்துள்ளதாகக் காட்டி நிற்கின்றது. இது உண்மைக்கு புறம்பானதாகும்.

இலங்கையின் மேற்கு கரையில் அமைந்த 3 மாவட்டங்கள், வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்கள், பிற மாவட்டங்கள் மூன்று என 14 மாவட்டங்களிலும் மொத்த இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் சனத்தொகை 29,913 எண்ணிக்கையை 11 மலையக மாவட்டங்களில் வாழும் உண்மையான இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கைக்கு விட்டுக்கொடுத்து சரி செய்துகொண்டாலும் நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகல், மொனராகலை ஆகிய 11 மாவட்டங்களில் வாழும் 111,5937 சனத்தொகையினரின் எண்ணிக்கை ‘இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள்’ எனும் வகுதிக்குள் அமைந்து இலங்கையின் மொத்த சனத்தொகையில் 5.12 வீதமாக அமையும் வாய்ப்புகள் உள்ளன. கொழும்பு மாவட்டத்தில் ‘இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள்’ வாழ்ந்தும் அவர்களுள் 15,427 பேர் மாத்திரமே இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்த தமிழர் சனத்தொகையான 259,283 பேரில் 94% இலங்கைத் தமிழர் என்றே பதிவு செய்துள்ளனர். அதேபோல கம்பஹாவில் 93 வீதமானோரும் புத்தளத்தில் 97 வீதமானோரும் இலங்கைத் தமிழர்களாக பதிவு செய்துள்ளனர். உண்மையில் இந்த மூன்று மாவட்டங்களிலும் இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் சனத்தொகை இதனைவிட அதிகமாகும் எனும் யதார்த்தத்தையும் பரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக: புத்தளம் மாவட்டத்தில் உடப்பு போன்ற இடங்களில் இந்தியத் தமிழர் கிராமங்களே உள்ள நிலையில் முழு மாவட்டத்திலும் 1,229 பேர் மாத்திரமே இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் எனப் பதிவு செய்துள்ளனர். அதேபோல கம்பஹா மாவட்டத்தில் வத்தளை, நீர்கொழும்பு பகுதிகளில் அதிகளவு இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் வாழ்கின்றபோதும் கூட வெறும் 6,575 பேர் மாத்திரமே பதிவு செய்துள்ளனர்.

## முடிவுரை:

இலங்கை வாழ் இந்தியத் தமிழர்கள் தமது இன அடையாளம் குறித்து குழப்பமான தன்மை கொண்டிருப்பது ஒரு புறமிருக்க அண்மையில் கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழர்கள் / மலையகத் தமிழர்கள் எனும் திருத்தம் அந்த குழப்பத்தை மேலும் பூதாகரமாக்கியுள்ளது போலத் தெரிகிறது. இந்த மக்கள் குழுமத்தில் பெருமளவானோர் இலங்கையர் அடையாளத்தை விரும்புகின்றவர்களாகவே பதிவுகளில் இருந்து தெரிய வருகின்றது. எனவே, இப்போதைய இந்தியத் தமிழர்கள்/ மலையகத் தமிழர்கள் எனும் அடையாளத்துக்கு மாறாக ‘இலங்கை மலையகத் தமிழர்’ எனும் இன அடையாளத்தைப் பெற்றுக்கொடுப்பதே பொருத்தமான தீர்வாக அமையும். இதில் இந்திய அடையாளத்தை விரும்புவோருக்கு அநீதி நேராமல் இருக்க ‘இந்திய வம்சாவளியினர்’ (India Origin) எனும் வகுதியை சேர்க்க முடியும் என்பதுவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப்போது இந்தியத் தமிழர்கள் மாத்திரம் இந்திய அடையாளத்துடன் கணக்கெடுப்பு செய்யப்படுவதற்கு மாறாக இந்திய வம்சாவளியினரான யாருமே அந்தத் தெரிவினைத் தமதாக்கிக் கொள்ள முடியும். இலங்கைத் தமிழர் எனும் அடையாளத்தினுள் இப்போது போல கரைந்துசெல்வது இலங்கை மலையகத்தமிழர் இந்த நாட்டில் வாழும்போதே கணக்கெடுக்கப்படாமல் போகும் நிலையைத் தோற்றுவித்து வருகிறது.

அதேபோல 2012 - கணக்கெடுப்பு முதல் 2009 வரையான உள்நாட்டு யுத்தத்தில் கொல்லப்பட்ட இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கையைச் சரி செய்வதற்கு இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர் அடையாளத்தை இலங்கைத் தமிழர்களாக அடையாளப்படுத்துவதன் ஊடாக இலங்கைத் தமிழர்கள் பெருமளவில் கொல்லப்படவில்லை எனச் சர்வதேசத்துக்குக் கணக்கு காட்டப்படுகிறது. மறுபுறமாக சீரான போக்கில் சனத்தொகை வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்து இலங்கையில் எண்ணிக்கை அடிப்படையில் இரண்டாவது அதிகளவான சனத்தொகை எனும் இடத்தை அடைந்துள்ள இலங்கை சோனகர்கள் / முஸ்லிம்களை மூன்றாம் இடத்தில் பேணுதல் மூலம் தேசிய மட்டத்தில் இலங்கை பெரும்பான்மை மக்களிடத்தில் கணக்குக் காட்டும் கைங்கரியம் இடம்பெற்றுவருகின்றது. இப்படியாகச் சர்வதேசத்துக்கும், தேசியத்துக்கும் கணக்குக்காட்டுவதற்கான பகடைக்காய்களாகவே சமகாலத்தில் இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர் எண்ணிக்கை காணப்படுகின்றது. இவர்களே ‘இலங்கைத் தமிழர்களாக’ சனத்தொகைக் கணக்கெடுப்பில் காட்டப்படுகின்றனர் என்பதை இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர்கள் மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களும், இலங்கை முஸ்லிம்களும் கவனத்தில் கொள்ள வேண்



thilagar@thaiveedu.com



ஞாலசீர்த்தி மீநிலங்கோ

# காணாமற்போன மலையகத் தமிழரும் வயதாகும் நாடும்

tg.theeban@gmail.com

> ஈழத்தமிழருக்கும் மலையகத் தமிழருக்கும் வேறுபாடு தெரியாத தரவு சேகரிப்பாளர்கள் பலர் இருந்திருக்கிறார்கள் என்பது ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட விடயம்தான். இத்தரவு சேகரிப்பாளர்களில் பலர் தமிழ் மொழி தெரியாதவர்கள், எனவே அவர்கள் தமிழ் மொழி பேசுபவர்களை ஈழத்தமிழர் என்று வகை குறித்திருக்கும் சாத்தியங்கள் உள்ளன.

## தொடக்கக் குறிப்புகள்:

இலங்கையர்களின் கவனம் முழுவதும் இப்போது பட்ஜெட் மீது இருக்கிறது. ஆனால் சத்தமில்லாமல் 2024-2025-ஆம் ஆண்டுக்கான குடிசனத் தொகைமதிப் பீட்டு அறிக்கையினை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அண்மையில் வெளியிட்டுள்ளது. இலங்கையின் முதலாவது குடிசனத் தொகைம திப்பீடானது 1871-ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. 2020-21 காலப்பகுதியில் நடத்தப் பட்டிருக்க வேண்டிய இந்த மதிப்பீடானது, நெருக்கடி நிலைமையின் காரணமாக பிற்போடப்பட்டு கடந்தாண்டு நடத்தப்பட்டது. கடந்த மாதம் வெளியான இந்த அறிக் கையானது பல முக்கியமான செய்திகளைச் சொல்கிறது. அவற்றில் மிகப் பிரதா னமான இரண்டு விடயங்களை இக்கட்டுரை கவனம் செலுத்த முனைகிறது.

முதலாவது, இம்முறை நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் தகவல்கள் கவனிக்க உகந்தன. 2012-ஆம் ஆண்டில் 74.9% ஆக இருந்த சிங்கள மக்கள் தொகை 2024-ஆம் ஆண்டில் 74.1%-ஆகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில் இலங்கைத் தமிழரின் தொகை 11.1%-இலிருந்து 12.3%-ஆக அதிகரித்துள்ளது. இலங்கை முஸ்லிம் சமூகம் வேகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது 9.3%-இலி ருந்து 10.5%-ஆக உயர்ந்துள்ளது, அதே நேரத்தில் மலையகத் தமிழர் மக்கள் தொகை 4.1%-இலிருந்து 2.8%-ஆகக் குறைந்துள்ளது. குறிப்பாக மலையகப் பகுதி களில் உள்ள மலையகத் தமிழரின் எண்ணிக்கை குறைவடைந்து இலங்கைத் தமிழரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது பிரதானமாக இந்தச் செயன்மு றையின் துல்லியம் குறித்த வினாவை எழுப்புகிறது. அதேவேளை கடந்த இரண் டாண்டுகளில் மலையக இளைய சமூகத்திடம் மேற்கொண்ட உரையாடல்களில், பலர் தங்களை இலங்கைத் தமிழராக அடையாளம் கண்டதையும் எம்மால் அவதா னிக்க முடிந்தது. இதையும் இணைத்தே இந்த முடிவுகளை நோக்க வேண்டியுள்ளது.

தொகைமதிப்பீட்டு அறிக்கையின் இரண்டாவது முக்கியமான அம்சம், நாட்டின் மாறிவரும் வயது அமைப்பு முறையாகும். இது இலங்கை வயதான சமூகத்தை நோக்கி வேகமாக நகர்ந்து வருவதைக் குறிக்கிறது. 15 வயதுக்குட்பட்ட குழந்தை களின் விகிதம் 2012-இல் 25.2%-இலிருந்து 2024-இல் 20.7%-ஆகக் குறைந்துள்ளது. இது ஒரு தசாப்தத்தில் 4.5% குறைந்துள்ளது என்ற உண்மையை வெளிப்படுத்து கிறது. அதே நேரத்தில், 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதான மக்கள்

தொகை 7.9%-இலிருந்து 12.6%-ஆக உயர்ந்துள்ளது. 15 வயது முதல் 64 வயது வரையிலான உழைக்கும் வயது மக்கள் தொகையும் குறைந்துள்ளது. ஒட்டுமொத்த தேசிய சார்பு விகிதம் - உழைக்கும் வயது மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது சார்ந்திருக்கும் இளையோர், முதியோர் விகிதம் - உயர்ந்துள்ளது. இந்த அதிகரிப்பு குழந்தைகளின் எண்ணிக்கையில் கூர்மையான சரிவையும், வயதான மக்கள் தொகையின் ஒரே நேரத்தில் விரிவாக்கத்தையும் குறிக்கிறது. இந்தப் பின்புலத்தில் இவ்விரண்டு விடயங்களையும் மையப்படுத்திய சில விடயங்களைப் பேசுவது பயனுள்ளது.

### காணாமற்போன மலையகத் தமிழர்கள்:

இலங்கையில் 2024-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பானது, ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இலங்கையில் முதன்முறையாக, அமைதியான ஆனால் சொல்லக்கூடிய மக்கள்தொகை மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. முதல் முறையாக, மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகள், மலையகத் தமிழர் அல்லது இந்தியத் தமிழர்கள் என்று குறிக்கப்படும் மக்கள் தொகை கூர்மையாகக் குறைந்துள்ளதாகக் குறிக்கின்றன. முதல் பார்வையில், மலையகத் தமிழர் வீழ்ச்சி ஆபத்தானதாகத் தெரிகிறது. வெறும் பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் ஒரு வியத்தகு மக்கள்தொகைச் சுருக்கம் எவ்வாறு சாத்தியம் என்ற வினா இயல்பானது. இந்தத் தரவு சேகரிப்பில் நிகழ்ந்த குளறுபடிகள் பல மலையகத் தமிழரை ஈழத் தமிழராக அடையாளம் கண்டது என்ற குற்றச்சாட்டு நியாயமானது என்றே தோன்றுகிறது. ஈழத்தமிழருக்கும் மலையகத் தமிழருக்கும் வேறுபாடு தெரியாத தரவு சேகரிப்பாளர்கள் பலர் இருந்திருக்கிறார்கள் என்பது ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட விடயம்தான். இத்தரவு சேகரிப்பாளர்களில் பலர் தமிழ் மொழி தெரியாதவர்கள், எனவே அவர்கள் தமிழ் மொழி பேசுபவர்களை ஈழத்தமிழர் என்று வகை குறித்திருக்கும் சாத்தியங்கள் உள்ளன.

இவ்விடத்தில் 2023-24 காலப்பகுதியில் மலையகத் தமிழர் வாழும் பகுதிகளில் நாம் நடத்திய ஆய்வில் ஒரு விடயத்தை அவதானித்தோம். அடையாளம் குறித்த விடயத்தில் அவர்கள் தாங்கள் ‘இலங்கைத் தமிழர்’ என்ற அடையாளத்தையே விரும்புவதாகத் தெரிவித்தார்கள். தங்களுக்கோ, தங்கள் பெற்றோருக்கோ எதுவித இந்தியத் தொடர்புகளும் இல்லை. எனவே இந்தியத் தமிழர் என்ற அடையாளம் பொருத்தமற்றது. மலையகத் தமிழர் என்பது சிறுமைப்படுத்தபடுவோருக்கான தோற்றத்தைத் தருகிறது என்று கருத்துரைத்தனர். ‘நாம் இலங்கையில் பிறந்த தமிழ் பேசுபவர்கள் எனவே நாங்கள், எங்களை இலங்கைத் தமிழராகவே அடையாளப்படுத்த விரும்புகிறோம்’ என்பது அவர்களது அவாவாக இருந்தது. இதை எமது ஆய்வறிக்கையிலும் பதிவு செய்திருந்தோம். பார்க்க:

தொகைமதிப்பீட்டின் பின்னணியில் மலையகத் தமிழரின் இந்தக் கதை மறைந்து வரும் மக்களின் கதை அல்ல, மாறாக மாறிவரும் சுய அடையாளத்தைப் பற்றியது. 19-ஆம் நூற்றாண்டின் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வழித்தோன்றல்கள் - அதிகரித்து வரும் மலையகத் தமிழர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பில் ‘இலங்கைத் தமிழர்கள்’ என்று அடையாளம் காணத் தேர்ந்தெடுத்துள்ளனர். இது ஒரு புள்ளிவிவர விபத்து அல்லது அதிகாரத்துவ வினோதம் மட்டும் அல்ல. இது அரசியல் நனவில் ஏற்பட்ட ஆழமான மாற்றத்தையும், இலங்கைத் தீவின் சமூக நிலப்பரப்பை வடிவமைக்கும் நீண்ட போராட்டத்தையும் பிரதிபலிக்கிறது என்றும் கொள்ளமுடியுமா? என்பதை நாம் ஆராய வேண்டும்.

1820-களில் பிரித்தானியக் காலனியாதிக்கவாதிகளால் இலங்கையின் கோப்பி மற்றும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட தென்னிந்தியத் தொழிலாளர்களிடம் மலையகத் தமிழர்கள் தங்கள் தோற்றத்தைக் கண்டறிந்துள்ளனர். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, அவர்கள் தோட்ட அமைப்பில் மட்டுமே இருந்தனர், புவியியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தனிமைப்படுத்தப்பட்டனர். 1948-இல் சுதந்திரத்திற்குப் பிறகு, புதிதாக உருவாக்கப்பட்ட இலங்கை அரசு அவர்களில் பெரும்பாலோரை குடியுரிமையிலிருந்து பறித்தது, கிட்டத்தட்ட 900,000 மக்களை ஒரே இரவில் இலங்கை குடியுரிமைச் சட்டத்தின் கீழ் நாடற்றவர்களாக மாற்றியது. அந்த நேரத்தில் ஒரு தேசியவாத திருத்தமாக நியாயப்படுத்தப்பட்ட இந்த நடவடிக்கை, ‘மண்ணின் மகன்கள்’ மற்றும் ‘இறக்குமதி செய்யப்பட்ட தொழிலாளர்கள்’ இடையேயான காலனித்துவ பிளவை திறம்பட நிறுவனமயமாக்கியது.

> **பல தசாப்தங்களாக ‘இந்தியர்’ என்று முத்திரை குத்தப்பட்ட பிறகு, பலர் தங்கள் அடையாளம், வெறுமனே, இலங்கையர் என்று முடிவு செய்துள்ளனர். மற்றொரு சமூகத்துடன் இணைவதன் மூலம் அல்ல, மாறாக அதற்குள் சமமான அங்கீகாரத்திற்கான கோரிக்கையாக அதை நோக்கவியலும்.**

மலையகத் தமிழர்களின் வாழ்க்கையின் வரையறுக்கும் நிலையாக பல தசாப்தங்களாக நாடற்ற தன்மை மாறியது. அவர்களுக்கு வாக்குரிமை, அரசு வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சொத்துரிமை மறுக்கப்பட்டது. 1980-கள் மற்றும் 1990-கள் வரை பெரும்பாலானவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். பலர் நீண்ட போராட்டங்களுக்குப் பிறபு இறுதியாக குடிமக்களாக அங்கீகரிக்கப்பட்டனர், ஆனால் அப்போது, சேதம் ஆழமாக இருந்தது. அச்சமூகம் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்டு, பொருளாதார ரீதியாக சுரண்டல் நிறைந்த தோட்டப் பொருளாதாரத்திற்குள் சிக்கிக் கொண்டது. மக்கள் தொகை கணக்கெடுப்பு வகைகளிலும் அதிகாரத்துவ மொழியிலும் பொறிக்கப்பட்ட ‘இந்தியத் தமிழர்’ என்ற முத்திரை, இந்த விலக்குச் சுமையைச் சுமந்தது. இது ஒரு மக்கள்தொகை விவரிப்பாளராகவும், பிறரின் அடையாளமாகவும் இருந்தது, இது தோட்டத் தமிழர்களை வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ‘இலங்கைத் தமிழர்கள்’ என்று அங்கீகரிக்கப்பட்ட அவர்களின் சக மொழி பேசும் ஒரே பண்பாட்டைப் பகிர்ந்து கொள்ளும் சமூகத்திடமிருந்து பிரித்தது. இரு குழுக்களும் மொழியையும்

நம்பிக்கையையும் பகிர்ந்து கொண்டாலும், அவர்கள் வெவ் வேறு சமூக ஒப்பந்தங்களின் கீழ் வாழ்ந்தனர் - ஒன்று அர சியல் பிரதிநிதித்துவத்துடன் குடிமக்களாகவும், மற்றொன்று வரையறுக்கப்பட்ட உரிமைகளுடன் கூடிய குடியிருப்பாளர் களாகவும்.

2024 மக்கள் தொகை கணக்கெடுப்பில் பல மலையகத் தமி ழர்கள் தங்களை இலங்கைத் தமிழர்களாக அடையாளப்ப டுத்த முடிவு செய்ததை, அரசியல் ரீதியாக மீட்டெடுக்கும் செயலாகப் படிக்கலாம். பல தசாப்தங்களாக 'இந்தியர்' என்று முத்திரை குத்தப்பட்ட பிறகு, பலர் தங்கள் அடை யாளம், வெறுமனே, இலங்கையர் என்று முடிவு செய்துள் ளனர். மற்றொரு சமூகத்துடன் இணைவதன் மூலம் அல்ல, மாறாக அதற்குள் சமமான அங்கீகாரத்திற்கான கோரிக் கையாக அதை நோக்கவியலும்.

இந்த மறு அடையாளம் பரந்த சமூக மற்றும் தலைமுறை மாற்றங்களுடன் ஒத்துப்போகிறது. அதிகளவில் கல்வி கற்று நகரமயமாக்கப்பட்ட இளைய மலையக தமிழர்கள், தங்களை தேசிய கட்டமைப்பின் ஒரு பகுதியாகக் கருதுகின்றனர். அவர்கள் தோட்டங்களுக்கு வெளியே, பழைய தோட்ட எல்லைகள் மங்கலாகிவிட்ட நகரங்கள் மற்றும் நகரங்களில் வாழ்கிறார்கள், வேலை செய்கிறார்கள். அவர்கள் பல்கலைக் கழகங்களில் படிக்கிறார்கள், சிவில் சமூகத்தில் ஈடுபடு கிறார்கள், மேலும் பெரும்பாலும் பாரம்பரிய இனக் கோடு களைக் கடந்து திருமணம் செய்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, 'இந்தியத் தமிழர்' என்று தொடர்ந்து அடை யாளம் காண்பது கடந்தகாலத்தின் உணர்வையும் காலனித் துவ வகைப்பாட்டின் எச்சத்தையுமே பிரதிபலிக்கிறது. இது இனி அவர்கள் வாழ்ந்த வாழுகின்ற யதார்த்தத்தைப் பிரதி பலிக்காது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பிரிவுகள், எல்லாவற் றிற்கும் மேலாக, நடுநிலையானவை அல்ல. அவை அதி காரம், வரலாறு மற்றும் சொந்தமான அரசியலைப் பிரதிபலிக் கின்றன. டிஜிட்டல் முறையில் நடத்தப்பட்ட 2024 கணக்கெ டுப்பு, அதிக சுய-அறிக்கையிடல் நெகிழ்வுத்தன்மையுடன், தனிநபர்கள் தங்கள் இன அடையாளத்தை ஒரு கணக்கெடுப் பாளர் அல்லது எஸ்டேட் அதிகாரியின் மத்தியஸ்தம் மூலம் அல்லாமல் நேரடியாகத் தேர்ந்தெடுக்க அனுமதித்தது. அந்த எளிய நடைமுறை மாற்றம் - ஒரு அரசாங்க முகவருக்கு வாய் மொழியாக அறிவிப்பதற்குப் பதிலாக ஒரு டேப்லெட் திரையில் ஒரு கிளிக் - பலருக்கு நீண்டகாலமாக இருந்த ஆனால் ஒருபோதும் முறையாகப் பதிவு செய்யப்படாத ஒரு அடையாளத்தை வெளிப்படுத்த உதவியிருக்கலாம்.

## கணக்கெடுப்பின் அரசியலும் கண்ணியத்துக்கான அவாவும்:

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, மலையகத் தமிழ் வகையின் வீழ்ச்சி காணாமல் போனதற்கான சான் றல்ல, மாறாக வெளிப்படும் கண்ணியத்தின் சான்றாகும். இது ஒரு காலனித்துவ முத்திரையையும் குடியுரிமையின் அதி காரத்துவ படிநிலையையும் ஏற்க அமைதியான மறுப்பைக் குறிக்கிறது. இருப்பினும் இது சிக்கலான கேள்விகளையும் எழுப்புகிறது: பரந்த இலங்கைத் தமிழ் வகைக்குள் புள்ளி விவர ரீதியாக உள்வாங்கப்படும்போது தோட்ட சமூகத்தின் தனித்துவமான வரலாறு மற்றும் சமூக - பொருளாதாரப் போராட்டங்களுக்கு என்ன நடக்கும்?

பல தசாப்தங்களாக, மலையகத் தமிழர்கள் தீவின் சமூகப் பிரமிட்டின் அடிமட்டத்தில் உள்ளனர். கல்வியறிவு மற்றும் கல்வியில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், தோட்டத்தொ ழில்துறை இலங்கையில் மிகவும் ஏழ்மையான பகுதிகளில் ஒன்றாக உள்ளது, அதிக ஊட்டச்சத்து குறைபாடு, வரை யறுக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு மற்றும் குறைந்த நில உரிமையுடன். ஊதியங்கள் குறைவாக உள்ளன, தொழிற் சங்கப் பிரதிநிதித்துவம் துண்டு துண்டாக உள்ளது, வீட்டு வசதி பாதுகாப்பற்றது. இலங்கைத் தமிழர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது சமத்துவத்திற்கான விருப் பத்தைப் பிரதிபலிக்கக்கூடும், ஆனால் அது சமூகத்தின் குறிப்பிட்ட பாதிப்புகளை மறைக்கும் அபாயத்தையும் கொண் டுள்ளது - கொள்கை இலக்கு, நலத்திட்டங்கள் மற்றும் அரசி யல் பிரதிநிதித்துவத்தில் அவர்களின் சமூக-பொருளாதார நிலைமைகள் குறைவாகவே தெரியும்.



> சராசரி வயது கிட்டத்தட்ட 39 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது, கருவுறுதல் மாற்று நிலைக்குக் கீழே குறைந்துள்ளது, மேலும் ஆயுட்காலம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நாடு செல்வந்தராக மாறுவதற்கு முன்பே வயதாகி வருகிறது - இது ஆழமான நிதி, சமூக மற்றும் நெறிமுறைத் தாக்கங்களைக் கொண்ட ஓர் உண்மை.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், புள்ளிவிவர ஒருங்கிணைப்பு தானாகவே சமூக உள்ளடக்கமாக மொழிபெயர்க்கப்படாது. சரியான விளக்கம் இல்லாமல், புதிய மக்கள் தொகை கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்கள் பழைய படிநிலைகளுடன் கலைந்துவிட்டன என்ற மாயையை ஏற்படுத்தக்கூடும். உண்மையில் அவை வெவ்வேறு வடிவங்களில் நீடிக்கின்றன. ஓர் அரசு பல்கலைக்கழகத்தில் படிக்கும் தோட்டத் தொழிலாளியின் மகள் உண்மையில் தன்னை இலங்கைத் தமிழராகக் காணலாம், ஆனால் அவரது பாட்டி இன்னும் ஒரு எஸ்டேட் வரிசை அறையில் உரிமைப் பத்திரம் இல்லாமல் வசிக்கிறார். மக்கள் தொகை கணக்கெடுப்பு ஒரு தேசத்தைப் பதிவு செய்கிறது. வாழ்ந்த யதார்த்தம் மற்றொன்றைப் பதிவு செய்கிறது.

இலங்கையின் நவீன வரலாறு முழுவதும், மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது வெறுமனே ஒரு மக்கள்தொகை கருவியல்ல. இது அரசியல் ஒழுங்கமைப்பின் ஒரு கருவியாக இருந்து வருகிறது. காலனித்துவ காலத்தில் ‘இனங்களை’ கணக்கிடுவதில் இருந்த வெறியிலிருந்து, பிரதிநிதித்துவம், மொழிக் கொள்கை மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்த சுதந்திரத்திற்குப் பிந்தைய விவாதங்கள் வரை, எண்கள் அதிகாரத்தின் கதைகளை வடிவமைத்துள்ளன. யார் கணக்கிடப்படுகிறார்கள், அவை எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன, இந்த வகைகள் எதைக் குறிக்கின்றன என்பது எப்போதும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளாகவே இருந்து வருகின்றன.

மலையகத் தமிழர் அடையாளத்தில் ஏற்பட்ட மாற்றம் பிரதிநிதித்துவத்தின் கேள்வியை மீண்டும் திறக்கிறது. அவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தோன்றினால், தேசிய அரசியலில் அவர்களின் குரல் மேலும் சுருங்குமா? ஏற்கனவே துண்டு துண்டாகப் பிரிந்து செல்வதாலும், இடம்பெயர்வதாலும் பலவீனமடைந்துள்ள மலையகத் தமிழ் அரசியல் கட்சிகள், புள்ளிவிவர ரீதியாக அரிக்கப்பட்டு வரும் ஓர் அடையாளத்தின் கீழ் தொகுதிகளைத் திரட்டுவது கடினமாக இருக்கலாம். இதற்கிடையில், மத்திய மலைநாட்டிற்கான வளர்ச்சி குறிகாட்டிகள், பிராந்தியத்தின் ‘தமிழ்’ மக்கள் தொகை அதன் வடக்கு ‘தமிழ் மக்களுடன்’ சமூக-பொருளாதார ரீதியாக ஒன்றிணைந்துள்ளதாகக் கொள்கை வகுப்பாளர்கள் கருதினால் தவறாகப் புரிந்து கொள்ளப்படலாம்.

அங்கீகாரம் தேடுவதில், மலையகத் தமிழர்கள் தற்செயலாகத் தெரிவுநிலையை இழக்க நேரிடும் - அவர்களின் தனித்துவமான சமூக மற்றும் பொருளாதார சவால்களை நிவர்த்தி செய்வதற்கான நிறுவன வழிமுறைகள் இல்லாமல், ஒரு பெரிய தமிழ் மக்கள்தொகைக்குள் ஒரு துணைப்பிரிவாக மாறக்கூடும். இது மறு அடையாளம் காணலுக்கு எதிரான வாதம் அல்ல, ஆனால் அங்கீகாரமும் மறுபகிர்வும் கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது.

அடையாள அரசியலுக்கு அப்பால், சரிவை வலுப்படுத்தும் மக்கள்தொகைக் காரணிகளும் உள்ளன. மலையகத் தமிழ் மக்கள் தொகை, முக்கிய இனக்குழுக்களிடையே மிகக் குறைந்த கருவுறுதல் விகிதங்களில் ஒன்றாகும், இது மேம்பட்ட கல்வி மற்றும் மாறிவரும் குடும்ப அமைப்புகளைப் பிரதிபலிக்கிறது. பெரிய அளவிலான வெளி இடம்பெயர்வு - உள்நாட்டில் (கொழும்பு, கண்டி மற்றும் நுவரெலியா போன்ற நகர்ப்புற மையங்களுக்கு) மற்றும் வெளிப்புறமாக (வெளிநாட்டில் வீட்டு மற்றும் பராமரிப்புத் தொழிலாளர்களாக) - பாரம்பரிய தோட்டத் தொழிற்துறை மாவட்டங்களில் மக்கள் தொகையைக் குறைத்துள்ளது. இடம்பெயர்ந்தவர்களில் பலர் இனித் தோட்டப் பொருளாதாரத்துடன் அடையாளம் காணப்படுவதில்லை, இனத்திற்கும் தொழிலுக்கும் இடையிலான தொடர்பை மேலும் பலவீனப்படுத்துகிறார்கள்.

இதன் விளைவாக சமூகத்தின் மெதுவான பிரதேசமயமாக்கல் உள்ளது: மக்கள் தோட்டங்களை விட்டு வெளியேறி பிரதான நீரோட்டப் பொருளாதாரத்தில் இடம்பெயர்வதால் ‘மலையகத் தமிழர்’ அடையாளம் அதன் புவியியல் நங்கூரத்தை இழந்து வருகிறது. இந்தப் பரவல் சமூக இயக்கத்தைக் குறிக்கும் அதே வேளையில், ஒரு காலத்தில் தனித்துவமான மக்கள்தொகையின் தெரிவுநிலையையும் நீர்த்துப் போகச் செய்கிறது. குறைவான ‘மலையகத் தமிழர்களை’ பதிவு செய்வதில், மக்கள் தொகை கணக்கெடுப்பு, ஒரு வகையில் ஒரு வரலாற்று சகாப்தத்தின் முடிவைக் கைப்பற்றுகிறது. தோட்டத்தை ஒரு பொருளாதார அமைப்பு மற்றும் அடையாளக் கட்டமைப்பாக படிப்படியாக நீக்குதல் என்ற செயலை அது செய்துள்ளதா? என்பதை அடுத்த ஒரு தசாப்தகால வரலாறு முடிவு செய்யும்.

### வயதானோரின் நாடாகும் இலங்கை:

2024 மக்கள்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு ஒரு புள்ளிவிவரப் பயிற்சியை விட அதிகமாகக் குறித்தது. இது இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார எதிர்காலத்தை அமைதியாக மறுவரையறை செய்யும் ஆழமான மக்கள் தொகை மாற்றத்தைக் கைப்பற்றியது. முதல் முறையாக, இலங்கையர்களில் ஆறில் ஒருவர் 60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர். எதிர்பார்க்கப்பட்டாலும், இந்தக் கண்டுபிடிப்பு, குறிப்பாக ஒரு நுட்பமான தருணத்தில் இறங்குகிறது: பொருளாதார நெருக்கடியின் பின்விளைவுகளுடன் போராடும் ஒரு நாடு, ஐஎம்எப் ஆதரவு நிதி சீர்திருத்தத் திட்டம் மற்றும் நிலையான வளர்ச்சிப் பாதைக்கான தேடல் ஆகியவற்றுக்கிடையில் இந்தச் சவாலையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

நாட்டின் மொத்த மக்கள்தொகை 21.76 மில்லியனாக உள்ளது. வயது அமைப்பு வியத்தகு முறையில் மாறிவிட்டது. சராசரி வயது கிட்டத்தட்ட 39 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது, கருவுறுதல் மாற்று நிலைக்குக் கீழே குறைந்துள்ளது, மேலும் ஆயுட்காலம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நாடு செல்வந்தராக மாறுவதற்கு முன்பே வயதாகி வருகிறது - இது ஆழமான நிதி, சமூக மற்றும் நெறிமுறைத் தாக்கங்களைக் கொண்ட ஓர் உண்மை.

> **இலங்கையின் நிதிக் கட்டமைப்பு வயதான சமூகத்திற்குப் பொருந்தாது. பொது சேவை ஓய்வூதியத் திட்டம் பங்களிப்பு இல்லாததாகவும், திறைசேரியைப் பெரிதும் நம்பியிருப்பதாகவும் உள்ளது. தொழிலாளர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் அறக்கட்டளை நிதியம் போன்ற பங்களிப்புத் திட்டங்கள் முறைசாரா தொழிலாளர்களிடையே வரையறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன.**

இலங்கையின் வயதானோர் அதிகரிக்கும் செயல்முறை சீரானது அல்ல. நகர்ப்புற மையங்கள், குறிப்பாக மேற்கு மாகாணத்தில், உள் இடப்பெயர்வு காரணமாக ஒப்பீட்டளவில் சீரான வயது சுயவிவரத்தைத் தக்க வைத்துக் கொள்கின்றன, அதே நேரத்தில் பல கிராமப்புற மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் இளைய மக்கள் இடம்பெயர்வதால் வேகமாக வயதாகி வருகின்றன. மாத்தறை, நுவரெலியா, முல்லைத்தீவு மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்களில், மொத்த மக்கள் தொகை தேக்கமடைந்தாலும், வயதான குடிமக்களின் விகிதம் கூர்மையாக வளர்ந்து வருகிறது.

அடிப்படையிலான மக்கள்தொகைக் காரணிகள் நன்கு அறியப்பட்டவை. கருவுறுதல் விகிதங்கள் ஒரு பெண்ணுக்கு சுமார் 1.9 பிறப்புகளாகக் குறைந்துள்ளன. அதே நேரத்தில் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக இளைஞர்கள் இடம்பெயர்வது தடையின்றித் தொடர்கிறது. ஒரு காலத்தில் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்தைய சமூகக் கொள்கையின் வெற்றியாக இருந்த மேம்பட்ட ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுள், இப்போது கட்டமைப்பு ரீதியாக வயதான சமூகத்தை உருவாக்கியுள்ளது. இதன் விளைவாக, வேலை செய்யும் வயது மக்கள்தொகைக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் இடையே விரிவடையும் ஏற்றத்தாழ்வு, முதியோர் சார்பு விகிதத்தால் கைப்பற்றப்படுகிறது. இது இப்போது 28%-ஐ விட அதிகமாக உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வேலை செய்யும் வயதில் உள்ள ஒவ்வொரு 100 பெரியவர்களுக்கும், கிட்டத்தட்ட 30 வயதான குடிமக்கள் தங்கள் வருமானம், வரிகள் அல்லது பராமரிப்பை நம்பியுள்ளனர்.

இந்த மாற்றத்தின் பெரிய நிதி தாக்கங்கள் தொலைநோக்குடையவை. சிறியதாகவும் மெதுவாகவும் வளரும் தொழிலாளர் படை நாட்டின் உற்பத்தித் திறனைக் கட்டுப்படுத்துகிறது, அதே நேரத்தில் விரிவடைந்து வரும் முதியோர் மக்கள் தொகை பொதுச் செலவினங்களில் அழுத்தத்தை அதிகரிக்கிறது. அரசு சேகரிப்பதற்கும் அதன் குடிமக்களை ஆதரிக்க அது செலவிட வேண்டியதற்கும் இடையிலான சமநிலை குறுகி வருகிறது. இது இன்று பணக்காரப் பொருளாதாரங்கள் என்று அறியப்பட்ட நாடுகளுக்குக்கூட ஒரு சவாலாக உள்ளது. இலங்கை போன்ற திவால் நிலையிலிருந்து இன்னும் மீண்டு வருபவர்களுக்கு குறிப்பாக அச்சுறுத்தலாக உள்ளது.

இலங்கையின் நிதிக் கட்டமைப்பு வயதான சமூகத்திற்குப் பொருந்தாது. பொது சேவை ஓய்வூதியத் திட்டம் பங்களிப்பு இல்லாததாகவும், திறைசேரியைப் பெரிதும் நம்பியிருப்பதாகவும் உள்ளது. தொழிலாளர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் அறக்கட்டளை நிதியம் போன்ற பங்களிப்புத் திட்டங்கள் முறைசாரா தொழிலாளர்களிடையே வரையறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன. அவர்கள் தொழிலாளர் படையில் 60%-க்கும் அதிகமாக உள்ளனர். இதற்கிடையில், சமுர்த்தி போன்ற நலத்திட்டங்கள் முதுமையை மனதில் கொண்டு வடிவமைக்கப்படவில்லை, மேலும் பெரும்பாலும் தனியாக வாழும் அல்லது முறையான அடையாளம் இல்லாமல் வாழும் முதியவர்களையும் விலக்குகின்றன.

அதே நேரத்தில், ஐஎம்எவ் திட்டம் கடுமையான நிதி ஒழுக்கத்தைக் கோருகிறது. குறைந்த பற்றாக்குறைகள், குறைக்கப்பட்ட மானியங்கள் மற்றும் அதிகரித்த வருவாய் போன்றவற்றை நோக்கித் தள்ளுகின்றன. இந்த கட்டாயங்கள் நலன்புரி வரவு செலவுத் திட்டங்களை அல்லது சுகாதார செலவினங்களை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்துள்ளன. இருப்பினும் இரண்டிற்கும் சமூக தேவை அதிகரித்து வருகிறது. ஓய்வூதியம் மற்றும் நலன்புரி அமைப்புகள் மறுவடிவமைப்பு செய்யப்படாவிட்டால், நிதி ஒருங்கிணைப்பு ஓய்வு பெற்றவர்கள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள் மத்தியில் சிரமத்தை அதிகரிக்கக்கூடும். மக்கள்தொகை முதுமையை ஒரு புதிய சமூக நெருக்கடியாக மாற்றும்.

## சமூக நெருக்கடியின் பரிமாணங்கள்:

புள்ளிவிபரங்களுக்குப் பின்னால் அன்றாட போராட்டங்கள் உள்ளன. பல வயதான இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணிபுரியும் குழந்தைகளிடமிருந்து வரும் ஒழுங்கற்ற பணம் அனுப்புதல்களையோ அல்லது விலை ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில் நிச்சயமற்றதாகிவிட்ட சிறிய விவசாய வருமானங்களையோ நம்பியுள்ளனர். வயதான பெண்களுக்கு - பெரும்பாலும் விதவைகள், கிராமப்புற மாவட்டங்களில் வசிப்பவர்கள் மற்றும் குறைந்த சேமிப்பு உள்ளவர்கள் - வறுமையின் ஆபத்து கடுமையானது.

முதுமை சமூக உறவுகளையும் மறுவடிவமைக்கிறது. ஒரு காலத்தில் பராமரிப்பின் முதுகெலும்பாக இருந்த நீடிக்கப்பட்ட குடும்பங்கள், இளைய தலைமுறையினர் நகரங்கள் அல்லது வெளிநாடுகளுக்குச் செல்லும்போது துண்டு துண்டாகின்றன. ஊர்களில் அல்லது நகரங்களில் 'பின்தங்கிய' முதியவர்கள் - சில சமயங்களில் தங்கள் வயது வந்த குழந்தைகள் வெளிநாட்டில் வேலை செய்யும் போது பேரக்குழந்தைகளைப் பராமரிக்கிறார்கள் - தனிமை, குறைவான இயக்கம் மற்றும் சுகாதாரப் பராமரிப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகலை எதிர்கொள்கின்றனர்.

நோய் தடுப்புக் கவனம் செலுத்துவதற்காக நீண்டகாலமாகப் போற்றப்படும் சுகாதார அமைப்பு, இப்போது தேவையின் புதிய சுயவிபரத்தை எதிர்கொள்கிறது. நாள்பட்ட தொற்றாத நோய்கள், மறதி மற்றும் நீண்டகாலப் பராமரிப்புக்கான தேவை என்பன அதிகரித்துள்ளன. பொது மருத்துவமனைகள் முதியோர் பராமரிப்புக்குப் போதுமான வசதிகள் இல்லை. அதே நேரத்தில் தனியார் மருத்துவ வசதி பலருக்குக் கட்டுபடியாகாது. சமூக அடிப்படையிலான பராமரிப்பு சேவைகள் இல்லாமல், முதுமை என்பது பெண்கள் மற்றும் குடும்பங்களால் சுமக்கப்படும் ஒரு தனிப்பட்ட சுமையாக மாறுகிறது, பகிரப்பட்ட பொதுப் பொறுப்பாக அல்ல.

வயதானதை ஒரு நெருக்கடியாக மட்டுமே கருதுவது தவறாகும். நீண்ட ஆயுட்காலம் கொண்ட ஒரு சமூகம் புதிய திறன்களையும் கொண்டுள்ளது: அனுபவம், மீள்தன்மை மற்றும் பொருளாதார வல்லுநர்கள் ஆகிய ஆற்றல்களை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பற்றியது. தொழிலாளர் சந்தைகள் நெகிழ்வானதாக இருந்தால், ஓய்வூதியக் கொள்கைகள் நவீனமயமாக்கப்பட்டால், வாழ்நாள் முழுவதும் கற்றல் சாத்தியமாகினால் வயதானவர்கள் உற்பத்தித் திறன் கொண்டவர்களாக இருக்க முடியும்.

முதியோர் நட்பு வீட்டு வசதி, சுகாதார தொழில்நுட்பங்கள், சமூகக் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் இளைய மற்றும் வயதான குடிமக்களை இணைக்கும் சமூக நிறுவனங்களில் புதுமைக்கு இடம் உள்ளது. ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளில் கொள்கை தொலைநோக்குப் பார்வையுடன் சந்திக்கும்போது, வயதானது எவ்வாறு சுகாதார சேவைகள், ரோபாட்டிக்ஸ் மற்றும் சமூகப் பராமரிப்பில் புதிய தொழில்களை இயக்க முடியும் என்பதைக் காட்டியுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை, கொள்கை அத்தகைய தழுவலை செயல்படுத்துமா - அல்லது வயதானது சமத்துவமின்மையை அதிகரிக்க அனுமதிக்குமா ? என்பதுதான் கேள்வி.

மக்கள்தொகை முதுமைக்குப் பதிலளிப்பது மனநிலையில் மாற்றத்தைக் கோருகிறது. இது வெறுமனே கூடுதல் நலச் செலவினங்களைச் சேர்ப்பது பற்றியது மட்டுமல்ல, வேறுபட்ட மக்கள்தொகை கட்டமைப்பிற்கு நிறுவனங்களை மறுவடிவமைப்புச் செய்வது பற்றியது. சில முன்னுரிமைகளில் பின்வருவன அடங்கும்:

- நிதி அபாயங்களைக் கொண்டிருக்கும் அதே வேளையில் அடிப்படை வருமானப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஓய்வூதியங்கள் மற்றும் சமூக பரிமாற்றங்களை (பங்களிப்பு மற்றும் இலக்குப் பங்களிப்பு அல்லாத கலவைகள் மூலம்) சீர்திருத்துதல்.
- மருத்துவமனைகள் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் சமூக அடிப்படையிலான மற்றும் வீட்டுப் பராமரிப்பு சேவைகள் உட்பட சுகாதார மற்றும் பராமரிப்பு உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல்.
- ஊக்கத்தொகைகள் மற்றும் பணியிடத் தழுவல்கள் மூலம், குறிப்பாக பெண்கள் மற்றும் திறமையான முதியவர்களுக்கு நீண்ட மற்றும் நெகிழ்வான வேலை வாழ்க்கையை ஊக்குவித்தல்.
- டிஜிட்டல் மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிக்கவும், இதனால் வயதான குடிமக்கள் மின் சேவைகள், ஓய்வூதியங்கள் மற்றும் நிதிக் கருவிகளை நேரடியாக அணுக முடியும்.
- பேரியல் பொருளாதாரத் திட்டமிடலில் முதுமையை ஒருங்கிணைத்தல், நிதிக் கட்டமைப்புகள் நெருக்கடிகளுக்கு எதிர்வினையாற்றுவதற்குப் பதிலாக நடுத்தர காலத்தில் சுகாதார மற்றும் ஓய்வூதிய செலவுகளை எதிர்பார்க்கின்றன என்பதை உறுதி செய்தல்.

## நிறைவுக் குறிப்புகள்:

ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் யார், யார் என்பதற்கான கதையைச் சொல்கிறது. மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை, 2024 கணக்கெடுப்பு இரண்டு நூற்றாண்டுகளின் ஓரங்கட்டப்பட்ட பிறகு உறுதியான சொந்தம் என்ற அத்தியாயத்தைக் குறிக்கிறது. இது ஒரு பெரிய தார்மீகக் கூற்றின் மக்கள்தொகை எதிரொலியாகும்: தீவின் தோட்டச் செல்வத்தை தங்கள் உழைப்பால் கட்டியெழுப்பியவர்கள் வேறு எவரையும் போலவே இலங்கையர்கள். 'இந்தியத் தமிழர்' என்ற வகை ஒருபோதும் அவர்கள் உருவாக்கியதல்ல. நாட்டின் தார்மீக, அரசியல் எல்லைகளுக்கு வெளியே அவர்களை வைத்திருக்க இது திணிக்கப்பட்டது. 'இலங்கைத் தமிழர்' என்று அடையாளம் காணத் தேர்ந்தெடுப்பதன் மூலம், பலர் அடையாளமாக அந்த எல்லையைத் தாண்டிவிட்டனர். ஆனால், இலங்கையின் வரலாறு நமக்கு நினைவூட்டுவது போல, சொந்தமானது என்பது ஒருபோதும் குறியீட்டு ரீதியாக மட்டும் இல்லை. அது அங்கீகாரம், மறுபகிர்வு மற்றும் பழுது பார்ப்பைக் கோருகிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எண்ணிக்கையில் மாற்றத்தைப் பதிவு செய்துள்ளது. இப்போது கேள்வி என்னவென்றால், அரசு - மற்றும் சமூகம் - அணுகுமுறையில் மாற்றத்துடன் பதிலளிக்குமா? என்பதுதான்.

இலங்கை ஒரு குடியரசாக 76 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், மலையகத் தமிழர்களின் கதை ஒரு எச்சரிக்கையாகவும் அழைப்பாகவும் நிற்கிறது. குடியுரிமை மறுக்கப்பட்டவுடன், நீதி மற்றும் உள்ளடக்கம் மூலம் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதை மறந்துவிடுவதற்கு எதிரான எச்சரிக்கை. மக்கள் தொகை கணக்கெடுப்பில் மட்டுமல்ல, அன்றாட வாழ்க்கையிலும் அதைக் கோருபவர்களின் பன்முகத் தன்மையைத் தக்கவைத்துக்கொள்ளும் அளவுக்கு விரிவான ஓர் இலங்கை அடையாளத்தைக் கற்பனை செய்வதற்கான அழைப்பு.

2024 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, இலங்கை வயதான நாடாக உள்ளது என்பதை நினைவூட்டுகிறது. வயதான நாடு தோல்வியடைந்த நாடு அல்ல. அது அதன் வாழ்க்கைச் சுழற்சியின் ஒரு புதிய கட்டத்திற்குள் நுழையும் ஒரு சமூகம். நிதி யதார்த்தத்தை சமூக இரக்கத்துடன் இணைப்பதில் சவால் உள்ளது. பொருளாதார மீட்சியை நலன்புரி நிலைத்தன்மைக்கு எதிராகத் தள்ளும் கொள்கைகள் சமூகப் பிளவுகளை ஆழப்படுத்தும் அபாயத்தை ஏற்படுத்துகின்றன. இதைப் புரிந்து கொள்வதே பிரதானமானது.

இலங்கையின் முதியவர்கள் வெறுமனே சார்ந்திருப்பவர்கள் அல்ல. அவர்கள் இப்போது அவர்களை ஆதரிக்கப் போராடும் நிறுவனங்களையே கட்டியெழுப்பிய குடிமக்கள். அவர்களின் கண்ணியம், பாதுகாப்பு மற்றும் ஆற்றலை அங்கீகரிப்பது ஒரு பொருளாதாரத் தேவை மற்றும் தார்மீகக் கட்டாயமாகும். மக்கள் தொகை கணக்கெடுப்பு எண்களைக் கொடுத்துள்ளது - எதிர்காலத்திற்குத் தயாராகும் அதே வேளையில் கடந்த காலத்தை மதிக்கும் கொள்கையாக அவற்றை மாற்றுவதற்கான அரசியல் கற்பனை மட்டுமே எஞ்சியுள்ளது.



meenilankco@thaiveedu.com

# இன்றைய உலகில் தமிழர்-தேசியம் ஒரு மறுசிந்தனை



அஜித் ராஜபக்ச

தமிழில்: மணி வேலுப்பிள்ளை

தமிழர்-சமூகத்துள் ஒரு செயலராக விளங்கும் ஜூட் பிரகாஷ் எனது நண்பர். அவுஸ்திரேலியாவில், மெல்பேர்ன் மாநகரத்தில், பேராசிரியர் எலியேசர் நினைவாக, அவர் ஆற்றிய உரையின் கூறுகளை அண்மையில் நான் வாசித்தேன்.

இன்றைய உலகத்துக்கு தமிழர்-தேசியம் எவ்வளவு தூரம் உகந்தது என்பது குறித்து தனது சிந்தனைகளை அந்த உரையில் அவர் முன்வைத்துள்ளார். அத்துடன் அடையாளம், முன்னேற்றம், அரசியற் போராட்டத்தின் எதிர்காலம் தொடர்பாக முக்கிய வினாக்களை அவர் எழுப்பியுள்ளார்.

அவரது உரையின் கூறுகள் இவ்வாறு அமைந்துள்ளன:

ஒருகாலத்தில் அடையாளத்தை நிலைநிறுத்தவென எதிர்த்துப் போராடிப் பெருமை படைத்த தமிழர்-தேசியம் இன்றைய உலகத்துக்கு உகந்ததா?

தமிழ் மக்களின் உண்மையான தேவைகளான கல்வி, நலவாழ்வு, பொருள்விருத்தி போன்றவற்றைப் புறக்கணித்து, நாட்டப்பட்ட அறைகூவல்கள், வைரம்பாரித்த கருத்துநிலைப்பாடுகள் மூலம் தமிழர்-தேசிய இயக்கம் அதன் நோக்கத்தை இழந்துள்ளது.

தமிழர்-தேசியத்துக்கு நடைமுறை இலக்கோ நம்பிக்கையான தலைமையோ வாய்க்கவில்லை; உட்பிளவுகளும், அகந்தை அரசியலும் அதன் ஒற்றுமையைப் பலவீனப்படுத்தின; வல்லமை எய்தி, பங்குவகித்து, வளம்பெற்று வாழ விழையும் இன்றைய தமிழரின் மாற்று வேட்கைகளைப் புரிந்துகொள்ள தமிழர்-தலைமை தவறியுள்ளது.

வடக்கு, கிழக்கில் குடித்தொகை வீழ்ச்சியால், தமிழர்-தேசிய இயக்கத்தின் சமூக, ஆள்புலத் தளம் அரிப்புண்டு வருகிறது. அதேவேளை, குறிப்பாகப் புலம்பெயர் உலகினுள், புதியதொரு தமிழர்-தலைமுறை வளர்ந்து வருகின்றது. இனப்பிரிவினையைக் காட்டிலும், அனைவரையும் உட்படுத்தி, அனைவருக்கும் வாய்ப்பளித்து, முன்னேற்றம் காணும் நிலைப்பாட்டுக்கு அது முதன்மை அளித்து வருகின்றது.

சிங்களர்-தேசியம் புதிய அரசியல் அலையில் அள்ளுண்டு ஆதிக்கம் குன்றி வருவதாகத் தெரிகின்றது. அந்த வகையில் தமிழர்-தேசியம் அதன் பரம்பரைப் பகைவரை இழந்து நிற்கின்றது. அமைதி நிலவும் இக்காலத்துக்கு உகந்த முறையில் தமிழர்-தேசியம் தன்னை மீளவரையறுத்துக் கொள்ள




> **“தமிழர்-தேசியத்துக்கு நடைமுறை இலக்கோ நம்பிக்கையான தலைமையோ வாய்க்கவில்லை; உட்பிளவுகளும், அகந்தை அரசியலும் அதன் ஒற்றுமையைப் பலவீனப்படுத்தின; வல்லமை எய்தி, பங்குவகித்து, வளம்பெற்று வாழ விழையும் இன்றைய தமிழரின் மாற்று வேட்கைகளைப் புரிந்துகொள்ள தமிழர்-தலைமை தவறியுள்ளது.”**

வேண்டும்; பொருளாதார அடிப்படை, நெறி திறம், புறநோக்கு என்பவற்றின் ஊடாக பண்பாட்டுப் பெருமையையும் செயல் நோக்க ஈடுபாட்டையும் ஒருங்கிணைத்து அது புத்தெழுச்சி பெறவேண்டும்.

தமிழர்-தேசியம் இன்றைய உலகத்துக்கு உகந்த நிலைப்பாடாக நிலைபெறும் வண் ணம், எதிர்ப்பு அரசியலை விடுத்து, வல் லமை - ஒற்றுமை - முன்னேற்றம் காணும் இயக்கமாக மலரவேண்டும்.

ஜெயப் பிரகாஷ் ஆற்றிய உரையின் கூறுகள் அவை.

புலம்பெயர்ந்து உலகெலாம் பரந்து வாழும் தமிழரை, குறிப்பாக அவுஸ்திரேலியாவாழ் தமிழரை அணிதிரட்டி, தேசியவாத தமிழ ரிடையே ஓர் அகவிசாரணையைத் தூண்டி, தேசிய இயக்கத்தின் எதிர்கால இலக்கை மீள எண்ணிப் பார்க்கும்படி அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் மேற்படி சிந் தனைகளை அவர் முன்வைத்திருக்கலாம். அவரது வாதத்தை மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு, இலங்கையில் சிங்க ளர்-தேசியமும், தமிழர்-தேசியமும் மலர்ந்த வரலாற்றை நாம் மீள்நோக்கிப் பார்க்க வேண்டும்.

### சிங்களர்–தேசியம், தமிழர்–தேசியம் என்பவற்றின் தோற்றுவாய்:

நெடுங்காலமாக ஐரோப்பியரால் கட்டியா ளப்பட்டதன் விளை வாக எழுந்தவையே சிங்களர்-தேசியமும், தமிழர் - தேசியமும். பிறநாடுகளைக் கட்டியாண்ட வல்லரசுகள் நிலத்தையும், உளத்தையும், அரசியலை யும் பிரித்தாளும் கலையில் கைதேர்ந் தவை. அத்தகைய ஏகாதிபத்திய ஆட்சி யின் விளைவாக ஆசியாவிலும், ஆபிரிக்கா விலும் வாழ்ந்த சமூகங்கள் ஆழ்ந்து பிள வுண்ட வடுக்கள் இற்றைவரை நீடித்துள் ளன. இலங்கை அதற்கு விதிவிலக்கல்ல.

“

**ஒருகாலத்தில் இடதுசாரி இயக்கமே, குறிப்பாக இலங்கை சமசமாசக் கட்சியே (LSSP) இன, மத வரம்புகளை ஊடறுத்து மக்களை ஒருங்கிணைக்க முயன்றது; இன, மத அடையாளத்தைப் பொருட்படுத்தாமல் தொழிலாளரிடையேயும், உழவரிடையேயும் தோழமையை மேம்படுத்தி, நேரிய மாற்றுத்தரப்பாக விளங்கியது.**

”



ஈற்றில் ஏகாதிபத்திய மேட்டிமைக் குழாங்களும், உள்நாட்டு மேட்டிமைக் குழாங்களும் இட்ட தாளத்துக்கு சிங்களர், தமிழர் சமூகங்கள் இரண்டும் ஆடிவந்தன. இவ்வதிகாரக் குழாங்கள் இன உணர்வைப் பயன்படுத்தி, சமூகத்தைப் பிளந்து கட்டியாண்டன.

ஒருகாலத்தில் இடதுசாரி இயக்கமே, குறிப்பாக இலங்கை சமசமாசக் கட்சியே (LSSP) இன, மத வரம்புகளை ஊட றுத்து மக்களை ஒருங்கிணைக்க முயன்றது; இன, மத அடை யாளத்தைப் பொருட்படுத்தாமல் தொழிலாளரிடையேயும், உழவரிடையேயும் தோழமையை மேம்படுத்தி, நேரிய மாற் றுத்தரப்பாக விளங்கியது.

எனினும், காலப்போக்கில் இடதுசாரி இயக்கம் வீறிழந்து, இலங்கை சுதந்திரக் கட்சி (SLFP) போன்ற சிங்கள தேசிய தரப்புகளுடன் இணைந்து, தனது முழுமுதற் குறிக்கோளை நீர்த்துப்போகச் செய்தது. அதே வேளை கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தினா போன்ற தலைவர்களும் பிறரும் ஒற்றுமை, சமத் துவம், பிரதேச சுயாட்சி என்பவற்றில் விடாப்பி டியாக நம்பிக்கை வைத்திருந்தார்கள்; வன் முறையை நிராகரித்தார்கள்; பாமரமக்கள் பங் குவகிப்பதன் மூலமாகவும், இன்முறைப் போராட்டம் மூலமாகவும் உண்மை யான மாற் றத்தைப் புகுத்தலாம் என்று கருதினார்கள்.

### ஜே.வி.பி.–யும் விடுதலைப் புலிகளும்: துயரார்ந்த ஒப்புமை:

தெற்கில் எழுந்த ஜே.வி.பி., வடக்கில் எழுந்த விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புகளும் குட்டி முதலாளித்துவ தேசிய இயக்கங்கள். அவற்றின் கருத்தியல் நிலைப்பாடுகளும், சொற்சிலம்பங்களும் வேறுபட்டவை; ஆயினும் அவற்றின் அரசியல் நெறி ஒரே மாதிரியானது: பிற தரப்புகளைச் சகித்துக் கொள்ளாமல், வன் முறையில் ஈடுபட்டு, கருத்துமாறுபாட்டை அவை அடக்கி ஒடுக்கின. அரசின்மீது மட்டுமல்ல, தமது பாதையைக் கேள்விக்குள்ளாக்கிய இட துசாரித்துவ, சமவுடைமைத் தரப்புகள்மீதும் அவை குறிவைத்தன.

தெற்கில் ஜே.வி.பி.-யின் தீவிரவாதத்தை எதிர்த்த இடதுசாரிச் செயலர்களும், தொழிலா ளர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் கொல்லப்பட்டார்கள். வடக்கில் சட்டவுரைஞர் அண்ணா மலை போன்ற துரொஸ்கியவாதி களும், மற்றும் பிற இடதுசாரித் தமிழர்களும் விடுதலைப் புலிகளால் வேட்டையாடப்பட் டார்கள். தத்தம் மக்களைக் காப்பதாக இரு இயக்கங்களும் மார்தட்டின; எனினும், குடி யாட்சி நெறிப்படி, அனைவரையும் உள்வாங்க மாற்றுவழி காட்டியோரை அழித்தன. ஈற்றில் அவை இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக் கங்கள் ஆயின.

புலம்பெயர்ந்த தமிழரும் இந்த அழிவுப் போக்குகளைத் தட் டிக்கேட்கத் தவறிவிட்டனர். பலர் அமைதி காத்தார்கள். பிறர் உணர்ச்சியும் பொருள்வளமும் கலந்த தேசியப் பொறி யினுள் அகப்பட்டுக் கொண்டார்கள். 2001 செப்ரெம்பர் 11-ஆம் திகதி அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலை அடுத்து, ஆயுதக் குழுமங்கள் பற்றிய உலக உணர்வலை எதிர்மாறாகத் திரும்பிய பின்னரும் கூட, ஆயுதக் குழுமங் களை எச்சரிக்கும் அறிகுறிகளைப் புறக்கணித்த விடு தலைப் புலிகள், தமது வன்முறையை முன்னெடுத்துச் சென் றார்கள்.

புலம்பெயர்ந்த தமிழர் தமது மனச்சாட்சியின்படி ஓர் அரசி யல் நிலைப்பாட்டை எடுக்காமல், பெரிதும் நிதிதிரட்டும் அணியாக மாறினார்கள். போர் முடிவடைந்தபோது, புதிய தலைவர்களைக் கொண்ட தலைமுறை ஒன்று எஞ்சியிருக்க வில்லை. அவர்கள் இலங்கை அரசினால் அல்லது



> *1980-களில் விஜயகுமாரதுங்கவின் தலைமையில் தென்புல இடதுசாரிகளுக் கும், வடபுல முற்போக்காளர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒத்துழைப்பு, புதியதொரு பாதை தோன்றும் வாய்ப்பினைப் புலப்படுத்தியது.*

விடுதலைப் புலிகளால் ஒழிக்கப்பட்டுவிட்டனர். அப்புறம் புலம்பெயர்ந்த தமிழர் நம்பிக்கை இழந்து, முன்னகரும் திசை தெரியாமல், பிளவுண்டு போயினர்.

## வாய்ப்புகளை இழந்தமை, கூட்டமைப்புகளைக் காட்டிக்கொடுத்தமை:

இலங்கையில் உறவுப் பாலங்கள் கட்டப்பட்டமையும், பிறகு தீவிரவாதிகளால் அவை எரிக்கப்பட்டமையும், அதன் தற்கால வரலாற்றில் நேர்ந்த பேரிடி ஆகும். 1980-களில் விஜயகுமாரதுங்கவின் தலைமையில் தென்புல இடதுசாரிகளுக்கும், வடபுல முற்போக்காளர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒத்துழைப்பு, புதியதொரு பாதை தோன்றும் வாய்ப்பினைப் புலப்படுத்தியது. குடியாட்சி, சுயாட்சி, அமைதி எனும் குறிக்கோள்களை நோக்கி எல்லாச் சமூகங்களையும் ஒருங்கிணைக்கும் பொது அரசியல் முன்னணி ஒன்று அவரது அகக்கண்ணுக்குப் புலப்பட்டது.

இடதுசாரிச் சிந்தனையின் தாக்கத்துக்கு உட்பட்ட சில தமிழ்ப் போராளி இயக்கங்கள் மேற்படி முன்முயற்சியை ஆதரித்தன. விஜயகுமாரதுங்கவும் தமிழக முதல்வர் எம்.ஜி. ஆர். அவர்களும் ஒருவரை ஒருவர் கட்டியணைக்கும் படங்கள் வெளிவந்து, மீளிணக்கமும் பிரதேச தோழமையும் உருவாகி வருவதாக நம்பத்தக்க தருணத்தைக் குறித்து நின்றன.

எனினும், அந்த நம்பிக்கை, இரண்டு தரப்புகளையும் சேர்ந்த கடும்போக்காளர்களிடையே சீற்றத்தையே கிளப்பியது. ஒத்துழைக்கும் எண்ணத்தைச் சகித்துக்கொள்ள முடியாத தேசியவாதிகள் அந்த எண்ணத்தை ஒழித்துக்கட்டினார்கள். அத்துடன் இத்தீவில் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்துக்கும் கிடைத்த மிகச்சிறந்த வாய்ப்புகளையும் ஒழித்துக்கட்டினார்கள்.

## தென்புலத் தேசியமும் அதன் புதிய வேடமும்:

போர் முடிந்தவுடன் சிங்களர்-தேசியம் மங்கிவிட்டதென நம்புவது வெறும் வெகுளித்தனம். சமய, அரசியல் அமைப்புகளில் ஆழ வேரூன்றியுள்ள சிங்களர்-தேசியம் இன்று புதிய வேடம் பூண்டு நடமாடுகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் (NPP-யின்) முழுமுதல் தளம் மிகவும் சிறியது. ஆனால், நாட்டில் ஊழல் பெருகி, பொருளாதாரம் நிலைகுலையவே, ராஜபக்ச-ஆதரவாளர்களின் மாயை அகன்றுவிட்டது; மக்கள் சீறியெழுந்தார்கள். அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி, ஊழல்-தடுப்புப் பரப்புரை மூலம் மக்களை வெற்றிகரமாக அணிதிரட்டியே தேசிய மக்கள் சக்தி (NPP) முன்னுக்கு வந்தது.

ஆயினும், சிங்கள தேசியத் தரப்புகளின் வீழ்ச்சியை இது குறிக்கவில்லை. பௌத்த குருமாரும், வலிமைபடைத்த பண்பாட்டு அமைப்புகளும் சிங்கள தேசியத் தரப்புகளை அரவணைத்து வைத்திருக்கின்றன. மீளவும் அவற்றுக்கு விரைந்து உசுப்பேற்ற முடியும்.

இந்த நீறுபூத்த நெருப்பை அனுர குமர திசநாயக்க புரிந்துகொண்டுள்ளார். சிங்கள-பௌத்த தேசியத்தைச் சரிவரக் கையாள்வதில்தான் அல்லது சில வேளைகளில் அதற்கு நெகிழ்ந்து கொடுப்பதில்தான் அவரது அரசியல் வாழ்வு தங்கியுள்ளது.

ஜே.வி.பி. தனக்கு தேசிய மக்கள் சக்தி என்று மறுமுத்திரை குத்தியுள்ளது. எனினும் அதிகாரப் பரவலாக்கத்தையும், 13-வது திருத்தத்தையும் எதிர்த்து, பொருளாதார விருத்தியால் மாத்திரமே இனத்துவ மனக்குறைகளைத் தீர்க்க முடியுமென வாதித்த வரலாறு அதற்குண்டு. இனப்பிரச்சினையுள் ஆழ்ந்து புதையுண்ட பண்பாட்டு, அரசியற் பரிமாணங்களைப் புறக்கணிக்கும் மதிமயக்கம் இது.

தமிழரின் பாரம்பரிய அரசியலை எண்ணி ஏமாற்றம் அடைந்த சில தமிழர்-குழுமங்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு நல்கின. ஆனால், புதிய பிளாவில் பழைய கள்ளை ஏற்கும் ஆபத்து இதில் இருக்கிறது. ஜே.வி.பி.-யின் வரலாறே அதை தெட்டத்தெளிவாக உணர்த்துகிறது அல்லவா!

ஒரு காலத்தில் சிங்களத் தீவிரவாதிகளுடன் சேர்ந்து அதிகாரப் பரவலாக்கத்தை அது எதிர்த்தது; பிறகு ராஜபக்சாவின் போர்முயற்சியை ஆதரித்தது; இப்பொழுது அனைத்துநாட்டு நாணய நிதியத்தின் சிக்கனத் திட்டத்தை ஆதரிக்கிறது. இது சமவுடைமை நோக்கிய நிலைமாற்றம் அல்ல; மக்களை ஈர்க்கும் அறைகூவல்களுடன் கூடிய சந்தர்ப்பவாத அரசியல்.

## புதியதோர் ஊழியில் தமிழர்–தேசியத்தை மறுபடி சிந்தித்துப் பார்த்தல்:

போர் முடிந்து ஒரு தசாப்தத்துக்கு மேலாக தமிழர்-தேசியம் ஒரு திருப்புமுனையில் நிற்கின்றது. ஆயுதப் போராட்டம் முடிந்துவிட்டது. ஆனால், சமத்துவத்துக்கும், கண்ணியத்துக்குமான போராட்டம் தொடர்கின்றது. பிரிவினையை உந்தும் ஒரு விசையாக அல்ல, குடியாட்சி நெறிநின்று, அனைவரையும் உள்வாங்கி, முன்னோக்கி நகரும் ஓர் இயக்கமாகத் தமிழர்-தேசியத்தை மீள வரையறுக்கும் பணியே இப்போதுள்ள சவால்.

அனைவரையும் உள்வாங்கி, ஒத்துழைக்கும்பொழுது மாத்திரமே தேசியம் இன்னமும் உகந்ததாய் அமையும். ஆத லால், ஒத்துழைப்பு என்பது இன்றியமையாத நியதியாக விளங்குகின்ற உலகத்துக்கு நெகிழ்ந்து கொடுக்கும் வண்ணம், தனி நிலைப்பாட்டை நிராகரித்து, கலந்துரையாடும் முறைமையை தேசியமானது கடைப்பிடிக்க வேண்டும். அதாவது தமிழரின் அரசியற்களத்தில் ஐயுறவு வேலிகளை விடுத்து, இனத்துவ, பிராந்திய வரம்புகளை ஊடறுத்து, பாலங்களை அமைக்க வேண்டும்.

இடதுசாரித்துவத்தின் வரலாற்றுப் பாடம் இன்றியமையாதது: அதாவது, தேசியத்தினால் விடுதலையளிக்கவும் முடியும், பிளவுபடுத்தவும் முடியும். புறநோக்கை விலக்கி, அகம்நோக்கித் திரும்பும் பொழுது, தேசியமானது அழிவை விளைவிக்க வல்லது. சமத்துவம், தோழமை, வல்லமை ஈட்டும் கருவியாக மாறும்பொழுது, தேசியமானது ஒரு குடியாட்சி இலக்கை நோக்கிப் பணியாற்ற வல்லது.

> **“ நாட்டில் ஒரு சமூகம் தனித்து இயங்குவதால், உண்மையான மாற்றம் ஏற்பட முடியாது. ஒரே சுரண்டலையும், வன்கோன்மையையும் எதிர்கொள்ளும் தென்புல முற்போக்குத் தரப்புகளுடன், சிங்கள-முஸ்லீம் தொழிலாளர்களுடன், உழவர்களுடன், இளையோருடன் கூடி தமிழர்-சமூகம் அணிதிரள வேண்டும். ”**

நாட்டில் ஒரு சமூகம் தனித்து இயங்குவதால், உண்மையான மாற்றம் ஏற்பட முடியாது. ஒரே சுரண்டலையும், வன்கோன்மையையும் எதிர்கொள்ளும் தென்புல முற்போக்குத் தரப்புகளுடன், சிங்கள-முஸ்லீம் தொழிலாளர்களுடன், உழவர்களுடன், இளையோருடன் கூடி தமிழர்-சமூகம் அணிதிரள வேண்டும். குடியாட்சி, பொருளாதார நீதி, சமத்துவம் என்பவற்றுக்கான போராட்டத்தை நாடுமுழுவதும் ஒருசேர முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு கூடி அணிதிரள்வது, ஒரு விட்டுக்கொடுப்பு அல்ல; முன்னகர்வதற்கான ஒரே பாதை அதுவே. ஒத்துழைப்பின் மூலம் சகவாழ்வுக்கும், பொதுமக்களின் வளமான வாழ்வுக்குமான இயக்கமாக தமிழர்-தேசியம் மலரமுடியும்; பன்மைத்துவம், சமத்துவம் குடியாட்சி-விழுமியம் ஓங்கிய நாடாக இலங்கையைக் கட்டியெழுப்ப அது துணைநிற்க முடியும்.

## விருத்தியடையும் நாடுகளில் தேசியம்:

விருத்தியடையும் நாடுகளில் தேசியத்தினால் எளிதாகவே பிற்போக்குவாதமாக மாறமுடியும்; மக்களின் பேரால் செயற்படுவதாக மார்தட்டிக்கொண்டு, தமது ஆதிக்கத்தைப் பேணிக்கொண்டு, ஆளும் உள்நாட்டு மேட்டிமைக் குழாங்களின் கருத்தியல் போர்வையாகத் தேசியத்தினால் மாற முடியும்.

நாடு சுதந்திரம் பெற்றவுடன், உண்மையான விடுதலை எய்தப்படுவதில்லை. முதலாளித்துவமும், ஏகாதிபத்தியமும் உலக முறைமைகளாகச் செயற்பட்டு வருவதால், விடுதலை என்பது நாட்டின் எல்லைகளைக் கடந்து உலகமயமாகி, உலக நாடுகளின் தோழமையாக, ஐக்கியமாக மலரவேண்டும். பரந்துபட்ட அகநோக்கு இல்லாவிட்டால், வெளியுலகத் தரப்புகளால் புதுக்கக் கட்டியாளப்படும் நிலையில் தங்கியிருந்துகொண்டு, ஒரு புதிய கொடியின் கீழ், அதே சுரண்டல் கட்டமைப்புகளை மறுபிரதிசெய்யும் இக்கட்டுக்குள் தேசியவாத இயக்கங்கள் அகப்பட நேரும்.

உலக நிதி நிறுவனங்களையும், வணிகதாபன ஆதிக்கத்தையும், மேல்நாட்டு மேலாதிக்கத்தையும் எதிர்க்கும் பொழுது, தேசியம் என்பது முற்போக்கான நிலைப்பாட்டை எடுக்கின்றது; பேரினவாதத்தை அல்லது இன ஒதுக்கல் கொள்கையை ஊட்டி வளர்க்கும்பொழுது, அல்லது ஏற்றத்தாழ்வையும் தங்கிவாழ்வையும் நிலைநிறுத்தும் உள்நாட்டு செல்வச் சீமான்களுடன் கூட்டுச்சேரும்பொழுது, அது பிற்போக்கான நிலைப்பாட்டை எடுக்கின்றது.

## முடிவுரை:
## பிளவினை விடுத்து, பொதுநோக்கினை நாடல்:

சிங்களர்-தேசியமும், தமிழர்-தேசியமும் மாறிமாறி அச்சமும், வஞ்சமும் ஓங்கிய சுழற்சிக்குள் நெடுங்காலமாக அகப்பட்டிருந்தன. எனினும், கடந்தகாலத்தை எதிர்காலம் பிரதிபலிக்க வேண்டியதில்லை. வடக்கிலும் தெற்கிலும் எழுந்த புதிய தலைமுறையைச் சேர்ந்த அரசியற் சிந்தனையாளர்கள், முன்னைய இடதுசாரிகள் மறந்துபோன பாடங்களை மீளவும் கற்றறிய வேண்டும்: சமத்துவம் மூலம் ஐக்கியம் காண வேண்டும்! குடியாட்சி மூலம் சமத்துவம் காணவேண்டும்!

தனிநிலைப்பாட்டை விடுத்து ஒத்துழைப்பின் ஊடாக மறுமலர்ச்சி அடையும் தமிழர்-தேசியத்தினால் நீதிக்கும், சகவாழ்வுக்குமான விசையாக மாறமுடியும்; ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை வீழ்த்தி சுதந்திரம் ஈட்டமுடியாது என்பதையும், அனைவரின் கண்ணியத்தையும் சமத்துவத்தையும் பாதுகாக்கும் தேசியம் மாத்திரமே முன்னெடுக்கத்தக்கது என்பதையும் இலங்கை மக்கள் அனைவருக்கும் தமிழர்-தேசியத்தினால் நினைவுபடுத்த முடியும்.

**உசாத்துணை:**

- Ajith Rajapaksa, Rethinking Tamil Nationalism in Today's World, Colombo Telegraph, 2025-10-21



mani.velupillai@thaiveedu.com



# இந்தியாவில் காணாமற்போகும் குழந்தைகள்



*நெல்லை ஜெயசிங்*

ஒரு குழந்தை இருக்கும் இடம் தெரியவில்லை என்றால் அது காணாமல்போன குழந்தை என்று கருதப்படும். வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள், வறுமையில் வாடும் நாடுகள், என உலகில் அனைத்து நாடுகளிலும் குழந்தைகள் காணாமல் போகும் நிகழ்வுகள் அதிர்ச்சியூட்டும் வகையில் நடந்து வருகின்றன. கடுமையான சட்ட திட்டங்களைக் கொண்டுள்ள சீனா, பணக்கார நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, போன்ற நாடுகளும்கூட இதற்கு விதிவி லக்கல்ல. அங்கும் வருடம் தோறும் இலட்சக்கணக்கான குழந்தைகள் காணாமல் போய், இறுதியில் ஆயிரக்க ணக்கான குழந்தைகள் கண்டுபிடிக்கப்ப டாமலேயே கைவி டப்படுகிறார்கள். உலக அளவில் ஆண்டு தோறும் ஒரு இலட் சத்திற்கும் அதிகமான குழந்தைகள் காணாமல் போவதா கவும், அதில் பெண் குழந்தைகள் 55 வீதத்திற்கும் அதிகம் என்றும் கூறப்படுகிறது. இது உலகளவில் தீர்வு பெறாத நீண்ட காலம் தொடரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. இது தொடர்பாக பொது வெளியில் அதிகம் பேசப்படுவதும் விவாதிக்கப்படுவதும் இல்லை.

141 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இந்திய நாட்டில், கோடிக்கணக்கானவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ், பாது காப்பு குறைந்த சூழ்நிலையில் வாழ்வதன் காரணமாக, காணாமல்போகும் குழந்தைகளின் எண்ணிக்கையும் கவலை யளிக்கும் விதமாகவே இருக்கிறது. இந்திய மக்கள் தொகையில் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை ஏறக் குறைய 35 கோடியாகும். இது மொத்த மக்கள் தொகையில் 25 வீதமாகும். ஒன்றிய அரசு, இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு அளித்த அறிக்கை ஒன்றில் 2020-ஆம் ஆண்டு முதல், கடந்த நான்கு வருடங்களில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந் தைகள் காணாமல் போயிருப்பதாகவும், அதில் 36000 குழந் தைகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கூறியி ருக்கிறது. குறிப்பாக இந்தியாவில், தினமும் 294 குழந் தைகள் காணாமல் போகிறார்கள் அல்லது கடத்தப்படுகி றார்கள். 2022 முதல் ஆண்டு தோறும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் காணாமல் போவதாக கூறும் மத்திய குற்ற ஆவண காப்பகம், அவர்களில் 70 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண் குழந்தைகள் என்றும் கூறியுள்ளது. இவ்வாறு கடத்தப்படும் குழந்தைகளில் பெண் குழந்தை களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது வருத்தமளிக்கும் விடயமாகும். குறிப்பாக பெண் குழந்தைகள் அதிகமாக காணாமல் போகிறார்கள் என்பது அனைத்து நாடுகளிலும் பொதுவான அம்சமாகக் காணப்படுகிறது.

புதிய கோசங்களை அவ்வப்போது கூறிவரும் இந்திய பிரதமர், 2015 ஜனவரி 22-இல், பெண் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்த 'பேட்டி பச்சோ-பேட்டி பத்தோ' (Save the Daughter - Educate the Daughter) என்ற கோசத்தை முன்வைத்தார். வழக்கம்போல் அது வெற்று கோசமாகவே கடந்து போய்விட்டது. அதற்கு ஏற்ற செயற்பாடு இல்லாததன் காரணமாக, பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள் அதிகரித்த வண்ணமே தொடர்கின்றன.

இந்தியாவில் ஆண்டு தோறும் காணாமற்போகும் 80000 முதல் 100000 குழந்தைகளில், 60-70 வீத குழந்தைகள் மட்டுமே கண்டுபிடிக்கப்படுவதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் கூறுகிறது. 3,166,391 சதுர கிலோ பரப்பளவை கொண்ட, உலகின் ஏழாவது பெரிய நாடான இந்தியாவில், மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், மகராக்ஷ்டிரா, டெல்லி, தமிழ்நாடு, ஆகிய மாநிலங்களில் குழந்தைகள் காணாமல் போதல், மற்றும் குழந்தைகள் கடத்தல் அதிகளவில் நடப்ப தாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு எட்டு நிமிடங்க ளுக்கு ஒரு குழந்தை கடத்தப்படுவதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் கூறுகிறது. மேலும் 6 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளே அதிக அளவில் கடத்தலுக்கு உள்ளாவதா கவும் கூறப்படுகிறது.

கடத்தப்படும் அல்லது காணாமலாகும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் இதுவரை எங்கு உள்ளனர் என்பது, விடை காண முடியாத புதிராகும். டெல்லியில் 9000 குழந்தைகள், பீகாரில் 12600 குழந்தைகள், ஒடிசாவில் 4852 குழந்தைகள், மத்திய பிரதேசத்தில் 3955 குழந்தைகள், இதுவரை எங்கு

உள்ளனர் எனக் கண்டுபிடிக்க முடியவில்லை என தேசிய குற்றப் பதிவு ஆணையத்தின் புள்ளி விபரம் தெரிவித்துள்ளது. இது மிகுந்த கவலை தரும் தகவலாகும்.

காணாமற்போகும் குழந்தைகளைக் கண்டுபிடிப்பதில் உள்ள பெரும் சவால் போன்றே அவர்களை, உரிய பெற்றோர்களிடம் ஒப்படைப்பதிலும் நிறைய சிரமங்கள் உள்ளன. எங்கிருந்து வந்தோம் எனச் சொல்லத்தெரியாமல் பல குழந்தைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் செவித்திறன், பார்வைக் குறைபாடு உள்ள குழந்தைகளை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பது பெரும் சவாலாகும்.

குழந்தைகள் எவ்வாறு காணாமல் போகிறார்கள்.

ஒன்று முதல் பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், பல்வேறு வகையில், பல்வேறு காரணங்களின் விளைவாக நாடெங்கும் காணாமல் போவதாக அறியப்படுகிறது.

- **மனிதக் கடத்தல்:**

குறுகிய காலத்தில், குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க பேராசை கொண்ட சில சமூக விரோதிகள், கட்டாய தொழில் செய்வதற்கு இளம் சிறார்களை கடத்துகிறார்கள். குற்றச் செயல்களில் ஈடுபடுத்த, தடைசெய்யப்பட்ட வேலைகளைச் செய்திட, கொத்தடிமைகளாகப் பணி செய்ய கடத்தப்படுகிறார்கள்.

வீதி தோறும், வீடுகள் தோறும் பிச்சை எடுக்க வைத்து சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகக் குழந்தைகளை கடத்துகிறார்கள். பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி அதன் மூலம் பணம் சம்பாதிக்க எண்ணும் கயவர்களால், பெரும்பாலும் பெண் குழந்தைகள் கடத்தப்படுகிறார்கள். பெண் குழந்தைகளை பாலியல் ரீதியாக புகைப்படம் எடுத்து விற்கும் பாலியல் கும்பலுக்காக குழந்தைகள் கடத்தப்படுகிறார்கள்.

மாநிலங்களுக்கு இடையே கச்சிதமாக, இரகசிய வழிகளில் வலை பின்னல் அமைத்து, கடத்தல் பேர்வழிகள் செயல்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு எட்டு நிமிடங்களுக்கு ஒரு குழந்தை கடத்தப்பட்டு சந்தையில் விற்கப்படுகிறது.

- **வீட்டுச் சூழ்நிலை மற்றும் வறுமை:**

இந்தியா முழுவதும் வாழ்பவர்களில் மத்தியவர்க்க நிலைக்கு முந்தைய படிநிலையிலும், மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் நிலையிலும் வாழ்பவர்களே அதிகம். இவ்வாறான வாழ்நிலையில் உள்ள பெற்றோர்களால் குழந்தைகளை சரிவரக் கவனிக்க முடியாத சூழ்நிலை, இந்தியாவில் அதிகமாக இருந்து வருகிறது. மேலும் குடும்பத் தலைவர்களின் மதுப்பழக்கம். குடும்ப வன்முறை நிறைந்த சூழல் காரணமாக கவனிப்பாரற்ற குழந்தைகள் வீட்டைவிட்டு வெளியேறி, காணாமல் போகும் அவலமும் நிகழ்கிறது.

வறுமையில் வாடும் பெற்றோர்களின் குழந்தைகளே அதிக அளவில் காணாமற்போகிறார்கள். பாதுகாப்பான முறையில் அவர்களால் குழந்தைகளை வளர்க்க முடிவதில்லை. அடுத்த வேளை உணவுக்காகவும் தேவையான பணத்திற்காகவும் போராடும்போது அவர்களால் குழந்தைகளை பாதுகாப்புடன் வளர்க்க முடியாத நிலையில், குழந்தைகள் காணாமற்போகும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

இரவு நேரங்களில் வீதி ஓரங்களில் உறங்கும் ஏழை பெற்றோருடன், உறங்கும் குழந்தைகள் காணாமல் போகும் அவல நிலை இருப்பதாகவும் எக்ஸ்னோரா அமைப்பு கண்டறிந்துள்ளது.

- **வேறு காரணிகள்:**

குறைவான ஊதியம் கொடுத்து சிறுவர்கள் செய்யத்தக்க உடல் உழைப்பு வேலைகளுக்காகவும் இளம் சிறார்கள் கடத்தப்படுகிறார்கள். தற்போது இந்தியாவில் 18 வயதுக்கு உட்பட்ட 2 கோடி சிறுவர்கள், குழந்தை தொழிலாளர்களாக இருப்பதாகக் கூறப்படுகிறது. தடை செய்யப்பட்ட ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்துவதற்காகவும் இடைத் தரகர்களால் குழந்தைகள் கடத்தப்பட்டு விற்கப்படுகிறார்கள்.

தீவிரவாத செயல்களில் ஈடுபடுத்த, 10 முதல் 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் கடத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. உடல் உறுப்புகளுக்காகவும் குழந்தைகள் திருடப்படுவதும் கடத்தப்படுவதும் நடைபெற்று வருகிறது. குழந்தைகளைத்



> “குறுகிய காலத்தில், குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க பேராசை கொண்ட சில சமூக விரோதிகள், கட்டாய தொழில் செய்வதற்கு இளம் சிறார்களை கடத்துகிறார்கள். குற்றச் செயல்களில் ஈடுபடுத்த, தடைசெய்யப்பட்ட வேலைகளைச் செய்திட, கொத்தடிமைகளாகப் பணி செய்ய கடத்தப்படுகிறார்கள்”



> “கடைநிலை சமூக குழந்தைகளின் கல்வி வாய்ப்பு மறுக்கப்படுவதையும், பறிக்கப்படுவதையும் காண முடிகிறது. குழந்தைகள் காணாமல் போவதற்கு இவைகளும் காரணமாகின்றன. மறுபுறம் மேல்தட்டு குழந்தைகள், செல்வந்தர் வீட்டு குழந்தைகள், காணாமற்போகும் சம்பவங்கள் நடைபெறுவது மிக மிகக் குறைவாகும்”



திருடுவது இந்தியாவில் எல்லா பகுதிகளிலும் நடைபெறு கிறது. பணத்தேவையுள்ள சாதாரண வறுமை நிலையில் உள்ள பெண்களிடம் பணத்தாசை காட்டி, கடத்தல்காரர்கள் குழந்தைகளைத் திருடி வரச் செய்கின்றனர்.

அரசு பொது மருத்துவமனைகளுக்கு வரும் ஏழைத் தாய்மார் களின் குழந்தைகளும் கடத்தப்படுகிறார்கள். அக்குழந் தைகள், குழந்தைகள் இல்லாத பெற்றோர்களிடம் விற்கப்படு கிறார்கள். குழந்தை இல்லை என்றால் பணம் கொடுத்து சட் டவிரோத வழியில் வாங்கி விடலாம், குழந்தையை கடத்தி விற்றால் நல்ல இலாபம் பெறலாம் என்ற மோசமான எண்ணமும் சமூகத்தில் இன்று அதிகரித்து வருவது கவலை தரும் விடயமாகும்.

அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கூடம் செல்லும் வசதி, வாய்ப்பு, சூழ்நிலை நாட்டில் இல்லை. இலவசக் கல்வி என்று அரசு கூறி வந்தபோதும், கட்டாயக் கல்வி என்ற கட்டாயம் இல்லை. அத்துடன் குடும்ப சூழ்நிலை மற்றும் பாடசாலை வசதி, பாடசாலை சூழ்நிலை, குழந்தை நேயமற்ற கல்விச் சூழல் காரணங்களால் குழந்தை பருவத்திலேயே, இடை நிற்றல் அதிகமாகிவிடும் நிலை காணப்படுகிறது. இவ்வாறு கவனம் பெறாத குழந்தைகள் காணாமல் போவதும் அதிகரிக் கிறது.

இந்தியா பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்டபோதும் இங்கு கிராமிய கட்டமைப்பில், சாதிய பாகுபாடும் ஆதிக்க மனப்பான்மையும் இருந்தே வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கடைநிலை சமூக குழந்தைகளின் கல்வி வாய்ப்பு மறுக்கப்ப டுவதையும், பறிக்கப்படுவதையும் காண முடிகிறது. குழந் தைகள் காணாமல் போவதற்கு இவைகளும் காரணமா கின்றன. மறுபுறம் மேல்தட்டு குழந்தைகள், செல்வந்தர் வீட்டு குழந்தைகள், காணாமற்போகும் சம்பவங்கள் நடைபெறுவது மிக மிகக் குறைவாகும்.

குழந்தைகள் மத்தியில் பெரும் தாக்கத்தை கொண்டிருக்கும் பள்ளிச்சூழல், குடும்ப சூழல், சமூகச் சூழல், அவர்களுக்கு இசைவாக இல்லாததன் காரணமாக, வெளியேறும் குழந் தைகள் கடத்தல்காரர்களிடம் சுலபமாகச் சிக்கிவிடுகிறார்கள். இவ்வாறு ஆயிரக்கணக்கான குழந்தைகள் வீடுகளை விட்டு வெளியேறி மாயமாகி வருவதாக ‘Railway children’ என்ற ஆய் வறிக்கை வெளிப்படுத்தி இருக்கிறது.

இவ்வாறு பல வழிமுறைகளில், பல நேரங்களில், வெவ்வேறு காரணிகளுக்காக ஆயிரக்கணக்கான குழந்தைகள் நாடெங்கும் கடத்தப்படுவதும், காணாமல் போவதும் நடந்து கொண்டே இருக்கிறது. இவ்வாறு பல வழிகளில் குழந்தைகளின் எதிர் காலம் சூறையாடப்பட்டு வருகிறது. அதன் விளைவாக அவர் கள் சார்ந்த சமூகமும் பாதிப்புக்கு உள்ளாகிறது.

## தமிழ் நாட்டில் காணாமல் போகும் குழந்தைகள்:

தமிழகம், இந்திய மாநிலங்களில் மிகவும் முன்னேறிய மாநிலமாக அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது. தொழில், கல்வி, பொருளாதாரம், சமூக வளர்ச்சி என அனைத்து குறி யீட்டிலும் முதன்மை பெற்று வருகிறது. எனினும் குழந்தைகள் பாதுகாப்பு விடயத்தில் சற்று பின் தங்கி இருப்பதாகவே தெரிகிறது.

ஆண்டுதோறும் சராசரி 4600 குழந்தைகள் தமிழ் நாட்டில் காணாமற்போவதாக தேசிய குற்றப்பிரிவு ஆணையத்தின் அறிக்கை கூறுகிறது. 2013 முதல் 2023 ஏப்ரல் வரை தமிழ் நாட்டில், 46255 குழந்தைகள் காணாமல் போயுள்ளனர். இவர் களில் 2280 குழந்தைகள் இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை. இதில் 747 பேர் ஆண் குழந்தைகள். 1533 பேர் பெண் குழந்தைகள். குழந்தைகள் காணாமற்போகும் எண் ணிக்கையில் தமிழ்நாடு தேசிய அளவில் 5-வது இடத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. தினமும் சராசரியாக 12 குழந் தைகள் காணாமற்போகின்றனர். எனினும் குழந்தைகளை மீட்பதில் துரிதமாகச் செயற்படும் தமிழ்நாடு, தேசிய சராசரியை விட 75.7 என்ற வீதத்தில் முன்னிலை பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தின் முக்கிய அரசு மருத்துவமனைகளில் குழந் தைகள் கடத்தப்படுவதைப் போன்று, புகையிரத நிலையங் களில் குழந்தைகள் காணாமற்கும் சம்பவங்கள் அடிக்கடி நடந்து வருகின்றன. தமிழ் நாட்டில் 532 புகையிரத நிலையங் களில் நாள் தோறும் குழந்தைகள் காணாமற்போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

2022 முதல் 2025 வருட காலத்தில் மட்டும் 2300 குழந்தைகள் தமிழக புகையிரத நிலையங்களில் இருந்து, தமிழக காவல் துறை மற்றும் மீட்புக் குழுவினரால் மீட்கப்பட்டுள்ளனர். எனினும் காணாமற்போன ஆயிரக்கணக்கான குழந்தைகள் இன்னும் மீட்கப்படாதுள்ளனர். அரசும் அது தொடர்பான அலுவலர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மட்டுமே குழந்தைகள் காணாமற்போவதைத் தடுக்க முடியும்.

தமிழ் நாட்டில் 43, குழந்தை கடத்தல் தடுப்பு பிரிவு உண்டு.



“ தமிழக அரசு காணாமற்போகும் குழந்தைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி வருகிறது. மாவட்ட ஆட்சியர் கண்காணிப்பில் காவல்துறை, குழந்தைகள் நலக் குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மாவட்டம் தோறும் குழந்தைகள் பாதுகாப்பு மையங்கள், செயற்பட்டு வருகின்றன. ”



ஆனால் அவற்றுக்கான நியமனங்கள் அரசியல் சார்ந்து இருப்பதால், முழுமையான செயற்பாட்டை காண முடியாதிருக்கிறது. மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாதிருப்பதன் காரணமாக, காணாமற்போகும் குழந்தைகள் பற்றிய தகவல் வெளிப்படுத்தப்படாமலே போய்விடுகிறது. மேலும் மாயமான குழந்தைகளில் 50 வீதம் மட்டுமே பதிவாகும் நிலை தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழக அரசு காணாமற்போகும் குழந்தைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி வருகிறது. மாவட்ட ஆட்சியர் கண்காணிப்பில் காவல்துறை, குழந்தைகள் நலக் குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மாவட்டம் தோறும் குழந்தைகள் பாதுகாப்பு மையங்கள், செயற்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் அதிகமாக கூடும் பேருந்து நிலையங்கள், புகையிரத நிலையங்கள், மத வழிபாட்டு தளங்கள் போன்ற இடங்களில் அதிகப்படியான பாதுகாப்பை அரசு மேற்கொண்டு வருகிறது. விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. எனினும் குழந்தைகளை கடத்துவோர், தேசமெங்கும் அதிவேக வலைத்தளங்களைக் கொண்டு செயற்படுவதால் குழந்தைகள் காணாமல் போவதை முழுமையாகத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

## தேசிய அளவில் அரசின் செயற்பாடு:

குழந்தைகளின் பாதுகாப்பு, நாட்டின் வளமான எதிர்காலத்திற்கு அடித்தளமாக அமைகிறது என்பதன் அடிப்படையில், ஒன்றிய அரசாங்கம் தேசிய அளவில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக ஐ.நா பிரகடனத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதும் 450-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கான உதவும் கரங்கள் (Help Line) ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் இவற்றை தொடர்பு கொண்டு காணாமற்போன அல்லது கடத்தப்படும் குழந்தைகள் தொடர்பான தகவல்களைப் பதிவிட, அத்தகவல் தேசமெங்கும் பரிமாறப்பட்டு காணாமற்போகும் குழந்தைகள் கண்டுபிடிப்பதற்கு உதவிக் கரமாக இருக்கிறது.

தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் உட்பட நாடு முழுவதும் 9400 குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டம் தோறும் குழந்தைகள் பாதுகாப்பு குழு, குழந்தைகள் நலக் குழு, குழந்தைகள் உதவும் கரங்கள், குழந்தைகள் சிறப்புக் காவலர்கள், இளம் சிறார் பாதுகாப்பு குழு, என பல்வேறு குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்அமைப்புக்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் கட்சிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டு நியமனம் பெற்றிருப்பதால் அவற்றின் செயற்பாடு திருப்திகரமாக இல்லை என கூறப்படுகிறது.

இந்திய நாடாளுமன்றம் குழந்தைகளின் நலன் கருதி ஐந்துக்கு மேற்பட்ட சட்டங்களை நிறைவேற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலன் சார்ந்த சேவைகளை துரிதப்படுத்தும் வகையில் மத்திய உள்துறை அமைச்சகம், இணையத்தளம் ஒன்றையும் நிர்மாணித்து, நிர்வகித்து வருவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இந்திய நீதிமன்றங்கள் குழந்தைகள் விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்தி வருவது வரவேற்கத்தக்க செயலாகும். தாமாக முன்வந்து பல விசாரணைகளையும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். அதேபோன்று குழந்தைகள் விடயத்தில் குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனைகளை அளிக்க நீதிமன்றங்கள் முன்வர வேண்டும்.

பெரும்பாலான நாடுகளில் காணப்படும் குழந்தைகள் காணாமல் போதல் எனும் சமூக பிரச்சினை, இந்திய நாட்டிலும் தீர்க்கப்படாத, தீர்வுக்கு வழி காண முடியாததாக இருந்து வருகிறது. வருடா வருடம் நவம்பர் 14-ஆம் நாள் குழந்தைகள் தினம் மறவாது கொண்டாடப்பட்டு வருகிற அதே நேரம், குழந்தைகள் மீதான வன்முறையும் கடத்தலும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ‘கஞ்சா கடத்தல்’ போன்று குழந்தைகள் கடத்தலும் ஒரு சமூக விரோத தொழிலாக தடையின்றி நடந்து வருகிறது.

அரசு, சமூகம் என அனைத்து மக்களும் ஒன்றிணைந்து சமூக உணர்வுடன் செயல்பட்டால் மட்டுமே இக்கொடுமையை ஒழித்துக்கட்ட முடியும்.



jeyasingh@thaiveedu.com

# டைனமைட் வீடு

– ரதன் –

tg.theeban@gmail.com




காலை 9.30 மணி. காலைக்குரிய பரபரப்புடன் நாள் ஆரம்பமாகின்றது. அன்றாட வாழ்க்கையின் சலிப்பான மற்றும் அற்பமான விடயங்களுடன் அன்றைய நாள் ஆரம்பமாகின்றது. ஒரு நோய்வாய்ப்பட்ட குழந்தை, போக்குவரத்து நெரிசல் நிறைந்த பயணம், நேற்று இரவு பேஸ்பால் விளையாட்டின் விவாதம், ஒரு காலை தேநீர். வேறென்ன தேவை நாளின் ஆரம்பத்துக்கு.

அந்த நாளின் அசாதாரணத்தன்மையை அட்மிரல் மார்க் மில்லர் (ஜேசன் கிளார்க்) வெள்ளை மாளிகை சூழ்நிலை அறையில் பணி புரிபவர்களிடம் 'உலகம் அழியப் போகிறதா என்று எனக்கு ஒரு கூச்சலிடுங்கள்' என்று வெளிப்படையாகக் கூறியதில் கேட்கலாம். (Admiral Mark Miller's (Jason Clarke) offhanded remarks to those working in the White House Situation Room, 'Give me a shout-out if the world's going to end.')… ஏன் அவர் அவ்வாறு கூறினார் ?

பசிபிக் பெருங்கடலுக்கு மேலே ஒரு அடையாளம் தெரியாத ஏவுகணை அமெரிக்க வான்வெளியை நோக்கிச் செல்வது கண்டறியப்படும் போது, இயல்புநிலை உணர்வு திடீரென சீர்குலைகிறது. அலஸ்கன் தளத்திலும் வெள்ளை மாளிகை சூழ்நிலை அறையிலும் உள்ள கதாபாத்திரங்கள் முதலில் அச்சுறுத்தலை நிராகரிக்கின்றனர்.

The Sea-Based (கடல் சார்ந்த) X-Band Radar (SBX-1) வடமேற்கு பசிபிக் பெருங்கடலில் பறக்கும் அடையாளம் தெரியாத கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையைக் கண்டறிந்தது. வழமைபோல் வட-கொரியாவின் செயல் - ஏவுகணை பரிசோதனை என நம்பப்படுகின்றது. அதன் பாதை மாறியபோது (trajectory goes suborbital) ஒரு அச்சம் ஏற்பட்டது. அது எங்கு தாக்கும் என ஆராய்ந்தபோது, அதிர்ச்சி ஏற்பட்டது. இந்த ஏவுகணை மத்திய மேற்கு அமெரிக்காவினை தாக்கும், அதுவும் அடுத்த 19 நிமிடங்களுள் நடைபெறும் என அறிந்தபோது அந்த அறையே அதிர்ந்தது. அந்த அறை என்பது வெள்ளை மாளிகையின் சூழ்நிலை அறை (Situation Room). அன்றைய நாளை அப்போதுதான் தொடங்கிய கப்டன் ஒலிவியா வோக்கர் உட்பட அதிகாரிகளுக்கு அது அதிர்ச்சியான செய்தி. அடுத்து என்ன ? பரப்பரப்பான அந்த அறை, அமெரிக்க ஜனாதிபதியை இணைப்பில் இணைக்கின்றது. ஏவுகணையை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்க ஜனாதிபதியின் அனுமதி தேவை எனவே அவரையும் இணைத்துக்கொள்கின்றனர். The DEFCON level is then raised to 1, which is the highest state of military readiness, indicating that nuclear war is imminent POTUS (President of The United States) அமெரிக்க ஜனாதிபதி ஓர் இளம் கூடைப்பந்தாட்ட அணியுடன் உரையாடிக்கொண்டிருக்கின்றார். அவசர அவசரமாக அவர் அழைக்கப்பட்டு, அவருக்கு அமெரிக்கா தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்ற விபரங்கள் தெரிவிக்கப்படுகின்றது. 9-11 தாக்குதல் நடைபெற்றபோது ஜோர்ஜ் டபிள்யு புஸ் பாடசாலையொன்றில் மாணவர்களுடன் இருந்தமையை இது நினைவுபடுத்துகின்றது.

ஏவுகணை தாக்கப்போகும் இடம் சிக்காகோ நகரமாகவிருக்கும் என கணிப்பிடுகின்றார்கள். அவ்வாறு சிக்காகோவை தாக்கினால் உடனடியாக 2.5 மில்லியன் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். U.S. Federal Emergency Management Agency (FEMA), நிலைமை குறித்து உயர்மட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல் விடுக்கின்றது. கப்ரன் ஒலிவியா வோக்கர் தனது கணவனையும், பிள்ளைகளையும் மேற்கு நோக்கி உடனடியாக செல்லுமாறு அறிவுறுத்துகின்றார். வழமையான நடைமுறையில் கப்டன் ஒலிவியா அவ்வாறு செயற்பட

முடியாது. அதனையும் மீறி தனது குடும்பத்தை காப்பாற்ற முயற்சிக்கின்றார். சூழ்நிலை அறைக்குள் அதிகாரிகள் தங்களது கைத்தொலைபேசிகளைக் கொண்டு செல்ல முடியாது.

துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் பெரிங்டன் உட்பட்ட அதிகாரிகள் வடகொரியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இதனை ஏவியிருக்கலாம் என நம்புகின்றனர். அதனை எவ்வாறு தடுப்பது, அதற்கான சாத்தியங்கள் உள்ளனவா? இவையெல்லாம் இக்குறுகிய நேரத்தில் ஆய்வு செய்யப்படுகின்றது. STRATCOM United States Strategic Command ஜெனரல் அந்தனி பிரடி, அமெரிக்க ஜனாதிபதி மிக தீவிர எதிர்த் தாக்குதலை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்துகின்றார். அமெரிக்க ஜனாதிபதி தயங்குகின்றார். இறுதியாக ஜனாதிபதி தனது அங்கீகாரக் குறியீட்டை வழங்குகிறார். ஜனாதிபதியும் சாதாரண மனிதர். அவர் தனது மனைவியை தொலைபேசியில் அழைக்க முயற்சிக்கின்றார். ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தாக்குதலுக்குப் பின்னால் இல்லை என POTUS-க்கு செய்தி கிடைக்கிறது, மேலும் அது சீனாதான் என்று அவர்கள் நம்பவில்லை.

ஏவுகணை அமெரிக்காவை நோக்கிச் செல்கிறது என்பது தெளிவாகிறது. மேலும் எதிர் நடவடிக்கைகள் தோல்வியடையும்போது, பதற்றம் அதிகரிக்கிறது. இறுதி நேரம் நெருங்க, நெருங்க பதற்றம் அதிகரிக்கின்றது. ஓர் அமெரிக்க நகரத்தில் ஓர் அணுகுண்டின் சாத்தியமான தாக்கம். கண்டறிதலுக்கும் தாக்கத்திற்கும் இடையிலான நேரம் படத்தின் மையமாகும். மேலும் யாரைக் காப்பாற்றுவது, திருப்பித் தாக்குவதா, உலகை ஓர் அணு ஆயுதப் போரில் தள்ளும்போது ஏற்றுக்கொள்ளக்கூடிய அபாயங்கள் என்ன என்பது பற்றிய விவாதம் வெளிப்படுகிறது. இறுதியில் குண்டு வெடிக்கிறதா (அணு ஆயுதங்கள் சில சமயங்களில் தாக்கும்போது செயலிழக்கும் என்று பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது) அல்லது கதாபாத்திரங்கள் என்ன முடிவு செய்கிறார்கள் என்பதைக் காட்டவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள் என்பதைப் பார்வையாளர்களே தீர்மானிக்க விட்டுவிடுகிறார்கள்.

இப்படம் ஒரு நேர்கோட்டுக் கதையல்ல. மூன்று பகுதிகளாக விருப்பினும் பல்வேறு கோணங்களில் கதை முன்னகர்கின்றது. கதைக்கான களக் காலம் வெறும் 17 நிமிடங்கள். ஒரு கதாநாயக பிம்பம் இல்லாமல் பல பாத்திரங்கள் கதையை நகர்த்துகின்றன. பாத்திரங்கள் அனைவரும் நன்கு அறிவு பூர்வமான மேற்கத்தேய சிந்தனை கொண்டவர்கள். இவர்களுடன் வெள்ளை மாளிகையின் சூழ்நிலையறையும் ஒரு பாத்திரமாகவுள்ளது.

இந்தப் படம் மூன்று பகுதிகளைக் கொண்டது; ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் காலவரிசை ஆரம்பம் அல்லது அதற்குச் சற்று பின்னோக்கிச் செல்கிறது.

நாட்டின் அணு ஆயுதப் போர் இயந்திரத்திற்குப் பொறுப்பான அரசியல்வாதிகள், தளபதிகள் மற்றும் அதிகாரிகளின் பார்வையில் இருந்து கிட்டத்தட்ட நிகழ்நேரத்தில் விரிவடைகிறது. மேலும் அத்தகைய தாக்குதல் எப்போதாவது நடந்தால் எடுக்கப்பட வேண்டிய முடிவுகளைப் பற்றிய ஒரு தளர்வான பார்வையை வழங்குகிறது. படத்தின் பின் சிந்தனை, கவனச்சிதறல் மற்றும் முற்றிலும் பொருத்தமற்ற தன்மைக்கு இடையில் எங்காவது விழுகிறது.

படம் பார்வையாளர்களிடமிருந்து பல இடங்களில் அந்நியப்படுகின்றது. பல விடயங்கள், சொற்றொடர்கள் விளங்கிக் கொள்ள முடியாதவை.

பல்வேறு பதற்றமான நிமிடங்கள் படம் முழவதும் உள்ளன. சாத்தியமான இறுதிப் போராட்டக்கள அச்சுறுத்தலுக்கு எதிர்வினையாற்றும்போது கதாபாத்திரங்கள் தங்கள் முழு மனிதாபிமானத்துடன் காட்டப்படுகிறார்கள்; அவர்கள் அழுகிறார்கள், பிரார்த்தனை செய்கிறார்கள், உடல் ரீதியாக நோய்வாய்ப்படுகிறார்கள், அவர்கள் வீட்டிற்கு அழைக்கிறார்கள். அவர்களின் எதிர்வினைகள் அவர்கள் கையில் வைத்திருக்கும் இராணுவ கையேடுகளில் (military manuals) எழுதப்பட்ட நடைமுறைக்கு முற்றிலும் மாறுபட்டவை. அணு சக்தி தாக்குதல் நடைபெற்றால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதனை பல தசாப்தங்களாக திட்டமிட்டிருந்தார்கள். அப்படியிருந்தும் அவர்களால் அதனை எதிர்கொள்ள முடிந்ததா? சூழ்நிலை அறையிலும், அலஸ்கன் தளத்திலும் பணியாற்றியவர்கள், கோப்புகளை எடுத்து வாசிக்கத் தொடங்கினார்கள். அனைவரும் குழப்பத்திலிருக்க அலஸ்கன் தளத்திலிருப்பவர்கள் 'நாங்கள் எல்லாவற்றையும் சரியாகச் செய்தோம்!' எனக் கத்தினார்கள். இதுதான் தோல்வியடையும் பொழுது அல்லது என்ன செய்வது என்று தெரியாமலிருக்கும் பொழுது ஏற்படும் மனோநிலையின் பிரதிபலிப்பாகும். கதாபாத்திரங்களின் மிகவும் யதார்த்தமான எதிர்வினைகளுடன் அணு ஆயுதங்களின் அழிவுகரமான திறன்கள் மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டு நன்கு வெளிப்படுத்தப்படுகின்றன. அவை மனிதகுலத்தின் முட்டாள்தனத்திற்கு உட்பட்டவை என்ற காரணத்தை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இயக்குநர் கதரின் பிகிலோ (Kathryn Bigelow) ஒஸ்காரின் சிறந்த இயக்குநருக்கான விருதை ஈராக் போரை மையப்படுத்திய த ஹேர்ட் லொக்கர் (The Hurt Locker) படத்துக்காக பெற்றுள்ளார். இவர் இயக்கிய K-19: The Widow-maker' திரைப்படமும் அணுசக்தியை மையப்படுத்திய படம். கடந்த வருடம் வெளியாகிய மியுனிக், ஒலிம்பிக் தாக்குதல்கள் பற்றிய செப்ரம்பர் 5 என்ற திரைப்படம்போல் பதைபதைப்பாக வெளிப்படவில்லை. ஒரு சிக்கலான திரைக்கதையை தனது புத்திசாலித்தனமான இயக்கத்தால் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

படத்தில் அமெரிக்க அதிபராக நடித்தவர் இரஸ் அல்பா, ஒரு பிரித்தானிய நடிகர். இவருக்கு 2025-இல் இரண்டு அதிர்ஷ்டங்கள் கிடைத்தன. முதலாவது இவ்வாண்டு வெளியான ஹெட்ஸ் ஒப் ஸ்ரேட் என்ற ஹொலிவூட் திரைப்படத்தில் பிரித்தானிய பிரதமராக நடித்தார். அதே ஆண்டில் (2025) ஹவுஸ் ஒவ் டைனமற் படத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக நடித்துள்ளார். இவர் ஓர் ஆபிரிக்க வம்சாவளி பிரித்தானியர் ஆவார். இதுவரையில் ஆபிரிக்க வம்சாவளி பிரித்தானியர்கள் எவரும் பிரித்தானியாவின் பிரதமராக பதவிவகிக்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா ஒருவரே பதவி வகித்துள்ளார். பொதுவாகவே மேற்கத்தேய படங்களில் ஆபிரிக்க அமெரிக்கர்களை ஜனாதிபதியாக அல்லது பிரதமராக நடிக்க வைத்திருந்தால் அதன் பின்னணியில் ஒரு நுண் அரசியலிருக்கும். இரஸ் அல்பா, ஒபமாவை நினைவுபடுத்துகின்றார் என்பதனை மறுக்கமுடியாது. இது கூட டொனால்ட் ரம்ப்ஜ காப்பாற்றும் முயற்சி. அதிகாரங்கள் குவிந்துள்ள ஒரு அதிபராகவே இரஸ் அல்பா வெளிப்படுகின்றார்.

## திரைப்படம் வெளியாகியுள்ள காலம்:

அண்மைக் காலங்களில் ஒரு சில படங்கள் அணுசக்தி அதன் அழிவு பற்றி வெளிவருகின்றன. ஓப்பன்ஹைமர், இவ் வருட ஆரம்பத்தில் Mission: Impossible - The Final Reckoning, தற்பொழுது ஏ ஹவுஸ் ஒப் டைனமட் ஆகியன. ஏ ஹவஸ் ஒப் டைனமட் படம் பென்டகனின் ஆலோசனை பெறப்பட வில்லை என புளும்பேர்க் கருத்து தெரிவித்திருந்தாலும், இயக்குநர் பல இராணுவ திறன் ஆய்வாளர்களின் ஆலோசனைகளைப் பெற்றே திரைக்கதையை அமைத்தாகத் தெரிவித்துள்ளார். இப்படத்தின் திரைக்கதையாசிரியர் நோ ஒப்பின்ஹெய்ம் (Noah Oppenheim) ஒரு முன்னாள் ஊடக வியலாளர். இவர் என்.பி.சி நியுஸ்க்கு அணு மற்றும் இராணுவ தாக்குதல்கள் பற்றிய செய்திகளை வழங்குபவர். இவர் என்.பி. நியுஸின் தலைவராகவும் இருந்துள்ளார். அதற்கு முன்னாள் என்.பி.சி.-இன் Today Show தயாரிப்பாளராகவும், தலைமை நிர்வாகியாகவும் கடமையாற்றியுள்ளார். ஜோன். எப். கெனடியின் துணைவியார் ஜக்கியை மையப்படுத்திய படமான ஜக்கி படத்துக்கு (இயக்கம் பப்லோ லைறன்) திரைக்கதை எழுதியுள்ளார். வெனிஸ் திரைப்பட விழாவில் சிறந்த திரைக்கதையாசிரியருக்கான விருதையும் பெற்றுள்ளார். ஒப்பின்ஹெய்ம் மிகவும் விரிவாகவும், நுணுக்கமாகவும் திரைக்கதை எழுதியுள்ளார். இதற்கு அவரது ஊடக அனுபவம் பிரதான காரணமாகும். அமெரிக்காவிற்கு கடல்சார்ந்த அணுசக்தி மற்றும் ஏவுகணை பிரயோகம் பற்றி அதிகளவு தெரியாது என்பதனை தனது ஊடக அனுபவத்தினூடாக அறிந்துள்ள திரைக்கதையாசிரியர் அதற்கேற்ப திரைக்கதை அமைத்துள்ளார். திரைக்கதை பார்வையாளர்கள், இங்கு அமெரிக்க மக்கள் மற்றும் கனடிய மக்களும் கூட (அமெரிக்காவில் அணுசக்தி பாதிப்பு ஏற்பட்டால் அது அமெரிக்காவின் அருகில் உள்ள வடக்கில் கனடாவையும், தெற்கில் மெக்சிக்கோவையும் பாதிக்கும். சிக்காகோவிற்கு மிக அருகில் கனடாவுள்ளது) அக்கறையற்றவர்கள் என்ற பார்வையை வெளிப்படுத்துகின்றது.

ஹவுஸ் ஒவ் டைனமற் படம் வெளியாகியுள்ள காலம் முக்கியமானது. அண்மையில் டொனால்ட் ரம்ப் அமெரிக்கா மீண்டும் அணு ஆயுத பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும் என அறிவித்திருந்தார். அதற்கான காரணமாக ரஷ்யாவின் அணு ஆயுத விஸ்தரிப்பை அமெரிக்க அரசு சுட்டிக்காட்டியிருந்தது. இந்நிலையில் நெட்பிளிக்ஸ்ன் தயாரிப்பில் இப்படம் வெளியாகி ஏற்கனவே வெனிஸ் உட்பட்ட திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுள்ளது.

## படம் வெளிப்படுத்தும் அரசியல்:

இப்படத்தால் ஏற்படுத்தப்படும் அணு ஆயத பயம் தேவையானதா ? உண்மையானதா ? அண்மையில் டொனால்ட் ரம்ப் மீண்டும் அணு ஆயுத சோதனை அமெரிக்காவிற்கு தேவை என்ற கருத்துப்பட கருத்து ஒன்றை தெரிவித்திருந்தார். Trump tells Pentagon to resume testing US nuclear weapons. 'Because of other countries testing programs, I have instructed the Department of War to start testing our Nuclear Weapons on an equal basis. That process will begin immediately,' Trump posted.' மற்ற நாடுகள் திட்டங்களைச் சோதித்து வருவதால், நமது அணு ஆயுதங்களை சமமான அடிப்படையில் சோதிக்கத் தொடங்குமாறு போர்த் துறைக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன். அந்த செயல்முறை உடனடியாகத் தொடங்கும்' என்று டிரம்ப் பதிவிட்டுள்ளார்.

இப்படத்திற்கு பின்னால் உள்ள மூன்று அரசியல் கருத்துகள் முக்கியமானவை. முதலாவது நேட்டோ நாடுகள், நாட்டின் பாதுகாப்பிற்கு அந்த அந்த நாடுகளின் வரவு செலவுத் திட்டத்தில் ஐந்து வீதத்தை ஒதுக்கவேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. நேட்டோ நாடுகள் ரஷ்யாவை எதிரி நாடாகக் கருதுகின்றன. ரஷ்யா அணுசக்தியைக் கொண்டுள்ள நாடு. தொடர்ச்சியாக



அமெரிக்காவும், மேற்கு நாடுகளின் ஊடகங்களும் ரஷ்யா வின் அணுசக்திக் கொள்கைகளை விமர்சித்து வருகின்றன. நேட்டோ நாடுகளின் மத்தியில் ஒரு பயத்தையும் ஏற்படுத் தியுள்ளன.

இரண்டாவது வட-கொரியா, சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் அணு ஆயுதங்களை மேலும் தயாரிக்கின்றன என்ற மேற்கின் ஊடக பரப்புரை கள் அதிகளவில் இடம் பெறுகின்றன. அதன் ஓர் அம்சமாக டொனால்ட் ரம்ப்-இன் கருத்தும் அமைந்துள்ளது. ஈரான் மீதான இஸ்ரேல் தாக்கு தல்களுக்கும் அணுசக்தி நிறுவனங்களின் வளர்ச்சி மீதான எதிர்த்தாக்குதல் என அமெரிக் காவும், இஸ்ரேலும் சுட்டிக்காட்டியிருந்தன. முன்னர் ஈராக் மீதும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியே ஈராக்கை அழித்தது.



மூன்றாவது டொனால்ட் ரம்ப்பினால் ஆரம்பிக்கப்படவுள்ள கோல்ட்ன் டோம். இதற்கு பல ரில்லியன் டொலர்கள் செல வாகும். இதில் இணையுமாறு கனடாவையும் டொனால்ட் ரம்ப் வற்புறுத்தி வருகின்றார். இப்படத்திலும் தாக்குதல் நடை பெறும் என கருதப்படும் சிக்காகோ, கனடாவிற்கு மிக அருகில் உள்ள நகரமாகும். இப்படத்தில் அடிக்கடி 'இதற் காகத்தான் 50 பில்லியன் டொலர்களை செலவிட்டோம்' என்ற கருத்து கூறப்படுகின்றது. அமெரிக்க ஏவுகணைப் பாதுகாப் பின் அவசியத்தை இது வலியுறுத்துகின்றது. மேலும் ரம்ப்-இன் கோல்டன் டோம்-இன் அவசியத்தையும் சுட்டிக்காட்டு கின்றது. மேற்கத்தேய ஊடகங்கள் படம் கோல்டன் டோம்-ஐ விமர்சிப்பதாகக் கூறினாலும், இவ்வாறான அச்சத்தை பார்வையாளர் மீது ஏற்படுத்தும்பொழுது, பார்வையாளர்கள் பாதுகாப்பின் அவசியத்தையே உணர்வார்கள்.

Strategic Arms Reduction Treaty (START)-இன் அவ சியத்தை படம் வெளிப்படையாகப் பேச மறுக்கின்றது. இன்று அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்குமிடையில் அணு ஆயுதங் களை கட்டுப்படுத்தும் எந்தவித ஒப்பந்தங்களும் இல்லை. இருக்கும் ஒப்பந்தங்கள் மேம்போக்கானவை. அதே போலவே வட கொரியா மற்றும் சீனாவுடனும் இல்லை. ஏன் அமெரிக் காவும் ரஷ்யா போன்ற நாடுகளை சுட்டிக்காட்டி அணு ஆயுத உற்பத்தியை அதிகரிக்க ஆவன செய்கின்றது. ஐரோப்பா வில் தோன்றியுள்ள அணுசக்தி பயமானது அமெரிக்காவால் ஏற்படுத்தப்பட்டது. கவலையளிக்கும் விதமாக, தென் கொரியா, ஜப்பான் மற்றும் போலந்து உள்ளிட்ட நாடுகள் அணுசக்தி விருப்பங்களைப் பின்பற்றுவது குறித்து வெளிப் படையாகக் கருதியுள்ளன. ஒன்பது அணு ஆயுத நாடுகளான - அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ், இஸ் ரேல், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வட கொரியா ஆகிய வற்றின் கொள்கைகள், கற்பனை செய்ய முடியாத பேரழிவை ஏற்படுத்தும் திறனை அதிகரிக்க கூட்டாக டிரில்லியன் கணக் கான டாலர்களை செலவிடுகின்றன. 'பனிப்போரின் முடிவில், நாம் குறைவான அணு ஆயுதங்களை வைத்திருக்க வேண் டும் என்று நாடுகள் ஒருமித்த கருத்தை எட்டின. அந்த சகாப்தம் இப்போது முடிந்துவிட்டது.

'அணுசக்திப் போரின் உண்மையான ஆபத்துகள் முக்கிய மாக அணுசக்தி அல்லாத நெருக்கடியிலிருந்து ஆயுத மோதலாக பரிணமிப்பதே ஆகும்' என்று ஹார்வர்ட் கென்னடி பாடசாலையின் பேராசிரியர் மத்தியு பன் குறிப்பிடுகின்றார். இவர் அணு சக்தி மற்றும் அதன் அழிவுகள் பற்றிய ஆய்வு களை தொடர்ச்சியாக செய்து வருகின்றார். அவர் மேலும் கூறுகையில்: 'சரியான மனநிலையில் உள்ள எவரும் தெளி வான நீல வானத்திலிருந்து ஒரு பெரிய அமெரிக்க நகரத்தின் மீது ஒரு ஏவுகணையை வீசப் போவதில்லை.' (Matthew Bunn - Professor of the Practice of Energy, National Security, and Foreign Policy at the Harvard Kennedy School.).

இப்படம் தற்போதைய புவிசார் அரசியல் யதார்த்தத்தை பிரதிபலிக்கின்றது. ஆனால் அதன் பின்னால் உள்ள அரசி யல் ஒரு மேற்கத்தேய வல்லரசினை வலிமைப்படுத்துவதாக அமைந்துள்ளது. படம் கூறுவது போல் வரலாற்றில் எப்போ தும் இல்லாத அளவுக்கு அழிவு நாள் கடிகாரம் நள்ளிரவை நெருங்கிவிட்டதா?

படத்தை பார்த்த பின்னர் எழுந்த கேள்விகள் இவை. ஏற் கனவே யப்பானில் அணுகுண்டு வீசுவதற்கு கனடா மற்றும் பிரித்தானியாவின் பங்களிப்புமிருந்தது. மீண்டும் அணுகுண் டினை தீர்மானிப்பது தனி நபராகவிருப்பது ஆபத்தானது. அணு ஆயுதத் தாக்குதலைத் தொடங்க ஒரே அதிகாரம் கொண்ட ஒரு நிர்வாகியே தீர்மானிக்கின்றார். அணு ஆயுதங் களைச் செலுத்துவதற்கு சட்டமன்ற அல்லது அமைச்சரவை அளவிலான ஒப்புதலுக்கான எந்தத் தேவையும் ஒன்பது நாடுகளிலும் இல்லை. ஒரு தனிநபருக்கு இவ்வளவு சக்தி இருக்கும் இந்த சூழ்நிலை ஜனநாயகம் பற்றிய எந்தவொரு கருத்தையும் கேலி செய்கிறது.

சர்வதேச அமைப்பு ஒரு வியத்தகு மாற்றத்திற்கு உள்ளாகும் போது, அணு ஆயுதக் குறைப்பு, மற்றும் ஆயுத பரவல் தடை ஆகியவற்றை நாம் எவ்வாறு மறுபரிசீலனை செய்ய வேண் டும்? அமெரிக்காவில் மற்றும் அணு ஆயுத உற்பத்தி நாடுகளில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான செயல்முறை சீர்திருத்தப்பட வேண்டுமா? அப்படியானால், எப்படி? அணு ஆயுதங்களுக்கான இறுதி இலக்கு என்ன வாக இருக்க வேண்டும்?

அணு ஆயுதங்கள் யாரிடம் இருக்க வேண்டும், எப்படி, எந்த முறையில் இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட வேண்டும், சேமிக்கப்பட வேண்டும், சோதிக்கப்பட வேண்டும்? இதனை யார் தீர்மானிப்பது? அது அமெரிக்காவிடம் மட்டும் இருக்க வேண்டுமெனில் உலகமே ஆபத்தில் உள்ளது.

யதார்த்தம் சொல்ல முடியாத அளவுக்கு கொடூரமானது, மற்றும் தாங்க முடியாத அளவுக்கு அபத்தப



rathan@thaiveedu.com

# கன்னிக்கொள்ளி

– பஞ்சகல்யாணி

மூடு பெட்டி ஒன்றுடன் மெல்ல மெல்ல நடந்து கடைக்குப் போய்க்கொண்டிருந்த அன்னம்மாக்கா, சுற்றும் முற்றும் பார்ப்பதும் வேலிக்குள்ளே ஒதுங்குவதுமாகச் சென்றுகொண்டிருந்தா. சந்தியிலுள்ள கடைக்குப் போவதற்குள் நெஞ்சு எத்தனையோ தரம் அடித்து ஓய்ந்தது அவவிற்கு.

அளவான உயரம், சிவந்த நிறம், அறுபது வயதைத் தாண்டியும் அழகாக இருந்தா. அதற்காகத் தலை நிமிர்ந்து மிடுக்காக நடந்ததில்லை. தலையைக் குனிந்து, உதட்டில் ஒரு புன்னகையைக் காவியபடி திரிந்தா. தெருவில் அவவின் கண்களை நேருக்கு நேர் சந்தித்தோர் இல்லை எனலாம்.

ஐந்தாறு முட்டையை வித்து, அரிசி வாங்கி உலை வைக்கும் அன்றாடம் காய்ச்சியாக அவ வாழ்க்கை கழிந்தது. ஆடு ஒன்றும் அவவுடன் வாழ்ந்து வந்தது. கடையாற் திரும்பும் போது எப்போதும் அவரின் கையில் முசுட்டைக் கொடியோ, அன்றிக் கொவ்வையோ, அல்லாவிடின் வாதநிவாரணியோ இருக்கும். தனக்குரிய பங்கை எடுத்துவிட்டு, மீதியை அந்த ஆட்டிற்குக் கொடுப்பார்.

தாய் பழக்கிய பன்ன வேலையை அவர் கைவிடவில்லை. பனங் கட்டிக் குட்டான், தடுக்கு, நீத்துப்பெட்டி, தட்டுப் பெட்டி, மூடுபெட்டி எல்லாம் இழைத்து விற்பார். அந்தக் காசில உடுதுணி வாங்குவார்.

ஊர்ச் சோலிகளில் அவவைக் காணமுடியாது. உறவினர் வீடுகளிற்கும் அடிசாராய்ப் போனதில்லை. கோவிலிற்குக்கூடப் போவதில்லை. சிறுவர்கள் அவவைச் சீண்டி விளையாடினார்கள். செத்துக் கிடந்த பாம்பைக் காட்டி 'அன்னம்மாக்கா இது என்ன பாம்பு ?' எனக் கேட்கவும், அப்பாவித்தனமாகக் 'குட்டிப் பாம்பு' என்றபடி போனா அவ.

இரண்டு பெண் சகோதரிகள். நிறம் குறைவானவர்கள். இவவைப் பெண்காட்டி அவர்கள் திருமணம் செய்தார்கள் என்பது ஊரிற் பரவலான கதை. அப்படியே இவவின் கலியாணம் நின்று போய்விட்டது. தாய் தகப்பனும் கண்ணை மூட, இவ தனிச்சுப் போய்விட்டா.

நமசி என்ற நமசிவாயம் அன்னம்மாக்காவின் பக்கத்து வீட்டுக்காரன். அவவை விட ஐந்தாறு வயது இளையவர், எங்கோ போக வெளிக்கிட்டுத் திரும்பி வந்து தன் முற்றத்தில் நின்று சத்தம் செய்துகொண்டிருந்தார். 'இந்த ஊரில ஓரிடமும் வெளிக்கிடேலாது, அடிப்படலையுக்க உந்தக் 'கன்னிக்கொள்ளி' அன்னம்மா இருக்கிறாள், மூலை வளவுத் தேவி எப்பவும் வெறுங்கடகம், வெறும் வாளியோடைதான் திரிவாள், முன் வீட்டுக்காரி விளக்குமாறோட நிப்பாள் இப்படிப் புரியனைத் திண்டதுகள், கொண்டோடியள் என்று முளுவியளத்துக்கு உதவாததுகள் எல்லாம் தெருவழிய திரிஞ்சால் நாங்கள் ஓரிடமும் போறேல்லயோ ?' என்பது நமசியின் கேள்வி.

அன்னம்மாக்காவிற்குக் காது செவிடாகிவிடவில்லை. ஆருக்கும் இடைஞ்சல் செய்ய விரும்பாதவர். ஒருமாதிரி ஒட்டி ஒழிஞ்சு வாழ்ந்து, ஒருநாள் செத்தும் போய்விட்டா. அண்டைக்குத்தான், எல்லோரும் விலகி வழிவிட, தெரு நடுவால் சுடலைக்குப் போய்க் கொண்டிருந்தா அன்னம்மாக்கா.






Panchakalyany@thaiveedu.com



# மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரவேண்டிய ஆசிரியர்கள்

– அகமட் பிஸ்தாமி

ஆசிரியர்கள் இடம் சார் பெற்றோர்கள் logo parents என அழைக்கப்படுவார்கள். பெற்றோரால் தத்தமது பிள்ளைகளை முழு ஆளுமையாக உருவாக்க முடியாது என்பதற்காகத்தான் பாடசாலை கட்டமைப்பு உருவாக்கப்பட்டு ஆசிரியர் பணி தோன்றி இருக்கின்றது. ஆசிரியர் பணியின் வரலாற்றை உற்று நோக்கினால் எத்தகைய தார்மீக கடப்பாடுகளை சுமந்தவர்களாக உலகிலே ஆசிரியர்கள் மாறி இருக்கின்றார்கள் என்பதனைக் காண முடியும்.

சிங்கிஸ் ஐத்மாத்தவ் எழுதிய ‘முதல் ஆசிரியர்’ எனப்படும் ரஷ்ய மொழியிலான நாவல் அத்தகைய ஒரு பார்வையை எமக்கு தருகிறது. இரா நடராசன் எழுதிய ‘ஆயிஷா’ எனும் நூல் கூட பேராற்றல் மிக்க ஒரு சிறுமி எத்தகைய சாதனைகளைக் கனவுகளுடன் வாழமுற்படுகிறாள் என்பதனை எமக்கு சொல்ல முனைகிறது. ஜப்பானிய நூல்களும் நாவல்களும் அந்தந்த நாடுகளில் ஆசிரியர்கள் எத்தகைய முன்னெடுப்புகளைச் சுயமாக எடுத்து தமது நாட்டுக்காகச் செய்கின்ற செஞ்சோற்றுக் கடனாக ஆசிரியப் பணியை ஆற்றுகிறார்கள் என்பதனைக் கூறிநிற்கிறது.

இனம், மொழி, சமயம், குலம், கோத்திரம் என்பதற்கு அப்பால் நாம் ஆற்றுகின்ற கல்விப் பணிக்காக அல்லது அரச பணிகளுக்காக எமது ஓய்வூதிய காலத்தில் பெறுகின்ற ஓய்வூதியத் தொகை எமக்கு நியாயமானதாக அமைய வேண்டுமாயின் நாம் எம் பணிக் காலத்தில் மிகுந்த ஈடுபாட்டோடும் அர்ப்பணிப்போடும் அந்த

thanavishnu@gmail.com

**ஒவ்வொரு பிள்ளையினதும் அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தை மாற்றம், சமூக, சமய, மனவெழுச்சிகளை வெளிக்கொணரும் வகையில் அவரைப் பரிபூரண ஆளுமையாக ஆரோக்கியமான சிந்தனை மிக்கவராக மாற்றுகின்ற மகத்தான பணி என்பதனை ஆசிரியர்கள் உணர வேண்டும்.**

ஆசிரியர் பணியை, அறப்பணியை ஆற்ற வேண்டும். அதுவே, எமக்கு உளத் திருப்தியைத் தரும். நாம் எமது ஓய்வு காலத்தில் அரசு தருகின்ற அந்த ஓய்வூதிய நிதியைப் பயன்படுத்துவதில் எமக்கு மனத்திருப்தி ஏற்படும். இல்லாத பட்சத்தில் எமது கடமைக் காலத்தில் கடமையில் கவனஞ் செலுத்தாமல் கண்ணும் கருத்துமாக இருக்காமல் காலம் கடத்தி விட்டு ஓய்வூதியத்தின் பிறகு அப்பணத்தை நாம் பயன்படுத்துவது எந்த அளவு தூரம் மனசாட்சிக்கு விரோதமாக அமைகின்றது என்ற விடயத்திலும் நாம் கவனஞ் செலுத்த வேண்டும்.

உலகத்தின் செழுமைக்கும் முழுமைக்கும் வளமூட்டலுக்கும் பணியாற்றும் அனைத்துப் பணிகளையும் விடவும் ஆசிரியர் பணியே மகத்தானது என்பதில் யாரும் முரண்பட மாட்டார்கள். காரணம் அடுத்தவர்களின் எதிர்காலத்துக்காக ஆற்றப்படக்கூடிய அர்ப்பணிப்பு மிக்க அறப்பணியாக, அருந்தொண்டாக, சேவையாகத்தான் ஆசிரியப் பணி அமைகிறது. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். ஒரு வகையில் இது உயர்ந்த பணி; உன்னத பணி; தம்மைத்தாமே அழித்துக்கொண்டு உலகிற்கு ஒளியூட்டும் மெழுகுவர்த்திகள்போல ஆசிரியர்களும் தம்மை அப்படியே அர்ப்பணித்து தியாகம் செய்து அடுத்தவர்கள் சிறப்பாக உயர்ந்து கண்ணியமாக வாழ வேண்டும் என்பதற்காகப் பாடுபடக்கூடிய பணியை ஆற்றுகின்றனர். அந்தகார இருளில் இருந்து விலகி நல்லதை கெட்டதைப் பிரித்தறிந்து சிறந்ததைத் தெரிவு செய்து தமது நிகழ்காலம் மற்றும் எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்க பாதை அமைத்துத் தருகின்ற பணிதான் ஆசிரியர் பணி.

இது வெறுமனே பரீட்சையை மையமாகக் கொண்டு புள்ளிகளை ஈட்டுவதை நிறைவேற்றுகின்ற தொழிற்சாலை அல்ல. ஒவ்வொரு பிள்ளையினதும் அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தை மாற்றம், சமூக, சமய, மனவெழுச்சிகளை வெளிக்கொணரும் வகையில் அவரைப் பரிபூரண ஆளுமையாக ஆரோக்கியமான சிந்தனை மிக்கவராக மாற்றுகின்ற மகத்தான பணி என்பதனை ஆசிரியர்கள் உணர வேண்டும். ஏனைய வாண்மைத்துவ பணியாற்றுகின்றவர்கள் பற்றி superiority complex mentality-உடன் இருந்து கொண்டு தாம் ஆற்றுகின்ற ஆசிரியர் பணி குறித்து Inferiority complex mentality-உடன் ஆசிரியர்கள் இருப்பார்களேயானால் அதைவிட பிழையான நிலைப்பாடு வேறு எதுவும் இருக்காது.

ஆசிரியர்கள் தமது பணியின் பெருமையை பெருமிதத்தை பெறுமானத்தை உணர்வார்களாகின் எந்த ஒரு மாணவனையும் அவர்கள் அற்பத்தனமாகக் கைவிட்டு விட மாட்டார்கள். எல்லா மாணவர்களிடமும் காணப்படக்கூடிய சகல திறமைகளையும் ஆற்றல்களையும் இனம் கண்டு சமூகத்துக்கும் சமுதாயத்துக்கும் பயன் தரக்கூடியவர்களாக அவர்களை உருவாக்கி விடுவார்கள். அதனைத் தமது தார்மீகக் கடமையாக நினைத்து அல்லும் பகலும் அயராது பாடுபடுவார்கள். அதிலே புளகாங்கிதம் அடைவார்கள்.

ஆசிரியர் தொழில் என்பது முழுக்க முழுக்க மனித உணர்வோடு, சிந்தனையோடு, மூளையோடு, நாகரிகத்தோடு, எதிர்காலத்தோடு, நிம்மதியான வாழ்வோடு தொடர்புபடுகின்ற பணியாக இருக்கின்றது.

நமக்கு இறைவன் அருளியிருக்கின்ற அருட்கொடைகள், திறமைகள், ஆற்றல்கள் ஆளுமைகள் போன்றவற்றை முழுமையாக வெளிக்கொணர்ந்து, அதனைச் சமூகத்தின் எழுச்சிக்கும் முயற்சிக்கும் நாகரிக மேம்பாட்டுக்கும் வளமூட்டலுக்கும் பயன்படுகின்ற வகையில் வழிகாட்டுகின்ற உயர்ந்த உன்னதமான பணியைத்தான் ஆசிரியர்கள் செய்கின்றார்கள் என்பதனை அவர்களுக்கும் அடிக்கடி நினைவூட்ட வேண்டியிருக்கின்றது. இதுகூட அவர்களை உயிர்த் துடிப்புடன் வகுப்பறையில் பணியாற்ற மகிழ்ச்சிகரமான ஒரு வகுப்பறையை கட்டி எழுப்ப தூண்டுகோலாக (inspiration) அமையும்.

ஆசிரியர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது. உலகிலேயே சாதனை புரிந்த அசாதாரண ஆற்றல்கள் பெற்ற மனிதர்களுக்கும் இருந்தது ஒரே ஒரு மூளை தான் என்பது தான் அது. ஸ்டீவ் ஜொப்ஸ், மாக்ஸகர்பர்க், எலோன் மாஸ்க், ஜேம்ஸ் கமரன் போன்ற சமகால பிரபலங்களும் ஒரே ஒரு மூளையைத்தான் பெற்றிருந்தனர். அதனைக் கொண்டுதான் அவர்கள் இந்த முழு உலகத்தையும் தம் பக்கம் இந்த நிமிடம் வரை வைத்திருக்கின்றனர். அவர்களது மூளைகளுக்கும் எமக்கு பொறுப்பு தரப்பட்டிருக்கின்ற பிள்ளைகளின் மூளைகளுக்கும் எந்த வித்தியாசமும் அளவிலோ அதன் பரிமாணத்திலோ கட்டமைப்பிலோ இல்லை. அவற்றைப் பயன்படுத்துகின்ற விதம், அவர்களுக்கு கிடைக்கின்ற வழிகாட்டல்கள், தூண்டுதல்கள், ஊக்குவிப்புக்கள், வெகுமதிகள் போன்றனதான் அவர்களுடைய மூளையில் செல்வாக்குச் செலுத்துகிறது. இவர்கள் சிறந்த வழிகாட்டல்கள், ஆலோசனைகளின் அடிப்படையில் தத்தமது மூளையை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி இந்த உலகையே மாற்றி அமைத்தார்கள்.



எனவே, ஆசிரியர்களும் தமக்கு வழங்கப்பட்டிருக்கின்ற மாண வர்களுடைய உள்ளார்ந்த திறமைகளை (inner skills and abilities) இனங்கண்டு அவர்களின் இலக்கை நோக்கி வழிபடுத்த வேண்டும். அவர்களைச் சிந்திக்க வைக்கவேண்டும். அவர்க ளுக்கு நுட்பங்களை (techniques), நுணுக்கங்களை (strategies), வழிகாட்டல்களை (guidance) ஆசிரியர் ஒருவர் சரியான முறையில் வழங்கும் பட்சத்தில் மிகப் பிரமாண்டமான (giant change) மாற்றங்களை இந்த புவிப்பந்திலே மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கிவிடலாம். அத்தகைய பெரும் பாய்ச்சல் ஒன்றைத்தான் இன்றைய இருபத்தொராம் நூற் றாண்டு அடைந்திருக்கின்றது. தொழில்நுட்பம் கடுகதி வேகத் தில் நொடிக்கு நொடி முன்னேற்றம் கண்டு வருகின்றது. செயற்கை நுண்ணறிவு AI தொழில்நுட்பம் உலகை ஆட்டிப்ப டைக்கின்றது. ஆக ஆசிரியர்கள் உடனுக்குடன் தம்மை தாமே மாற்றி புதுமையைக் கண்டுபிடிக்கக்கூடியவர்களாக மாற வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கான முன்மாதிரி களாக தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும். மாணவர்களை உடனடியாகக் கவரப்படக் கூடிய வகையில் ஆசிரியர்கள் தம் முடைய அகப்புறத் தோற்றங்களை மாற்றிக்கொள்ள வேண் டும். ஆளுமைகளை உருவாக்கும் ஆசிரியர் தம் கற்பித்தல் பாணிகளை மாற்றிக் கொள்ளவேண்டும். அத்தோடு, மாண வர்களை கையாளுகின்ற முறைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். எனவே, ஆசிரியர்கள் தம்மிடம் கற்க வருகின்ற மாணவர்களை மிகச் சரியாக நேர்மையோடு வழிகாட்ட வேண்டும் என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்த மனோநிலைக்கு ஆசிரியர்கள் மாறினால் இந்த உலகம் தொழில்நுட்ப ரீதியாக மாத்திரமன்றி மானசிகரீதியாகவும் மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டுகொள்ளும். மலர இருக்கும் புத்தாண்டில் நாம் நுழைய இருக்கும் வகுப்பறைகளை மிக வும் ஆக்கத்திறன் மிக்கதாகவும் ஆற்றல் கொண்டதாகவும் ஆகர்ஷணம் மிக்கதாகவும் மாற்றிக்கொள்ள வேண்டியது புது ஆசான்களின் பணியாகும். காலத்திற்கு ஏற்ப, புதிய கல்வித் திட்டத்திற்கு ஏற்ப மாற வேண்டியது எம் கட்டாய கடமை யாகும். எமக்கு முன்னால் அப்பணி இன்று சற்று விரிந்தே காணப்படுகின்றது.



bisthamy.ahamed@thaiveedu.com



## எஸ்.கே. விக்னேஸ்வரன்

# பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

8

## விமர்சனம்: ஒரு புதிய அணுகுமுறை

### *வாழ்வின் படிப்பினைகள்:*

பெற்றோரின் விமர்சனங்கள் பெரும்பாலும் உதவியளிப்ப வையாக இருப்பதில்லை அவை, கோபம், வெறுப்புணர்வு, பழிவாங்கும் உந்துதல் போன்றவற்றை உருவாக்குகின்றன. இதைவிட மோசமான விளைவுகள்கூட இருக்கின்றன. பதின்ம வயது இளைஞன் தொடர்ச்சியாக விமர்சிக்கப்படும்போது, அவன் தன்னைத்தானே குறைத்து மதிப்பிடவும், மற்றவர்க ளிடம் பிழைபிடிக்கவும் கற்றுக்கொள்கிறான். அவன், தனது சொந்த மதிப்பைச் சந்தேகிக்கவும், மற்றவர்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடவும் கற்றுக்கொள்கிறான். அவன் ஏனைய வர்களைச் சந்தேகிக்கவும் தனிப்பட்ட ரீதியில் தனக்குத் தவறாக ஏதோ நடக்கப்போகின்றது என்ற எச்சரிக்கையுடன் இயங்கவும் கற்றுக்கொள்கிறான். உண்மையில் பெரும் பாலான விமர்சனங்கள் தேவையற்றவை. வாகனப் பாதையில் நாம் தவறான திருப்பதில் திரும்பி, நாம் போகவேண்டிய வழியைத் தவறவிடுகின்ற சமயத்தில், நமக்குத் தேவைப்ப டுவது விமர்சனம் அல்ல. வாகனம் ஓட்டும் திறன் பற்றிப் பகுப்பாய்வு செய்வதோ அதை மதிப்பிடுவதோ ஒருபோதும் அந்த நேரத்தில் உதவியாக இருக்காது. நமக்குத் தேவையானதெல்லாம் தெளிவான வழி காட்டுதலைத் தரக்கூடிய நட்புணர்வுள்ள நபர் மட்டுமே.

‘நீங்கள் ஏன் அந்தத் தவறான திருப்பத்தில் திரும்பினீர்கள்?’
‘அடையாளங்களைக் காணவில்லையா?’
‘உங்களால் வாசிக்க முடியவில்லையா?’
‘ஒருவேளை உங்களுக்குக் கண்ணாடி தேவைப்படலாம்?’
‘ஏன் திரும்புவதற்கு முன்பு நீங்கள் யோசித்திருக்கக் கூடாது?’

போன்ற கேள்விகள் கேட்கப்படு வது ஒருபோதும் உதவியாக இருக் காது.

பதின்நான்கு வயதான ‘எட்’, தமது வீட்டிலுள்ள ‘காரை’த் தானே கழுவு வதாக தனது அப்பாவிடம் ஒப்புக் கொண்டிருந்தான். ஆனால், பிறகு ஏனோ அதைச் செய்ய மறந்துபோய்விட்டான். கடைசி நேரத்தில் ஞாபகம் வந்ததும் உடனே அந்த வேலையைச் செய்ய முயற்சித்தான்.



அப்பா: காருக்கு நிறைய வேலை செய்ய வேண்டிய தேவை இருக்குது. குறிப்பாகக் காரின் மேல் பக்கமும் இடது பக்கமும் நீங்கள் எப்பவானாலும் செய்ய முடியும்.

மகன்: இன்றிரவு நான் காரில் வேலை செய்ய முடியும் அப்பா.

**அப்பா:** நன்றி.

மிகவும் விமர்சனரீதியான அணுகுமுறையைக் கொண்ட ஒரு ‘இயக்குனரின் கைகளில்’ இந்த நிகழ்வு இப்படி ஒரு நாடகமா கக்கூட மாறியிருக்கலாம்.

**அப்பா:** நீங்கள் காரைக் கழுவினீர்களா?

**மகன்:** ஆம், அப்பா.

**அப்பா:** நீங்கள் உண்மையாகத்தான் இதைச் சொல்கிறீர்களா?

**மகன்:** நிச்சியமாக, நான் உண்மையாகத் தான் சொல்கிறேன்!

**அப்பா:** பிறகு ஏன் கார் இவ்வளவு அழுக்காக இருக்கிறது? முன்பு இருந்ததை விட இப்ப அது, அவ் வளவு மோசமாகத் தெரிகிறது!

**மகன்:** ஆனால் நான் அதைக் கழுவினேன்!

**அப்பா:** ‘நீங்கள் இதைத்தான் கார் கழுவுதல் என்று சொல்கிறீர்களா? நீங்கள் எப்போதும் போல விளை யாடியிருக்கிறீர்கள். உங்களுக்கு அது ஒரு வேடிக்கை!, விளை யாட்டு!, நீங்கள் விரும்புவது அவ் வளவுதான்! உந்தப் போக்கிலேயே

உங்கள் வாழ்க்கையைக் கடந்து செல்ல முடியும் என்று நினைக்கிறீர்களா? இப்படியான சொதப்பல் வேலையோடு, நீங்கள் ஒரு நாள்கூட ஒரு வேலையிலும் நிண்டுபிடிக்க மாட்டீங்கள். நீங்கள் ஒரு பொறுப்பற்ற ஆள்... ஓம்... நீங்கள் அப்படித்தான் இருக்கிறியள்!

## பயனுள்ள விமர்சனம்:

ஆக்கபூர்வமான விமர்சனத்தில் ஒரு முக்கிய அம்சம் இருக்கிறது. அதாவது ஒரு சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவது. பயனுள்ள விமர்சனம் ஒருவரது ஆளுமையை நோக்கிச் செய்யப்படுவதில்லை. அது ஒரு கடினமான நிகழ்வை, சுமுகமாகக் கையாள்கிறது.

அது ஒருபோதும் அந்த நபரைத் தாக்காது. அது அவரது நிலையைப் பற்றி மட்டும் பேசும்.

பதினாறு வயதான ஃபீலிக்ஸ், இரசாயனவியல் பரீட்சையில் தோல்வியடைந்தபோது இரண்டாம் தவணையில் அவன் நிலை தொடர்பாக, அவரது தந்தை பதற்றமடைந்தார். அவர் ஃபீலிக்ஸை தன்னுடன் பேசுவதற்கு அழைத்தார். ஆனால் அவர் ஒரு விஷயத்தில் கவனம் செலுத்தினார்: 'இந்தக் கடினமான பாடத்தில் இவனுக்கு உதவ என்ன செய்ய முடியும்?'

அவர் கடந்த காலத்தைப் பற்றி விவாதிக்கவோ அல்லது எதிர்காலத்தைப் பற்றிக் கணிக்கவோ அதுபற்றிப் பேசுவதற்கு முயலவோ, ஃபீலிக்ஸ் மீது பழி சுமத்தவோ அல்லது இதனால் வரப்போகும் விளைவுகளைச் சுட்டிக்காட்டி அச்சுறுத்தவோ இல்லை. அவர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் கையாளும் ஒரு மனப்பான்மையைக் கடைப்பிடித்தார். 'இது எங்களுக்கு ஒரு பிரச்சினையாக வந்து சேர்ந்திருக்கிறது. நாம் இதுக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிப்போம்.'

## பயனற்ற விமர்சனம்:

பெற்றோராக நாம் திறம்பட செயல்படுவதற்கு, எமது குழந்தைப் பருவத்திலிருந்து ஆழமாகப் பதிந்த சில பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். கடந்த காலத்தில் நடந்ததைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான், அதையே மீண்டும் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இது போன்று குருட்டுத்தனமான, திருப்பித் திருப்பிச் செய்வதைத் தவிர்ப்பதே எங்கள் நோக்கம். இதை, இதே மாதிரியான ஒரு சூழலில் நடந்த பெற்றோர் மத்தியிலாக கலந்துரையாடல்களைப் பின்வரும் பகுதிகள் விளக்குகின்றன:

**திருமதி. ஏ:** நான் கோபப்படும்போது, சில சொற்றொடர்கள் என் மனதில் முழுமையான வேகத்தில் பாய்ந்து வந்துவிடுகின்றன. நான் அவற்றை எழுதிப் படிக்க வேண்டியதில்லை. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு என் அம்மா எனக்குப் பயன்படுத்திய அதே சொற்றொடர்களை நானும் அதே தொனியுடன் பயன்படுத்துகிறேன்.

**திருமதி. பி:** என் அப்பா என்னை 'முட்டாள்' என்று அழைப்பார், எனக்கு அது வெறுத்தது இப்போது என் மகனுடன் நானும் அதே அடைமொழியைத்தான் பயன்படுத்துகிறேன். எனக்கு அது பிடிக்கவே இல்லை. நான் அதைச் செய்யும்போது எனக்கே கூட என்னைப் பிடிக்காது.

திருமதி. சி: நான் விமர்சிக்கப்படுவது எனக்கு மிகவும் பழக்கமாகிவிட்டது. அதனால் அது எனக்கு இயல்பாகவே வருகிறது. நான் குழந்தையாக இருந்தபோது என் அம்மா எனக்கு எதிராகப் பயன்படுத்திய வார்த்தைகள் எவையோ அவற்றையே நானும் பயன்படுத்துகிறேன். நான் ஒருபோதும் எதையும் சரியாகச் செய்யவில்லை. ஆனால் அவள் எப்போதும் என்னை மீண்டும் மீண்டும் அவற்றைச் செய்ய வைத்தாள். நானும் என் குழந்தைகளுடன் அப்படித்தான் நடந்து கொள்கிறேன்.

**திருமதி. டி:** என் பெற்றோரிடம் மூன்று மொழிகளிலும் ஏராளமான 'அவமானப்படுத்துகின்ற' வார்த்தைகள் இருந்தன. அவர்கள் அவற்றை எனக்குத் தாராளமாகக் 'கொடுத்தார்கள்'. ஆனால் அவற்றை என் குழந்தைகள் மீது திணிக்காமல் இருக்க நான் கடுமையாக முயற்சி செய்கிறேன். ஆயினும் நான் கோபப்படும்போது என்னால் அவ்வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

**திருமதி. இ:** என் அம்மா ஒரு பாடகி. அவர் கோபப்படும்போது இத்தாலிய மொழியில் உள்ள அவமானப்படுத்தும் பாடல்களைப் பாடுவார். அது எங்களைப் பைத்தியமாக்கியது. ஆயினும் எனக்கே ஆச்சரியம் தரும் வகையில், இத்தாலிய மொழியிலும் ஆங்கிலத்திலும் கூட, என் மகனை அவமதிக்கும் வகையிலான பாடல்களை நானே என்னை அறியாமல் பாடுவதை உணர்ந்திருக்கிறேன்.

உண்மையில், நாம் எல்லோரும் உடனடி அவமதிப்புக்கான தனிப்பட்ட ஒரு 'தொகுப்பையே நமக்குள் சுமந்துகொண்டு இருக்கிறோம். நமது கடந்த காலத்தின் இந்த நினைவுச் சின்னங்கள் ஒரு தேவையற்ற சுமை. கிண்டல், ஏளனம் என்பவை இல்லாமல் நாம் தொடர்பாடலை மேற்கொள்ளக் கற்றுக்கொள்ளவேண்டும். பெற்றோருக்கும் பதின்ம வயதினருக்கும் இடையிலான உரையாடல்களில் கடுமையான கருத்துகளுக்கு இடமில்லை. கிண்டல் செய்வது, வெறுமனே வெறுப் பைத் தூண்டுவது உடனடியான எதிர்த் தாக்குதல்களையும் தூண்டிவிடும் ஆபத்தை உண்டுபண்ணும்.

பதினாறு வயது ஸ்டான்லி கூறுகிறார், 'என் அப்பாவுக்குக் கிண்டல் செய்யும் திறமை நிறைய இருக்கிறது. அவருடைய நாக்கு ஒரு சவுக்கைப் போன்றது. ஒரு மாதத்தில் நீங்கள் கட்டியதை ஒரு நிமிடத்தில் அவர் உடைத்து விடுவார். கடந்த வாரம், நான் எங்கள் பாடசாலையின் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றேன்.



tg.theeban@gmail.com

நான் இதை மிகவும் மகிழ்ச்சியான ஒரு சம்பவமாக உணர்ந்தேன். எனக்கு வந்த மகிழ்ச்சியில் நான் உலகத்தின் உச்சியில் இருந்தேன். நான் என் தந்தையிடம், 'அப்பா, நான் எங்கள் டென்னிஸ் அணியின் கப்டனைத் தோற்கடித்துவிட்டேன்' என்று கூறினேன். ஆனால் என் அப்பாவோ அவமதிப்பு நிறைந்த தொனியில், 'அவரென்ன, ஆரோ ஒரு கப்டன் தானே!' என்று பதிலளித்தார். அந்த நேரத்தில், எனக்கு விசர் பிடித்தது போல் கடுங்கோபம் வந்தது. வந்த அவ்வளவு வெறுப்புடனும், ஆத்திரத்துடனும், அவர் அருகில் இருக்கவே பயந்தேன். வந்த கோபத்தில் 'நீங்களும் ஆரோ ஒரு அப்பா தான்' என்று கத்திவிட்டு வெளியே ஓடிவிட்டேன்.'

## விமர்சனமும் சுயகௌரவமும்:

ஆளுமை, குணநலன்கள் என்பவற்றை விமர்சிப்பது ஒரு பதின்ம வயதினரைப் பொறுத்தவரை, அவருக்குத் தன்னைப் பற்றிய எதிர்மறையான உணர்வுகளைத் தருகிறது. ஒருவரது ஆளுமையுடன் இணைக்கப்பட்டுச் சொல்லப்படும் தவறான பெயரடைச் சொற்கள், பேரழிவை தரக்கூடியது. நாம் நமது பதின்ம வயதினரை 'முட்டாள்' அல்லது 'விகாரமான' அல்லது 'அசிங்கமான' என்ற அடைமொழிகளுடன் அழைக்கும் போது அவர்களது உடலிலும் ஆன்மாவிலும் எதிர்வினைகள் எழுகின்றன. அவர்கள் வெறுப்புடனோ, கோபத்துடனோ, பழிவாங்கும் எண்ணங்களுடனோ எதிர்வினையாற்றுகின்றனர். பின்னர் அவர்கள் தமது விரோதத்தைப் பற்றிய குற்ற உணர்ச்சியுடன் செயல்படுவதும் தண்டனையைக் கோருவதும்கூட நடக்கக் கூடும். ஆயினும் அவரது செயல்கள் விமர்சனம், தண்டனை மற்றும் பழிவாங்கும் தன்மையுடனான மற்றொரு சுழற்சிக்குக்கூட வழிவகுக்கலாம். இவ்வாறுதான், குடும்ப வாழ்க்கையை சித்திரவதையாக மாற்றும் எதிர்வினைகளின் சங்கிலி உருவாக்கப்படுகிறது.

> **"ஒருவரது ஆளுமையுடன் இணைக்கப்பட்டுச் சொல்லப்படும் தவறான பெயரடைச் சொற்கள், பேரழிவை தரக்கூடியது. நாம் நமது பதின்ம வயதினரை 'முட்டாள்' அல்லது 'விகாரமான' அல்லது 'அசிங்கமான' என்ற அடைமொழிகளுடன் அழைக்கும் போது அவர்களது உடலிலும் ஆன்மாவிலும் எதிர் வினைகள் எழுகின்றன."**



மீண்டும் மீண்டும் 'முட்டாள்' என்று உணர வைக்கப்படும் ஒரு பதின்ம வயதினர் அத்தகைய மதிப்பீட்டை உண்மையென்று ஏற்றுக்கொள்கிறார். ஏளனத்திலிருந்து தப்பிக்கலாம் என்ற நம்பிக்கையுடன் அவர் செய்யக்கூடிய அறிவுசார் முயற்சிகளை அவர் கைவிடவும் கூடும். போட்டி என்று வந்தால் அதில் தோல்வியும் வரலாம் என்பதால், பாதுகாப்பான வழி அதில் பங்குபற்றாமல் இருப்பதே என்று அவர் எண்ணலாம். இதனால் அவர் பள்ளியில் ஒருபோதும் 'தன்னார்வ'த் தொண்டு நடவடிக்கைகளில் இறங்க மாட்டார். அவர் பரீட்சைகளைத் தவிர்ப்பார்; வீட்டுப்பாடங்களைத் தவிர்ப்பார், இறுதித் தேர்வுகளுக்கு முன்பு அவர் நோய்வாய்ப்படுவார். அவர் என்றென்றைக்கும் இப்படியான தவறான கருதுகோளை மனதில் சுமந்தபடி அதன்படி நடப்பவராக இருக்கலாம்: 'நான் போட்டிகளில் இறங்க முயற்சி செய்யாவிட்டால், தோல்வியடையத் தேவையில்லை' என்பது அவருக்குப் பாதுகாப்பான ஒரு செயலாக இருக்கலாம். 'விகாரமானவர்' என்று திரும்பத் திரும்ப அழைக்கப்படும் ஒரு பதின்ம வயதினர் இந்த மதிப்பீட்டை, தனது சுய பிம்பத்துடன் இணைத்துக்கொள்கிறார். அவர் விளையாட்டுப் போன்ற பாடசாலை நடவடிக்கைகள், சுறுசுறுப்பு தேவைப்படும் வேலைகள் போன்றவற்றில் பங்குபற்றுவதிலிருந்து ஒதுங்கிக் கொள்கிறார். தான் ஒருபோதும் அவர்கள் மத்தியில் கவனத்துக்குரிய ஒருவராக இருக்க முடியாது என்று அவர் உறுதியாக நம்புகிறார்.

பதினாறு வயதான தியோடர் கவனக்குறைவாகக் கம்பளத்தின் மீது 'பெயின்றை' (paint) ஊற்றியபோது, அவனது பெற்றோருக்குக் கோபம் வந்துவிட்டது.

**அம்மா:** 'பெயின்ரில்' கவனமாக இருக்க வேண்டும் என்று எத்தனை முறை நான் உன்னிடம் சொன்னனான்? நீ எப்ப பார்த்தாலும் வேலையளைக் குழப்பி விடுகிறாய்!

**அப்பா:** (வெறுப்புடன்): அவனால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. அவன் ஒரு சரியான சோம்பேறி! அவன் எப்பவுமே இப்படித்தான் இருந்தான்; இனிமேலும் இப்படித்தான் இருப்பான்.

இந்த ஏளனத்தின் விலை, 'பெயின்ற்'றின் விலையை விட அதிகமானது என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. நம்பிக்கை இழப்புக்கு ஒரு விலையை மதிப்பது எப்படி? விபத்துக்கள் ஒருபோதும் அவமானங்களைத் தூண்டக்கூடாது. அவரது ஆளுமையைக் கெடுக்காமல் அந்த 'பெயின்ரைச்' சுத்தம் செய்வது நல்லது.

## 'பிசின்' சிந்திவிட்டது, ஒரு துணி எடுத்துக் கொள்ளுங்கள்:

பதினைந்து வயதான மகள், கம்பளத்தின் மீது பிசினைச் (glue) சிந்தி விட்டபோது, அம்மா அவளிடம் கூறினாள்: 'ஓ, பிசின் சிந்திப்போட்டுது. ஒரு துணியையும் கொஞ்சம் தண்ணீரையும் எடுத்துவா.'

'பிசின் நல்லாய்ச் சிதறிப்போய் இருக்குது. அதைக் கம்பளத்திலிருந்து அகற்றுவது கடினம்' என்று கூறியபடி மகளுக்குக் கொட்டுண்ட பிசினைச் சுத்தம் செய்ய அம்மா உதவினாள். மகள் சொன்னாள்: 'மன்னிச்சுக்கொள்ளுங்கோ அம்மா, நான் இன்னும் கொஞ்சம் கவனமாக இதைச் செய்திருக்க வேண்டும்.'

அந்தத் தாய் ஒரு சிக்கலான சூழ்நிலையைத் திறம்படக் கையாண்டாள். அவள் தன் மகளைத் தாக்கவில்லை. அவள் பிரச்சினையைச் சுமுகமாகச் சமாளித்தாள். 'அடுத்த முறை இப்படி நடந்தால்...' என்று அவள் எச்சரிக்க எண்ணியபோது, தன்

மகள் எவ்வளவு நன்றியுள்ளவளாக இருக்கிறாள் என்பதை உணர்ந்ததும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டாள். முன்னைய சந்தர்ப்பங்களில் செய்தது போல, இப்போதும் இப்படிக் கொட்டுண்ட பிசினுக்காகக் கத்தி ஏசியிருந்தால் இந்த முழு நாளினது பொழுதும் நாசமாய்ப் போயிருக்கும்.

## *'என்ன ஒரு மகிழ்ச்சி, ஒரு பொருள் சிந்துகிறது. ஆனால் யாரும் குற்றம் சாட்டப்படுவதில்லை':*

மேலே சொன்ன இந்தச் சம்பவத்தைப் பற்றி மற்றொரு தாய் கூறுகிறார்:

'நாங்கள் மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். பதினான்கு வயது மகள் தனது பாலைச் சிந்திவிட்டாள். (நான் அதைக் கவனிக்காதது போலப்) பேசிக்கொண்டே இருந்தேன். அவள் துள்ளிக் குதித்து, 'கவலைப்படாதே அம்மா, நான் அதைத் துடைப்பேன் என்றாள். நான் அதைக் கவனிக்காதது போல எனது உரையாடலைத் தொடர்ந்தேன். பிறகு என் மகள் சொன்னாள்: 'என்ன ஒரு மகிழ்ச்சி!, ஒரு பொருள் சிந்துகிறது. ஆனால் அதுக்காக யாரும் குற்றம் சாட்டப்படுவதில்லை.'

## *என் முதல் தூண்டுதல் கத்தி அலறுவதுதான்:*

மற்றொரு தாய் இப்படிக் கூறுகிறார்:

'நாங்கள் பதின்மூன்றும் பதினாறும் வயது கொண்ட எங்கள் இரண்டு பதின்மர்களுடன் சென்ற பன்னிரண்டு நாள் விடுமுறைப் பயணத்திலிருந்து திரும்பி வந்தோம்.

இந்தப் பயணத்தைக் கெடுத்துவிட்டிருக்கக்கூடிய ஒரு சம்பவம், எனக்கிருந்த இந்த விடயம் பற்றிய புதிய புரிதலின் காரணமாக சுமுகமாக நடந்து முடிந்தது. எனது பதினாறு வயதுச் சிறுமி தனக்குப் பிடித்தமான வளையலை அணிந்திருந்தாள். எங்கள் அடுத்த நிறுத்தத்திற்குச் செல்லும் வழியில், அவள் வெளிறிப்போய், வருத்தத்துடன் என் பக்கம் திரும்பினாள். வளையலைக் காணவில்லை.

'வழமையாக எனது முதல் வேலையே இதற்காக அவளைப் பார்த்து அவள் எவ்வளவு பொறுப்பற்றவளாகவும் முட்டாளாகவும் இருக்கிறாள் என்று கத்தி அலறுவதாகத்தான் இருந்திருக்கும்'

'ஆனால் பதிலாக நான் சொன்னேன்: 'ஓ அது சரியான அநியாயம். நீங்கள் அதை ஹொட்டேலிலேயே விட்டிட்டு வந்திருக்கலாம். நாங்கள் ஹொட்டேலுக்கு எழுதிப் பார்க்கலாம். அவர்கள் அதைக் கண்டார்களா என்று...'

அவள் அமைதி அடைந்ததுடன் எனக்குத் தன் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தினாள். எங்களது விடுமுறைப் பயணம் எங்களைப் பாதித்துவிடவில்லை.

## *மைக்கறையும் கோபமும்:*

மற்றொரு தாய் இப்படிக் கூறுகிறார்:

'வீட்டுக்குத் திரும்பியபோது, சாப்பாட்டு மேசையின் அருகிலிருந்த கதிரைகளிலும் சோபாவிலும் மை ஊற்றுப்பட்டிருந்த கறைகளைக் கண்டேன். ஒரு விரைவான கணக்கெடுப்பில் குற்றவாளி என் பதினான்கு வயது மகன் என்பது தெரிய வந்தது. அவன் தனது காற்சட்டைப் பொக்கற்றில் (pocket) வைத்திருந்த உடைந்த பேனாவை இப்போதுவரை மறந்து விட்டிருந்தான். நடந்த பிரச்சினையைப் பெரிதாக்குவதற்குப் பதிலாக, என்ன நடந்திருக்கிறது என்பதை நான் அவனுக்குக் காட்டினேன்.

நாங்கள் ஒவ்வொன்றாக தளபாடங்களைச் சுத்தம் செய்தோம். இது குறைந்தபட்ச விமர்சனத்துடன் செய்யப்பட்டது. நான் மேற்கொண்ட அமைதியான நடவடிக்கைக்காக நான் அதிகம் பாராட்டப்பட்டேன், அதனால் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

'சுமார் ஒரு மணி நேரம் கழித்து, நான் என் படுக்கையறைக்குச் சென்றபோது, மைக்கறைகள் அங்கேயும் இருந்ததைக் கண்டுபிடித்தேன், அது அங்கிருந்த மெத்தைவைத்த 'செற்றி'யில் நிரந்தரமான கறைகளை ஏற்படுத்தி விட்டிருந்தது. இது என்னை மிகவும் சோதனைக்கு உள்ளாக்கியது. அந்த நேரம் படுக்கையறைக் கதவு தட்டப்படாமல் இருந்திருந்தால் விளைவு என்னவாக இருந்திருக்கும் என்பதை என்னால் இப்பொழுது உத்தரவாதம் அளிக்க முடியாது. கதவைத் திறந்தபோது வந்த என் மகன் நான் கோபப்படாமல் இருப்பதற்காக தான் எவ்வளவு பெருமைப்படுகிறேன் என்று என்னிடம் சொல்ல வந்ததாகக் கூறினான். விபத்து குறித்து அவன் உண்மையிலேயே மிக மோசமாகக் கவலைப்படுகிறான் என்பதை அவன் எனக்குத் தெரியப்படுத்த விரும்பியே வந்திருந்தான். அவனது வார்த்தைகள் என்னை மீண்டும் ஒரு முறை என்பற்றிய பரீட்சையில் தேர்ச்சி பெற வைத்தன.'

## *தவறுகள் நடக்கும் சந்தர்ப்பங்களில்...*

நம்மில் பலர் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்: தவறுகள் நடக்கும் சந்தர்ப்பங்கள், ஒரு பதின்ம வயதினரின் ஆளுமை அல்லது குணம் பற்றிய ஏதாவது (விமர்சனத்தை) சொல்வதற்கான சரியான தருணங்கள் அல்ல. அவை ஒருவர் நீரில் மூழ்கும்போது, அவருக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கவோ, அவரிடம் கேள்விகள் கேட்கவோ, அவரது செயற்றிறனை விமர்சிக்கவோ உரிய நல்ல நேரமாக இருக்க முடியாது. அது உண்மையில் உதவிக்கான நேரம்.

'இப்படியான குறிப்பை வீட்டிற்குக் கொண்டு வருவதில்
நீ மகிழ்ச்சியடையவில்லை என்பது எனக்குத் தெரியும்.'

பதின்மூன்று வயது சிறுவனின் தாயார் கூறிய பின்வரும் சம்பவம், ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் நடந்த ஆக்கபூர்வமான உதவிக்கு நல்ல எடுத்துக்காட்டு:

'ஃபிராங்க் தனது ஆசிரியர் கொடுத்த நீண்ட (பெற்றோருக்கான) அறிவித்தற் குறிப்பைக் கொண்டு வீட்டிற்கு வந்தான். அது ஒன்றும் நல்ல குறிப்பு அல்ல. இது போன்ற குறிப்புகள் எங்களுக்கு முன்பும் வந்திருந்தன. அவை வந்த சந்தர்ப்பங்களில் அவனுக்கு எதிரான எங்கள் வசைகளும் திட்டுக்களும் பல நாட்களுக்கு நீடிக்கும். அந்தச் சம்பவங்களை நினைவுகூர்ந்து, அவன் எங்களுக்கு எவ்வளவு ஏமாற்றமாக இருக்கிறான் என்பதை அவனுக்கு நினைவூட்டும் சந்தர்ப்பங்கள்

எப்போதும் இருக்கத்தான் செய்தன.

இந்த முறை நான் அவனைப் பார்த்துச் சொன்னேன்: 'ஓ, ஃபிராங்க், இப்படி ஒரு குறிப்பை வீட்டிற்கு கொண்டு வர வேண்டியிருப்பது உங்களுக்கு மிகவும் கவலையாக இருக்கும்.' அவன் வெட்கத்துடன் அதை ஒப்புக்கொண்டான்.

'கடந்த காலத்தில், நான் அவனுக்காக மன்னிப்பு கேட்டுப் பல கடிதங்களை எழுதியிருந்தேன். இந்த முறை நான் ஆசிரியருக்கு அவரது குறிப்பைப் பெற்றுக்கொண்டேன். ஃபிராங் இனிமேல் நல்லபடி நடந்துகொள்வான்' என்று மட்டுமே எழுதினேன். தவிரவும் அது உறுதியான சொல்லாகவும் இருந்தது.

நான் அந்தக் குறிப்பை என் மகனுக்குப் படித்துக் காட்டினேன்.

'அடுத்த நாள் எனக்குப் பாடசாலை அதிபர் திருமதி மிலாவுடனான சந்திப்புக்கு அழைப்பு வந்திருந்தது. நான் இதைப் பற்றி ஃபிராங்கிடம் சொன்னபோது, அவன் சொன்னான்: 'ஓ, நீங்கள் அவரைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. நான் ஏற்கனவே நன்றாக நடக்கத் தொடங்கிவிட்டேன்.

'குறிப்புக்கு நான் ஆற்றிய எதிர்வினையால் என் மகனுக்குப் பள்ளியில் உள்ள பிரச்சினை தீர்க்கப்படாமல் போகலாம், ஆனால் அது ஏற்கனவே வீட்டில் எங்கள் உறவை மேம்படுத்தத் தொடங்கிவிட்டது.'



## தவறு எப்படி நடக்கிறது:

பல வீடுகளில், பெற்றோருக்கும் பதின்ம வயதினருக்கும் இடையே சண்டைகள் தொடர்ச்சியாக நடக்கின்றன. ஒரு பதின்ம வயதினர், எமக்குப் பிடிக்காத ஒன்றைச் செய்கிறார் அல்லது சொல்கிறார் என்பதற்காக நாம் அவரை அவமானப்படுத்தும் வகையில் அதற்கு எதிர்வினை ஆற்றுகின்றோம். அதற்கு அவர் மோசமான பதிலைத் தரக்கூடும். இதற்கு நாங்கள் அச்சுறுத்தல்கள் அல்லது தண்டனைகளுடன் அவரை எதிர்கொள்வோம். இந்த இடத்தில் 'அனைவருக்கும் சுதந்திரம்' என்ற நிலை ஆரம்பிக்கிறது.

பதின்மூன்று வயது ஃபிலாய்ட், கூடைப்பந்தாட்டப் பந்தை (Basketball) நிலத்தில் அடித்தபடி அறைக்குள் நுழைந்தான்.

**அம்மா:** உந்தப் பந்தைக் கொண்டு உடனடியாக வெளியே போ, நீ எதையாவது உடைக்கப் போகிறாய்!

**ஃபுளோயிட்:** இல்லை, நான் அப்படிச் செய்ய மாட்டேன்!

அப்போது பந்து ஒரு மின்விளக்கைத் தாக்கித் தரையில் சிதறவைத்தது.

**அம்மா:** நான் உரத்துச் சொல்லியும் கூட, நான் சொல்வதை நீ ஒருபோதும் கேட்க மாட்டாய், உனக்கு எதையாவது உடைக்க வேண்டியிருந்தது, இல்லையா? நீ சில நேரங்களில் சரியான முட்டாள்.

**ஃபுளோயிட்:** நீங்கள் 'வாசிங் மெசினை உடைக்கவில்லையா?' உங்களை அதை உடைக்கும்படி செய்தது என்ன?

**அம்மா:** ஃபுளோயிட், நீ இப்படி முரட்டுத்தனம் இல்லாமல் இருக்க முடியாதா?

**ஃபுளோயிட்:** நீங்கள் தான் என்னை முதலில் முட்டாள் என்று திட்டினீர்கள்.

**அம்மா:** உன்னிடமிருந்து இனி எந்த வார்த்தையையும் கேட்க நான் தயாரில்லை. நீ இந்த நிமிசமே இடத்தை விட்டு உனது அறைக்குப் போ.

**ஃபுளோயிட்:** என்னை நாட்டாமை பண்ணுறதை முதல் நீங்கள் நிப்பாட்டுங்கோ. நான் இன்னமும் சின்னப் பொடியன் இல்லை.

**அம்மா:** (உரத்த குரலில்) உடனடியாக உன் அறைக்குப் போ...

**ஃபுளோயிட்:** அஹ், சரி பாப்பம் எங்கை ஏலுமெண்டால் என்னைப் போக வையுங்கோவன் பாப்பம்!

தாய்க்கு எதிராக எழுப்பப்பட்ட இந்த நேரடிச் சவாலைத் தொடர்ந்து, தாய் இழுத்துப் பிடித்து அவனை உலுப்பினாள். தன்னைத் தப்பித்துக்கொள்ளவைக்கும் முயற்சியில் ஃபுளோயிட் தாயைப் பிடித்துத் தள்ளினான். தாய் சறுக்கிக் கீழே விழுந்தாள். பயந்துபோன ஃபுளோயிட் வீட்டைவிட்டு வெளியே ஓடினான்; ஓடியவன் மாலை கடந்த பின்னரும் வீட்டுக்குத் திரும்பவில்லை.

ஒரு சின்ன விடயம் எவ்வளவு பெரிய விடயமாக மாறிவிட்டது. ஆயினும், எந்தக் காரணமுமில்லாமல் வாய்த் தர்க்கத்துடன் ஆரம்பித்த இந்நிகழ்வு இப்படி நிகழ்ந்திருக்கவே தேவையில்லை. இத்தகைய நிகழ்வுகள் மிகுந்த புத்திசாலித்தனத்துடன் கையாளப்பட வேண்டியவை. அம்மா என்ன செய்திருக்கலாம்? அந்த பந்தைத் தனது கையில் எடுத்து அதை அறைக்கு வெளியே போட்டுவிட்டு உறுதியாக இவ்வாறு சொல்லியிருக்கலாம்:

'வசிப்பறை என்பது விளையாடுவதற்கான இடம் அல்ல.' அவ்வளவும்போதும். அதற்கு மேலான விமர்சனங்கள் எதுவும் தேவையில்லை. அல்லது பிறகு உடைந்த மின்விளக்கின் ஓடுகளைப் பொறுக்கிச் சுத்தம் செய்வதில் தாய் அவனுக்கு உதவி செய்திருக்கலாம். அந்த நேரத்தில் தாய் தனது

கவலையை வெளிப்படுத்தியிருக்கலாம். மெல்லிய தொனியிலான சிறு வார்த்தை அவன் தன்னை நியாயப் படுத்துவதைவிட, கவலைப்பட வைத்திருக்கும். தாய் அமைதியாக இருந்திருந்தால், அவன் பெரும்பாலும் வசிப்பறை என்பது விளையாட்டுக்கான இடமல்லதான் என்பதைத் தானாகவே உணர்ந்திருப்பான்.பொதுவான உண்மை என்னவென்றால், ஒருவரைத் தாக்கும் வகையில் குறைசொல்வதை நிறுத்துவது அமைதிக்கான அடிப்படையாகும் என்பதே!. ஏனென்றால் அவை ஒருபோதும் பிள்ளைகளிடம் பொருத்தமான நடத்தையை உருவாக்குவதில் உதவப் போவதில்லை.

## விகிதாசாரம் பற்றிய உணர்வு:

பதின்ம வயதினர் தனது பெற்றோரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். வெறும் இனிமையான அல்லது எரிச்சலூட்டும் நிகழ்வுகளுக்கும், தீவிரமான அல்லது சோகமான நிகழ்வுகளுக்கும் இடையில் வேறுபடுத்திப் பார்க்க அவர் விகிதாசார உணர்வையும் மதிப்புகளின் அளவையும் கற்றுக்கொள்ள வேண்டும். சிறிய விபத்தை பெரிய பேரழிவாகக் கருதக் கூடாது. உடைந்த கண்ணாடி என்பது, உடைந்த கை அல்ல. பிசினைச் சிந்துவது என்பது இரத்தம் சிந்துவது போன்றதல்ல. தொலைந்த 'சுவெட்டர்' கோபத்தை இழக்க வழிவகுக்காது. ஒரு 'டோரா சட்டை' ஒரு அசிங்கமான காட்சியைக் குறிக்காது.

பதினான்கு வயது பிலிப், தற்செயலாக ஏதோ செய்தபோது தரையெங்கும் ஆணிகள் விழுந்து சிதறின. அவன் வெட்கத்துடன் தனது தந்தையைப் பார்த்தான்.

**பிலிப்:** ஐயோ, நான்... நான்... எனக்கு விசர்!

**தந்தை:** ஆணிகள் கொட்டுப்படும் போது நாங்கள் அப்படிச் சொல்வதில்லை.

**பிலிப்:** நீங்கள் எப்படிச் சொல்வீர்கள்?

**தந்தை:** ஆணிகள் விழுந்து சிதறிவிட்டன. ஆனால் நான் அவற்றை எடுத்து வைப்பேன்!

**பிலிப்:** அப்படித்தானா?

**தந்தை:** அப்படித்தான்.

**பிலிப்:** நன்றி, அப்பா.

அப்பா குனிந்து சில ஆணிகளை எடுக்க உதவினார். பிலிப், அப்பாவை மிக்க அன்புடன் உற்று நோக்கினான். தந்தை காட்டிய முதிர்ச்சியான அணுகுமுறை அவனுக்குத் தந்த பாடத்தை அவன் இனி நீண்ட காலம் நினைவில் வைத்திருப்பான். தற்காலிக விபத்தை எப்படிக் கனிவாகவும் ஆக்கபூர்வமாகவும் கையாள்வது என்பது அவன் மனதில் பதிந்திருக்கும். அவனது தந்தை அவனை விமர்சித்திருந்தால், அவன் இவ்வளவு கற்றுக்கொண்டிருப்பானா? அல்லது அவன் சிறந்த, கவனமாகச் செயற்படும் மனிதனாக மாறியிருப்பானா?.

உதாரணமாக இப்போது அவனது அப்பா இப்படிச் சொல்லியிருந்தார் என்று வைத்துக் கொண்டால் என்ன நடந்திருக்கும் என்பது புரியும், 'இப்ப நீ என்னதான் செய்கிறாய் என்று பார்!, உனக்கு இன்னும் கொஞ்சம் கவனமாக இருந்திருக்க முடியாதா? நீ எப்போதும் இவ்வளவு அவசரத்தில் தான் இருக்கியா? நீ எதைத் தொட்டாலும் அது ஏன் தரையில் விழுந்து சிதறுவதில் முடிகிறது?'

## முக்கிய பாடம்:

பின்வரும் அறிவுரைகள் எத்தகைய சந்தேகமும் இல்லாமல் வழங்கப்படுபவை:

- ஆளுமைப் பண்புகளைத் தாக்காதீர்கள்.
- குணநலன்களை விமர்சிக்காதீர்கள்.
- கையில் இருக்கும் சூழ்நிலையைச் சமாளியுங்கள்.

ஆளுமையை விமர்சிப்பது என்பது அறுவைச் சிகிச்சை செய்வது போன்றது: அது எப்போதும் வலியைத் தருகிறது, சில சமயங்களில் அது ஆபத்தானதும் கூட. மிக அரிதான சந்தர்ப்பங்களில் அறுவைச் சிகிச்சை அவசியமானதாக அமையலாம். ஆனால் அது எப்போதும் கடைசி முயற்சியாகவே இருக்க வேண்டும். வேறு வழியில்லை என்ற நிலைமை வரும்போது மட்டும் இது மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு மருத்துவர், நோயாளி இருவரும் கவனமாகத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். மருத்துவர் மிகவும் அமைதியாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும்; நோயாளி விருப்பத்துடனும் தயாராகவும் இருக்க வேண்டும்.

மிக மோசமான விமர்சனம் என்பது, ஒருவரது முழு ஆளுமையிலும் பேரழிவை ஏற்படுத்தும். முட்டாள், அறிவிலி, அல்லது அதுபோன்ற 'பெயரடையால்' முத்திரை குத்துவது தவறானது; அது தவிர்க்க முடியாமல் அவமதிப்பு, கோபமூட்டுதல் போன்றவற்றையே எப்போதும் செய்கிறது.

டால்ஸ்டாய் எழுதியது போல்:

'ஒவ்வொரு மனிதருக்கும் அவருக்கென்றே உரிய சிறப்பும், திட்டவட்டமான குணங்களும் இருக்கின்றன என்று சொல்வது மிகவும் பரவலான மூடநம்பிக்கைகளில் ஒன்றாகும்: அந்த மனிதன் கனிவானவன், கொடூரமானவன், ஞானி, முட்டாள், சுறுசுறுப்பானவன், அல்லது அக்கறையின்மை கொண்டவன் போன்றவை. ஆனால் மனிதர்கள் அப்படி அல்ல, அவர்கள் ஆறுகள் போன்றவர்கள். ஒவ்வொரு நதியும் இங்கே குறுகுகிறது, அங்கே வேகமாக இருக்கிறது, இங்கே மெதுவாக இருக்கிறது, அங்கு அகலமாக இருக்கிறது, இப்போது தெளிவாக இருக்கிறது, இப்போது குளிராக இருக்கிறது, இப்போது மந்தமாக இருக்கிறது, இப்போது சூடாக இருக்கிறது. அப்படித்தான் மனிதர்களும். ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு மனித குணத்தின் கிருமிகளையும் தம்முள் சுமந்து செல்கின்றனர். சில சமயங்களில் ஒன்று தன்னை வெளிப்படுத்துகிறது, சில சமயங்களில் இன்னொன்று. மனிதர் பெரும்பாலும் தம்மைப் போலல்லாமல் வருகிறார்கள், அதே நேரத்தில் அதே மனிதராகவே இருக்கின்றார்கள்.'

(தொடரும்...)



vickneaswaran.sk@thaiveedu.com



# அசுர வேகவிமானங்கள்

சுப்ரமணியம் ஜெயசீலன்

> “ ஹைப்பர்சோனிக் என்ற சொல் ‘ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகம்’ என்பதனைக் குறிக்கிறது. பொதுவாக விண்வெளி ஆராய்ச்சி அதிவேக விமானங்கள் மற்றும் ராணுவ தொழில்நுட்பங்களில் இந்த ஹைப்பர்சோனிக் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. ”

அறிவியல்சார் புனைகதைகளில் நாம் பல்வேறு விந்தைமிகு விடயங்களைப் பார்த்திருக்கின்றோம். திரைப் படங்கள் அல்லது நாவல்களில் இந்த ஆச்சரியமான விட யங்கள் பற்றிய விவரிப்புக்கள் எம்மை மெய்சிலிர்க்க செய் துள்ளன. அவ்வாறான ஓர் அறிவியல் கோட்பாடு அல்லது கண்டுபிடிப்பு யதார்த்தமானால் எவ்வாறான ஓர் உணர்வை நாம் அனுபவிப்போம்? அந்தக் கேள்வியே எமக்குள் பெரும் ஆவலையும் ஆர்வத்தையும் தூண்டுகின்றது அல்லவா? ஆம் மிக வேகமாகப் பறக்கும் தொழில்நுட்பத்துடன் கூடிய விமானம் ஒன்றைப் பற்றி நாம் ஊடாடல் செய்ய விளை கின்றோம்.

பொதுவாக உலகின் மிக வேகமான போக்குவரத்து சாதன மாக விமானங்கள் கருதப்படுகின்றன. வான்வெளியில் மிகுந்த வேகத்துடன் உயரப் பறந்து கண்டங்களைத் தாண்டி போக்குவரத்துச் செய்யும் அற்புதக் கண்டுபிடிப்பாக நாம் இந்த விமானங்களை அடையாளப்படுத்துகின்றோம்.

எனினும் இந்த அசுர வேகத்தை உடைய விமானங்களும் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்குக் குறிப்பிட்டதொரு கால அவகாசத்தை எடுத்துக்கொள்கின்றன.

சில கற்பனைப் புனைகதைகள், திரைப்படங்களில் நாம் பார்ப்பது போல மிக வேகமாக ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகரக்கூடிய விமானங்கள் இன்னமும் நடைமுறைச் சாத்தியமாகவில்லை. எனினும் அண்மைக்கா லமாக விஞ்ஞான ஆய்வாளர்களின் அயராத உழைப்பு மற்றும் முயற்சியினால் இந்த இலக்கையும் எட்டும் தூரம் தொலைவில் இல்லை எனக் கூறினால் அது மிகைப்படப்போ வதில்லை. விமானங்களை ஹைப்பர்சோனிக் எனும் தொழில் நுட்பத்தின் ஊடாகப் பறக்கச் செய்வதன் மூலம் உலகின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு சுமார் ஒரு மணித்தியா ளத்தில் கடந்து விட முடியும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிடுகின்றனர்.

ஹைப்பர்சோனிக் என்ற சொல் ‘ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகம்’ என்பதனைக் குறிக்கிறது. பொதுவாக விண்வெளி ஆராய்ச்சி அதிவேக விமானங்கள் மற்றும் ராணுவ தொழில்நுட்பங்களில் இந்த ஹைப்பர்சோனிக் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. ஹைப்பர்சோனிக் வேகம் ஒலியின் வேகத்திற்கு நிகராக அளவீடு செய்யப்படு கின்றது.

ஒலியின் வேக அளவுகளை சப்சானிக், டிரான்ஸ்சோனிக், சூப்பர்சோனிக், ஹைப்பர்சோனிக் என வகைப்படுத்தலாம்.

சப்சானிக் என்பது ஒலியை விட மெதுவான வேகத்தைக் கொண்டதாகும், டிரான்ஸ்சோனிக் என்பது ஒலியின் வேகத் திற்கு அருகாமையிலானது, சூப்பர்சோனிக் என்பது ஒலியை விட வேகமானது, ஹைப்பர்சோனிக் என்பது ஒளியின் வேகத்தை விட ஐந்து மடங்கு அல்லது அதற்கும் மேற்பட்ட வேகத்தைக் கொண்டதாகும்.

ஹைப்பர்சோனிக்கின் வேகமானது மேக் 5 மேக் 10 என அளவீடு செய்யப்படுகின்றது. குறிப்பாக மேக் 5 என்பது மணிக்கு 6200 கிலோமீட்டர் ஆகவும், மேக் 10 என்ற அளவீடு மணிக்கு 12,300 கிலோமீட்டர் என்ற வேகத்திலும் பயணிக்க கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வேகத்தில் ஒரு விமானம் பயணிக்கும் போது, உதாரணமாக லண்டனிலிருந்து நியுயோர்க் செல்வதற்கு வெறும் 30 நிமிடங்கள் மட்டுமே செலவாகும்.

எனினும் இந்த தொழில்நுட்பம் எவ்வாறு விமானங்களில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான ஆய்வுகள் தற்பொழுது முனைப்புப் பெற்று வருகின்றன.

வெப்பம், சுழற்சி, பொருட்கள் போன்ற பல்வேறு காரணி களின் அடிப்படையில் இந்தத் தொழில்நுட்பம் குறித்த ஆய்வு கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஹைப்பர்சோனிக் தொழில்நுட்பம் தற்பொழுது ராணுவத் துறைகளில் குறிப்பாக ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதப் பயன்பாட்டில் பயன்படுத்தப்படுகின்றது.

tg.theeban@gmail.com

மேலும் விமானப் பயணங்களின் போதும் எதிர்காலத்தில் ஹைப்பர்சோனிக் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

விண்வெளி ஆய்வுகளின் போதும் இந்த ஹைப்பர்சோனிக் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

பூமியிலிருந்து விண்வெளி நோக்கி ஏவப்படும் விண்கலங்கள் மேக் 25 வரை வேகத்தைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தொழில்நுட்பம் விமானங்களில் விமான பயணங்களின் போது பயன்படுத்தப்பட்டால் உலகின் எந்த மூலையில் இருந்தும் மற்றொரு மூலைக்கு குறுகிய நேரத்தில் பயணங்களை மேற்-கொள்ள முடியும்.

அதேபோன்று விண்வெளி ஆய்வு போன்ற தேவைகளுக்கும் இதனை பயன்படுத்திக் கொள்ள முடியும், ஆரம்ப காலங்களில் ஹைப்பைர்சோனிக் தொழில்நுட்பம் ஒரு யதார்த்தத்திற்கு எட்டாத கற்பனை போல் தென்பட்டாலும் தற்பொழுது பல நாடுகளில் ஹைப்பர்சோனிக் தொழில்நுட்பத்தை பல்வேறு துறைகளில் பயன்படுத்துவது குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் விமான பயணங்களிலும் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என்பதில் மாற்றுக் கருத்துகள் கிடையாது.

நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வரும் மோர்கோவினின் கருதுகோளை ஆதரிக்கும் ஒரு புதிய சோதனை, மேக் 6-இல் உள்ள கொந்தளிப்பு மெதுவான காற்றோட்டங்களைப் போலவே இருப்பதாகக் காட்டுகிறது. இந்த வெளிப்பாடு ஹைப்பர்சோனிக் பறப்பை, ஒருவேளை விண்வெளி அணுகலை, மிகவும் எளிதில் அடையக்கூடியதாக மாற்றக்கூடும்.

ஹைப்பர்சோனிக் பறப்பு, உலகளாவிய பயணத்தை முழுமையாக மறுவடிவமைக்கக்கூடிய சாத்தியப்பாடுகளை வெளிப்படுத்துகின் றது. இப்போது 24 மணித்தியாலங்கள் நீடிக்கும் பயணங்கள், ஒரு திரைப்படத்தினை பார்த்து முடிப்பதற்குள்ளான நீளமாக குறுக்கமடையக்கூடும். எடுத்துக் காட்டாக சிட்னியிலிருந்து லாஸ் ஏஞ்சல்ஸுக்கு ஒரு விமானப் பயண நேரம் 15 மணித்தியாலங்கள் என்ற தற்போதைய பயண நேரம் ஒரு மணித்தியாலமாக மாற்றமடையக் கூடும்.

'இது உண்மையில் பூமிப்பந்தினை சுருங்கச் செய்கிறது' என அமெரிக்காவின் நியு ஜேர்ஸியில் அமைந்துள்ள ஸ்டீவன்ஸ் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நிக்கோலஸ் பார்சியால் (Nicholaus Parziale) குறிப்பிடுகின்றார். இவர் ஹைப்பர்சோனிக் பறப்புகளை

> **"ஹைப்பர்சோனிக் என்ற சொல் 'ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகம்' என்பதனைக் குறிக்கிறது. பொதுவாக விண்வெளி ஆராய்ச்சி அதிவேக விமானங்கள் மற்றும் ராணுவ தொழில் நுட்பங்களில் இந்த ஹைப்பர்சோனிக் தொழில்நுட்பம் பயன்படுத்தப் படுகின்றது."**



கற்பனைகளை விஞ்சி யதார்த்தமாக்கும் முனைப்புகளில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றார்.

மேலும், பேராசிரியர் பார்சியால், அதிவேக பறப்பைப் பாதிக்கும் திரவ இயக்கவியல் குறித்த ஆராய்ச்சிக்காக விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களுக்கான ஜனாதிபதி தொழில் விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஹைப்பர்சோனிக் பறப்புகள் பயணத்தை வேகமாகவும், எளிதாகவும், சுவாரஸ்யமாகவும் மாற்றும் என நம்பிக்கை வெளியிடுகின்றார்.

வெறும் ஒரு மணி நேரத்தில் உலகின் பாதியளவு தூரத்தைக் கடப்பது சாத்தியமற்றதாகத் தென்படலாம், ஆனால் இந்த இலக்கு நெருங்கி வருகிறது. இராணுவ விமானங்கள் ஏற்கனவே ஒலியின் வேகத்தை விட இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு வேகத்தில் பயணிக்கின்றன. அதாவது மேக் 2 மற்றும் மேக் 3, வேகங்களை இது குறிக்கின்றது. இங்கு மேக் 1 என்ற வேகமானது கடல் மட்டத்தில் மணிக்கு 760 மைல்களுக்குப் பறக்கும் திறனை பிரதிபலிக்கின்றது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து அவுஸ்திரேலியாவின் சிட்னிப் பயணத்தை ஒரு மணி நேரத்தில் முடிக்க, ஒரு விமானம் மேக் 10 அல்லது ஒலியின் வேகத்தை விட பத்து மடங்கு வேகத்தை கொண்டிருக்க வேண்டும். ஒரு விமானம் இவ்வளவு அசுர வேகத்தில் வளிமண்டலத்தைக் கிழித்துக் கொண்டு பயணிக்கும் போது உருவாகும் தீவிர கொந்தளிப்பு மற்றும் வெப்பம் என்பனவற்றினால் பாரியளவு சவால்களை எதிர்நோக்க நேரிடும்.

மெதுவாக மற்றும் வேகமாக விமானங்கள் பறக்கும் போது காற்று ஒரே மாதிரியான எதிர்வினைகளைக் காட்டாது.

மேலும் விண்வெளி பொறியியல் விஞ்ஞானிகள் இந்த வேறுபாட்டை விவரிக்க கீழ் வரும் சொற்பதங்களைப் பயன்படுத்துகின்றனர்: அமுங்குதிறனற்ற மற்றும் அமுங்கு திறனுடனான ஓட்டம், அமுங்குதிறனற்ற ஓட்டத்தில், இது குறைந்த வேகத்தில் (மணிக்கு சுமார் மேக் 0.3 அல்லது 225 மைல்களுக்குக் கீழே) நடக்கும், காற்று அடர்த்தி அரிதாகவே மாறுகிறது, இது வடிவமைப்பு கணக்கீடுகளை எளிதாக்குகிறது. இருப்பினும், வேகம் ஒலித் தடையைத் தாண்டியவுடன், காற்றோட்டம் அமுங்கு திறனுடையதாக மாறும். ஏனென்றால் ஒரு வாயு 'நசுங்க முடியும்', அல்லது

அறிவியல் சொற்களில் ‘அமுக்க முடியும்’ என பேராசிரியர் பார்சியேல் விளக்குகிறார்.

அமுக்கமானது அழுத்தம் மற்றும் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்களுடன் காற்றின் அடர்த்தியை வியக்கத்தகு முறையில் மாற்றுகிறது, விமானம் சுற்றியுள்ள காற்றுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதைப் பொறுத்ததாக இது அமையும்.

‘அமுக்கத்தன்மை காற்றோட்டம் விமானத்தைச் சுற்றி எவ் வாறு செல்கிறது என்பது இங்கு முதன்மையானது, மேலும் அது புறப்பட அல்லது காற்றில் இருக்கத் தேவையான ஏற்றம், இழுத்தல் மற்றும் உந்துதல் போன்றவற்றை மாற்றும்.’ எந்தவொரு விமானமும் எவ்வாறு வடிவமைக்கப்ப டுகிறது என்பதற்கு இந்தக் காரணிகள் மிக முக்கியமான ஏதுக்களாகக் காணப்படுகின்றன.

‘குறைந்த மேக்’ எண்கள் என குறிப்பிடப்படும் ஒலியின் வேகத்திற்குக் கீழே அல்லது அருகில் பறக்கும் விமானங்க ளுக்கு காற்றோட்டத்தை பொறியியலாளர்கள் ஏற்கனவே நன்கு புரிந்துகொள்கிறார்கள்.

ஆனால் அந்த வேகத்தில் ஐந்து முதல் பத்து மடங்கு வரை பயணிக்கும் வானூர்திகளை வடிவமைப்பதற்கு மிகவும் கடுமையான நிலைமைகளின் கீழ் காற்றோட்டத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். மோர்கோவின் கருதுகோள் எனப்படும் ஒரு வழிகாட்டும் யோசனையைத் தவிர, அந்தப் புதிர் இன் னும் சில விடை தெரியா கேள்விகளினால் தொக்கு நிற் கின்றது.

20-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மார்க் மோர்கோ வினால் உருவாக்கப்பட்ட இந்தக் கருதுகோள், காற்று மேக் 5 அல்லது மேக் 6-இல் நகரும்போது, காற்று கொந்தளிப்பு நடத்தை மெதுவான வேகத்திலிருந்து பெரிதாக மாறாது என்று கூறுகிறது. காற்றின் அடர்த்தி மற்றும் வெப்பநிலை வேகமான ஓட்டங்களில் அதிகமாக மாறினாலும், கொந்த ளிப்பின் அடிப்படை ‘குறைந்த’ இயக்கம் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கருதுகோள் கூறுகிறது.

‘அடிப்படையில், மோர்கோவினின் கருதுகோள் என்பது, கொந்தளிப்பான காற்று குறைந்த மற்றும் அதிக வேகத்தில் நகரும் விதம் அவ்வளவு வேறுபட்டதல்ல’ என்று பேராசிரியர் பார்சியேல் கூறுகிறார்.

கருதுகோள் சரியாக இருந்தால், இந்த அதிக வேகங்களில் கொந்தளிப்பைப் புரிந்துகொள்ள நமக்கு முற்றிலும் புதிய வழி தேவையில்லை என்றே அர்த்தப்படுகின்றது. மெதுவான ஓட்டங்களுக்கு நாம் பயன்படுத்தும் அதே கருத்துகளைப் பயன்படுத்தலாம். அதாவது ஹைப்பர்சோனிக் விமானங்க ளுக்கு கணிசமாக வேறுபட்ட வடிவமைப்பு அணுகுமுறை தேவையில்லை. எனினும், இதுவரை மோர்கோவினின் கருது கோளை நிரூபிக்கப் போதுமான சோதனை ஆதாரங்களை எவராலும் வழங்க முடியவில்லை. ‘மோர்கோவினின் கருது கோளை ஆதரிப்பதில் ஹைப்பர்சோனிக் கொந்தளிப்பான அளவுகள்’ என்ற தலைப்பில் பார்சியேலின் புதிய ஆய்வின் பொருளாக அது மாறியது.

ஆய்வில், பேராசிரியர் பார்சியேலின் குழு கிரிப்டான் எனப் படும் வாயுவை அயனியாக்கம் செய்ய லேசர்களைப் பயன்ப டுத்தியது, இது ஒரு காற்று சுரங்கப்பாதைக்குள் பாயும் காற்றில் விதைக்கப்படுகிறது. இது தற்காலிகமாக கிரிப்டான் அணுக்களை ஆரம்பத்தில் நேராக, ஒளிரும் கோட்டை உரு வாக்கச் செய்தது. பின்னர் ஆராய்ச்சியாளர்கள் அந்த ஃப் ளோரசன்ட் கிரிப்டான் கோடு காற்று சுரங்கப்பாதையின் காற்றில் எவ்வாறு நகர்கிறது, வளைகிறது மற்றும் திரும்பு கிறது என்பதற்கான படங்களை எடுக்க அல்ட்ரா-ஹை-ரெ சல்யூஷன் கேமராக்களைப் பயன்படுத்தினர். இது உண்மை யில் ஒரு இலை ஒரு நதியில் உள்ள சிறிய சுழல்களின் வழியாக எவ்வாறு சுழல்கிறது என்பதைப் போன்றது.

அந்தக் கோடு வாயுவுடன் நகரும்போது, ஓட்டத்தில் சுருக் கங்கள் மற்றும் அமைப்பைக் காணலாம், அதிலிருந்து, கொந்தளிப்பு பற்றி நாம் நிறையக் கற்றுக்கொள்ளலாம்,’ என்று பார்சியேல் கூறுகிறார், அவர் அந்தப் புதிய கட்ட மைப்பினை உருவாக்க 11 ஆண்டுகள் தான் செலவிட்ட தாகக் குறிப்பிடுகின்றார்.

மேலும் நாங்கள் கண்டறிந்தது என்னவென்றால், மேக் 6-இல், கொந்தளிப்பு நடத்தை அமுக்க முடியாத ஓட்டத்திற்கு மிக அருகில் உள்ளது.

ஆரம்பத்தில், பார்சியேலின் குழுவிற்கு விமானப்படை அறி வியல் ஆராய்ச்சி இளம் புலனாய்வாளர் அலுவலகம் ஆதரவு அளித்தது.



**“ ஹைப்பர்சோனிக் தொழில்நுட்பம் தற்பொழுது ராணுவத் துறைகளில் குறிப்பாக ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதப் பயன்பாட்டில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் விமானப் பயணங்களின் போதும் எதிர்காலத்தில் ஹைப்பர் சோனிக் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது. ”**

2016-ஆம் ஆண்டில் ஆராய்ச்சி திட்டம் (YIP) மற்றும் 2020-ஆம் ஆண்டில் கடற்படை ஆராய்ச்சி அலுவலகம் (ONR) YIP, தற்போதைய பணி ONR-ஆல் ஆதரிக்கப்படுகிறது.




கருதுகோள் இன்னும் முழுமையாக உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும், ஹைப்பர்சோனிக் வேகத்தில் பறக்க விமானங்களுக்கு முற்றிலும் புதிய வடிவமைப்பு தேவையில்லை என்று கூறுவதால், இந்த ஆய்வு ஹைப்பர்சோனிக் விமானத்திற்கு ஒரு படி நெருக்கமாக நம்மைக் கொண்டுவருகிறது. மேலும் அது விடயங்களை எளிதாக்குகிறது.

இன்று, ஒரு விமானத்தை வடிவமைக்க நாம் கணினிகளைப் பயன்படுத்த வேண்டும், மேலும் அனைத்து சிறிய, நுண்ணிய, சிறிய விவரங்களையும் உருவகப்படுத்தி, மாக் 6-இல் பறக்கும் விமானத்தை வடிவமைக்க கணக்கீட்டு வளங்களைப் பயன்படுத்த வேண்டும், இது சாத்தியமற்றதாக இருக்கும் என பேராசிரியர் பார்சியேல் கூறுகிறார்.

மோர்கோவினின் கருதுகோள், ஹைப்பர்சோனிக் வாகனங்களை வடிவமைப்பதற்கான கணக்கீட்டு தேவைகள் இன்னும் சாத்தியமானதாக மாறும் வகையில் எளிமைப்படுத்தும் அனுமானங்களைச் செய்ய அனுமதியளிப்பதாக அவர் தெரிவிக்கின்றார். விண்வெளிப் போக்குவரத்து எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை மாற்றுவதற்கான உறுதிமொழியையும் ஆய்வு முடிவுகள் கொண்டுள்ளன என்றும் பார்சியேல் விளக்குகிறார்.

‘ஹைப்பர்சோனிக் வேகத்தில் பறக்கும் விமானங்களை நாம் உருவாக்க முடிந்தால், ராக்கெட்டுகளை ஏவுவதற்குப் பதிலாக அவற்றை விண்வெளியில் பறக்கவிட முடியும், இது பூமியின் தாழ்வான சுற்றுப்பாதைக்குச் சென்று அங்கிருந்து போக்குவரத்தை எளிதாக்கும்’ என்று அவர் கூறுகிறார். ‘இது பூமியில் மட்டுமல்ல, தாழ்வான சுற்றுப்பாதையிலும் போக்குவரத்திற்கு ஒரு திருப்புமுனையாக இருக்கும் என பேராசிரியர் பார்சியேல் நம்பிக்கை வெளியிடுகின்றார்.



jeyaseelan.s@thaiveedu.com




# சமூகவலைத்தளங்கள் எனும் சிலந்திவலையில்...

சியாமளா யோகேஸ்வரன்

அசுர வேகத்தில் வளர்ந்து எம்மை அடிமையாக்கத் துடிக்கும் தொழினுட்பத்தையும் சமூக வலைத்தளங்களையும் கையாளும்போது இந்த அறிவுரையின் உட்பொருளை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நன்மையும் தீமையும் தாமாக எம்மை வந்து சேர்ந்து விடுவதில்லை. எமது செயற்பாடுகள்தாம் எம்மை ஆக்கபூர்வமான பாதையில் நடத்திச் செல்கின்றனவா அல்லது அழிவை நோக்கி அழைத்துச் செல்கின்றனவா என்பதைத் தீர்மானிக்கின்றன.

மனிதனின் நாளாந்த வாழ்க்கையானது விஞ்ஞானத்தினதும் தொழினுட்பத்தினதும் வளர்ச்சியால் முற்று முழுதாக மாறி விட்டிருக்கின்றது. அன்றைய காலத்தில் சிந்தனைக்கலைப்பான்கள் அதிகமிருக்கவில்லை என்பதால் வாழ்க்கை சீராகவே ஓடிக்கொண்டிருந்தது. இன்று தவிர்க்க முடியாத தேவையாய் தொழினுட்பத்தைக் கையில் எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கின்றது. இந்த வளர்ச்சியால் நாம் அனுபவித்துக்கொண்டிக்கும் நன்மைகளுடன், அறிந்திருக்கின்ற மற்றும் அறிந்திராத தீமைகளும் சேர்ந்தேதான் பயணிக்கின்றன. அதனால் தொழினுட்பத்தால் விளையக் கூடிய தீமைகளைத் தவிர்க்கவோ குறைக்கவோ முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

சமூக ஊடகங்கள் தகவல்களை இலகுவில் பரிமாறிக் கொள்ள உதவுகின்றன; தொலைதூரங்களைக் கடந்து உறவுகளையும், நட்புகளையும் இணைக்கின்றன; செய்திகளை உடனுக்குடன் அறிவிக்கின்றன என்பன நன்மைகளாகக் கூறப்பட்டாலும், சமூக வலைத்தளங்களின் பின்னணியில் கண்ணுக்குத் தெரியாத பல ஆபத்துகள் ஒளிந்திருக்கின்றன. பக்குவமில்லாத பருவ வயதினர் சமூக ஊடகங்களின் வசதிகளால் ஈர்க்கப்பட்டு, அதற்குள் இருக்கும் அபாயங்களை அறிந்து கொள்ளாமல், சிலந்தி வலை போன்ற இந்த வலைத்தளங்களின் பிடிக்குள் இலகுவாகச் சிக்கிக்கொண்டு விடுகின்றார்கள்.

சமூக வலைத்தளங்கள் பல வகைகளில் சமூகத்தின் தொடர்பாடலுக்கு உதவுகின்றன என்று சொல்லப்பட்டாலும், அதில் பகிரப்படும் பதிவுகள் யாவும் அறத்தைச் சார்ந்து, அடுத்தவரின் நலனைச் சிந்தித்து, நடுவுநிலை கொண்டனவாக அமைவதில்லை. உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் உறவுகளுடன் இணைந்திருப்பதற்குச் சமூக ஊடகங்கள் துணை செய்கின்றன. ஆயினும், மனம் விட்டுப் பேசி அன்பைப் பரிமாறிக் கொள்வதற்கான நேரத்தை அவை தின்று தீர்த்து விட்டிருக்கின்றன. செய்திகளைச் செலவின்றி அனுப்பக்கூடிய வசதி இருப்பதால் சரியாகத் தெரியாதவர்களுடனும், சரி வரப் புரிந்து கொள்ளாதவர்களுடனும் முறையற்ற தொடர்புகள் ஏற்பட

“ சமூக வலைத்தளங்கள் பல வகைகளில் சமூகத்தின் தொடர்பாடலுக்கு உதவுகின்றன என்று சொல்லப்பட்டாலும், அதில் பகிரப்படும் பதிவுகள் யாவும் அறத்தைச் சார்ந்து, அடுத்தவரின் நலனைச் சிந்தித்து, நடுவுநிலை கொண்டனவாக அமைவதில்லை. ”



tg.theeban@gmail.com

வாய்ப்புகள் உருவாகின்றன. இவற்றால் கலாசாரச் சீரழிவு ஏற்படுவது மட்டுமல்லாமல், நிலைத்திருக்க வேண்டிய குடும்ப உறவுகளிலும் விரிசல் ஏற்பட்டுவிடுகின்றது.

பருவத்தின் பக்குவமற்ற வயதிலோ அல்லது உத்தமமான உறவென்று நம்பியோ அன்பை மட்டுமல்லாமல் தம் இரக சியங்களையும், பிரத்தியேகச் செய்திகளையும் படங்களை யும் பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் பகிர்ந்து கொள்கின்றார்கள். அந்தப் பழக்கமானது, எப்போதும் நிரந்தரமான உறவில் முடிந்து விடுவதில்லை. இதனால், பழைய உண்மைகள் ஆதாரத்துடன் என்றாவது ஒருநாள் வெளிப்பட்டு, வாழும் வாழ்க்கைக்கு உலை வைத்து விடுமோ என்ற அச்சத்தைச் சிலுவையாக வாழ்நாள் பூராகவும் சுமக்க நேரிட்டு விடுகின்றது.

தொழினுட்பம் முன்னேறிவிட்ட காலத்தில், இல்லாததைக்கூட இருப்பதாகக் காட்டும் வசதிகள் வந்து விட்டிருக்கின்றன. போதித்த கலாசாரமும், வளர்ந்த சூழலும் மான அவமானத் துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று பெண் ணுக்குத்தான் அதிகமாய்ச் சொல்லிக் கொடுத்திருக்கின்றன. அதனால் தான் பழிவாங்குதலின் உச்சகட்டமாகப் பெண் களின் புகைப்படங்கள் திரிபுபடுத்தப்படுகின்றன. அவமானப் படுத்த நினைக்கும் முகங்களை நிர்வாணப் படங்களுடன் இணைப்பது, தவறான தொடர்பிருப்பது போன்று சித்தரிப் பதற்காக எடுத்திராத புகைப்படங்களை மாற்றியமைப்பது போன்ற செயல்கள் பாதிக்கப்பட்டவரை மன உளைச்சலுக்கு ஆளாக்குவதுடன், தவறான முடிவுகளை எடுக்கவும் தூண்டு கின்றன. இதனால் இணையத்தளங்களிலோ அல்லது பொது வெளியிலோ படங்களைப் பகிரந்து கொள்ளும்போது மிக வும் அவதானமாக இருப்பது அவசியமாகின்றது.

சமூக வலைத்தளங்கள் ஆற்றலுள்ள ஒருவரை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன என்று கூறுகின்றார்கள். அறிமுகமானவர்கள், நாகரிகம் தெரிந்தவர்கள், மனித விழுமியங்களை மதிப்பவர்கள் நல்ல வார்த்தைகளையும் நல்வாழ்த்துகளையும் ஆக்கபூர்வமான கருத்துகளையும் பகிர்ந்து திறமையுள்ளவர்களை மேலும் ஊக்குவிக்கின்றார் கள். ஆனால், வக்கிரம் பிடித்தவர்கள், அநாகரிகமான வார்த்தைகளைப் பாவித்துத் தம் காழ்ப்புகளைக் கொட்டித் தள்ளுவதால், பலர் தம் திறமைகளில் நம்பிக்கை சிதைந்து போய் மனமுடைந்தவர்களாய் முடங்கிப் போய் விட்டிருப்பது வெளியுலகத்தின் பார்வைக்குத் தெரிய வருவதில்லை.

செயற்கை நுண்ணறிவு என்பது தொழினுட்ப வளர்ச்சியின் அடுத்த பரிமாணம் ஆகும். மொழிபெயர்ப்பது, தகவல் களைத் திரட்டிச் சுருக்கித் தருவது, செய்ய வேண்டிய வேலையைச் சிறப்பாக்கித் தருவது என்று எத்தனையோ விதங்களில் உதவினாலும், தம் சுயஅறிவு சார்ந்து இருக்க வேண்டிய ஒரு தலைமுறையை அழித்துக்கொண்டிருக்கின் றது என்பது வருத்தத்தைத் தருவதாகும். முன்னைய காலத்தில் கற்பதை எல்லாம் விளங்கிப் புரிந்து கொண்டு, மாணவர்கள் செயன்முறைப் பரீட்சைகளையும், ஒப்படை களையும் செய்வார்கள். இப்போதோ செயற்கை நுண்ணறிவு செய்து தருவதில், சில மாற்றங்களைச் செய்து கொடுத்து விட்டுத் தமது கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றார்கள். இவர்களிடம் விடய சம்பந்தமான பூரண அறிவு இருக்குமா என்பது கேள்விக் குறியே. சிக்கலான விடயங்களில் தீர்க்கமான முடிவை எடுக்கக் கூடிய அறிவு சார் எதிர்கால சமுதாயத்தை இழந்து கொண்டிருக்கின்றோம் என்பது பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு விடயமே.

ஆரோக்கியமாக இருக்க வேண்டிய வருங்கால சமுதாயத் தின் மனநலனையும், செயலாற்றலையும் சமூக ஊடகங் களுக்குப் பகடைக்காயாக ஆக்கியிருக்கின்றோம் என்பது அடுத்ததொரு பாதிப்பாகும். சூழலைப் புரிந்துகொண்டு, நிகழ்வுகளைக் கிரகித்து மூளையின் பகுப்பாற்றலை வளர்த் துக் கொள்ள வேண்டிய சிறுவர்களின் கையில் தொலை பேசியைக் கொடுத்து விடுவதால் அப்போதையத் தலைவலி தீர்ந்ததாக நினைத்துக் கொள்கின்றோம். தனித்து வாழும் பெற்றோர், பிள்ளையின் கவனத்தைத் திசை திருப்பிவிட்டுத் தம் அன்றாட வேலைகளைக் கவனிப்பதற்காக சமூக ஊட கங்களின் உதவியை நாடுகின்றார்கள். நன்னெறிகளை அறிந்து நற்குணங்களைப் பயிரிட்டுக் கொள்ள வேண்டிய சிறார்ப்பருவத்தினர் வன்முறையான விளையாட்டுகளில் தமது நேரத்தைச் செலவழிக்கத் தொடங்குகின்றார்கள். சிறு உயிரினத்துக்குக்கூட தீங்கு விளைவிக்கக்கூடாது. சக உயிர்களில் அன்பு செலுத்த வேண்டும் என்று நல்லொழுக் கத்தைப் புகட்ட வேண்டிய நேரத்தில், எதிரில் காண்பவரை அழித்து அவரது உடைமைகளைக் கைப்பற்றினால்தான் தமக்கான இருப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது எனும் மனப் பான்மையை வளர்க்கும் விளையாட்டுகளால் சிறுவர்களின் மனநிலையும் மாறுகின்றது. அன்பை அடிப்படையாகக் கொண்டு வளர வேண்டிய குழந்தைகள், தம்மை மட்டும் சிந்தித்து வாழும் சுயநலமுள்ளவர்களாக மாறுவதற்கு இப் போதுள்ள விளையாட்டுகளும் ஒரு காரணமாகின்றன.




> **“சூழலைப் புரிந்துகொண்டு, நிகழ்வுகளைக் கிரகித்து மூளையின் பகுப்பாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டிய சிறுவர்களின் கையில் தொலைபேசியைக் கொடுத்து விடுவதால் அப்போதையத் தலைவலி தீர்ந்ததாக நினைத்துக் கொள்கின்றோம்.”**

> ஒரு பதிவுக்கு எத்தனை விருப்பு வாக்குகளும், கருத்துகளும் என்று எண்ணுவதில் பொழுதைச் செலவிடுகின்றோமே தவிர அந்த மகிழ்ச்சியான தருணங்கள் கொடுக் கக்கூடிய உண்மையான அர்த்தத்தை உணர மறந்து விடுகின்றோம்.

சமூக ஊடகங்கள் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டிய எமது நேரத்தையும், உடல் உழைப்புக்கும் உடற்பயிற்சிக்குமான பொழுதுகளையும் எடுத்துக்கொண்டு எம்மை மந்தமாக்கி விடுகின்றன. இவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தெரிய வரும்போது அவை மீட்டுக் கொள்ள முடியாத தாக்கமாகவே இருக்கப் போகின்றன.

அர்த்தமுள்ளதாகவும் உறவுகளை அழுத்தமாக்க வேண்டியதுமான கொண்டாட்டங்கள் இன்று ஆடம்பரத்தை உலகுக்குப் பறை சாற்றுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. ஒரு பதிவுக்கு எத்தனை விருப்பு வாக்குகளும், கருத்துகளும் என்று எண்ணுவதில் பொழுதைச் செலவிடுகின்றோமே தவிர அந்த மகிழ்ச்சியான தருணங்கள் கொடுக்கக்கூடிய உண்மையான அர்த்தத்தை உணர மறந்து விடுகின்றோம். வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்பார்கள். ஆனால் தாம் உதவி செய்வதை ஒளிப்பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பதிவு செய்வதன் மூலம் தம்மைப் பிரபல்யப்படுத்த நினைக்கிறார்களே தவிரப் பெறுபவரின் தன்மானத்துக்கு மதிப்புக் கொடுக்க மறந்து விடுகின்றார்கள். அதே போன்று ஆபத்தில் ஒருவர் இருக்கும்போது அந்த நிகழ்வைப் பதிவு செய்து ஆதாயம் தேட முயற்சிக்கின்றார்களே தவிர, உதவி செய்து காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையான மனிதாபிமானத்தை மறந்து விடுகின்றார்கள்.

வெறும் விருப்பு வாக்குகளுக்காகவும் அதிகம் பேர் பார்க்க வேண்டும் என்பதற்காகவும் ஆபாசமாகவோ அல்லது அடுத்தவரைக் கேவலமாகப் பேசியோ ஒளிப்படங்களைப் பதிவேற்றுவதன் மூலம் ஒரு சமூகத்தின் முகத்தைத் தவறாகச் சித்தரித்துக்கொண்டிருக்கின்றோம். முன்பானால் இலைமறை காயாக மட்டுமே சில விடயங்கள் சமூகத்துக்குத் தெரிந்திருந்தன. இப்போதோ எல்லா விடயங்களும் இணையத்தில் தாராளமாகக் கிடைக்கின்றன. தற்கொலை செய்வது எப்படி? வெடி குண்டுகள் தயாரிப்பது எப்படி? திருடுவது எப்படி? மாட்டிக்கொள்ளாமல் குற்றங்களைச் செய்வது எப்படி? என்றெல்லாம் அக்குவேறு ஆணி வேறாக அலசி ஆலோசனை தருகின்றன. இதனால் சமூகத்தில் குற்றங்கள் மலிந்து போயிருக்கின்றன.

சமூக வலைத்தளங்கள் நேரில் சந்திக்காதவர்களைக்கூட நண்பர்களாக, காதலர்களாக, வாழ்க்கைத் துணையாக அறிமுகப்படுத்தி வைத்து விடுகின்றன. ஒருவரைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் பழகத் தொடங்கி பெரும் சிக்கலுக்குள்ளான சம்பவங்களுடன், தவறான தொடர்புகளால் வாழ்க்கையின் போக்கே மாறித் துன்பச்சுழலில் மீள முடியாமல் சிக்கிக்கொண்டவர்களும் இருக்கின்றார்கள். சமூக ஊடகங்கள் மூலம் தொடர்பாடல் எளிதாவதால், வெளித் தொடர்புகள் அதிகரித்துவிட, குடும்ப உறவுகள் இடையே நெருக்கமோ, நம்பிக்கையோ இல்லாமற் போகின்றது. இதனால் உறவுகளுக்கு ஆணிவேராக இருக்க வேண்டிய நம்பிக்கை அறுந்து போய்விட, குடும்ப உறுப்பினர்களை உளவு பார்ப்பது, சந்தேகப்படுவது போன்ற இழிதரமான வேலைகளுடன், மணமுறிவுகளும் அதிகரித்து விட்டிருக்கின்றன.

தொழினுட்ப வசதிகளுடன் தொலைபேசியின் மென்பொருளிலும் முன்னேற்றம் ஏற்படுவதால் அடிக்கடி தொலைபேசியை மாற்றுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. இதனால், இலத்திரனியல் கழிவுகள் சூழலில் அதிகமாக வெளியேற்றப்படுகின்றன. சூழலில் இவை ஏற்படுத்தும் பாதிப்பையோ சூழல் மாசடைவதையோ யாரும் கணக்கில் எடுப்பதாகத் தெரியவில்லை.

தொழினுட்பம் இளையவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கட்டுப்படுத்த இப்போது சில விதிமுறைகளும் சட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன. வாகனம் ஓட்டும் போது கைத்தொலைபேசிப் பாவனைத் தடை என்ற சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர், தொலைபேசியில் பேசுவதன் மூலமோ, குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலமோ எத்தனை விபத்துகள் நிகழ்ந்து அன்புக்குரியவர்களை இழந்துவிட்ட சம்பவங்கள் நடந்து விட்டிருக்கின்றன. தரவுகளைத் தேடித் தரம் பிரித்து, விளைவுகளைப் புரிந்து, சட்டமொன்றை அமுல்படுத்த முன்னர் ஒரு தலைமுறையின் அழிவை நோக்கிய பாதையானது ஆரம்பித்து விட்டிருக்கக் கூடும். இன்று பாடசாலை வளவுக்குள் தொலைபேசிப் பாவனை தடைசெய்யப்பட்டிருக்கின்றது. வலைத்தளங்களின் பாவனை கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது ஆறுதல் தரும் செய்திகளாக இருந்தாலும், தொழினுட்பத்திலுள்ள நெளிவு சுழிவுகளைக் கைவசம் வைத்திருக்கும் இன்றைய இளையவர்கள் அந்தத் தடைகளைத் தாண்டி தம் தேடலைத் தொடர்வார்கள் என்பது அச்சம் தருவதொன்றே.

வீதிக்கு வீதி பொருத்தி வைத்திருக்கும் ஒளிப்பதிவுக் கருவிகள் பாதுகாப்புக்காக என்று சொல்லப்பட்டாலும் எமது நடமாட்டங்கள் கண்காணிப்பட்டுக் கொண்டிருப்பதன் மூலம் தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது என்பதே உண்மை. வெளிக்குத் தெரியாத கருவிகள் மூலம் தனி மனித வாழ்க்கையின் அந்தரங்கங்களை இரகசியமாகப் பதிவு செய்யும் சம்பவங்களும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்த காலம் போய், கஷ்டப்பட்டு உழைத்த பணம் களவாடப்படுமா, எமது அடையாளம் திருடப்படுமா என்று கண்ணுக்குத் தெரியாத ஆபத்துக்கு அஞ்சி வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். இந்த அபாயம் பற்றி அறிந்திராத, மனிதர்கள் மீது நம்பிக்கை கொண்ட முதியவர்கள்

> வீதிக்கு வீதி பொருத்தி வைத்திருக்கும் ஒளிப்பதிவுக் கருவிகள் பாதுகாப்புக்காக என்று சொல்லப்பட்டாலும் எமது நடமாட்டங்கள் கண்காணிப்பட்டுக் கொண்டிருப்பதன் மூலம் தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது என்பதே உண்மை.

தம் எஞ்சிய காலத்துக்கெனச் சேர்த்து வைத்த பணம் முழுவதையும் இழக்கும் நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிக மாயிருக்கின்றது. நவீன தொழினுட்பத்தைக் கையாளத் தெரிந்தவர்கள், அவற்றைச் சமூக நன்மைக்காகப் பயன் படுத்தும்போது, மனித சமுதாயம் பலன் பெறுகின்றது. ஆனால் தொழினுட்பத்தைக் குறுக்கு வழியில் பாவிக்கத் தெரிந்தவர்கள் சட்டத்தின் கைகளில் அகப்பட்டுவிடாமல் பலரை இன்று மன உளைச்சலுக்கும், மன அழுத்தத்துக்கும் உள்ளாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு ஆறு நிமிடத்துக்கும் ஒருவர் இணையத்தொல்லைக்கு (cyber bullying) உள்ளாகின்றார் எனும் தரவானது உதறித்தள்ளி விட முடியாத அச்சத்தைத் தருவதாகவே உள்ளது.

கைத்தொலைபேசிப் பாவனையானது உடலைச் சூடாக்கு வதுடன், சோர்வு, மயக்கம், உறக்கக் குறைவு, புற்றுநோய், கருத்தரிப்பதில் பிரச்சினை, கவனச்சிதறல் போன்றன வற்றுக்கும் காரணமாக இருக்கின்றது. அத்துடன் தவறான தகவல்களையும், வழிகாட்டல்களையும் வழங்கி மனிதரின் வாழ்க்கையைத் திசை திருப்பி அபாயகரமான பாதைக்கு இட்டுச் செல்லக்கூடும் என்பதைப் புரிந்து கொண்டு, சமூக ஊடகங்கள் என்ற கத்தியைக் கவனமாகக் கையாள வேண்டும். வாழ்க்கையை இலகுவாக்கியிருக்கின்றது என்ற உண்மையுடன் எம்மை அழித்து விடக்கூடிய பாதகங் களையும் உருவின்றி ஓட்டியபடி செய்து கொண்டிருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சமூக ஊடகங்களை அதிக நேரம் பயன்படுத்தும்போது படிப்பு மற்றும் வேலையுடன் குடும்ப வாழ்க்கையின் தரமும் பாதிக்கப்படுகின்றது. குடும்ப உறுப்பினருடன் உறுதியான அன்பிழை பேணப்பட வேண்டுமாயின், அர்த்தமுள்ள நேரம் செலவிடப்பட வேண்டும். நேர்மையுடனும் உளச்சுத்தியுட னும் பழகும்போது உறவுகளிடையே அன்பும் நம்பிக்கையும் ஆழமாகவே முளைவிடுகின்றது. சமூக ஊடகங்களின் பின்னால் கண்களைக் கட்டிக் கொண்டு ஓடாமல், அர்த்த மற்ற சலனங்களும், தவறான புரிந்துணர்வும் இன்றி ஆண் டாண்டு காலத்துக்கும் நிலைத்துத் துணை நிற்கக் கூடிய உறவுகளைத் தேடுவதுதான் வாழ்க்கையில் நிலையான அமைதியைத் தரும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உறவுகளும் நட்புகளும் எம்மைப் புரிந்து கொள்வதை விடச் சமூக வலைத்தளங்கள் எம்மை நன்றாகப் புரிந்து கொள் கின்றன என்பதை நம்பத் தொடங்கும்போது தனிமைப் படுத்தப்பட்டு விடுகின்றோம். சமூக ஊடகங்களில் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான விடயங்கள் தொடர்ந்து வரும் போது, எமது சுயத்தை இழந்து நாமும் அதுவாகவே மாறி விடு கின்றோம். நிஜத்தைத் தொலைத்துவிட்டு, சக மனிதர் களில் நம்பிக்கை இழந்து கற்பனை உலகில் வாழ்வதை இந்தச் சமூக ஊடகங்கள் ஊக்குவித்துக் கொண்டிருக்கின் றன என்ற விழிப்புணர்வு எம்மிடையே வராவிட்டால் எம்மை அடி மைப்படுத்தி எம் நிம்மதியைக் குலைத்து விடக்கூடிய இந்தப் பேரபாயத்திலிருந்து தப்பிப்பதற்கு வழி இருக்கப் போவதில்லை.



Shiyamala@thaiveedu.com






> வீடுகளைக் குளிர்காலத்தில் வெப்பப்படுத்துவதற்காக முன்னைய காலங்களில் விறகு பாவித்தார்கள், பின் எண்ணெய் அடுப்புகளைப் பாவித்தார்கள். ஆனால், தற்காலத்தில் எரிவாயுவையும் மின்சாரத்தையும் பயன்டுத்துகிறார்கள்

# குளிர் காலத்துக்குத் தயாராதல்

**- செந்தூரன் புனிதவேல்**

கனடாவில் இலையுதிர் காலம் முடிந்து குளிர் காலம் ஆரம்பமாகிவிட்டது. இதனைப் பனிக்காலம் என்றும் கூறுவர். நாம் வதியும் ரொறன்ரோ போன்ற பிரதேசம் வடதுருவத்திற்கு அண்மித்த பிரதேசம் போல், கடும் குளிரும் பனியும் நிறைந்து காணப்படாவிடினும், அவற்றின் விளைவுகளை நாம் கவனமெடுப்பது அவசியமாகும். அதிலும் குறிப்பாக பழைய வீட்டுக் கட்டடங்கள் கவனிக்கப்பட வேண்டியுள்ளன. குளிர் காலத்திற்கு வதியும் வீட்டைத் தயாராக வைத்திருப்பது, வீணான செலவைத் தவிர்த்தல், குளிர்காலத்திற்கு முகம் கொடுத்தல், பெரும் இழப்புகளிலிருந்து தற்காத்துக்கொள்ளல் போன்றவற்றிற்கு அவசியமானதொன்றாகின்றது.

## இன்சுலேசன் எனப்படும் காப்பு

பனிகாலக் குளிரிற்கு தக்க பாதுகாப்பை தரும் முதல் விடயம் உங்கள் வீட்டின் இன்சுலேசன் ஆகும். பொருத்தமான இன்சுலேசன் இல்லாத சுவர்கள் வெப்பத்தை வீட்டுக்குள்ளிருந்து வெளியே கசிய விடுவதுடன், குளிர் உள்நுளைய அனுமதிப்பதால் வீட்டின் உட்பகுதியை வெப்பமாக்குவதற்கான செலவு அதிகரிக்கின்றது. வீட்டின் வெப்பநிலையைப் பேணுவதற்கு முதலில் கூரையின் ஊடாக வெப்பம் வெளியே செல்வதைத் தடுக்கவேண்டும். இதற்காக வெளிக் கூரைக்கும் சீலிங்கிற்கும் இடையில் உள்ள பகுதியை Fiberglass எனப்படும் கண்ணாடியிழையால், 16 முதல் 20 அங்குலத் தடிப்பத்தினால் நிரப்புவத வசியம்.

இதே போன்றே பேஸ்மன்ட் (Basement) எனும் அடித்தள சுவர்களும் இத்தகைய கண்ணாடியிழையால் குளிர் உள்வராமலும் வெப்பம் வெளியேறாமலும் தடுப்பது அவசியம். மேலும் கதவு, யன்னல் மற்றும் இணைப்புகளில் குளிர் காற்று உள்ளே வரா திருப்பதற்கு Caulking எனப்படும் பசைத்தடைகளால் அவற்றில் மறிப்புச் செய்தல் அவசியமாகும். இவற்றிற்கு Leak Detector எனப்படும் கசிவு கண்டறியும் கருவியை உபயோகித்தால் கூடிய பயனைப் பெறலாம்.

## வீட்டு வெப்ப உலை

வீடுகளை குளிர்காலத்தில் வெப்பப்படுத்துவதற்காக முன்னைய காலங்களில் விறகு பாவித்தார்கள், பின் எண்ணெய் அடுப்புகளைப் பாவித்தார்கள். ஆனால், தற்காலத்தில் எரிவாயுவையும் மின்சாரத்தையும் பாவித்துத்தான் வீடு வெப்பப்படுத்தப்படுகிறது என்பதனை யாவரும் அறிவோம்.

இவை அனைத்துமே குளிர் காலத்தில்த்தான் பாவிக்கப்படுவதால் நெடும் கால இடைவெளிகளுக்குப் பின் தயாராக உள்ளதா என கவனிப்பதவசியம். இதற்குத் தகுந்த அறிவும் அனுபவமும் உள்ள தொழில்நுட்ப வல்லுனருடைய சேவை பெற்றுக்கொள்வது உசிதமாகும்.

உங்கள் வீட்டில் வாயு உலையினால் வெப்பம் ஊட்டப்படுவதால் காற்றோட்ட வழிகள் தடை ஏதும் இன்றி இருக்கிறதா என்பதை கவனிப்பதவசியம். குறிப்பாக வீட்டிற்கு வெளியே உலை இருக்குமானால் அதில் பனி கொட்டாதிருப்பதவசியம். குறிப்பாக வாயு வரும் வழியில் பொருத்தப்பட்டிருக்கும் வடிகட்டி (Filter) பல காலம் பயன்படுத்தாதிருத்தல் அல்லது

**குளிர்கால ஆரம்பத்தில் செய்யும் செயற்பாடுகள் வீட்டை வெப்பமாக வைத்திருக்கும் நோக்கத்திற்காக மட்டுமல்ல, செலவைக் குறைப்பதுடன் சுற்றாடல் மாசுபாட்டைத் தவிர்ப்பதற்காகவும்தான். இத்தகைய அடிப்படை மாற்றங்களைச் செய்வதால் பல நூறு டொலர்களைச் சேமிக்க முடியும்.**

சென்ற வருட தூசியால் நிரம்பி இருத்தல் போன்றவற்றால் பாவனைக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். அப்படியிருப்பின் அதனை மாற்றுவது அவசியம்.

### தண்ணீர்க் குளாய்கள்

குளிர் காலங்களில் மிகையாக வரும் பிரச்சினை குளிரில் உறைந்த நீர்க்குழாய்கள். நீர் பனிக்கட்டியாக மாறும் வேளையில் குழாய் விரிவடைந்து உடைத்துவிடும் வாய்ப்புகள் அதிகம்.

இதனைத் தவிர்ப்பதற்கு குழாய்களை குளிர் தாக்காத வகையில் அமைத்துக் கொள்வது அவசியம். அதிலும் கட்டடத்தின் அடித்தளத்திலும், வாகன தரிப்பிடங்களிலும் மற்றும் புறச் சுவர்களிலும் குளிர் தாக்காத வகையில் கவனிக்கவேண்டும். இவற்றிற்குரிய காப்புறைகளை மலிவாகவும் எளிதாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

குளிர் காலம் நீண்ட காலத்திற்குப் பயணிப்பதனால் வீட்டின் வெப்ப நிலையை குறைந்தது 13°C ஆக வைத்திருத்தல் நன்று.

### கதவு யன்னல்களை அடைப்பது அல்லது சீல் (Seal) செய்வது

கதவு யன்னல்களில் உள்ள இடைவெளிகள் ஊடாக 25 விகித வெப்பம் இழக்கக்கூடும். எனவே குளிர்காலம் தொடங்கு முன்பே யன்னல் கதவுகளில் காற்று கசிகிறதா என்று உங்கள் கையை யன்னல் கதவுகளின் சட்டகங்களுக்கு அருகில் வைத்து அவதானித்து அவற்றை அடைத்து விடுவதற்கு ஆவண செய்தல் மிக அவசியமாகும்.

பாரமான திரைச்சீலைகள் உள்ளே உள்ள வெப்பம் வெளியேறுவதைத் தவிர்க்கும். மேலும் யன்னலின் தனிக் கண்ணாடியை மாற்றி நவீன இரட்டைக் கண்ணாடிகளை வைப்பது பெரியளவு வெப்ப வெளியேற்றத்தைத் தவிர்க்கும். இவையனைத்துமே வீட்டை வெப்பமேற்றும் செலவை பெரிதும் குறைக்கும்.

### கூரை மற்றும் சாக்கடை வடிகால்களை கவனித்தல்

ஒன்ராறியோ மாகாணத் தென்பகுதியில் நீர் உறைந்து பனிக்கட்டியாவதும் பின் கரைவதும் மாறி மாறி நடப்பதனால், கூரை பழுதடைவது இயல்பு. எனவே பனிக்காலம் தொடங்குமுன் கூரையைப் பரிசோதிப்பது மிக முக்கியமான விடயமாகும். மேலும், இலையுதிர் கால இலைகள் சாக்கடையை அடைத்திருக்காமல் சுத்திகரித்து வைத்திருப்பதும் ஒரு முக்கிய விடயமாகும். அத்துடன் அந்தக் கழிவுநீர் உங்கள் வீட்டு அத்திவாரத்திற்கு ஆறடி தள்ளி வெளியேறுகிறதா? எனக் கவனித்துக் கொள்வது அவசியம்.

### வீட்டுச் சுற்றுப்புறத்தை தயாரித்தல்

உங்கள் வீட்டைச் சுற்றி, பனிக்கட்டியின் எடையால் முறியக் கூடிய மரம் ஏதும் இருப்பின், அதனை வெட்டி வெளியேற்றுவது மிகவும் அவசியமாகும். வீட்டுச் சுற்றாடலில் உள்ள வடிகால் வாய்க்கால்கள் துப்புரவாக உள்ளனவா? எனக் கவனித்துக் கொள்ளுங்கள். சிறு செடிகள் பனிக்காலத்தில் இறந்துவிடாது அதற்குத் தகுந்த அரண் வைத்து மூடுங்கள்.

வீடுகளில் காற்று வெளியேற சில குளாய்கள் இருக்கும், அவற்றால் அணில், எலி போன்ற சிறு பிராணிகள் உட்புகா வண்ணம் தக்க அடைப்புகளை வையுங்கள். மேலும், உங்கள் வாகனத்தரிப்பிட அறைக் கதவின் அடிப்பகுதியால் சிறு பிராணிகள் உட்புக முடியுமானால் அதனையும் அடைத்து விடுங்கள். அல்லாவிடின் அவை உங்கள் வாகனங்களைப் பழுதாக்கிவிடும்.

### சக்தி விரயத்தைத் தவிர்த்தலும் பணத்தைச் சேமித்தலும்

குளிர்கால ஆரம்பத்தில் செய்யும் செயற்பாடுகள் வீட்டை வெப்பமாக வைத்திருக்கும் நோக்கத்திற்காக மட்டுமல்ல, செலவைக் குறைப்பதுடன் சுற்றாடல் மாசுபாட்டைத் தவிர்ப்பதற்காகவும்தான். இத்தகைய அடிப்படை மாற்றங்களைச் செய்வதால் பல நூறு டொலர்களைச் சேமிக்க முடியும்.

என்பிரிஸ் காஸ் (Enbridge Gas) மற்றும் கனடிய அரசாங்கம் ஆகிய இரண்டும் இணைந்து நடந்தும் Hert திட்டம் (The Home Efficiency Rebate Plus (HERT) பல ஊக்குவிப்புப் பணத்தை இதற்காக தருகிறது. இத்திட்டத்தைப் பயன்படுத்தி வீட்டைச் சிறப்படையச் செய்யுங்கள். இதற்காக இத்துறை வல்லுனர்கள் உதவியை நாடுவது சிறப்பாகும்.

### வீட்டிற்குள் வசதியும் காற்றின் தரம்

குளிர்காலம் என்றால் மூடிய யன்னல்களும் உள்ளே வறண்ட காற்றும் இருக்கும். துப்புரவான காற்றினைப் பெறுவதற்குக் காலத்திற்குக் காலம் உலைகளின் வடிகட்டிகளை மாற்றுவதுடன் வீட்டில் ஈரப்பதமூட்டிகளை (Humdifier) பாவிக்கத் தவறாதீர்கள். உள்ளே ஈரப்பதன் 30%-இருந்து 50% இருப்பது ஆரோக்கியமானதாகும், வீட்டிற்குள் மரங்கள் நடுவதும் நலமுடையதாகும்.

குளிர் காலத்திற்கு முகம் கொடுக்கத் தயாராவதை ஒரு சுமையாகக் கருதாது, செய்ய வேண்டியவற்றைச் செய்து, ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்வை வாழுங்கள்.



senthuran.p@thaiveedu.com




thanavishnu@gmail.com

# ULO Price Plan [Ultra Low Overnight]
# மிகக் குறைவான இரவு நேர கட்டணம்

பகுதி 2

– வேலா சுப்ரமணியம்

கடந்த 2023-ஆம் ஆண்டு நவம்பரில் இப்புதிய திட்டம் ஒன்ராறியோ மின்சார சபையால் அறிமுகப்படுத்தப்பட்டிருக் கிறது. இப்புதிய திட்டம் பற்றி விபரமாக உற்று நோக்குதல் பொருத்தமானது.

இரவு 11 மணிமுதல் காலை 7 மணி வரைக்குமுள்ள காலப் பகுதிக்கு வரலாற்றில் இல்லாதவாறு குறைந்த தொகையான அலகிற்கு 3.9 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணம் பருவகாலக் கட்டுப்பாட்டைக் கடந்து வருடம் முழுவதுக்கான நிலையான கட்டணமாக இருக்கும்.

சாதாரணமாக உள்ள உச்சமற்ற (TOU) காலப்பகுதிக்குரிய கட்டணமான 9.8 சதத்துடன் ஒப்பிடும் போது இது 3 மடங்கு குறைவானதாக இருக்கிறது. கட்டணத்தைப் பார்த்து பலரும் அங்கலாய்க்கலாம். ஆனால், இதனைத் தெரிவு செய்துவிட் டால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளது என்பதையும் கவனிக்க வேண்டி உள்ளது.




அதாவது இத்திட்டம் 'TOU' நடைமுறையுடன் இணைந்த ஒரு திட்டமாகும். ULO திட்டத்துடன் இணைந்து கொண்டால் இரவு 11 மணி முதல் காலை 7 மணி வரை மிகக் குறைவான கட்டணம் அறவிடப்படும். அதேவேளை TOU திட்டத்தில் உள்ள உச்ச காலப் பாவனைக் காலத்திற்குரிய கட்டணம் அலகிற்கு 20.3 சதத்திலிருந்து 39.1 சதமாகவும் உயர்த்தப்படும். உச்ச காலப் பாவனைக்குரிய காலமும் மாற்றப்பட்டுள்ளது. ஆனால், TOU திட்டத்தில் உள்ளது போல, நடுத்தர காலப்பகுதிக்கான கட்டணத்தில் எந்தவித மாற்றமும் இருக்காது. அலகிற்கு 15.7 சதமாக இருக்கும். இந்த ULO திட்டம் எல்லோருக்கும் நன்மை தரக்கூடியதா? என்ற கேள்வி எழுகிறது. ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறையும் வேறுபாடான அம்சங்களைக் கொண்டவை. சாதாரணமாகப் பகலில் வேலைக்குப் போய்வருபவர்கள்தான், வீட்டில் வசிப்பவர்களாக இருந்தால் பகல் நேரத்தில் வீட்டில் மின்சாரப் பாவனைக்கானச் செயற்பாடுகள் எதுவும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், தொற்று நோய் காலத்திற்குப் பிறகு பலரது வாழ்க்கை முறையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டில் இருந்து வேலை செய்யும் கலாசாரம் பெருகிவரும் இக்காலகட்டத்தில் பகலில் பூட்டி இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. அத்துடன், வீட்டில் முதியவர்கள் இருக்கும் பட்சத்தில், அவர்களது சமையல் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை உச்சக்காலப் பாவ னைக் காலத்தில் தவிர்க்கும்படி கூறுவது கடினம். கோடைகாலத்தில் குளிரூட்டியின் செயற்பாடு நாள் முழுவதும் தேவைப் படக்கூடிய சூழ்நிலையும் இருக்கலாம்.

மறுபுறம் மின்சாரத்தில் இயங்கும் கார்களைப் பயன்படுத்தும் கலாசாரமும் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கிறது. அது பற்றியும் சிறிது ஆழமாக நோக்குதல் பொருத்தமானது.

## மின்சாரத்தில் இயங்கும் கார்கள் (Electric Cars):

மின்சாரத்தில் இயங்கும் கார்கள் எமிபொருள் செலவு இல்லாமல் ஓடுவது போல் இருந்தாலும் அவற்றிற்குரிய மின்சாரத்திற்கான செலவும் இருப்பதை மறந்துவிடக்கூடாது. அவற்றின் பாவனையைப் பொறுத்து 2 - 3 நாட்களுக்கு ஒரு முறையாவது வீட்டில் சார்ஜ் பண்ண வேண்டிய தேவை இருக்கின்றது.

உதாரணமாக ஒரு Tesla காரை எடுத்துக் கொண்டால் அதனை ஒரு தடவை முழுமையாக சார்ஜ் செய்ய 53 KWH தேவைப்படும். பொதுவாக இரவு நேரத்தில் 7 மணிக்குப் பின்னர் அதாவது உச்சமற்ற off-Peak காலப்பகுதியில் சார்ஜ் செய்யும் போது தற்போதைய நிலையில் அதற்குரிய செலவு ஒரு தடவைக்கு $5.19 சதமாக இருக்கும். மாதத்தில் 12 தடவை சார்ஜ் பண்ணுவதாக எடுத்துக்கொண்டால் அதற்குரிய மாதாந்தச் செலவு $113.44 டொலர்களுக்கு மேலாக இருக்கும். இதுமட்டுமல்ல, மாதாந்த மின்சாரச் செலவு என்பது நாங்கள் நுகரும் மின்சார அலகிற்கான செலவு மட்டுமல்ல. அதற்கு மேலாக, மின்சார விநியோகச் செலவு, நிர்வாகச் செலவு, வரி என்பனவும் மேலதிகக் கட்டணமாகச் செலுத்தவேண்டி இருக்கும். மாநகர எல்லைகளைப் பொறுத்து இச்செலவு மாறுபடும். பொதுவாகப் பாவிக்கப்படும் அலகிற்கான செலவுடன் 82 வீதத்தை மேலதிக செலவாகச் செலுத்த வேண்டியிருக்கும். எனவே மாதாந்தம் ஒரு Tesla-வை சார்ஜ் செய்ய சராசரி $206 டொலர்கள் வரை தேவைப்படலாம்.

ஆனால், ULO திட்டத்தில் இணைந்துகொண்டு உச்சமற்ற காலப்பகுதியில் ஒரு தடவை சார்ஜ் பண்ண $2.07 சதங்களும் மாதத்திற்கு $45.14 சதங்களும் மட்டுமே தேவைப்படும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள இதர செலவுகளுடன் சேர்த்துப் பார்த்தால் மொத்த மாதாந்தச் செலவு $82 டொலர்களாக இருக்கும். எனவே, ஒப்பீட்டுரீதியில் பார்த்தால் இத்திட்டத்தில் இணைந்து கொள்வதால் கார் சார்ஜ் பண்ணுவதில் மட்டும் மாதாந்தம் $124 டொலர்களைச் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. உச்சமற்ற காலப்பகுதியில் மட்டும் சார்ச் பண்ணினால் மட்டுமே இத்தகைய சேமிப்புக்கான வாய்ப்பு உள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். பலரது குழப்பங்களையும் ஓரளவு தீர்க்கும் வகையில் ஒப்பீட்டுரீதியில் கீழ்தரப்பட்டுள்ள பட்டியலை உற்று நோக்குங்கள். சரியான முடிவினை எடுக்க இது உதவியாக இருக்கும்.

**Car Charging at home**
**TOU VS ULO**
**Example: Tesla - 53KWH -Monthly 12 times charging**

| Period | Price 23/24 - KWH | Per Charge | Monthly 12 Charge | Delivery+Admin+HST | Monthly Cost | Total Monthly Cost |
|---|---|---|---|---|---|---|
| TOU - Time of Use | | | | | | |
| Off- Peak | 9.8 | 5.19 | 62.33 | 51.11 | 113.44 | 206.46 |
| Mid Peak | 15.7 | 8.32 | 99.85 | 81.88 | 181.73 | 330.75 |
| Peak | 20.3 | 10.76 | 129.11 | 105.87 | 234.98 | 427.66 |
| ULO - Ulta-Low Overnight- All Year | | | | | | |
| Off- Peak 7am-11pm | 9.8 | 5.19 | 62.33 | 51.11 | 113.44 | 206.46 |
| Mid- Peak 7am-4pm, 9-11pm | 15.7 | 8.32 | 99.85 | 81.88 | 181.73 | 330.75 |
| Peak 4pm-9pm | 39.1 | 20.72 | 248.66 | 203.91 | 452.59 | 823.71 |
| ULO 11pm-7am | 3.9 | 2.07 | 24.80 | 20.34 | 45.14 | 82.16 |

ULO திட்டத்தில் இணைந்த பின் கிரமமாக இரவு 11 மணிக்குப் பின்னர் கார்களைச் சார்ஜ் பண்ணினால் மட்டுமே கணிசமான சேமிப்பிற்கு வாய்ப்பு உள்ளது. அதேவேளை, அத்திட்டத்தில் இணைந்த பின் இரவு 11 மணிக்குப் பின்னர் என்பதைக் கவனத்தில் எடுக்காது உத்தம பாவனைக் காலப்பகுதியைப் பயன்படுத்தினால் வழமையை விட 4 மடங்கு அதிகமான செலவினை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். இது எப்படி என்றால் 'பாம்புக்குப் பயந்து பாழுங்கிணற்றில் விழுந்த கதை' போலத் தான் முடியும்.

**மின்சாரத்தில் இயங்கும் கார்கள் எமிபொருள் செலவு இல்லா மல் ஓடுவது போல் இருந்தாலும் அவற்றிற்குரிய மின்சாரத் திற்கான செலவும் இருப்பதை மறந்துவிடக்கூடாது. அவற்றின் பாவனையைப் பொறுத்து 2 - 3 நாட்களுக்கு ஒரு முறையாவது வீட்டில் சார்ஜ் பண்ண வேண்டிய தேவை இருக்கின்றது.கார்களைச் சார்ஜ் பண்ணும்போது *Small Apps*-ஐப் பாவித்து இரவு 11 மணிக்குப் பின்னர் மட்டுமே தானாக சார்ஜ் செய்யும் தொழில் நுட்பத்தை உபயோகப்படுத்தினால் நிச்சயம் அதிக சேமிப்பை எதிர்பார்க்கலாம்.**

கார்களைச் சார்ஜ் பண்ணும்போது Small Apps-ஐப் பாவித்து இரவு 11 மணிக்குப் பின்னர் மட்டுமே தானாக சார்ஜ் செய்யும் தொழில் நுட்பத்தை உபயோகப்படுத்தினால் நிச்சயம் அதிக சேமிப்பை எதிர்பார்க்கலாம். ஆனால், எத்தனைபேர் இவற்றையெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

மின்சாரப் பாவனையில் உச்ச பயன்பாட்டையும் உச்ச சேமிப்பையும் பெறவேண்டுமானால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன? பதில் மிக இலகுவானது. உங்களது கடந்தமாத மின்சாரக்கட்டண Bill-ஐ எடுத்து சற்று ஆழமாக நோக்கினால் எந்த எந்த காலப்பகுதியில் எந்த அளவு மின்சாரம் நுகரப்பட்டிருக்கிறது என்பதை அவதானிக்க முடியும்.



elexicon ENERGY

Your Electricity Bill

• Electricity

| | | |
|---|---|---|
| • Winter On-Peak | 57.70 kWh@$0.182 / kWh | $10.50 |
| • Winter Mid-Peak | 56.67 kWh@$0.122 / kWh | $6.90 |
| • Winter Off-Peak | 213.93 kWh@$0.087 / kWh | $18.61 |
| • Summer On-Peak | 65.95 kWh@$0.182 / kWh | $12.00 |
| • Summer Mid-Peak | 64.66 kWh@$0.122 / kWh | $7.89 |
| • Summer Off-Peak | 244.49 kWh@$0.087 / kWh | $21.27 |
| Electricity Charges | | $77.17 |
| Delivery | | $56.29 |
| Regulatory Charges | | $4.56 |
| Ontario Electricity Rebate | | -$27.04 |
| H.S.T. (Registration # [illegible]) | | $16.20 |
| CURRENT CHARGES | | $131.18 |

• Your Previous Charges

| | |
|---|---|
| PREVIOUS BALANCE | $142.86 |
| Payment 05-28-2024 - Thank You | -$142.86 |
| BALANCE FORWARD | $0.00 |
| **Total Account Balance** | **$131.18** |

VARIABLE PRE-AUTHORIZED PAYMENT PLAN

| SERVICE FOR: | |
|---|---|
| [redacted] | |
| SERVICE ADDRESS: | |
| [redacted] | |
| ACCOUNT NUMBER: | SERVICE TYPE: |
| [redacted] | Residential |
| READ PERIOD: | |
| Apr 18 - May 16, 2024 | |
| BILL DATE: | USAGE: |
| Jun 03, 2024 | 703.30 kWh |
| DUE DATE: | AMOUNT DUE: |
| Jun 27, 2024 | $131.18 |

Message(s)




சாதாரண நுகர்வோரும் மிக இலகுவாக விளங்கிக் கொள்ளும் விதத்தில் விளக்கப்படங்கள் (Chart) உள்ளிட்ட மாதாந்த Bill-கள் நடைமுறையில் உள்ளன. ஒரு சில நிமிடங்களைச் செலவழித்து உங்களுக்கும் உங்கள் வாழ்க்கை முறைக்கும் ஏற்ற திட்டத்தைத் தெரிவு செய்தால் பல வருடங்களுக்கு அதன் அனுகூலங்களை அனுபவிக்க முடியும்.

உங்கள் வாழ்க்கை முறைக்கு ஏற்ற திட்டத்தைத் தேர்வு செய்து செலவைக் குறைப்பதா? அல்லது குறைந்த செலவுக்குரிய திட்டத்தைத் தெரிவு செய்து அதற்கேற்ப உங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அதன்மூலம் செலவைக் குறைப்பதா? என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். இரண்டு வழிகளிலும் நன்மைகள் உள்ளன. உங்கள் தெரிவைப் பொறுத்து சேமிப்பின் அளவு கூடிக் குறையும். அவ்வளவு தான்.

ஒன்ராறியோ மின்சாரசபை (OEB) நிர்ணயிக்கும் விலைக்கு அமைய ஒவ்வொரு மாநகர ஆட்சிக்குரிய மின்சார விநியோகம் என்பது Hydro one, Tronto Hydro, Elexicon போன்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு நிர்வகிக்கப் படுகிறது.

நீங்கள் உங்களுக்குப் பொருத்தமான திட்டத்தில் இணைய விரும்பினால் உரிய நிறுவனங்களை அழைத்து அல்லது On-line மூலம் விண்ணப்பிக்கலாம். நீங்கள் கேட்டுக்கொண்டால் மட்டுமே புதிய திட்டம் அமுலுக்கு வரும். அல்லது 'TOU' என்ற திட்டம் இயல்பாகவே (Default) அமுலில் இருக்கும்.

நீங்கள் விண்ணப்பித்த நாளில் இருந்து 10 நாட்களுக்குள் புதிய திட்டம் அமுலுக்கு வரும் என்று சொல்லப்படுகிறது. இதனுடைய சிறப்பம்சம் என்னவென்றால் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் எந்த நேரத்திலும் குறிப்பிட்ட நிறுவனங் களைத் தொடர்புகொள்வதன் மூலம் உங்களுக்குப் பிடித்த திட்டத்திற்கு மீளவும் மாறமுடியும். எந்த வித ஒப்பந்த கட்டுப்பாடும் கிடையாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

சிந்தியுங்கள்!
செயற்படுங்கள்!
சேமியுங்கள்!



velasubramaniam@thaiveedu.com



# கீழடி

## இந்திய வரலாற்றைத் திருத்தி எழுதும் தமிழ் நாகரிகம்

சிறிதரன் ஹரிஷா

இது ஒரு நகரம். ஆனால் இது எந்த நாட்டின் அதிகார பூர்வ வரைபடத்திலும் இல்லை. பல நூற்றாண்டுகளாக வரலாற்றுப் பதிவுகளிலிருந்து மறைக்கப்பட்டிருந்த ஒரு சமூகத்தின் தொன்மையான அடையாளம். பூமிக்கடியில் புதைந்திருந்த இது, சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் வைகைக் கரையில் செழித்தோங்கிய, அறிவாற்றல் மிக்க தமிழர் உலகை மீண்டுமெழுப்பியுள்ளது. தமிழர்களால் நடத்தப்பட்ட ஒரு முழுமையான நகர வாழ்க்கை குறித்த சாட்சியமானது உலகையே அதிர வைக்கக் கூடிய வரலாற்று உண்மையாகும். அந்தப் பெரும் புரட்சியின் பெயர் கீழடி. இது வெறுமனே ஒரு கற்பனையல்ல; மண்ணால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நிஜச் சாட்சியம். அந்த மறைந்த தொல்நகரம் இப்போது தனது மௌனத்தைக் கலைத்து, மீண்டும் பேச ஆரம்பித்திருக்கிறது.

கீழடி மதுரை மாவட்டத்தில் சிவகங்கை நகரின் அருகே வைகை ஆற்றங்கரையில் இருக்கும் ஒரு சிறிய கிராமம். ஆனால் அதன் கீழ் புதைந்திருந்தது ஒரு பெரிய நகரம். 2014 முதல் இங்கு தொடங்கிய அகழ்வாய்வு தமிழர் வரலாற்றினைத் திருத்தும் அளவிற்கு முக்கியமாக மாறியது. இங்கிருந்து கிடைத்த சான்றுகள் தமிழர்கள் கைவினைப் பொருட்களை உருவாக்கினார்கள், நகர அமைப்புடன் வாழ்ந்தார்கள், எழுத்தைக் கைக்கொண்டார்கள், வர்த்தகம் செய்தார்கள் என்பவற்றிற்கு சான்று காட்டின. கீழடி ஒரு நகரம் மட்டுமல்ல அது தொன்மையின் ஒரு சாட்சி. தமிழர் அறிவு, நாகரிகம், வர்த்தகம், எழுத்து, கலாசாரம் அனைத்தும் கீழடியில் இருந்தன. இது தமிழர் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம். கீழடி தமிழர் சிந்தனையின் பெருமையினை உலகிற்கு காட்டும் சான்றாக இருந்தது.

ஆரம்பத்தில் இதற்குக் கிடைத்தது ஆதரவு இல்லை எதிர்ப்புதான். 2015-இல் முதற்கட்ட அகழ்வாய்வுகள் முடிவடைந்த பின்னர் கிடைத்த முடிவுகள் இங்கு சங்க கால மக்கள் எழுத்து, நாகரிகம், வர்த்தகம் என்பனவற்றில் முன்னோடிகள் என்று காட்டின. ஆனால் சில அதிகாரிகளும் வரலாற்று நிறுவனங்களும் இந்தத் தகவல்களை முழுமையாக வெளியிடாமல் தாமதம் செய்தனர். சிலர் கீழடியில் கிடைத்த எழுத்துச் சான்றுகள் சங்க காலத்திற்கு உரியவை என்பதனை மறுக்கத் தொடங்கினர். பின் archaeological survey of india அகழ்வாய்வை இரண்டாவது கட்டத்தில் நிறுத்திவிட்டது. இதற்கு எதிராக தமிழக மக்கள் எழுத்தாளர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் எழுந்தனர்.

கீழடி அகழ்வாய்வுப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டபோது, அது தமிழ்நாட்டு அரசின் உறுதியான ஆதரவுடன் நடந்தேறியது. எனினும், நாம் இன்று காணும் கீழடி எனும் உண்மை, தமிழ் மக்களின் ஒற்றுமையினாலும் தாராள சிந்தனையினாலும் மண்ணிலிருந்து வெளிவந்த ஒரு வரலாற்றுச் சாட்சியமாகும். குறிப்பாக, கீழடி அகழ்வாராய்ச்சியின் இரண்டாம் கட்டம் முதல் கிடைத்த சான்றுகள், தமிழர் எழுத்து மரபிற்குப் புதியதோர் உயிரைப் பிறப்பித்தன. அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டப் பொருட்கள் - பழைமையான விளக்குகள், எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், பிராமி எழுத்துப் பொறிப்புகள் ஆகியவை, அன்றைய தமிழ்ச் சமூகத்தில் எழுத்து வழக்கு பரவலாக இருந்ததை உறுதி செய்கின்றன. மேலும்,




உலோக ஆயுதங்கள், கண்ணாடி, முத்துகள், அரிய மணிகள் மற்றும் கப்பல் தொழில்நுட்பச் சான்றுகள் ஆகியவை, சங்க காலத் தமிழர்கள் ஒரு உயர்ந்த, திட்டமிடப்பட்ட நகர வாழ்க்கையை வாழ்ந்ததுடன், மேம்பட்ட வணிக மற்றும் தொழில்நுட்ப அறிவையும் கொண்டிருந்தார்கள் என்பதற்கான அழுத்தமான ஆதாரங்களாகும். இதுவரை எமக்குச் சொல்லப்பட்டது, தமிழ் நாகரிகம் வேதங்கள் மற்றும் வடமொழி மூலமாகவே தோன்றியது அல்லது தழுவப்பட்டது என்ற கருத்துதான். ஆனால், கீழடி அகழ்வாய்வு அதற்கு முற்றிலும் மாறுபட்ட உண்மையை உலகிற்கு உரக்கச் சொல்கிறது. தமிழரின் எழுத்து, நாகரிகம், மற்றும் நம்பிக்கைகள் யாவும் அவர்கள் வாழ்ந்த மண்ணிலிருந்தே தன்னாட்சி உரிமையுடன் உருவானவை என்பதற்கு கீழடி வலுவான சான்றாகிறது. கீழடி அகழ்வாய்விலிருந்து வெளியான வாழ்க்கை முறைச் சான்றுகள், தமிழர்கள் ஒரு சீரமைக்கப்பட்ட, திட்டமிட்ட நகர வாழ்க்கை வாழ்ந்ததற்கான உறுதியான ஆதாரங்களை வெளிக்கொணர்ந்தன. தரமான சாலை அமைப்புகள், உறுதியான வீடுகளின் அடித்தளங்கள், திறன் வாய்ந்த வடிகால் அமைப்புகள், மற்றும் நீர் சேமிப்புத் தொட்டிகள் ஆகியவை அன்றைய சமூகத்தின் மேம்பட்ட நாகரிக வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டுகின்றன. மேலும், அங்கு கிடைத்த தாமரைக் கோல விளக்குகள், நுட்பமான நூல் அச்சுப் பாகங்கள் (Spindle Whorls), உலோக வேலைப்பாடுகளின் எச்சங்கள் ஆகியவை, தமிழர்களிடம் இருந்த செழுமையான கலாசார பூரணத்துவத்தையும் மற்றும் உயர் தொழில்நுட்பத் திறனையும் மிகத் தெளிவாகப் பறைசாற்றுகின்றன. இந்த நாகரிகத்தின் மிகவும் முக்கியமான அம்சம், சுமார் 2,600 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் அமைத்திருந்த கழிப்பறை மற்றும் கழிவுநீர் வடிகால் கட்டமைப்புகள் ஆகும். இத்தகைய திட்டமிடப்பட்ட சுகாதார அமைப்புகள், கீழடி ஒரு நிலைபேறான(Sustainable) மற்றும் நவீன நகர அமைப்பின் முன்னோடியாக விளங்கியதற்கான வலுவான சான்றுகளாகும். அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட வணிக ரீதியிலான பொருட்கள் (மணிகள், உலோக வேலைப்பாடுகள்) மற்றும் தானிய சேகரிப்பு அம்சங்கள் (பெரிய சேமிப்புக் கிடங்குகள்) ஆகியவை, இங்கு ஒரு வலிமையான, பலதரப்பட்ட பொருளாதாரம் செழித்து வளர்ந்ததைக் காட்டுகின்றன. இந்த ஆதாரங்களின் அடிப்படையில், கீழடி என்பது வெறும் வாழ்விடமாக அல்லாமல், நகர அமைப்பினைக் கொண்ட தமிழர்களின் புராதனமான வாழ்விட மையம் என்பதனைத் திட்டவட்டமாக எடுத்துரைக்கின்றது. சுருக்கமாகச் சொல்வதென்றால், அது விவசாயம், கலை, வணிகம், அறிவியல் ஆகியவை அனைத்தும் ஒன்று சேர்ந்து உயிர் பெற்ற, உயரிய நாகரிகம் ஆகும்.

சங்க இலக்கியங்களான புறநானூறு நற்றிணை அகநானூறு குறுந்தொகை இவை அனைத்தும் தமிழர் வாழ்வின் அழகான வாழ்வியல் ஆதாரங்கள். இவை நாகரிகம், அரசியல், வாணிகம் ஆகியனவற்றைப் பதிவு செய்கின்றன. ஆனால் இதுவரை சிலர் சங்க இலக்கியங்கள் கூறும் விடயங்கள் அனைத்தும் புனைகதை எனவும் ஆதாரங்கள் இல்லை எனவும் கூறினார்கள். ஆனால் கீழடி சொல்கின்றது இவையே உண்மையான தமிழர்களின் வாழ்க்கை, இங்கே நீங்கள் கண்டது இலக்கியத்தில் படித்தது. சங்கப் பாடல்களில் வரும் பூம்புகார் நகரம் மதுரை, வஞ்சி போன்ற நகரங்கள் கீழடியில் உள்ள நடைமுறைச் சான்றுகளுடன் ஒத்துப் போகின்றன. அச்சுத் தொழில், உடை அலங்காரங்கள், உணவுப் பழக்க வழக்கங்கள் இவை அனைத்தும் சங்க இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன என்பதற்கு ஏற்பவே கீழடியிலும் கிடைத்துள்ளன. கீழடி பற்றி அறிந்து கொள்கின்றபோது சங்க இலக்கியத்தினை அறிந்து கொள்ளலாம். சங்க இலக்கியத்தினை வாசிக்கும்போது கீழடியின் உயிர் புலப்படும். இதுபோல இலக்கிய சான்றுகளும் தொல்லியலும் ஒன்றாக இணைவது தமிழர்களின் மிகப்பெரிய அறிவியல் சாதனையாக இருக்கின்றது. தமிழர் நாகரிகம் ஒரு நாளில் தோன்றியது அல்ல. அது தலைமுறைகளாக வளர்ந்த தொடர்ச்சியான நாகரிகம். கீழடி அதற்கான மூல ஆதாரம். இந்த தளத்தில் கிடைத்த பொருட்கள், குறிப்பாக மட்பாண்டங்கள், அழகிய விளக்குகள், அச்சுப் பொருட்கள், மற்றும் அலங்காரப் பொருட்கள் இவை அனைத்தும் எதைச் சொல்கின்றன தெரியுமா? வாழ்க்கை, நாகரிகம், சுத்தம், அழகு, அறிவு இதைக் கொண்ட சமூகமாக இருந்தனர் என்பதையே.

மேலும் இங்கு கிடைத்த அறைகள் தமிழர்களின் முன்னேற்றத்தினை காட்டி நிற்கின்றன. கீழடியில் இருந்து. அறிவியல் நாகரிகத்திற்கான அடி நிலைகள் தெளிவாகத் தெரிகின்றன. இது பண்டைய தமிழர்களின் அறிவு வட்டாரத்தினை விளக்கும் உயிருள்ள ஆதாரங்கள் ஆகும்.

இதுவரை நாம் சீன நாகரிகம், மொசப்பதேமியா நாகரிகம், அரபிய நாகரிகம் போன்றவற்றைத்தான் புகழ்ந்தோம். ஆனால் நாம் இப்போது கூறலாம் தமிழர் நாகரிகமும் அத்தகைய நாகரிகங்களை விட எந்தவித நிலையிலும் குறையவில்லை என்று. கீழடி ஒரு புதையல் அல்ல, அது நம் தமிழர் இனம் தொலைந்து விடாமல் இருப்பதற்கான சான்றுப் பத்திரம். ஓர் இனத்தின் அறிவும் வாழ்வும் பண்பாடும் நாகரிகமும் விலை மதிக்க முடியாத சான்றுகளாக மண்ணின் உள் புதைந்து காணப்படுகின்றது. கீழடி என்பது ஓர் கட்டடக்கலை அல்ல. அது தமிழர்களின் அறிவியல் அடையாளம். மேலும் கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகள் சில வற்றில் தமிழ் பிராமி (தமிழி) எழுத்தில் எழுதப்பட்டுள்ள தனைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த ஓடுகளில் 'ஆதன்', 'குவிரன்' போன்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது அக்கால எமது மூதாதையர்கள் எழுத்தினைப் பயன்படுத்தினர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. இது சாதாரண மக்களினுடைய எழுத்து வடிவம், அதாவது இதன் மூலமாக எழுத்தும் கல்வியும் சாதாரண மக்களுக்கும் உரித்து உடையதாக இருந்தது என்பதனை அறியக்கூடியதாக உள்ளது. இந்த தமிழ் பிராமி எழுத்துகள் வடபிராமி எழுத்துகளை விடவும் காலத்தினால முற்பட்டது என்பது சில ஆய்வாளர்களுடைய கருத்தாகும். பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுத்தறிவுடைய தமிழ் சமூகம் இருந்தது என்பதனை கீழடி எடுத்துக்காட்டுகின்றது. தமிழர் எழுத்துப் பாரம்பரியம் என்பது தனித்துவமானது. அது உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனை. இந்தத் தமிழர்களினுடைய எழுத்து புரட்சி கீழ் அடியில் இருந்து முழங்குகின்றது. கீழடி வெறும் குடியிருப்புப் பகுதியாக மட்டுமல்ல. இது ஒரு நகர நாகரிகம். இங்கு அகழ்வாய்வுக் குழிகளை ஏற்படுத்தியபோது பல தொழில்நுட்ப சான்றுகள் கிடைக்கப் பெற்றன.





இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடிப்படையான மூல தனமாகக் காணப்படுகின்ற ஒரு நகரமாகவே இந்த கீழடி காணப்படுகின்றது. மரபுக்குள் மறைந்த தொழில்நுட்பம் அதற்கு நாங்கள் கீழடிக்கு நன்றி சொல்ல வேண்டும். ஒரு நகர நாகரிகம் என்பது பெரிய கோபுரங்களால் அமைவதல்ல. மாறாக அதில் ஒரு குடும்பம் எப்படி வாழ்ந்துள்ளது என்பது பற்றியதில் அதன் ஆன்மா அடங்கியுள்ளது. கீழடியில் அந்த ஆன்மா இன்றும் மூச்சு விடுகின்றது. சுடு மண்ணினால் ஆன சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்கள், பெண்களின் அலங்கார நகைகள், சமையல் பொருட்கள் இன்னும் என்ன ஆச்சரியம் என்றால் அங்கு கிடைக்கப்பெற்ற தாழிகள் ஊடாக ஒரு நாகரிகமான சமூகம் மரணத்திற்கு மரியாதை செலுத்தியது என்பதனைக் காட்டி நிற்கின்றது. இது ஒரு வர்த்தக நகரம் மட்டுமன்றி பண்பாடு கலந்த ஓர் தமிழ் நாகரிகம். தமிழ் மொழி நமக்கு தாயாக இருந்ததற்கு கீழடி ஓர் முக்கிய சாட்சி. இன்னுமொரு விடயம் என்னவென்றால் இவ்வாறு பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் கல்விக்கு உரியவையா ? அல்லது வர்த்தகத்திற்கு உரியவையா ? என்று விவாதிக்கப்படுகின்றது. ஆனால் இதில் சந்தேகம் இல்லை கீழடி ஒரு கிராமம் மட்டுமல்ல ஒரு நாகரிக தலைப்பின் பெரும் இடமாக இருந்தது. ஆனால் அது தனித்து வளர்ந்ததா ? அல்லது பண்டைய நாடுகளுடன் தொடர்பு பட்டதா ? என்ற சந்தேகத்தினை தீர்க்கக் கூடிய வகையிலும் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. காவிரியின் கரையோரத்தில் ஒரு பண்டைய சமூகவியல் அமைப்பு இருந்ததற்கான நுட்ப சான்றுகள், கிணறு கட்டும் முறை, கழிவு நீர் வடிகால் அமைப்பு, தொழில் முறைகளைப் பின்பற்றியதற்கான சான்றுகள் இவை அனைத்தும் இந்த நாகரிகம் சீரமைக்கப் பட்ட கட்டமைப்புடன் வளர்ந்தது என்பதனைக் காட்டுகின்றது. மேலும் இது பரந்துபட்ட நாகரிகம் கீழடி மட்டுமல்ல கொந்தகை மணலூர் போன்ற பகுதிகளும் இணைக்கப்பட வேண்டிய முக்கிய இடங்களாகும். கீழடியானது தமிழர்களின் மூலதன மையமாக காணப்படுகின்றது. கீழடியில் வாழ்ந்த மக்கள் தொழில் பண்பாடு வாழ்க்கை அம்சங்களை மாத்திரம் கொண்டவர்கள் மட்டுமல்ல அது ஒரு சிந்தனையின் வெளிப்பாடு ஆகும். கீழடியில் கிடைக்கப்பெற்றுள்ள சான்றுகள் அங்கு வாழ்ந்த மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துள்ளனர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. வேளாண்மை, கல்வி, கைத்தொழில், சமுதாய ஒழுக்கம், இவை அனைத்தும் ஓர் அமைதியான வாழ்வின் அடையாளங்கள். கீழடியில் கிடைக்கப்பெற்ற சான்றுகளின் ஊடாக பண்டைய தமிழ் சமூகம் நாகரிக உலகத்தின் ஆழமான சிந்தனையை நம்மிடம் பரம்பரையாக விட்டுச் செல்கின்றது. இக்கீழடியானது தமிழர் வாழ்வியலினை உயர்த்திக் காட்டுகின்ற மிக முக்கியமான சான்று ஆகும். நம் முன்னோர் எழுதவோ படிக்கவோ மட்டுமல்ல உணர்ந்தும் வாழ்ந்திருக்கின்றார்கள்.

கீழடி அகழ்வாய்வானது ஒரு பண்பாட்டின் மறைக்கப்பட்ட விடயங்களை மீட்டெடுக்கும் ஒரு தொலைநோக்கு பயணமாகும். இங்கு அமைத்த ஒவ்வொரு குழியிலும் தமிழர் நாகரிகத்தின் நம்பிக்கையிலும் நெறியிலும் உயிர் உள்ளது. பண்டைய இந்திய வரலாற்றில் தமிழர்களின் பங்கு என்பது மௌனமாக மறைக்கப்பட்டதொரு இசை ஆனால், கீழடி அந்த இசையை மறுபடியும் ஒலிக்கச் செய்கின்றது. இது நம் தமிழ் உணர்வின் சாட்சியாக நம் எதிர்கால சந்ததிகளுக்கான தொலைநோக்கு ஒலியாக நிலைத்திருக்கட்டும். கீழடி அகழ்வாய்வு மட்டுமல்ல இது தமிழர்களின் தொன்மையினையும் எழுச்சியினையும் உலகுக்கு வெளிப்படுத்தும் உயிர்க் குரல்.



Harisha.S@thaiveedu.com



# மலையகப் பெண்களின் சமூக இடைவெளியும் பயணிக்க வேண்டிய பாதையும்

சரவணன் ஸக்ஹூரன்

மலையகப் பெண்கள் இலங்கையின் சிறுபான்மை சமூகங்களில் ஓர் குறிப்பிடத்தக்க சமூகக் குழுவாக இருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை அனுபவங்கள், மத நம்பிக்கைகள், கலாசார மரபுகள் மற்றும் சமூக அமைப்புகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த ஆய்வு, மலையகப் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக இடைவெளி, மதச் சடங்குகள், பண்பாட்டு விழாக்கள், நடைமுறைச் சவால்கள் மற்றும் தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு, இவர்களின் மத கலாசாரப் பங்கு மற்றும் சமூக இடைவினைகள் (Social Interaction) பற்றிய விவரங்களை பலதரப்பட்ட பார்வையில் ஆராய்கிறது. இலங்கையின் பிற தமிழ் சமூகங்களை ஒப்பிடுகையில், மலையகப் பெண்கள் சமூகத்தில் பங்கேற்பது, வெளிப்புற உறவுகளை உருவாக்குவது, மற்றும் கல்வி சுகாதார துறைகளில் தங்கள் பங்கினை விருத்தி செய்வது ஆகியவற்றில் கட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இலங்கையில் மலையக மக்களின் சமூகநிலை குறித்த வரலாற்று, அரசியல் கவனங்கள் அதிகம் பெற்றிருந்தாலும், பெண்கள் மற்றும் அவர்களது மத கலாசார இடமாற்றங்கள் குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாக உள்ளன. இங்கு சமூக இடைவெளி என்பது வறுமை, கல்வி, சுகாதாரம், தீர்மான சக்தி, மற்றும் தொழில்நுட்பமயமாக்கம் போன்ற அம்சங்களில் பிரதிபலிக்கின்றது. இதற்கு முக்கிய காரணமாக மதப் பழக்கவழக்கங்கள், குடும்பக் கட்டுப்பாடு, பொருளாதார வரம்புகள், மற்றும் ஆணாதிக்க அமைப்பு போன்றன விளங்குகின்றன. பூப்புனித நீராட்டு விழா, திருமண முறைகள், தொழிலாளி வாழ்க்கை, சமூகப் புறக்கணிப்பு போன்றவைகள் மூலம் மத கலாசாரமும் சமூக மாற்றங்களும் சந்திக்கின்றன. மலையகச் சமூக இடைவெளி விளக்கம் (Social Stratification) கல்வி மற்றும் பொருளாதார நிலைப்பாடு, மரபணுக்காக விதிக்கப்பட்ட சாதி அடிப்படையிலான புறக்கணிப்பு, குடும்பத் தலைவர் அமைப்பில் பெண்களின் பங்கு, சமூகத் தீர்மானங்களில் பங்கெடுத்தல் என அமைந்துள்ளது. மாறாக, கணவனை இழந்த குடும்பங்களில் குடும்பத் தலைவியாகப் பெண்களின் நிலை, நடைமுறைப் பிரச்சினைகள், வேலைக்குச் செல்லும் இடங்களில் பாதுகாப்பின்மை, அரசாங்க நலத்திட்டங்களில் குறைவாகப் பங்கெடுத்தல், கல்வி மற்றும் சுகாதார வசதிகள் பற்றாக்குறை, பாலின வேறுபாடுகள் காரணமாக உருவாகும் ஒடுக்குமுறைகள் என்பன மலையகப் பெண்களின் சமூக இடைவெளியில், அவர்களின் கல்வி சார் முன்னேற்றத்தில் சுகாதார விழிப்புணர்வில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்துகின்றன. கல்வி வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், பல பெண்கள் ஆரம்பநிலைக் கல்வியுடன் தமது கற்றல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்கின்றனர். இதன் விளைவாக, வேலைவாய்ப்புக் குறைபாடு, பொருளாதாரச்சார்பு, மற்றும் சமூக முடிவெடுப்புகளில் பங்கேற்பு இல்லாமை

போன்ற பிரச்சினைகள் தொடர்ச்சியாக உருவாகின்றன. அதே போன்று, சுகாதார நலனுக்கான விழிப்புணர்வுக் குறைவால், ஊட்டச்சத்துக் குறைபாடு, தாய்மை மற்றும் குழந்தைகள் நலக் குறைபாடு, மனநலம் சார்ந்த பிரச்சினைகள் ஆகியவை பரவலாகக் காணப்படுகின்றன.

இவ்வாய்வின் முக்கியக் கண்டுபிடிப்பு என்னவெனில், மலையகப் பெண்களின் சமூக முன்னேற்றத்தை விருத்தி செய்ய கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. கல்வித் துறையில் Scholarship, ICT அடிப்படையிலான திறன் பயிற்சி, மற்றும் சமூகக் கற்றல் மையங்கள் (Community learning hubs) நிறுவப்பட வேண்டும். சுகாதாரத் துறையில் Reproductive health clinics, Mobile health camps மற்றும் மனநல ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். மேலும், பெண்களின் மதக் கலாசார அடையாளத்தை மதிக்கும் வகையில் Community centers உருவாக்கப்பட்டால், அவர்கள் பாதுகாப்பான சூழலில் அவர்களின் சமூக பங்கேற்பை அதிகரிக்கலாம். ஆய்வின் முடிவுகளை நடைமுறைச் சூழலோடு பொருத்தி மாற்றும்போது, தோட்டப் பகுதிகளில் 'பெண்கள் கல்வி மற்றும் சுகாதார மையங்கள்' நிறுவப்படுவது முக்கியமான பணியாகும். இம் மையங்கள் மூலமாகப் பெண்களுக்கு அடிப்படைக் கல்வியறிவு, ஆரோக்கிய பரிசோதனைகள், தொழில் முனைவுத் திறன் பயிற்சிகள் வழங்கப்படலாம். இதன்மூலம் சமூக இடைவெளி குறையும், பெண்கள் சமூக முன்னேற்றத்தில் பங்காற்றும் வாய்ப்பும் அதிகரிக்கும். மலையகப் பெண்களின் சமூக இடைவெளி மற்றும் மதக் கலாசார இருப்பு, அவர்களின் கல்வி மற்றும் சுகாதார முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன. ஆனால், சமூக கலாசாரச் சூழலை மதித்து, கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் நடைமுறைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால், அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். இது மட்டுமன்றி, சமூக அசைவு அதிகரித்து, மலையகப் பெண்கள் நாட்டின் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியில் பங்கு பெறும் நிலை உருவாகும்.

மலையகத் தமிழ்ச் சமூகமானது இலங்கையில் சுமார் 8 இலட்சம் மக்களைக் கொண்டுள்ளது (Department of Census & Statistics, 2012). இம்மக்களில் பெரும்பாலோர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். 65% பெண்கள் தொழிலாளர் நிலைமையில் உள்ளனர் (ILO Report, 2018). மலையகக் கிராமங்களில் குடிநீர், சாலை, மின் விநியோகம், மற்றும் வீட்டு வசதி போன்ற அடிப்படை வளங்கள் இன்னும் போதிய முறையில் கிடைக்கவில்லை. இந்நிலை பெண்களின் அன்றாட வாழ்க்கையைச் சிரமப்படுத்துகிறது. குடிநீருக்காக நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியிருப்பது, அவர்களின் கல்வி மற்றும் சமூகச் செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான நேரத்தைக் குறைத்து விடுகிறது. போக்குவரத்து வசதி இல்லாமையால், பெண்கள் மற்றும் சிறுமிகள் மேலதிகக் கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகளைப் பெற முடியாமல் உள்ளனர்.

கல்வி, சுகாதாரம், அடிப்படை வசதிகள் குறைபாடு, மற்றும் குடும்பத்தில் மதுபோதையால் ஏற்படும் வன்முறை போன்ற சமூகப் பிரச்சினைகள் மலையகப் பகுதிகளில் வாழும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் வாழ்க்கையை ஆழமாகப் பாதிக்கின்றன. மலையகக் கிராமங்களில் 42% குடும்பங்கள் மட்டுமே நிலையான குடிநீர் வசதிகளைப் பெற்றுள்ளனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மின் விநியோகம் சுமார் 67% வீடுகளுக்கு சென்றடைகிறது. ஆனால், அடிக்கடி மின் துண்டிப்புக் காரணமாக மாண

“ மலையகப் பெண்களின் சமூக முன்னேற்றத்தை விருத்தி செய்ய கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன ”



வர்கள் இரவுநேரக் கல்வியில் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர். நுவரெலியா மாவட்டத்தில் பெண்கள் தினசரி 1 - 2 கி.மீ தூரம் நடந்து குடிநீர் எடுக்கச் செல்கின்றனர். அத்தோடு, கல்வி, வேலை, குழந்தைப் பராமரிப்பு போன்ற செயல்களில் ஈடுபடுவதாலும் பெண்கள் கல்வியில் ஈடுபடும் நேரம் குறைகிறது. மலையகப் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் முக்கிய சுகாதாரப் பிரச்சினைகளில் ஊட்டச்சத்துக் குறைபாடு முதன்மையானது. அத்துடன், மாதவிடாய் சுகாதாரம் பற்றிய அறிவின்மை, சுகாதாரப் பொருட்களை அணுக முடியாத பொருளாதாரச் சிக்கல்கள், மற்றும் தாய்மை, குழந்தைகள் நலம் சார்ந்த சவால்கள் ஆகியவை அடங்கும். இந்தப் பிரச்சினைகள் அடிப்படை வசதி மற்றும் சுகாதாரச் சேவை அணுகல் குறைபாடுகளால் தீவிரமடைகின்றன. கிராம மட்டத்தில் மருத்துவ முகாம்கள், சுகாதார ஆலோசனைச் சேவைகள், மற்றும் பெண்களுக்குச் சிறப்பாக உள நலம் தொடர்பான சேவைகள் கிடைப்பது மிக அவசியம். மனநலம் சார்ந்த பிரச்சினைகள் குறிப்பாகப் பரவலாக இருந்தாலும், அதற்கான விழிப்புணர்வு மிகக் குறைவாக உள்ளது. தோட்டப் பெண்கள் தினசரி சராசரியாக 8 - 10 மணி நேரம் பணி செய்கின்றனர்.

Save the Children (2019) அறிக்கையின்படி, மலையகக் குழந்தைகளில் 28% பள்ளிக்கு சீரான முறையில் செல்லவில்லை. எடுத்துக்காட்டாகக் கந்தப்பொளையக் கிராமத்தில் குழந்தைகள் பெற்றோர்கள் வேலைக்குச் செல்லும் நேரத்தில் தாத்தா / பாட்டி பராமரிப்பில் வைக்கப்படுகின்றனர். ஆனால், கல்வி சார் ஆதரவு மிகக் குறைவு. Day-care centers இல்லாமையால், 0 - 5 வயது குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படுகின்றனர். (WHO Nutrition Survey, 2022 - 2022 - மலையகத்தில் குழந்தைகளில் 33% stunting).

பெண் பிள்ளைகள் கல்விச் சூழலில் பங்கெடுத்தாலும், கிராமிய மட்டத்தில் நடைபெறும் வேலைத்திட்டங்களில் அவர்களின் பங்களிப்பு மிகக் குறைவு. சமூகக் கட்டுப்பாடுகள், பாலின அசமத்துவம், மற்றும் குடும்பச் சுமைகள் காரணமாக, அவர்கள் சமூக முன்னேற்றத் திட்டங்களில் பங்காற்றும் வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. எனினும், மாணவச் சங்கங்கள், விளையாட்டுக் குழுக்கள், மற்றும் சமூக சேவைத் திட்டங்கள் மூலமாக பெண்கள் பங்கேற்பை ஊக்குவித்தால், அவர்களின் சமூக அசைவு அதிகரித்து, எதிர்காலத் தலைமைத்துவத் திற்கான திறன்கள் வளர வாய்ப்புண்டு.

## குடும்ப சூழல் – மது மற்றும் போதைப்பொருள் பாதிப்பு:

மலையகக் குடும்பங்களில் குடும்பத் தலைவர்கள் மதுபோதையில் ஈடுபடுவது, குடும்பத்தின் பொருளாதார நிலையை மட்டுமல்லாமல், பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பையும் நேரடியாகப் பாதிக்கிறது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல், வீட்டு வன்முறை, பாதுகாப்பின்மை, மற்றும் மன அழுத்தம் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். குறிப்பாக பெண் பிள்ளைகள் குடும்பத்தினரால் திணிக்கப்படும் பாதுகாப்பின்மையின் காரணமாக கல்வியைத் தொடர முடியாமல் போகின்றனர். ADIC Sri Lanka (2023) ஆய்வின்படி, மலையகத் தொழிலாளர்களில் 45% ஆண்கள் அடிக்கடி மது அருந்துவதாகத் தெரிகிறது. 30% குடும்பத்தினர், குடும்பச் சண்டைகள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறைக்கு 'மது போதை' யைக் காரணமாகக் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக நுவரெலியாவின் சில பாடசாலைகளில், மாணவர்களின் கல்விக் குறைபாட்டிற்கு 'குடும்ப வன்முறை மற்றும் மது போதை' போன்றவைகளே பிரதான காரணம் என ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால், பெண் பிள்ளைகள் கல்வியில் பின்தங்குவது மட்டுமல்ல, பாடசாலை இடைவிலகல் விகிதம் 12 - 15% வரை அதிகரிக்கிறது.

## பாடசாலை மட்டத் தீர்வுகள்:

கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துதல் மூலம் மாணவிகளுக்கான சிறப்பு புலமைப்பரிசில் திட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும். பள்ளியை விட்டு விலகும் மாணவிகளுக்கான second-chance education programs (இரவு வகுப்புகள், சமூகக் கற்றல் மையங்கள்) அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இந்தியாவின் National Literacy Mission போல, மலையகத்தில் 'மாணவிகள் எழுச்சித் திட்டம்' (Girls Uplift Program) தொடங்கலாம். பாலினச் சமத்துவக் கல்வியை அறிமுகப்படுத்தி பாடசாலைகளில் Gender Equality Clubs-களை உருவாக்கி, மாணவர்களின் தலைமைத் திறன்களை ஊக்குவிக்கலாம். ஆசிரியர்களுக்கு gender- sensitive training வழங்கப்பட வேண்டும்.

சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நடைமுறைகள் பள்ளி அடிப்படையில் mid-day meal program அமுல்படுத்தப்பட வேண்டும். UNICEF 2021 ஆய்வின்படி, பள்ளியில் உணவு வழங்கப்பட்ட மாணவிகள், வகுப்பு பங்கேற்பில் 20% அதிகமாக ஈடுபட்டனர். மாதவிடாய், சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். பாதுகாப்பு சார்ந்து பள்ளிகளில் child protection committees அமைத்து, மாணவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். பாலியல் தொந்தரவு குறித்த புகார் பெட்டிகள் மற்றும் இரகசிய ஆலோசனை மையங்கள் இருக்க வேண்டும்.

“ பெண் பிள்ளைகள் கல்விச் சூழலில் பங்கெடுத்தாலும், கிராமிய மட்டத்தில் நடைபெறும் வேலைத்திட்டங்களில் அவர்களின் பங்களிப்பு மிகக் குறைவு. சமூகக் கட்டுப்பாடுகள், பாலின அசமத்துவம், மற்றும் குடும்பச் சுமைகள் காரணமாக, அவர்கள் சமூக முன்னேற்றத் திட்டங்களில் பங்காற்றும் வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. ”



“மூகம் வளம் பெற, இந்த மாற்றம் அடிப்படை அலகான வீட்டிலிருந்தே தொடங்க வேண்டும். கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் சமூகம் முழுவதும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். ஒவ்வொருவரும் உணர்ந்து, உண்மையுடனும் அர்ப்பணிப்புடனும் மாற்றம் காண்பதே மலையகத்தின் எதிர்காலத்தை பிரகாசமாக்கும்”



### குடும்ப மட்டத் தீர்வுகள்:

குடும்ப விழிப்புணர்வுக்குப் பெற்றோர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள parental awareness workshops நடத்தப்பட வேண்டும். ஹட்டன் பகுதியில் Save the Children நடத்திய ‘Parent - Teacher Interaction Program’ மூலம், 70% பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மேல்நிலைக் கல்விக்குச் செலுத்தத் தயாரானார்கள். பெற்றோர்கள் - ஆசிரியர்கள் இணைந்து Child Progress Monitoring System உருவாக்க வேண்டும். மாதாந்தப் பெற்றோர் கூட்டங்களில் மாணவிகளின் முன்னேற்றம், சவால்கள் விவாதிக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த அணுகு முறையாகப் பாடசாலையும் குடும்பமும் இணைந்து பங்காற்ற வேண்டும். குழந்தைப் பராமரிப்பு வசதிகள் மற்றும் குடும்ப விழிப்புணர்வுகள் பெண்களுக்கு வேலைக்குச் செல்லும் நேரத்தில் day-care centers அமைக்கப்பட வேண்டும். தாய்மார்களுக்கு nutrition and child care training வழங்கப்பட வேண்டும். குடும்ப ஆலோசனை மையங்கள் மூலம் குடும்பத்தில் ஏற்படும் வன்முறை மற்றும் சண்டைகளுக்கு family counselling units அமைக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக இந்தியாவின் Self Employed Women’s Association (SEWA) போல, மலையகப் பெண்களுக்கு குடும்பச் சட்ட ஆலோசனைகள் வழங்கப்படலாம். குடும்பம் சார் சமூக அமைப்புகள் குடும்பங்கள் மற்றும் NGO-க்கள் இணைந்து Nutrition Gardens அமைத்து, ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைக்கலாம். குடும்ப ஆலோசனை மையங்களைச் சமூக அமைப்புகள் நிர்வகிக்கலாம். மது மற்றும் போதைப்பொருள் எதிர்ப்புகளைக் குடும்பத்தினுள் குடும்பத் தலைவர்களைக் குறிவைத்து de-addiction programs நடத்தப்பட வேண்டும். Community Alcohol-Free Campaigns மூலம் குடும்ப வன்முறையைக் குறைக்க முடியும்.

### சமூக அமைப்புகளின் பங்களிப்பு:

அடிப்படை வசதிகளை உள்ளூர் சமூக அமைப்புகள் (NGO / Youth Clubs) இணைந்து குடிநீர், மின், சாலை வசதிகளை மேம்படுத்த அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும். நுவரெலியாவில் Women Development Federation, 200 குடும்பங்களுக்கு மழைநீர் சேகரிப்புத் திட்டம் அமைத்து குடிநீர் பிரச்சினையைத் தணித்துள்ளது. பெண்களின் சமூக அசைவினை உறுதிப்படுத்த Women’s Community Centers-களை உருவாக்கி, பெண்கள் சமூகக் கலந்துரையாடலில் பங்கேற்கும் வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்ய வேண்டும். தொழில் முனைவுத் திறன்களை வளர்க்க skills development workshops நடத்தப்பட வேண்டும். நலன் சார் சுகாதார சேவைகள் சமூக அமைப்புகளால் mobile health clinics நடத்தி, மாதந்தோறும் சுகாதார பரிசோதனை வழங்க வேண்டும். மனநலம் தொடர்பான peer-support groups உருவாக்கப்பட வேண்டும். கல்வி மற்றும் சமூக பங்கேற்பு மாற்றத்திற்கு இவை வலுச்சேர்க்கும். அதன்படி NGO-கள் girls mentorship programs நடத்தி, மாணவிகளுக்கு உயர் கல்வி, வேலை வாய்ப்பு வழிகாட்டுதலை வழங்க வேண்டும். ADIC நடத்தும் Youth Ambassador Program போல, மலையகப் பகுதிகளில் ‘Girls Leadership Ambassadors’ உருவாக்கலாம். மது மற்றும் போதை எதிர்ப்பு சமூக அமைப்புகள் Awareness street drama, Poster campaigns, Community talks போன்ற வழிகளில் மதுவிலக்கு விழிப்புணர்வைப் பரப்ப வேண்டும். 2023-இல் ஹபுத்தளை பகுதியில் நடந்த ‘Alcohol Free Village Campaign’ மூலம், 15% ஆண்கள் மதுப் பழக்கத்தை நிறுத்தியதாக அறிக்கை கூறுகிறது.

பாடசாலை சமூக அமைப்புகள் பள்ளி மாணவிகளுக்கான career guidance workshops சமூக அமைப்புகள் மூலம் நடத்தப்படலாம். School Community Partnership Programs மூலம் சிறுமிகள் சமூகச் சேவையில் பங்கேற்கலாம். மலையகப் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல அடுக்குகளில் (multi-dimensional) உள்ளன. அடிப்படை வசதிகள் பற்றாக்குறை, குழந்தைப் பராமரிப்புச் சிக்கல்கள், சுகாதார சேவைக் குறைபாடு, மற்றும் குடும்பத்தில் மது போதையால் உருவாகும் வன்முறை ஆகியவை அனைத்தும் இணைந்து அவர்களின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்தைத் தடுக்கின்றன.

சமூகம் வளம் பெற, இந்த மாற்றம் அடிப்படை அலகான வீட்டிலிருந்தே தொடங்க வேண்டும். கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் சமூகம் முழுவதும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். சுவாமி விவேகானந்தர் கூறியது போல, ‘நீ திருந்து, உலகு தானே திருத்தும்’ என்ற தத்துவத்தை ஏற்று, ஒவ்வொருவரும் உணர்ந்து, உண்மையுடனும் அர்ப்பணிப்புடனும் மாற்றம் காண்பதே மலையகத்தின் எதிர்காலத்தை பிரகாசமாக்கும்.



laksharan.sarawanan@thaiveedu.com

# முக்கிய வெற்றிக் காரணிகள்

– நடராசா சிறிரஞ்சன்

முக்கிய வெற்றிக் காரணிகள் (Critical Success Factors - CSFs) என்றதொரு கருத்துரு வணிகத்தில் உண்டு. இதன்படி, வணிக மொன்று வெற்றிபெற வேண்டுமாயின் அதற்குரிய முக்கிய வெற்றிக் காரணிகளை அடையாளம் கண்டு அவற்றை மிகச்சரியாக வணிகச் செயற்பாடுகளில் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

முக்கிய வெற்றிக் காரணிகள் வணிகத்தின் தன்மைக்கேற்றவாறு வேறு படும். உதாரணமாக பல்பொருள் அங்காடியை எடுத்துக் கொண்டால் அதற்குரிய முக்கிய வெற்றிக் காரணிகளாக பல்தரப்பட்ட பொருட்கள் விற்பனைக்கு இருத்தல், பணம் செலுத்தும் கருமபீடத்தில் நீண்ட வரிசை இல்லாதிருத்தல் மற்றும் போதியளவான வாகனத் தரிப்பிடம் இருத்தல் என்பவற்றைக் குறிப்பிடுவர்.

இந்த விடயங்கள் மிகச்சரியாக இல்லாவிட்டால் குறிப்பிட்ட வணிக முயற்சி வெற்றியளிக்காது. எனவே ஒவ்வொரு வணிக முயற்சியும் அதற்குரிய முக்கிய வெற்றிக் காரணிகளை மிகச்சரியாக அடையாளம் கண்டு, அவை மிகச்சிறந்த முறையில் தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுவதை உறுதிப் படுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடுதல், நிபுணர்களின் உதவியை நாடுதல் போன்றவற்றினூடாக முக்கிய வெற்றிக் காரணிகளை அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.

இக்கட்டுரையின் நோக்கம் முக்கிய வெற்றிக் காரணிகளின் முக்கியத் துவத்தை எடுத்துக்கூறுவதல்ல. பதிலாக நாம் முக்கிய வெற்றிக்காரணிகள் என்று அடையாளம் காணப்படாத வேறு சில சிறு சிறு விடயங்களும் வணிக மொன்றின் வெற்றி தோல்வியில் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பதை வலியுறுத்துவதாகும்.

**“வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடுதல், நிபுணர்களின் உதவியை நாடுதல் போன்றவற்றினூடாக முக்கிய வெற்றிக் காரணிகளை அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.”**



tg.theeban@gmail.com




எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனச் சில்லிற்கு காற்றடிப்பதற்குரிய வசதியிருப்பது எமக்குத் தெரியும். அங்கு பொதுவாகக் காற்றடிப்பதற்கு கட்டணம் அறவிடுவதில்லை என்பதுடன் காற்றடித்து விடுவதற்கென ஊழியர்கள் இருப்பது மில்லை. நாமாக அந்தக் காற்றடிக்கும் கருவியை இயக்கிக் காற்றடித்துக் கொள்ள வேண்டும். சில இடங்களில் யாசகர் ஒருவரோ குறிப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்துடன் சம்மந்தப்படாத ஒருவரோ காற்றடித்துவிட்டு நாம் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொள்வர்.

கொழும்பில் உள்ள ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காற்றடிப்பதற்கு உதவுமொருவர் இருந்தார். அவர் காற்றடிக்கும்போது தடுக்கிதழ் (valve) பழுதடைந்துவிட்டது அதை மாற்ற வேண்டும், என்னிடம் புதிய தடுக்கிதழ் உள்ளது என்றுகூறி அதை மாற்றிவிட்டு பணம் பெற்றுக் கொள்வார். ஒவ்வொரு முறை போகும் போதும் அவர் அவ்வாறு சொல்வார். இதைக் கவனித்த சிலர் அவ்வெரிபொருள் நிரப்பு நிலையத்தைத் தவிர்க்கத் தொடங்கினர்.

இதேகாலத்தில் அதற்கு அண்மையில் உள்ளதொரு மற்றொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் ஒரு யாசகர் காற்றடித்துப் பணம் பெறுபவராக இருந்தார். அவர் நேர்மையானவர் என்பதுடன் மிகச் சிறப்பான முறையில் காற்றடிக்கும் பணியைச் செய்து வந்தார். இதனால் பலர் இந்த நிலைத்துக்கு வந்து எரிபொருளையும் நிரப்பித் தேவைப்படின் காற்றையும் நிரப்பிச் செல்வதை வழக்கமாகக் கொண்டனர். இதனால் அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் விற்பனை கணிசமானளவு அதிகரித்தது. மற்றைய எரிபொருள் நிலையத்தின் வருமானம் குறைவடைந்தது. இந்த நிலையம் கூட்டுறவுச் சங்கத்துக்கு உரிமையானது என்பதாலோ என்னவோ இந்த மாற்றத்தை அவர்கள் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

காற்றடித்துக் கொடுப்பதால் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எந்த வருமானமும் கிடைப்பதில்லை என்பதால் அதன் முகாமை, அது தொடர்பில் அக்கறை எடுப்பதில்லை. அங்கிருந்து காற்றடித்துக் கொடுத்துப் பணம் பெறும் யாசகர் முதலானோரது நடவடிக்கைகளை அவர்கள் கவனத்தில் கொள்வதுமில்லை. சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள காற்று நிரப்பும் கருவி செயற்படுவதேயில்லை.

இதேபோன்று இரண்டு உணவகங்கள் இருந்தன. அவற்றின் உணவின் சுவை, பரிமாறும் முறை போன்றவை ஏறக்குறைய ஒரே தரத்தில் இருந்தன. ஆனால் ஒன்றின் காசாளரிடம் பணம் செலுத்தப் போனால் அவர் பெரும்பாலான நேரங்களில் தனது கைத்தொலைபேசியைக் காதுக்குள் வைத்து எவருடனோ கதைத்துக்கொண்டிருப்பார் என்பதுடன் ‘மாற்றிய காசு இல்லையா?’ என்று கேட்டு, மாற்றிய காசு இல்லாவிடின் பணியாளார் ஒருவரைக் கூப்பிட்டு பக்கத்துக் கடையில் மாற்றிக்கொண்டு வருமாறு பணிப்பார். இதனால் வாடிக்கையாளர் கணிசமான நேரம் காத்திருக்க வேண்டியேற்படும்.

ஆனால் மற்றைய உணவகத்தில் அவ்வாறில்லை, ஐயாயிரம் ரூபாய்த்தாள் கொடுத்தாலும் உடனடியாக மிகுதி கொடுக்கப்படும் என்பதுடன் அவர் கொடுக்கும் பணத்தாள்கள் புத்தம் புதிதாக இருக்கும். இந்தவொரு சிறிய விடயம் இந்த இரு உணவங்களிற்குச் செல்லும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிட்டதொரு தாக்கத்தை ஏற்படுத்தியதை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

இவ்வாறான விடயங்கள் வணிக நிறுவனத்தின் முக்கிய வெற்றிக் காரணிகளல்ல என்றபோதும், அவை குறிப்பிட்ட நிறுவனத்தின் வெற்றி தோல்வியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைச் செலுத்துபவையாக இருக்கின்றன.

எனவே முகாமையாளர்கள் முக்கிய வெற்றிக் காரணிகளில் மட்டும் அவதானம் செலுத்துவதுடன் நின்றுவிடாது இவ்வாறான சிறு விடயங்களில் ஏற்படும் தவறுகள் தங்கள் நிறுவனத்தின் பெறுபேற்றில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொண்டு செயற்படுதல் வேண்டும்.

இவற்றை ‘முக்கியமற்றவையெனினும் வெற்றிக்கு வழிகோலும் காரணிகள்’ (They are not critical success factors, but they are key contributers to the success) என்று அடையாளப்படுத்தி அவற்றையும் தொடச்சியாகக் கண்காணித்து வருதல் வேண்டும்.



Nadarasa.sriranjan@thaiveedu.com



# வீரவாகுதேவர் வேள்வி

■ நாகராசா லக்சிகா

### வீரவாகுதேவர் தோன்றிய வரலாறு:

முற்காலத்தில் சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் ஆகிய மூன்று சகோதர அசுரர்களும் சாகா வரம் வேண்டி பல ஆண்டுகளாகச் சிவனை நோக்கி கொடிய தவம் இருந்தனர். அவர்களின் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவர்கள் முன் தோன்றி சாகா வரம் தர முடியாது, வேறு வரம் கேட்கச் சொல்ல, அசுரர்களும் சிவனின் மகனால்தான் எங்கள் மரணம் நிகழ வேண்டும் என்று வரம் கேட்டனர். சிவபெருமானும் அந்த வரத்தைக் கொடுத்து அருளினார்.

வரம் பெற்ற அசுரர்கள் தலைக்கனத்துடன் ஆணவமாக மும்மூர்த்திகளால்கூட தமக்கு மரணம் இல்லை எனப் பல அட்டூழியங்களைச் செய்யத் தொடங்கினர். தேவர்களைச் சிறை பிடித்து தேவ லோகத்தை அசுரர்கள் கைப்பற்றினார்கள். அசுரர்களின் பிடியில் இருந்து தப்பிய சில தேவர்கள் சிவ பெருமானிடம் சரணடைந்தனர். சிவபெருமானும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து அசுரர்களின் மரண காலம் நெருங்கும்போது ஒரு மகனைத் தோற்றுவித்து அவன் மூலம் சூரனையும் அவன் சகோதரர்களையும் வதம் செய்வேன் என வாக்களித்தார். நாளுக்கு நாள் சூரனின் ஆணவச் செயல்கள் அதிகரித்துக்கொண்டே சென்றன. கோபம் கொண்ட சிவ பெருமானும் தனது விஸ்வரூபம் எடுத்து தனது ஆறுமுகங்களான ஈசானம், தற்புருசம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம், அதோமுகம் ஆகிய முகங்களில் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு தீப் பொறிகளை விட்டார். ஆறு தீப்பொறிகளும் சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாகத் தோன்றின.

அதே சமயம் சிவனின் நெற்றிக் கண் திறந்த வெப்பம் தாங்க முடியாத பார்வதி தேவியார் பதறி ஓடினார். இவ்வாறு பார்வதி தேவியர் ஓடும்போது அவரின் இரண்டு கால்களிலும் உள்ள சிலம்புகள் ஒன்றோடு ஒன்று மோதி நவரத்தினங்களும் சிதறின. அவ்வாறு சிதறிய நவரத்தினங்களும் ஒன்பது பெண்களாக உருமாறின. அந்த ஒன்பது பெண்களிலும் சிவனின் பார்வை பட அவர்கள் ஒன்பது பேரும் கருத்தரித்து ஒன்பது வீர புத்திரர்களை ஈன்றெடுத்தனர். அவ்வீரர்கள் நவவீரர்கள் என அழைக்கப்பட்டனர். நவவீரர்களின் மூத்தவரே வீரவாகுதேவர் ஆவார்.

நவரத்தினப் பெண்களும் அவர்களில் இருந்து தோன்றிய நவவீரர்கள்:

- மாணிக்கவல்லி - வீரவாகு
- முத்துவல்லி - வீரகேசரி
- புஷ்பராகவல்லி - வீரமகேந்திரன்
- கோமேதகவல்லி - வீரமகேசன்
- வைடூரியவல்லி - வீரபுரந்தகன்
- வைரவல்லி - வீரரட்சகன்
- மரகதவல்லி - வீரமார்த்தாண்டன்
- பவளவல்லி - வீரராந்தகன்
- நீலவல்லி - வீரதீரன்

இந்த நவவீரர்களும் முருகனுடன் இணைந்து சகோதரர்களாக வளர்ந்தனர்.

போர்க்காலம் தொடங்கியது வீரவாகுதேவர் முருகப்பெருமானின் வீரத்தளபதியாக இருந்து பல வீரச் செயல்கள் புரிந்ததுடன் சூரர்களின் நகரமான வீரமகேந்திரபுரத்திற்கு முருகனின் ஆணையை ஏற்று சமாதானத் தூதுவனாகச் சென்று சூரனின் அரண்மனையில் அவமதிப்பு ஏற்பட்டபோது சூரனின் சிம்மாசனத்துக்குச் சமமான சிம்மாசனம் அமைத்து அதில் அமர்ந்து முருகன் கூறிய தகவல்களைக் கூறிவிட்டு சென்றார்.

இவ்வாறாக போரிலே சூரனின் மகனான பானுகோபன் எனும் அசுரனை வீரவாகுதேவர் வதைத்தார். மேலும் அக்னிமுகாசூரன் எனும் அசுரன் வீரவாகுதேவரை வெல்ல முடியாமல் தனது தெய்வமான காளியை ஏவி விட சிங்கத்தின் மீது ஏறிய காளி வீரவாகு தேவனை எரித்து வரத் தனது திரிசூலத்திற்கு கட்டளையிட்டு எறிகின்றார். அப்போது வீரவாகுதேவர் காளியின் திரிசூலத்தை துண்டாக உடைத்து காளியின் எட்டுக் கைகளையும் ஒரு கையால் பிடித்து தனது மறு கையால் காளியின் கன்னத்தில் ஓங்கி அடிக்க காளிதேவி மூர்ச்சை ஆகியதாகவும் பின் மூர்ச்சை தெளிந்த காளிதேவி வீரவாகுதேவனிடம் மன்னிப்புக் கேட்டு விடை பெற்றதாகவும் கந்தபுராணம் கூறுகின்றது. இவ்வாறாகப், பல அசுரர்களையும் வதைத்து சூரன்போரில் முருகனுக்குத் துணையாக நின்ற வீரவாகுதேவர் சூரசங்காரம் முடிந்தவுடன் முருகப்பெருமானுக்கும் தெய்வானை அம்மனுக்கும் திருமணம் நடத்தவும் ஏற்பாடுகள் செய்து திருமணத்தையும் நடத்திமுடித்தார்.

பின்னர் முருகப்பெருமான் வள்ளியம்மனைத் தேடி கதிர் காமம் சென்று வள்ளியம்மனைத் திருமணம் முடித்து வாழ்ந்து வந்தார். அதனால், தெய்வானைத் தாயார் துயரத் திற்குள்ளானார். தெய்வானைத் தாயாரின் மனவருத்தத் தினைத் தீர்க்க வீரவாகுதேவர் கதிர்காமம் வந்து முருகப்பெ ருமானையும் தெய்வானை அம்மனையும் சேர்த்து வைக் கின்றார். கதிர்காமத்தில் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராகப் பக்தர்களுக்குக் காட்சியும் அளிக் கின்றார்.

பின்னர் வீரவாகுதேவர் கதிர்காமத்தில் முருகனின் ஆணையை ஏற்று ஒரு மலையில் சென்று குடிகொண்டு பக் தர்களுக்கு அருள் வழங்கி வருகின்றார். தற்போது அந்த மலை வீரவாகுமலை என அழைக்கப்படுகின்றது. இவ்வாறாக ஆதிகால இலங்கையர்களின் தெய்வங்களில் ஒன்றாக வீரவா குதேவர் வணங்கப்பட்டார். கதிர்காமத்தில் முருகனை வழிபட் டதாகவும் வீரவாகு தேவரையும் இராவணன் வழிபட்டதாகவும், இராவணன் மற்றும் இந்திரஜித் போன்றோரின் மறைமுகமான தெய்வமாக வீரவாகு தேவர் காணப்பட்டார் எனவும் செவிவழிக் கதைகள் பல கூறுகின்றன. இன்றும் கதிர்கா மத்தில் வீரவாகுமலை என்று கூறப்படும் மலையில் வீரவாகு தேவருக்கு இரகசியமான பூசைகள் நடப்பதாகக் கூறப்படு கின்றது.

## வீரவாகு தேவர் வழிபாடு:

### சேனையூர் பிரதேசத்தில் வீரவாகு வழிபாடு:

கதிர்காமத்தில் பால்குடிபாபா சன்னிதானம் என்று ஒரு மடம் இருப்பது யாவரும் அறிந்ததே. பால்குடிபாபா என்பவர் இறைநிலை அடைந்த ஒரு சித்த புருஷர் ஆவார். பால்கு டிபாபா சமாதி அடைய முன்னர் அவர் உயிருடன் இருந்த காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் சேனையூரில் வசித்த விஜயசிங்கம் காளியப்பு (வைத்தியர், பூசகர், மாந்தி ரீகர், சாத்திரியார்) அவர்கள் கதிர்காமம் சென்றபோது பால்கு டிபாபா ஐயாவைச் சென்று தரிசித்துள்ளார். அப்போது பால் குடிபாபா அவர்கள் காளியப்பு ஐயாவுக்கு வீரவாகு தேவரின் மறைமுகமான இரகசிய வழிபாட்டு பத்தறி முறையைக் கொடுத்து உனக்கு தேவையற்ற மாந்திரீகப் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கவும், மாந்திரீகப் பிரச்சினைகளான ஏவல், பூத, பிரேத, பிசாசு, பில்லி, சூனிய, வஞ்சனைகளில் இருந்து விடுபடவும் வீரவாகுதேவரை வணங்கி வேள்வி செய்து வழிபட்டு வா அவர் முன்னின்று காப்பார் என்று கூறி மனமு வந்து வீரவாகு வழிபாட்டு முறையை காளியப்பு ஐயாவுக்கு பால்குடிபாபா ஐயா அவர்கள் கொடுத்துள்ளார்.

அவ்வாறே காளியப்பு ஐயாவும் வீரவாகுதேவரை வணங்கிய துடன் அவரது வழிவந்த குடும்பங்களும் இன்றுவரை வீரவாகு தேவரைப் பயபக்தியுடன் வணங்கி வருடா வருடம் அவருக்கு வேள்வி செய்து வழிபட்டு வருகின்றனர்.

## வீரவாகுதேவர் வேள்வி:

வீரவாகுதேவர் வேள்வியானது ஒரு பலிமுறை பத்ததி வேள்விச் சடங்காகும். இந்த வீரவாகுதேவர் வேள்வியில் கோழி பலியிடுதலே முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது. பலியிடப்படும் கோழியானது கறியாகச் சமைக்கப்பட்டு படை யிலிடப்படுகின்றது. அத்தோடு வீரவாகுதேவருக்குச் சாராயம், கள்ளு, கஞ்சாச்சிலுகு என்பனவும் வைக்கப்பட்டு வந் துள்ளது. இச்சடங்கானது குறிப்பாக வளர்பிறையில் வரும் ஏதாவது ஒரு சனிக்கிழமை மாலைப்பொழுதில் ஆரம்பமாகி இரவு வேளையில் பூசைகள் இடம்பெற்று நிறைவடையும்.

மேலும், இந்த வேள்வியினைச் செய்யும் பூசகர் பூசையை வாய் கட்டி செய்ய வேண்டும் என்ற முறை காணப்படுகின்றது. அத்தோடு, அமுது, கறி சமைத்தல், அவிபாகம் செய்தல் போன்றவற்றைச் செய்பவர்களும் வாய் கட்டி செய்ய வேண்டும் என்ற மரபு பேணப்பட்டு வருகின்றது.

வீரவாகு வேள்வியானது கோழி நேருதல், கூடாரம் கட்டுதல், அபிஷேகம் செய்தல், கும்பம் வைத்தல், கோழி பலியிடுதல், அமுது, கறி சமைத்தல், அவிபாகம் செய்தல், படைத்தல், பூசை, கும்பம் சொரிதல், பிரசாதம் வழங்குதல் என ஒரு படிமுறை ஒழுங்கில் நடைபெறுகின்றது.

### | கோழிநேருதல்:

கோழி நேருதலானது வேள்வி செய்யப்படும் வீட்டுக்காரர் களால் அழகான காயங்கள் அற்ற, ஆரோக்கியமான ஒரு பாணிச்சேவல் ஒன்று வாங்கப்பட்டு வேள்வி செய்யப்படும். ஒரு வருடத்திற்கு முன்னரே பூசகரால் வீட்டுக்காரர்களின் தலையைச் சுற்றி இவர்களுக்கு எந்த இன்னல்களும் நேராமல் இவர்களைக் காக்க வேண்டும் என்று கோழியின் காலில் நூல் கட்டி நேர்ந்து விடப்படும். நேர்ந்து விடப்படும் சேவல் நிற்கும் இடத்தில் எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடக்காது என்பது பக்தர்களின் நம்பிக்கையாகக் காணப்படு கின்றது.

### | கூடாரம் கட்டுதல்:

வேள்வி செய்யப்படும் வீட்டுக்காரர்களால் தமது வீட்டு முற் றத்தில் மேற்கு பார்த்த திசையில் கூடாரம் அமைக்கப்படும். இக்கூடாரமானது கம்பு தடிகளைக் கொண்டும், கட்டாடியாரிட மிருந்து பெறப்படும் துணி அல்லது சாறியைக் கொண்டும் கட்டப்படும்.

## | அபிஷேகம்:

வேள்வி நடக்கும் நாளன்று முதலாவதாக இடம்பெறும் செயற்பாடு அபிஷேகம் ஆகும். சாமிப்படியில் சூலம், பொல்லு என்பன காணப்படும். அவற்றோடு சேர்த்து கும்பம் வைப்பதற்கான இயந்திரத் தகடுகளுக்கும் சேர்த்து அபிஷேகம் இடம்பெறும்.

அபிஷேகமானது பின்வரும் ஒழுங்கு முறையில் இடம்பெறும். நீர், அபிஷேகத்தூள், பால், தயிர், பஞ்சாமிர்தம், கரும்பு, இளநீர், திருநீறு, சந்தனம், குங்குமம், பன்னீர் என்ற ஒழுங்கில் ஒவ்வொரு பொருட்களினாலும் அபிஷேகம் செய்த பின்னர் சாம்பிராணி, தூபதீபம் என்பன காட்டி பின் நீரால் மீண்டும் கழுவப்படும். இறுதியாகப் பன்னீரால் அபிஷேகம் செய்த பின்னர் நீரால் கழுவப்பட மாட்டாது. பின்னர் சூலம், பொல்லு என்பவற்றிற்கு திருநீறு, சந்தனம், குங்குமம் இட்டு பின்னர் மலர் மாலைகள், கறுப்புப்பட்டு சூலத்திற்கு சாத்தி அலங்க ரிக்கப்படும்.

## | கும்பம் வைத்தல்:

பூசகரால் கும்பம் வைக்கப்படும் குடத்திற்கு வலம்புரியாக நூல் சுற்றி எடுக்கப்படும். பின்னர் வீட்டுக்காரர்களால் அமைக்கப்பட்ட கூடாரத்திற்குள் கும்பம் வைக்கும் இடத்தில் பச்சை அரிசி குவியலாக இடப்பட்டு அதன் மேல் வெற்றி லைகள் அடுக்கி வைக்கப்படும். வெற்றிலைகளைப் பீடமாகக் கருதி பீடத்திற்குப் பிராண பிரதிஷ்டை மந்திரம் மூலம் உருவேற்றி, பீடத்தின் மேல் அட்சரத்தகட்டினை வைப்பர். பிரணவ மந்திரத்தினாலும் வீரவாகு தேவருக்கே உரிய உச்சாடன மந்திரத்தினாலும் உருவேற்றியே அட்சரத் தகடு பீடத்தில் வைக்கப்படும்.

பின்னர், கும்பம் வைக்கும் குடத்திற்குள் நீரூற்றி அதற்குள் பன்னீர், அத்தர், ஜவ்வாது, கும்பத்திரவியம் என்பனவும் இடப் பட்ட பின்னர் குடத்திற்குள் வேப்பங்குழையை இட்டு குடத்தின் வாய்ப்பகுதியில் சென்று பொருந்துமாறு முடி சீவிய தேங்காய் வைக்கப்படும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட கும்பத்திற்கு திருநீறு, சந்தனம், குங்குமம் இட்டு, பட்டுச் சாத்தி, மலர்மாலைகள் இடப்பட்டு, பூக்களால் அலங்கரிக்கப்படும். பின்னர் தூப தீபம் காட்டி பூசகரால் பிரணவ மந்திரம், வீரவாகுதேவரின் உச்சாடன மந்திரம் என்பனவற்றால் உருவேற்றி கும்பமானது தயாரிக் கப்பட்ட படத்தில் வைக்கப்படும்.

வைக்கப்பட்ட கும்பத்தில் வீரவாகுதேவரின் ஆயுதமான பொல்லு சாத்தப்படும். இவை அனைத்தும் கட்டப்பட்ட கூடா ரத்திற்குள் வெள்ளை விரிக்கப்பட்டு, விளக்கு வைத்த பின் செய்யப்படும். பூசகரால் கும்பம் வைப்பதற்கு முன்னர் தீர்த்த சட்டி ஓதி எடுக்கப்படும். மேலே கூறிய கும்பம் வைக்கும் ஒவ்வொரு செயற்பாடும் நடக்க முன்னர் தீர்த்தம் தெளிக்கப்படும்.

## | பலியிடுதல்:

வீரவாகு வேள்வியின் முக்கிய கட்டமாகக் காணப்படுவது கோழி பலியிடுதல் ஆகும். இச்சடங்கிற்கு நன்கு வளர்ந்த காயங்கள் இல்லாத, ஆரோக்கியமான பாணிச்சாவல் தெரிவு செய்யப்படும். பலியிடுதலின் போது சில சடங்குகள் பின்பற் றப்படுகின்றன.

அவை கோழிக்கு உபதேசம் கொடுத்தல், சாராயம், தீர்த்தம் கொடுத்தல், கோழியின் காதில் பலி மந்திரம் கூறுதல், வேள்வி செய்பவர்களின் தலையைச் சுற்றுதல், பலியிடுதல், பலி காவல் செய்தல் என்பனவாகும். பலியிடுதலானது வேள்வி நடக்கும் இடத்தில் உள்ள வீரவாகுதேவரின் சாமிப்ப டியில் இடம்பெறும்.

முதலில் பலியிடுதலுக்கான தீர்த்தச்சட்டி பூசகரால் எடுக்கப் படும். பின்னர் வெள்ளை விரித்து அதன் மேல் வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து மடை வைக்கப்படும். மடையின் முன்னால் வாழை இலையால் செய்யப்பட்ட கொட்டுவம் வைக்கப்படும். கொட்டுவம் என்பது வாழை இலையால் செய் யப்பட்ட பெட்டி போன்ற ஒரு அமைப்பாகும். மேலும் மடையின் முன்னால் சாராயம் வைக்கப்படும். பின் நேர்ந்து விடப்பட்ட சேவல் கொண்டுவரப்பட்டு மஞ்சள் கலந்த நீரால் நீராட்டிய பின்னர் மேற்கூறிய படிமுறை ஒழுங்கில் பலியி டுதல் சடங்கு இடம்பெறும்.

## | அமுது, கறி சமைத்தல்:

பலியிடுதல் நிறைவடைந்ததும் பலியிடப்பட்ட கோழியானது உரித்து அதன் இறைச்சி சாமியாருக்குப் படைப்பதற்காக கறி சமைக்கப்படும். கறி சமைப்பவர் வாய் கட்டி இறைச்சி, மிளகாய்த்தூள், பால், வெங்காயம், உப்பு, புளி, சுவைச்சரக் குகள், வாசனைத்திரவியங்கள், கறிவேப்பிலை என்பவற்றை எல்லாம் ஒரே தடவையில் மண்சட்டியில் இட்டு சட்டி மூடப் படும். பின் சட்டி திறக்கப்படாமல் கறி சமைக்கப்படும். படை யலுக்காகப் படைக்கப்படும் போதே மூடப்பட்ட சட்டி திறக் கப்படும்.

அதேபோன்று, அமுதும் சமைக்கப்படும். பச்சை அரிசி, தேங் காய்ப்பால் என்பவற்றைப் பானையில் இட்டு அடுப்பில் தூக்கி வைத்து விட்டு பானையைச் சட்டியால் மூடினால் பின் பானை திறக்கப்படமாட்டாது. பானை திறக்காமலேயே அமுது சமைத்து எடுக்கப்பட வேண்டும். படையலுக்காகப் படைக்கப்படும் போதே ஆரம்பத்தில் பானையினை மூடிய சட்டி திறக்கப்பட வேண்டும்.

## | அவிபாகம் செய்தல்:

அவிபாகம் என்பது படையலுக்காகச் செய்யப்படும் மோதகம், வடை, சிலுகு, அரியதரம், முறுக்கு, அவல், கடலை என்பவற்றைக் குறிக்கும் பொதுவான சொல்லாகும். அவிபாகம் செய்தலானது கும்பம் வைத்த பின்னரே செய்யத் தொடங்க வேண்டும் என்று ஐதீகம் கூறுகின்றது. அவிபாகம் செய்பவர்கள் வாய் கட்டி செய்ய வேண்டும் என்ற விதியும் காணப்படுகின்றது.

## | படைத்தல்:

அவிபாகம், அமுது, கறி என்பன சமைத்து முடிந்தவுடன் படையல் படைக்கப்படும். பொதுவாக காவல் தெய்வங்க

ளுக்கு குவியல் முறையிலான படையல் படைக்கப்படு கின்றது. அதாவது குவியல்முறைப் படையல் என்பது படைக் கப்படும் அனைத்துப் பொருட்களும் குவியலாகப் படைக்கப் படும்.

மேலும், வீரவாகுதேவர் வேள்வியில் ஒரு படையல் மட்டுமே படைக்கப்படும். முதலில் குவியலாக அமுது படைக்கப்பட்ட பின்னர், அதன் நடுவில் கறி வைக்கப்படும் பின் அதைச் சுற்றி ஏனைய அவிபாகங்கள் படைக்கப்படும். வடையானது மாலையாகக் கட்டப்பட்டு கும்பத்திற்கு இடப்படும். மேலும் சாராயம், கள்ளு என்பனவும் வைக்கப்பட்டிருக்கும்.

### | பூசை:

படையல் முடிந்ததும் பூசை ஆரம்பமாகும். முதலில் தூப தீபம் காட்டித் தேங்காய் உடைக்கப்படும். உடைக்கப்பட்ட தேங்காய் பாதி இரண்டிலும் சாராயம், கள்ளு என்பன ஊற்றி படையலில் வைக்கப்படும். மீண்டும் பூசகரால் தூப, தீபம் காட்டிய பின் வீரவாகுதேவருக்குரிய துதி, அகவல், காவியம் என்பன படிக்கப்படும்.

இவ்வாறு பூசையின் போது பாடல்கள் படிக்கப்படும்வேளை தெய்வமாடுபவரின் உடலில் தெய்வம் உருவேறி தெய்வமா டுதல் நடைபெறும். சாமியார் உருவேறி வந்தவுடன் வேள்வி செய்யும் வீட்டுக்காரர்களை அழைத்து முகம் கழுவி திருநீறு, சந்தனம், குங்குமம் என்பன அவர்களுக்கு இட்டு பின் அவர் களின் பிரச்சனை மற்றும் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் என் பவற்றை ஆடும் சாமி கட்டுக்கூறும். இவ்வாறாக வீட்டுக்கா ரர்கள் அனைவருக்கும் கட்டுக்கூறி முடிந்ததும் சாமியாடுப வரின் உடலில் இருந்து சாமி நின்ற பின் பூசையானது நிறை வடையும்.

### | கும்பம் சொரிதல்:

பூசைகள் அனைத்தும் நிறைவடைந்ததும் பூசகரால் படையல், மடை, கும்பம் என்பவற்றிற்கு தீர்த்தம் தெளிக்கப் பட்டு படையல், மடை என்பன பிரிக்கப்படும். பின் கும்ப மானது பூசகரால் தூக்கப்பட்டு வீட்டுக்காரரின் கைகளில் கொடுக்கப்பட கும்பமானது கொண்டு செல்லப்பட்டு கிணற் றிற்குள் சிறிது சொரிந்து விட்டு பின்னர் கால் படாத இடத்தில் உள்ள காய்க்காத மரம் ஒன்றில் கும்பத்தைச் சொரிப்பர். இத்துடன் வேள்வியானது நிறைவடையும்.

### | பிரசாதம் வழங்கல்:

பூசை முடிந்ததும் கும்பம் சொரிய முன்னரே திருநீறு, சந்தனம், குங்குமம், காளாஞ்சி என்பன பூசகரால் வழங்கப் படும். கும்பம் சொரிந்த பின்னர் அமுது, கறி, பலகாரங்கள் என்பன வழங்கப்படும்.



laksika.nakarasa@thaiveedu.com



> “ வீரவாகுதேவர் வேள்வியில் ஒரு படையல் மட்டுமே படைக்கப்படும். முதலில் குவியலாக அமுது படைக்கப்பட்ட பின்னர், அதன் நடுவில் கறி வைக்கப் படும் பின் அதைச் சுற்றி ஏனைய அவிபாகங்கள் படைக்கப்படும். வடையானது மாலையாகக் கட்டப்பட்டு கும்பத்திற்கு இடப்படும். மேலும் சாராயம், கள்ளு என்பனவும் வைக்கப்பட்டிருக்கும். ”

# தெற்காசிய இளைஞர் புரட்சிகளும் ஜனநாயக அறைகூவலும்

## நாகராசா தனுஸ்காந்

தெற்காசிய அரசியல் போக்கில் தொடர்ச்சியாக மூன்று வருடங்களில் மூன்று அரசாங்கங்களை மக்கள் கிளர்ச்சிகள் பதவி கவிழ்த்திருக்கின்றன. முதலாவதாக, 2022-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் அறகலய மக்கள் கிளர்ச்சி ராஜபக்ச ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது.

இரண்டாவதாக, 2024 ஆகஸ்டில் பங்களாதேஷ் மக்கள் கிளர்ச்சி பிரதமர் ஷேய்க் ஹசீனாவின் அரசாங்கத்தை பதவி கவிழ்த்தது.

மூன்றாவதாக, அதே போன்ற மக்கள் கிளர்ச்சி நேபாளத்தில் பிரதமர் கே.பி. சர்மா ஒலியின் அரசாங்கத்தை வீழ்த்தியிருக்கிறது. இலங்கையினதும் பங்களாதேஷினதும் கிளர்ச்சிகளின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் ஷேய்க் ஹசீனாவும் நாட்டை விட்டு தப்பியோடினார்கள். ஆனால், கடந்த வாரம் பதவியில் இருந்து விலகிய நேபாளப் பிரதமர் இராணுவத்திடம் பாதுகாப்பைத் தேடிக் கொண்டார். நாட்டை விட்டு வெளியேறிய கோட்டாபய சில வாரங்களில் நாடு திரும்பிய அதேவேளை, ஷேய்க் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கிறார். அவரை பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் விசாரணைக்கு உட்படுத்துவதற்காக நாடு கடத்துமாறு பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்ற போதிலும், இந்தியா அதற்கு இணங்குவதற்கான சாத்தியங்கள் இல்லை.

விகிதாசார ரீதியில் உலகில் மிகக் கூடுதலான இந்து மக்கள் வாழும் நாடான நேபாளத்தில் கடந்த வாரம் வெடித்த அரச எதிர்ப்புப் போராட்டத்தால் அந்நாட்டு அரசாங்கம் கவிழ்ந்தது. ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலவரங்களை அடுத்து, அந்நாட்டுப் பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் இராஜினாமா செய்ய நேர்ந்ததோடு, முன்னாள் பிரதம நீதியரசரான சுஷிலா கார்க்கி இடைக்கால பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.



ஜென் ஸீ (GEN-Z) என அமெரிக்க ஆங்கிலத்திலும் ஜென் இசெட் என்று பிரிட்டிஷ் ஆங்கிலத்திலும் அழைக்கப்படும் 1997-க்கும் 2012-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்து, தற்போது 13 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கும் தலைமுறையினரின் போராட்டமாகவே வங்காள தேசத்தில் வெடித்த போராட்டம் நோக்கப்படுகிறது. வறுமை, வேலைவாய்ப்பின்மை, அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் பாரியளவிலான ஊழல், ஆட்சியாளர்கள் தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தனிச் சலுகை வழங்குதல் ஆகியனவே நேபாள இளைஞர்களின் போராட்டத்துக்கான அடிப்படைக் காரணங்களாகும். ஆனால், திடீரென அரசாங்கம் 26 சமூக வலைத்தளங்களைத் தடை செய்தமையே அந்த எதிர்ப்பை போராட்டமாக வெடிக்கச் செய்த காரணியாகும். கடந்த 4-ஆம் திகதியே நேபாள அரசாங்கம் இத்தடையை விதித்தது. அச்சமூக வலைத்தளங்கள் பொய்யான செய்திகள், திரிபுபடுத்தல்கள், துவேசத்தைப் பரப்புதல், சமூகக் குழுக்களிடையே வைராக்கியத்தை பரப்புதல் என்பனவற்றில் ஈடுபடுவதால் நேபாள அரசாங்கம் அவற்றைக் கட்டுப்படுத்த, பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தது.

இலங்கையிலும் சமூக வலைத்தளங்களின் நிலைமை அதுவாகும். ஆனால், நேபாளத்தில் சில சமூக வலைத்தளங்கள் மட்டுமே பதிவு செய்துகொள்ள இணக்கம் தெரிவித்தன. முகநூல், எக்ஸ் (டுவிட்டர்), வட்ஸ்அப் உள்ளிட்ட வலைத்தளங்கள் அதற்கு இணங்கவில்லை. எனவேதான் அவற்றுக்கு இத்தடை விதிக்கப்பட்டது. அத்தோடு, கடந்த 8-ஆம் திகதி இளைஞர்கள் அத்தடைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொலிஸார் இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மாணவர்கள் சிலர் கொல்லப்பட்டனர். அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தது. இதன் மூலம் ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சமடைந்து பின்வாங்குவார்கள் என்று அரசாங்கமும் பொலிசாரும் நினைத்த போதிலும், இது மேலும் மாணவர்கள் வெறிகொண்டு எழக் காரணமாகியது. எனவே, பாதுகாப்புத் துறையினர் மேலும் கொடூரமாக நடந்து கொண்டனர். அவ்வாறு 19 பேர் கொல்லப்பட்ட நிலையில், அரசாங்கம் சமூக வலைத்தளங்கள் மீதான தடையை நீக்கியது.

ஆனால், நிலைமை கட்டுக்கடங்காமலேயே இருந்தது. ஏனெனில், தடை நீக்கத்துக்கு முன்னரே இளைஞர்கள் தமது அடிப்படை பிரச்சினைகளை முன்வைத்தும் சுலோகங்களை எழுப்ப ஆரம்பித்து இருந்தனர். ஊழல் மலிந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்திக் கூறினர். அத்தோடு, துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து, ஏனைய இளைஞர்களும் ஏற்கனவே வன்முறையில் ஈடுபட ஆரம்பித்தும் இருந்தனர். எனவே, சமூக வலைத்தளங்கள் மீதான தடை நீக்கப்பட்ட போதிலும், நாடாளுமன்றக் கட்டடம், உயர் நீதிமன்ற கட்டடம், சில பொலிஸ் நிலையங்கள், பிரதமர், முன்னாள் பிரதமர்கள் மற்றும் அமைச்சர்கள் போன்ற வர்களின் வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஒரு முன்னாள் பிரதமரின் மனைவி எரி காயங்களால் உயிரிழந்தார். நிதி அமைச்சர் வீதியில் ஓட ஓட தாக்கப்பட்டார். சிறைச்சா லைகள் தீக்கிரையாக்கப்பட்டன. கைதிகள் தப்பி ஓடினர். இதற்கிடையே அரசியல்வாதிகளின் பல வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கலவரங் களால் 72 பேர் கொல்லப்பட்டதாக இந்தியச் செய்தி நிறு வனமான என்டி ரிவி தெரிவித்தது. 9-ஆம் திகதி பிரதமர் சர்மா ஒலி தமது பதவியை இராஜினாமா செய்தார். இராணுவ தளபதி பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஆர்ப்பாட்டக் காரர்களை அழைத்தார். இணையம் ஊடாக கலந்துரை யாடிய போராட்டக்காரர்கள் முன்னாள் பிரதம நீதியரசர் சுஷிலா கார்க்கியை பிரதமராக நியமிக்குமாறு ஆலோசனை கூறினர். 11-ஆம் திகதி இராணுவத் தளபதி ஜெனரல் அசோக் ராஜ் சிகதெல், ஜனாதிபதி இராமசந்திர பவுடேல் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் கலந்துரையாடி இறுதி முடிவை எடுத்தனர். அதன்படி, ஜனாதிபதி 12-ஆம் திகதி சுஷிலா கார்க்கியை இடைக்கால பிரதமராக நியமித்தார்.

கடந்த ஆண்டுகளில் தெற்காசியாவில் நான்கு நாடுகளில் இதேபோன்ற மக்கள் எழுச்சிகள் இடம்பெற்றுள்ளன. 2022-ஆம் ஆண்டு இலங்கையிலும், கடந்த வருடம் வங்காள தேசத்திலும் இவ்வருட ஆரம்பத்திலிருந்து இந்தோனேசியா விலும் இவ்வாறான போராட்டங்கள் வெடித்துள்ளன. அவற்றில் இந்தோனேசியாவில் போராட்டம் இன்னமும் நீடித்து வருகிறது. கடந்த வருடம் ஜூலை மாதம் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டமாகவே வங்காள தேசத்தில் போராட்டம் ஆரம்பமாகியது. அரசாங்க தொழில்களில் மூன்றில் ஒரு பகுதி 1971-ஆம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து பிரிந்து வங்காள தேசத்தை உருவாக்கிய ஆயுத போராட் டத்தில் ஈடுபட்டவர்களின் குடும்பங்களுக்கு ஒதுக்கும் நடை முறைக்கு எதிராகவே தொழில் வாய்ப்பின்மையை எதிர் நோக்கியிருக்கும் மாணவர்கள் கொதித்தெழுந்தனர்.

பிரதமர் ஷெய்க் ஹசீனாவின் கட்சியான அவாமி லீக்கே 1971-ஆம் ஆண்டு பாகிஸ்தான் ஆதிக்கத்துக்கு எதிராக இந்திய அரசாங்கத்தின் உதவியோடு போரிட்டது. எனவே, தொழில்துறையில் இந்த இட ஒதுக்கீடானது ஆளும் கட்சியில் ஒரு சிலருக்கு மட்டுமே சாதகமாகவே அமைந்தது. ஆர்ப்பாட் டங்கள் மீது பாதுகாப்புத் துறையினர் நடத்திய தாக்குதல் களால் பல மாணவர்கள் கொல்லப்பட போதிலும், நிலைமை கட் டுக்கடங்காது போய்விட்டது. அத்தோடு, வங்காள தேச உயர் நீதிமன்றம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இரத்துச் செய்தது. ஆயினும், ஏற்கனவே அரச உயர் மட்டத்தில் இடம் பெறும் பாரியளவிலான ஊழல்களுக்கு எதிராகக் குரல்கள் எழ ஆரம்பித்தன. சமூக வலைத்தளங்களில் அது முக்கிய இடத்தை பிடித்துக்கொண்டது. அக்கட்டத்தில் ஏற்கனவே 300-க்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டு இருந்தனர். ஹசீனாவின் அரசாங்கம் போராட்டத்துக்கிடையே அவற்றை அடக்கும் நோக்கில் அடிக்கடி இணைய வசதிகளைத் துண் டித்தமை இளம் தலைமுறையினரை மேலும் ஆத்திரமூட் டியது. வன்முறை பரவியது. கோட்டாபய ராஜபக்ஷவைப் போலவே பிரதமர் ஹசீனா இந்தியாவுக்குத் தப்பி ஓடி விட்டார். எதிர்க்கட்சித் தலைவி காலிதாசியா சிறையிலி ருந்து விடுதலை செய்யப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவர்க ளுடனும் ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளுடனும் கலந்து ரையாடிய இராணுவத் தளபதி ஜெனரல வகர்-உஸ்-ஸமான் இடைக் கால அரசாங்கமொன்றை நிறுவுவதாக அறிவித்தார். அதன் பிரகாரம், நோபல் பரிசு பெற்ற பொருளியல் நிபுணரான முஹம்மத் யூனுஸ் அரச தலைவராகக் கடந்த வருடம் ஓகஸ்ட் 8-ஆம் திகதி ஜனாதிபதி முஹம்மத் சஹாபுத்தீன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்தோனேசியாவிலும் இலங்கை, வங்காளதேசம் மற்றும் நேபாளத்தில் போலவே வேலைவாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, அரசியல்வாதிகளின் ஊழல் மற்றும் சுரண்டல் ஆகி யவற்றால் கடந்த பெப்பிரவரி மாதம் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. சில வாரங்களுக்குப் பின்னர் நிலைமை தணிந்து கடந்த மாத இறுதியில் அவை மிகப்பயங்கர உருவத்தில் மீண்டும் வெடித்து நாடெங்கிலும் பரவின. நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீட்டு வசதி கொடுப்பனவாக மாதமொன் றுக்கு 3,000 டொலருக்கு மேலாக (இலங்கை பணத்தில் சுமார் ஒன்பது இலட்சம் ரூபாய்) பெறுகிறார்கள் என்பது தெரிய வந்ததை அடுத்தே நிலைமை மோசமாகியது. இலங்கை, வங் காளதேசம், இந்தோனேசியா மற்றும் நேபாளம் ஆகிய நான்கு நாடுகளிலும் மக்களின் பிரதான பிரச்சினையன்றி தற்செ யலான ஒரு காரணியே போராட்டங்களுக்கு திடீர் விசையாக அமைந்தன.

இலங்கையில் மின்வெட்டு, வங்காள தேசத்தில் இட ஒதுக்கீடு, இந்தோனேசியாவில் வீட்டு வசதிக் கொடுப்பனவு, நேபாளத்தில் சமூக வலைத்தளங்களுக்கான தடை இவ்வாறு விசையாக அமைந்தன. நான்கு நாடுகளிலும் இரண்டாம் கட்டமாகவே பிரதான பிரச்சினைகளான ஊழல், உறவுச் சலுகை, அரசியல்வாதிகளின் பகல் கொள்ளைகள் ஆகியன சுலோகங்களாகக் களமிறங்கியுள்ளன. நான்கு நாடுகளிலும் போராட்டக்காரர்களுக்கு மத்திய தலைமைத் துவம் இருக்கவில்லை. தற்செயலாக முன்வந்தவர்கள் கூட்டுத் தலைமைத்துவம் வழங்கினர். போராட்டக்காரர்கள் ஆட்சிக் கவிழ்ப்பை நோக்கமாகக் கொண்டாலும், அதற்க டுத்து என்ன செய்வதென்ற அரசியல் குறிக்கோள் அவர்க ளிடம் இருக்கவில்லை.

அதன் காரணமாக இந்தோனேசியா தவிர்ந்து ஏனைய மூன்று நாடுகளிலும் ஆட்சி கவிழ்ந்தாலும் ஆட்சி முறை மாற்றம் உடனடியாக சாத்தியமாகவில்லை. பொதுவில் மக்கள் அரசியல் வர்க்கத்தின் மீது கடுமையான வெறுப்ப டைந்திருக்கிறார்கள் என்பதையே இந்த தெற்காசியக் கிளர்ச்சிகள் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன. கிரேக்கம் முதல் தற்காலம் வரை தொடரும் மக்களாட்சித் தத்து வங்கள் ஜனநாயக அறைகூவலினை தெளிவாக வெளிப்ப டுத்தி நிற்கின்றது.



nagarasa.thanuskanth@thaiveedu.com

# மலையக மண்ணின் கதைசொல்லி:

## இளம் இயக்குநர் செல்வகுமார் ரினோசன்

- நிசன்குமார் கோபிநாத்

நவீன உலகில் எண்ணற்ற தொழில் துறைகள் பிரகாசமாக வளர்ந்து வருகின்றன. அதன் வழியில் முக் கியமான கலைத் துறையான சினிமாத்துறை இன்று நம் இலங்கைத் திருநாட்டிலும் விறுவிறுப்பாக விஸ்தரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக, இலங்கையில் தமிழ் மொழியிலான சினிமா முயற்சிகள் அண்மைக் காலமாகப் பேசும் பொருளாகிவிட்டன. இன்றைய இளம் தலைமுறை யினர் இந்த சினிமா முயற்சிகளில் முழு ஈடுபாட்டுடன் இயங்கி வருவதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு, முன்னாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையில் உதவி விரிவுரையாளராகப் பணி யாற்றியவரும் தலவாக்கலை பிரதேசத்திலுள்ள சென் கிளார் தோட்டத்தைச் சேர்ந்தவருமான செல்வகுமார் ரினோசன் அவர்கள் வளர்ந்து வரும் இளம் மலையக இயக்குநராக வலம் வந்துகொண்டிருக்கிறார்.

தனது சிறுபராயத்திலேயே தான் எப்படி இருக்க வேண் டும் எனச் சிந்தித்த அவர், தன்னை வடிவமைத்துக் கொள்ள முடியாத காலகட்டத்தில் அதிக திரைப்படங் களைப் பார்த்தார். அவற்றின் மூலம் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்; என்னென்ன விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்; சமூகம் எப்படி உள்ளது போன்ற விடயங்களைத் தனக்குள் ஆழமாகப் பதிய வைத்து, சினிமாக்கள் ஊடாகவே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். ஒரு கட்டத்தில், சினிமாக்கள் மூலம் எதனை யும் சாதிக்க முடியும் என்று சிந்தித்த அவர், தன்னுடைய சிறு வயது நண்பன் நா. ஷாஜஹான் அவர்களின் வழி காட்டுதல்கள் மூலம் தலைசிறந்த திரைப்படங்களைப் பார்க்கத் தொடங்கினார். காலப்போக்கில் உண்மைச் சினிமா என்றால் என்ன? அது எவ்வளவு பெரியதொரு ஆயுதம் என்பதைப் புரிந்து கொள்ளத் தலைப்பட்டார்.

தன்னுள் ஆழமான சில சிந்தனைகளை உருவாக்கி, ‘நாமும் இப்படியான படைப்புகளை உருவாக்க வேண் டும்’ என்ற கற்பனை வளத்தைப் பெருக்கிக் கொண்டார். காலப்போக்கில் தன்னால் படைப்புகளை உருவாக்க முடியுமா என்ற கேள்விக்குறியுடன் இருந்தாலும், பல்க லைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையைத் தெரிவு செய்ததனால், தான் பயின்ற பாடங்கள் அவருக்குத் திரைத்துறை தொடர்பான அறிவை அளித்தது. இதனோடு, அவருடைய ஆசானான பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் அவர்களின் வழிகாட்டுதல்களும் இலங்கைத் தமிழ் சினிமாவைச் சார்ந்த முக்கிய இயக்குநர்களின் நெறிப்படுத்தல்களும் இளம் இயக்குநரான செல்வகுமார் ரினோசனுக்குள் பல மாற்றங்களை விதைத்தன. இந்த மாற்றங்களின் விளைவாக, தன்னை ஒரு இயக்குநராக உணர்ந்து கொண்டு, படைப்புகள் உருவாக்க வேண்டும் என்ற அவாவோடு அதன் வழியாகவே திரைத்துறையில் ஆர்வம் கொண்டவராக தன்னை உருவகப்படுத்திக் கொண்டார். இதுவரை காலத்தில், தன்னுடைய சொந்தப் படைப்பாக ‘மண்சோறு’, ‘ஏமாளி’, ‘ஆசனம்’ என்ற மூன்று குறும்படங்களை உருவாக்கி இருக்கிறார். அத்துடன், இயக்குநராக மட்டும் ‘அப்பா’, ‘Dream’ போன்ற குறும்



tg.theeban@gmail.com

படங்களையும் இயக்கி இருக்கிறார். மேலும், ‘தணல்’, ‘வெளிச்சம்’ போன்ற இரண்டு ஆவணத் திரைப்படங்களையும் உருவாக்கி இருப்பதோடு பல்வேறுபட்ட குறும்படங்களில் அனைத்துத் துறைகளிலும் செயல்பட்டிருக்கிறார்.

மேலும், இவர் ‘ஊழி’ திரைப்படத்தில் உதவி இயக்குநராக வும், ‘புஷ்பக 27’ திரைப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத் திலும் நடித்துள்ளார். ‘மனிதீ’ திரைப்படத்தில் துணை கதாசி ரியராகச் செயல்பட்ட இவர், முன்னகர்த்தும் குழுவிலும் (Promotion Team) பணியாற்றியுள்ளார். இதனைத் தொடர்ந்து, மேலும் வரவிருக்கும் சில முழு நீளத் திரைப்படங்களிலும் தொடர்ந்து பணியாற்றியுள்ளார்.

செல்வகுமார் ரினோசன், திரைச்சுவடி அமைத்தல், திரைப் படம் மற்றும் குறும்படங்களை உருவாக்குதல் தொடர்பான விடயங்களை மாணவர்களுக்கு விரிவுரையாகவும் செய்து வருகிறார். இது அவருடைய அறிவையும் உயர்வடையச் செய்கிறது. தன்னை மாத்திரம் திரையுலகில் அடையாளப் படுத்திக் கொள்ளாமல், ஏனையோரையும் அதில் பயணிக்க வழிகாட்டுதலில் இவர் கொண்டிருக்கும் அக்கறை உன்ன தமான ஒன்றாகும்.

விருதுகள் பற்றிய இவருடைய ஆழமான பார்வை, இவரை ஏனைய இளம் இயக்குநர்களை விட முன்னிலைப்படுத்து கிறது. அதாவது, உண்மையான விருதுகள் என்பது மக்களின் அங்கீகாரத்தையும் அவர்கள் தங்கள் கைகளால் கொடுக் கும் வரவேற்பையும் சுட்டிக்காட்டுவதாகும் என்று இவர் கருது கிறார். இருப்பினும், திரைப்பட விழாக்களின் சில அங்கீ காரங்கள் குறும்படங்களுக்கான மரியாதையை அளிக்கின் றன. அவ்வாறு, இவருடைய ‘ஆசனம்’ குறும்படமானது பத்தா வது சர்வதேச யாழ்ப்பாண குறும்பட விழாவில் ‘பார்வை யாளர்கள் தெரிவு விருது’ (Audience Choice Award) பெற் றது. Agenda 14 அமைப்பின் மூலம் ‘மிகவும் பாலின உணர் வுள்ள திரைப்படம்’ (Most Gender Sensitive Film) என்ற விருதையும் பெற்றது. 2025-ஆம் ஆண்டுக்கான Nepal Wings International Critics Film Festival-இல் ‘ஆசனம்’ குறும்பட மானது சிறந்த குறும்படம், சிறந்த இயக்குநர், சிறந்த கதை, சிறந்த ஒளிப்பதிவு போன்ற பிரிவுகளில் விருதுகளுக்காகப் பரிந்துரைக்கப்பட்டது. இக்குறும்படம் 2025-ஆம் ஆண்டில் கன்யாகுமரி சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த குறும் படம், சிறந்த இயக்குநர், சிறந்த கதை போன்ற விருதுகளுக் காகவும் இவர் பரிந்துரைக்கப்பட்டார். Bango International Film Festival-இல் அதிகாரபூர்வத் தெரிவிலும் (Official Selection) இடம்பெற்றது.

அத்துடன் அது நேர்வே சர்வதேசத் திரைப்பட விழாவிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் குறும்பட விழாவிலும் திரை யிடப்பட்டு பார்வையாளர்களிடம் அதிக வரவேற்பைப் பெற் றது. மேலும் 2025-ஆம் ஆண்டுக்கான ‘குவியம்’ திரைப்பட விழாவில் சிறந்த குறும்படம், சிறந்த இயக்குநர் போன்ற விரு துகளுக்காகவும் இப்படம் பரிந்துரைக்கப்பட்டது. இவருடைய முதல் படைப்பான ‘மண்சோறு’ குறும்படமானது தனிக்கதை. SDJF Healvitas நடத்திய Inspire திட்டத்தின் கீழ் நான்கு பல் கலைக்கழகங்கள் போட்டியிட்ட குறும்படப் போட்டியில் இப்படம் முதலிடத்தைப் பிடித்தது. (Inter University Best Short Film) அதேபோல், விஷ்வ சக்தி நிறுவனம் நடத்திய மலையகக் குறும்பட விழாவில், 20-க்கும் மேற்பட்ட குறும் படங்களுக்கிடையே முதலிடத்தைப் பெற்றது. (Upcountry Film Festival Best Short Film) இப்படம் பேராதனைப் பல் கலைக்கழக மாணவர்கள் நடத்திய இலக்கிய விழாவின் குறும்படப் போட்டியிலும் முதலிடம் பெற்றது. (University of Peradeniya Literary Program Best Short Film)

தனது குடும்ப உறுப்பினர்களைக் கொண்டே ‘ஆசனம்’ குறுந் திரைப்படத்தை இயக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. அதில், அவருடைய அம்மா, அப்பா மற்றும் தங்கை ஆகியோர் பிரதான கதாபாத்திரங்களாக நடித்திருந்தனர். மேலும், இந்தக் குறும்படமானது அவர் வாழும் மலையகச் சமூகம் சார்ந்த ஒரு முக்கியமான பிரச்சினையை சமூகத்தில் வெளிப் படுத்திய ஒரு சிறந்த படைப்பாக அமைந்திருந்தது.

திரைப்படங்களை உருவாக்கும்போது, கதையின் ஆழத்தின் மீதே இவர் அதிக கவனம் செலுத்துகிறார். தன் வாழ்க்கை யில் கண்ட, உணர்ந்த, கேட்ட மற்றும் சமூகத்திடம் கேள்வி எழுப்ப வேண்டிய முக்கியமான விடயங்களை, உண்மைச் சம் பவங்களின் ஊடாகவோ அல்லது அதைத் தழுவியோ தனது படைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட கதைக்கு ஏற்ற சூழலையும் கதைக்களத்தையும் உருவாக்கு வதில் தீவிர கவனம் செலுத்துகிறார். கதைக்குள் இருக்கும் பாத்திரங்கள் யதார்த்தமாக வெளிப்பட அவர்களின் இயல் பான பேச்சு வழக்கையே வசனங்களாகப் பயன்படுத்துகிறார். கதைக்குச் சிறந்த திரைக்கதையை அமைப்பதோடு, ஒளிப்ப திவில் மக்கள் இதுவரை பார்த்திராத காட்சிகளை உரு வாக்க, முன்கூட்டியே காட்சிப் படங்களை (Story board) அமைத்துத் தயாராகிறார். தான் சொல்ல வருவதை நேரடி யாகச் சொல்லாமல், சொல்லும் உத்தியே சிறந்தது என் கிறார். கதை சொல்லலில் சில ‘மாயாஜாலங்கள்’ செய்யும் போது, யதார்த்தமான திரைப்படங்களும் மக்களை இலகு வாகச் சென்றடையும் என்றும், அதுவே கதையைத் தூக்கி நிறுத்தும் என்றும் நம்புகிறார்.

தற்கால இலங்கைத் தமிழ் சினிமா ஏனைய நாடுகளுடன் ஒப் பிடும்போது அது விஸ்தரிந்து வருவதாகவும் பல அறிமுக இயக்குநர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருவதா கவும் இவர் குறிப்பிடுகிறார். எம்மிடம் இருக்கும் வளத்தைப் பயன்படுத்தி சிறந்த தயாரிப்புகளை உருவாக்க வேண்டும். மக்களுடைய தொடர்ச்சியான ஆதரவு, சிறந்த தயாரிப் பாளர்கள், மற்றும் படைப்பாளிகளின் அர்ப்பணிப்பு இருந் தால், ஈழ சினிமா மற்ற சினிமாக்களை விட உயர்ந்த தரத் துக்குச் செல்ல அதிக வாய்ப்புகள் உள்ளன.

சினிமா ஒரு பாரிய ஆயுதம். இது வெறுமனே வணிக சினிமா வாக இல்லாமல் யதார்த்த வாழ்க்கையை வெளிப்படுத்தும் சினிமாவாக இருக்கும் பட்சத்தில், அது மக்களின் எண்ணங் களைத் தூண்டி, மிகப்பெரிய சமூக மாற்றத்தை நிச்சயம் ஏற் படுத்தும். பிரதேசவாரியான சினிமா உருவாக்கம் அந்தந்தப் பகுதியின் கலாசாரத்தையும் மொழி வழக்கையும் தேவைப் பாட்டையும் வெளிப்படுத்துவதாக அமையும் என்பதில் இவ ருக்கு நம்பிக்கை உள்ளது.

மலையகத்தைச் சேர்ந்த இயக்குநர்கள் தங்கள் சமூகம் சார்ந்து பேசாப் பொருளைப் பேசுவதோடு, சினிமாவின் மூலம் சமூக மாற்றத்தை எவ்வாறு கொண்டு வர முடியும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். ‘எமக்கான சினிமா, எம் கதை பேசும் பட்சத்தில் அதன் மூலமாக மலையக சமூகத் தின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகூட அமையலாம் என்கிறார்.



மலையகம் சார்ந்த படைப்பாளிகள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு, தங்கள் படைப்புகள் மூலம் சமூகத்தின் தேவைகளைக் கொண்டுவர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

ஒரு இயக்குநராக மட்டுமல்லாமல், இலங்கைப் பிரஜையாக, மலையகத் தோட்டத் தொழிலாளியின் மகனாக, படித்த பட்டதாரியாகப் பல பரிமாணங்களில் தன்னைக் காண்கிறார். மக்களுக்கு எது தேவை, மக்கள் எதனைச் சிந்திக்க வேண்டும், மக்களை எவ்வாறு நெறிப்படுத்த வேண்டும் போன்ற விடயங்களை வழிநடத்தும் ஒருவராக (கருத்துருவாக்கத் தலைவராக) இருக்க விரும்புகிறார். ஒரு இயக்குநராக என்னுடைய கடமை மக்களை அறநெறிப்படுத்துவதே ஆகும் என்று உறுதியாகக் கூறுகிறார்.

எப்போதும் ஒரு கதையைத் தேர்வு செய்யும்போது அது உண்மைச் சம்பவத்தை அடியொட்டியதாக இருக்க வேண்டும். காரணம், உண்மைதான் மக்கள் மத்தியில் நிஜமாகப் பேசப்படும். கற்பனைச் சம்பவங்கள் 'இது சாத்தியமா ?' என்ற எண்ணத்தை உருவாக்கலாம். ஆனால், நடந்த உண்மை சம்பவம் மக்கள் மத்தியில் பேசப்படும் பொருளாக மாறும். கதாபாத்திர வடிவமைப்புகளும் உண்மைச் சம்பவத்தோடு தொடர்புடைய பாத்திரங்களாகவே இருக்கும். அந்தக் கதாபாத்திரங்களின் வசன நடைகளை ஆழமாக ஆய்வு செய்து எழுதுவார். கதையின் களம் மற்றும் காலத்தை அதன் போக்கிலே விட வேண்டும். அப்போது அந்தக் கதாபாத்திரம், அந்தக் கதை தனக்கான விடயங்களை உருவாக்கும். 'ஒரு படைப்பை உருவாக்கிய பிறகு படைப்பாளி இறந்து விடுகின்றான்' என்ற கூற்றுக்கு ஏற்ப படைப்புகளே அதற்கான முடிவைச் சொல்லும்.

மக்களுக்கு நாம் எதைச் சொல்ல வருகிறோம் என்று சொல்லாமல் சொல்ல வேண்டும் என்பதே சிறந்த உத்தி என்று கருதுகிறார். சாதாரண கதை சொல்லலை விட, கதை உத்தியில் ஒருசில மாயாஜாலங்கள் செய்யும் பொழுது சாதாரண யதார்த்த திரைப்படங்கள் கூட மக்கள் மத்தியில் இலகுவில் சென்று சேரும். இதுவே அந்தக் கதையைத் தூக்கி நிறுத்தும்.

ஒரு இயக்குநராகத் தம்மிடம் பல்வேறு திரைச்சுவடிகள் (Screenplays) இருந்தாலும், அவற்றைச் செயல்படுத்த முடியாமைக்கு இரண்டு முக்கிய தடைகளைக் குறிப்பிடுகிறார்:

- தயாரிப்புச் செலவு மற்றும் தயாரிப்பாளர்கள் பற்றாக்குறை

  முதலாவதாக தயாரிப்புச் செலவே பெரிய தடையாக இருக்கிறது. எம்மைப் போன்ற நாடுகளில் தயாரிப்பாளர்கள் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. சொந்தமாகத் தயாரிக்கும் அளவுக்குத் தமக்கு வணிக ரீதியான வசதி இல்லை. தயாரிப்பாளர்கள் இன்மையால் திரைப்படங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் இடர்படுகின்றார்.

- தொழில்நுட்ப ரீதியான குறைபாடுகள்

  தொழில்நுட்ப ரீதியில் பாரிய தவறுகள் நேர்கிறது. கதைத் தேர்வில் சிறப்பாக இருந்தாலும், காட்சி, ஒலி, ஒளி அமைப்பு செம்மையாக்கம் (Editing) போன்ற தொழில்நுட்ப ரீதியான முயற்சிகளில் தவறு நேர்ந்துவிடுகிறது. இவருடைய 'மண்சோறு' குறுந்திரைப்படம் கதைத் தேர்வில் சிறப்பாக இருந்தபோதும், தொழில்நுட்ப ரீதியில் தவறுகள் நேர்ந்துள்ளது. இதனை அவரே ஒப்புக்கொள்கிறார். தயாரிப்புச் செலவை ஈடுகட்டுவது மற்றும் வளப்பற்றாக்குறையைச் சரிசெய்வது மூலமாக இனிவரும் காலங்களில் இவரது படைப்புகள் தரமானதாகவும் பேசப்படுபவையாகவும் இருக்கும்.

தற்போது அவர் 'பெத்த மனசு' என்ற குறும்படத்தை உருவாக்கி வருகிறார். இந்தக் குறும்படத்தை முடித்த கையோடு, ஒரு முழு நீளத் திரைப்படத்திற்கான திரைச்சுவடியையும் அவர் உருவாக்கியுள்ளார். குறும்படத்தின் வெளியீட்டுக்குப் பின்னர், அந்த முழு நீளத் திரைப்படத்திற்கான அறிவிப்பை விரைவிலேயே வெளியிடுவதற்கான பணிகளில் அவர் ஈடுபடவுள்ளார். இத்துடன், அவர் சமூகத்தின் முன் ஒரு முக்கிய வேண்டுகோளை முன்வைக்கிறார். நாம் மற்ற உலக சினிமாக்களை ஆதரிப்பது போலவே, நம்முடைய மண்ணுக்கும் கலாசாரத்துக்கும் உரித்தான 'எமக்கான சினிமாக்களுக்கும்' மக்கள் உரிய அங்கீகாரத்தையும் ஆதரவையும் வழங்க வேண்டும் என்பதே அவரது கோரிக்கையாக உள்ளது.



kobinath.n@thaiveedu.com



# செல்வி விஷ்ணா திரவியராஜாவின் இசைக் கச்சேரியாக மாறிய அரங்கேற்றம்

- த. சிவபாலு







கடந்த நவம்பர் 09, 2025 அன்று ஆர்மேனியன் கலைக்கூடத்தில் இடம்பெற்ற கர்நாடக இசை அரங்கேற்றம், பார்த்தவர்கள் வியக்கும் வண்ணம் உச்சத்தைத் தொட்டிருந்தது. அரங்கேற்றம் செய்கின்றேன் என்பதனை விடுத்து நான் இசைக் கச்சேரிதான் செய்கின்றேன் என்பதை உணர்த்தும் வண்ணம் விஷ்ணாவின் தற்துணிவும், வெளிப்பாடும் அமைந்திருந்தது. மிகவும் அனுபவப்பட்டவர் போன்று மிருதங்க வித்துவானையும் வயிலின் வித்துவானையும் கண்களால் தொடருங்கள் எனக் காட்டியதோடு தனி ஆர்வத்தனத்தின்போதும் பக்கபலமாகத் தாளம் போட்டுத் தட்டிக்கொடுத்தார் என்றால், அவரது அரங்கேற்றம் எப்படி நடந்திருக்கும் என்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

வர்ணத்தில் தொடங்கி தில்லானாவைத் தொடர்ந்து திருப்புகழ்வரையும் இசைமேதைகளான பாபநாசம் சிவன், ஜெயராஜ், நீலகண்டசிவன், புரந்தரதாசர், முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதி, சுப்பிரமணிய பாரதியார், எம்.எஸ். சிதம்பரம், லால்குடி ஜெயராமன் என்போரது கீர்தனங்களையும் இசை ஆசிரியை வாரகி விஜயராஜா தயாரித்த இராகம், தானம், பல்லவியையும் செல்வி விஷ்ணா திரவியராஜா அரங்கம் வியக்க இசைத்தார்.

இந்த இசை நிகழ்ச்சிக்குக் கனடாவின் புகழ்பெற்ற வயலின் மேதை ஜெயதேவன் நாயர், 'மிருதங்க வித்துவான்' கௌரிசங்கர் பாலச்சந்திரன், கடம் - மயூரன் தனன் செயன் ஆகியோரோடு தம்புரா இசையை செல்வி அபர்ணா குழந்தைவேலுவும் தந்து இசையரங்கம் சிறப்புற மெருகூட்டினர்.

இந்நிகழ்ச்சியை, இலங்கையில் இருந்து வந்து தொகுத்துவழங்கினார் பி.எச். அப்துல்கமீட் அவர்கள். பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த திருமதி சுவர்ண சுகல்யா ராஜி கோபாலகிருஷ்ணன் இசை நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது மிகவும் கம்பீரமாகவும், அனைத்து உருப்படிகளையும் மிக லாவகமாக அனுபவம் பெற்றவர் போல எந்தவொரு தவறுமின்றி நேர்த்தியாகக் கையாண்டவை வியப்பைத்தந்தது. அவரது குரு வாரகி மிகவும் சிறந்த ஆசிரியை. அவர் மிகத் தெளிவாக இசையைக் கற்றுத்தந்திருக்கின்றார் எனவும் விதந்துரைத்தார்.

இசையரங்கம் நிறைவு பெற்றதைத்தொடர்ந்து இசைப்பாடகி விஸ்ணாவின் பெற்றோர் முன்னணி இசைக்கலைஞர்களுக்கும் உதவியோருக்கும் பிரதம விருந்தினர், மற்றும் சிறப்பு விருந்தினருக்கும் அன்பளிப்புகளை வழங்கிக் கௌரவித்தனர்.

இசையாசிரியையும் குருவுமான வாரகி தன்னை நம்பிப் பெற்றோர் ஒப்படைத்த எனது மாணவி விஸ்ணா திரவியராஜா இசையை நன்கு கற்றுக்கொண்டதோடு மிகத் துணிவுடன் அதனை இன்று மேடையில் தந்து என்னைப் பெருமையடைய வைத்தமைக்கும் பெற்றோருக்கும் இசைக்கலைஞர்களுக்கும் தனது நன்றியறிதலைத் தெரியத்தந்தார். விஸ்ணா திரவியராஜாவைப் பாராட்டிய வாழ்த்துப் பத்திரத்தினை அதிபர் தங்கராஜா சிவபாலு அவர்கள் வழங்கி வாழ்த்திச் சென்றார்.

'நன்றி மறப்பது நன்றன்று' என்னும் பாணியில் இன்றைய கதாநாயகி செல்வி விஷ்ணா திரவியராஜாவின் நன்றியுரையுடன் நிகழ்வு முடிவுற்றது.



sivapalu@thaiveedu.com

■ சி. நற்குணலிங்கம்



# மலைகள்
## நமது இயற்கை ஆபரணங்கள்

மலை என்பதற்கு குறிப்பான வரையறை ஏதும் இல்லை. உயரம், கனவளவு, வடிவம், சரிவு, இடைவெளி, தொடர்ச்சி எனப் பல அம்சங்களைக் கணக்கில்கொண்டே மலை வரையறுக்கப்படுகிறது. புவியின் மேலோட்டில் உள்ள புவித்தட்டுக்கள் பெரிய அளவில் நகரும் காரணம் மலை உருவாக்கச் செயல்முறைகளுடன் தொடர்புகொண்டுள்ளன. மடிதல், உடைதல், பொங்குதல், ஊடுருவல், உருமாறுதல் முதலிய செயல்முறைகள் அனைத்துமே மலை உருவாக்கச் செயல்முறையின் பகுதிக் கூறுகளாகும்.

உலகில் உள்ள முக்கிய மலைத்தொடர்களில் இமயமலை மிக உயரமான மலைத்தொடராகும். இது ஆசியாவில் அமைந்துள்ளது. நிலத்தில் மிகவும் நீளமான மலைத்தொடர் அந்தீசுமலைத்தொடராகும். இது தென் அமெரிக்காவில் உள்ளது. யூரல்மலை ஆசியாவையும் ஐரோப்பாவையும் பிரிக்கும் மலைத்தொடராகும். உலகின் மிக உயரமான சிகரம் எவறெஸ்ற் சிகரம். இது உலகிலேயே மிக உயர்ந்த கொடுமுடியாகும். இது கடல்மட்டத்தில் இருந்து 8848 மீற்றர் உயரம் கொண்டது. அந்தீசுமலைத்தொடரில் மிக உயரமான மலைமுகடு அக்கோன்காகுவா. இதன் உயரம் 6962 மீற்றராகும். இவ்வாறு பல மலைகள், மலைத்தொடர்கள் உள்ளன.

தமிழகத்தில் மலைகள் தாயாக, அரசியாகப் பார்க்கப்படுகிறது. ஊட்டியை மலைவாழிடங்களின் இராணி என்றும், கொடைக்கானலை மலைவாழிடங்களின் இளவரசி என்றும், ஏற்காட்டை ஏழைகளின் ஊட்டி என்றும் அழைத்துப் பெருமைப்படுத்துகிறார்கள். ஆசியாவின் 64% நிலப்பகுதியும், ஐரோப்பாவின் 25% நிலப்பகுதியும் மலைப்பகுதிகளைக் கொண்டவை. மலை என்றாலே உயர்ந்தவை. அங்கு எரியும் எரிமலையும் உண்டு, பனிமலையும் உண்டு. மலைகளின் உயரம் கடல் மட்டத்திலிருந்தே அளக்கப்படுகிறது.

கடல் மட்டத்தில் இருந்து மலை உச்சிக்கு நாம் செல்லும்போது வளிமண்டல அழுத்தம் குறைகிறது. குறைந்த உயரத்தில் காற்று அழுத்தத்தின் மதிப்பு அதிகமாக இருக்கும். காற்றழுத்தம் என்பது பூமியின் மேற்பரப்பில் காற்றின் எடையால் ஏற்படும் அழுத்தம். வளிமண்டலத்தின் அடுக்குகளுக்கு மேலே செல்லும்போது இவ்அழுத்தத்தின் மதிப்பு வேகமாகக் குறைகிறது.

பண்டையகால மக்கள் மலைகளைப் புனித இடமாகக் கருதினர். அரிய மூலிகைகளைப் பெறுவதற்கும், சுத்தமான காற்றைப் பெறுவதற்கும், மழையைப் பெறுவதற்கும், சுற்றுலா வருவாயைப் பெறுவதற்கும், பெருந்தோட்டப் பயிற்செய்கை மூலம் வருவாயை ஈட்டிக் கொள்ளவும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள்மூலம் வருவாயைப் ஈட்டவும், விவசாயத்தைத் தக்கவைக்கவும் அழகான காட்சிகளை இரசிப்பதற்கும் மலைகள்மூலம் நீர்வீழ்ச்சிகள் உருவாகுவதற்கும் உலகின் பெரும்பாலான ஆறுகள் மலைப் பகுதிகளிலேயே உருவாகுவதற்கும் மலைகள் காக்கப்பட்டன, போற்றப்பட்டன. சமவெளிப் பிரதேசங்களின் தண்ணீர்த்தொட்டி என்று மலைகள் வர்ணிக்கப்படுகின்றன. வாழ்க்கை மற்றும் பருவநிலை ஆகிய இரண்டிலும் மலைகள் ஆற்றும் பங்கு அளப்பரியது. உலகின் பாதிப் பல்லுயிர் பெருக்கத்திற்கு மலைகள் உதவுகின்றன. எனவேதான் மலைகள் நமது இயற்கை ஆபரணங்களாகும்.

நீர்வீழ்ச்சியில் மலைகளின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். உதாரணமாக இலங்கையை எடுத்துக்கொண்டால், இலங்

> ***“இலங்கையை எடுத்துக்கொண்டால், இலங்கையில் மஸ்கெலிய ஓயா, சிவனொளிபாத மலையிலிருந்து ஊற்றெடுப்பதனால் லக்சபான நீர்வீழ்ச்சியும் மஸ்கெலிய ஓயாவும் சிவனின் பாதத்திலிருந்து ஊற்றெடுப்பதாக புராணசாஸ்திரங்கள் கூறுகின்றன.”***

tg.theeban@gmail.com



கையில் மஸ்கெலிய ஓயா, சிவனொளிபாத மலையிலிருந்து ஊற்றெடுப்பதனால் லக்சபான நீர்வீழ்ச்சியும் மஸ்கெலிய ஓயாவும் சிவனின் பாதத்திலிருந்து ஊற்றெடுப்பதாக புராண சாஸ்திரங்கள் கூறுகின்றன. இலங்கையின் மின் உற்பத்திக்கான முதன்மையான நீர்வீழ்ச்சியாக இது விளங்குகிறது. இலங்கையின் மிகவும் உயரம் கூடிய நீர்வீழ்ச்சி பம்பரகந்த நீர்வீழ்ச்சி. சுமார் 263 மீற்றர் உயரம் உடையதுடன் வலிஹேன, பம்பரகந்த எனும் இரு மலைத்தொடர்களுக்கு இடையில் உற்பத்தியாகிறது. இலங்கையில் உள்ள இரண்டாவது உயரம் கூடிய நீர்வீழ்ச்சி தியலும நீர்வீழ்ச்சியாகும்.

இவ்வாறான பயன்பாடுகளைக் கொண்டதாக மலைகள் விளங்கினாலும் கவலைக்குரிய விடயம், உலகளவில் சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆய்வுகளின்படி உலகில் உள்ள மிகவும் பழைமையான மலைகளின் உயரம் நாளுக்குநாள் குறைந்து வருவதாக அறியமுடிகின்றது. உலகில் 20% வருவாய் மலை சார்ந்த சுற்றுலாமூலம் கிடைக்கின்றது. இதற்காக சுற்றுலா மையங்களை முதன்மைப்படுத்திாவிடுதிகள் அமைப்பதற்காகவும் பெருகும் சனத்தொகைக்கு ஏற்ப நிலங்கள் பகிரப்படுவதற்காகவும் விளையாட்டு மைதானங்கள் போன்ற கட்டுமான நடவடிக்கைகளுக்காகவும் மலைகள் அழிக்கப்படுகின்றன. மலைகளிலுள்ள மரங்கள் வெட்டி சூறையாடப்படுகின்றன. காபன்வாயுவின் சதவீதம் வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் மலைகள் பாதிக்கப்படுகிறது. மேலும் கிரனைற்றுக்காக மலைகளை வெட்டுகிறார்கள். காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் மலைகள் பாதிக்கப்படுகின்றன. எனவே சர்வதேச சமூகங்கள் இவற்றைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

மலைகள், அசாதாரணமான தாவரங்கள், விலங்குகள் மற்றும் பல்வேறு மொழிகள் மற்றும் மரபுகளைக்கொண்ட பல கலாசார ரீதியாக வேறுபட்ட சமூகங்களின் தாயகமாகவும் உள்ளன. உலகில் 50%-க்கும் அதிகமானோர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மலை வளங்களிலேயே தங்கியுள்ளனர். மொத்தமாக உலகின் 24% நிலப்பகுதி மலைகளாக உள்ளதுடன், உலகின் 15% மக்கள் மலைப் பகுதிகளிலேயே வாழ்கிறார்கள். இவை அவர்களின் தாயகமாக உள்ளன. மலைவாழ் மக்களில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்கின்றனர். சர்வதேச அளவில் மலைகளை நம்பியே வாழும் 40% பழங்குடியின மக்கள் உணவுப் பற்றாக்குறையால் தவிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே மலை, மலைசார்ந்த இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இப்படியே செல்லுமானால் இவர்களின் நிலை என்ன?, மலைகளின் முக்கியத்துவம் என்னாவது? இதனை இப்படியே விட்டுவைத்தால் நிலமை என்னாகும்? சர்வதேசமே விழித்தெழவேண்டாமா? மலைகள் நமது இயற்கை ஆபரணங்கள் என்ற உணர்வு மக்களுக்கு ஏற்படவேண்டாமா?

2002-ஆம் ஆண்டில் மலைகளின் கூட்டாளி என்கிற அமைப்பு மலைகளைப் பாதுகாக்க, மலைப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, மலைகளின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு உலகம் முழுவதும் தொடர்பை ஏற்படுத்தி இவ்அமைப்பின் முயற்சியால் 2002-இல் ஐ.நா. சபை டிசம்பர், 11 பன்னாட்டு மலைகள் நாளாக அறிவித்தது. பன்னாட்டு மலைகள் நாளை ஐ.நா.சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு முன்னின்று நடத்திவருகிறது.

சர்வதேச தினங்கள் என்பது உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் கொண்டாடப்படும் முக்கிய தினங்களாகும். இத்தினங்கள் குறிப்பிட்ட விடயங்கள் அல்லது காரணங்களுக்காக அனுசரிக்கப்படுகின்றன. அந்தவகையில் மனிதநல வாழ்வில் மலைகள் வகிக்கும் பங்கின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும், அவற்றில் உள்ள வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் மலைகளின் மேம்பாட்டிற்காகவும் உலகம் முழுவதும் மக்களிடையே நேர்மறையான மாற்றங்களையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்காகவும்,சர்வதேச சமூகங்கள் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நினைவூட்டுவதற்காகவும் இத்தினம் கொண்டாடப்படுகிறது. ஆரோக்கியமாக வாழ மலைகளைப் பாதுகாப்பது எம் கடமையென நினைத்து இத்தினத்தை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாட வேண்டும்.

காபன் வாயுவின் சதவீதம் வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் மலைகள் பாதிக்கப்படுவதோடு, மலைவாழ் மக்களும் பாதிப்புக்குள்ளாகின்றனர். அதேவேளை மலைவாழ் மக்களில் பெரும்பாலானவர்கள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்றனர். இத்தகைய நிலையில், நிலையான மலை வளர்ச்சியை உறுதி செய்வதற்காக மலைகளின் அனுகூலங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதோடு, மலை வளர்ச்சியில் உள்ள வாய்ப்புகள் மற்றும் தடைகளை முன்னிலைப்படுத்தி உலகளவில் சாதகமான மாற்றத்தைக் கொண்டுவரும் கூட்டணிகளை உருவாக்குவதும் அவசியம். இவற்றைக் கருத்தில் கொண்டு சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நியூயோக்கில் உள்ள ஐ.நா. தலைமையகம் வலியுறுத்தியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் நன்னீர், அமைதி, பல்லுயிர் அல்லது காலநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை மையமாகக்கொண்டே சர்வதேச தினக் கருப்பொருள் முன்வைக்கப்படுகின்றது. 2024-ஆம் ஆண்டு சர்வதேசமலைதின கருப்பொருளாக 'புதுமையான தீர்வுகள், தழுவல் உத்திகளை வளர்ப்பது மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக இளைஞர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது'. சிக்கலான மலை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு புதுமை அவசியம்.

மலைகளும், மலைசார்ந்த வளங்களும் நம் முன்னோர்கள் நமக்கு அளித்த கொடை. அவற்றைப் பழைமை மாறாமல் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு அளிப்பதே நாம் அவர்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்குச் செய்யும் மிகப் பெரிய உதவியாக இருக்கும். இதன் அடிப்படையில்தான் மலைகளைக் கவனம் கொள்ளும் முகமாக 2003-ஆம் ஆண்டு முதல் சர்வதேச மலைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. எனவே மலைகள் நமது இயற்கை ஆபரணங்கள் என்பதை நாம் எல்லோரும் மனதில் நிறுத்தி 2025-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் சர்வதேச மலைகள் தினத்தைக் கொண்டாடுவோமாக.



natkunalingam@thaiveedu.com

# மக்கள் வாழ்வும் மறதி நோயும்



■ குமார் புனிதவேல்

tg.theeban@gmail.com

எங்கள் வாழ்நாள் பொதுவாக அதிகரித்துச் செல்வதை இன்று நாம் அனைவரும் அறிவோம். ஷேக்ஸ்பியர் காலத்தில் மனிதரின் வாழ்நாள் சராசரியாக 40 ஆண்டுகளாகும். ஆனால், இன்று கனடாவில் சராசரி வாழ்நாள் 83 ஆண்டுகள் ஆகும். 1980-களில் இலங்கையில் இன அழிப்புக்கு அஞ்சிக் குடி பெயர்ந்த தமிழர்கள் பலர் ரொறன்ரோவில் 80 வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வயது கூடக்கூட எமது உடம்பின் உறுப்புகள் யாவும் செய லற்றுப் போவது இயல்பானதே. அதே போன்றே மனிதரின் மூளைகளும் செயலற்றுப் போய்க் கொண்டிருக்கிறது என் றால் தவறாகாது. அண்மையில் வெளியாகிய W.H.O அறிக்கை ‘மறதி நோய்’ வருகைக்கு முக்கிய காரணி முதுமை எனக் கூறுகிறது. முதுமை தவிர்க்க முடியாதது. எனவே, முதுமையிலும் மறதியைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனது நோக்கம் ஆகும்.

எமது மூளை ஆரோக்கியமாய் இருக்கும் வேளையிலேயே, அதனைத் தக்கமுறையில் பராமரித்து, மறதிவராது இருக் கும் வழிகளைப் பின்பற்றுவதுதான் சிறப்பாகும். இங்கு குறிப்பாகக் கவனிக்கவேண்டிய விடயம் என்னவெனில் நீங்கள் மூளைக்காகச் செய்யும் செயற்பாடுகள் உங்கள் முழு உடம்பிற்கும் பயன் தரும். மேலும் மூளைதான் எல்லா முடிவையும் எடுப்பதாகும். உதாரணத்திற்கு நான் என்று நெஞ்சைத் தொட்டுக் காட்டினாலும் அந்தச் செயலைச் செய்ய வைப்பது மூளை அல்லவா? இதனால்தான், எண் சான் உடம்பிற்கு சிரசு தான் பிரதானம். அதாவது தலை தான் பிரதானம் என்பர். அது மட்டுமல்ல அந்த தலைதான் கண், காது, வாய், மூக்கு அனைத்தையும் இயக்கும் மூளையை வைத்துள்ளதால் தலை பிரதானமாகியது. இவ் வளவு செய்யும் மூளை உடல் எடையின் இரண்டு அல்லது மூன்று விகிதமே. ஆனால், அதன் செயற்பாட்டிற்கு உங்கள் உடலில் ஓடும் இரத்தத்தில் இருபது விகிதமான இரத்தம் செலுத்தப்படுகிறது. இதன் அளவு ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் வேளைகளில் அதிலும் அதிகமாய் இருக்கும்.

இந்நிலையில் நீங்கள் உங்கள் மூளையின் ஆரோக்கியத்தை எப்படிக் கவனித்துக் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்து, உங்கள் முழு உடலும் வளம்பெறும். உதாரணத்திற்கு: அள விற்கு அதிகம் மது அருந்தினால் அல்லது புகைத்தால் உங்கள் மூளை பாதிக்கப்படுவதுடன், உங்கள் உடல் நிலையும் பாதிக்கப்படும். எனவே நாம் இரண்டு விகித எடை உள்ள மூளையை எப்படிக் கவனித்துக் கொள்ளலாம் என்று பார்ப்போம்.

முன்பே குறிப்பிட்டேன் உங்கள் இதயம் உடல் முழுவதற் கும் செலுத்தும் இரத்தத்தில் இருபது விகிதம் மூளைக்குச் செல்வதால் அதன் செயற்பாடு குறையும் வேளையில், மூளை யின் செயற்பாடு குறைந்து, மறதி தோன்றத் தொடங்கும். இருதயத்திற்கும் வயது எட்டு தசாப்தமாகி வயோதிகம் அடையின், அதன் செயற்பாடு குறைவது இயல்பே. மேலும் இருதயத்தை தாக்கக் கூடிய நோய்களான சர்க்கரை நோய், இரத்த அழுத்த நோய், கொழுப்பு போன்றவை வந்தால் இரத்த ஓட்டத்தில் குறைபாடு வரும்.

ஆகவே, முதல் கவனிக்க வேண்டிய விடயம், ஆண்டு தோறும் வைத்தியப் பரிசோதனைகளைச் செய்து, அவற் றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். அவற்றிற்கு தகுந்த மாற்று மருந்து இருப்பினும், அதனைக் கவனியாது பலரும் இருந்துவிடுவதினால் மறதி நோய் குறைந்த வயதி லேயே தோன்றிவிடும்.

மனிதர்கள் அனைத்துண்ணிகள் என்றபோதிலும், போதுமான நார்ச்சத்து நிறைந்த தாவர உணவுகளை உணவில் சேர்த் துக்கொள்வது செரிமான ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

***‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்’***

அதாவது, முன் உண்டது செரித்ததைத் தெளிவாக அறிந்து, அதன் பின்னரே உண்பாரானால், அவருடைய உடலுக்கு ‘மருந்து’ என்னும் எதுவுமே வேண்டாம், எனவே, ஆரோக்கிய மான மூளைக்கு செமிக்கத்தக்க உணவுகளை உட்கொள் வது அவசியம் என வள்ளுவர் தெளிவாகக் கூறுவார்.

மறதிநோயை தவிர்ப்பதற்கு வைத்தியர் அனைவரும் அறி வுறுத்துவது தேகப்பியாசப் பயிற்சியாகும். முன்பு குறிப் பிட்டதுபோல் உடம்பெடையின் இரண்டே விகிதமான மூளைக்கு இருபது விகித இரத்தம் பாய்ச்சப்படும் வேளை யில், தேகப்பியாசம் செய்து, உடம்பு சுறுசுறுப்பாய் இருக் கும் வேளையில், மூளைக்கு தேவையான இரத்தம் கிடைக்கும்.

தேகப்பியாசம் என்றவுடன் அனைவரும் எண்ணுவது உடற் பயிற்சிக் கூடங்களையே. அதனைத் தவறு எனக்கூற மாட் டேன். ஆனால், வல்லுனர்களின் கணிப்புப்படி வாரம் ஒன்றிற்கு 150 நிமிடங்கள் வரை தேகப்பியாசம் செய்ய அறிவுறுத்துகிறார்கள். ஆனால், முதுமையை அடையும் வேளையில் நாள் ஒன்றிற்கு அரை மணித்தியாலம் நடந்தால் போதும். அதற்கு உங்களைப் போல உள்ள ஒரு நண்பரை இணைத்துக்கொண்டால் இருவருமாக கதைத்துக் கொண்டு நடக்கலாம் அல்லவா. பல மில்லியன் வருடங்களாக நடந்து திரிந்து தன் காரியத்தை செய்து வந்த மனிதர், சில நூற் றாண்டுகளாகத்தான் வாகனங்களில் பயணிக்கிறார்கள். அது தவறு அல்ல, சிறப்பு. ஆனால், நடப்பதுவும் ஆரோக் கியத்திற்கு அவசியமாகும். அது இரத்த ஓட்டத்தை அதி கரித்து, மூளையைச் சிறப்பாக செயற்பட வைக்கும், ஞாபக சக்தியும் அதிகரிக்கும்.



மனிதர் ஒரு சமூக விலங்கு. குரங்கு எனும் கூட்டமாக வாழும் விலங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்து, மனிதரான வர்கள். இன்றைய சமுதாய அமைப்பு அறியாமையால் சில ரைத் தனிமைப்படுத்துகின்றது. அப்படித் தனிமைபடுத்தப் பட்டவர்களுக்கு மறதி நோய் விரைவாக வர இடம் உண்டு. எனவே, தனிமைப்படுத்துவதைத் தவிர்த்து மற்றவர்களுடன் இணைவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

வாழ்க்கையில் நான் கற்றுக்கொண்ட ஒரு பெரும் பாடம் ‘பாவிக்காதவைகள் பறிக்கப்படும்’ என்பதாகும். உதாரணத் திற்கு உங்கள் முழங்கையை மடிக்க முடியாமல் கட்டி வைத்து, ஒரு மாதத்தின் பின் கட்டை அவிழ்த்து விட்டால், கை மடிக்கவும் முடியாது போய்விடும். அதே போல் உங்கள் மூளையைப் பாவிக்காவிடில் அதுவும் செயலிழந்து, மறதி வரத்தொடங்கும்.

சரி எப்படி மூளையைப் பாவிப்பது எனக் கேட்டால், நான் முதல் குறிப்பிடுவது...,

- வாசிப்பது. இது உங்கள் சிந்தனையையும் கற்பனை யையும் வளப்படுத்துவதுடன், ஞாபகத்தை ஊக்குவிக்கும்.
- தியானப் பயிற்சியினைக் கிரமமாகச் செய்து வருபவர் களுக்கு மனதில் விழிப்புணர்ச்சியும் ஞாபகமும் சிறக்கும்.
- இளமையில் ஆசைப்பட்டும் சந்தர்ப்பம் கிடைக்காவிட் டால், முதுமையில் இசைப் பயிற்சியில் ஈடுபடுங்கள். இவை உங்கள் மூளைக்கு வளர்ச்சியைத் தரும்.
- நண்பர்களுடன் சேர்ந்து ஆடு புலி ஆட்டம், சீட்டு விளை யாடுதல், தனிமையில் சுடோக்கு - குறுக்கெழுத்துப் போட்டி முதலானவற்றில் ஈடுபடுதல் விளிப்புணர்ச்சியை யும் ஏற்படுத்தும்.
- மூளைக்குச் செல்லும் இரத்தம் தரமுடையதா என்பதை கவனிக்கத் தவறாதீர்கள். வருடாந்தம் இரத்தப் பரிசோத னையை தவறாமல் உரிய காலத்தில் செய்வது அவசிய மாகும்.
- வைட்டமின்கள் உங்கள் மூளை வளர்ச்சிக்கு அத்தியவ சியமாகும். வருடாந்தம் நடத்தும் இரத்தப் பரிசோதனையில் குறைபாடுகள் இருப்பின் அவை நிவர்த்தி செய்யப்படும். மேலும் எத்தகைய உணவுகளை உட்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்துவார்கள். மூளையில் சிறப்பான செயற் பாட்டிற்கு வைட்டமின்கள் C, D, E, B12 ஆகியன மிகவும் அவசியமாகும். குறிப்பாகச் சொல்வதானல் மரக்கறி உணவில் B12 குறைவாகக் காணப்படும். தேவையானால் வைத்தியர் B12 குளிசைகளைக் குடிக்க அறிவுறுத்துவார்.
- செவிப்புலன் குறைந்தவர்கள் மறதியில் அவஸ்தைப்படு வதை அவதானித்திருப்பீர்கள். கண்களுக்கு கண்ணாடி போல் செவிக்கும் தேவையான கருவியைப் பெற்று வைத் திருப்பது மிக அவசியம். வள்ளுவன்கூட, ‘செல்வத்தில் எல்லாம் பெருஞ்செல்வம் செவிச் செல்வம்’ என்கிறான் அல்லவா ?
- எண்சாண் உடம்பிற்குச் சிரசுதான் பிரதானம் என முன் னரே பார்த்தோம். எனவே, தலையில் அடிபடாமல், காயப் படாமல் கவனித்துக்கொள்ளுங்கள். தடக்கி விழுவதால் அதிகளவான முதியோர்கள் வைத்தியசாலையில் அனு மதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக, படிகளில் ஏறி, இறங்கு கையில் கவனமாய் இருக்க வேண்டும். தலைக்கவசம் இல்லாமல் சைக்கிள் ஓட்டக்கூடாது. இளம் வயது முதலே இவ்விடயத்தில் கவனமாய் இருப்பது அவசியம்.
- இறுதியாகவும் உறுதியாகவும் குறிப்பிட வேண்டிய விட யம் தூக்கம். எந்த இயந்திரத்திற்கும் ஓய்வு இன்றியமை யாதது. தூங்கும் வேளை உடம்பு மட்டுமின்றி மூளையும் ஓய்வு பெறுகிறது. அந்த ஓய்வு சிறப்பாக அமைவதற்கு ஆழ்ந்த தூக்கம் வேண்டும்.
- நித்திரைக்குச் செல்வதற்கு இரண்டு மணித்தியாலங் களுக்கு முன் கணினி, கைத்தோலைபேசி, தொலைக் காட்சி ஆகியவற்றைப் பார்ப்பதைத் தவிர்ப்பது மிக அவசியம்.
- ஆழ்ந்த தூக்கத்திற்கு தடையாக உள்ள மற்றுமொரு விடயம், படுக்கை அறையில் வெளிச்சம் இருப்பது. படுக்கை அறையை இருட்டாக வைத்திருங்கள். அது உங் களுக்கு ஆழ்ந்த தூக்கத்துடன், மூளைக்கும் முழு உடம் பிற்கும் ஓய்வைத் தரும்.



kumar.punithavel@thaiveedu.com



ஓவியர் ஜீவா

# ஃபிராங்கென்ஸ்டைன் 2025

திரைப்படங்கள் தோன்றிய காலத்திலேயே, மக்களை வியக்கச் செய்த திரைப்படக் கருக்கள் நகைச்சுவையும் அமானுஷ்யமும் தான். குறிப்பாக பேய், சாத்தான் போன்ற கதாபாத்திரங்கள் திரைப்படங்களில் வரும்போது மக்கள் பயந்தும் வியந்தும் போய் இருந்திருக்கிறார்கள். ப்ராம் ஸ்டோக்கர் எழுதிய ட்ராகுலா நாவலும், மேரி ஷெல்லி எழுதிய பிரான்கென்ஸ்டெய்ன் நாவலும் ஏராளமான திரைப்படங்களை உருவாக்க உறுதுணையாக இருந்திருக்கின்றன. மலை மீதுள்ள உயர்ந்த கோட்டை, கொடும் காற்றைக் கிழித்துக் கொண்டு வரும் குதிரைகள் இழுக்கும் கோச் வண்டிகள், இருண்ட அறைகள், நீண்ட நிழல்கள், பாதாள அறைகளில் துயில் கொண்டிருக்கும் சவப்பெட்டிகள், கழுத்தைக் கடித்து உதிரம் உறிஞ்சும் கோரைப்பற்கள், அறிவியல் பரிசோதனை அறைகளில் குவிந்து கிடைக்கும் மனித உடல்களின் பாகங்கள், இடி, மின்னல் என்று அனைத்துமே அமானுஷ்யத்தின் இருள் படிந்த பகுதிகள்.

புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியின் மனைவி மேரி ஷெல்லி 1818-இல் எழுதிய புதினம் ‘ஃபிராங்கென்ஸ்டைன்’. விக்டர் ஃபிராங்கென்ஸ்டைன் என்ற மருத்துவர் தன் ஆராய்ச்சியின் விளைவாக உருவாக்கும் ராட்சச பலமுள்ள ‘மான்ஸ்டர்’ மனிதன், இவர்கள் இருவரும் பெறும் அனுபவங்களே கதை. இந்தக் கதையினால் பாதிக்கப்பட்டு உருவான திரைப்படங்களின் எண்ணிக்கை கேட்டால் பிரமிப்புதான் வரும். குறும்படங்கள், ஆவணப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் அனைத்தையும் தவிர்த்து முழு நீளத் திரைப் படங்களின் எண்ணிக்கை மட்டும் 423. முதல் திரைப்படம் வெளியான ஆண்டு 1910. அதன் பின் ஃபிராங்கென்ஸ்டைன் திரைப்படங்கள் வரிசையாக சலிக்காமல் வந்துகொண்டே இருக்கின்றன. இவற்றில் கதையை கிண்டல் செய்து எடுக்கப் பட்ட நகைச்சுவைப் படங்களும் அடக்கம். ‘அப்பாட் அண்ட் காஸ்டெல்லோ மீட்ஸ் ஃபிராங்கென்ஸ்டைன்’, ஒரு புகழ் பெற்ற காமெடி படம். பிரபல திரைப்படங்களையும் திரைப் பட பாணிகளையும் கிண்டல் செய்து புகழ் பெற்ற பிரபல இயக்குநர் / நடிகர் மெல் ப்ரூக்ஸ் இயக்கிய ‘யங் ஃபிராங் கென்ஸ்டைன்’ 70-களில் வெளியான ஒரு கறுப்பு வெள்ளைத் திரைப்படம். வண்ண யுகத்தில் படத்தின் திகில் நிமிடங்கள் கறுப்பு வெள்ளையில்தான் நன்றாக இருக்கும் என்பது இயக்குநரின் கருத்து. 30-களின் ஒளியமைப்பு, ஒளிப் பதிவு, அரங்க அமைப்பு என்று கவனமாகத் தேர்ந்தெடுத்துச் செய்யப்பட்ட நகைச்சுவைத் திரைப்படம். இதற்காக 1931-இல் வெளியான ஃபிராங்கென்ஸ்டைன் படத்தின் பரிசோதனைச்சாலை உபகரணங்களையே இந்த திரைப்படத்திற்குப் பயன்படுத்தினார் ப்ரூக்ஸ். ஃபிராங்கென்ஸ்டைனின் பேரனாக ஜீன் வைல்டரும், மான்ஸ்டர் ஆக பீட்டர் பாயிலும், உதவியாளர் முட்டைக்கண் இகோராக மார்டி பெல்ட்மனும் நகைச்சுவையில் கலக்கோ கலக்கு என்று கலக்கினார்கள்.

tg.theeban@gmail.com

‘ஃபிராங்கென்ஸ்டைன்’ கதை பல மொழிகளில் பல வடிவங்களில் கையாளப் பட்டது. இந்தியில் ராம்ஸே பிரதர்ஸ் போன்ற இயக்குநர்கள் இதில் பெரும் புகழ் பெற்றவர்கள். தமிழில் அந்த காலத்திலேயே 1963-இல் நிறைய உருமாற்றி ‘நான் வணங்கும் தெய்வம்’ என்ற பெயரில் ஒரு திரைப் படம் வெளியானது. டாக்டர் ஃபிராங் கென்ஸ்டைனின் தமிழ் வடிவமாக நாகையாவும், மான்ஸ்டராக சிவாஜி கணேசனும் கே. சோமுவின் இயக்கத்தில் நடித்திருந்தனர். தமிழுக்கே உரிய மாற்றங்கள் இந்தப் படத்தைச் சிதைத்தன என்று சொல்லாமல் விட முடியுமா!



ஃபிராங்கென்ஸ்டைன் மற்றும் டிராகுலா திரைப்படங்களுக்கே உரிய நடிகர்கள் ஹாலிவுட்டில் நிறைய பேர் தோன்றி அழியாப்புகழும் பெற்றனர்.

1931-இல் வெளிவந்த படத்தில் மான்ஸ்டராக நடித்த போரிஸ் கார்லாப் பிரமாதமான ஒப்பனையுடன் தோன்றி பின் ஏராள மான திரைப்படங்களில் இதே வேடத்தில் நடித்தார். லான் சேனி ஜுனியர், பேலா லுகோசி, கிளென் ஸ்ட்ரேஞ், பீட்டர் பாயில், கிறிஸ்டோபர் லீ, ராபர்ட் டி நீரோ, ஜேகப் ஏலோர்டி என்று அற்புதமான நடிகர்கள் இதே மான்ஸ்டர் வேடத்தில் நடித்து பெரும் புகழ் பெற்றனர்.



1994-இல் வெளியான 'மேரி ஷெல்லி'ஸ் பிரான்கென்ஸ்டெய்ன்' இந்த வரிசையில் சிறந்த படங்களில் ஒன்று. மூலக்கதையில் அதிகம் மாற்றங்கள் செய்யாத திரைக்கதை. இயக்குநர் கென்னத் பிரானாவே டாக்டர் விக்டர் பிரான்கென்ஸ்டெய்ன் வேடத்தில் நடித்தார். மான்ஸ்டராக நடித்தவர் அற்புத நடிகன் ராபர்ட் டி நீரோ. சிறந்த தயாரிப்பு, இயக்கம், நடிப்பு என்று எல்லா தளங்களிலும் சிறப்பாக இருந்த திரைப்பட இது.

இந்த 2025 வருடம் வெளியாயிருக்கும் 'ஃபிராங்கென்ஸ் டைன்' இந்த தலைப்புகளில் வெளியாயிருக்கும் திரைப்படங்களின் உச்சம் என்று கருதுகிறேன்.



1957-இல் வட துருவம் நோக்கி சென்று கொண்டிருந்த ஒரு கப்பல், பனிப்பாளங்களுக்கிடையே சிக்கிக்கொண்டிருக்கிறது. அதில் இருக்கும் படுகாயமடைந்த டாக்டர் விக்டர் ஃபிராங்கென்ஸ்டைனை தேடி வரும் ஒரு நெடிய உருவம் கப்பலையே தாக்கி, கவிழும் நிலைக்கு கொண்டுபோகிறது. இது ஏன், என்ன என்பதை ஃபிராங்கென்ஸ்டைன், கப்பல் கேப்டனுக்கு சொல்லும் பிளாஷ்பாக்கோடு தொடங்குகிறது திரைப்படம்.

விக்டர் சிறுவயதிலேயே மனித உடற்கூறு பற்றிய கல்வியில் காலங்களைக் கழிப்பவன். சிறிய தவறுகளுக்குக்கூட கடும் தண்டனை தரும் தகப்பனாரும் ஒரு மருத்துவரே. அன்னையின் மரணமும், தந்தையின் அராஜகமும், மரணத்தை வெல்லும் ஒரு கண்டுபிடிப்பை நிகழ்த்தவேண்டும் என்ற வேட்கையை அவனுக்குள்ளே விதைக்கிறது. பின்னர் மனித உடல் பாகங்களை இயங்க வைக்கும் தன் பரிசோதனையை கல்லூரியில் ஒரு பெரும் சபை முன்னே நிகழ்த்திக்காட்டும்போது, மருத்துவக்கல்லூரியிலிருந்தே வெளியேற்றப்படுகிறான்.



ஒரு புதிய மனிதனையே உருவாக்கும் தன் பரிசோதனைகளை நிகழ்த்த ஒரு பெரிய பணக்காரரின் நட்பு கிடைக்கிறது. ஹார்லாண்டர் வரம்பற்ற நிதியையும் ஒரு பயன்படுத்தப்படாத கோபுரத்தையும் விக்டரின் பரிசோதனைகளுக்காக அளிக்கிறார். விக்டரின் சகோதரன் வில்லியம்சை மணக்கப்போகும் எலிசபெத் ஹார்லாண்டரின் மருமகள் நன்கு படித்தவள், துணிச்ச லானவள். இந்தப் பரிசோதனைகளில் ஆர்வம் கொண்டவள். பரிசோதனை தாமதிக்க தாமதிக்க ஹார்லாண்டர் பொறுமை இழக்கிறார். சோதனையை விரைவுபடுத்தச்சொல்லி நச்சரிக்கிறார். உடற்பாகங்களுக்காக தூக்கிலிடப்பட்ட குற்றவாளிகளின் சடலங்களையும், க்ரீமியன் போரில் இறந்து போன போர் வீரர்களின் சடலங்களையும் தேடிச் சென்று தேவைப்பட்ட பாகங்களைச் சேகரித்து ஒரு புதிய உடலை உருவாக்கும் முயற்சியில் இறங்குகிறான். இதயத்திற்கும் மூளைக்கும் மின்சாரக் கதிர்களை அனுப்பி செயற்பட வைக்க மின்னலைத் தூண்டுவதற்கான ஏற்பாடுகளை கோபுர உச்சியில் செய்கிறான். ஹார்லாண்டர் பாலியல் நோயினால் பாதிக்கப்பட்டு உடல் நலமற்று இருப்பதைத் தெரிந்து கொள்கிறான். அவன் தன்னை அந்த புதிய உடலில் பொருத்தித் தரும்படி கேட்கும்போது விக்டர் மறுக்கிறான். காரணம் அவனது முக்கிய பாகங்கள் கடும் சேதமடைந்திருப்பதால் எந்த பயனும் இல்லை என்று சொன்னால் அவன் கேட்பதாக இல்லை. பரிசோதனைக்கு சேதம் விளைவிக்கும் முயற்சியில் தோல்வியடைந்து இறந்தும் போகிறான். புதிய உடல் மின்சாரத்தால் உயிரூட்டும் பல முயற்சிகளுக்கு பின்னும் உயிர் பெறவில்லை.







அடுத்தநாள் கண் விழிக்கும்போது புதிய உடலுக்கு உயிர் வந்ததைக் காண்கிறான். முதலில் தன் பெயரான விக்டர் என்பதை அதற்கு சொல்லித்தருகிறான். அதன் வேகமும் பலமும், தன்னை அச்சுறுத்துவதால் அதனைச் சங்கிலியால் பிணைத்துவிடுகிறான். தன் தந்தை தன்னை நடத்தியது போல இவனும் அதை அடித்து துன்புறுத்துகிறான். தன் மாமனைத் தேடிவரும் எலிசபெத் புதிய மனிதன் துன்புறுத் தப்படுவதைப் பார்த்து வருந்தி விக்டரைக் கேள்வி கேட் கிறாள். இது விக்டருக்கு எரிச்சல் தர, மான்ஸ்டர் மீது பொறா மைப்படுகிறான். ஒரு கட்டத்தில் அதை கட்டடத்திற்குள் வைத்து நெருப்பு வைத்துவிடுகிறார். அது 'விக்டர்' என்று ஓசையெழுப்ப, பரிதாபப்பட்டு மனம் மாறி, அதைக் காப்பாற் றச் செல்கிறான். பெரும் நெருப்பு இவனையும் தூக்கி வீச, கால் களில் படுகாயம் ஏற்பட்டு வீழ்கிறான். இந்தக் கதையை கேப் டனிடம் சொல்லும்போது மான்ஸ்டர் கப்பலுக்குள்ளேயே வந்து விடுகிறது. இப்போது தன் பக்க கதையை மான்ஸ்டர் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம்!

பெருநெருப்பிலிருந்து தப்பிச் சென்ற மான்ஸ்டர் கண் பார்வை யற்ற ஒரு கிழவர் தன் பேத்திக்கு வாசிக்கக் கற்றுக் கொடுப் பதைப் பார்க்கிறான். இரகசியமாக அவர்களுக்கு உதவு கிறான். அவர்கள் இவனைக் கொண்டாடுகிறார்கள். பெரியவ ரிடம் இருந்து எழுதப்படிக்கக் கற்றுக்கொள்கிறான் மான்ஸ் டர். பின் விக்டரின் கோட்டையை தேடிச் சென்று அவனுடைய குறிப்புகளை எல்லாம் வாசிக்கிறான். விக்டரின் பெரும் சொத்தின் முகவரியும் கிடைக்கிறது. திரும்ப பெரியவரை பார்க்க வரும்போது, அவர் ஓநாய்களால் தாக்கப்படுவதை பார்த்து அவைகளுடன் மோதி, சிலவற்றைக் கொல்கிறான். மீதமுள்ள ஓநாய்கள் தப்பி ஓடுகின்றன.

தனக்கு மரணம் இல்லை என்பதாய் உணர்வது அவனுக்குச் சோர்வைத் தருகிறது. தனக்கு ஒரு துணையாக இன்னொரு தோழமையை படைக்கவேண்டும் என்று வில்லியம்ஸ் - எலிசபெத் திருமணத்திற்கு வந்திருந்த விக்டரிடம் கோரிக்கை வைக்கிறான்.

இன்னொரு உயிரை படைப்பதில் ஆர்வம் இல்லை என்று விக்டர் மறுக்கிறான். அந்த களேபரத்தில் புதுமணத் தம்பதி யர் காயமடைந்து மரணிக்க, பெரும் ஆவேசத்தில் தன்னைப் படைத்தவனையே தாக்குகிறான். படுகாயமடைந்த விக்டர் இப்போது கப்பலில் தஞ்சம் புகுந்திருக்கிறான்.

நடந்த சம்பவங்களை கேட்ட விக்டர் மனம் வருந்தி மான்ஸ டரை மகனே என்று விளிக்கிறான். அவனும் மனம் நெகிழ்ந்து இவனைத் தந்தை என்று அழைக்கிறான். கோபதாபங்கள் அடங்கி கப்பலை பனிப்பாறைகளிலிருந்து விடுவிக்க கப்பல் மிதந்து தன் இருப்பிடம் நோக்கி மிதந்து செல்கிறது!

திரைப்படத்தை மெக்சிகன் இயக்குநர் கில்லர்மோ டெல் டோரோ இயக்கியிருக்கிறார். இவருடைய முந்தைய திரைப்ப டங்களின் பெயர் வரிசையை பார்த்தாலே இவரது திறன் தெரியும். எழுத்தாளர், ஓவியர், இயக்குநர் என்று பன்முகம் கொண்ட டோரோ கோதிக் பாணியில் இருண்மையான சித்தி ரங்களைப் படைப்பதில் ஆர்வம் கொண்டவர். இந்தத் திரைப் படத்தில் அவருடைய சட்டகங்கள், படத்தின் வண்ணம், உரையாடல்கள் அனைத்துமே அவருடைய அழகியல் இர சனையை பறைசாற்றும். ஒரு பயங்கரத் தன்மையுள்ள புதினத்தை, மிக அழகுற திரைப்படமாக்கியிருக்கிறார் டோரோ. மான்ஸ்டர் பாத்திரம் இதற்கு முன் உள்ள திரைப்ப டங்களில் கொடூர முகமும், வடிவற்ற உடலும் கொண்டதாக இருந்தது. இதில் உளியால் செதுக்கப்பட்டது போல உடலும் முகமும் அமைந்திருக்கின்றன. ஒளிப்பதிவு, இசை, நடிப்பு, அரங்க அமைப்பு, ஒப்பனை, அனைத்துமே அற்புதம் என்று தான் சொல்லவேண்டும். நடிகர்கள் பெரும்பாலும் அறியாத முகங்களாக இருந்தாலும் பாலியல் நோயாளி ஹார்லாண் டராக வரும் கிறிஸ்டோப் வால்ட்ஸ் நமக்கெல்லாம் மிகவும் அறிமுகமானவர்.

குறைந்த அளவேயான திரையரங்குகளில் வெளியிடப்பட்ட இந்தத் திரைப்படம், நெட்பிளிக்ஸ் தளத்தில் வெளியாகி முதல் மூன்று நாட்களிலேயே 29.1 மில்லியன் பார்வையாளர் களைச் சென்று அடைந்திருக்கிறது என்பது பெரும் சாதனை. அந்த அளவுக்கு மக்களின் கவனத்தைக் கவர்ந்து இருக்கிறது!



jeeva@thaiveedu.com




# இத்தாலியின் சின்க் டெர்ரே

– குரு அரவிந்தன்

கிரேக்க நாட்டின் முக்கியமான சில தீவுகளைப் பார்த்துவிட்டு அங்கிருந்து இத்தாலி நாட்டுக்குப் பயண மானோம். கிரேக்க நாட்டு மக்களுடன் பழகும்போது, இத்தாலி நாட்டு மக்களைவிட கிரேக்க நாட்டு மக்கள் அன்பாகப் பழகக் கூடியவர்களாகவும், தாமாகவே முன்வந்து உதவிசெய்யக் கூடியவர்களாகவும் இருப்பதை என்னால் உணரமுடிந்தது.

இப்பொழுதெல்லாம் சுற்றுலாப் பயணிகள் அனேகமாக வரலாற்று முக்கியம் வாய்ந்த இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்து இயற்கைச் சூழல் கொண்ட இடங்களைத் தெரிவுசெய்கிறார்கள். இளைய தலைமுறை யினருக்கு வரலாற்றைத் தெரிந்துகொள்வதில் அதிக ஆர்வம் இல்லாது இருக்கலாம். இத்தாலிய நாட்டில் சின்க் டெர்ரே (Cinque Terre) என்ற இடம் ஒரு பிரபலமான சுற்றுலாத் தலமாகும். இது இத்தாலியின் வட மேற்கில் உள்ள லிகுரியாவிற்கு உட்பட்ட கடலோரப் பகுதியாகும். ஜெனோவாவிற்குத் தெற்குப் பக்கத்தில் இந்தக் கடலோரக் கிராமங்கள் இருக்கின்றன. லிகுரியன் கடலை நோக்கிய பாறைகளைக் கொண்ட செங் குத்தான நிலப்பரப்பில் லாஸ்பெசியா மாகாணத்தின் மேற்கில் இது இருக்கின்றது. மான்டெரோசோ அல் மாரே, வெர்னாஸ்ஸா, கார்னிகிலியா, மனரோலா, ரியோமாகியோர் ஆகிய ஐந்து கிராமங்களை இது உள்ளடக்கியது.

1950-ஆம் ஆண்டு வரை இந்தக் கிராமங்களைப் பற்றிச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தெரியாமலே இருந்தது. அக்காலத்தில் படகுகள் மூலம்தான் இங்கு செல்லக்கூடியதாக இருந்தது. இந்தக் கிராமங்களில் மான்டெரோ சாதான் பெரிய கிராமமாகும். யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமான சின்க்டெர்ரே தேசிய பூங்காவின் ஒரு பகுதியாக இது இருப்பதால், இத்தாலியில் அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடங்களில் ஒன்றாக இப்போது மாறிஇருக்கின்றது. இத்தாலியின் மிக அழகான கிராமங்கள் இவை என்று இந்தப் பகுதிக் கிரா மங்களை அழைக்கிறார்கள்.

மிக அழகான கடற்கரைகளைக் கொண்ட கிராமங்களாக இந்தக் கிராமங்கள் இருப்பதால், அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடியனவாக இருக்கின்றன. இங்குள்ள மீனவர்களின் கடற்கரையோர வீடுகள்

பல வர்ணங்கள் தீட்டப்பட்டவையாகக் காட்சி தருகின்றன. மனரோலா மற்றும் ரியோமாகியோர் வீடுகள் மிகவும் செங் குத்தான பாறைகளில் இருக்கின்றன. இந்த இடங்களில் உங்களால் குன்றுகளில் ஏறி இறங்க முடியுமா என்பதை நீங்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டும், எனவே நீங்கள் தங்குமிடத்தை முன்பதிவுசெய்யும்போது இதைப் பற்றியும் கவனம் செலுத்துங்கள். ரியோமாகியோர் குன்றில் (Castello di Riomaggiore) கோட்டை ஒன்று உள்ளது. இது முன்பு பாது காப்புக் கோட்டையாகவும், அதன் பின் கல்லறையாகவும் பயன்படுத்தப்பட்டது. தற்போது கலாசார மையமாகவும், மாநாடுகள் நடத்தவும் பயன்படுகிறது.

இப்போது இந்த சின்க் டெர்ரே ஒரு தேசிய பூங்காவாகவும், யுனெஸ்கோவால் பராமரிக்கப்படும் தளமாகவும் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதாகத் தெரிகின்றது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மலையேற்றம், படகுப்பயணம் செய்யவும் மற்றும் கடலை நோக்கி சரிந்து செல்லும் குன்றுகளில் உள்ள பாறைகளில் நடப்பதற்காகவும், விசித்திரமான இந்த ஐந்து கிராமங்களையும் பார்ப்பதற்காகவும் வருகிறார்கள். 1999-ஆம் ஆண்டு சின்க் டெர்ரேவில் அமைக்கப்பட்ட தேசியப் பூங்கா சுமார் 15 சதுரமைல் பரப்பளவைக் கொண்டது. திராட்சைத் தோட்டங்களையும், ஒலீவ் தோப்புகளையும் கொண்டது. சின்க் டெர்ரே கிராமங்கள் மிகப் பழைமை வாய்ந்தவை. ரியோமாகியோர் மற்றும் வெர்னாஸாவில் பழைய அரண்மனைகள் இருக்கின்றன. மனரோலா மற்றும் கார்னிகிலியாவில் பழைய தேவாலயங்கள் இருக்கின்றன.

மான்டெரோசோவில் பொதுக் கடற்கரைகளும், தனியார் கடற் கரைகளும் உள்ளன. தனியார் கடற்கரைகளில் வசதிகள் உண்டு. கடற்கரைகள் வெண்மணல் நிறைந்த அழகிய கடற்க ரைகளாக இருக்கின்றன. தொடர்வண்டி நிலையத்திற்கு எதிரே பெஜினாகடற்கரை இருக்கின்றது. நடைபாதையில் உணவகங்கள் இருக்கின்றன. இங்குள்ள இன்னுமொரு கடற் கரையை 'ஓல்ட்டவுன் கடற்கரை' என்று அழைக்கிறார்கள். இங்கு படகுகளை வாடகைக்கு எடுக்கும் வசதிகளும் உண்டு. நவம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம்வரை சின்க்யூ டெர்ரேயில் மழைக்காலம் என்பதால் பருவமாற்றம் காரணமாக அடிக்கடி மழை பெய்யும் காலமாகும். இக்கா லத்தில் கடற்கரைகளோ மலைப்பாதைகளோ சுற்றுலாப் பய ணிகளைக் கவரக்கூடியதாக இல்லை. சுற்றுலாப் பயணிகள் பார்க்கக்கூடிய பல இடங்கள் இந்தக் கிராமங்களில் இருந் தாலும், எல்லா இடங்களுக்கும் செல்ல எங்களுக்கு நேரம் போதவில்லை.

இந்த ஐந்து கிராமங்களில் வெர்னாஸ்ஸா கிராமம் மிகவும் பிரபல்யமானது. கடற்கரையை நோக்கிய குன்றின் சரிவுகளில் வண்ணமயமான வீடுகளையும், இறங்கு துறையையும் கொண்டது. வெர்னாஸ்ஸா நகரத்தில் எண்கோணக் கோபு ரத்தைக் கொண்ட 'சாண்டாமார்கெரிட்டா டி ஆன்டி யோச்சியா' தேவாலயம் இருக்கிறது. இங்குள்ள சரணாலயம் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. புராணக் கதையின்படி, சிலுவைப் போரின்போது வெர்னாஸ்ஸாவிற்கு வந்த கறுப் புநிற மடோனாவை 'எல் ஆப்ரிக்கானா' என்றுஅழைக்கி றார்கள். மடோனா டி ரெஜியோவின் திருவிழா ஓகஸ்ட் மாதத்தில் நடக்கின்றது.

மலைஏறுபவர்களுக்கு கார்னிகிலியா சிறந்த கிராமமாகும். கடல்மட்டத்தில் இருந்து 180 மீட்டர் உயரத்தில் இருக்கிறது. இதன் காரணமாக படகு இறங்குதுறை இந்தக் கிராமத் திற்குக் கிடையாது. தொடர்வண்டியில் செல்பவர்களும் படிகளில் மேலே ஏறித்தான் கிராமத்திற்குச் செல்லவேண்டும். இது திராட்சை மற்றும் ஒலீவ் மரங்களின் தோப்பு களைக் கொண்டது. சிறந்த சூரிய அஸ்தமனத்தைப் பார்ப்பதற்கு மனரோலாவின் மலைப்பகுதி பிரபலமானது. மனரோலாவில் 1338-ஆம் ஆண்டு கட்டப்பட்ட 'லோரென்சோ' தேவாலயமும் அதற்கு அருகே பழைய மணிக் கூட்டுக்



கோபுரம் ஒன்றும் இருக் கிறது. பழைய காலத்தில் பாதுகாப்புக் கோபுரமாக இது பாவிக்கப் பட்டது.

முன்பெல்லாம் வசதிபடைத் தவர்கள் மட்டும்தான் இப்ப டியான சுற்றுலாக்களில் ஈடுபட் டனர். ஆனால் இப்போது அநேகமானவர்களுக்கு சுற் றுலா செல்வதற்கான வசதி கள் இருக்கின்றன. பணியில் தற்காலிக ஓய்வு தேவை என்ப தற்காகவும், குடும்பத்தோடு நேரத்தைச் செலவிடவேண் டும் என்பதற்காகவும் பலர் இப்பொழுது விடுமுறையின்போது சுற்றுலாக்களை மேற் கொள்கின்றனர். அதற்கான போக்குவரத்து வசதிகளும், தங்குமிட வசதிகளும் அதிகரித்து இருப்பதால், அநேகமான நாடுகளில் சுற்றுலாத்துறை வருவாய் தரும் முக்கிய துறையாக இருக்கின்றது.

மிகப்பழைய கோட்டைகளையும், இடிந்துபோன மதில்க ளையும் இப்பகுதியில் காணக்கூடியதாக இருந்தது. பதினொராம் நூற்றாண்டளவில் இப்பகுதிகளில் மான்டெரோசோ மற்றும் வெர்னாசா இனத்தவர்கள் முதலில் வந்து குடியேறினார்கள். அதன் பின்தான் ஏனைய குடியேற் றங்கள் இங்கு இடம்பெற்றன. லிகுரியன் கடலை நோக்கிய செங்குத்தான நிலப்பரப்பில் உள்ள பாறைகளிலும் மக்கள் வீடுகளைக் கட்டி வாழ்கிறார்கள். கிரேக்க நாட்டில் பாரம் பரிய கிராமங்களின் வீடுகள் எல்லாம் வெள்ளைநிற வர்ணம் தீட்டியதாக இருக்கும், ஆனால் இங்கே இத்தாலியில் வித்தி யாசமாகப் பல வர்ணங்கள் தீட்டப்பட்ட வீடுகளைக் காணமு டிந்தது. குறிப்பாகக் கடற்கரை ஓரத்தில் உள்ள வீடுகளைப் பல நிறங்களில் காணமுடிந்தது. உப்புக்காற்றின் பாதிப்பைத்

**16–ஆம் நூற்றாண்டில், துருக்கியர்களின் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாக்க இங்கிருந்த மக்கள் ஏற்கனவே இருந்த தங்கள் கோட்டைகளை வலுப்படுத்தி, புதிய தற்காப்பு மதில்களையும்,கோபுரங்களை யும் கட்டி எழுப்பினார்கள். இத்தாலியில் இதுபோன்ற கோட்டைகளிலுள்ள குடியேற்றங்கள் அதிகமாக இருக்கின்றன. அநேகமான மலைக் குன்று களில் இதுபோன்றபழைய சுற்றுமதிலுடன் கூடிய கோட்டைகள் இருக் கின்றன**

தடுப்பதற்காகவோ, அவர்களின் இரசனையாகவோ அது இருக்கலாம் என நினைத்தேன்.

16-ஆம் நூற்றாண்டில், துருக்கியர்களின் தாக்குதல்களிலி ருந்து தங்களைப் பாதுகாக்க இங்கிருந்த மக்கள் ஏற்கனவே இருந்த தங்கள் கோட்டைகளை வலுப்படுத்தி, புதிய தற்காப்பு மதில்களையும்,கோபுரங்களையும் கட்டி எழுப்பி னார்கள். இத்தாலியில் இதுபோன்ற கோட்டைகளில் உள்ள குடியேற்றங்கள் அதிகமாக இருக்கின்றன. அநேகமான மலைக் குன்றுகளில் இதுபோன்றபழைய சுற்றுமதிலுடன் கூடிய கோட்டைகளைக் காணமுடியும். தண்ணீர், தேவாலயம், பாடசாலை, விளையாட்டு மைதானம் முதற்கொண்டு முக்கி யமான வசதிகளைக் கொண்ட இடமாக இந்தக் கோட்டைகள் இருக்கின்றன. எதிரிகளால் முற்றுகையிடப்பட்டாலும், சில காலத்திற்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய வசதிகளோடு இந்தக் கோட்டைகள் அமைந்திருக்கின்றன. அக்காலத்தில் வண்டிகள் பாவனைக்கு இல்லாததால், வீடுகளுக்கு முன்னால் உள்ள பாதைகள் நடைபாதையளவு இடைவெளிக ளைமட்டும் கொண்டவையாக இருக்கின்றன. இரண்டாம் உல கயுத்தத்தின்போது சின்க் டெர்ரே பகுதியும் அதிகமாகப் பாதிப்புக்குஉள்ளானது.

நாங்கள் அங்கு சென்றபோது, கனடாவில் 'கரபானா' கொண் டாட்டம் நடப்பதுபோல அங்கேயும் வார இறுதியில் அவர் களின் ஒரு கலாசார கொண்டாட்ட நிகழ்வு நடந்தது. அதனால் வண்டித்தரிப்பிடம் ஒரு பிரச்சினையாக இருந்தது. பழைய நகரங்கள் என்பதால், வீதிகள் சிறிதாக இருப்பதால் பொதுவாகவே வண்டித்தரிப்பிடம் கிடைப்பது அரிது. கொண் டாட்டம் என்பதால் வண்டிகள் நிறைந்திருந்தன. எல்லோரும் அதிவேக வீதிக்கரையில் வண்டியை நிறுத்தியிருந்தார்கள், நாங்களும் வேறு வழியில்லாததால் அப்படியே செய்தோம். வீதிகள் முழுவதும் இளைய தலைமுறையினரை கூட்டங்கூட்ட மாகக் காணமுடிந்தது. திரும்பிவந்து வண்டியை எடுக்கும் போதுதான் பின்னால் நின்ற ஒவ்வொரு வண்டியாகப் பொலிசார் இழுத்துச் செல்வதை அவதானித்தோம். நல்லகா லமாக அதிலிருந்து தப்பிவிட்டோம்.

இப்பகுதியில் திராட்சை, தோடை, மற்றும் ஒலிவ் மரங்களை அதிகம் கணக்கூடியதாக இருந்தது. பழங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. சின்க் டெர்ரே அங்கு செய்யப்படும் மதுபா னத்திற்கு, குறிப்பாக சியாச்செட்ரா வைன் (Sciacchetra Wine) மதுபானத்திற்குப் பெயர் பெற்றது. கடற்றொழில் கிரா மங்களாக இவை இருக்கின்றதால், உணவைப் பொறுத்தவ ரையில் கடல் உணவுகள் தாராளமாகக் கிடைக்கின்றன.

ஆனாலும் அவர்களது பாரம்பரிய உணவுகளான பாஸ்ரா அல்லது பிட்சாதான் அநேகமாக எல்லா இடமும் கிடைக் கின்றது.

போக்குவரத்துக்கு இலகுவாக லா ஸ்பெசியா, ஜெனோவா, பிசா போன்ற முக்கிய நகரங்களில் இருந்து சின்க் டெர்ரேயைத் தொடுக்கும் தொடர்வண்டிப் பாதைகள் இருக் கின்றன. எல்லா விரைவுவண்டிகளும் இங்கு நிற்பதில்லை. எனவே தொடர் வண்டியில் பயணிக்க விரும்புபவர்கள் பிராந்திய தொடர்வண்டிகள் அல்லது சின்க் டெர்ரே அதிவேக வண்டிகளை எடுத்துப் பயணிப்பது வசதியாக இருக்கும். சில இன்டர்சிட்டி தொடர்வண்டிகள் மான்டெரோசோ தொடர்வண்டி நிலையத்திலும் நிற்கின்றன. வண்டி ஓட்ட முடியுமானால் வாடகைக்கு ஒரு வண்டியை எடுத்து வைத்திருப்பது நல்லது. அது விரும்பின நேரத்தில் விரும்பிய இடங்களுக்குச் சென்றுவர வசதியாக இருக்கும். ஆனால் வண்டித் தரிப்பிடம்தான் உங்களுக்குப் பிரச்சி னையாக இருக்கும்.

வடக்கே உள்ள லிவன்டோவில் இருந்து தென்கிழக்கே உள்ள லா ஸ்பெசியா வரையும் தினமும் பயணிகள் படகுசேவை நடைபெறுகின்றது. கார்னிகிலியாவில் இறங் குதுறை இல்லாததால், கார்னிகிலியாவைத் தவிர அனைத்து முக்கிய கிராமங்களிலும் படகுகள் நின்று செல்கின்றன. இந்தப் பயணிகளுக்கான படகுச் சேவை ஜெனோவாவின் பழைய துறைமுகம், லெரிசி மற்றும் போர்டோவெனெரே போன்ற இறங்குதுறைகளுக்கூடாக நடைபெறுகின்றது. படகுச் சவாரிகளை விரும்பும் பயணிகளுக்கு இதுஏற்றதாக இருக்கின்றது. காலநிலையைப் பொறுத்து சில சமயங்களில் படகுச்சேவையில் தாமதம் ஏற்படலாம். பொதுவாகச் சொன்னால் இயற்கை அழகை இரசிப்பவர்களுக்கும், மக்கள் கூட்டத்தைத் தவிர்ப்பவர்களுக்கும், இத்தாலிய பாரம்பரிய உணவில் நாட்டம் உள்ளவர்களுக்கும் ஏற்ற இடமாக இத்தா லியின் சின்க் டெர்ரே இருக்கின்றது.

**உசாத்துணை:**


- https://en.wikipedia.org/wiki/Cinque_Terre----





kuruaravindan@thaiveedu.com



# சிறுவர்கள்
## வாசிப்பு, நூல்கள், நூலகம்

பபி இரவி

'நிலா நிலா ஓடி வா' என்ற இந்தப் பாடல் ஒவ்வொரு வீட்டிலும் ஒலிக்கும் பிரபலமான சிறுவர் பாடலாகும். இந்தப் பாடல் காலத்தால் அழியாத நாட்டுப்புறப் பாடலாக இருக்கக்கூடும் என நம்பப்பட்டாலும், இதன் வரிகளுக்குக் குறிப்பிட்ட ஓர் ஆசிரியரின் பெயர் உறுதிப்படுத்தப்பட வில்லை. இருப்பினும், பலராலும் இது, 'குழந்தைப் பாடல் களின் தந்தை' என்று போற்றப்படும் அழ. வள்ளியப்பா அவர்களின் எழுத்துகளுடன் தொடர்புடையதாகக் கூறப்ப டுகிறது. எதுவாக இருந்தாலும், இது தலைமுறை கடந்தும் சிறுவர்களைக் கவரும் ஒரு மந்திரப் பாடலாகும்.

இன்றைய இணைய உலகில் முன்பைவிட அதிகமான சிறுவர் நூல்கள் கிடைக்கின்றன. மின் நூல்கள், இணைய நூல்கள், பல்வேறு எழுத்தாளர்கள் மற்றும் பல கதைக்க ளங்கள் உருவாகி வருகின்றன. சமூகச்சூழல் மாறிய போதும் சில நூல்கள் காலத்தால் அழியாத புகழுடன் நிலைத்து நிற்கின்றன. அவையே 'Classic Children's Literature' என்று அழைக்கப்படுகின்றன.

உலகச் சிறார் இலக்கியத்தின் அடித்தளமாகவும், தலைமுறை தலைமுறையாக வாசிப்பைத் தூண்டும் ஊக்க மாகவும் சில புகழ்பெற்ற படைப்புகள் நிலைபெற்றுள்ளன. அந்த வகையில், மார்க் ட்வைனின் 'ஹக்கிள்பெர்ரி ஃபின்னின் சாகசங்கள்' (Adventures of Huckleberry Finn), லூயி கரோலின் 'அதிசய உலகில் ஆலீஸ்' (Alice in Wonderland), மற்றும் ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன் எழுதிய 'தம்பலீனா' (Thumbelina), 'சின்னக் கடற்கன்னி' (The Little Mermaid) போன்ற தேவதைக் கதைகளும், சார்லஸ் டிக்கன்ஸின் 'ஆலிவர் ட்விஸ்ட்' (Oliver Twist) போன்ற நாவல்களும் ஈசாப் நீதிக் கதைகள் மற்றும் பஞ்ச தந்திரக் கதைகள் போன்ற பாரம்பரியப் படைப்புகளும் குழந்தைகளின் மனதைக் கவர்ந்த காலத்தால் அழியாத கதைகளாகத் திகழ்கின்றன.

இலங்கையிலிருந்தும் மிகச் சிறந்த சிறுவர் இலக்கியப் படைப்புகள் தமிழில் தோன்றியுள்ளன. தமிழில் வெளிவந்த முதலாவது சிறுவர் பாடல் நூல், யாழ்ப்பாணம் புலவர் தம் பிமுத்துப்பிள்ளை என்பவர் 1886-ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட 'பாலியக் கும்மி' என்பதே ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஈழத்துச் சிறுவர் பாடல் மரபுக்கு வளமும் வனப்பும் சேர்த்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர் தலைசிறந்த குழந்தைக் கவிஞராக நம்மிடையே எப்போதும் போற்றப்படுகிறார். அவரது பாடல்களில் ஒன்றான 'ஆடிப்பிறப்பு' எனும் பாடலைச் சிறுவயதில் பாடிப் பரவசமடைந்திருக்கிறோம். ஆடிப்பிறப்பு வந்தாலே அவர் எழுதிய இப்பாடல் உயிர்ப்புப் பெற்று, இன்றும் குழந்தைகளால் பாடப்படு வதைக் காணலாம்.

வித்துவான் வேந்தனார் மிகச் சிறந்த ஈழத்துச் சிறுவர் இலக் கியப் படைப்பாளிகளில் இன்னுமொருவர் ஒருவர். இலங்கை சிறுவர் இலக்கிய வரலாற்றில், வேந்தனாரின் சிறுவர்களுக்கான கவிதைகள் சுட்டிக்காட்டத்தக்க முக்கிய துவம் வாய்ந்தனவாகும். அவர் படைத்த,

*'காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றி*
*கட்டிக் கொள்ளும் அம்மா,*
*பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்*
*பருகத் தந்த அம்மா!'*

இன்றும் சிறுவர்களால் விரும்பிப் பாடப்பட்டு வருவது,

இவரது படைப்புகளின் நீடித்த செல்வாக்கிற்குச் சான்றாகும்.




திருகோணமலையைச் சேர்ந்த கேணிப்பித்தன் ச. அருளானந்தம் அவர்கள், குழந்தையிலக்கியத்திற்காக இலங்கை அரசின் பல விருதுகளைப் பெற்றுச் சிறப்பித்துள்ளார். அதேபோல், ஓ.கே. குகநாதன் அவர்களின் பல சிறுவர் நூல்களும் அரச விருதுகளை வென்றுள்ளன. ‘குழந்தைக் கவிஞன்’ என்றும், ‘ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளை’ என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பி என அழைக்கப்படும் இராமலிங்கம் அம்பிகைபாகர் அவர்களின் சிறுவர் பாடல்கள் எளி மையும் தமிழின் அழகும் ஒருங்கே கூடியமைந்தவை.

இன்றைய சூழலில், புதிய பதிப்பாளர்கள், இளம் எழுத்தாளர்கள், மற்றும் பள்ளி இயக்கங்களின் முயற்சிகளால் சிறுவர் நூல்கள் மீதான ஆர்வம் மீண்டும் மெதுவாக எழுகிறது. நூலகங்களும் மக்களை நாடிச் சென்று வாசிப்பை ஊக்குவிக்கின்றன. அவ்வகையில், யா / சுழிபுரம் பகுதியில் கே.ஏ சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகம் 2025 ஒக்ரோபர் 19-அன்று தனது மற்றுமொரு பிரிவாகச் சிறுவர் நூலகம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. சிறார் நூல்களுக்காக முற்றுமுழுதாக அமைக்கப்பட்ட இந்தப் புதிய நூலகத்தை, எழுத்தாளர் திக்கவலைக் கமால் அவர்கள் திறந்து வைத்தார். மேலும், இந்தச் சிறுவர் நூலகம் புதிய தொழில் நுட்பத்தை உள்வாங்கிய பகிர்வுக் (Sharing) கருவிகளைக் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும்.

அந்த நாளில், இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பலதரப்பட்ட எழுத்தாளர்கள் கலந்து சிறப்பித்த ‘இலங்கைத் தமிழ் சிறுவர் இலக்கிய ஆளுமைகள் பகிர்தலும் பரவலாக்கமும்’ என்ற ஒரு நாள் நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில், கேணிப் பித்தன் (அருளானந்தம்), திக்கவலை கமால், கோகிலா மகேந்திரன், ஓ.கே. குணநாதன், அகளங்கன், எச்.எம். நிசார், சோ. தேவராஜா எனப் பல முக்கிய எழுத்தாளர்கள் மற்றும் ஆளுமைகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிகழ்வின்போது, இலங்கையில் சிறுவர்களுக்காக நூல்களை எழுதிய 200 எழுத்தாளர்களின் நூல்கள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய ‘தமிழ் சிறுவர் இலக்கியம் புனைவோர் கையேடு-2025’ வெளியிடப்பட்டது.

அத்துடன், அண்மையில் மறைந்த எழுத்தாளர் திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய இரு நூல்களும் வெளியிடப்பட்டன. அவர் எழுதிய ‘பாட்டி சொன்ன புராண இதிகாசக் கதைகள்’ - மகாபாரதம், இராமாயணம், நளன் தமயந்தி, அரிச்சந்திரன் சந்திரமதி, துஷ்யந்தன் சகுந்தலை, சத்தியவான் சாவித்திரி, கண்ணகி கோவலன், மணிமேகலை - அடங்கிய 8 தொகு ப்பு நூல்களை கேணிப்பித்தன் ச. அருளானந்தம் அவர்கள் வெளியிட்டு வைத்தார்கள். மேலும், ‘பாட்டி சொன்ன கதைகள்’ இரண்டாம் பாகத்தினை எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் வெளியிட்டு வைத்தார்கள்.

சிறுவர்கள் வாசிக்கும் புத்தகங்கள் அவர்களின் வாழ்வை வடிவமைக்கின்றன. அவை அவர்களைச் சிந்திக்கவும், உணரவும் கற்றுக்கொடுத்து, தெளிவான சிந்தனை கொண்ட நல்ல மனிதர்களாக எதிர்காலத்தில் உருவாக்க உதவுகின்றன. எனவே, ஒவ்வொரு சிறுவரின் கையிலும் ஒரு நல்ல புத்தகம் இருப்பது அவசியம்; அது அவர்களின் எதிர்காலத்தை ஒளிரச் செய்யும் தீபமாக விளங்கும்.

சிறுவர்களின் எதிர்காலத்தைச் சிறந்த வழியில் கொண்டு செல்ல, நாமனைவரும் ஒன்றுசேர்ந்து உழைப்போம்!



Buby.ravi@thaiveedu.com





# பாலேந்திராவின்,

# ‘பிரத்தியேகக் காட்சி – ஏழு நாடகங்கள்’

## நூல் அறிமுகமும் அரங்க நினைவலைகள் நிகழ்வும்

தமிழுலகு நன்கு அறிந்த அரங்க நெறியாளர் திரு. பாலேந்திரா அவர்கள். உலகப்புகழ்பெற்ற பல நாடகப் படைப்பாளிகளின் சிறந்த படைப்புகளைத் தெரிவு செய்து, தமிழில் மொழிபெயர்த்து, தன்னுடைய நெறியாள்கையால் தரம்மிக்க நாடகங்களாக்கித் தந்தவர்.





இவர், இவ்வாண்டு தன்னுடைய அரங்காற்றுகைப் பயணத்தில் 50 ஆண்டுகளைக் கடக்கின்றார். இந்தச் சிறப்பை முன்னிட்டு, அவர் தன்னுடைய நாடகங்களுள் சிலவற்றைத் தொகுத்து ‘பிரத்தியேகக் காட்சி’ என்ற நூலை வெளியிட்டிருந்தார். இந்நூல் இலங்கையிலும் சில ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் 02-ஆம் நாள் ரொறன்ரோவிலும் அறிமுகம் செய்யப்பட்டது.





எழுத்தாளர் ப. ஸ்ரீஸ்கந்தன் தலைமையில் Agincourt Community Centre-இல் இந்நிகழ்வு நடைபெற்றது.

நாடகக் கலைஞரும் பாலேந்திராவின் நெருங்கிய நண்பருமான மறைந்த திரு. சாந்திநாதன் அவர்களுக்கு நிகழ்வின் தொடக்கத்தில் நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது.

தலைமையுரை நிகழ்த்திய ஸ்ரீஸ்கந்தன் அவர்கள், பாலேந்திரா பற்றிய பல்வேறு தகவல்களை அழகுறக் கூறினார்.





“பாலேந்திரா அவர்கள் பிறமொழி நாடகங்களை மொழிபெயர்த்தாலும் அவை தமிழர் வாழ்வியலோடு ஒத்துப்போவதாகவே இருந்தன. பாலேந்திரா அவர்களின் இணையர் ஆனந்தராணி, பெண்கள் யாரும் நாடகம் நடிப்பதற்கு முன்வராத காலத்தில், பாலேந்திராவுடன் இணைந்து, நாடகப்பயணத்தை மேலும் சிறப்பாக்கினார். பாலேந்திராவின் பங்களிப்புகள் இல்லையென்றால் அவைக்காற்று கலைக்கழக நாடகங்கள் இத்துணை சிறப்பாக வந்திருக்குமா? என்று நினைக்கத் தோன்றுகின்றது” என்றும், “பாலேந்திராவின் நாடகங்கள் பலவும் அதிகாரங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும்











எதிராகவே இருந்தன," என்றும் ஸ்ரீஸ்கந்தன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஆய்வுகள், மதிப்பீடுகள் என்றவ கையில் மூன்று சிறந்த உரைகள் இடம் பெற்றன.

மூத்த கலைஞரும் ஊடகத்துறையைச் சார்ந் தவருமான திரு. P. விக்னேஸ்வரன், நாடகக் கலைஞர் துஷி ஞானப்பிரகாசம், கவிஞர் சேரன் ஆகியோர் பாலேந்திரா குறித்தும் அவர்தம் நாடகங்கள் குறித்தும் உரைகளை வழங்கினர்.

திரு. P. விக்னேஸ்வரன் அவர்கள் தனது உரையின்போது பாலேந்திரா அவர்களின் பல சிறப்புகளைக் குறிப்பிட்டுப் பேசினார். இவருக்கும் பாலேந்திரா அவர்களுக்குமான உறவு மிக நீண்டது. பாலேந்திரா இயக்கிய, 'கண்ணாடி வார்ப்புகள்' என்ற நாடகத்தை வானொலிக்காகவும் தொலைக்காட்சிக்கா கவும் தயாரித்தவர் விக்னேஸ்வரன் அவர்கள்.

நாடகத்துறையைச் சார்ந்த இளைஞரான துஷி ஞானப்பிரகாசம் அரங்காற்றுகையிலும் நாடக மொழிபெயர்ப்புகளிலும் பங்காற்றி வருபவர். அவர் தன் உரையின் போது பாலேந்திரா அவர்களின் நாடகச் சிறப்பு களைத் தெளிவாகவும் சிறப்பாகவும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் சேரன், மகாஜனாக் கல்லூரியில் மாண வனாக இருந்தபோது, பாலேந்திரா நடித்த முதலாவது நாடகத்தைப் பார்த்த நினைவுகள் இன்றும் பசுமையாக இருப்ப தாகக் கூறினார். "பாலேந்திரா செய்த பல பிறமொழி நாடகங்களை அந்தந்த மொழிகளில் பார்க்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கி றபோது பாலேந்திரா குறைந்த வளங் களோடு அந்த நாடகங்களை மிகச் சிறப்பா னவையாக மேடையில் அளிக்கை செய்தி ருந்தார்," எனக் குறிப்பிட்டார்.

உரைகளுக்கு நடுவே அரங்கேறிய நாடகங் களின் சிறு காட்சிகளை பாலேந்திரா, ஆனந் தராணி, ரவிச்சந்திரா ஆகியோர் சிறப்பாக நடித்து அவைக்கு மகிழ்வூட்டினர்.

அரங்க நினைவலைகள் நிகழ்வில், 'யுக தர்மம்' நாடகப் பாடலை அந்த நாடகத்தில் 1979-இல் பாடி நடித்த ரவிச்சந்திரா சிறப் பாகப் பாடினார். தொடர்ந்து 'போகிற வழிக்கு ஒன்று', 'பிரத்யேகக் காட்சி' ஆகிய நாடகப்பகுதிகளைப் பாலேந்திரா - ஆனந்















தராணி ஆகியோர் வாசிப்பு அரங்காக வழங்கினர். அடுத்து, அன்ரன் செக்கோவ் எழுதிய 'சம்பந்தம்' நாடகத்தின் ஒரு பகுதியை ரவிச் சந்திரா, ஆனந்தராணி, பாலேந்திரா ஆகியோர் நடித்துக் காட்டினர்.

இக்காட்சிகள் அவையோரிடத்தே நல்ல வரவேற்பைப் பெற்றன.

நிறைவில் நூல்கள் வெளியிடப்பட்டன. பலருக்கும் நூல்கள் வழங்கப்பட்டன.

இறுதியாக, பாலேந்திரா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

கனடிய மண்ணில் வாழும் குறிப்பிடத்தக்க ஆளுமைகள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

மண்டபம், நிகழ்வு ஏற்பாடுகள் என்பவற்றைத் தாய்வீடு ஒழுங்கமைத்திருந்தது. அன்றைய மாலைப்பொழுதில் இனியதொரு நிகழ்வாக இது அமைந்திருந்தது.












# புலம்பெயர் இலக்கியத்துக்கு மற்றுமொரு வடிவம்

# சந்திரகௌரி சிவபாலன்

## இக்பால் அலி



சந்திரகௌரி சிவபாலன் தமிழியல் ஆய்விலும் ஆக்க இலக்கியத் துறையிலும் தீவிரமாகச் செயற்படும் புலம்பெயர் இலக்கியக் கர்த்தாக்களில் ஒருவர். இவர் ஆரம்ப காலம் முதல் புலம்பெயர் நாடுகளில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, யூடியூப் போன்ற பல்வேறு ஊடகங்கள் வாயிலாகக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், ஆவணப்படத் தயாரிப்பு எனப் பல்துறைகளிலும் பங்களித்து வருகின்றார். புலம்பெயர் தமிழ் இலக்கியம் குறித்துப் பேசும்போது, இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் சந்திரகௌரி சிவபாலனைத் தவிர்த்துவிட்டுப் பேசுதல் இயலாது.

சந்திரகௌரி அவர்கள் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்ற ஊர் ஏறாவூராகும். அதனைச் சுற்றியுள்ள மட்டக்களப்பு, செங்கலடி உள்ளிட்ட பிரதேசங்களில் தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவர், பறங்கியர் ஆகிய பல்லின மக்கள் ஒற்றுமையாய் நட்புறவோடு இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இதனால், ஏறாவூரில் தான் கற்ற ஆரம்ப பாடசாலையின் வகுப்புத் தோழிகளுடனும், மற்றும் தையல் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட அவ்வூரைச் சேர்ந்த முஸ்லிம் தோழிகளோடும் பரஸ்பரம் அன்பாகவும் நெருக்கமாகவும் பழகி வந்தவர். இன, மதம் கடந்து பழகுவதில் முத்திரை பதித்தவர்.

1970-ஆம் ஆண்டினைத் தொடர்ந்து ஈழத்தில் மேலோங்கிய இன முரண்பாட்டுச் செயல்களின் காரணமாக, வடக்கு, கிழக்கில் வாழ்ந்த ஏராளமான தமிழர்கள் ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளை நோக்கி அகதிகளாகப் புலம்பெயர்ந்து சென்றனர். அவர்களுள் ஒருவரான சந்திரகௌரி சிவபாலன் காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களின் படுகொலைகள், ஏறாவூரில் சாதாம் ஹுசைன் கிராமத்தில் நடைபெற்ற படுகொலைகள், போர்க்காலக் கெடுபிடிகள் தொடர்ச்சியாக நடைபெற்ற சமயத்தில் ஏறாவூர் பிரதேசத்தில் வாழ்வதற்கான பாதுகாப்புச் சூழல் இல்லை என்ற நிலையில், பயணப் பொதிகளுடன் முக்கியமான சான்றிதழ்களை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு, 1990-ஆம் ஆண்டு ஏறாவூரை விட்டு வெளியேறி, தன் குடும்பத்துடன் நீர்கொழும்புக்கு வந்தவர். திருமணத்திற்குப் பின் அங்கிருந்து தன் கணவருடன் ஜேர்மனிக்குச் சென்றார். புலம்பெயர்ந்த சமூகத்தினர் தம் தாயகத்திலும், தற்போது வாழும் வாழ்விடங்களிலும் அனுபவித்த துன்பம் தோய்ந்த அவல நிலைகளைத்

தெளிவாக நாம் அறிய வேண்டுமானால், அதற்கான சான்றுகளைச் சந்திரகௌரி சிவ பாலனின் எழுத்துகளில் இருந்து நாம் நன்கு அறிந்துகொள்ளலாம்.




புலம்பெயர்ந்தோர் என்றவுடன் வெறுமனே கடல் கடந்து மேற்கத்திய நாடுகளில் நல்ல சுகபோகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள் என்னும் எடுகோள் தவறானது. அவர்கள் அங்கு சென்று தன்னளவில் எதிர்நோக்கிய சவால்கள், துன்பங்கள், வாழ்க்கை முறைமைகள் என்பன பொருளாதாரரீதியில் மட்டுமின்றி உள வியல் ரீதியாகவும் அவர்களைப் பெரிதும் பாதித்தன. புலம்பெயர்ந்து சென்ற வர்கள் அந்தந்த நாடுகளில் தம் உதி ரத்தைக் காணிக்கையாக்கி உழைத்து பொருளாதாரத்தின் முதுகெலும்பா கவும் விளங்கி வருகின்றனர். ஆயினும், அங்கு சென்று தம்மை ஸ்தீரப்ப டுத்திக் கொள்வதில் அவர்களைச் சூழ்ந்திருந்த சவால்களும், சோதனை களும் அதிகம். ஐந்து தசாப்த காலத்துக்கு மேலாக அம்மண்ணில் எம்மக்கள் வாழ்கின்றனர். அங்கு நிகழும் விடயங்களை அறிந்து கொள்வதற்கும் மக்களின் வாழ்வாதார நிலைகளைப் புரிந்து கொள்வ தற்கும் சந்திரகௌரி சிவபாலனின் எழுத்துகள் துணை செய்கின்றன. என்னையே நானறியேன் (2013), குரு விக்கூடு (2024) முதலான நாவல் களும் முக்கோண முக்குளிப்பு (2016), நான் பேசும் இலக்கியம் (2020), முதலான கட்டுரைத் தொகுப்புகளும் வெள்ளையுடைக்குள் கரையும் பருவம் என்ற சிறுகதைத் தொகுப்பும் (2018), பனிக்குடம் என்ற கவிதைத் தொகுப்பும் (2022) இதனை உணர்த்தி நிற்கின்றன.










அத்துடன் சந்திரகௌரி சிவபாலன் அவர் கள் தீவிரமான தமிழ் இலக்கியச் செயற்பாட்டாளரா கவும் மிளிர்கின்றார். கலைப்படைப்புகளைப் பொது வெளியில் நுகவோர்களுக்குச் கிடைக் கச்செய்து, அது குறித்து பல்வேறு சிந்தனையாளர்களது கருத்துகளை, விவாதங்களை இலக்கிய உலகிற்கு வழங்கி வருகின்றார். இணையத்த ளத்தில் கட்டுரைகள், விமர்சனங்கள் சிறுகதைகள் என எழுதி வருகின்ற அவர், ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங் கத்தின் செயலாளராகவும், ஜேர்மனி கல்விச் சேவைக் குழுவின் செயற்குழு உறுப்பினாராகவும் 2019 வரைக் கட மையாற்றினார். 'இளவரசி' கலை இலக் கியத் இதழ் இணையாசிரியராகவும், நூல் வெளியீட்டாளராகவும் விளங்கும்







இவர் 'இலக்கிய மாலை யூடிப்' மூலம் இலக்கிய தகவல்களைப் பகிர்கிறார். தமிழ் வானவை மூலம் இணையழி இலக்கியச் சந் திப்புகளை நடத்துதல், மேடைப்பேச்சு, கவியரங்குகளில் பங்கேற்றல் போன்ற செயற்பாட்டு இலக்கிய முயற்சிகளிலும் அதிகளவு ஈடுபாடு காட்டி வருகின்றார். தனக்குள்ள இலக்கிய ஆர்வத்தை சமூக மயப்படுத்திக்கொண்ட ஒருவராக, அதன் அகத்தூண்டல் காரணமாய் இலக்கிய ஆளுமைகளின் வரலாற்றுப் பதிவுகளை யூடியூப் ஊடாக ஆவணமாகப் பதி வேற்றம் செய்து காணொளிக் காட்சியாய் புலப்படுத்தி வருகின்றார். இலக்கிய ஆளுமைகளைக் கௌரவித்தல், விருது வழங்குதல், ஆவணப்படம் வெளியிடுதல், kowsy2010.blogspot.com-இல் தமிழ் பதிவுகளை இடல், 2022-ஆம் ஆண்டிலிருந்து மகளிர் தினத்தை முன்னிறுத்தி உலகம் தழுவிய ரீதியிலே சாதனைப் பெண்களைத் தெரிவு செய்து 'சாதனைப் பெண் விருது' வழங்குதல், ஜெர் மனியில் இயங்கி வரும் ETR வானொலிக்கு சிறுகதை எழுதுதல், வீரகேசரிப் பத்திரிகைக்குச் செய்திகளை வழங்குதல் போன்றவற்றுடன், பல ஆண்டுகளாக தொடர்ந்து வெளி வரும் வெற்றிமணிப் பத்திரிகையில் இவரெழுதிய 103 கட்டுரை இதுவரை யிலும் வெளிவந்துள்ளன.

பேராசிரியர் கைலாசபதி, தமிழ்மணி அகளங்கன், பாடுமீன் ஸ்ரீகந்தராஜா, நூலகவியலாளர் என். செல்வராஜா, பேராசிரியர் செ. யோகராசா, எழுத் தாளர் முருகபூபதி, தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார், பேராசி ரியர் சி. மௌனகுரு, மாஸ்டர் சிவ லிங்கம், மு.க.சு. சிவகுமாரன், டாக்டர் செல்லையா இராசதுரை, ஈழத்துப் பூரடனார் க.தா. செல்வராஜகோபால், மறைமலை அடிகளார், காப்பி யக்கோ ஜின்னா ஷரிப்தீன், மகா கவி சுப்பிரமணிய பாரதியார், மகா வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராஜா, விபுலானந்த அடிகளார், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் களது வாழ்க்கை வரலாறுகளை காணொளி ஆவணமாக வெளிக் கொணர்ந்துள்ளார். அதேபோன்று பெண் ஆளுமைகள் குறித்த காணொளி ஆவணப் படங்களையும் வெளிக் கொணர்ந்துள்ளார். முனைவர் கு. சுபாஷினி, நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர், முனைவர் புளோரன்ஸ் பாரதி கென்னடி, பேரா சிரியர் மனோன்மணி சண்முகதாஸ், பேராசி ரியர் சித்திரலேகா மௌனகுரு, கலாநிதி.

பிரென்டா பெக், எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், பத்திரிகையாளர் அன்னலட்சுமி இராஜதுரை, இலங்கை முதல் பெண் இசையமைப்பாளர் பிரபாலினி பிரபாகரன், ஜெர்மனி சினிமா சாதனைப் பெண் சிபோ சிவகுமாரன், தொழிற்துறை சாதனையாளர் ஜெருஷா சுவீதன், அறிய வியல் மனித நேய சாதனையாளர் கே. ஜெயலட்சுமி முதலிய பெண் ஆளுமைகள் இப்பதிவில் அடங்குவர்.

**குடும்பப் பின்னனணி:**

கிழக்கு மாகாணத்தின் மீன்பாடும் தேன் நாடு என்று போற்றப் படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் நகரிலிருந்து 15 கிமீ வடமேற்கே உள்ள ஏறாவூர் பிரதேசத்திலே வேலுப்பிள்ளை - பரமேஸ்வரி இணையர்களுக்கு மூன்றாவது மகளாக பிறந்தார். இவருடைய தந்தை வேலுப்பிள்ளை காகிதத் தொழிற்சாலை அமைந்துள்ள பிரதான ஊரான வாழைச்சே னையில் கிராமிய அபிவிருத்தி சபையில் வருமானவரி மேற் பார்வையாளராகப் பணிபுரிந்தார். தாய் இல்லத்தரசியாக விளங்கினார்.

சந்திரகௌரியின் தந்தை ஒரு பிரபல்யமான சமூகப் பணியாளர். இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்களுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். ஏறாவூரில் அமைந்துள்ள பத்தி ரகாளி அம்மன் கோயிலின் தலைவராகவும் செயலாளராகவும் இருந்து செயற்பட்டுள்ளார். இக்கோயிலின் கட்டட நிர்மாணம், கும்பாபிஷேகப் பணிகளுக்காக அரும் பெரும் பணியாற்றியவர்.

நீதி அமைச்சர் கே.டபில்யூ தேவநாயகம் அவர்களுடன் சேர்ந்து தமிழ் மீது பற்றுறுதி கொண்டு பல எண்ணற்ற சமூகப் பணிகளை ஆற்றி தம் ஊருக்குப் பெருமை சேர்த்தவர். 1974-ஆம் தை மாதம் 3-ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்குச் சென்றிருந்தார். மாநாட்டின் இறுதிநாள் 10-ஆம் திகதி, இலங்கை காவல்து றையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதோடு நில்லாது, கண் ணீர்ப்புகைத் தாக்குதலையும் நடத்தினர். இந்நிகழ்வில் வன் முறைக்குப் பலியாகி இறந்தவர்கள் பதினொரு பேராகும். அன்றைய தினம் கௌரியின் தந்தை கண்ணீர்ப்புகைத் தாக் குதலால் கண்களில் புகை நுழைந்து மயக்கமுற்று விழுந்திருந்தார்.

அவருடைய வாழ்வில் தாய், தந்தையர்களுக்கு அடுத்த வழி காட்டியாக அவருடைய அம்மம்மா இருந்தார். அவருடைய பெயர் செல்வமாணிக்கம். அம்மம்மா கை வைத்தியம், முறிவு வைத்தியம், குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு குழந்தைப் பேறுக்கான வைத்தியமும் செய்து வந்தவர். இவர் கவி பாடுவதிலே வல்லவர். பத்திரிகைகளை வாசித்துவிட்டு சந்தி ரகௌரிக்கு நல்ல பல செய்திகளைச் சொல்வார். அத்தோடு, அறிவியல் ரீதியாகவும் அனுபவ ரீதியாகவும் சிந்திக்கத்தக்க வகையில் கௌரியினை மடியில் வைத்துக்கொண்டு கதை கூறும் பழக்கம் உடையவராகக் காணப்பட்டார். இத்தகைய அடிப்படைத் தாக்கங்களே சந்திரகௌரிக்கு கவிபாடும் திறனும் கதைகள், கட்டுரைகள் எழுதும் திறனும் இயல் பாகவே தோன்றக் காரணம் எனலாம்.

சந்திரகௌரிக்கு ரவிநாதன், திலகராஜ் என்கின்ற இரண்டு ஆண் சகோதரர்களும் மனோஹரி என்ற ஒரு பெண் சகோத ரியும் உள்ளார்கள். 1994-ஆம் ஆண்டு தனது வாழ்க்கைத்து ணையாகச் சிவபாலனைக் கைபிடித்து மகிழ்வாக வாழ்ந்து வருகின்றார். மெனுசா என்கின்ற பெண் குழந்தையும் இவர்க ளுக்குண்டு. தற்போது குடும்பமாக ஜேர்மனியில் சோலிங்கன் நகரில் வசித்து வருகின்றார்.

**கல்வி:**

சந்திரகௌரி சிவபாலன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை மட்டக்களப்பு ஏறாவூர் அல் முனீரா மகளிர் பாடசாலை, அதன் பின்பு அங்கு ஏறாவூர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் இன்றைய ஏறாவூர் தமிழ் மகா வித்தியால யத்திலும் கற்றார். 1971-இல் இருந்து, மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் உயர் கல்லூரியில் தனது கா.பொ.த. உயர்தரக் கல்விவரை தொடர்ந்தார். இப்பாடசாலையில் கற் கும்போது விளையாட்டுத்துறையில் ஆர்வம் மிக்கவராகவும் விளங்கினார். கௌரி பாடசாலைப் பருவத்தில் கோயில் திருவிழா மேடை நிகழ்வுகளில் மிகுந்த ஆர்வத்துடன் நடனம் ஆடுவதில் ஈடுபாடு காட்டிவந்தார். தொடர்ந்து நடனக் கலையில் அதிகளவு நாட்டமுடையவராய் இருந்ததால், தாயார் பரமேஸ்வரி அவர்கள், எதிர்காலத்தில் அவருடைய கல்வியைப் பாதிக்கும் என்ற வகையில், நடன வகுப்பை நிறுத்திவிட்டார். அதனைத் தொடர்ந்து உயர்தரக் கலைப்பி ரிவிலே கல்வி கற்று மூன்று பாடங்களிலும் திறமைச் சித்தி யினைப் பெற்று 1984-ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்.

பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே இவர் நூலகங்க ளுக்குத் தொடர்ச்சியாகச் சென்று புத்தகங்களையும் பத்திரி கைகளையும் இலக்கியம் சார்ந்த நூல்கள் மற்றும் இதர நூல் களையும் படித்தல் இவரின் பொழுதுபோக்குகளில் ஒன்றாகக் காணப்பட்டது. 1981ஆம் ஆண்டு பேராதனை பல் கலைக்கழகத்தின் தும்பறை வளாகம் சென்றார். அக்கால கட் டத்தில் ஒரு வருடம் தும்பறைப் வளாகத்தில் கல்வி கற்க வேண்டும். அதில் பெறுகின்ற பெறுபேறுகளைப் பொறுத்தே பேராதனையில் மூன்று வருடங்கள் சிறப்புப் பாடம் கற்ப



தற்குச் செல்ல முடியும். இல்லாவிட்டால் மூன்று வருடங்கள் பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதற்கு இரண்டு வருடங்கள் தும்பறையிலும் ஒரு வருடம் பேராதனையிலும் கற்க வேண்டும். சந்திரகௌரி சிவபாலன் அவர்கள், தும்பறை வளாகத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப் பாடமாகக் கற்றார். இக் காலப்பகுதியில் தமிழ் சிறப்புப் பட்டப்படிப்பினை, இவரும் இரா. சிவலிங்கமும் மாத்திரமுமே கற்றார்கள். இரா. சிவலிங்கம் அவர்கள் கண்டி திருத்துவக் கல்லூரியின் தமிழ் பிரிவுப் பொறுப்பாளராகப் பின்னாளில் விளங்கினார். அவர் நூலக ஆவணக் காப்பாளர். இன்று அவர் ஓய்வு பெற்ற போதிலும், சிறந்த வாசகர். சிறந்த திறனாய்வாளர். அளவில்லாத புத்தகங்களுக்குச் சொந்தக்காரர்.

அந்தப் பல்கலைக்கழக வாழ்வு அவருக்கு நிறைந்த புலமையினையும் ஆழ்ந்த அறிவினையும் வழங்கியது. '20-ஆம் நூற்றாண்டின் மட்டக்களப்புத் தமிழ் இலக்கியமும் பிரதேசப் பண்பும்' என்னும் இளங்கலைமானிப் பட்டத்துக்கான ஆய்வுத் தலைப்பு வழங்கப்பட்டது. பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்கள்தான் ஆய்வுக்கு மேற்பார்வையாளராகக் கடமையாற்றினார். பேராசிரியர் எஸ். தில்லைநாதன். பேராசிரியர் க. அருணாசலம், பேராசிரியர் துரை மனோகரன், போராசிரியர் திருமதி தியாகராஜா ஆகிய பேராசிரியர்களிடம் அங்கே கல்வி கற்றார்.

எப்.எக்ஸ்.சி. நடராசா அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவருக்குத் தேவையான புத்தகங்களை அவ்வப்போது வழங்கி ஊக்குவித்தவர் ஆவார். இவர் தமிழில் பேரார்வம் கொண்டு செழித்து வளரவும் அவர் காரணமாக இருந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தமிழ்ச் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட இவர், தொடர்ந்து நாவல - நுகேகொடையில் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் இரண்டு வருட டிப்ளோமா கற்கைநெறியை நிறைவு செய்தார்.

**தொழிற் சூழல்:**

சந்திரகௌரி சிவபாலன் தனது கற்பித்தல் பணியை முதன்முதலில் வாழைச்சேனை மாவட்டத்தில் ஆரம்பித்தார். அக்காலத்தில், பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு தயாரித்துக் கொடுக்க வேண்டும் என்ற சட்டம் நடைமுறையில் இருந்தது. இதில் பெற்றோரும் ஒத்துழைப்பு வழங்கியதால், பெற்றோர், ஆசிரியர், மாணவர் உறவு வலுப்பெற்று விளங்கியது. அதன் பின்னர், 1990-ஆம் ஆண்டில் அவர் ஏறாவூர் தமிழ் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அங்கும் தமிழ் கற்பித்தல் மாத்திரமன்றி, விளையாட்டுத்துறைக்கும் பொறுப்பாக இருந்தார். ஏறக்குறைய ஒன்பது மாதங்கள் அங்கு பணியாற்றிய பின், அங்கிருந்து இடமாற்றம் பெற்று, நீர்கொழும்பு விஜயரெத்தினம் வித்தியாலயத்தில் கற்பித்தல் பணியைத் தொடர்ந்தார். பின்பு கம்பஹா மாவட்டத்தில் ஆசிரியர் ஆலோகராகவும் கடமையாற்றினார். நீர் கொழும்பில் இருக்கின்றபோதே அவருக்குத் திருமணம் ஏற்பட்டது. திருமண பந்தத்திற்குப் பின்பு அவருடைய புதிய வாழ்க்கைப் பயணம் ஜேர்மனியில் ஆரம்பமானது.

**இலக்கியம்:**

1983-ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகையில் 'யானையுரியும் உமையால் அச்சமும்' என்ற கட்டுரைக்கூடாகவும் வீரகேசரிப் பத்திரிகையில் 'நிணநீர் விழா' என்ற கட்டுரையின் வாயிலாகவும் எழுத்துலகில் பிரவேசித்தார். இவர் பத்திரிகைகளில் எழுதத் தொடங்கியமைக்கு முக்கிய காரணமாக அமைந்தவர்களில் ஒருவர் எப்.எக்ஸ்.சி நடராசா. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அவருடைய திருமணத்திற்குப்பின் தொடர்ச்சியாக இலங்கையில் எழுத்துலகத்திற்கு பிரவேசிக்க முடியவில்லை. இதனைத் தொடர்ந்து இவர் புலம்பெயர்ந்து ஜேர்மனிக்குச் சென்றார். அங்கு இவரது உறவினரான ஆசிரியர் பவானந்தராஜா என்பவரின் தூண்டுதலினால் பல்வேறு சஞ்சிகைகளிலும் எழுத ஆரம்பித்தார். தான் தமிழைக்கற்ற அடையாளத்திற்கும் தன் தந்தையின் கௌரமிக்கச் சமூகப் பணிகளுக்கும் தான் தொடர்ந்து எழுத வேண்டும் என்கின்ற அவசியத்தை தெளிவாக அவர் உணர்ந்திருந்தார். ஆதலால், தொடர்ந்து எழுதினார். புலம்பெயர் இலக்கியப் பொது வெளிகளில் இவரது பெயர் உச்சரிக்கப்படத் தொடங்கியது. தன்னுடைய எழுத்துகள் வாயிலாக ஆழத் தடம்பதித்தார். 2013-ஆம் ஆண்டு தொடக்கம் 'மண்' என்ற சஞ்சிகையிலேயே எழுதத் தொடங்கிய இவர் 'வாழ்க்கையில் வெற்றிபெறும் வழிகள்', 'அடித்தாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணி வைப்போம்', 'பெண் என்பவள்', 'காலந்தோறும் தமிழ்க் காதல்' முதலான கட்டுரைகளின் வாயிலாக நன்கறியப்பட்டார்.

ஜேர்மனியில் மட்டுமல்லாமல் ஈழத்தில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளான 'ஞானம்', 'ஜீவநதி' மற்றும் வீரகேசரிப் பத்திரிகைகளிலும் இவரது எழுத்து முயற்சிகள் தொடர்ந்தன. இவருடைய எழுத்துகள் எல்லாம் வெறுமனே பொழுதுபோக்காகவோ அல்லது வியாபார நோக்காகவோ அமைந்தன அல்ல. புலம்பெயர் சமூகத்தின் சோகக் குரலாகவும், ஈழத்து மக்களின் மரண ஓலங்கங்களாகவும், உளரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் எழுச்சிக் குரலாகவும் இவை ஒலித்தன. கௌரியின் எழுத்துகள் ஊடாகப் புலம்



பெயர் மக்களின் அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை - கலாசாரம் முதலிய இன்னோரன்ன விடயங்களை அறியலாம்.

ஞானம் சஞ்சிகையில் 'புலம்பெயரும் தாம்பத்தியங்கள்' என்ற தலைப்பில் ஒரு சிறுகதையை எழுதத் தொடங்கிய இவர் 'பாசம் வைத்தால் மோசம்' என்று தொடர்ச்சியாகப் பத்திற்கு மேற்பட்ட சிறுகதைகளையும் கட்டுரைகளையும் எழுதினார். அதே போன்று ஜீவநதி சஞ்சிகையிலும் கட்டுரை, சிறுகதை போன்ற படைப்புகளினைத் தொடர்ச்சியாக எழுதி வந்தார். ஜேர்மனியில் இருந்து 2019-ஆம் ஆண்டு வெளிவந்த 'சிவத் தமிழ்' என்கின்ற 15-ஆவது ஆண்டு மலரில் 'துளசி', 'தாலி' என்ற தலைப்புக்களிலே கட்டுரைகளையும் எழுதியிருக் கின்றார். கனடாவில் இருந்து வருகின்ற 'தமிழர் தகவல்' என்ற இதழில் 2018-ஆம் ஆண்டிலிருந்து எழுதிவருகிறார். அவுஸ் திரேலியாவில் இருந்து வெளிவந்த 'உதய சூரியன்' எனும் சஞ் சிகையில் 'இந்நிலைக்கு இடம் தந்தவர் யார் ?', 'படிதாண்டிய பொழுது' எனும் தலைப்பில் சிறுகதைகளை எழுதியுள்ளார். அது மட்டுமன்றி 2023-ஆம் ஆண்டு 7-ஆம் மாதம் பாரிசில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு மலரில் 'விபு லானந்த அடிகளாரின் வாழ்வும் பன்முக ஆளுமையும்' என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றையும் எழுதி வாசித்தமையும் நினைவுகூரத்தக்கது. இவரது படைப்புகள் குறித்து யோகரெத்தினம் ஜெனா 'புலம்பெயர்ந்தோர் சமூக அனுபவங்களின் வெளிப்பாடாகச் சந்திரகௌரி சிவபாலனின் படைப்புகள் பன்முகப்பார்வை' என்ற தலைப்பில் தனது பட் டப்படிப்புக்காக 2024-ஆம் ஆண்டு ஆய்வுக் கட்டுரையை எழுதியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கவிதை இலக்கியம், பாடல்கள் என்று தன்னுடைய படைப்பு களைத் தொடராக வானொலியில் எழுதத் தொடங்கினார். இவருடைய திறமையை நன்குணர்ந்த வானொலி நிறுவுனர் தான் நடத்திக்கொண்டிருந்த அந்த வானொலி நிகழ்ச்சியை தொடர்ந்து பொறுப்பேற்று நடத்தும்படி கூறி சந்திரகௌரி யிடம் ஒப்படைத்தார். திங்கள் முதல் வியாழன் வரையிலும் அந்நிகழ்ச்சி ஒலிபரப்பாகும். முதலில் சிறுவர்களுக்கான கட்டுரைத் தலைப்பை சந்திரகௌரி வழங்குவார். அதற்குரிய கட்டுரையை எழுதி சிறுவர்கள் குரல் பதிவினூடாக அனுப்பி வைப்பார்கள். எழுத்து வடிவத்திலும் அனுப்புவார்கள். இவற்றைச் சேகரித்து ஒவ்வொரு படைப்பையும் விமர்சனக் கண்ணோட்டத்தில் பார்த்து அவர்களைத் தட்டிக்கொடுக்கும் பணியைச் செய்துவந்தார். அவர் மூன்று வருடங்கள் வானொலி சேவையை முழு நேர அர்ப்பணிப்புடன் செய்துவந் துள்ளார்.

எதிர்காலத்தில் புலம்பெயர் தமிழ்ச் சிறார்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்துவதே இவருடைய நோக்கமாக இருந்தது. புலம்பெயர் இலக்கியம் பற்றி சந்திரகௌரி சிவபாலன் குறிப்பிடும்போது 'இலக்கிய உலகம் என்பது ஒரு மாயை, அது ஒரு கடல், அங்கே முதலைகளும் பாம்புகளும் இருக்கின்றன. அடையாளப்படுத்துபவர்கள் தம்மைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள்' என்று குறிப்பிடுகின்றார்.

'தமிழ் வான் அவை' என்ற அமைப்பை நிறுவி கடந்த ஆறு வருடங்களாகப் பல்வேறுபட்ட இலக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். வருடா வருடம் மூன்று பெண் ஆளுமை களைத் தெரிவு செய்து, 'சாதனைப் பெண் விருது' வழங்கி கௌரவித்து வருகிறார். இணைய வழி ஊடாக மாதந்தோறும் ஓர் இலக்கிய கர்த்தாவை அழைத்து இலக்கியச் சொற்பொ ழிவும் ஆற்றி வருகிறார். சில மதிப்பளிப்பு நிகழ்வுகளின் போது இப்பெரியோர்களின் குடும்ப உறவினர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பதும் உண்டு. அதேபோல் நாட்டார் இலக்கிய நிகழ்வுகளையும் நடத்தி வருகிறார். நடனம், இசை, நாட்டுக்கூத்து பழந்தமிழ் கலைகள் பற்றி மாணவர்களுக்கு அறிமுகம் செய்து அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவித்தும் வருகின்றார்.

**'காலமெனும் காற்றுப் புரட்டிப் போட்டாலும்**
**வாழ்க்கையெனும் சூழல் வதைத்து நின்றாலும்**
**தமிழென்னும் கைத்தடி கொண்டு**
**தமிழால் நிமிர்ந்து நிற்பேன்'**

என்று, எழுத்தை ஆயுதமாக்கி பன்னூல் எழுத்தாளராய் மிளிர்ந்து நிற்கின்றார். இத்தனைக்கும், அவர் கணவர் சிவபாலன் பக்கபலமாய் இருந்து வருகின்றார்.

**சொற்பொழிவாளர்:**

கௌரி அவர்கள் பல்வேறு விழாக்களிலும், வானொலிக ளிலும் நிகழ்த்திய பேச்சுகள் எண்ணற்றவை. வானொலிக ளிலும், இணையத்தளங்களிலும், சமய அரங்குகளிலும் ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் இலக்கியச் சொற்பொழிவு களையும் ஆற்றினார். இந்தவகையில் 'பிரம்மஞானம்', 'காரைக்கால் அம்மையார் வாழ்க்கையைத் தற்காலத்துடன் ஒப்பு நோக்குதல்', 'பிரபஞ்சத்தோற்றம்' முதலான சமயச் சொற்பொழிவுகள் இவர் பெயரை உரைத்து நிற்கின்றன. அந் தவகையில் 'மானிட மேன்மையில் மகளிர் பங்கு', 'திருக்கு றளின் சிறப்பும் கேள்விச் செல்வமும்', 'புலம்பெயர் பண்பாடும் தற்கால வாழ்க்கைமுறையும்' எனப் பலவுரைகள் நெஞ்சைக் கவர்வதாக உள்ளன.

புலம்பெயர்ந்த தமிழ் மக்களுடைய புலம்பெயர் காரணங்க ளையும் பிரச்சினைகளையும் அவர்களுடைய வாழ்வியற் கூறு களையும் நற்பண்புகளையும் இனம் காட்டும் கட்டுரைகளாக இவரது கட்டுரைகள் விளங்குகின்றன. இவற்றினை ஆரோக் கியமான எதிர்காலத்திற்கான அறிகுறியாகக் கொள்ளலாம். பல்கலைக்கழக மட்ட ஆய்வுகளிலும் சிறப்பு ஆய்வு மாநாடு களிலும் சர்தேச இதழ்களிலும் புலம்பெயர் இலக்கிய ஆளுமைகள் குறித்து இவர் நிறையவே எழுதியுள்ளார்.

**முடிவுரை:**

நகமும் சதையுமாக இருந்த தமிழ், முஸ்லிம், சிங்கள உறவுகள் திட்டமிட்டு சிதைக்கப்பட்ட வாழ்வை எழுத்தில் கொண்டு வந்தவர்களுள் சந்திரகௌரியும் ஒருவர். சந்திர கௌரியின் இலக்கியங்கள் தமிழரின் பண்பாட்டையும் ஆன்மீகச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவனவாய் அமைபவை. அதேசமயம், சமூக நல்லிணக்கத்தை வலுப்ப டுத்துகின்ற இலக்கியங்களாகவும் இவை அமைந்துள்ளன. அவர் தொடர்ந்தும் புதுமையான படைப்புகளைத் தர வேண்டும்.



Iqbal.ali@thaiveedu.com




– வே. விவேகானந்தன்

பிறந்தார். ஞானசோதி, தர்மசோதி, பாக்கியசோதி, மாணிக்கசோதி, சப்தரத்னசோதி, ஆகிய ஐந்து ஆண்களும், பஞ்சமகாசோதி, ஜெகசோதி ஆகிய இரு பெண்களும் உடன் பிறந்த சகோதர சகோதரிகளாவர். இவர்களது பாட்டனார் முத்துத்தம்பி வேதாரணியம் உடுவில் கிராமத்தில் செல்வமும் செல்வாக்கும் பெற்றவராக விளங்கினார். யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே வளம் மிக்க செம்மண் வலையத்தில், அமைந்த விவசாய பிரதேசமான உடுவில் கிராமத்து மக்கள், தமது விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக சந்தையைக் கட்ட, ஐந்து ஏக்கர் காணியை இலவசமாக வழங்கினார். இவரின் பயனாகவே இன்று சுன்னாகச் சந்தையாகவும், சுன்னாகம் ஒரு சந்தைப் பட்டினமாகவும், வளர்ச்சி அடைந்துள்ளது. இவரது மகன் வேதாரணியம் சரவணமுத்து (1852-1912) கல்வியில் சிறந்து விளங்கி, பிரித்தானியாவுக்குச் சென்று வைத்திய அத்தியட்சகராகப் பட்டம் பெற்று, இலங்கை திரும்பிய பின்னர், கொழும்பில் வைத்திய நிலையம் ஒன்றை நிறுவி, வைத்தியத் தொழிலை மேற்கொண்டார்.

கொழும்பில் பிறந்த இரத்தினசோதி மவுன்ட் லெவினியா (Mount Lavinia) சென். தோமஸ் கல்லூரியில் கல்வி கற்றார். பாடசாலை மாணவனாகப் படித்த காலத்திலேயே திறமை மிக்க மாணவனாக விளங்கி சக மாணவர்களினதும் ஆசிரியர்களினதும்

## கொழும்பு மாநகரசபையின் முதலாவது மாநகராதிபதி

# இரத்தினசோதி சரவணமுத்து

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில், வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் உடுவில் என்னும் ஊரைப் பூர்வீகமாகக் கொண்ட, வேதாரணியம் சரவணமுத்து தங்கம்மா குடும்பத்தினருக்கு மூத்த மகனாக, இரத்தினசோதி 1886-ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் நன் மதிப்பைப் பெற்றார். கல்வியோடு விளையாட்டுத் துறையிலும் திறமையோடு விளங்கி பல பரிசில்களையும் வெற்றிச் சான்றிதழ்களையும் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். கல்வியில் அதிதிறமைச் சித்தி பெற்ற இரத்தினசோதி மருத்துவக் கல்வியைத் தொடர சென்னைப் பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசித்தார். அங்கு மருத்துவத்

துறையில் தேர்ச்சி பெற்ற அவர், அத்துறையில் மேலும் பாண்டித்தியம் பெற இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு சத்திரசிகிச்சைத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்று, Royal College of Surgeons (MRCS), Royal College of Physicians (LRCT) ஆகிய மருத்துவ அமைப்புகளில் அங்கத்துவத்தையும் பெற்றார். இலங்கை திரும்பிய பின்னர் கொழும்பு வடக்கில் தந்தையார் நிறுவிய சென். போல் மருந்தகத்தில் (St. Paul's Dispensary) வைத்திய சேவையை மேற்கொண்டார். தந்தையைப் போலவே உயர்வு தாழ்வு பாராது, பணக்காரர்கள் மட்டுமன்றி சாதாரண வறிய மக்களும் சமமான வைத்திய சேவையைப் பெறும் வகையில் கொழும்பில் மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றினார்.

வைத்தியத் துறையில் ஒரு சாதாரண சத்திரசிகிச்சை நிபுணராக அடையாளம் காணப்பட்ட இரத்தினசோதி அவர்கள் பின்னர் அரசியலிலும் ஈடுபட ஆர்வம் கொண்டார். அவரது அரசியல் வாழ்க்கை 1931-ஆம் ஆண்டுடன் ஆரம்பமாகிறது. 1931-ஆம் ஆண்டு இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் பிறந்தது. இதற்கு முன்னர் கல்வித் தகமை உடையவர்களுக்கும், சொத்துரிமை கொண்டவர்களுக்கும் மாத்திரம் என மட்டுப்படுத்தப்பட்டிருந்த வாக்குரிமை, டொனமூர் ஆணைக்குழுவினரின் சீர்திருத்தத்தின் பிரகாரம் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்குமான, சர்வசன வாக்குரிமையாக மாற்றம் பெற்றது. பல மேற்குலக நாடுகள் உட்பட, பிரித்தானிய சாம்ராச்சியத்துக் குக் கீழிருந்த தென், தென்கிழக்காசிய நாடுகளுள் இலங்கையில் முதன்முதலாக ஏற்பட்ட இந்த மாற்றம் அரசியல் வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்தது. இதனால் மக்கள் அரசியலில் ஆர்வம் கொள்ளத் தொடங்கினர். பலர் தேர்தலில் போட்டியிட முன்வந்தனர். சில தமிழ் அரசியல் தலைவர்கள் சர்வசன வாக்குரிமையை எதிர்த்த போதிலும், இரத்தினசோதி சரவணமுத்து அதனை ஆதரித்தார். அரசியலிலும் ஆர்வத்துடன் ஈடுபடத் தொடங்கினார்.

வைத்திய சேவை மூலம் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருந்த இரத்தினசோதி சரவணமுத்து, 1931-ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது அரசாங்க சபைத் தேர்தலில், கொழும்பு வடக்குத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எனினும், இவரது வெற்றி செல்லுபடியற்றது எனவும், ஏழு வருடங்களுக்குக் குடியியல் உரிமையை இரத்துச் செய்வதாகவும் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பும் தமிழரின் அரசியல் வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அடுத்து வந்த இடைத் தேர்தலில் இரத்தினசோதி சரவணமுத்து போட்டியிட முடியவில்லை. அந்த இடைவெளியை நிரப்பும் வகையில் அவரது மனைவியார் நேசம் சரவணமுத்து போட்டியிட்டார். அவருக்கு ஆதரவாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயகவும் அப்போதைய அரசாங்க சபையின் பிரதிச் சபாநாயகர் எப்.ஏ. ஒபயசேகரவும் களமிறங்கினர். நேசம் சரவணமுத்துவுக்கு எதிராக கலாநிதி எச்.எம். பீரிஸ் கொழும்பு வடக்கில் போட்டியிட்டார். அவர் அத்தொகுதியில் செல்வாக்கு மிக்கவராக விளங்கிய போதிலும், நேசம் சரவணமுத்து 8681 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை அரசியலில் அரசாங்க சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ்ப் பெண் என்ற பெருமைக்கும் உரியவரானார்.

1932-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது இடைத்தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட எச்.வி. காசிச்செட்டியிலும் பார்க்க 8106 மேலதிக வாக்குகளைப் பெற்று நேசம் சரவணமுத்து மீண்டும் அரசாங்க சபைக்குத் தெரிவானார். 1936-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது அரசாங்க சபைத் தேர்தலிலும் கொழும்பு வடக்குத் தொகுதியைத் தனதாக்கிக் கொண்டார். வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் நோய்வாய்ப்பட்டு 1941-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் திகதி அமரத்துவம் அடையும் வரை சட்டசபை உறுப்பினராக இருந்தார். இரத்தினசோதி சரவணமுத்து அவர்களின் அரசியல் வாழ்க்கைக்கு மிகப் பெரும் பக்கபலமாக அவரது மனைவியார் செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசியலில் மீண்டும் கால்பதித்த இரத்தினசோதி சரவணமுத்து, 1937-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கொழும்பு வடக்கில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் 1937-ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1946-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் வரை கொழும்பு மாநகர சபையின் உறுப்பினராக இருந்தார். இக்காலப்பகுதியில், 1937-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையும், பின்னர் 1941-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் 1942-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையும் கொழும்பு மாநகரின் நகரபிதாவாகப் பதவி வகித்தார். 1865-ஆம் ஆண்டு கொழும்பு நகரசபை உருவாக்கப்பட்ட போதிலும், சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது கொழும்பு மாநகர முதல்வர் என்ற பெருமை இவருக்கு உரியதாகும். இவர் பதவி வகித்தபோது இரண்டாவது உலகமகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி யப்பானியக் குண்டு வீச்சு விமானங்கள் கொழும்பு நகர் மீது குண்டுகளை வீசின. இதனால் கொழும்புத் துறைமுகத்தில் இருந்த இரு வர்த்தகக் கப்பல்கள் நீரில் மூழ்கின. இரத்மலானையில் பல கட்டடங்கள் பலத்த சேதத்துக்குள்ளாகின. இத்தகைய நெருக்கடியான போர்ச் சூழலில் கொழும்பு வாழ் மக்களின் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்படா வண்ணம், துணிச்சலுடன் பல பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார். உணவு விநியோகம், எரிபொருள் விநியோகம், போக்குவரத்து, வாழ்விடம் என்பவற்றின் இயங்கு நிலையை உறுதி செய்தார். இவரது சமயோசித செயற்றிறனையும், போர்க்கால தலைமைத்துவத்தையும், அப்போதைய பிரித்தானிய மன்னர் ஆறாம் ஜோர்ஜ் பாராட்டி 'சேர்' என்னும் பட்டமளித்து கௌரவித்தார். இத்தகைய ஒரு போர்க்கால கதாநாயகனை இலங்கை மக்கள் மட்

**“1931–ஆம் ஆண்டு இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் பிறந்தது. இதற்கு முன்னர் கல்வித் தகமை உடையவர்களுக்கும், சொத்துரிமை கொண்டவர்களுக்கும் மாத்திரம் என மட்டுப்படுத்தப்பட்டிருந்த வாக்குரிமை, டொனமூர் ஆணைக் குழுவினரின் சீர்திருத்தத்தின் பிரகாரம் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்குமான, சர்வசன வாக்குரிமையாக மாற்றம் பெற்றது.”**

**"1942–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி யப்பானியக் குண்டு வீச்சு விமானங்கள் கொழும்பு நகர் மீது குண்டுகளை வீசின. இதனால் கொழும்புத் துறைமு கத்தில் இருந்த இரு வர்த்தகக் கப்பல்கள் நீரில் மூழ்கின. இரத்மலானையில் பல கட்டடங்கள் பலத்த சேதத்துக்குள்ளாகின. இத்தகைய நெருக்கடியான போர்ச் சூழலில் கொழும்பு வாழ் மக்களின் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்படா வண்ணம், துணிச்சலுடன் பல பாது காப்பு ஏற்பாடுகளைச் செய்தார்."**

டுமன்றித் தமிழ் மக்களும் மறந்துவிட்டார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

1937-ஆம் ஆண்டு தேர்தலில் இரத்தினசோதி சரவணமுத்து மட்டுமன்றி அவரது சகோதரர்கள் ஞானசோதி, சப்தரத் னசோதி ஆகியோரும் வெற்றி பெற்று, கொழுப்பு மாநகர சபை யில் சமகாலத்தில் பணியாற்றி வந்தனர். மற்றுமொரு சகோ தரர் மாணிக்கசோதி பிரித்தானிய மலேசியாவில் பீனங் (Penang) நகரில் 'Straits Echo' பத்திரிகை ஆசிரியராகப் பணிபு ரிந்துள்ளார். சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராகவும், இந்தோனேசியாவுக் கான தூதுவராகவும் கடமையாற்றியுள்ளார். 1955-ஆம் ஆண்டு பங்டுங் (Bandung) நகரில் நடைபெற்ற நடுநிலை நாடுகளின் மாநாட்டில் (Non Aligned Countries)

அவர் ஆற்றிய அளப்பரிய பணிக்காகவும் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் அவர் ஆற்றிய மகத்தான சேவைக்காக வும் மலேசிய நாட்டின் வரலாற்றில் அவரது பெயர் இடம்பெற் றுள்ளது.

இன்னுமொரு சகோதரர் பாக்கியசோதி சரவணமுத்து இலண்டன் பல்கலைகழகத்தில் கற்று, கொழும்பு றோயல் கல் லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்ததோடு, பின்னாளில் பல உயர் பதவிகளை வகித்தார். துடுப்பாட்டத்திலும், உதைபந் தாட்டதிலும் பல சாதனைகளைப் படைத்தார். 1937-ஆம் ஆண்டு முதல் 1950-ஆம் ஆண்டு வரை இலங்கை துடுப் பாட்டக் கழகத்தின் தலைவராகவும், 1949 - 1950 காலப்பகு தியில் இலங்கை துடுப்பாட்ட வாரியத்தின் முதலாவது தலைவ ராகவும் பணிபுரிந்தார். அவரது அயராத முயற்சியினால் கொழும்பில் வனத்தமுல்ல (Wanathamulla) என்னுமிடத்தில் ஓவல் மைதானம் என்னும் சர்வதேச விளையாட்டரங்கம் உரு வாகியது. அக்காலப்பகுதியில் அதுவே இலங்கையின் மிகப் பெரிய சர்வதேச விளையாட்டு அரங்கமாகக் காட்சியளித்தது. பாக்கியசோதி சரவணமுத்துவின் மறைவுக்குப் பின்னர் அவரை கௌரவிக்கும் முகமாக 1977-ஆம் ஆண்டு இலங்கை அரசு அதற்கு 'சரவணமுத்து விளையாட்டரங்கம்' (P. Sravanamutthu Stadium) எனப் பெயர் சூட்டியது.

அடுத்த சகோதரர் தர்மசோதி சரவணமுத்து 1912-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கலால் திணைக்களத்தின் (Excise Department) உயர் அதிகாரியாக நியமனம் பெற்றார். 1910-ஆம் ஆண்டு மக்கலம் தேசாதிபதியின் சீர்திருத்தத்தின் பிர காரம், இலங்கை முழுவதும் ஒரு தொகுதியாகக் கருதப்பட்டு, படித்த இலங்கையர் பிரதிநிதியைத் தெரிவு செய்யும் தேர்த லில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் தெரிவு செய்யப் பட்டார். அவர் கள்ளுத் தவறணைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனத் தீவிரமாகக் குரல் கொடுத்ததைத் தொடர்ந்து கலால் திணைக்களம் உருவாக்கப்பட்டது. அதே திணைக்க ளத்தில் பல பதவிகளை வகித்த, தர்மசோதி சரவணமுத்து, பின்னர் ஆணையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது காலாண்டுப் பகுதியில், இலங்கையிலே சரவணமுத்து சகோதரர்கள் தமக் கென ஒரு தனித்துவத்தை நிலைநாட்டியிருந்தனர்.

சர்வசன வாக்குரிமை வழங்கிய டொனமூர் ஆணைக்குழு வினர் கட்சி அடிப்படையிலான அரசியல் வளர்ச்சிக்கு ஊக்க மளிக்கவில்லை. ஆனால் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த இரத்தினசோதி சரவணமுத்து அவர்கள் தன் அரசி யல் வாழ்க்கையில், சுதந்திர தொழில் கட்சியின் ஆரம்ப கர்த் தாக்களுள் ஒருவராக விளங்கினார். பின்னர் அது இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைப்புடன் இணைந்தது.

இவரை கௌரவிக்கும் முகமாக 1951-ஆம் ஆண்டு மவுன்ட் லெவினியா சென். தோமஸ் கல்லூரி, பாடசாலை மண்டப வாயிலில் இரத்தினசோதி சரவணமுத்துவின் புகைப்படம் ஒன்றை வைத்தது. இலங்கை அரசு 1960-ஆம் ஆண்டு Wolfendhall Road என்ற வீதியை சேர் இரத்தினசோதி சரவண முத்து மாவத்தை எனப் பெயர் மாற்றம் செய்து மதிப்பளித் தது. பிரித்தானிய எழுத்தாளரும், கவிஞரும், இராணுவ வர லாற்று ஆய்வாளருமான Eric Linklater இரத்தினசோதி சரவ ணமுத்து அவர்களின் சேவை குறித்து 'Roll of Honour' என்னும் நூலை எழுதி 1961-ஆம் ஆண்டு வெளியிட்டார்.

சமூக சேவையைப் பாரம்பரியமாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவரும் சிறந்தவொரு அறுவைச் சிகிச்சை வைத்திய நிபுணரும், அரசியல்வாதியும், அரசாங்கசபை உறுப்பினரும், போர்க்காலத்தில் கொழும்பு நகரை நிர்வகித்த திறமைமிக்க நிர்வாகியுமான இரத்தினசோதி சரவணமுத்து அவர்கள் 1949-ஆம் ஆண்டு, இலங்கை சுதந்திரம் அடைந்து ஒரு வருடத் துள், தனது 63-வது வயதில் அமரத்துவம் அடைந்தார். அவர் நடத்திவந்த மருத்துவ நிலையத்தை அவரது மகன் வைத்தி யர் இரத்தினகுமார் சரவணமுத்து அவர்களும், பின்னர் அவரது மருமகள் மனோராணி சரவணமுத்து அவர்களும் நடத்தி வந்தனர். வைத்தியத் தொழிலையும் அரசியலையும் இரு தளங்களாகக் கொண்டு சமூக சேவையாற்றிய இரத்தின சோதி சரவணமுத்து அவர்கள் இலங்கை வரலாற்றில் நிலை யான ஓர் இடத்தைப் பெற்றுள்ளார் என்பது நம் அனைவ ருக்கும் பெருமையே.



vivekananthan.v@thaiveedu.com

'கம்பீரமாய் நடப்பார்; நீண்டகை 'சேர்ட்' அணிவார்; கதர்ச் சாரம் உடுத்திருப்பார்; வேண்டுமென்றால் 'லோங்ஸூம் அணிவார்; குஞ்சச்சால்வையும் பஞ்சுத்தொப்பியும் போட்டிருப்பார்; ஆனாலும், காண்பவர்க்கெல்லாம் கண்ணாடி, குறுந்தாடி, கவர்ச்சி முகம்கொண்ட ஈழமேகத்தின் புளகம் தரும் புன்முறுவல் பூரிக்கும் நகைப்பேச்சு, எவருக்கும் வாராது அவர்வாழ்வு இலக்கணமோ மாறாது.' இப்படித்தான் அந்த 'மனிதரை' நான் முதன்முதலில் அறிந்தேன். அதன்பின் சந்தக்கவிதை வாசித்தபோது அந்த கவிஞரைச் சம்மாந்துறையில் சந்தித்தேன்.



நான் பள்ளிக்கூடத்து மாணவனாயிருந்த பருவகாலத்தில் காரணம் தெரியாத கலாவெறி என் மனசில் கௌவியிருந்தது. கரையோரத்தில் நின்று கடல் அலைகளை அதிகநேரம் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தது மாதிரி, அட்டாளைச்சேனை பிரதான வீதிக்குப் பக்கத்தில் உள்ள புறாத் தோட்டத்தின் புற்தரையில் அமர்ந்துகொண்டு நண்பர்களோடு நான் ஈழமேகத்தின் சந்தக் கவிதைகளையும் சந்திப் பேச்சுகளையும் கேட்டு சந்தோசத்தில் சஞ்சரித்தேன்.

காலம் பார்த்துப் பருவமழை பொழிவது காலமேகம். ஆனால், காலம் முழுவதும் கானமழை பொழிந்தது ஈழமேகம். அந்த ரங்க சமூகநோக்கு அவரது தொண்டைக்குள் ஒட்டிக்கொண்டிருந்த மாதிரி சுகமும் துக்கமும் மாறி மாறி மதியோடும் மரபோடும் உரசி முழங்கும்போது அவரிடம் மனிதநேய மாண்பு மின்னலடிக்கக் கண்டேன். ஈழமேகம் கவிமாரி பொழிந்தார்; ஈனநிலை இடம்பெற்ற சமூகத்தில் இவரது சந்தக் கவிதைகள் இடியாய் முழங்கியது. பணம் - புகழ் என்பவற்றுக்கும் மேலால் தன் சமூகத்துக்கு மனோதர்மத்தை மெய் மொழிந்தார். தன்னலமாக அல்லாமல் தன் இனத்துக்காக மட்டுமல்லாமல் பிறஇனத்தின் சேமநலத்துக்காகவும்கூட பாடுபடுபவனே சிறந்த படைப்பாளர். இந்தக் கூற்றை தன் வாழ்வில், எழுத்தில், பேச்சில், செயலில் நடைமுறைப்படுத்தினார்.

1982 ஓகஸ்ட் மாத காலத்தில் அட்டாளைச்சேனை பொது நூலக ஆலோசனைக்குழு மீலாதுநபி பிறந்த தினவிழாவில் கருத்தரங்கம், கவியரங்கம், புத்தகக் கண்காட்சி என மூவரங்க நிகழ்வுகள் நடத்தப்பட்டபோது அட்டாளைச்சேனை இஸ்லாமிய இலக்கியப் புலமையாளர் மூத்த புலவர் மர்ஹூம் அப்துல் ரகுமான் ஆலிம் எழுதி வெளியிட்ட 'மண மங்களமாலை' என்ற இஸ்லாமிய இலக்கியப் பாநூல் பற்றி அல்ஹாஜ் ஈ.எல்.எச். சுலைமா லெவ்வை அவர்கள் இளைய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.

'ஈனநிலை கண்டு' என்ற தலைப்பில் கவிஞர்கள் பலர் பாடிய கவியரங்கத்தில் அரங்கத்தலைவர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி சின்னச் சின்ன சிங்காரத் தொடர்களால் சுவாரசியமாய்க் கவிதை பாடிப் பாமரர்களையும் சிந்திக்க வைத்தார்.

# சொற்கலை வல்லுநர்

# பக்கீர்த்தம்பி

இனியவன் இசாறுத்தீன்

‘ஆடலுப்பார் ஒரு கூட்டம் போத்தல் கஞ்சா
அபின்கரைப்பு சாராயம் பிரண்டி கள்ளு
ஏடறியாப் பேச்சாளர்களுக்கு உணவுமட்டும்
எழுச்சியோடு உபசாரம் பிரமாதம்தான்

வாடகைக்காய் வந்த பேச்சாளரெல்லாம்
வழியனுப்பி விட்ட பின்னர் மேடைகட்டி
நாடகம் கூத்தோடு கும்மாளம் போட்டு
நடிப்பதுதான் மீலாதுநபி விழாவா?’

என்று நபிகளாரின் முன்மாதிரியை முழங்கி மனிதத்துவத்தின் புனிதத்துவத்தைப் போதித்தார்.

அவரது காலத்தில் எல்லா ஊரிலும் ராத்திரிகளில்தான் மீலாதுவிழா நடந்தது. 1978-இல் காத்தான்குடியில் நீண்டு நிகழ்ந்த மீலாதுநபி விழாவின்போது மக்கள் தூக்கத்தின் யாத்திரை அவர்களது இமைகளைவிட்டும் அகல மறுத்த துண்டு. அப்போது கண்களை மூடிக்கொண்டும் காதுகளைத் திறந்துகொண்டும் கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு அண்ணாத்துரைப் பாணியில் ‘மைக்’கைப் பிடித்துக்கொண்டு இப்படி ஆரம்பித்தார் அவைத்தலைவர் ஈழமேகம்.

‘நேரமோ பத்தரை
மாதமோ சித்திரை
நீங்களோ நித்திரை
நானுமேன் கத்துறன்’

என்று அவர் சொல்லி முடிக்க சனங்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். சுவாரஸ்யமாய் இருந்த அவரது இந்தக் கவிதை எல்லோரையும் மகிழ வைத்தது.

‘மாடாய் மலைமேல் மண்டியிட்டு ஏழைமக்கள்
ஓடாய் அலைந்துபணி ஒப்பித்தும் – கேடாய்
வாழும் பரிதாபம் வாட்டுதே என் மனதை
நாளும் பொழுதுமாக’

என்று மனம்நொந்த ஈழமேகத்திடம் வீறுணர்ச்சியோடு வெளிப்பட்டது இக்கவிதை. இலங்கை இன நாயக அமைப்பை ஒழித்து உண்மையான ஜனநாயக அமைப்பை வெளிக்கொணர வேண்டுமென்று சபைகளில் கேட்ட அவரது உழைப்பாளர் சார்பான புரட்சிக்குரல் இன்னமும் செவிகளில் கேட்கின்றது.

பக்கீர்த்தம்பி ஒரு பண்டிதர் என்பதால் வாழ்வின் மீதான நன்னம்பிக்கையும் மனித அவலங்களுக்கெதிரான ஆத்திரமும் மக்களைப் பாதித்த சமூகப்பிரச்சினைகளும் அன்றாட அனுபவ வலிகளும் சமூக, சமய ஜனரஞ்சகப் பாரம்பரியமும் நாவலர் பக்கீர்த்தம்பியின் எழுத்துகளை அடையாளப்படுத்துகின்றன.

ஈழமேகம் பக்கீர்த்தம்பி இப்போது இல்லை. ஆண்டு 1985-இல் அவர் நம்மைவிட்டு மறைந்தார். ஈழமேகம் என்பவரை அறியாதோர் யாருமில்லை. ஏனெனில், அவர் பிரசங்கம் செய்யாத மீலாத்நபி விழாமேடை கிழக்கில் எங்குமில்லை. இந்தியத் தமிழ்நாட்டு மீலாத்விழா மேடைகளிலும் அவர் இலக்கிய அதிதியாகப் பிரசன்னமாகி பிரமிக்கவைத்துப் பேசியிருக்கிறார். உண்மையான இஸ்லாமிய பண்பாட்டுப் பாரம்பரிய கலாசாரத்திற்கெதிரான அனாச்சாரத்தை ஒழித்துவிட வேண்டுமென்று ஒப்பாரி வைத்திருக்கிறார். இலக்கியத்தின் நன்னோக்கத்தை இப்படியும் புரிந்து வைத்துப் பேசும் உள்ளுணர்வுள்ள ஈழமேகத்தை இளையவர்களாகிய நாங்கள் ஒருபோதும் ஆராதிக்காமல் இருக்க முடியாது.

‘ஆடுதல் பாடுதல் சித்திரம் – கவி
யாதி யினைய கலைகளில் – உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர் – பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் ...’

என்றானே பாரதி. அவனது தொனியில் ஈழமேகம் பக்கீர்த்தம்பியும் வாழ்க்கையை நேசிக்கும் வைராக்கியத்தோடு பாடினார். ‘தேநீரும் செங்குருதியும்’ என்ற கவிதையில் வாழ்வாதாரத்தின் மூலாதாரமான பொருளாதாரத்தை ஈட்டித்தரும் மலையக மக்களை மனங்கொண்டு பாடினார். கல்வியிலும் சிந்தனையிலும் தாழ்ந்து கிடக்கும் அந்த பாமரமக்களின் பள்ளத்தில் இறங்கி அவர் அவர்களைக் கைதூக்கிவிட முயன்றார்.

‘செங்குருதி வேர்வையாய் மாறச்செய்தாய்
தேயிலையைச் செந்நீராய் ஆக்கிவைத்தாய்
பொங்குகடல் சூழிலங்கைத் தீவுமாதின்
புன்னகையில் நீமயங்கி மோகமுற்றாய்

அங்கமெல்லாம் அவளுக்குப் பச்சையாடை
அணிவித்தாய் ஆரம்பூண்டாய
எங்கேயடா உன்னுரிமைக் கேடயந்தான்
ஏனுனக்கு அவளின்னும் அளிக்கவில்லை?’

இலங்கை அரசியல்வாதிகளின் அடிமை அடையாளம்தான் மலையகத் தொழிலாளர்கள், அந்த ஏழைப்பாட்டாளிகளின் துயரத்தைப் பாட்டில் வைத்த பாவலர் பக்கீர்த்தம்பியின் கவிதைகள் மனிதநேயத்தின் வெளிப்பாடாய்த் தோன்றின.

தான் வாழ்ந்த காலத்திலேயே தாய்மொழி தமிழுக்கு முன்னால் இருக்கும் சவால்களை உணர்ந்துகொண்டு இலக்கிய நயத்தோடும் சொற்களின் சூட்சும நுட்பத்தோடும் கவிதைமழை பொழிந்தார் பாவலர் பக்கீர்த்தம்பி. இதோ அவர் ‘மழைவளம் வேண்டும் அல்லாஹ்’ என்று மனங்கொண்டு எழுதிய கவிதை

‘நாடிநரம்பு தளர்ந்து உலர்ந்திட
நாவுவரண் டுமிழ் நீருமே வற்றிட
ஆறிடுமேடு அலைகட லோய்ந்திட
ஆவி துடித்துயிர் ஆலாய்ப்பறந்திட

கத்தரி கொச்சிப் பயிர்களும் செத்திட
காய்கறித் தோட்டமும் காய்ந்து வரண்டிட
கோடுறு கானகம் கூட வரண்டிட
கோடை வறட்சி கொடுமை மிகைத்ததே

அறநெறி பொய்த்ததோ ஆகமம் பொய்த்ததோ
ஆண்டவன் பள்ளிக் கதவடைபட்டதோ
மதநெறி மாய்ந்து மனுக்குலம் கெட்டதோ
மார்க்கத்தில் மூர்க்கம் வலிந்து புகுந்ததோ

குறைபொறுத் தேழைகள் பாவிகள் செய்திடும்
கொடுமைகளைப் பொறுத்தேக இறைவனே
அருட்கொடையானனே ஆதிபராபரா
ஆண்டவனே மழை பெய்திட வேண்டுமே’

1983-இல் வெளியிடப்பட்ட அவரது 'மழையும் துளிகளும்' கவி தைநூலில் உள்ள முதலாவது கவிதையிலேயே மக்கள் மனசில் அவர் முத்திரை பதித்தார். வான்மழைக்கு ஏங்கும் வரண்ட நிலமகள் போல், வளமான வாழ்வுக்கு ஏங்கும் மண்மகளை நெருப்பெரிக்கக் காரணம் ஏன்? என்று கேட்டு, இந்த பூமியில் வாழும் இழிமாந்தர் செயல்தானோ?' எனத் தன் செய்யுளில் உள்ளுறை வைத்து நல்லுரை செய்கிறார்.

'மதிகெட்டு உடல்கெட்டு மானங்கெட்டு
மனிதனே மிருகமாய் மாறிக்கெட்டு
விதிகெட்டும் வினைகெட்டு வேசம்கெட்டு
கதிகெட்டு நீதிகெட்டுக் கவலைகெட்டு

கண்கெட்டு அலைகின்றார் புத்திகெட்டு
பதிகெட்ட குடியினார் பண்பேகெட்ட
பாவங்கள் மாறுமோ உலகைவிட்டு'

தலைப்பைக் கொடுத்தால் இருந்த இடத்திலேயே கவிதை பாடும் நிலைபேற்றாளர் ஈழமேகம். ஒரு சந்தர்ப்பத்தில் கூடி நின்றவர்கள் அவரது கவிதையறிவைப் பரிசோதித்துப் பார்க்கத் துணிந்தார்கள். அவரிடம் ஒருமுறை 'குர்ஆனைப் பற்றி ஒரு கவிதை பாடுங்கள்' என்றார்கள். உடனே பாடினார்

'கல்விக்குத் தாயாகி கலையுமாகி
கலைஞானப் பொக்கிசத்தின் ஞானமாகி
வல்லகலை ஞானத்தின் வழியதாகி
வாழுகின்ற சமுதாயத்தின் வரம்பதாகி

எல்லாமே உள்ளூறைந்த இன்பமாகி
ஏகத்துவக் கொள்கை ஏடதாகி
கல்லுமே கரைந்துருக ஞானமீந்த
கலைச்சுரங்கம் அல்குர்ஆன்'

என்றவுடன் வியந்துபோனவர்கள். 'சீதனம்' பற்றி இன்னொரு கவிதை பாடுங்கள்' என்றார்கள். உடனே அவர் சீதனத்தைப் பற்றி சீர்வரிசையோடு பாடினார்

'உழைத்தவர் உதிரம் உண்டு
உயிர்பிழைக்கின்ற பேடி
குலமெனும் பெருமை காட்டி
குடிகெடுக்கின்ற பேடி

கற்பதைச் சூறையாடி
களி பெறுகின்ற பேடி
சீதனப் பேடிக்கெல்லாம்
செருப்படி கீரன்காதை'

என்று நாவலாசியர் இளங்கீரனின் கதையையும் சேர்த்துப் பாடிய ஈழமேகம், அன்று தன் அறிவுக்கொடையால் எல்லோரையும் அபிமானியாக்கினார். இலங்கை வானொலியும் ஈழத்துச் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் அவரது படைப்புகளை மக்களுக்கு பிரியத்தோடு பகிர்ந்தளித்தன.

ஈழமேகத்துக்கு இரண்டு முகங்கள். ஒன்று சமயப்பணி, இன்னொன்று சமூகப்பணி. இந்த இரண்டு முகத்தையும் ஒரு முகப்படுத்திக்கொண்டு தண்டவாளத்தில் ஓடும் ரயில் மாதிரி தனது வாழ்வை ஒத்திசைவு பிறழாமல் சீராக ஓட்டிக்கொண்டு சென்றார்.

நாவலர் பக்கீர்த்தம்பி நல்ல பேச்சாளர்; நலியும்வரை போதித்த நல்லாசிரியர், நூலாசிரியர், கல்லூரி அதிபர், பண்டிதர், பாவலர், சமாதான நீதிவான் என்றெல்லாம் பன்முகத்திறன் கொண்ட பக்கீர்தம்பியின் பிரபல்யம் பிரமாண்டமானது. ஒழுக்கமான சமத்துவமான எதிர்கால சமுதாயம் உருவாக வேண்டும் என்கிற உணர்வோடு பக்கீர்த்தம்பி தன் பள்ளிமாணவர்களுக்கும் நன்னம்பிக்கையை விதைத்தார். 'எல்லோரையும் மனதார மதிப்பது' என்னும் நல்ல குணத்தைத் தனக்குள் தக்கவைத்தார்.

'கொட்டுமழை உந்தனுக்கு பன்னீராமோ
குளிர்காற்றும் கொடுவெய்யிலு முன்னைச்சுட்டு
சுட்டியினிற் புழுவாக நீ துடிக்க
தமிழன்னை உனைப்பார்த்துக் கண்ணீர்சிந்த

வட்டவளை நுவரெலிய அட்டன்மாதும்
வாய்விட்டு உன்னிலையை எடுத்துக் கூறும்
பட்டியலே நாடறிந்த கதையென்றாலும்
பரிதாபப் படுவோர்கள் உனக்காரப்பா'

ஆண்டு 1970 - 1980 காலப்பகுதியில் அண்ணல் நபி அவதரித்த தினவிழாக்கள் அதிகம் இராப்பொழுதுகளில் நிகழ்ந்தன. அந்த நிகழ்வுகளில் சில கவிதைகளைப் பாட்டாகவும் பாடினார் ஈழமேகம். அப்போது இஸ்லாமிய பாடகர் ஈ.எம் நாகூர் ஹனிபாவின் குரலைத் தன் தொண்டையில் தத்தெடுத்து வைத்திருந்தார்.

நாவலர் ஈழமேகம் பக்கீர்தம்பியின் பூர்வீகம் கிழக்கிலங்கை - அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கும் சம்மாந்துறை. குளக்கரையும் வயல்வெளியும் வரப்புகளும் வாய்க்கால்களும் சுற்றிச் சூழ்ந்திருக்கும் சோபிதச்சூழல் கொண்ட சம்மாந்துறை ஊரில், தந்தை முகம்மது இஸ்மாலெவ்வை - தாய் பாத்திமா இணையர்களின் அன்புப் புதல்வனாகப் பிறந்தவர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி. அவரது மனைவி சீனத்தும்மா. இவர்கள் இருவருக்கும் நான்கு பிள்ளைகள். மூன்று புதல்வர்களும் ஒரு புதல்வியும். அப்துல் நஸீர், ஜமீல், அப்துல் றாசிக், பௌசியா.

நாவலர் பக்கீர்தம்பி பிரபல்யமான இஸ்லாமியக் கலை - இலக்கிய, கலாசார பாரம்பரியக் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து முதலில் ஆசிரியர் நியமனம் பெற்றார். இலக்கிய ஆர்வலரான அவர், இயல்பான மொழிப்பற்றால் இனிமையாகப் பேசும் கலையைக் கற்றார். அவரது தமிழ்ப்பேச்சு பிறரைக் கவர்ந்ததால் எல்லோருக்கும் அவர் ஜனரஞ்சகப் பேச்சாளரானார். சம்மாந்துறை மக்கள் அவரது நாவன்மையின் நயம்கண்டு அவருக்கு 'நாவலர்' என்ற பட்டம் வழங்கினார்கள்.

அவர் 'உரைமலர்', 'அறவழிக்கீதம்', 'மழையும் துளிகளும்' என்கிற படைப்புகளை உருவாக்கி மக்களுக்குக் கையளித்தார். ஈழமேகம் கிராமியக் கவிஞரென்றாலும் தன் இயல்பான புலமையில் வாழ்வின் அழகியலை அங்குலம் அங்குலமாக அளந்து காட்டித் தென்கிழக்கு மக்களின் தேன்மதுர நாட்டாரியல் பேச்சுக்கலை உணர்வுகளைத் தன் இலக்கியப் படைப்புகளிலேயே புலப்படுத்தியுள்ளார்.

1952-இல் கொழும்பு சாகிறாக் கல்லூரி கபூர் மண்டபத்தில் அல்ஹாஜ் பளீல் அவர்கள் அன்பளிப்புச் செய்த தங்கப்பதக்

கத்தை முன்னாள் அமைச்சர் எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டார நாயக்க நாவலர் பக்கீர்த்தம்பியின் மார்பில் அணிவித்து மகிழ்ந்ததும்...

1961-இல் இந்தியாவில் தமிழ்க் கலைஞர்கள், கவிஞர்கள் என மூத்த ஆளுமைகள் பலர் அமர்ந்திருந்த மீலாதுநபி விழா மேடையில் முன்னாள் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் பக்கீர்த்தம்பியை ஆரத்தழுவி, பொன்னாடை போர்த்தி, 'ஈழமேகம்' என்று புகழாரம் சூட்டியதும்...

ஆண்டு 1975-இல் இலங்கை சாகித்திய மண்டலம் 'புலவர் நாயகம்' என்று புலமையாளனை பட்டமளித்துப் பாராட்டிப் பார்த்ததும்...

சம்மாந்தறை ஆசிரியர்சங்கம் 1978-இல் 'காயல்மேகம்' என்று பேராசானைப் போற்றிப் புகழ்ந்ததும்...

1978-இல் தமிழ்நாடு காயல்பட்டணத்தில் நடைபெற்ற மூன்றாவது உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மகாநாட்டில் அறிவியற்றுறையில் முஸ்லீம்கள் ஆற்றிய அரும்பணி என்னும் தலைப்பில் அவர் கட்டுரை சமர்ப்பித்ததற்காக 'கவித்துவம் பெற்ற காயல்மேகம்' என்ற பட்டம் வழங்கி ஈழமே கத்தை அலங்கரித்ததும்...

1983-இல் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் ஹாஜியாரின் ஆசியோடு, அவரது 'மழையும் துளிகளும்' நூல் வெளியீட்டு விழாவில் சம்மாந்தறை ஊர் ஒன்றுகூடி 'நாவலர்' என்று வாழ்நாள் நாமம் வழங்கி கௌரவம் செய்ததும், ஈழமேகம் பெற்ற பெருமை தரும் பேறாகும்.

இன்னும் சொல்வதானால் சம்மாந்துறையில் 'சின்னப்பள்ளிக் குளம்' என்ற இடத்தில் ஒரு வானொலியை ஊரவர்க்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தி, அங்கிருந்த குடிலுக்கு 'ரேடி யோக்குடில்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தவர் பக்கீர்தம்பி. தன்னிடம் படித்த பாடசாலை மாணவர்களைப் பட்டதாரிகளா கவும் வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் பாட சாலை அதிபர்களாகவும் தொழிலதிபர்களாகவும் ஊர்த்த லைவர்களாகவும் அரசியல்வாதிகளாகவும் அரசாங்க உத்தி யோகத்தவர்களாகவும் ஆக்கியளித்தவர் கவிஞர் ஈழமேகம் பக்கீர்தம்பி.

isarudeen@thaiveedu.com




**இலங்கையில் "தாய்வீடு" இதழ்**

**மலையகத்தில்...**

அருணாசலம் லெட்சுமணன்
நாவலப்பிட்டி
77 165 4372

அருள்கார்க்கி
பண்டாரவளை
77 519 4817

**கிளிநொச்சியில்...**

சிந்தனா ஓட்டோ பாட்ஸ்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
76 459 1459

கிளி மக்கள் அமைப்பு
கிளிநொச்சி
77 134 3832

**அஞ்சலில் பெறுவதற்கு...**

பிரசாத் சொக்கலிங்கம்
71 648 6666

எஸ். சத்தியதேவன்
77 729 4287

**யாழ்ப்பாணத்தில்...**

எஸ். சத்தியதேவன்
யாழ்ப்பாணம்
77 729 4287

சஜீலன்
மல்லாகம்
77 669 8386

தானா விஷ்ணு
இமையாணன், வடமராட்சி
74 007 3200

புக் லாப்
சேர். பொன். இராமநாதன் வீதி
(யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலுக்கு எதிரில்)
யாழ்ப்பாணம்
77 128 5749

எங்கட புத்தகங்கள்
18/2, திருவடி நிழல்
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்
77 378 8795

**கொழும்பில்...**

மல்லியப்புசந்தி திலகர்
கொழும்பு
71 120 8061

**மட்டக்களப்பில்...**

பிரசாத் சொக்கலிங்கம்
ஆரையம்பதி
71 648 6666

ஜிப்ரி ஹாசன்
ஓட்டமாவடி
76 973 5350

பாத்திமா புத்தக நிலையம்
ஏறாவூர்
77 080 7787

வி. மைக்கல் கொலின்
மட்டக்களப்பு
77 433 8878

**அம்பாரையில்...**

எம். ஐ. முஹம்மட் சாக்கீர்
சம்மாந்துறை
77 160 7490

நிரோஜன் சதாசிவம்
தம்பிலுவில்
77 785 0825

பேஜஸ் புத்தக நிலையம்
அக்கரைப்பற்று
74 239 7395

# தீதும் நன்றும் ஒரு பார்வை




சியாமளா யோகேஸ்வரன்

எழுத்தாளர் விமல் பரம் 15 சிறந்த சிறுகதைகளை உள்ளடக்கியதாகத் 'தீதும் நன்றும்' என்ற மகுடத்துடனான சிறுகதைத் தொகுப்பொன்றை அண்மையில் வெளியிட்டுள்ளார். மிகத் தீவிர வாசகராகவும், அவரது அக்காவும் மூத்த எழுத்தாளருமான தாமரைச்செல்வி அவர்களின் விமர்சகராகவும் எழுத்துத்துறை பற்றிப் பரந்த அறிவைக் கொண்டிருந்த விமல் பரம் அவர்கள், கடந்த பத்து ஆண்டுகளாக எழுதிய சிறுகதைகளில் சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களைப் பெற்ற கதைகளையும், இதுவரையில் பிரசுரிக்கப் பட்டவற்றில் சிறந்த கதைகளையும் தொகுத்து 'தீதும் நன்றும்' என்ற தொகுப்பாக்கி இருக்கின்றார்.

சமூகத்தில் நிகழும் அவலங்களும், தர்மத்துக்கு முரணான நிகழ்வுகளும் மென்மையான குணம் கொண்டோரின் மனங்களை ஆழமாகப் பாதிக்கின்றன. பலர் மௌனம் காக்க, வெகு சிலர் போர்க்கொடி தூக்கி அந்நிலையை மாற்றுவதற்காய் வீறு கொண்டு எழுகின்றார்கள். மனதை விட்டு விலகாமல் ஒட்டி நின்றபடி உறுத்திக் கொண்டிருப்பவற்றை எழுத்தில் வடிப்பதன் மூலம் தன் உணர்வுகளுக்கு வடிகால் தேடிக் கொள்வதுடன், தம் அழுத்தமான எழுத்துப் பதிவுகளின் ஊடாகச் சமூக விழிப்புணர்வை உருவாக்க முனைபவர்களே எழுத்தாளர்கள் ஆவார்கள். எரியும் பிரச்சினை ஒன்றைத் தம் வார்த்தைகளின் வலிமையால் சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்து, மக்களைச் சிந்திக்கத் தூண்டி மனங்களிலும், சமூகத்திலும் மாற்றங்களைக் கொண்டு வருவதே அவர்களின் போராட்ட முறையாகும். அந்த வகையில் விமல் பரம் அவர்களின் சிறுகதைத் தொகுப்பில், எமது தாயகப் போரின் அவலங்கள், உறவுகளின் உள்மனப் போராட்டங்கள், வெளியில் தெரியவராத அல்லது உலகம் புரிந்து கொள்ளாத மனங்களின் குமுறல்கள், மூப்பின் அவலங்கள், இயலாமையின் இயம்பல்கள், வறுமையின் வலிகள், நேர்மையின் கூரியம் என்று தன் மனதைப் பாதித்த நிகழ்வுகளை எல்லாம் எளிமையான நடையில் படைத்து வாசகர்களின் உள்ளத்தைத் தொட்டுச் சென்றிருக்கின்றார். மண்ணின் மணம் பெரும்பாலான கதைகளில் தூக்கலாக இருப்பதாலும், கதை சொல்லும் முறை இயல்பாக இருப்பதாலும் நாமும் பாத்திரங்களோடு சேர்ந்து எம் மண்ணில் பயணிப்பதான உணர்வைப் பெறுகின்றோம். ஒவ்வொரு கதையினது கருவும் சமூகத்தில் புரையோடிப் போயிருக்கின்ற பிரச்சினைகளைக் கருணையுடனும் மனிதாபிமானத்துடனும் சீர்தூக்கி ஆராய்ந்து, மகிழ்ச்சியான முடிவைக் கொடுப்பனவாக இருப்பது கதாசிரியரின் மென்மையான அணுகுமுறையைப் பிரதிபலிப்பதாகவே இருக்கின்றது.

'இறுகப்பற்று' போரின் வடுவை உள்ளத்தில் மட்டுமல்லாமல் உடலிலும் தாங்கி ஊனமுற்றிருக்கும் ஒரு சாமானியனின் வாழ்க்கைப் போராட்டத்தை எடுத்தியம்பும் ஒரு கதை. காதலுடனும் எதிர்காலம் பற்றிய கனவுகளுடனும் இருந்த ஒரு இளைஞனின் வாழ்க்கை, போரின் கோரத் தாண்டவத்தில் சிக்குண்டு சின்னபின்னமாகி விடுகின்றது. அணையாத அன்பைத் தரும் அன்னையைத் தவிர அனைத்து உறவுகளும் அந்நியமாகிவிட்ட ஒருவனுக்கு வாழ்க்கை வாழ்வதற்கே என்ற நம்பிக்கையை அவனை விடப் பாதிக்கப்பட்ட ஒருவன் கொடுக்கின்றான். 'உனக்கும் கீழே உள்ளவர் கோடி' என்றும் 'வாழ நினைத்தால் வாழலாம்' என்று கவிஞர் கண்ணதாசன் சொன்ன வரிகளை எமக்கு ஞாபகப்படுத்தி எதிர் நீச்சலிடக் கற்றுக் கொடுக்கும் ஒரு சிறந்த புனைவு.

பெற்றோர்கள் ஆன பின்னர்தான் பெற்றவர்களின் வலி தெரியும் என்பது உலகறிந்த உண்மை. நாம் எமது பெற்றவர்களை எங்ஙனம் நடத்துகின்றோம், மற்றவர்களை மதித்து எவ்வாறு பழகுகின்றோம் என்பதைப் பார்த்துத்தான் எம் குழந்தைகள் தம் பழக்கங்களை வகுத்துக் கொள்கின்றார்கள். தம்மைப் பெற்றவர்களின் மீது பாசமாக இருப்பது இயற்கை. ஆனால் அதே அன்பைத் தமது துணையைப் பெற்றுத் தந்தவர்கள் மீதும் காண்பிப்பார்கள் ஆயின் குடும்பத்தில் அறம் என்றும் நிலைத்து நிற்கும். கனவுகளும், தியாகங்களும் கை கோர்த்திருக்க ஒவ்வொரு பெற்றோரும் தம்மை உருக்கித்தான் பிள்ளைகளை நற்குணங்களுடன் வளர்த்து எமக்காகத் தந்திருக்கின்றார்கள் என்பதை ஒவ்வொரு கணவனும் மனைவியும் புரிந்துகொண்டுவிட்டால் யாரினதும் முதுமை சுமையாக இருக்கப்போவதில்லை.

tg.theeban@gmail.com

சூழ்நிலை ஒருவனின் கைகளைக் கட்டிப் போட்டிருக்க, பெற்றவர்களை அவர்களின் இயலாத முதுமைக் காலத்தில் கவனிக்க முடியாமல் போய்விடுவது சில குடும்பங்களில் நடக்கத்தான் செய்கின்றது. இவர்களிடையே சிக்குண்டு தாத்தாவின் பாசத்துக்கும், அருகாமைக்கும் ஏங்கும் ஒரு சிறுவனின் உளக்குமுறலை அழகாகப்படம் பிடித்துக் காட்டிய கதை ‘இதுவும் நடக்கலாம்’.

முன்னைய காலங்களை விட இப்போது முதுமை எல்லோரையும் அச்சுறுத்துவதாகவே காணப்படுகின்றது. முதுமையில் பிள்ளைகளின் அன்புக்காகவும் கவனிப்புக்காகவும் ஏங்கும்போது, பிள்ளைகள் தம்மைப் பற்றி மட்டும் சிந்தித்து அக்கறையின்மையையும், உதாசீனத்தையும், வெளிப்படுத்துவதை யதார்த்த நிலையோடு பொருத்தும் கதைகளாகத் ‘தூறல்கள் மழையாகலாம்’, ‘விதியோடும் மதியோடும்’, ‘தீதும் நன்றும்’, ‘விடியும் பொழுது’ மற்றும் ‘தூரமும் அருகே’ ஆகியன அமைந்திருக்கின்றன. பருவ வயதின் துடிப்புக்கு பெற்றோரின் கண்டிப்பு வெறுப்பைக் கொடுக்க, இளங்கன்றாய்ப் பயமறியாது தன் இஷ்டப்படி காதலித்து வீட்டை விட்டு வெளியேறி எங்கிருக்கின்றான் என்பதே தெரியாமல் வாழ்ந்த ரகுவுக்கு பணத்தேவை என்றதும் தாயின் சொத்து ஞாபகத்துக்கு வருகிறது. பெற்ற பாசம் உள்ளுக்குள் உருக வைத்தாலும், அந்தப் பாசம் கண்களை மறைத்துவிடாமல், தன்னிலை புரிந்து தன் முடிவில் விதியோடும் மதியோடும் உறுதியாக நிற்கும் தாய் நமக்கெல்லாம் நல்லதொரு வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத்தருகின்றார்.

மென்மையாக வளர்க்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு, அவளை மதிக்கத் தெரியாத, பிள்ளைகளின் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுக்காத கணவன் அமைந்துவிட்டால் வாழ்க்கை அவலமாவதையும், பெற்றோரின் வாழ்க்கையால் திசைமாறும் குழந்தைகளையும் சித்தரித்துப் பின் விடியும் பொழுதைக் காண்பித்த விதம் மிகச்சிறப்பு. குழந்தைகளை நல்லவிதமாக வளர்ப்பதற்காகத் தம் விருப்பங்களை ஆழப்புதைத்து, சுயத்தைத் தொலைத்து, தியாகங்களைச் செய்து வாழ்ந்த பெற்றோருக்கு முதுமையில் கிடைக்கும் பரிசு நம்மையும் கொஞ்சம் பதற வைக்கின்றது.

மாமனார் மாமியாரின் மனதைப் புரிந்து கொள்ளாமல், பெற்றோருக்கான கணவனின் ஏக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் எப்போதோ விதைத்தது மகன் வடிவில் அறுவடையாகும்போது பரிதவிக்கும் தாயில் பரிதாபம் கொள்ளத் தோன்றவில்லை. பார்த்ததை மனதில் வாங்கி வளரும் பிள்ளை, பெற்றவளின் மனதைப் புரிந்து கொள்ளாமல் சிறகு முளைத்த பறவையாய் பறந்து போகும் போது தீதும் நன்றும் யாரும் தந்து விடுவதில்லை நாமாகத் தேடிக்கொள்வது என்பது தெளிவாகத் தெரிகின்றது. கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதில் பயனில்லை என்பதை உணர்த்திய பூங்குன்றனாரின் வரிகளுக்கான புனைவான ‘தீதும் நன்றும்’ பெற்றவர்களுக்கான படிப்பினையே.



பாசத்துக்காகவும் உறவோடு சேர்ந்து வாழ்வதற்காகவும் ஏங்குகின்ற முதுமைப் பருவத்தில் மறதியும் வந்து சேர்ந்து விட, சூழ்நிலைகளையும் தம் சொந்த இலாபத்தையும் கருத்திற்கொண்டு முதியோர் இல்லத்தில் கொண்டு சேர்க்க முடிவெடுக்கின்றான் மகன் ஒருவன். யாருமற்ற நிலையில் தத்தெடுத்து அநாதை என்ற அவநிலை வராமற் கண்ணுக்குள் வைத்துக் காத்த உறவென்று தெரியும்போது உருகிப்போன மகனுக்கு, ‘என்னை விட்டுட்டு இருக்க மாட்டாய் எண்டு எனக்குத் தெரியும் ராசா’ என்று நம்பிக்கையுடன் சொல்லும் தந்தை எம்மையும் கலங்க வைத்து, பாசத்தின் சக்தியை உணர வைக்கின்றார்.

முதியோர் இல்லங்கள் எனும்போது கவனிப்பதற்கு யாருமற்ற ஒரு நிலையில் இருப்பவர்களே தஞ்சமடைகின்றார்கள் என்று வெளிக்குத் தோன்றினாலும் சில சமயங்களில் அது தான் பல பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அமைகின்றது என்பதை மறுக்க முடியாது. முதியோர் இல்லத்தின் நிலைதனையும், நாட்டுப் போரின் தாக்கத்தால் பெற்றெடுத்த பிள்ளையையும் பேணிக்காத்த பேரனையும் பறி கொடுத்து விட்டுத் தனிமரமாய் நின்றாலும் மனிதமும் அதற்கேயான கருணையும் மரணித்து விடாத ஒரு முதிய பெண்மணியைத் ‘தூறல்கள் மழையாகலாம்’ என்ற கதை மூலம் கண் முன்னே கொண்டு வருகின்றார் கதாசிரியர். சிறு வட்டத்துள் நின்று விடாமல், மருமகளுக்கு மறுமணம் செய்ய வைக்க எண்ணும் ஒரு புரட்சிகரமான மாமியாரையும், அந்த அன்புக்கு மதிப்புக் கொடுக்கும் மைதிலி எனும் மருமகளையும் இவர்களின் அன்பைப் புரிந்து கொண்ட வரதன் என்ற மறுமணம் புரிப வரையும் மனதில் நிற்கும் படைப்புகள் ஆக்குகின்றார் எழுத்தாளர். சிறு அன்புத் தூறல்கள்தான் கருணை என்ற மழையாக ஊற்றெடுக்கின்றது என்பதை உணர்த்திய ஒரு படைப்பு.

உறவுகளின் அன்புக்காக யாசித்து நிற்கும் நிலை வாழ்க்கையின் பெரு வலியாகும். மனதுக்குப் பிடித்தவரை மணம் முடிக்கும் போது, சில சமயங்களில் உறவுகள் வெறுத்து ஒதுக்கி வைத்து விடுகின்றன. ஒருவருக்கொருவர் என்று வாழ்ந்தாலும், பிறப்பால் இணைந்த உறவுகளின் அன்பை உள்ளுக்குள் தேடிக் கொண்டு இருப்பதுதான் உண்மை நிலவரம். தத்தெடுக்கப்பட்டு உறவானவன், சுற்றத்தைத் தேடி அலைவதையும், அந்த அன்புத் தேடலின் வலியை அறிந்தவனாய் தனக்கு முகவரி தந்த தத்துப் பெற்றோரின் தாய்க்கொரு உறவாவதையும் உறவின் தேடலாக முடித்தபோது நெஞ்சம் நெகிழ்கின்றது.

பொருளாதாரத் தடை என்பது போர்க்காலத்தில் தமிழனுக்குத் தரப்பட்ட ஒருவிதமான தண்டனையாகும். வேலை செய்பவர்களின் கடின உழைப்பையோ, பொருட்களின் தட்டுப்பாட்டால் அவதியுறும் மக்களின் வலியையோ புரிந்து கொள்ளாமல் மனிதாபிமானத்தை அடைவு வைத்து விட்டு தவித்த முயல் அடிக்கும் நோக்கோடு இலாபம் தேட நினைப்பவர்களுக்குச் சாட்டையடி தருகின்றது முள்பாதை எனும் படைப்பு.

மனம் சிதறிப்போனவர்கள் மத்தியில் சேற்றுக்குள் செந்தாமரையாய் இன்னமும் தர்மத்தில் நம்பிக்கை இழந்து விடாதவர்களாய் இன்னல் வந்த போதும் தலைவணங்கிடாமல் நின்று இறுதியில் நீதியை வென்றவர்களை இவ்விரு படைப்புகளிலும் தரிசிக்கும்போது எமக்கும் வாழ்க்கையில் நம்பிக்கை துளிர்க்கின்றது.

மனிதாபிமானத்தையும் உதவும் மனப்பாங்கையும் ‘அனலிடைப் பூக்களும்’, ‘எதிர்காலக் கனவுகளும்’, ‘காலமும் கனியும்’ படைப்புகள் விபரிக்கின்றன. எதையும் எதிர்பார்க்காமல் செய்யும் கைம்மாறானது நன்றி மறவாமை என்ற அடிப்படைக் குணத்துடன் வேறு ஒரு உருவம் கொண்டு மீளக் கிடைக்கின்றது. விதைத்ததை அறுக்கலாம் என்று நம்பிக்கை தந்து தர்மத்தைப் பேணத் தைரியமூட்டுகின்ற வார்ப்புகளாய் இவ்விரு கதைகளையும் பார்க்கலாம். பணமும் செல்வமும் எவ்வளவு வைத்திருந்தாலும், அதைத் தேவையுள்ள மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் போதுதான் வாழ்க்கை அர்த்தம் பெறுகின்றது. பாத்திரமறிந்து பிச்சையிடு என்பார்கள். கொடுப்பவரின் உளம் புரிந்து பெறுபவர்கள் பலன் பெறுவார்களாயின் வாழ்க்கையில் வேறு என்ன நிறைவு இருந்து விடக் கூடும்? ஒரு கதவை மூடினாலும் நியாயமாக நடப்பவர்களுக்காக, இறைவன் இன்னொரு கதவைத் திறந்து விடுவான் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்ற கதைகள் எமக்குள் இருக்கும் மனிதத்துக்கும் நீர் ஊற்றுகின்றன.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மரணத்துக்கருகே சென்றுவிட்டு மீண்டு வரக்கூடிய அவதியான கணங்களை ‘அந்த ஒரு நிமிடம்’ கதையில் வார்த்தைகளாகப் படம் பிடித்திருக்கின்றார் எழுத்தாளர். சரியான படிப்பில்லாததால் நிலையற்ற வேலைக்குச் செல்பவனின் மனநிலையை நோயுற்ற பொழுதில் துல்லியமாகப் படம் பிடித்திருக்கின்றார். அவனுடைய அச்சத்தையும், மனைவியினுடைய வலியையும் குழந்தையின் ஏக்கத்தையும் அப்படியே பதிவு செய்திருக்கின்றார். பெற்றவராகும்போது பெற்றவர்களின் வலி புரியும் என்பதை மீளவும் அழுத்திச் சொல்வதோடு வைத்தியர்களின் கடமையுணர்வையும் போற்றத்தவறவில்லை.

பெற்ற பிள்ளைகளின் பொறுப்புணர்வு, பெற்றவர்களின் அன்புடன் கூடிய கடமையுணர்வு, முகம் தெரியாத அந்நிய முகங்களின் உதவும் மனப்பான்மை, மூத்த சகோதரியின் தாய்மையுடனான நேசம், பக்கத்து வீட்டுப்பாட்டியின் பாசம், கல்வியின் பெருமை, உழைப்பின் அருமை, மனிதாபிமானத்தின் மறு வடிவம், சமூகத்தின் அவலங்கள் என்பவற்றுடன் கொடூர யுத்தம் மிச்சம் விட்ட வலிகளைப் பேசும் கதைகளில் மனதைத் தொடும் சின்னச் சின்னதான கதாபாத்திரங்களின் வார்ப்புகள் கதைகளின் கருக்களைப் போலவே பலரின் வாழ்க்கையைத் தொட்டு, எம்மையும் உலுப்பிச் செல்லக் கூடியவை.

எளிமையான மொழி நடையில் எம்மிடையே ஊறிப் போயிருக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து நல்லதொரு வாசிப்பனுபவத்தைத் தந்த திருமதி விமல் பரம் அவர்கள் தொடர்ந்தும் வாசகர்களுக்கான விருந்தைப் படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அவருக்கு மனப்பூர்வமான வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Shiyamala@thaiveedu.com



# ‘மணல் கடிகை’ நாவல் காட்டும்
# உறவுகள் மீதான பரிசீலனை

tg.theeban@gmail.com




சு. வேணுகோபால்

**தொ**ழில் நகரமான திருப்பூரில் வேர்கொண்டவர்களைப் பற்றிப் பேசுகிற நாவல் இது. வாழ்க்கையில் முன்னேற விரும்புகிற ஐந்து இளைஞர்களைச் சுற்றிக் கதை நிகழ்ந்தாலும் திருப்பூருக்கே உரிய பிரத்தியேகமான தொழில் உலகமும் சுழன்றபடி இருக்கிறது. சிவராஜ், திருச்செல்வன், அன்பழகன், பரந்தாமன், சண்முகம் இவர்களும் இவர்களின் குடும்பங்களும் இவர்களோடு தொடர்புடைய மனிதர்களும் மனுஷிகளும் தொழில்துறை நிறுவனங்களும் நாவலில் கிளைவிட்டபடியே இருக்கின்றன.

ஜீவித்தலுக்கான இடையறாத போராட்டமும் ஊற்றெடுக்கும் காமத்தின் வெளிப்பாடுகளும் நாவல் நெடுகக் கொப்பளித்தபடியே இருக்கின்றன. துரோகத்திற்கும் நேர்மைக்கும் நேரும் மோதலாக இல்லாமல் அவ்வவ் மனிதர்களாகத் திருப்பூர் மண்ணில் உலவுகிறார்கள். ஒருவகையில் சிவா, தியாகு, கருணா, பூங்கொடி போன்றோர் தங்கள் முன்னேற்றத்திற்காக சிறிய பெரிய துரோகங்களைத் தங்கள் சுயநலத்திற்காகச் செய்கிறார்கள். விமலா, திருச்செல்வன், அன்பழகன், சுப்ரமணியம், கண்ணம்மாள் போன்றோர் பிறர் வாழ்தலுக்கு இடம் விட்டு நகர்கிற பெரிய மனதைப் பெற்றிருப்பவர்களாக இருக்கின்றனர். சந்தர்ப்பம் வருகிறபோது நன்மையையும் தீமையையும் செய்கிற மனிதர்களாக ரத்னவேல் செட்டியார், சண்முகம், சாந்தி, வளர்மதி போன்றோர் இருக்கின்றனர்.

வேலை செய்கிற இடங்களில் - மது அருந்துகிற கூடங்களில் - கள்ள உறவு நேரும் அறைகளில், நண்பர்களின் சந்திப்புக்களில் - டீக்கடைகளில் நிகழும் உரையாடல்கள் ஜோடனைகள் அற்று அம்மணம் கொள்கின்றன. மனதின் வெளிப்பாடுகளைக் கூச்சமில்லாமல் மொழிக்குள் கொண்டுவந்திருக்கிறார் கோபால கிருஷ்ணன். பிராகடை பெண் ஊழியர்களின்

கேலிப்பேச்சுகள், துணி தைக்கும் பெண்களின் கிண்டல், முயக்க சூழலில் பெண்கள் வெளிப்படுத்தும் காம உறுப்பு களைப் பற்றிய நிழல்வார்த்தைகள் என வெளிப்படை யாகவே இருக்கின்றன. நாம் இதுவரை அடையாளப்படுத் திய பெண்மொழியிலிருந்து வேறொரு பரிமாணம் கொண்டி ருக்கிறது இந்நாவலில் பெண்மொழி. சுவராஸ்யத்திற்காக அல்லாமல் சூழலிலிருந்து உருவாகும் மொழி வெளிப்பாடு களைப் பதிவு செய்திருக்கிறார். கோவத்திற்கும் - வன்மத் திற்கும் - காமத்திற்கும் குறும்புகளுக்கும் உரிய வேர்களிலி ருந்து உருவாகி வந்தவையாக இருக்கின்றன. கவர்ச்சியாக மட்டுமே முலை, யோனி, தொப்புள் வார்த்தைகளைப் பொருத்தமற்று அள்ளித் தெளிக்கிற வாசக சேவை இல்லை என்று சொல்லலாம். குடும்பி அண்ணாச்சியின் பேச்சிடையே வரும் பெண் உடல்மொழியும் பரந்தாமனிடம் இருபத்தியொ ராவது வித்தையைக் கண்டு நக்கல் செய்கிற பெண்ணின் மொழியும் அவரவர் பார்வை - எண்ணங்களிலிருந்து உரு வானவை.

அருணா, விமலா, செட்டியார், உமா, பூங்கொடி, சிங்காரம், சண்முகம் என இவர்களின் இச்சை மொழிகள் பேதமற்றுத் தெறித்து விழுகின்றன.

இந்நாவலின் அடியாக ஓடும் ஆதார நதிகள் இரண்டு. ஒன்று தேவைக்காகவோ வசதிக்காகவோ மனிதர்கள் உழைக்கின்ற உழைப்பு. இரண்டு இயற்கையின் சக்தியான காமத்தின் வடி கால். இந்த இரண்டு நதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியபடி இருக்கிறது. இந்த இரண்டு கோணங்களில் அசலா கவும் துடிப்பாகவும் மாந்தர்கள் வருகிறார்கள். ‘பொக்கு’ என்பது இந்நாவலைப் பொறுத்தளவில் சற்றுப் பெரிய கடின மான வார்த்தைதான். ஒரு வசதிக்காக அப்படிக் குறிப்பிடு கிறேன்.

கல்வியை முடித்து அன்பழகன், பரந்தாமன், சிவா, பேக்டரிகளில் படும்பாடுகள் நம்மிட மும் அதே உழைப்பின் வலியை ஏற்படுத் துகின்றன. நாவலின் போக்கில் அன்பழ கன் தவிர மற்றவர்களிடம் உழைப்பின் வெம்மையை உணரமுடியவில்லை. போகப் போக மனிதர்கள் பற்றிய கதையாக மாறி உழைப்பு மறையத்தொடங்கிவிடுகிறது. திருச்செல்வனும் அன்பழகனும் பைனான்ஸ் பணத்தை எடுத்துக்கொண்டு ஊத்துக்கு ளிக்குச் செல்லும் இடம்போல பின்னால் உழைப்பு விரிவு கொள்ளவில்லை திருச் செல்வனிடம். ‘திருப்பூர் சிட் பண்ட்ஸின்’ ஏறுமுகமும் இறங்கு முகமும் திருச்செல் வனின் உலகிலிருந்து காட்டப்படாமல் நண்பர்களின் உரையாடல் வழி காட்டப் படும் போது ஈர்ப்புக் கொள்ள மறுக்கிறது மனம். அதே சமயம் திருவின் மகள் துர்கா சிவாவைப் பார்த்ததும் ஓடி ஒளிகிற இடம் அவமானத்தின் கடைசித் துளியையும் பருகி விட்ட துக்கம் நம்மை வந்தடைகிறது. காமத்தின் வெளிப்பாடுகளுக்குத் தந்த முக்கியத்துவம் இம்மாதிரியான பரிமாணங் களுக்கு நாவலை நகர்த்தாமல் விட்டுவிட் டார். இந்தத் தரிசனங்களிலிருந்துதான் வாழ்வின் கோரமுகங்களை வாசகர் உணர்ந்துகொள்ள முடி யும். என் வாழ்வில் இந்நாவல் இனி நீங்கா இடத்தைப் பெற் றிருக்கும் பகுதிகளாக இவ்விடங்களை ஒத்தவைகளையே சொல்வேன். குடிகாரன்தான். தில்லாவரிதான். ஊர் சுற்றி தான். சிங்காரம் ‘ரொம்ப பசிக்குது தாயே’ என்று சொல்லுகிற நொடியில் அத்தனை வெறுப்புகளையும் உதறிவிட்டு சோரம் மாள் அடுக்களைக்குள் ஓடுகிற இடம் மகத்துவத்தின் வாதையல்லவா? இதுவரை எத்தனை பெண்களை அனுப வித்திருக்கிறேன் என்று பட்டியல்போட்டு பெருமைப்படும் சண்முகத்திற்கும் வாய்க்கிறது பெண்ணைப்பற்றிய வேறொரு சித்திரம். சுருக்கெழுத்துக் கற்றுத்தரும் தவமணி டீச்சரின் கொல்லும் வார்த்தைகளை நாமும் கேட்டதுபோல இருக் கிறது.

இந்நாவலில் முக்கியமான அம்சம் பாத்திரங்களை கால ஓட் டத்தில் தொடர்புபடுத்தியிருப்பதுதான். உமா குளியலைத் தரிசித்த சிவா இச்சையோடு கிளம்புகிறான். அவன் கால்கள் பாறைக்குழி பக்கம் வந்து நிற்கின்றன இருட்டுகிறது. பெண் ணின் குரல் கேட்டுத் திரும்புகிறான். மார்புக்கச்சையை அவிழ்த்துக் காட்டுகிறாள். வெளிப்படையான இந்த அழைப்பை எதிர்கொள்ள முடியாமல் ஓடிவிடுகிறான். இப் பகுதி ஜெயகாந்தனின் சிறுகதையை நினைவுறுத்தினாலும் பிற்பகுதி ஒன்றால் பொருள் பொதிந்த பார்வையால் இணைக்கப்படுகிறது. பாக்கியா காணாமல் போன செய்தி யைக் கேள்விப்பட்டு இளைஞர்கள் பல்வேறு திசைகளில் தேடிச்செல்கின்றனர். இறுதியில் பாறைக்குழிப் பக்கம் பிடி படுகிறாள். நிச்சயம் சில்லறைப் பொருள்கள் விற்றுவரும் நாவாப்புடனான தொடர்பை நுட்பமாக உணர்த்திவிடுகிறார்.




செவுட்டுவண்ணானின் மகனை திலகவதி அறைகிறாள். காரணம் பிடிபடமறுக்கிறது. பிற்பகுதியில் சண்முகத்துடன் அவள் புணர்ச்சியில் ஈடுபடுபவளாக அறிகிறபோது நாட்ராயனை அறைந்த தற்குப் பொருள் விளங்கிவிடுகிறது. இருட்டில் பிடுபடுகிறான் நாட்ராயன். ஆனால் தெரு மக்கள் முன் எந்தப் பெண், யார் என்று சொல்லும்போது மௌனம் சாதிக்கிறான். திலகவதி அறை வது எதனால்? மகளின் பொருட்டா? தன் பொருட்டு ஒரு பாதுகாப்புக் கரு தியா? பிற்பகுதி ஆம் என்று விடைய ளிக்கிறது.

சண்முகத்தின் மனைவி வளர்மதி தன் கேரளத்துத் தோழனோடு தேக்கடி வரு கின்றாள். அவர்கள் இவனை இங்க இருக்கச் செய்துவிட்ட தோழனின் அம் மாவைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லி ஜீப்பில் போகின்றனர். போகும் போது நீலநிறப் புடவையில் இருந்த வள் திரும்பும்போது மஞ்சள்நிறப் புடவை யில் வருகிறாள். நுட்பமான குறிப்பு இது. இப்படி சிவா வெற்றியடைந்த தற்கும் பருவெட்டான குறிப்புகள் உள் ளன. திரும்ப வாசித்தலில் கிடைக்கின்ற மன நிறைவுகள் இவை.

இந்நாவலில் தன்னியல்போடு கூடிவந்த படைப்பு மேன்மை என்பது விமலாவின் அப்பா சிவாவைத் தேடி வருவதுதான். சிவா +2 முடித்தபோது இருந்த நிலைமை. அவனுடைய சிறிய வீடு, தறிக்கூடம், அழுக்கடைந்த துணிகள் சித்தரிக்கப் பட்டுள்ளன. விமலாவை உறிஞ்சும்வரை உறிஞ்சிவிட்டு நிரா கரித்துவிடுகிறான். சித்திரா அழகி. வாழ்ந்து கெட்ட குடும் பத்தின் பிரதிநிதி. மோஸ்தர் கருணையால் திருமணம் செய்து வியாபாரத்தில் வெற்றியடைகிறான். தன்னால் கைவி டப்பட்ட ஒருத்தியின் தகப்பன் இவனைத் தேடி வந்து ‘விமலா வுக்கும் கணவனுக்கும் சச்சரவு. நீங்கள் சொன்னால் கேட் பாள்’ என்கிற இடம் ஏதேதோ வகையில் மனித ஜீவிதத்தைத் தொடுகிறது. உளவியலா? பழைய காதலா? நட்பா? வசதியா? எல்லாம் ஒன்று திரளுகிற இடம். அந்தப் பிரமாண் டமான வீட்டின் சித்திரம் விமலா அப்பாவின் கண்களால் விவ ரிக்கப்படுகிறது. மகள் வாழ்ந்திருக்க வேண்டிய இடத்திற்கே வாழ்தலுக்கான பிச்சை கேட்டு வரும் அபத்தம். இந்நாவலின் உருக்கமான இடம்.

சித்திராவை திருமணம் செய்யப் போகிறான் என்று தெரிந்த பின் விமலா தன் உடம்பைக் கொடுத்துத் திசைதிருப்பிவிட முயற்சிக்கும் இடம் நம் வாழ்வின் அபத்தத்தைக் கீறிக்காட்டு கிறது. இறுதிவரையும் அவளின் கனவு வாழ்க்கைக்கு சிக்கா மலும் இறுதிவரை தன்னை சரணாகதி செய்யும் சிவாவைப் பிடிக்க முடியாமல் வெறுங்கையைப் பார்ப்பதும் நம் பொய் முகங்களை வெளிச்சத்தில் கொண்டுவந்து நிறுத்துகிறது. வேடமிட்ட மனிதர்கள் நிறைந்திருக்கிற உலகை நாம் காண் கிறோம்.

உமா ‘தொழிலு’க்குக் கிளம்புவதை சிங்காரம் தடுக்கிறான். அவள் இவனைப் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. இவன்தான் அவளை இவ்விதமாகப் பழக்கியவன். அவ் வப்போது வரும் தன்மானத்தாலும் இச்சையாலும் தடுக் கிறான், மோதல் நிகழ்கிறது. மண்ணெண்ணையை ஊற்றித் தீயிட முயல்கிறான். அந்தோ தீப்பற்ற உமா அவனை நெருப் புக்குள் இறுக்கி இருவருமாக மாய்கிறார்கள். ஒன்றின் விடுத லையும் ஒன்றின் அதிகாரமும் மோதிக் கொள்கிற போராட் டம். வன்மமும் மூர்க்கமும் ஒருவரை ஒருவர் கொல்லப் பார்க் கின்றன. அப்படியே நிகழ்கிறது. இந்த இடத்தில் மனித மனதின் ஒரு புதிரைக் கண்டடைந்துவிட்டார் கோபாலகி ருஷ்ணன். கோபால் பொதுவாகச் சம்பந்தப்பட்ட பாத்திரங் களின் முன் அத்தியாயங்களைவிட இரண்டாம் அத்தியாயங் களில் மனிதர்களை நிறைவான குணங்களையுடையவர் களாக உருவாக்கியிருக்கிறார். இது முதல் அத்தியாயங்க ளிலும் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது படைப்புக் கேட்டு நிற்கும் எதிர்பார்ப்பு.

உமா முதல் அத்தியாயத்தில் சிங்காரம் சொன்னதின் பேரில் ரத்தினவேல் செட்டியாருடன் இணைகிறாள். அது அப்படி நம்பும்படியாக இல்லை. ஆனால் தீக்குள் இருக்கும் உயிருக் காகப் போராடுவதும், தப்பித்துவிட நினைக்கிற கணவனை உன்னை மட்டும் விட்டுவிட்டா போவேன் என் வாழ்க்கையை அழித்தவனை நானே அழிப்பதற்கான அற்புத சந்தர்ப்பமாக நினைத்து அவனை இறுக்குவதும் பின் அத்தியாயத்தில் மிக அழுத்தமாக உருவாகியிருக்கிறது.

விமலா, திலகவதி, உமா, சாந்தி பின் அத்தியாயங்களில் உயிர்த்துடிப்போடு மாறுகிறார்கள். கோபாலின் எழுத்தில் பெண்ணிய நோக்கு இல்லை. இயல்பான பெண் எழுத்தாக இருக்கிறது. நாவலில் சில்லாவாறித்தனங்களின் உலகம் அதிகம். நல்ல எழுத்தாளன் அவற்றை மட்டுமே முன்நிறுத்த மாட்டான். தீமையாளர்களின் மத்தியில் கிழவி உணவு அருந் துவதை கிழவன் குறுநகையோடு சுட்டிக்காடுகிறான் பரந்தா மனிடம். கணவனைத் தூக்கி எறிந்துவிட்டுச் செல்லும் பூங்கொடி. இங்கு வேறொரு அன்புமயமான கோலம் காட்டப் படுகிறது. சோரம்மாளை மிரட்டி உருட்டும் சிங்காரம் ‘பசிக்கு தம்மா’ என்று சொல்கிற இடம். கண்ணம்மாவுக்கு அப்பச்சி வந்து இறங்கும் இடம். அன்பழகனின் உற்பத்தி விற்காமல் போக நெருக்கடி வருகிறது. அன்பழகன் செயலிழந்து அழுகிறான். அங்கு பணியாற்றிய பெண்கள் அழுகிற இடம். விமலாவின் அப்பா சிவாவைத் தேடி வருகிற இடம் எல்லாம் உன்னத சித்திரங்கள். சீரழிந்து கிடக்கும் உலகில் மிகச் சில மேன்மைகளை மோதவிட்டிருக்கிறார். அழுக்கின் சாக்கடை யிடையே ஒரு சில குன்றிமணிகள். இவைதான் வாழ்வுக்குப் பொருள் தருகின்றன.

தமிழுக்கு நல்ல காலம் என்றுதான் நினைக்கிறேன். இப்பொ ழுதுதான் தொழிலின் எழுத்து உருவாகி வருகிறது. சமுத்தி ரத்திடம், கு. சின்னப்ப பாரதியிடம், ராஜம் கிருஷ்ணனிடம் வெறுமனே கீழ் மேல் உலகாக சித்தரிக்கப்பட்டன. அவர்கள் எடுத்துக்கொண்ட தொழில் உழைப்பின் வலி தெரியாமலே சொன்னார்கள். வலியை வலியான மொழியில் எழுதுவது கி. ராஜநாராயணனுக்கும் வாய்க்கவில்லை. கண்மணி குணசே கரனிடம் வாய்த்திருக்கிறது. தொழிற்கூடத்தில் பெண்களின் கூந்தல் சிக்கிக் கோரமாகும் காட்சிகள், இடைவிடாது எந்தி ரங்களின் இரைச்சல், பெட்டிகளின் இடிபாடு, சிப்டுகள், இரவின் பரபரப்பு என தொழில் நகரம் அசலாக உருவாகி இருக்கிறது. அன்பழகன் கத்தரியைப் பிடித்து வெட்டிப் பழகு கிறான். உள்ளங்கை கொப்பளித்து விடுகின்றன. எரிச்சலை அடக்கிக்கொண்டு உப்புக் கொதிநீரில் கை வைக்கிறதும் நூல் இழையில் பட்டு விரல் நகங்களில் ஏற்படும் வலியையும் காண்கிறோம். தீப்பெட்டித் தொழிற்சாலை உலகை எழுதிய ராஜம்கிருஷ்ணன் மாந்தர்களின் விரல்களின் கருமருந்து ஒட் டுவதில்லை. புறங்கைகள், விரல்கள் காய்கட்டுவதில்லை.

உடம்பைக்காட்டி ஆட்களை வீழ்த்தலாம் என்று கருப்பக்கா, அருணா, பூங்கொடி போன்றோர்களும் உலவுகிறார்கள். பொருளாதார சமத்துவம் பெண்களை வேறொன்றாகத் திருப்பூர் மாற்றுகிறது. பாலியல் சுதந்திரம் வெகு இயல்பாகி விடுகிறது. கமல்படத்திற்கு பூங்கொடி எவனோ ஒருவன் சைக்கிளின் பின்னால் ஏறிக்கொள்கிறாள். பாக்யா, இந்திரா, காந்திமதி, சந்திரா ஆண்களை வசப்படுத்திக்கொள்கிறார் கள். திருப்பூர் வேறொரு உலகமாக இருக்கிறது. அங்கே வேறொரு மதிப்பீடு உருவாகியிருக்கிறது. பணமே ஆகப் பெரிய சக்தி என்பதுதான்.

கோபாலகிருஷ்ணன் திருப்பூரை ஒரு பருந்துப் பார்வையால் அளந்து விமர்சித்திருக்கிறார். சீட்டுக் கம்பெனிகளின் ஏமாற்று வித்தைகள், சினிமா எடுப்பதாகக் கூறி முதலா ளிகள் நடிகைகளை தன்வசப்படுத்தும் முயற்சிகள், சினிமாத் தியேட்டர்கள், பிராந்திக் கடைகள், புதிய புதிய கருவிகளின்

வருகைகள் எனப் பதிவு செய்கிறார். அவைகள் திருப்பூருக்கு வந்து செய்தி ருக்கிற சாதக பாதகங்களை விலகல் பார்வையில் விமர்சித்திருக்கிறார். சிறு சிறு கிராமங்கள் கட்டடங்களால் ஒன்றி ணைந்து திருப்பூர் தொழில் நகரமாகிற காட்சி, காடுகள், தோட்டங்கள் தொழில் நிறுவனமாக மாறுகிற காட்சி நாற்றமெ டுக்கிற திருப்பூர் காட்சி, காமம் கொந்த ளிக்கிற காட்சி எல்லாம் பதுங்கிய குரலில் விமர்சிக்கப்படுகின்றன.

'நீயே எனக்கொரு பாடம் அக்கா' என்று சுகுணா விமலாவைப் பார்த்துச் சொல் கிற தெளிவு, 'தங்கவிட்டாப் போதும் எழுந்திடுவேன்' என்று உறுதிகொள்கிற திருச்செல்வன், 'நீ கூப்பிட்ட ஓடனே படுக்கிற பொம்பளயன்னு நெனச்சயா' தவமணி டைபிஸ்ட்காரியின் கண்காணித் தலில் கிளம்பிய பேச்சு... என நாவலில் உருண்டு வருகின்றன.

துரோகத்தால் துரத்தப்படுகிற அன்பழ கன் (அப்புக்குட்டக் கவுண்டர்) ஆர்வத் தால் பைனான்ஸ் பணத்தை மழையோடு சென்று தருகிற வேகம் (திருச்செல்வன் + அன்பழகன்) தன் ஊர் மக்களை அழைத்து வந்து வாழ்வளிக்கும் மோகன் இப்படி நல்லவர்களும் தீயவர்களும் வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

ஆனாலும் அன்பு, பாசம், கருணை, காமம் அனைத்தும் பொருளுக்கு முன் மண்டியிடுகின்றன. மண் நாற்றமெடுக் கிறது. ஜாதியின் இருள் தொழில் நகரத் திலும் படிந்தபடியே இருக்கிறது. மதிப் பீடுகள் தோற்றோடுகின்றன. ஒரு பக்கம் நிம்மதியையும் மறுபக்கம் நிம்மதியின் மையையும் இந்த டாலர் சிட்டி விநியோ கித்தபடி இருக்கிறது. மணல்கடிகை மணலை மாற்றி மாற்றி அமைக்கிறது. நாட்ராய்ன் ஊரை விட்டோடி முதலாளியாக மாறுகிறான். அருணா உடலை விற்று காம்ளக்ஸ் கட்டுகிறாள். எல்லாமே பணத்தால் சுருக் கப்படுகிறது.



இந்த மனிதர்களுக்கு நெருக்கடிகள் வருகின்றன. அந்த நெருக்கடிகள் உச்சபட்சமான எல்லையைத் தொடுவ தில்லை. மனதில் கொந்தளிக்கின்றன, பின் அப்படியே அடங்கிவிடுகின்றன. நெருக்கடியின் வழியே வாழ்விற்கு வேறொரு அர்த்தத்தைக் கற்பிப்பவர்களாக இருப்பதில்லை. குமுறி அடங்கி பொருள் தேடவே மீண்டும் முனைகிறார்கள். ஒரு மேல்நாட்டு எழுத்தாளன் போல தான் இழைத்த துரோ கத்தைப் பாதிக்கப்பட்டவன் சொன்ன நொடியில் மாடியி லிருந்து விழுந்து தற்கொலை செய்து கொள்கிற நிலை இங்கு இல்லை. இங்கு தற்கொலை என்றால் காமத்தின் விளைவாலோ, பொருளாதாரத்திலோ நிகழ் கின்றன. அறத்தை முன்நிறுத்தி யாரும் அந் நிலைக்குச் செல்வதில்லை.

தறிக்கூடமாக இருந்த திருப்பூர், தொழிற்கூ டமாகத் தன் முகத்தை மாற்றியிருக்கிறது. அதன் சாதக பாதகங்களை முடிந்த மட்டும் உண்மையாகவே பதிவு செய்திருக்கிறார். ஊர் மாறியது போலவே குணவிசேசங்களும் மாறி உருவாகியிருக்கின்றன என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டியுள்ளார். மொத்தத்தில் நேற்றைய உலகமல்ல திருப் பூர். நேற்றைய மனிதர்களும் நடமாட வில்லை. புதிய மனிதர்கள். நவீன குணம் படைத்த மனிதர்கள். உருமாற்றம் அடைந்த வேறு வகையான மனிதர்கள். மதிப்பீடு களைத் தலைகீழாக மாற்றும் மனிதர்கள். இவர்களின் அறம் என்பது பணம் சம்பா தித்தல்.

திருப்பூர் பெருநகரம். சுற்றுக் கிராமங்கள் இணைந்து நகரமாகிறது. பிழைப்புத்தேடி எட்டுத்திக்குகளிலிருந்தும் மனிதர்கள் வந்து இணைகிறார்கள். இம்மனிதர்கள் மீது படிந் திருக்கும் மெல்லிய மர்மத் திரையை விலக் குகிறார். வாழ்வின் அத்தனை முரண்பாடு களும் இந்தப் பெருநகரத் தெருக்களில், வியாபார நிலையங்களில், வீடுகளில் மனி தர்களிடையே ஊடாடியபடியே இருக்கின்றன.

சிடுக்குகள், குழறுபடிகள், முரண்கள், ஏமாற் றுத்தனங்கள், காமக்களியாட்டங்கள், வீழ்ச் சிகள், ஏற்றங்கள், துரோகங்கள், நம்பிக்கை கள், நம்பிக்கை இழப்புகள், பேச்சுகளில் விரோதங்கள், பட்டும்படாத நட்புகள், பித்த லாட்டங்கள், சுதந்திரத் தேர்வுகள், பிக்கல் பிடுங்கல்கள், கசப்பான உறவுகள் என வாழ்வின் நூறுவிதமான சிக்கல்கள் இந்த நாவலில் பேசுபொருளாகின்றன. பல்வேறு பிரச்சினைகள் அவிழ்கின்றன. காரணகாரி யங்கள் விவாதத்திற்கு உள்ளாகின்றன. இவை செறிவாகக் கூடிவந்து மிக ஆழம் கூட்டுகின்றன. இது நாவலின் பலம். பலவீனமாக நான் பார்ப்பது பிரச்சினைகள் முட்டி மோது கின்றன. அதற்கான அடிப்பரப்பு அழுத்தமான பின்னணியில் இயல்பான மலர்ச்சியில் உருவாகி வரவில்லையோ எனத் தோன்றுகிறது. விளைச்சலின் அறுவடை சிறப்பு. அதன் தாள்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. தானியங்கள் தாள் களில் இருந்தே விளைகின்றன.



venugopal@thaiveedu.com



# மேடையேற்றங்களைத் தூண்டும் பிரத்தியேகக் காட்சி

## துஷி ஞானப்பிரகாசம்

க. பாலேந்திரா அவர்கள் பல நாடுகளில் பலமுறைகள் மேடையேற்றி அந்த மேடையேற்றங்களால் தமிழ் மக்களிடையே பிரபலமடைந்த ஏழு நாடகங்களின் தொகுப்பாக 'பிரத்தியேகக் காட்சி - ஏழு நாடகங்களும் பதிவுகளும்' என்ற நூல் 'எங்கட புத்தகங்கள்' வெளியீடாக வெளிவந்துள்ளது.

இந்த நூல் பாலேந்திரா-ஆனந்தராணி இணையரின் ஐம்பது ஆண்டுகாலக் கலைப்பயணத்தை அடையாளப்படுத்துவதாக அமைந்திருப்பது தனிச்சிறப்பு. இந்த ஐம்பது ஆண்டுகளிலே இவர்கள் தமிழ் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு வார்த்தைகளால் அளக்கமுடியாதது. அந்தச் சேவைக்காகவும் நாடகங்களின் மீதும் தமிழ்மொழிமீதும் ஆர்வமுள்ளவன் என்ற வகையிலே அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

இது ரொறன்ரோவிலே ஏறக்குறைய அனைவருமே Blue Jays அணியினதும் தளப்பந்து விளையாட்டினதும் ரசிகர்களாக மாறியிருக்கின்ற காலம். தளப்பந்திலே Three Strikes என்பது முக்கியமான விடயம். எனக்கும் பாலேந்திரா அவர்களுக்குமிடையிலான இதுவரையான உறவு Two Strikes என்ற நிலையிலே இருக்கிறது.

நான் அவருடைய எல்லா நாடகங்களையும் பார்த்தவனில்லை. அவர் ரொறன்ரோவிற்கு கலைப்பயணங்களை மேற்கொண்டு நாடகங்களை மேடையேற்றியபோது, இரண்டுமுறைகள் அவருடைய நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருக்கிறது, Two Strikes.

பிரத்தியேகக் காட்சி நூலின் அறிமுக நிகழ்வு ரொரன்ரோவின் ஏஜின்கோர்ட் சமூக நிலையத்திலே நவம்பர் மாதம் இரண்டாம் திகதி இடம்பெற்றது. அவர் ரொரன்ரோவில் நிகழ்த்தும் நூல் வெளியீட்டில் பங்கெடுத்துக்கொள்ள எனக்கு வாய்ப்பளிப்பத்தது இது இரண்டாவது முறை, Two Strikes.

இவற்றைவிடவும் முக்கியமான காரணமொன்று இருக்கிறது. அதற்கு ஒரு பதினெட்டுப் பத்தொன்பது ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லவேண்டும். நான் நெறியாள்கை செய்வதற்காக நாடகப்பனுவல்களைத் தேடிக்கொண்டிருந்தபோது, நான் ஆங்கிலப் பிரதிகளை வாசித்து விரும்பித் தேர்வு செய்த நாடகங்களை, 'இது பாலேந்திரா செய்த நாடகம். ஆகவே வேண்டாம்' என்று என் நண்பர்கள் இரண்டுமுறை தடுத்திருக்கிறார்கள், Two Strikes.

அவற்றில் ஒன்று Bertolt Brechtd-இன் The Exception and the Rule என்ற நாடகம். அதை 'யுக தர்மம்' என்ற பெயரிலே பாலேந்திரா அவர்கள் பலமுறை மேடையேற்றியிருப்பதைப் பின்னர் அறிந்துகொண்டேன். அந்தப் பனுவல் ஏற்கனவே நூலுருப் பெற்றுள்ளது என்பதால் இந்தத் தொகுப்பிலே இடம்பெறவில்லை என பாலேந்திரா தெரிவிக்கிறார். மற்றையது Harold Pinter-இன் One for the Road என்ற நாடகம். அது 'போகிறவழிக்கு ஒன்று' என்ற பெயரிலே இந்தத் தொகுப்பிலே இடம்பெற்றிருக்கிறது.

நண்பர்கள் என்னைத் தடுத்ததற்கு 'பாலேந்திரா செய்யேக்கை நல்லாய் இருந்த நாடகத்தை இவன் செய்துகெடுத்துப் போடுவான்' என்றபயமும் அதனால் நான் அடையப்போகும் அவப்பெயரிலிருந்து என்னைக் காப்பாற்றவேண்டும் என்ற நல்லெண்ணமுமே காரணம் என எனக்குத் தெரிந்திருந்தபோதும், அந்த நாடகங்களை மேடையேற்றமுடியாது போனது எனக்கு ஏமாற்றமளித்தது. ஏனெனில், ஒரு நாடகப் பனுவலின் முழு வீச்சும், தாற்பரியமும் அதைப் பல்வேறு நெறியாளர்கள் தத்தமதுகற்பனைக் கண்களூடாகக் கையாளும்போதே வெளிப்படும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கைகளில் ஒன்று.

உதாரணமாக, 2002-ஆம் ஆண்டு ஒன்பதாவது அரங்காடலிலே பி. விக்னேஸ்வரன் அவர்கள் இயூஜீன் அயனெஸ்கோவின் Les Chaises என்ற நாடகத்தை நாற்காலிகள் என்ற பெயரில் தமிழிலே மேடையேற்றினார். அது மனதை அழுத்துகின்ற சோகமும் இயலாமையும் சொட்டும் அபத்த நாடகமாக இருந்தது. அதே நாடகத்தைச் சில வருடங்களின் பின்னர் 2006-இலேரொறன்ரோவிலே இயங்குகின்ற தொழில்முறை நாடகக் குழுவான Soul Pepper Theatre Company, 'The Chairs' என்ற பெயரிலே ஆங்கிலத்திலே மேடையேற்றியது.

அந்த மேடையேற்றம் நகைச்சுவை ததும்பும் யதார்த்த நாடகம் போல அமைந்திருந்தது. இந்த இரண்டிலே அரங்காடலின் அளிக்கையே எனக்குப் பிடித்திருந்தது என்பதற்கு அப்பால், அந்த ஒரு நாடகப்பனுவலை இருவேறு கோணங்களிலிருந்து அணுகலாம் என்பதை உணர்த்துவதாக இந்த அனுபவம் இருந்தது. அதேபோல, Harold Pinter-இன் The Homecoming நாடகம் பற்றியும் ஒரு சுவையான சம்பவம் பதிவிலே இருக்கிறது. அந்த நாடகத்தின் மையக் கரு ஒரு தம்பதியர் தத்த மது இறந்துபோன பெற்றோருடன் கொண்டிருந்த உறவு, எப்படி அவர்கள் இருவருக்குமிடையேயான உறவைப் பாதிக்கிறது என்பது. நாடகப் பனுவலிலே பெற்றோரின் பாத்திரங்கள் இல்லை. ஆனால் ஒரு மேடையேற்றத்திலே நெறியாளர் இறந்துபோன பெற்றோரை ஆவிகளாக மேடையிலே அலையவிட்டிருக்கிறார். இந்த மேடையேற்றத்தைப் பார்க்கப் போன நாடகாசிரியர் Pinter நெறியாளரிடம் அந்த ஆவிகள் யார் என வினவ, அவர்கள்தான் இறந்துபோன பெற்றோர்கள் என நெறியாளர் பதில் சொல்லியிருக்கிறார். Pinter எந்த மறுப்பும் சொல்லாமல் நாடகத்தை முடியும் வரை பார்த்துவிட்டு அமைதியாக வெளியேறியிருக்கிறார். இது மிகவும் நகைப்புக்கிடமான உதாரணம் என்றாலும், இதிலே முக்கியமானது ஒரு பனுவலை வெவ்வேறு நெறியாளர்கள் வெவ்வேறு விதமாக அணுகுவார்கள் எனவே இது ஊக்குவிக்கப்படவேண்டும் என்ற விடயமே.




அந்தவகையிலே 'பிரத்தியேகக் காட்சி - ஏழு நாடகங்களும் பதிவுகளும்' என்ற இந்த நூலைக் கையிலெடுத்தபோது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. காரணம், இந்த ஏழு பனுவல்களையும் பதிவேற்றவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் இவைதொகுக்கப்படவில்லை என்பதையும், இந்த ஏழு பனுவல்களும் இன்னும் பல்வேறு முறைகள் பல்வேறு நெறியாளர்களால் மேடையேற்றப்படவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இவை தொகுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தத் தொகுப்பிலே இடம்பெற்றுள்ள நாடகங்கள் பேசும் விடயங்கள், ஈழத்தமிழர்களுக்கு மிகவும் அண்மையானவையாக இருக்கின்றன. நாடகங்களிலே கையாளப்படும் மொழிநடை, குறிப்பாக வேற்று மொழிகளிலிருந்து தமிழுக்குக் கொண்டுவரப்பட்ட ஐந்து நாடகங்களினதும் மொழிநடை - அந்நியத்தன்மையுடன் மொழியார்வலர்களை மட்டுமே சென்றடையக்கூடியதாய் இல்லாமல், பரவலாகப் பார்வையாளர்களை ஈர்க்கக்கூடியதாக உள்ளது. பாலேந்திரா தனது தொகுப்புரையிலே, 'இவை மொழிபெயர்ப்பு அல்ல. தமிழ் மொழியாக்கங்கள்' என விளக்குகிறார். இந்தத் தன்மையையே 'பண்பாட்டுமீள் சூழமைவாக்கம்' எனக் குறிப்பிடுகின்றார். இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள கலாநிதி நவதர்ஷினி கருணாகரன். மேலும், நாடகங்களின் நீளங்கள் குறுகியமைந்து கச்சிதமான மேடையேற்றங்களுக்கு உகந்தவையாக இருக்கின்றன. அநேகமான நாடகங்களோடு இணைக்கப்பட்டிருக்கும் மேடையேற்றங்களின் படங்கள், பெரும்பாலும் வண்ணத்திலமைந்து நாடகமாந்தரின் ஒப்பனை பற்றித் தெளிவாகவும்,மேடையமைப்புப் பற்றி ஓரளவும் முக்கியமான தகவல்களைத் தெரிவிப்பனவாக உள்ளன. ஒவ்வொரு நாடகமும் மேடையேற்றப்பட்ட காலமும் இடமும் பற்றி நூலிலே சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் வரலாற்றைப் பதிவுசெய்வதாய் மட்டும் அல்லாமல், தொடர்ச்சியை வேண்டுவதாய் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு நாடகத்தின் மேடையேற்றம் பற்றியும் வெளியானவிமர்சனங்களின் பகுதிகளை இணைத்திருப்பதென்பது இந்த நாடகங்கள் வெவ்வேறு பார்வையாளர்களால் எவ்வாறு உள்வாங்கப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்துவதாய் அமைந்திருக்கின்றது. இந்தப் பனுவல்கள் வெளியிடப்படுவது புதிய புதிய மேடையேற்றங்களைத் தூண்டவே என்பதையே இவை அனைத்தும் சுட்டிநிற்கின்றன. இவற்றுக்கு அப்பாலும் சந்தேகமெதுவும் இருந்துவிட இடமளிக்காது 'இந்த நாடகப் பிரதிகள் பலராலும் பல்வேறு தடவைகள் ஈழத்திலும் பல நாடுகளிலும் மேடைகாணும் என்பது எனது நம்பிக்கை. இதை நூலாக்குவதன் நோக்கமும் இதுவே' என பாலேந்திரா அவர்கள் தனது தொகுப்புரையிலே பதிவுசெய்கிறார். அவரின் இந்த நம்பிக்கையை, இந்த எதிர்பார்ப்பை, கடந்த ஐம்பது ஆண்டுகளாக, குறிப்பாக இலண்டனுக்குப் புலம்பெயர்ந்த பின், பாலேந்திரா - ஆனந்தராணி இணையர் உலகளாவிய வகையில் மேற்கொண்டு வந்த தமிழ் நாடக விருத்திப் பணியின் தொடர்ச்சியாகவே பார்க்கமுடிகிறது. உலகெங்குமுள்ள தமிழ் நாடக நெறியாளர்களுக்கான அறைகூவலாகவும் இதை எடுத்துக்கொள்ளலாம்.

1996-லே மனவெளி கலையாற்றுக்குழு கனடாவிலே தோன்றுவதற்கு உந்துசக்தியாக விளங்கிய விடயங்களில் ஒன்று பாலேந்திரா அவர்களின் தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் ரொறன்ரோவிலே 1994-லே நிகழ்த்திய நாடக மேடையேற்றங்களே என மனவெளி நண்பர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். அந்த ஆரம்பத்தைத் தொடர்ந்து, பல ஆண்டுகள் மனவெளியும், மனவெளி அடையாளம் காட்டிய மற்றும் மனவெளி உருவாக்கிய பல நாடகர்களும் ரொறன்ரோவிலே தீவிரமான தமிழ் நாடகச் செயற்பாடுகள் தொடர்வதற்குக் காரணமாய் இருந்திருக்கிறார்கள். பல்வேறு நாடகக் குழுக்கள் ஊடாக இந்தச் செயற்பாடுகள் வீரியத்துடன் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரே ஆண்டில் பல்வேறு நாடக மேடையேற்றங்கள் நடைபெற்ற பொற்காலம் அது. இப்பொழுது அந்தச் செயற்பாடுகள் மந்தமடைந்திருக்கின்றன என்பதே கசப்பான உண்மை. இந்த நிலையிலே, இப்போது இந்த நூலின் வருகையும், இந்த நூலில் இடம்பெற்றுள்ள நாடகங்களின் தொடர்ச்சியான மேடையேற்றங்கள் பற்றி பாலேந்திரா அவர்கள் வெளியிட்டுள்ள நம்பிக்கையும், ரொறன்ரோ தமிழ் நாடகச் சூழலிலே இன்னுமொரு பாச்சலைத் தூண்டவேண்டும் என்பது எனது அவா. அதன் ஒரு அங்கமாக இந்தத் தொகுப்பிலே இடம்பெற்றுள்ள ஒரு பனுவலையேனும் நெறியாள்கை செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டவேண்டும் என்பது எனது கனா. அதுவே எங்கள் இருவருக்குமிடையிலான உறவிலே நான் விரும்பி எதிர்பார்க்கும் Third Strike.



dushy.gnanapragasam@thaiveedu.com

# ஆகிதம்

## சிறுகதைகளின் தொகுப்பு

# நவமகனின் தொடரும் இலக்கியப் பயணம்

■ ந. சண்முகரத்தினம் (சமுத்திரன்)

'போக்காளி' நாவலின் (2022) படைப்பாளியாக அறியப்பட்ட நவமகனின் முதலாவது சிறுகதைகளின் தொகுப்பு 2024, செப்ரெம்பரில் வெளிவந்தது. ஒட்டுமொத்தமாக மதிப்பிடும்போது, 'போக்காளி' ஐரோப்பாவை மையப்படுத்திய ஈழப் புலம்பெயர் இலக்கியத்திற்கு ஒரு பயனுள்ள பங்களிப்பு என்பதே எனது கணிப்பு. முதலில் இது பற்றிச் சில வார்த்தைகள். ஐரோப்பாவிற்குப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் வாழ்வியலின் யதார்த்தங்களை எளிய வடிவிலே கலைத்துவமாகச் சித்திரிப்பதே தனது நோக்கமென்பதை 'போக்காளி' நாவலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையில் காணமுடிகிறது. அந்த நூலை வாசித்தபோது புனைகதை சொல்லியுடன் ஆவணவியலாளரும் கூடவே பயணிக்கிறார் எனும் உணர்வைத் தவிர்க்க முடியவில்லை. தான் வாழும் சமூகச் சூழலையும் அங்கு காணும் மனிதரையும் வாழ்வியலையும் நுணுக்கமாக அவதானிக்கும் பழக்கம் சிறந்த புனைகதை சொல்லிகளுக்குரிய பண்பாகும். அதேபோன்று இந்த ஆற்றல் சிறந்த ஆவணவியலாளருக்கும் இன்றியமையாததொன்றாகும். இங்கு கேள்விக்குரிய விடயம் என்னவெனில் யதார்த்தங்களைக் கலைத்துவமாகச் சித்திரிப்பதில் நவமகனின் ஆற்றல் எத்தகையது என்பதே.

எனது அபிப்பிராயத்தில், உள்நாட்டுப் போர்களின் விளைவான புலப்பெயர்வுகள் பற்றிய ஆக்க இலக்கியங்களின் அழகியல்சார் நியமங்களை, மதிப்பீடுகளைப் பொறுத்தவரை இது ஒரு திறந்த கேள்வியாகக் கருதப்படுவதே நியாயமானதாகும். நாம் நேரடியாக அனுபவித்த, நமக்கு நெருக்கமானவர் மற்றும் நாம் சார்ந்திருக்கும் சமூகத்தவரின் அனுபவங்களைப் புனைகதையாகப் பார்க்குமிடத்து அதன் கலைத்துவப் பெறுமதியை நாமே எடை போடுவது சுலபமான அப்பியாசமல்ல என நம்புகிறேன். சமீப காலங்களில் குறிப்பாக மூன்றாம் உலகம் சார்ந்த சமூகங்களிடமிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் இத்தகைய படைப்புகளை உள்வாங்கும் வகையில் கலை இலக்கிய விதிமுறைகளும் நியமங்களும் விரிவாக்கப்படவேண்டும் எனும் கருத்தும் உலக மட்டத்தில் வெளிப்படுவதைக் காணலாம். சமகாலத் தமிழ் இலக்கியப் பரப்பில் அரை நூற்றாண்டுக்கு நெருங்கிய வரலாற்றைக் கொண்ட ஈழப் புலம்பெயர் இலக்கியம், புதிய வகைமைக்குரிய (genre) தன்மைகளைக் கொண்ட பங்களிப்பு என்பதை மனங்கொள்ளல் தகும். ஈழத் தமிழர்கள் பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந்திருப்பதும் அவர்கள் சர்வதேச வலைப்பின்னல்கள் வழியாகத் தேசங்களைக் கடந்த சமூக உறவுகளைக் கொண்டிருப்பதும் இந்த வகைமையை வரையறுக்கும் சிறப்பம்சமாகும். இதன் விருத்திப் போக்கில் படைப்பாக்கப் பரிசோதனைகளும் இடம் பிடிப்பது வரவேற்கப்பட வேண்டியதே.

இந்தத் தொகுப்பில் அடங்கும் பத்துக் கதைகளில் ஏழு நவமகன் வாழும் நோர்வேயிலும் மற்றவை ஜேர்மனி, இலங்கை மற்றும் இங்கிலாந்திலும் இடம்பெறுகின்றன. இந்தக் கதைகளின் கருப்பொருட்கள் புகலிட ஈழத் தமிழரின் வாழ்வியலின் மாற்றப் போக்குகளின் சில முக்கிய அம்சங்களை உள்ளடக்குகின்றன. கருப்பொருட்களைப் பொறுத்தவரை அவை 'போக்காளி' நாவலுடன் ஆரம்பித்த படைப்பிலக்கியப் பயணத்தின் தொடர்ச்சியைக் குறிப்பவையெனக் கூறலாம். 1980-கள், 1990-கள் இலங்கைத் தமிழரின் ஐரோப்பா நோக்கிய புலப்பெயர்வுகளின் உச்சகட்டமென்றால் அதற்குப் பின்னைய காலம் நீண்டகால அல்லது நிரந்தர வதிவிட உரிமைக்கு வேண்டிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் மற்றும் அதைத் தொடர்ந்து குடியுரிமை கோரும் போக்கின் காலகட்டமெனலாம். இது புகலிட சமூகத்தின் விளிம்புகளில் நிச்சயமற்ற



ஊசலாடும் இருப்புகளிலிருந்து அந்த சமூகத்திற்குள் பிரவே சிப்பதற்குரிய ஆற்றலுடைமைகளை (capabilities) அடை யும் முயற்சிகளைக் கொண்ட நிலைமாற்றத்தின்காலம்.

இந்த இடைக்காலத்தில் புகலிட சமூகத்துடனான உறவு களும் பல கட்டங்களுக்கூடான கரடுமுரடான பரிணாமப் போக்கின் அம்சங்களாக உருவெடுக்கின்றன. 'அகதி' எனும் வடிவில் அழையா விருந்தினராக வந்த நிலையிலிருந்து (வெளிநாட்டுப் பின்னணி கொண்ட) குடிமகன் அல்லது குடி மகளாகச் சட்டபூர்வமாக அனுமதிக்கப்படும் வரையிலான பயணம் உறுதியின்மையும் பதட்டங்களும் மிக்க இருப்புகளி லிருந்து, நிலையான ஒரு வாழ்க்கையை வகுக்க உதவும் சூழலை அடையும் அனுபவங்களின் தொடராகிறது. சந்ததிக ளுக்கூடாகத் தொடரும் இந்த வரலாற்றின் பல்வேறு அம் சங்களை நவமகனின் கதைகள் பிரதிபலிக்கின்றன.

புகலிட சமூகத்துடனான உறவுகளைப் பொறுத்தவரை முத லாம் சந்ததியினருக்கும் புகுந்த நாட்டில் பிறந்த அடுத்த சந்த தியினருக்குமிடையிலான வேறுபாடுகள் மற்றும் முக்கியமாக விழுமியங்கள்சார் முரண்பாடுகள் பல கதைகளுக்கூடாக வெளிவருகின்றன. ஐரோப்பிய புகலிடத்தின் விளிம்புகளில் இருந்து அந்தச் சமூகத்தில் பாதுகாப்பான இருப்பைத் தேடும் பயணங்களில் பெற்றோரும் பிள்ளைகளும் வெவ் வேறு வாழ்முறைகளின் பிரதிநிதிகளாகின்றனர். இந்த வேறு பாடு புலம்பெயர்ந்த தமிழ்க் குடும்பத்தின் உள்ளார்ந்த உற வுகளில் புதிய முரண்பாடுகளின் மூலமாகிறது. இந்த நிலை மைகளில் இவர்களுக்கும் தாய்நாட்டில் விட்டுவந்த மூத்த சந்ததியினருக்கும் இடையிலான உறவு பாதிப்புக்குள்ளா கின்றது. இன்னொரு மட்டத்தில் உள்நாட்டுப்போரின் அர சியல் மற்றும் உளவியல் சார்ந்த தாக்கங்களும் புலம் பெயர்ந்த தமிழரிடையிலான உறவுகளைப் பாதிக்கின்றன. காலப்போக்கில் புகலிடத் தமிழ் சமூகத்திற்குள் கல்வி, தொழில் மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றின் அடிப் படையில் சமூக ரீதியான வேறுபடுத்தல் நடைபெறுகிறது. இந்த மாற்றப்போக்கின் விளைவாக வர்க்கம், வாழ்வியல் விழுமியங்கள் மற்றும் சமூக அந்தஸ்து அடையாள உரு வாக்கத்தில் தீர்க்கமான பங்கினை வகிக்கின்றன.

இந்தப் பரிமாணங்களின் பல்வேறு அம்சங்களை நவமகனின் கதைகள் காட்சிப்படுத்துகின்றன. இந்த வகையில் நோர் வேயை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ள ஏழு கதை களும் கூடுதலான பங்கினை வகிக்கின்றன. இவற்றில் சில வற்றின் கருப்பொருள்கள், உப கருப்பொருள்கள், வடிவம் மற்றும் நீளத்தைப் பொறுத்தமட்டில் குறுநாவல்களுக்குரிய தன்மைகளைக் கொண்டுள்ளன. குறிப்பாக, ஆகிதம் மற்றும் தூயதுணைகள் எனத் தலைப்பிடப்பட்டுள்ள கதைகள் இத் தகைய தன்மையை வெளிப்படுத்துகின்றன. இவை சிறுகதை யின் உள்ளடக்க, உருவ வரம்புகளை மீறும் பரிசோதனை முயற்சியா? எனும் ஆக்கபூர்வமான கேள்வியும் வாசகர் மனதில் எழக்கூடும். நவமகன் சிறுகதை எழுதும்போதும் சில சந்தர்ப்பங்களில் நாவல் படைக்கும் அகநிலையின் செல் வாக்கிற்கு வசப்படுகிறாரா? என எண்ணவும் தோன்றலாம். எவ்வாறாயினும் கதைகள் வாசகனின் ஆர்வத்தை ஈர்க்கும் நடையையும் அம்சங்களையும் கொண்டுள்ளன. இந்தக் கதைகளை வாசித்தபோது பல இடங்களில் கண்கள் கலங் கின அதேபோல் பல இடங்களில் தரமான நகைச்சுவை யையும் அனுபவிக்க முடிந்தது. சிந்தனையையும் விமர்சனத் தையும் தூண்டும் கருத்துகளையும் சந்திக்க நேர்ந்தது.

முதலாம் சந்ததி கதைமாந்தர்கள் பேசும் யாழ் பிரதேச வழக்கு அந்தப் பாத்திரங்களின் உண்மைத்தன்மைக்கு வலு சேர்க்கிறது. புனைவு இலக்கியத்தில் இது ஒரு முக்கிய அம்ச மென்பது அறியப்பட்டதாகும். ஆயினும் இது யதார்த்தபூர் வமான பாத்திரங்களை நடமாடும் கேலிச்சித்திரங்களாகத் தரம் குறைக்காத வழியில் கையாளப்படுவதும் முக்கிய மாகும். இந்தக் கதைகளில் அத்தகைய குறைபாடின்றிப் பிர தேசவழக்கைப் பேசும் பாத்திரங்களைப் படைத்துள்ளார் நவமகன். ஆனால் ஐரோப்பாவில் நிலவும் நிறவாதத்தை எதிர்க்கும் ஒரு தமிழனில் உறைந்திருக்கும் நிறவாதம் பற்றிச் சொல்ல வரும் 'உபதேசிகள்' எனும் தலைப்பிலான கதை யில் மனிதநேயத்திற்குக் கொடுக்கப்படும் விளக்கத்தின் குறுகிய உள்ளடக்கம் மற்றும் நிறவாத எதிர்ப்புப் பற்றிய புரிந்துணர்வு பற்றிக் கேள்விகள் எழுகின்றன. இங்கு தொடப் பட்டுள்ள விடயங்களை மனதில் கொண்டு இந்தத் தொகுப் பின் நான்கு கதைகளுக்குள் மேலும் சற்று விவரமாகச் செல்வோம்.

'அஸ்தரும்' எனும் தலைப்பிலான கதை தமது விருப்பத் திற்கு மாறாகப் பிள்ளைகளின் நிர்ப்பந்தத்தால் நோர் வேய்க்கு வந்து இறுதியில் முதியோர் காப்பகத்தில் தனிமை யால் வாடும் பெற்றோர்களின் அனுபவங்களை உருக்க மாகச் சித்திரிக்கிறது. நடக்க முடியாத நிலையில் சக்கர நாற் காலியில் அமர்ந்திருக்கும் பார்வதி ஆச்சி தன் ஏமாற்றத்தை யும் வேதனையையும் தேவாவுடன் பகிர்ந்து கொள்கிறார். 'பிள்ளைகளும் மூண்டு மாதத்தில திருப்பி அனுப்பிவிடுவம் எண்டு சொன்னபடியால்தான் ராசா நாங்களதை நம்பிக் கொண்டு வெளிக்கிட்டனாங்கள். ஆனா இஞ்ச வந்ததுமே பிள்ளைகளெல்லாம் ஒண்டாச் சேர்ந்து எங்களை மறிச்சுப் போட்டுதுகள். அங்க போனால் கொள்ளிவைக்கக்கூட தாங் கள் வரமாட்டினமாம் எண்டு வேற வெருட்டிச்சுதுகள்.' தற் போதைய நிலையில் 'பேரப்பிள்ளையளின்ர முகத்தைப் பாக்க முடியுதில்ல எண்டதுதான் கவலை' என வருந்துகிறார். கூட வந்த கணவரையும் இழந்து பிள்ளைகளுடன் நெருக்க மான தொடர்பும் இன்றி நோர்வீஜிய மொழியும் தெரியாத வராக முதியோர் காப்பகத்தில் வாழும் ஆச்சிக்கு உதவி யாளாயிருக்கும் எரித்திரியப் பெண்ணான அஸ்தர் ஒரு அற்பு தமான பாத்திரம். அவள் ஆச்சியுடன் தொடர்பு கொள்வதற் காகத் தனது நண்பனான தேவாவிடம் தமிழ் பேசக் கற்றுக் கொள்கிறாள்.

ஆச்சியின் கதையைக் கேட்ட தேவா ஊரில் தனது தாய் குடும்பத்தவருடன் நிம்மதியாக வாழ்வதை நினைத்து ஆறு தலடைந்த போதும் தனது மனைவி தற்காலிகமாக நோர் வேய்க்கு வந்திருக்கும் தாயை நிரந்தரமாகத் தங்க வைப்பது பற்றி அவனுடன் ஆலோசிப் பதை நினைவுகூருகிறான். உடனே அவளைத் தொலை பேசியில் அழைத்து 'மாமியை



இங்க வைச்சிருக்க வேண்டாம் திருப்பி அனுப்புவம்' எனச் சொல்கிறான். அதற்கு அவள் 'ஏன்? உங்கட அம்மா எண்டால் இப்பிடிச் செய்வீங்களே?' எனக் கேட்கிறாள்.

பார்வதி ஆச்சியின் கதை நவீன அபிவிருத்தியடைந்த நாடுகளின் தொழிலாள மற்றும் நடுத்தர வர்க்கங்களின் - அதாவது ஊதிய உழைப்பாளரான பெரும்பான்மைப் பொது மக்களின் - வாழ்வியலின் பொருள்சார் நிர்ப்பந்தங்கள் குடும்ப உறவுகள் மீது செலுத்தும் தாக்கம் பற்றிய முக்கியமான செய்தியைச் சொல்கிறது. இது ஆச்சியின் பார்வையில் இவ்வாறு வெளிப்படுகிறது. ' ஓ... வசதியாத்தான் இருக்குதுகள். ஆனா, நிம்மதியா இருக்குதுகளே? கார், காணி, வீடு எண்டு அளவுக்கு அதிகமா ஆசப்பட்டுக் கடனுகளை ஏத்திப்போட்டு அதை அடைக்கிறதுக்கு வேலை வேலை எண்டெல்லோ ஓடித்திரியுதுகள்.'

தான் முதியோர் காப்பகத்தில் விடப்பட்டிருப்பது தனது பிள்ளைகள் திட்டமிட்டுச் செய்த ஒரு சதியோ அல்லது அவர்கள் வாழும் சமூகத்தில் ஒரு விதிவிலக்கான செயலோ அல்ல என்பதை ஆச்சி புரிந்து கொண்டார் போலும். தேவாவின் தாய்க்கு ஊரில் வாழக் கிடைத்துள்ள குடும்ப உறவும் வசதியும் புலம் பெயர்ந்த பிள்ளைகளின் பெற்றோர் எல்லோருக்கும் கிடைப்பதில்லை என்பதும் யதார்த்தம் அல்லவா? அங்கும் முதியோர் காப்பகங்களின் தேவை அதிகரித்து வருவதும் உண்மை அல்லவா?

இந்த நூல் என் கைக்குக் கிட்டியபோது அதன் தலைப்பு எனக்குப் புதிராகவே பட்டது. 'ஆகிதம்' எனும் சொல்லை முன்னர் பார்த்ததுமில்லை கேட்டதும் இல்லை. அந்தத் தலைப்பிலான கதையை ஆவலுடன் வாசித்தேன். ஆயுதம் எனும் சொல்லை ஆகிதம் எனத் தப்பாக உச்சரிப்பவரும் போர்க்கால ஆயுதக் கலாசாரத்தினால் சிறுவயதிலேயே ஈர்க்கப்பட்டு ஒரு இயக்கத்தில் இணைந்து அதன் சார்பில் வேறொரு இயக்கத்தவர்களை சுட்டுக் கொல்வதில் ஈடுபட்டவரும் பின்னர் நோர்வேய்க்கு அகதியாக வந்தவருமான லோகு இந்தக் கதையில் ஒரு முக்கிய பாத்திரம். பதினாறு வயதையும் தாண்டாத லோகு பங்குபற்றிய அந்தக் கொலையாடலின் இரத்த வெள்ளத்தில் உயிர் பிழைத்த போதும் அந்தக் கொடிய அனுபவத்தால் மனநலம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் அதே நோர்வேயில் தஞ்சம் பெற்று குணமைடைந்து தனக்குச் சிகிச்சையளித்த நோர்வீஜிய மனநல வைத்தியர் ரீட்டாவைக் காதல் மணம் செய்து தமிழர்கள் வாழும் பகுதிகளைத் தவிர்த்து மிகத் தொலைவில் வட நோர்வேயில் முப்பத்தைந்து வருடங்களாக வாழ்ந்து வரும் சத்தியநாதன்தான் இந்தக் கதையின் பிரதான பாத்திரம். அவனை மையப்படுத்தியே சம்பவங்களையும் உரையாடல்களையும் அவனுடைய நெருங்கிய நண்பன் கேசவநாதனின் நினைவுமீட்சியாகக் கதையைப் பின்னியுள்ளார் நவமகன்.

தனது குடும்பப் பிரச்சினைகளைப் பகிர்ந்து ஆலோசனையும் ஆறுதலும் பெறும் எதிர்பார்ப்புடன் தன் நம்பிக்கைக்குரிய நண்பனைத் தான் வாழும் ஒஸ்லோவிற்கு அழைத்திருந்தான் கேசவநாதன். இருவரும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நோர்வேயில் வாழ்ந்த போதும் வேறுபட்ட சமூகப் பார்வையையும் வாழ்முறைகளையும் கொண்டிருந்தனர். ரீட்டாவைத் துணைவியாகக் கொண்ட சத்தியநாதன் நோர்வீஜிய சமூகத்தின் வாழ்வியல் விழுமியங்களைப் பெருமளவிற்கு உள்வாங்கியிருந்தான். சமூகப்பார்வையையும் வாழ்முறையையும் பொறுத்தமட்டில் அவன் சமகாலத்தில் நோர்வேய்க்குப் புலம்பெயர்ந்த பெரும்பாலான சக தமிழர்களிடமிருந்து வேறுபட்ட ஆளுமையாகப் பரிணமித்துள்ளான் என்பது தெளிவாகிறது. தான் பிறந்து வளர்ந்த சமூகம் சார்ந்த விழுமியங்களின் செல்வாக்கிலிருந்து முற்றாக விடுபடாத கேசவநாதன் தன் இரு பிள்ளைகளினதும் கல்யாண ஏற்பாடுகள் முறிந்துபோன இடுக்கண் நிலையில் சத்தியநாதனின் தார்மீக ஆதரவையும் ஆலோசனையையும் நாடுகிறான்.

நண்பர்களுக்கிடையிலான விழுமியங்கள்சார் வேறுபாடு மட்டுமன்றிப் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான அதே போன்ற வேறுபாடும் அதனுடன் இணைந்த தொடர்பாடல் இடைவெளியும் அவர்களின் உரையாடல்களுக்கூடாக வெளிப்படுகிறது. பிள்ளைகளைப் பற்றிக் கேசவநாதனின் துணைவியும் அவனுடைய கருத்தையே பிரதிபலிக்கிறாள். 'ஊரில நாங்களெல்லாம் பெத்ததுகளின்ர சொல்லுக் கேட்டுத்தானே வளர்ந்தனாங்கள். இங்க என்னவெண்டால் எங்களுக்குப் பிறந்ததுகளின்ர சொல்லுக்கெல்லே நாங்கள் ஆடவேண்டியிருக்குது. பெத்ததுகளின்ர விருப்பு வெறுப்புகளை மதிக்கத் தெரியாத சரியான சுயநலம் பிடிச்சதுகளாயெல்லே இருக்குதுகள் இங்கத்தையப் பிள்ளையள்', என அவள் சொல்வதைக் கரிசனையுடன் கேட்ட சத்தியநாதன் அளிக்கும் பதில் அந்த வேறுபாட்டிற்கு நம்பத்தகுந்த மாற்று விளக்கமாக அமைகிறது. 'எனக்கெண்டால் இங்க பிள்ளையள் சுயநலமா இருக்குதா எண்டு தெரியல்ல. ஆனால் சுதந்திரமா இருக்குதுகள் எண்டது மட்டும் நல்லாத்தெரியுது.' இந்தப் பாணியிலே தொடரும் நீண்ட உரையாடல்கள் பெற்றோர் இருவரின் மனங்களில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மகனுக்கு நோர்வீஜியக் காதலியும் மகளுக்கு வேறு சாதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன் மீது காதலும் இருப்பதை சத்தியநாதனுக்கூடாக அறியும் அவர்கள் பிள்ளைகளின் விருப்பத்திற்கே விடுவதெனும் முடிவுக்கு வருகிறார்கள். 'வீடு எப்போதுமே இல்லாத மாதிரிப் பிரகாசமாச்சுது.'

ஆனால் கதை இந்த மகிழ்ச்சியான செய்தியுடன் முடியவில்லை. வட நோர்வேய்க்குத் திரும்புமுன் சத்தியநாதனைத் தனது சில தமிழ் நண்பர்களுடன் ஒரு குடிசைச் சுற்றுலாவிற்கு (hytte tur/cottage tour) அழைத்துச் செல்கிறான் கேசவநாதன். அந்த ஒன்று கூடல் சத்தியநாதனுக்கும் மற்றவர்களுக்குமிடையிலான வாழ்வியல்சார் விழுமியங்களின் வேறுபாட்டினை மேலும் காட்சிப்படுத்தும் நிகழ்வாகியது மட்டுமல்லாது அங்கு இன்னொரு அதிர்ச்சியும் அவனுக்குக் காத்திருந்தது. அங்கிருந்த ஒருவன் மற்றவர்களுடன் பேசும் போது உதிர்த்த 'ஆகிதம்' எனும் சொல் தன்னை மனோவியாதிக்குள்ளாக்கிய அந்த நிலைமைகளுக்கு மீண்டும் எடுத்துச்செல்வதை உணர்ந்து அவதியுறுகிறான் சத்தியநாதன். லோகுவை அடையாளங்காட்டிய அந்தச் சொல்லைக் கேட்கும்வரை நோர்வேயில் அவனை அவன் சந்தித்ததில்லை. கேசவநாதன் அவனை உடனே வட நோர்வேய்க்குத் திருப்பி வழியனுப்புகிறான். தன் நண்பனின் குடும்பத்தின் அமைதியைப் பாதித்த பிரச்சினைக்கு நல்ல முடிவு கிட்ட உதவுவதில் அரிய ஆற்றலைக் காட்டிய சத்தியநாதன் 1986-இல் பட்ட மனக்காயத்தின் விளைவுகளிலிருந்து இன்னும் முற்றாக விடுபடமுடியாத இடருக்கு ஆளாகும் நிலையிலிருக்கும் செய்தியையும் சொல்கிறது ஆகிதம். குழந்தைப் போராளியாகச் செய்த பாரிய குற்றத்தின் சுமையுடன் வாழும்

லோகு போன்றோரின் மனோவியல் நிலைமையும் வாழ்விய லும் என்னவாயிற்று எனும் கேள்வியும் வாசகனின் மனதில் எழுவதைத் தவிர்க்கமுடியாது.

ஆகிதத்தில் நாம் சந்திக்கும் சத்தியநாதனும் லோகுவும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களுக்கிடையிலான முரண்பா டுகளால் நிகழ்ந்த இராணுவமய வன்மத்தின் விளைவுகளை நினைவூட்டும் பாத்திரங்கள் என்றால் அந்தப் போராட்டத் தில் உயிர் நீத்த போராளிகளில் ஒரு இயக்கத்தைச் சார்ந்த வர்கள் மட்டுமே மாவீரர்களாக நினைவுகூரப்படும் பாகுபாடு மனதை நெகிழவைக்கும் வகையில் சித்தரிக்கும் கதைதான் ‘மாவீரர் யாரோ என்றால்’. தாயகத்திலும் ஈழத்தமிழர் வாழும் நாடுகளிலும் வருடந்தோறும் கார்த்திகை மாதம் இருபத்து ஏழாம் திகதி மாவீரர் தினம் உணர்ச்சி பொங்கும் நிகழ்வாக நடத்தப்படுகிறது.

போராளிகளாக உயிர்நீத்த இரு பிள்ளைகளின் வயோதிபத் தாயும் தந்தையும் தாம் வாழும் நோர்வேயில் நடைபெறும் மாவீரர் தினத்திற்குச் செல்கிறார்கள். அவர்கள் நடக்கும் போது படும் சிரமத்தைக் கவனித்த ஒருவர் தானாகவே முன் வந்து அவர்களுக்கு உதவுகிறார். மண்டபத்தில் வரிசையாக வைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் படங்களில் தங்கள் மக ளின் படத்தைத் தேடிக் கண்டதும் அதன் முன் பூக்களை வைத்து வணங்குகிறார்கள். ‘ஐயோ என்ர குஞ்சு...! ஐயோ என்ர குஞ்சு...’ என முணுமுணுத்தபடி அம்மா கண்ணீர் சிந்து கிறார். கண்கள் கசியும் நிலையில் நிற்கிறார் அய்யா. மாவீரர் தினப் பாடல் ஒலிக்கவிருப்பதால் எல்லோரும் எழுந்து நின்று பாடலைச் சேர்ந்து பாடி மாவீரர்களை நினைவேந்திக் கொள் ளுமாறு ஒலிபெருக்கி ஊடாக அறிவிக்கப்படுகிறது. பாடல் ஒலிக்கிறது. அப்பொழுது அம்மா தான் வைத்திருந்த பையி னுள் கையைவிட்டு எதையோ தேடுகிறார். தேடியதைக் கையில் எடுத்து மார்போடு அணைத்துக் கண்ணீர் மல் கிறார். அய்யாவும் கண்களை மூடிக் கும்பிட்டபடி நிற்கிறார். அம்மா தன் மார்போடு அணைத்து வைத்திருப்பது வேறொரு இயக்கத்தில் சேர்ந்து போராடி உயிரிழந்த அவருடைய இன் னொரு மகனின் புகைப்படத்தையே. ஆனால் அந்த மகனு டைய படம் இந்த மாவீரர் தினத்தில் சேர்க்கப்படவில்லை.



அந்தப் பெற்றோருடன் கூட இருந்து உதவியவர் அவர்களுடன் செய்யும் உரையாடலும் வெளிப்படுத்தும் கருத் துக்களும் சிந்தனைக்குரியவை. அய்யா சொல்கிறார் ‘...தமிழீழத்துக்காகத்தான் உயிரையும் கொடுத்தவன். ஆனால், இந்த இடத்தில அவன மாவீரன் எண்டு சொல்ல முடியாது தம்பி. ஏனெண்டா அவன் போராடப் போன இயக்கம் வேற.’ அதைக் கேட்ட தாய், ‘நாட்டுக் காக இரண்டு பிள்ளைகளைக் கொடுத் தும் கடைசியில் எந்தப் பிரயோசனமும் இல்லாமல் போச்சே என்ற ஏக்கமும், துக்கமும் தோய்ந்த முகத்துடன் தலை கவிழ்ந்திருந்தார்...’

இவர்களுக்கு உதவியவர் போராட்டத்தில் உயிர்நீத்த வேறு இயக்கங்களைச் சார்ந்த பலரை நினைவுகூருகிறார். ‘ஆம். எந்தச் சுயநலன்களும் அற்று மண்ணுக்காகவும் மக்களுக் காகவும் போராடப் புறப்பட்டுச் சிங்கள அரசுகளின் இன வெறிக்கும், இயக்கத் தலைமைகளின் ஆதிக்க வெறிக்கும் இரையாகிப் போன இளைஞர்கள் அனைவரும் மாவீரர்களே.’ கடந்து வந்த பாதையை முழுமையாகச் சுயவிமர்சன நோக்கில் மதிப்பிட்டு உரிய பாடங்களைப் படிக்கத் தவறிய வர்களின் காதுகளை இந்தக் குரல் எட்டவேண்டும். இதுதான் இந்தக் கதை சொல்லும் ஒரு முக்கிய செய்தி.

‘உபதேசிகள்’ எனும் தலைப்பிலான கதையில் ஜேர்மனியில் வாழும் பிரசன்ன அந்த நாட்டில் நிலவும் நிறவாதத்திற்கு எதிராக எழுதுவதிலும் ஊர்வலம் ஒன்றை ஒழுங்கு செய்வ திலும் ஆர்வமாயிருக்கும் அதேவேளை நாட்டில் தனக்குப் பெற்றோர் பார்த்துள்ள பெண் கறுப்பாக இருப்பதால் அவ ளைப் பிடிக்கவில்லையெனத் தன் நண்பன் கஜனுக்குச் சொல்கிறான். ஐரோப்பிய நிறவெறிக்கு எதிராக உபதே சிக்கும் பிரசன்னவிடம் உறைந்திருக்கும் நிறவாதத்தைத் தோலுரித்துக் காட்டும் கஜன் அவன் அழைப்புவிடுத்த ஊர் வலத்தில் பங்கு கொள்ளும் மனநிலையில் இல்லை. ஆனால் தன் நண்பனின் இரட்டை நியமத்தால் ஏமாற்ற மடைந்த கஜன் நிறவாதத்திற்கு எதிரான கூட்டுச் செயற் பாடுகளை பொதுப்படையாக நிராகரிப்பதும் மனித நேயம் பற்றி முன்வைக்கும் குறுகிய பார்வையும் பிரச்சினைக்குரிய ஒரு உபதேசமாகவே ஒலிக்கிறது. ‘...இதுகளெல்லாம் பொய் வேசமடா. இதில் எனக்கு விருப்பமில்ல, ...ஊர்வலங்கள் நடாத்துறதாலும், கொடி பிடிக்கிறதாலும், மேடையேறி பேசு றதாலும், பத்திரிகையில எழுதுறதாலும் யாருக்குமே எந்த நன்மைகளும் இல்லையடாப்பா. சும்மா நேரந்தான் வீணாப் போகுது. ஒவ்வொருத்தனும் சமுதாயத்தை திருத்த வெளிக் கிடாமல் தன்னைத் தானே திருத்திக்கொண்டு மனிதருக் குடைய நற்பண்புகளுடனும், மனித நேயத்துடனும் வாழ்ந் தாலே போதும். எவருக்குமே எவராலும் எந்தக் கஸ்டங் களும் இருக்காது...’

நிறவாதத்தினதும் அதற்கு எதிரான கூட்டான போராட்டங்க ளினதும் வரலாறையும், அதில் மனித நேயத்தால் உந்தப் பட்டு இணைந்த எண்ணற்றோரின் பங்களிப்பையும் அறியாத ஒருவனா கஜன்? நண்பனின் இரட்டை நியமத்தால் ஏற்பட்ட விரக்தி கஜனின் பார்வையை மறைத்துவிட்டதா? சமூக அமைப்பின் தன்மை, குறிப்பாக சமூகத்தின் பல்வேறு நிறு வனங்களில் ஆழப் பதிந்திருக்கும் நிறவாதம், இனவாதம் மற்றும் பால்நிலைசார் பாகுபாடுகள், வரலாற்றுச் சூழலின் நிர்ப்பந்தங்கள் மற்றும் இவற்றிற்கு எதிரான கூட்டு நடை முறையின் அவசியம் ஆகியவற்றிலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு உபதேசமாகவே கேட்கிறது அவன் மனித நேயம் பற்றிச் சொல்வது.

இந்த நான்கு கதைகளைப் போலவே மற்றைய கதைகள் எல்லாவற்றையும் இரசித்து வாசித்தேன். அவை பற்றியும் எழுத விருப்பமுள்ள போதும் இந்தக் கட்டுரையை மேலும் நீட்டுவதைத் தவிர்க்க விரும்புகிறேன். இந்தத் தொகுப்பு ஈழத்தமிழ்ப் புலம்பெயர் இலக்கியத்தின் பன்முகத்தன் மையை வளப்படுத்தும் ஒரு பங்களிப்பு. நவமகனின் இலக் கியப் பயணம் தொடரட்டும்.



Shanmugaratnam@thaiveedu.com

# அஷ்ரஃப் சிஹாப்தீன் கவிதைகள்: அரசியலும் அழகியலும் - 3

## ஜிஃப்ரி ஹாசன்

இலங்கையின் போர், மிக மோசமான அமைதியற்ற சூழலை இங்கு உருவாக்கியது. தனிமனிதது வாழ்வும், இருப்பும் தொடங்கி ஒட்டுமொத்தமாக அனைத்து இன மக்களினதும் வாழ்வியல் மற்றும் இருப்பின் மீது அது வன்மத்தை ஏவி விட்டது. சிதைக்கப்பட்ட பல்வேறு மக்களினதும் குரலாக மனச்சாட்சியின் குரலாக இலங்கை இலக்கியச் சூழலிருந்து பல்வேறு படைப்புகள் உருவாகத் தொடங்கின. அடக்கு முறைகளுக்கும், அநீதிக்கும் எதிரான குரல் என்ற வகையில் இந்தப் படைப்புகள் முக்கியம் பெற்றன. இத்தகைய இருண்ட காலத்தில் மக்களின் வாழ்க்கையை நேர்மையாக மனச்சாட்சியோடு பதிவு செய்தல் என்பது பாரிய தேவையாக இருந்த சூழலில் நேர்மையாக அதனை நிறை வேற்றிய படைப்பாளிகளுள் ஒருவராக இலக்கிய வெளியில் அஷ்ரஃப் சிஹாப்தீன் தொடர்ந்து இயங்கி வந்திருக்கிறார்.



இலங்கை முஸ்லிம் மக்களின் போர்க்கால வாழ்வியலை அவர்கள் மீதான பல்வேறு அடக்குமுறைகளைப் பதிவு செய்ததில் இவரது பங்களிப்பு மிக முக்கியமானது. அத்தகைய அவரது எதிர்ப்புக் கவிதைகள் முஸ்லிம் சமூகப் பண்பாட்டின் மீதான உள்ளக விமர்சனமாகவும், முஸ்லிம்கள் மீதான புற அடக்குமுறைகளுக்கு எதிரான குரலாகவும் பதிவாகின. இந்த விடயத்தின் மீது இந்தக் கட்டுரையின் இரண்டாம் பாகத்தில் கவனஞ் செலுத்தி எழுதி இருந்தேன். அதன் தொடர்ச்சியாக இந்தக் கட்டுரை மேலும் விரிகிறது.

இதுவரை அஷ்ரஃப் சிஹாப்தீனின் 4 கவிதைத் தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன. இந்த நான்கு தொகுப்புகளும் கிட்டத்தட்ட 200 கவிதைகளைக் கொண்டுள்ளன. அவரது கவிதைகளின் மொத்தத் தளமும் சமூக அரசியல் பண்பாடு மீதான அவதானமாகவும் எதிர் வினையாகவும் மேற்கிளம்பியவை.

இலங்கையில் அமைந்த அரசாங்கங்கள் எப்போதும் சிங்களப் பெரும்பான்மையினரின் நலன்களையே முன்னிறுத்தி செயற்படுவதில் தீவிர முனைப்புக் காட்டின. சிறுபான்மைச் சமூகங்களுடனான அரசாங்கங்களின் உறவு என்பது பெரும்பான்மைச் சமூகத்தை தங்களது வெற்றிக்குப் பயன்படுத்திக் கொள்ளும் சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது. இதனால், எப்போதும் ஒரு பெரும்பான்மை - சிறுபான்மை இடைவெளி இலங்கையில் நிலவும் வண்ணம் தேசிய அரசியல் சூழல் வடிவமைக்கப்பட்டிருந்தது. அது பெரும்பான்மை அதிகாரத்தின் அபத்தம் சூழ்ந்த சமூக வெளியைக் கட்டமைத்தது. இந்த அபத்தத்தின் மீதான எதிர்ப்புக்கள் இலங்கைத் தமிழ் இலக்கியச் சூழலில் இயங்கிய படைப்பாளிகளால் தங்கள் படைப்புகளில் ஆழமாக முன்வைக்கப்பட்டன. அஷ்ரஃப் சிஹாப்தீனின் 'பான்மைகளின் இடைவெளி' அத்தகையதொரு கவிதை. பெரும்பான்மையினருக்கான சிறப்புச் சலுகைகள் சிறுபான்மையினரின் சமூக உரிமைகளையும், மனித உணர்வுகளையும் உக்கிரமாகத் தாக்கும் ஒருவகை அரசியல் அட்டூழியத்தனத்தை காண்பிக்கிறது-

எல்லோருக்கும்
ஒவ்வொன்றாய் அமைந்துள்ள
அங்கங்கள்
இவ்விரண்டாய் இருக்கின்றன
உங்களுக்கு
இவ்விரண்டாய் இயல்பாய்
அமைந்துள்ள அங்கங்கள்
நன்நான்காய் வாய்த்திருக்கின்றன
உங்களுக்கு
எங்களுக்கு இருகைகள், இரு கால்கள்
இருபது விரல்கள்
உங்களுக்கோ
நாற் கைகள், நாற் கால்கள்
நாற்பது விரல்கள் ...
வைவேதான்,

*எடுத்தெறிவோராக நீங்களும்*
*எடுத்தெறியப்படுவோராக நாங்களும்*
*மாற்றப்பட்டிருக்கிறோம்!*

கவிதையின் முடிவு வரிகளில் இருக்கும் அரசியல் தீர்க்கம் இலங்கையில் ஒரு நிலைத்த நிதர்சனமாக மாறிவிட்டது. ஏனைய வரிகளில் இந்த சமமின்மையை மிக நையாண்டியாகச் சொல்லி வருகிறார். இதுபோன்ற அரசியல் புறக்கணிப்புகள், அழுத்தங்களை இப்படி நையாண்டியாக இலங்கை முஸ்லிம் இலக்கியச் சூழலில் பொருத்தமாகவும் அதிகமாகவும் வெளிப்படுத்தியவர் அஷ்ரஃப் சிஹாப்தீன் தான் என்றே நினைக்கிறேன்.

‘சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்’ 2023-இல் வெளிவந்த அவரது கவிதைத் தொகுப்பு. இத்தொகுப்புக் கவிதைகள் பெரும்பாலும் பெரும்பான்மை - சிறுபான்மை சமூக அரசியல் இடைவெளிகள் மற்றும் சமமின்மை மீதான எதிர்ப்பை வெளிப்படுத்தும் கவிதைகளையே அதிகம் கொண்டிருக்கின்றன. போருக்குப் பின்னரான இலங்கை அரசியலில் மிக வெளிப்படையாக இந்த பெரும்பான்மைப் பெருமிதம் அரசாங்கங்களால் கொண்டாடப்படுகிறது. அதன் எதிர்வினைதான் இத்தொகுப்பிலுள்ள இவரது பெரும்பாலான கவிதைகள். இதனால் சிறுபான்மைச் சமூகங்களிலிருந்து ‘பெரும்பான்மை கடாட்சத்’துக்காக பல்லிழிக்கும் தரப்பொன்று குறிப்பாக அரசியல் புலத்திலிருந்து உருவாகத் தொடங்கியது. பெரும்பான்மை அரசியல் தலைமைகளோடு புகைப்படம் எடுத்துக்கொள்வதே ஒரு பெருமிதமாக கருதும் நிலைமைக்குத் தாழ்ந்துவிட்ட சிறுபான்மை (அரசியல்) சமூகஉளவியல் மீது முழுமையாக விமர்சனத்தை இவரது ‘மோனாலிசா முகங்களும் அருகில் நிற்பவரும்’ கவிதை வெளிப்படுத்துகிறது.

*‘சமுத்திரங்கள் அனைத்தையும்*
*இறைத்தாலும் போதாது*
*படத்தில் பெரும்பான்மை*
*பேரரசியல் தலைவரின்*
*அருகே நின்றிருந்தவரின்*
*முகத்தில் வழிந்த பேருவகை நிரப்ப.*
*அரசியல் தலைமைக்கு அதிகாரம்*
*இருந்ததோ இல்லையோ*
*படம் மட்டும் பவனி வரும்*
*பொதுத் தளங்களில் அருகே நிற்பவரும்*
*ஓர் ஆமைான ஆள்தான் என்றபடி..*
*சிறுபான்மை இனத்தான் பெருமைப்பட*
*எத்தனையோ உண்டு அதில் இதுவும் ஒன்று...*
*என்றால் சொல்ல முடிந்ததெல்லாம்*
*அருகே நிற்பவரின் பேருவகை .*
*அவ்வப்போது தீயிடப்படும்*
*என்பது மட்டும்தான்!’*

பெரும்பான்மைத் தலைமைகளைத் திருப்திப்படுத்த முனைந்த சிறுபான்மை அரசியல் குழாத்தினருக்கு கடைசியில் நிகழப்போகும் அவலத்தைக் கவிதையின் முடிவு பேசுகிறது. இலங்கை அரசியலில் மிக சமீபத்தில் அனுபவித்த வெளிப்படையான உண்மை அது.

பெரும்பான்மை மனநிலை என்பது சிறுபான்மையின் மதம் மற்றும் பண்பாடுகள் மீது எப்போதும் ஓர் இளக்காரமான பார்வையை, கசப்பை, வன்மத்தை வெளிப்படுத்தும் ஒரு பிற்போக்குத்தனமான சூழல் இலங்கையில் நிலவிக் கொண்டிருக்கும் அபத்தத்தை இந்தக் கவிதையில் வெளிப்படுத்துகிறார். பிற மதங்கள், பண்பாடுகள் குறித்து இத்தகைய கசப்பான மனநிலையில் இருப்பவர்களது மதமும், பண்பாடும் ஏன் அவர்களின் மனதைப் பண்படுத்தவில்லை என்ற கேள்வி அஷ்ரஃப் சிஹாப்தீனிடம் இருக்கிறது. அந்தக் கேள்வி அவரை ‘நடத்தை’ என்ற கவிதையை எழுதும்படி செய்கிறது.

*‘அவமதிக்கும் சொற்களைக்*
*கூறள் பிடித்த*
*கத்திகள்போற் பயன்படுத்தி*
*நீ என்னை*
*அவ்வப்போது குத்திக்கொண்டேயிருக்கிறாய்*
*அனுபவித்துக்கொண்டே*
*அமைதியாக இருக்கிறேன் என்பதால்*
*ரோஷமற்றுப் போய்விட்டேன்*
*என்று அர்த்தமல்ல*
*நான் பெரும்பான்மையாக உள்ள*
*ஒரு தேசத்தில் வாழ நேர்ந்து*
*எனது மார்க்கம்*
*என்னைப் பண்படுத்தவில்லை என்றால்*
*நானும் நடந்துகொண்டிருப்பேன்*
*உன்னைப் போலவே!’*

எல்லா முடுக்குகளிலும் இனமும், மொழியும் முதன்மைப் படுத்தப்படும்போது ‘மனிதம்‘ பின்னுக்குத் தள்ளப் படுவதாகவே தோன்றுகிறது. இப்படியானதொரு கால கட்டத்தில் வாழ நேர்ந்த அவலம் அழுத்தத் தொடங்குகிறது. ‘சமநிலை’ என்கிற கவிதையில் அவர் எழுதுகிறார்-

*‘இனத்தை முன்வைக்கிறீர்கள்*
*முதன்மைப்படுத்துகிறீர்கள்’*
*முதல் மரியாதை கோருகிறீர்கள்*
*மொழியை முன்வைக்கிறீர்கள்*
*முதன்மைக்கு முண்டியடிக்கிறீர்கள்*
*முரண்டு பிடிக்கிறீர்கள்*
*எல்லாவற்றையும் பிரித்துக் கொள்கிறீர்கள்*
*உங்களுக்கு வசதியாக*
*ஏராள காரணங்களைச் சொல்கிறீர்கள்*
*எல்லாவற்றையும் நியாயப்படுத்த...’*

இந்தக் கவிதையை கொரோனா வைரஸ் சொல்வது போல எழுதுகிறார். மனிதர்களிடம் எத்தனை பிரிவினைகள்! ஆனால், கொரோனா வைரஸ் எந்தப் பிரிவினையும் பார்க்காமல் சமநிலையாகத் தாக்கியது. சமத்துவப்பாடம் மனிதனுக்குக் கற்பிக்க என்பது கவிஞரின் நிலைப்பாடாக இந்தக் கவிதையில் வெளிப்படுகிறது.

இந்தப் பிளவுகளும், பிரிவும் நம்மை வாழவைப்பதற்கல்ல. இவை மனிதகுலத்தை எங்கே கொண்டு போய் சேர்க்கப் போகின்றன என்ற அங்கலாய்ப்பும் தவிப்பும் அஷ்ரஃபிட

மிருக்கிறது. 'மூவினமும் மூவாயிரம் பிரிவுகளும்' என்கிற கவிதைக்குள் இந்த தவிப்பைத் தெளிவாகப் பார்க்கிறோம்.

நாம் ஒருபோதும்
ஒன்றாக இருக்கப்போவதில்லை
இரண்டாக இருக்கப்போவதுமில்லை...
மூத்திரத்தில் கரப்புக் குத்துவோர்
இறால்கள் பிடிப்பதில்லை
எத்தலைமுறையும்
நிம்மதியாக வாழக்கூடாது என
நமது தீர்மானங்களை
நாமே எழுதிக் கொண்டிருக்கும் வரை
கடவுள் நம்மைக் காப்பாற்றப் போவதில்லை
ஒன்றாக இருக்க வேண்டும்
என்று கனவு காண்போரின்
வானத்தில் தெரியும்
நம்பிக்கை நட்சத்திரங்கள்
எறிந்து விழுந்து கொண்டே இருக்கின்றன!'

நிகழ்வுகள் எந்த நம்பிக்கையையும் அளிக்காதபோது அவநம்பிக்கை மேகங்கள் எங்கும் சூழ்கின்றன. எஞ்சி இருந்த நம்பிக்கை நட்சத்திரங்களும் உதிர்ந்து வாழ்க்கை வெறுமையாகிறது. இந்த இடத்தில் ஜனநாயகம் மீதும் நம்பிக்கையற்றுப் போகிறது கவிஞருக்கு. அவர் எழுதுகிறார்-

'ஜனநாயகம் பொல்லைச் சீவி
சர்வதிகாரிகளிடம் கொடுத்து விடுகிறது
பின்னர்
அவர்களிடமிருந்து அதைக் கொண்டே
அடிவாங்கி அழுதுகொண்டிருக்கிறது...'

நிலமை இப்படி கீழிறங்கிச் செல்லும்போது ஆட்சியாளர்கள் நாடகம் நடாத்தி எல்லேரையும் ஏமாற்றும் ஒரு கட்டத்துக்கு வருகின்றனர். சிறுபான்மைகளின் மீது போலிப் பாசம் காட்டும் அபத்த நாடகத்தை அரங்கேற்றுகின்றனர். 'சிம்மாசன உரை' கவிதையில் இந்த அபத்த நாடகத்தை வெளிக்கொணர் கிறார் கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன்.

'நேற்று குகையிலிருந்து
வெளியே வந்தது கிழட்டுச் சிங்கம்
அதன் கண்களில் தெரிந்தது
ஒரு முயலின் தவிப்பு
அசைவுகளில்
ஓர் ஆட்டுக்குட்டியின் பயமிருந்தது
ஓநாய்களுக்கும் குட்டிகளுக்கும்
சிறப்புத்தேவையுடைய நரிகளுக்கும்
சுரத்தற்ற குரலில்
அஃது உபன்னியாசம் வழங்கிற்று...'

பெரும்பான்மை அதிகாரத்தினதும், திமிர்த்தனத்தினதும் கொடும்பசிக்கு இரையான சிறுபான்மையின் மனநிலைக் கொதிப்பு சோகமானது. அந்தக் காயம் மிக ஆழமானது. இலகுவில் கடந்துவிடமுடியாத அவலத்தின் சாட்சிகளாக இங்கு மக்கள் மாற்றப்படுகின்றனர். இந்த சூழலிலும் உண்மையை ஒரு கவிஞனால் ஊடுருவிக் கண்டறிய முடியும் என்பதையும், மக்களை அதனை நோக்கி உந்த முடியும் என்பதையும் அவரது 'தேசத்தின் மீதான நேசம்' கவிதை சொல்கிறது. நாட்டுப்பற்று என்பது இனம், மதம், மொழி போன்ற அடையாளங்களால் அன்றி பிறப்பால் நிகழ்வது என்பதை அழுத்தமாக முன்வைக்கும்கவிதை அது.

'தாய் நாட்டை நேசித்தல் என்பது
தான் பின்பற்றும் மதத்தைக் கொண்டு
நிரூபிக்கப்படுவதில்லை
மற்றமைகளை நிராகரிப்பது கொண்டு
அது ஊர்ஜிதப்படுத்தப்படுவதில்லை
இனரீதியாகப் பகுத்து
அதிகமாக இருப்போரே
நாட்டை நேசிப்பவர்கள் என்று
நிறுத்திவிட முடிவதில்லை...'

அப்படியாயின் அந்த நேசம் எப்படி நிகழ்கிறது. ஒரு நாட்டின் மீதான பற்று என்பது அதன் பிரஜைகளுக்கு சுவாசமாக இந்தக் கவிதையில் உருவகமாகிறது. மேலும் இந்தக் கவிதை தேசத்தின் நல்லிணக்கத்தை சகலருக்குமான அந்தஸ்த்தை கோருகிறது.

(தொடரும்)



jiffry.hassan@thaiveedu.com



# கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

7

## மொழியியல் பற்றிய ஒரு நோக்கு

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

tg.theeban@gmail.com

### மொழியியல் என்றால் என்ன?

மொழியியல் (Linguistics) என்பது மொழியின் அமைப்பு, பொருள், பயன்பாடு மற்றும் அதன் வரலாறு ஆகியவற்றை அறிவியல் முறைப்படி ஆராய்வதற்குரிய ஒரு துறையாகும். இது ஒரு தனிப்பட்ட மொழியைப் பற்றி மட்டுமன்றி, மனிதர்களின் மொழியியல் திறனைப் பற்றிய பொதுவான அறிவையும், உலகின் பல்வேறு மொழிகளின் அமைப்பு, வளர்ச்சி, மற்றும் பயன்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான ஆய்வுத் துறை ஆகும்.

மொழியின் பல்வேறு அம்சங்களை விஞ்ஞானபூர்வமாக ஆராயும் துறையே மொழியியலாகும். மொழியின் வடிவம், பொருள், சூழல் போன்றவற்றை மொழியியல் ஆய்வு செய்கிறது. மொழி, இயல் ஆகிய இரு சொற்களை உள்ளடக்கிய கூட்டுச்சொல் மொழியியல் ஆகும். மொழியியலின் முக்கிய நோக்கம், மனிதனின் மொழி பற்றிய புரிதலை ஆழப்படுத்தவும், மொழியின் பல்வேறு அம்சங்களை அறிவியல்பூர்வமாக ஆராய்ந்து, அதன் மூலம் மொழி எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பற்றிய தெளிவான ஒரு விளக்கத்தை வழங்குவதாகும்.

மொழியியலில் மொழியின் முக்கிய கூறுகளாக ஒலி அமைப்பு, சொல் அமைப்பு, தொடர் அமைப்பு, பொருள், பயன்பாடு என ஐந்து வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஐந்து கூறுகளையும் மொழியியல் ஆய்வு செய்கின்றது.

- **ஒலி அமைப்பு** (Phonetics & Phonology):

  ஒலி அமைப்பு என்பது ஒரு மொழியில் ஒலிகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, அவை எவ்வாறு பொருளை வேறுபடுத்துகின்றன என்பது பற்றிய விரிவான ஆய்வாக அமைகின்றது.

- **சொல் அமைப்பு** (Morphology):

  சொல் அமைப்பு என்பது உருபனியல் (Morphology) என்ற துறையின் கீழ் ஆராயப்படுகிறது. உருபனியல் என்பது ஒரு மொழியில் சொற்கள் எவ்வாறு உருவாகின்றன, அவற்றின் உள் அமைப்பு என்ன, அவை எவ்வாறு மற்ற சொற்களுடன் தொடர்புடையவை என்பதைப் பற்றியும் வார்த்தைகள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன, வேர்ச் சொற்களுடன் முன்னொட்டு (Prefix), பின்னொட்டு (Suffix) போன்றவை எவ்வாறு சேர்ந்து புதிய சொற்களை உருவாக்கின்றன என்பதனை ஆராய்வது.

- **தொடர் அமைப்பு** (Syntax):

  தொடர் அமைப்பு என்பது மொழியில் சொற்கள் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டு வாக்கியங்கள் அல்லது தொடர்களாக உருவாக்கப்படுகின்றன என்பதும் ஒரு மொழியின் இலக்கண வழக்கில் என்னென்ன என்பதைக் கண்டறிவதுமாகப் பார்க்கப்படுகின்றன. ஒரு வாக்கியத்தில் சொற்கள் எந்த வரிசையில், எந்த உறவுமுறையில் அமைய வேண்டும் என்பதைப் பற்றிய ஆய்வாகவும் இது அமைகிறது.

- **பொருள்** (Semantics):

  மொழியியலில் பொருள் என்பது சொற்கள் மற்றும் வாக்கியங்களின் உண்மையான பொருள் என்ன என்பதைப் பற்றிய ஆய்வாகக் காணப்படுகின்றது. சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களின் நேரடியான பொருளை அறிவியல்பூர்வமாக ஆராய்கின்ற ஒரு துறையாகும்.

- **பயன்பாடு** (Pragmatics):

  மொழியியலில் பயன்பாடு என்பது மொழியைப் பயன்படுத்தும் சூழல், பேசுவோரின் நோக்கம், அதன் சமூகத் தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் மொழியின் பொருளை ஆராயும் மொழியியலின் ஒரு துறையாகப் பார்க்கப்படுகிறது.

இந்த மொழியியலானது உலகில் வெற்றி நடை போடுவதற்கு அறிவியல் முறையில் உலக மொழிகளை ஆராய்ந்து நிற்பதே காரணமாக அமைகின்றது. மொழியியல், மொழிகள் தோன்றிய காலந்தொட்டே தொடங்கப் பெற்றிருந்தாலும் 19-ஆம் நூற்றாண்டில்தான் இன்றைய மொழியியல் அறிவியல் துறையாக மிளிரத் தொடங்கியது எனலாம். மொழியியல் துறை இன்றைய நிலையில் உலக சமுதாயத்திற்கும் ஆராய்ச்சிக்கும் இன்றியமையாததோடு சமுதாய ஒருமைப்பாட்டிற்கு பெரிதும் துணையாக நின்று மொழி வளர்ச்சிக்கு மொழியியல் நல்ல வழிகளைச் சுட்டி நிற்பதனைக் காணக்

கூடியதாக இருக்கிறது. இது மட்டுமல்ல இன்று வளர்ந்து வரும் தகவல் தொடர்பு, மருத்துவம், சமூகவியல், உளவியல், கணினியியல், மானிடவியல், கல்வியியல் போன்ற பல்துறை யிலும் தன் ஆதிக்கத்தை செலுத்தி நிற்பதனைக் காணக் கூடியதாக உள்ளது.

மொழியியலின் முக்கிய அம்சங்கள், மொழியியலின் முக்கிய பார்வைகள் என்ற இரண்டு பிரிவுகள் மூலம் மேலும் மொழி யியல் பற்றிய விளக்கங்களைக் காணலாம்.

## மொழியியலின் முக்கிய அம்சங்கள்:

- மொழியியல் பல துறைகளைக் கொண்டது:

  ஒலியியல், ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொரு ளியல், வரலாற்று மொழியியல் என்று பகுதிகள் அமைந்து காணப்படுகின்றன. இம்மொழியியல் துறையின் கீழ் மனி தர்கள் மொழியைப் பேச பயன்படுத்தும் ஒலியைப் பற்றிய ஆய்வு ஒலியியல் (Phonetics). பொருள் வேறுபாடு செய் யும் பேச்சு ஒலிகளை ஆராயும் ஒலியனியல் (Phonemice). ஒரு சொல்லின் பொருள் சுட்டும் சிறுகூறாக அமையும், அதாவது சொற்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதனை ஆய்வு செய்யும் உருபனியல் (Morphology). சொற்கள் ஒன்றிணைந்து தொடர்களை, அதாவது வாக்கியங்களை உருவாக்கும் முறையினை ஆய்வு செய்யும் தொடரியல் (Syntax). மொழியின் பொருண்மை பற்றியும் சொற்கள் மற்றும் தொடர்கள் உணர்த்தும் பொருளைப் பற்றியும் ஆய்வு செய்யும் பொருண்மையியல் (Semanties). ஆகிய அடிப்படைப் பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகள் மொழியின் கூறுகளை ஆராய்வதற்கான வழிமுறைகளைக் கூறுகின் றன. இப்பிரிவுகளோடு கால அடிப்படையில் மொழிகளின் வளர்ச்சி வரலாற்றைச் சுட்டும் வரலாற்று மொழியியல் (Historical Linguistics) என்ற பிரிவும் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

- மொழியியல் மொழி கற்பித்தலில் உதவுகிறது:

  மொழியியல் அறிவைப் பயன்படுத்தி மொழிகளைக் கற் பிப்பதற்கும், மொழிகளில் ஏற்படும் மாற்றங்களைக் கண்ட றிவதற்கும், மொழி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கும் உதவுகிறது.

- மொழியியல் மொழிப் பயன்பாட்டைப் புரிந்து கொள்ள உதவுகிறது:

  மொழியைப் பேசுபவர்கள் எவ்வாறு மொழியைப் பயன் படுத்துகிறார்கள், மொழி எவ்வாறு சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதனைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

## மொழியியலின் பயன்பாடு (Applied Aspects):

மொழியியலின் பயன்பாடாக பயன்பாட்டு மொழியியல், கணினி மொழியியல், நீதித்துறை மொழியியல் என்று அதன் பயன்பாடுகள் விரிந்துகொண்டு செல்கின்றன. இதில் பயன் பாட்டு மொழியியல் என்பது மொழியை கற்பித்தல், மொழித் திட்டமிடல், அகராதியிலும் மொழி பெயர்ப்பு துறைகளிலும் மொழியியல் கோட்பாடுகளை பயன்படுத்துதல் ஆகும். இரண்டாவதாக கணினி மொழியியல் என்பது இயந்திர மொழி பெயர்ப்பு ஆகும். மூன்றாவதாக நீதித்துறை மொழி யியல் நீதிமன்ற வழக்குகள், சட்ட அமைப்புகளில் உள்ள உரைகள், ஆவணங்கள் என்பவற்றை மொழி ரீதியாக ஆராய் தல் என்று மொழியியலின் பயன்பாடுகளை வகுக்கலாம்.

## மொழியியலின் பல்வேறு பார்வைகள்:

மொழியியலின் பல்வேறு பார்வைகளில் அறிவியல் ஆய்வு, பண்பாட்டு அடையாளம், அறிவின் கருவி, பயன்பாட்டின் நோக்கம், பல்வேறு ஆய்வு முறைகள் என விரிந்துகொண்டு செல்கின்றன.

- அறிவியல் ஆய்வு:

  மொழியியல், மொழியை அறிவியல் முறைப்படி ஆய்வு செய்வதற்கான ஒரு துறையாகும்.

- பண்பாட்டு அடையாளம்:

  மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம் என்பது பொது வாக அறிஞர்கள் கருத்தாகும். இம்மொழியானது அரசி யல், கலை, வரலாறு, சமூகநிலை, பழக்கவழக்கம் போன்ற இன்னோரன்ன பல கூறுகளை உள்ளடக்கி நிற்கின்றது.

- அறிவின் கருவி:

  மொழி எமது அறிவையும், எமது எண்ணங்களையும் பிற ருக்கு புலப்படுத்தும் ஒரு கருவியாகப் பயன்படுகின்றது.

- பல்வேறு முறைகள்:

  மொழியியலில், விளக்கமுறை, வரலாற்றுமுறை, ஒப்பீட்டு முறை எனப் பல ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்படு கின்றன.

- பயன்பாட்டின் நோக்கம்:

  மொழியியலின் ஒரு பிரிவான பயன்பாட்டு மொழியியல் (Applied Linguistics) மொழியியற் கோட்பாடுகளின் நடை முறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பயன்படு கின்றது.



அறிவியல் அடிப்படையில் மொழி ஆராய்ச்சியை முன் வைக்கும் போக்கு 18-ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது. இவ்வாராய்ச்சி மொழி நூல் (Philoloy) என்ற பெயரில் ஆரம் பிக்கப்பட்டது. இம்மொழி நூலானது வரலாற்று அடிப்படை யில் மொழி வளர்ச்சி பற்றி ஆராய்ந்தது. இத்துறைதான் இன்றைய மொழியியல் என்ற துறையாக வளர்ந்து பல்துறை யோடும் தொடர்பு கொண்டு மொழி ஆராய்ச்சியில் சிறந்து நிற்கிறது. மனிதன் சிந்திக்கக் கற்றுக்கொண்ட காலந் தொட்டே மொழியின் இயல்புகள் பற்றிய ஆய்வு தொடங்கி விட்டது. ஐரோப்பா கண்டம் முதல் ஆசியக் கண்டம் வரை இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் மொழியியல் துறையின் வளர்சிக்கு கிரேக்கர்கள், ரோமர்கள், அரேபியர்கள், இந்தியர்கள் என இவ்வரிசை நீண்டு போகிறது.

## நவீன மொழியியலின் செயற்பாடுகள்:

நவீன மொழியியலின் செயற்பாடுகள் என்ன என்பதனை பார்க்கும்போது நவீன மொழியியல் தன்னை தத்துவத் திலிருந்து பிரித்துக்கொண்டு விஞ்ஞானம் நோக்கி நகர் கிறது. எல்லைகளை வகுத்துக்கொண்டு ஆய்வு செய்வது, ஊகங்கள், பகுப்பாய்வு, பொதுவிதிகளை உருவாக்குதல், அதன் அடிப்படையில் முழுமையைக் கற்பிதம் செய்தல், பரிசீலனை செய்தல், நிருபித்தல் அல்லது நிராகரித்தல், விதி உருவாக்கம் - இவ்வாறு விஞ்ஞானம் இயங்குகிறது. இவ் வணுகுமுறையை நவீன மொழியியலும் கைக்கொள் கிறது. உளவியல், சமூகவியல், தொடர்பியல், இலக்கியம்,



நோம் சோம்ஸ்கி

கல்வி முதலிய துறைகளுடன் அது கொண்ட உறவின் விளை வாக சமூக மொழியியல் (Socio linguistics), உளமொழியியல் (Psycho linguistics), தொடர்பு மொழி யியல் (discourse linguistics), நடை யியல் (stylistics), கல்வி மொழி யியல் (educational linguistics) போன்ற துறைகள் உருவாகி வேக மாக வளர்ந்து வருகின்றன. நவீன மொழியியல் ஒரு தனிமனிதரையோ குழுவையோ தனித்த அல காகக் கண்டு ஆய்வு செய்வது இல்லை. நோம் சோம்ஸ்கி (Noam Cginsky) நவீன மொழியியலின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

சுருக்கமாகச் சொன்னால், மொழியியல் என்பது மொழியை அதன் அடித்தளத்திலிருந்து அதன் முழுமையான பயன்பாடு வரை அறிவியல் பூர்வமாக ஆராயும் ஒரு விரிவான துறை யாகும்.

(தொடரும்...)



nageswary@thaiveedu.com



பாலா. சிவகடாட்சம்



# தீபாவலியும் கார்த்திகைத் தீபமும்

பொது ஆண்டு 1310 வைகாசி மாதத்தில் வந்த அனுஷ நட்சத்திர நாளொன்றில் சரசோதிமாலை என்னும் காலக்கணித நூலைத் தம்பதெனிய மன்னன் பண்டித பராக் கிரமபாகுவின் அவையில் அரங்கேற்றியவர் தேனுவரப் பெரு மாள் என்று அறியப்பட்ட போசராச பண்டிதர் ஆவார்.

இலங்கையில் இன்று கிடைக்கப்பெறும் தமிழ் நூல்களுள் மிகப் பழையது என அறியப்படும் சரசோதிமாலையை எழுதிய போசராச பண்டிதர் ஒரு வைணவர். இவர் தனது மன் னனாகிய பராக்கிரமபாகு நாள்தோறும் பணிந்து போற்றும் புத்தபெருமானையும் போற்றிப் பாடியுள்ளார். இலங்கை மக்கள் கொண்டாடும் தீபாவலி பற்றிக் கூறும்போது இவர் இந்தப் பெருநாளைப் புராணக்கதை எதனுடனும் தொடர்புப டுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, தீபாவலி என்பது இறந்துபோன எமது மூதாதையரின் நினைவு நாள் (Ancestor's Day) என்பதையே போசராச பண்டிதர் தமது நூலில் வலியுறுத்தியுள்ளார்.

**இரவிநற் றுலைசேர் மாதம் இராக்கதிர் குறையும் பக்கம்**
**வருபதி னான்கு வந்த வைகறைப் பொழுது தன்னில்**
**உரியநற் பிதிர்கள் இன்பம் உறுதீபா வலியாம் எண்ணெய்**
**மருவி வெந்நீரின் மூழ்கி மகிழ்ந்து நற்கருமம் செய்யே**

*சரசோதிமாலை: பாடல் 332*

*'சூரியன் துலாராசியில் நிற்கும் ஐப்பசி மாதத்துத் தேய் பிறைப் பக்கத்துப் பதினான்காம் திதியாகிய சதுர்த்தசியன்று வரும் அதிகாலைப் பொழுது எமது முன்னோர்கள் இன்பம் அடையும் தீபாவலி நன்னாளாகும். அன்று எண்ணெய் தேய்த்து வெந்நீரில் குளித்து நீராடியபின் நல்ல கருமங் களை மகிழ்ந்து செய்யவேண்டும்'* என்கிறார் பராக்கிரமபா குவின் அரண்மனைப் பண்டிதர்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசை திதி கூடும் நாட்களில் தமது தந்தை மற்றும் தந்தை வழி முன்னோரை நினைந்து தீர்த்தக்கரையில் நீராடி பிதிர்க்கடன் (திவசம்) செய்வது நீண்ட காலமாக இந்துக்கள் கடைப்பிடித்துவரும் ஒரு நடை முறை. இவற்றுள் ஆடி மாதத்தில் வரும் அமாவாசை நாளில் பிதிர்க்கடன் செய்வது மிக விசேடமானது என்னும் நம் பிக்கை பலருக்கும் உண்டு. இன்றைய காலகட்டத்தில் ஆடி அமாவாசைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த போசராச பண்டிதர் ஐப்பசி மாதத்தில் கூடும் அமாவாசைக்கே கொடுத்துள்ளார்.

பொதுவாக ஆண் பிள்ளைகள் கடைப்பிடிக்கவேண்டிய இந்த விரதம் சங்ககாலம் தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள் ளது. பிதிர்க்கடன் செய்வதற்காக ஓர் ஆண் பிள்ளையாவது பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தவமிருந்தோர் பலர்.

*'நான் அம்புகள் விடப்போகிறேன். பசுக்களையும் பசுபோன்ற இயல்புடைய பார்ப்பனர்களையும் பெண்களையும் நோயாளி களையும் பாதுகாப்பதுடன் தென்புலம் சென்ற (இறந்து போன) மூதாதையர்க்குப் பிதிர்க்கடன் செய்வதற்கு உரித் துடைய அருமையான புதல்வரை இன்னமும் பெறாதோரும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுங்கள்'* என்று போரின்போது முன்னறிவித்தல் கொடுக்கின்றான் முதுகுடு மிப் பெருவழுதி என்னும் சங்ககாலத்துப் பாண்டிய மன்னன். பிதிர்க்கடன் செய்வதென்பது இல்லறத்தார்க்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கடமையாக இருந்துள்ளது என்பதை சங்கப்புலவர் நெட்டிமையாரின் இப்பாடல் தெளிவு படுத்துகின்றது.

**ஆவும் ஆன் இயல் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென் புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன் போல் புதல்வர்ப் பெறாஅதீரும்**
**எம் அம்பு கடி விடுதும் நும் அரண் சேர்மின்**

*புறநானூறு: பாடல் 9*

'ஆவலி' என்பது வரிசை அல்லது ஒழுங்கு என்பதைக் குறிக் கும். தீபாவலி என்பது தீபங்களின் வரிசை அல்லது ஒழுங்கு என்னும் பொருள் தரும். எனினும் தமிழ் இலக்கிய வரலாற் றில் தீபாவலி என்னும் திருநாள் பற்றி முதன் முதலில் பதிவு செய்திருப்பது பொது ஆண்டு 1310-இல் இலங்கையில் ஆக்கம் பெற்ற சரசோதிமாலை என்னும் காலக்கணித நூலே ஆகும். தீபாவலியுடன் கூடவே கார்த்திகை விளக்கீடு பற்றியும் சரசோதிமாலை பேசுகின்றது. இரண்டுமே தீபங்கள் ஏற்றப் படும் திருநாட்களாக இருந்தாலும் தீபாவலியும் கார்த் திகை விளக்கீடும் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்படுபவை என்பதை சரசோதிமாலையை ஆக்கிய போசராச பண்டிதர் உறுதிப்படுத்தியுள்ளார்.

***தேள் ஆதவனில் திகழ் பூரணையின்***
***நாள் ஆரலிலே நலமா மதிதான்***
***நீள் ஏறுறவே நெறியே சுடர்தான்***
***கேளே ற்றிடவே கிளரும் நலமே***

*- சரசோதிமாலை: பாடல் 333*

'விருச்சிகராசியில் சூரியன் நிற்கும் கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமியன்று கார்த்திகை நட்சத்திரத்தில் இடப ராசியில் சந்திரன் நிற்கும்போது வரிசையாகத் தீபங்கள் ஏற் றுவிரேல் நல்லவை நடக்கும்' என்கிறார் போசராச பண்டிதர்.

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமி இரவில் வீதிகள் தோறும், வீடுகள் தோறும் தீபங்கள் ஏற்றப்படும் தீப ஒளித் திருநாள் பற்றி சரசோதிமாலையில் மட்டுமன்றி சங்க இலக்கியங்க ளிலும் பேசப்படுகின்றன.

மங்கையை உயிர்ப்பித்துத் தரும்படி இறைவனை வேண்டிப் பாடும் தேவாரத்தில் 'விளக்கீடு காணாதே போதியோ பூம் பாவாய்' என்று பாடுகின்றார் சம்பந்தர். 'தொல்கார்த்திகை நாள்' (பழைமை மிக்க) என்று சம்பந்தர் குறிப்பிடுவதை நோக்கும்பொழுது இந்நாள் சம்பந்தருக்கு மிக முற்பட்ட காலம் தொட்டுத் தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வந்துள் ளது என்பது உறுதியாகின்றது.

***வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்***
***துளக்கில் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகைநாள்***
***தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்***
***விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்***

*சம்பந்தர் தேவாரம்*

அதேசமயம் தீபாவளி என்னும் திருநாள் பற்றித் தேவார திரு




வாசகங்களோ அவற்றுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களோ எதுவுமே பேசியதில்லை.

***அறுமீன் பயந்த அறம் செய் திங்கள்***
***செல் சுடர் நெடுங் கொடி போல***
***பல் பூங் கோங்கம் அணிந்த காடே***

*- நற்றிணை 202*

'அறுமீன்' என்பது கார்த்திகை நட்சத்திரத்தைக் குறிக்கும் தூய தமிழ்ப்பெயர். கார்த்திகை மாதம் வரும் கார்த்திகை நாளில் நீண்ட வரிசையாக ஏற்றிவைக்கப்படும் சுடர் விளக் குகள் போன்று சிவப்பு நிறப்பூக்கள் அசையும் முள்ளிலவு மரங்கள் (Red silk cotton: Bombax ceiba) நிறைந்த காட்டை வருணிக்கின்றது இப்பாடல்.

சுடர்ப் பூக்கள் பல நிறைந்த கோங்கம் என்று சங்கப்புலவர் வர்ணிக்கும் இம்மரம், இன்று அதே பொருள் தரும் Flame of the forest என்னும் ஆங்கிலப்பெயர் கொண்டு அழைக்கப் பெறும் புரசு அல்லது பலாசம் (Butea monosperma) என்னும் மரத்தைப் பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான திருஞானசம்பந்தர் கார்த்திகை தீபத் திருநாளை விளக்கீடு என்றே குறிப்பிடு கின்றார். பாம்பு கடித்து இறந்துபோன பூம்பாவை என்னும்

நரகாசுரனைக் கிருஷ்ணபகவான் கொன்ற நாளாகத் தீபாவ ளியைக் கொண்டாடும் வழக்கம் தமிழகத்தில் எப்போது தொடங்கியது என்ற விபரம் தெரியவில்லை. கிருஷ்ணபர மாத்மா நரகாசுரன் தொடர்பான கதைகள் சைவ நாயன்மார் மற்றும் வைணவ ஆழ்வார்கள் காலத்தில் தமிழகத்தில் அறி யப்பட்டு இருந்தன. எனினும் தீபாவளி என்னும் பெயர் தமிழ கத்தில் பதினாறாம் நூற்றாண்டுக்கு முன் பயன்பாட்டில் இருந்தமைக்கு ஆதாரம் இல்லை. வான வேடிக்கையுடன் கூடிய தீபாவளிக் கொண்டாட்டங்கள் பெரும்பாலும் விஜய நகர நாயக்கர் ஆட்சிக்காலத்தில் பரவியிருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு.



Sivakadadcham@thaiveedu.com

# ஓவியர் 'வின்சென்ட் வான் கோ'வும் அவரது ஓவிய வாழ்வும்

- பவானி சற்குணசெல்வம்



நெதர்லாந்தின் கலை வரலாற்றில் மிகவும் பிரபலமான ஓவியர்களில் ஒருவர் வின்சென்ட் வான் கோ. இக்கலைஞர் உலகளவில் அறியப்பட்டவர். அவரது கலைப் படைப் புகள் மட்டுமல்ல, கலைஞரின் கொந்தளிப்பான வாழ்க்கையும் அறியப்படவேண்டிய விட யம்தான்.

மாபெரும் ஓவியக் கலைஞனாகப் புகழின் உச்சியைத்தொட்ட இந்தக் கலைஞனின் வாழ்க் கைப் பின்னணியில் இருந்த சிக்கல்கள், இவரின் மென்மையான உள்ளம், காதல், பெறப் படாத அன்பு, அனுபவிக்கப்படாத ஆசை, ஏக்கம், தவிப்பு, பரிவு, ஆற்றாமை, கலை உணர் வின் வெளிப்பாடுகள், தன்னையே புரிந்து கொள்ளாத நிலை, விரக்தி, மனக் கொந்தளிப்பு களின் விளிம்பில் நின்று படைக்கப்பட்ட கலை வடிவங்களுக்குக் கிடைத்த வெகுமதி போன்ற பல விடயங்கள் இன்றும் நுண்ணறிவு ஆய்வாளர்களினால் வியந்து பார்க்கப்படும் விடய மாகவே காணப்படுகிறது. இவரைப் போல் பல கலைஞர்களின் பின்னணிகள் இருந்திருக் கின்றன. அவை பேசாப்பொருட்களாக மறைக்கப்பட்டிருக்கலாம், தெரியாமலோ அல்லது புரி யப்படாமலோகூடப் போயிருக்கலாம். வான் கோவின் வரலாறு ஒரு கலைஞரை மற்றவர்கள் புரிந்துகொள்வதற்கான திறவுகோலாக அமைந்துள்ளதெனலாம். உலகின் புகழ்பூத்த பல கலைஞர்களின் வாழ்க்கைப் பின்னணி வான் கோவின் வாழ்க்கைப் பின்னணியுடன் ஒப்பிடக் கூடியதாக இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயம்.

tg.theeban@gmail.com

## வான் கோவின் இளமைக்காலம்:

வின்செண்ட் வான் கோ 1853-ஆம் ஆண்டு மார்ச் 30-ஆம் திகதி நெதர்லாந்திலுள்ள பிரபாண்டில் ஜுண்டர்ட் நகரில் தியோடரஸ் வான் கோ (தந்தை) மற்றும் அவரது மனைவி அன்னா கொர்னேலியா கார்பென்டஸ் ஆகியோரின் மகனாகப் பிறந்தார். இவரது தந்தை கிராமத்தில் சீர்திருத்த தேவாலயத்தின் போதகராக இருந்தார்.




## கலை, வர்த்தகம்:

தனது 16 வயதில், வான் கோ, நெதர்லாந்திலுள்ள ஹேக் கிற்கு பிரெஞ்சு கலை மற்றும் அச்சு வர்த்தகக் கலை கற்பதற்காகவும் சீவின் ஹேக் கிளையில் பணியாற்றுவதற்காகவும் புறப்பட்டார். அவரிடம் ஒரு தள்ளுவண்டில் இருந்தது. அவரது மாமா இந்த நிறுவனத்தில் இணை பங்காளராக இருந்தார். இந்த காலகட்டத்தில், வின்செண்ட் தனது சகோதரர் தியோவுக்கு கடிதங்களை எழுதத் தொடங்கினார். அவர் தனது வாழ்நாள் முழுவதும் அதைச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

வின்செண்ட் வான் கோ பாரிஸ் மற்றும் லண்டனில் உள்ள கலை விற்பனையாளர்களின் கிளைகளிலும் சிறிது காலம் பணியாற்றினார். லண்டனில் அவர் தனது வீட்டு உரிமையாளரின் மகளைக் காதலித்தார். திரும்பப் பெறப்படாத காதல் வின்செண்ட் ஒரு காலகட்டத்தில் மனச்சோர்வின் எல்லைக்கு செல்ல வழிவகுத்தது. வான் கோ காட்சி கலைகளைப் பற்றிய அறிவை அங்கு வளர்த்துக் கொண்டார். பிற்காலத்தில் அது அவருக்கு நன்மை பயக்கும் ஒன்றாக அமைந்தது. பாரிஸில் வசிக்கும்போது, வின்செண்ட் கலைஞர் ஜீன்-பிரான்சுவா மில்லட்டின் விவசாயிகள் காட்சிகளையும் ஜூல்ஸ் பிரெட்டனின் யதார்த்தமான கிராமப்புற காட்சிகளையும் பார்த்தார். இந்தப் படைப்புகள் வான் கோ மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது, பின்னர் அவர் பல விவசாயக் காட்சிகளை வரைந்து வந்தார். அவரது ஓவியம் 'உருளைக்கிழங்கு சாப்பிடுபவர்கள்' இதற்கு சிறந்த உதாரணம். வான் கோ ஏழ்மையின் வலியை உணர்ந்த கலைஞன். உழைப்பின் உயர்வைப் போற்றிய கலைஞன். இவரின் படைப்புகளின் ஊடாக இது துல்லியமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## பாதிரியார்:

1876-ஆம் ஆண்டு வின்செண்ட் வான் கோ கலை வர்த்தகத்திலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் அவர் இங்கிலாந்தின் ராம்ஸ்கேட் புறப்பட்டார், அங்கு அவர் துணை பாதிரியார் ஆனார். பின்னர் அவர் இஸ்லேவொர்த்தில் உதவிப் பாதிரியார் ஆனார். 1878-ஆம் ஆண்டின் இறுதியில், வான் கோ போரினேஜுக்கு (ஹைனாட்டின் வால்லூன் மாகாணத்தில் உள்ள பகுதி) அனுப்பப்பட்டார், அங்கு அவர் சுரங்கத் தொழிலாளர்கள் மத்தியில் போதகராகப் பணியாற்றினார். வான் கோ இங்கே ஒரு கடினமான காலகட்டத்தைக் கடந்து சென்றார். அவர் மிகுந்த வறுமையில் வாழ்ந்து மன அழுத்தத்தால் அவதிப்பட்டார். பிரான்ஸ்சின் 1888 குளிர்காலத்தில், கலைஞர் பிரான்சின் தெற்கே பயணம் செய்தார். இயற்கையில் அவர் சந்தித்த புதிய வண்ணங்கள் மற்றும் விளக்குகள் அங்கு அவரின் மனதைத் தொட்டன. பிரெஞ்சு நகரமான ஆர்லஸில், வான் கோ பல ஓவியங்களை உருவாக்கியது மட்டுமல்லாமல், பல கடிதங்களையும் எழுதினார், குறிப்பாக அவரது சகோதரர் தியோவு அவரது வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தார். தியோ தனது சகோதரனை நம்பினார், மேலும் அடிக்கடி வின்செண்ட்டுக்கு பணம் அனுப்பினார். ஆர்லஸ் பயணத்திற்கு தியோவும் நிதியளித்தார். வின்செண்ட் வான் கோவின் கடிதங்கள் ஒரு வகையான தொடர்ச்சியான நாட்குறிப்பை உருவாக்கி, கலைஞரின் எண்ணங்கள் மற்றும் கலை பற்றிய அவரது கருத்துக்கள் பற்றிய நுண்ணறிவை நமக்கு வழங்கியுள்ளன. தனது வாழ்க்கையின் கடைசி மாதங்களில், கலைஞர் பிரான்சின் ஆவர்ஸ்-சுர்-ஓயிஸில் வசித்து வந்தார். கலை ரீதியாக அவர் இங்கு மிகவும் தனது திறமைகளைக் காட்டி வளர்ச்சி பெற்றார். வான் கோ பொதுவாக கிராமப்புற சூழலில் மகிழ்ச்சியாக இருந்தார், அவருடைய மருத்துவர் டாக்டர் கச்செட், இந்தக் காலகட்டத்தில் முக்கியமாக ஓவியத்தில் கவனம் செலுத்தும்படி அறிவுறுத்தினார், கலைஞர் ஆவர்ஸ்-சுர்-ஓயிஸில் குறைந்தது எண்பது படைப்புகளைச் செய்தார், அவற்றில் சில படைப்புகள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இந்தப் படைப்புகளைப் பற்றி வின்செண்ட் வான் கோ கலைஞரே ஒருமுறை எழுதினார்.

## நோய்:

வின்செண்ட் வான் கோ கலையைப் பொறுத்தவரை அவர் நல்லதொரு காலத்தை இங்கு கடந்து சென்றபோதும் அவரின் மனநிலை பாதிக்கப்பட்டதால் மன அழுத்தம் காரணமாக ஒரு வருடகாலம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். அவர் தனது மனநிலைபற்றிக் கூறும்போது 'என்னால் என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. சில கணங்களில் எந்தக் காரணமும் இல்லாமல் அதி கூடிய பயமாக இருக்கிறது. சில கணங்களில் மனதில் ஒரு வெறுமை மனதில் களைப்பு... ஒவ்வொரு நாளும் நான் மறக்க முடியாத தற்கொலைக்கு எதிராக பரிந்துரைக்கும் மருந்தைப் பயன்படுத்துகிறேன். அதில் ஒரு கோப்பை வைன் ஒரு துண்டு பாண் ஒரு குழாயில் வைத்து ஊதும் புகையிலை ஆகியவை அடங்கும்.' (அறிவியல் பதிப்பில் கடிதம் 764)

கடந்த 120 ஆண்டுகளில், பல மனநல மருத்துவர்கள் ஏற்கனவே ஓவியரின் மனநிலையை ஆய்வு செய்துள்ளனர். இருப்பினும், வான் கோவின் கலைக்கும் பைத்தியக்காரத்தனத்திற்கும் தொடர்பு இருக்கிறதா? என்பது பதிலளிக்கக் கடினமான கேள்வியாகவே உள்ளது. வான் கோவின் சகோதரி வில்லெமியனுக்கு எழுதிய கடிதத்தில், அவரது சகோதரர் தியோ ஒருமுறை எழுதினார்:

'அவனுக்குள் இரண்டு பேர் இருப்பதைப் போன்றது, ஒருவர் அன்பான அற்புதமானவர் நல்லவர், மென்மையானவர்; மற்றவர் தனக்குள் போராடும் கடினமான உள்ளம் கொண்டவர்.'




உலகப் பிரசித்தி பெற்ற ஓவியக் கலைஞன் வான் கோ பித்தனா என்ற கேள்விக்குப் பதில் தெரியாமல் தத்தளிக்கும் மனநல வைத்தியர்களின் நிலை ஒருபுறமிருக்க ஒரு கலைஞனை மற்றவர்கள் எப்பொழுதாவது சரியாகப் புரிந்து கொள்ள முடியுமா? என்ற இன்னொரு கேள்வியுடன் அவன் கலைஞனா? அல்லது பித்தனா? அல்லது கலைப் பித்தனா? என்ற கேள்விகளும் எழத்தான் செய்கின்றன.

## ஓவியநடை:

உளவியல் ரீதியான நோய்த் தாக்கங்கள், பிறழ்வுகள் மிக உச்சக்கட்டத்திற்கு சென்றபோதெல்லாம், வின்சென்ட் மேலும் மேலும் விரைவாக வண்ணம் தீட்டத் தொடங்கினார். 'நவீன வாழ்க்கையில் விஷயங்களை விரைவாக கடந்து செல்வதை' வெளிப்படுத்த அவர்களின் சொந்த வார்த்தைகளில். பிரபல கலை வரலாற்றாசிரியர் எர்ன்ஸ்ட் எச். கோம்ப்ரிச் ஒருமுறை வான் கோவின் ஓவிய நடை பற்றி எழுதினார்:

'அவர் பிரகாசமான, தூய்மையான வண்ணங்களைப் பரிசோதித்தார், அவர் தனது தட்டில் வைத்து அதைக் கலக்கவில்லை, ஆனால் அவற்றை நேரடியாக சிறிய கோடுகளாக அல்லது புள்ளிகளில் கேன்வாஸில் வைத்தார். அவர் அந்த இடத்தில் பார்வையாளரின் கண்ணை நம்புகிறார், அவர்கள் அதை ஒட்டுமொத்தமாகப் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கை. வான் கோ புள்ளிகள் மற்றும் கோடுகளில் ஓவியம் வரைவதற்கான நுட்பத்தை உணர்ந்தார், ஆனால் அவரது கை வரிசையில் அது முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக மாறியது. ஏனெனில் அவர் நிறங்களின் வலிமையை மாற்றியமைக்க மட்டும் அதைப் பாவிக்கவில்லை தனது அதீத உணர்வுகளையும் அதன் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்' ஆர்லஸிலிருந்து வான் கோ எழுதிய ஒரு கடிதத்தில், அவர் தனது உத்வேக நிலைகளை விவரிக்கிறார், 'உணர்ச்சிகள் பெரும்பாலும் பலமாக இருப்பதால் நான் என்னை அறியாமல் வேலை செய்கிறேன்... நான் வரையும் படங்களின் வரிகளும் பேசும் வார்த்தைகளின் வரிகளும் உணர்வுகளும் ஒன்றுடன் ஒன்று பின்னியபடியே...' என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ்சில் வாழ்ந்த காலங்களில் பிரான்ஸ் ஓவியர் பால் கௌகுயினுடன் சில காலங்கள் நண்பர்களாக இருந்ததாகவும் அவருடன் நடந்த ஒரு தகராரின் போது பால் கௌகுயின் வான் கோவைப் பயமுறுத்தியதால் மனக்கிளர்ச்சி அடைந்த வான் கோ ஒரு கணப்பொழுதில் தனது காதை வெட்டியதாகவும் கூறப்படுகிறது. வான் கோ தனது காதைத் துண்டிக்கவில்லை என்றும், ஆனால் ஒரு வாதத்தின் போது பிரெஞ்சு ஓவியர் பால் கௌகுயின் அவ்வாறு செய்ததாகவும் கூறப்படுகிறது. ஆர்லஸில் வான் கோவுடன் சிறிது காலம் வாழ்ந்த பால்குயின், தனது சுயசரிதையில் காது முழுவதும் துண்டிக்கப்பட்டது என்று எழுதினார். இருப்பினும், ஓவியர் சிக்னக் மற்றும் சகோதரர் தியோவின் மனைவி உட்பட மற்றவர்கள் இது பற்றி தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

## தற்கொலை:

ஜூலை 1890-இல், கலைஞர் தனது உயிரை மாய்த்துக்கொண்டார். சில தகவல்களின்படி, கலைஞர் ஆவர்ஸுக்கு அருகிலுள்ள கோதுமை வயலில் ஒரு ரிவால்வர் மூலம் மார்பில் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகிறது. பின்னர் அவர் தங்கியிருந்த சத்திரத்தில் முப்பது மணி நேரம் கழித்து இறந்தார். ஆறு மாதங்களுக்குப் பிறகு அவரது சகோதரர் தியோவும் இறந்தார். வின்சென்ட் மற்றும் அவரது சகோதரர் இருவரும் அருகருகே ஆவர்ஸ்-சுர்-ஓயிஸ் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## கலைஞனுக்குரிய கௌரவிப்பு:

வின்சென்ட் மற்றும் தியோ இறந்த சில நாட்களுக்குப் பிறகு, பிந்தையவரின் மனைவி ஜோஹன்னா வான் கோ-போங்கர் மீண்டும் நெதர்லாந்து சென்றார். அவர் கணிசமான எண்ணிக்கையிலான வான் கோவின் ஓவியங்களையும் கொண்டு வந்தார். அவர் மிக அரிதாகவே தனது மைத்துனரின் படைப்புகளை விற்றார். அது அதிக பணத்தை சம்பாதித்துத் தரவில்லை. 1905-ஆம் ஆண்டில், ஆம்ஸ்டர்டாமில் உள்ள ஸ்டெடெலிஜ்க் அருங்காட்சியகம் வின்சென்ட் வான் கோவின் படைப்புகளை ஒரு தனிக் கண்காட்சியில் அறிமுகப்படுத்த ஏற்பாடு செய்தது. ஹெலன் க்ரூலர்-முல்லர் என்ற பணக்காரப் பெண் வின்சென்ட் வான் கோவின் வேலையால் வசீகரிக்கப்பட்டார். இந்தப் பணக்காரப் பெண் வான்கோ நவீன ஓவிய உலகின் மிகத்திறமைவாய்ந்த ஓவியன் என்று அவரைப் பாராட்டி அவரின் ஓவியங்களின் பால் ஈர்க்கப்பட்டாள். 1908 மற்றும் 1929-க்கு இடையில், அவரது கணவர் அன்டனுடன் சேர்ந்து, வின்சென்ட் வான் கோவின் பல படைப்புகளை வாங்கினார், இது அவரது படைப்புகளை ஏனையோரும் பார்த்துப் பாராட்ட ஒரு முக்கியமான தூண்டுதலைக் கொடுத்தது. தற்போதைய க்ரூலர்-முல்லர் அருங்காட்சியகத்தில் அதன் சேகரிப்பில் 90-க்கும் குறைவான ஓவியங்களும் வான் கோவின் 180-க்கும் மேற்பட்ட வரைபடங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இது உலகின் இரண்டாவது பெரிய வான் கோ சேகரிப்பாக திகழ்கிறது. மிகப்பெரிய சேகரிப்பை ஆம்ஸ்டர்டாமில் உள்ள வான் கோ அருங்காட்சியகம் நிர்வகிக்கிறது, இது 1973-இல் திறக்கப்பட்டது மற்றும் நெதர்லாந்தில் அதிகம் பார்வையிடப்பட்ட அருங்காட்சியகங்களில் வான் கோ அருங்காட்சியகமும் ஒன்றாகும்.

36 ஆண்டு காலம் மட்டுமே வாழ்ந்த இந்த மாபெரும் ஓவியக் கலைஞன் வின்சன்ட் வான் கோவின் ஓவியக் கண்காட்சியைக் கண்டு களிக்க விரும்புவோர் பின்வரும் யூரியூப் இணையத்தை உபயோகிக்கலாம்.
https://youtu.be/YBMGVu6GTDw

Bavany.S@thaiveedu.com



## வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக

# காமன் கூத்து



- அருணாசலம் லெட்சுமணன் -

12

மனிதகுல விருத்தியில் இயற்கை நேசிப்பு முக்கியத்துவத்தைப் பெற்று வந்துள்ளது. அதன் முதற்கட்ட அணுகுமுறையான சூரியனின் இயக்கம் மீதான அவதானம் ஆராதனைக்குட்பட்டதாக விளங்குகிறது. சூரிய உதயத்தை வைத்து நாளொன்றின் பொழுதுகளை வகுத்து பார்க்கும்முறை இற்றை வரை காணப்படுகிறது. மனிதகுல விருத்தியில் மதங்களால், மொழிகளால், மனங்களால், திருமணங்களால், பிரதேசங்களால், இன்னோரன்ன சூழ்நிலைகளால் சமூகங்களைக் குழுமமாகுதல் என்ற போக்கு காணப்படுகிறது. சமூகங்களின் உருவாக்கமும் தோற்றப்பாடுகளும் இதன் அடிப்படையிலேயே உருவகம் பெற்றுள்ளன. இலங்கையின் பூர்வீகத்தில் பல இனக்குழுமங்கள் பற்றிய அவதானங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவைகளாகும். நிலத் தொடர்பு, புவியியல், காலநிலை மாற்றங்கள் என்பன புதிய சமூகக் குழுமங்களின் உருவாக்கத்திலும் செல்வாக்குப் பெற்றதாக விளங்குகின்றன. அவ்வகையில் இந்திய வம்சாவளி என்ற அடையாளப்படுத்தல் மலையக மக்கள் என்ற பரிமாணத்தில் கவனத்தைப் பெற்ற ஒன்றாகக் காணப்படுகின்றது.

இயற்கை வழிபாட்டிலும் நேசிப்பிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட நிலையில் நாளொன்றின் பொழுதுகளையும் ஆராதிப்பவர்களாக மலையக மக்களும் விளங்கியுள்ளார்கள். வைகறை, காலை, நண்பகல், மாலை, இரவு, சாமம் ஆகிய பொழுதுகளை இனங்காண்பதில் சூரியனை மையப்படுத்திய புவியின் நகர்வே காரணமாகிறது. அவ்வகையில் உலகின் சக்தி முதலாக சூரியன் உருவகிக்கப்பட்டு வழிபடப்படுகிறான். காலை, மாலை வேளைகளில் கற்பூரத்தில் முறையே கிழக்கு, மேற்கு திசைகளில் ஆராத்தி எடுத்து வழிபடுகின்ற வழக்கமும் மலையகத்தில் காணப்படுகிறது. அவ்வாறே தை முதலாம் நாள் இயற்கை சக்தி முதலாகிய சூரியனுக்குப் பொங்கல் வைத்து படைக்கின்ற நடைமுறையும் தமிழர்கள் மத்தியில் கட்டாய நிகழ்வாக பின்பற்றப்டுகின்ற தன்மையும் அவதானத்திற்குரியது.

புவியின் சூரியனை மையப்படுத்திய சுழற்சி தினசரி பொழுதுகளை நகர்த்திச் செல்கின்றன. சந்திரனின் நகர்வு மாதங்களின் நகர்வினை ஏற்படுத்துவதாக அமைகிறது. வருடமொன்றினை ஆறு பெரும் பொழுதுகளாகப் பார்க்கும் வழக்கமும் கவனத்திற்குரியது. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகியவாறு இப்பொழுது வகைப்படுத்தலுக்குட்படுகிறது. கார்காலமாக ஆவணி, புரட்டாசி மாதங்களும் கூதிர் காலமாக ஐப்பசியும் கார்திகையும், மார்கழி, தை மாதங்கள் முன்பனி காலமாகவும், மாசி, பங்குனி பின்பனி காலம் எனவும் சித்திரை, வைகாசி என்பன இளவேனில் காலமாகவும் ஆனி, ஆடி மாதங்கள் முதுவேனில் பருவமாகவும் கொள்ளப்படுகிறது.

எந்தவொரு காரியத்தையும் வளர்பிறையில் தொடங்குகின்ற போக்கும் சிறப்பு வழிபாடுகளைப் பௌர்ணமி தினத்தில் மேற்கொள்கின்ற நம்பிக்கையும் கவனத்திற்குரியது. அவ்வகையில் மலையக மக்களிடத்தே சந்திரன் வழிபாடும், நம்பிக்கையும் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளதை அறியலாம். நிலா வெளிச்சத்தை இரசித்தல், நிலாச்சோறு ஊட்டுதல் தொடக்கம் சந்திர கிரகணம் தொடர்பாக அணுகப்படும் விதங்களும் கவனத்தைப் பெறுகின்றன.

உலகின் சக்தி முதல் என்ற வகையில் ஒவ்வொரு மதங்களும் மார்க்கங்களும் சூரியனுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளன. அவ்வகையில், இந்து சமயத்தின் ஒரு கூறாக விளங்கும் சௌரம் மதத்தின் மூலவராக சூரியன் காணப்படுகின்றார். சைவசித்தாந்த சாத்திரங்களும் சூரியனை மிகச் சிறப்பாக உருவகிக்கின்றன. 'தூரத்தே நெருப்பை வைத்துச் சாரத்தைத் தருபவனாக சூரியன் சிறப்பிக்கப்படுகிறான். சைவ சித்தாந்த சாத்திரங்கள் சூரியனைச் சிவத்திற்கும், சூரியக்கதிர்களைச் சிவசக்திக்கும் உவமிக்கும் நிலையும் கவனத்திற்குரியதாகும். கோள்களின் தலைவனாகிய சூரியன் புறத்தே பௌதீக இருளை நீக்கும் செயற்பாடு ஆச்சரியத்திற்குரிதாக விளங்குகிறது. இந்து சமய குரவர்களது சித்திரிப்பிலும் சூரியன் முக்கிய இடத்தை வகிக்கின்றான்.

tg.theeban@gmail.com



பௌதீக இருளை அகற்றுவதில் சூரியனின் வகிபங்கு எந் தளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ, அந்தளவில் மனத் திருளை நீக்குவதிலும் சிவசூரியனின் வகிபங்கு முக்கிய மானது. சூரியனின் அருளைப் போற்றும் குரவர்களின் முன் வைப்புகளும் இதனை உறுதிசெய்கின்றன. எடுத்துக்காட் டாக 'அருக்கனாவான் அருரனுரு அலலனோ' என அப்பரும், 'இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தொழுகின்ற ஞாயிறே போன்று நின்றநின் தன்மை நினப்பற நினைத்தேன்' என்ற மாணிக்கவாசகரது கூற்றும் கவனத்திற்குரியதாகும்.

சூரியனை எமனின் தந்தை என அணுகப்படுகின்ற மரபும் புராணங்களின்பால் அவதானிக்கலாம். எமனுக்கு நடுவன் எனப் பெயர் சுட்டுவதைப் போலவே சூரியனையும் இப்பெ யரால் அழைப்பார்கள். சூரியன் புராணங்களிலும் இதிகாசங் களிலும் சிறப்பிக்கப்படுவதை அவதானிக்கலாம். மண்ணில் உயிர்கள் தோன்றி உடல் வளர்ச்சி பெற மூலமாகவும் சூரியன் அமைகிறான். உடலில் ஏற்படும் பல்வேறு நோய்க ளுக்கு நிவாரணமாகவும் சூரிய ஒளி அமைகின்றது. தாவரங் கள், நீர்வாழ்வன, பறப்பன, ஊர்வன, விலங்குகள், மனிதர் கள், தேவர்கள் என உயிரினங்களைப் பாகுபடுத்தும் மரபு நீண்டகாலமாகவே பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்உயிரினங் களின் இயக்கத்திற்கு மூலவராகச் சூரியனே உள்ள நிலை யில் தாயாகவும் தந்தையாகவும் சூரியன் சிறப்பிக்கப்படு கின்றமையும் கவனத்திற்குரியது. இதன் தொடர்ச்சி நிலை யில் காயத்திரி வழிபாடு தொடர்பான அவதானமும் கவனத் தைப் பெறுகின்றது. இவ்வழிபாட்டில் காயத்திரி மந்திரம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. காயத்திரிக்குச் சாவித் திரி, சரஸ்வதி ஆகிய பெயர்களும் உள்ளன. எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் தூய்மையை வலியுறுத்தும் கட்டப்பாட்டில் காயத்திரி மந்திரத்தின் மீதான நம்பிக்கையும் அவதானத்திற்குரியது. இவ்வகையில் சூரிய வழிபாடும் அதனில் இருந்து தொடர்ந்த காயத்திரி வழிபாடு மீதான ஈடுபாடும் கவனத்திற்குரியதாகும். மலையக மக்களின் வாழ் வியலோடு சூரியன் நெருக்கமான தொடர்புற்று நோக்கப்படு கிறது. அதன் அடையாளமாகச் சூரியன் பாத்திரம் தேவர் சபையிலும் அடையாளப்படுத்தப்படுவதைக் காணலாம். அவ்வாறே மன்மதனின் பயணப்பாதையிலும் சூரியன் பாத் திரம் அவதானத்திற்குரியதாகக் காணப்படுகிறது. பொழுது களின் நகர்வுகளைச் சித்திரிக்கும் வகையில் இப்பாத்திரத் தின் பங்கேற்பு அடையாளமாக அமைகிறது. சூரியனின் சிறப்பை போதிக்கும் பல தோத்திரங்கள், பாடல்கள் இலக் கியங்களில் உள்ளன. அவற்றைத் தழுவியவாறும் காமன் கூத்தில் பாடல்கள் இசைக்கப்படுவதை அவதானிக்கலாம். சூரியனின் சிறப்பை எடுத்துக்காட்டும் பாடல்களுள் பின் வரும் பாடலும் குறிப்பிடத்தக்கதாகும்.

***'மாறாத விழிநோய்கள் தலைவலி கபாலங்கள்***
***மண்டைநோய் கிறுகிறுப்பு***
***வலிகொண்ட பல்லுநோய் செவிநோய்கள் முகமேவும்***
***வாதநோய் சுரநோய்களும்***
***ஆறாத கண்டநோய் நாவில்வரு பிளவைநோய்***
***ஆனந்த வாய்வுகளெலாம்***
***ஆவணித் திங்கள்வரும் ஆதிவா ரத்திலே***
***அன்புடன் நோன்பியற்றிக்***
***கூறான பொங்கலும் பூசையும் செய்துபின்***
***கோளறும் பதிகமோதிக்***
***கும்பிடும் பேர்களைக் கும்பிட்டு விலகுமிது***
***குவலயங் கண்டவுண்மை***
***தேறாத வர்க்கும்அருள் பேறான கண்கண்ட***
***தெய்வமே அடிபோற்றி ஓம்***
***சிவசூரியாயநம சிவசூரியாயநம***
***சிவசூரியாய நமவே...'***

எனச் சூரியன் சிறப்பிக்கப்படுகிறான். பொழுதுகளின் நகர் வில் சூரியனோடு சந்திரனும் இணைந்து கொள்கிறான். இதுவே இயற்கையின் நியதி. மன அமைதி, மனக் குழப் பங்களை நீக்குதல் மற்றும் ஆரோக்கிய மேம்பாடு ஆகியன வற்றை வேண்டி சந்திரனைத் தரிசிக்கும் வழக்கம் காணப்படு கிறது.

அமாவாசை, அமாவாசைக்கு அடுத்துவரும் நாட்கள், சந்திர னின் ஹோரை நாட்களில் விசேட பூசைகள் இடம்பெறும். இந்நாட்களில் சந்திர காயத்திரி மந்திரத்தை உச்சரித்து வழி படுவர். இருபத்தேழு நட்சத்திரங்களைக் கொண்ட தக்கனின் பிள்ளைகளே சந்திரனின் மனைவிகள் ஆவர். தக்கனின் கதையம்சத்தோடு இது தொடர்புபடுகிறது. தக்கனின் இரு பத்தேழு பிள்ளைகளிடமும் மாறா அன்பு செலுத்துவேன் என்ற உறுதிமொழியுடனேயே சந்திரன் அவர்களைத் திரு மணம் செய்துகொள்கிறான். இந்நிலையில் இருபத்தேழு மனைவிகளில் ரோகினி நட்சத்திரத்தின் மீது மாத்திரம் அதீத ஈடுபாடு கொண்டமையை கண்டித்து தக்கனின் சாபத்திற்கு சந்திரன் உள்ளாகிறான். பொதுவாக விநாயகரின் நடனத் தைப் பார்த்து சிரித்தமையின் விளைவாகவே நிலவு தேய் வடைந்த கதையம்சம் பற்றி அறிவோம். மாறாக, தக்கனின் சாபத்தினாலேயே சந்திரன் இந்நிலைமையைப் பெற்றதன் சித்திரிப்பும் காணப்படுகிறது. சாதகத்தில் அதீத ஈடுபாடு கொண்ட நிலையில் சாதக கட்டமைப்பில் சந்திரனின் பகை என்ற நிலைமை முக்கிய அவதானத்திற்குரியதாக அமை கிறது. இந்நிலைமைக்குப் பரிகாரம் தேடும் முனைப்பில் சந்திர வழிபாட்டுடன் ஈடுபாடு கொண்டவர்களாக மலையக மக்களும் திகழ்கிறார்கள். அவ்வகையில் சூரியன் பாத்திரத் தைப் போலவே சந்திரனின் பாத்திரமும் அமைகிறது. சந்திர னின் தேவர்சபை வருகையையும் மதனின் பயணப்பாதை யில் சந்திரன் பற்றிய சித்திரிப்பும் காமன்கூத்தில் கவனம் பெறுகிறது. அவ்வாறான சித்தரிப்புகளில் சந்திரன் பற்றி பாடப்படும் பின்வரும் பாடலும் கவனத்தைப் பெறுகிறது.

***'தேம்பல் பிறையழகா திகட்டாத சொல்லழகா***
***சாம்பசிவன் மருகா சரசே என் வடிவழகா***
***யோசனையில்லாமல் மோசம் போனார் வெனதுண்டு***
***நேசரே அக்கதையில் நிகழ்த்துவேனுனக்கென்று***
***பிரகஸ்பதியென்றும் புஸ்பமுள்ள குருவிடத்தில்***
***திறமுள்ள சந்திரனும் தேவசேன மைந்தர்களும்***
***ஆயுதவித்தைக் கற்க அவறடைக்கலமாகிடவே***
***தேய்ப்பிறை சந்திரனின் தேஜகம் துலங்கிடவே...'***

என தொடர்ந்து

***'பதினைந்து நாள் வரைக்கும் தேகம் குறையும்***
***சொன்னேன்***
***அமாவாசையன்று முதல் வளர்வாய் பதினைந்துநாள்***
***கமழும் பௌர்ணமி முதல் கரைந்துபோகும் உன் ஜடம்'***

எனத் தாரையோடு சந்திரன் தொடர்புபடும் கதையம்சத்தில் சந்திரனின் தேய்ப்பிறை, வளர்ப்பிறை நிலைமைகளைச் சித் திரிக்கும் ஓர் அம்சமாக அமைகிறது. இச்சித்தரிப்பும் ரதி யானவள் மதனை நோக்கி இந்நிலைமை உனக்கும் வரக் கூடும் என எச்சரிப்பதாக அமைகிறது.

சூரியன், சந்திரன் பாத்திரங்களின் ஒப்பனையில் இப்பாத்தி ரங்களுக்கு அணிவிக்கப்படும் கீரீடங்கள் மீதான கவனம் முக்கியத்துவம் பெறுகிறது. சாதாரண பற்றரி, மோட்டார், வயர் ஆகியவற்றை பிரயோகித்து அக்கீரீடத்தை வடிவமைக் கும் நுட்பம் அவதானத்திற்குரியதாகும். மின் உபகரணம் என்ற வகையில் மின்சூல் (டோச் லைட்) பாவனையுடன் மாத்திரம் மட்டுப்படுத்திக்கொண்ட நிலையில் இவற்றை வைத்து மிகுந்த பொருத்தப்பாடுடன் கிரீடத்தை வடிவமைக்கும் நுட்பம் மிக அபாரமாக விளங்குகிறது. அவ்வாறே மலையக மக்களின் நாடக முயற்சியிலும் திரைப்படத்தில் பெயர் விப ரங்களை காட்சிப்படுத்தும் விதத்தைப் போன்று நாடகம் தொடர்பான விடயங்களைக் காட்சிப்படுத்த எடுத்த பிரயத் தனங்கள் பிரமிப்பிற்குரியதாக விளங்குகிறது. இவ்அரங்க முயற்சிகளில் பந்தங்களைப் பிரயோகிக்கும் நுட்பமும் மலையக அரங்க ஒளியமைப்பின் கவனத்தைப் பெற்றதாக விளங்குகிறது எனலாம்.

தமிழர்களின் வாழ்வியலோடு சோதிடம் மிக முக்கிய தொடர்பை கொண்டுள்ளது. இச்சோதிடம் குறித்த பிரயோ கங்களை புவியியல், வானசாஸ்த்திரவியல், உளவியல் ஆகிய துறைகள் கொண்டுள்ளன. இத்துறையினை ஈடுபாட்டு டன் ஆர்வத்தோடு பயின்று தேர்ச்சிபெற்ற நிலையில் தோட்





டங்களில் சோதிடர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இத்துறையை நேசித்து சுயமாக கற்றுத் தேர்ந்தவர்களாக இவர்கள் விளங்கினார்கள். மூலிகைகளைக் கொண்டு வைத்தியம் மேற்கொள்ளும் அறிவையும் வளர்த்துக்கொண்டு இத்துறையில் ஆர்வத்தொடு ஈடுபட்டுள்ளார்கள். சோதிடர்கள் அறிவார்ந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார்கள். அவர்களை அடையாளப்படுத்தும் முனைப்பில் காமன் கூத்தில் சோதிடர் பாத்திரமும் இடம்பெறுவதுண்டு. இக்கூத்தில் சோதிடராக வலம் வரும் இப்பாத்திரம் மதன், ரதி ஆகியோரின் சோதிட பலன்களை வெளிப்படுத்துவதாக அமையப்பெறும். மலையக மக்களும் சோதிடம் சார் நம்பிக்கை மிகுந்தவராகக் காணப்படுகின்றனர். அது தொடர்பான கவனத்தை ஏற்படுத்தும் ஏற்பாடாக இப்பாத்திரத்தின் வகிபங்கும் அமைகின்றது.

இம்மக்களோடு மிகத் தொடர்புபட்டவர்களில் ஆசாரிமார்களும் முக்கியமானவர்கள். பிள்ளைப் பிறப்பின் பின்னர் பெண் பிள்ளைகளாக இருந்தால் காதுகுத்து, கல்யாண சடங்கு கட்டாயமான நிகழ்வாக பின்பற்றப்படுகிறது. அதனை நிகழ்த்துதில் ஆசாரிமார்களின் வகிபங்கு அவசியமானவொன்றாகத் திகழ்கிறது. பருவம் எய்தியதுடன் திருமணச் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. இத்திருமண நிகழ்வில் மணமகனால் மணமகள் கழுத்தில் கட்டப்படும் தாலியை உருவாக்கும் பொறிமுறை மிகுந்த பக்திபூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. இப்பணிகளில் ஆசாரிமார்களே பிரதான இடத்தை வகிக்கிறார்கள். அவர்களை அடையாளப்படுத்தும் முனைப்பில் காமன் கூத்தில் ஆசாரி பாத்திரமும் இடம்பெறுவதுண்டு. மதனின் பயணப்பாதையில் சோதிடரைப் போல வந்து போகின்ற பாத்திரமாக ஆசாரியாரும் திகழ்வதுண்டு. இவ்வாறே பிறப்பு முதல் பருவமடைதல், மரணமடைதல் நிகழ்வுகளில் சலவைத் தொழிலாளி, சிகை அலங்கரிப்பாளர் ஆகியோரின் பங்கேற்பும் முக்கியத்துவம் பெறுகிறது. இவர்கள் மக்களின் வாழ்க்கையோடு அனுதினமும் தொடர்பு கொண்டவர்களாக விளங்குகிறார்கள். அதன் காரணமாகத்தான் தோட்ட குடியிருப்புகளுடன் இணைந்தே வாழ்ந்தார்கள். இச்சலவைத் தொழிலாளி, சிகை அலங்கரிப்பாளர்களின் சேவையின் நிமித்தம் தொழிலாளர்களது மாத சம்பளத்தில் ஒருதொகைப் பணத்தை அறவிட்டே சலவைத் தொழிலாளி, சிகை அலங்கரிப்பாளர் ஆகியோரின் சம்பளம் தீர்மானிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அவர்களை அடையாளப்படுத்தும் பாத்திரங்கள் காமன் கூத்தில் கூத்தை நிகழ்த்துவதில் முக்கிய பங்கை ஆற்றிக்கொண்டிருப்பார்கள் என்பது கவனத்திற்குரியதாகும். சலவைத் தொழிலாளி, சிகை அலங்கரிப்பாளர் ஆகியோர் அம்மன் வழிபாட்டு சடங்குகளோடு நெருங்கிய தொடர்புடன் காணப்படுகின்றமையும் கவனத்திற்குரியதாகும்.

காமன் கூத்தில் அந்தணர் பாத்திரமும் முக்கிய பாத்திரமாக உள்வாங்கப்பட்டிருந்த நிலையில் அப்பாத்திரம் தற்போது கிரியைகளை நிகழ்த்துபவராகப் பொறுப்பேற்கின்ற நிலையில் அந்தணர் பாத்திரம் இக்கூத்தில் இருந்து விலக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தோட்டத்திலுள்ள சாதாரண மாந்தர் ஒருவரே அந்தணராக வேடம் தரித்து திருமணத்தை நடத்த வேண்டியதாகத்தான் கூத்தின் கட்டமைப்பு காணப்படுகிறது. அப்பாத்திரம் வடிவமைக்கப்படாதபோது காமன் மாஸ்ட்டர் நடத்தி வைக்கும் வழமை காணப்பட்டது. அம்மன் வழிபாட்டில் நெருங்கிய தொடர்பை பேணி வந்த மலையக மக்கள் இவ்வழிபாட்டை நாட்டார் வழிபாட்டு அம்சங்களுடனேயே அணுகி வந்தார்கள். அண்மைக் காலங்களாக ஆகம முறைப்படியான வழிபாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கி வருவதை அவதானிக்க முடிகிறது. தோட்டப்புற ஆலயங்களில் பிராமணர்கள், பிராமணத்தை தழுவிய

வர்கள் பூசை வழிபாடுகளில் ஈடுபடுகின்றமை கவனத்திற்குரியதாகும். அத்தொடர்பு நிலையில் ஆலய வளாகத்தை அண்மித்த களத்தில் இடம்பெறுவதால் இத்திருமணத்தை ஆகம முறைப்படியே நிகழ்த்தும் நிலை காணப்படுகிறது. ரதி மதன் திருமணத்தை நடத்துவதற்கு தட்சணை வைத்தே நிகழ்த்த வேண்டிய கட்டாயம் நிலவுகிறது. இந்நிலைமை மக்கள்மய நிலையில் இருந்து விலகிச் செல்வது தொடர்பில் விமர்சனங்கள் எழுகின்றன.

காமன்கூத்தின் அரங்கமைப்பில் காமன் பொட்டல் பல்வேறு களங்களைக் காட்சிப்படுத்துவதாக அமையப்பெறும். மதன், ரதி உரையாடல் தளம், தேவர் சபை, திருமணம் நிகழும் இடம், ஒப்பனைக்களம், காளிமுற்றம், பந்தங்களோடு வருகை தரும் பாத்திரங்களை தயார்படுத்தும் இடம், மருள் வந்தவர்களை ஆற்றுப்படுத்தும் இடம், தக்கன் யாகசாலை, சிவன் தவமிருக்கும் பீடம், பார்வையாளர்கள் அமர்ந்திருக்கும் சூழவுள்ள பிரதேசம், பார்வையாளர்களுக்கு தேநீர் தயார்படுத்தும் இடம் என ஒவ்வொரு களங்களின் செயற்பாடுகளும் கவனத்தை ஏற்படுத்துகிறது. மதனின் பயணத்தைத் தொடர்ந்து ரதியானவள் சற்று ஓய்வு நிலையில் இருப்பதை அவதானிக்கலாம். தேவலோகம் செல்லும் நிலையில் முதலில் தேவர்சபைக்கு மதன் செல்வதாகவும் அங்கு இந்திரனைச் சந்திப்பதாகவும் சித்தரிக்கப்படுகிறது. பெரும்பாலான இடங்களில் இந்திரனைச் சந்திக்கும் காட்சி காட்டப்படுவதில்லை. தூதுவரின் தகவலை அறிந்த நிலையில் நேரடியாகச் சிவன் தவம் செய்யும் இடம் நோக்கி நகரும் நிலையே காணப்படுகிறது. மதன் இந்திரன் உரையாடல் இடம்பெற்றதாக அமைந்த சித்திரிப்புகள் மீதான அவதானம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்நிலையில் மன்மதரை வரவேற்கும் தேவலோகக் காட்சி பின்வருமாறு சித்தரிக்கப்படுகிறது.

தேவலோகத்தில் சூரியனும் சந்திரனும் ஒருங்கே வீற்றிருக்கும் காட்சியை அவதானிக்க முடிகிறது. அவ்வரங்கில் காசியப்ப முனிவருக்கும் தனுவுக்கும் பிறந்த அட்டமா சக்திகளைப் பெற்ற அசுரர்களான தானவர்களும் வீற்றிருக்கிறார்கள். அவ்வாறே ஒளியால் படைக்கப்பட்ட மலக்குகளைச் சேர்ந்த வானவர்களும் இவ்வரங்கில் வீற்றிருக்கிறார்கள். இமயவர் உட்பட்ட ரிசிமார்களும் வீற்றிருக்கும் அரங்காக தேவர்சபை திகழ்கிறது. மதனின் தேவலோகப் பிரசன்னத்தைத் தொடர்ந்து மதனை வரவேற்குமுகமாக அனைவரும் எழுந்து நிற்கிறார்கள். மதன் தலைவணங்கி சபையினுள் பிரவேசிகின்றான். மதனின் வரவை எதிர்பார்த்த நிலையில் தேவர் சபையின் தலைவனான இந்திரன் மதனுக்கு தாம் அழைத்ததன் நோக்கம் பற்றி பின்வருமாறு எடுத்துரைக்கின்றான்.

***'ஆவதாகட்டும் மென்று - மதன்***
***அண்டர்சபை சென்றனரே***
***கண்ணாயிரம் படைத்த***
***மன்னா என்னையழைத்த***
***காரியமென்ன வென்று - மதன்***
***வீரியமாய் கேட்கையிலே***
***கணவாயிரப் படையோன்***
***மனமகிழ்ந்தேதுரைத்தான்***
***காமராஜேந்திரனே - உன்***
***மாமனார் நீலகண்டன்***
***கடுந்தவஞ் செய்வதாலே***
***ககனருக்கு மென்மேலே***
***கலவித்தொழில் மாறுபட்டு***
***பலசிதமாய்த் துன்பமுற்று***
***கவலை கொண்டதோர் நிமித்தம்***
***அவசரமா யுமையழைத்தோம்***
***கங்காளனை யடுத்து***
***கொங்குமலர் கணைவிடுத்து***
***கர்த்தன் மாதபசழித்து***
***சிந்துஜனே வாருமென...'***

என இந்திரன் சார்பான குரல் அண்ணாவியாரால் பாடலாகப் பாடப்படுவதாகவும் அமைகிறது. காமன் கூத்தில் பங்கேற்கும் பாத்திரங்களில் பெரும்பாலான பாத்திரங்கள் சபைக்குப் பிரசன்னமாகியமையை அவதானிக்கலாம். இறுதிக்கட்ட நகர்வில் பங்கேற்பதற்காக இன்னும் சில பாத்திரங்கள் மாத்திரமே தயார் நிலையில் வைக்கப்படுவார்கள். இந்நிலையில் ஆட்ட நடவடிக்கைகளில் இருந்து ரதி பாத்திரம் சற்று ஓய்வை எடுத்துக்கொள்வதையும் அவதானிக்கலாம்.

கதையோட்டத்தின்படி மதனைப் பிரிந்த நிலையில் அந்தப்புரத்தில் துக்கம் தாளாத நிலையில் ரதியானவள் வீற்றிருப்பாள். இந்நிலையில் ரதியுடன் தோழிப் பெண்களும் கூடவே இருப்பார்கள். இக்காட்சியை சித்திரிக்கும் நிலையில் இக்கூத்தில் அங்கம் வகிக்கும் தோழிப்பெண்களும் காட்சிப்படுத்துவதுண்டு. இக்காட்சி அரங்க வடிவமைப்பு, ஒப்பனைத்திறன் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக அமைவதுண்டு. இந்நிலையில் தோழிப் பெண்கள் சூழ அமர்ந்திருக்க பஞ்ணையில் சாய்ந்தவாறு ஓய்வெடுக்கும் ரதியானவள் மதனேடு தனித்திருந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறாள். அந்நிலைமையைச் சித்திரிக்கும் பாடல் வரிகள் அவதானத்தைப் பெறுகின்றன.

***'சீரோக்கியமாய் விளங்கும் ஆரோக்கியமாபுரத்து***
***செஞ்சன் தரும் மரசூழ மஞ்சலின் சோலையிலே***
***செய்ய மலர் மெத்தையின் மேல் வையம் புகழ் மதனும்***
***ரதியாளும் மேவும் சமயத்தில் சேர்ந்து முகத்தோடு***
***ஆர்ந்து கண்ணோடு கண்ணை சிந்தை மகிழ***
***வைத்து கண்***
***நினைத்து தேசமெல்லாம் புகழும் வாசம் பரிமளக்க***
***தேக்கு பரிமளமாம் பாக்கு மதன் கையிலிட்டு***
***திருவான வெற்றிலையை அவர் சுருளாகவே***
***மடித்து...'***

என்ற வரிகளோடு தொடரும் பாடல் ஆண், பெண் தம்பதிகள் உடல் ரீதியில் இணையும்போது ஏற்படும் லீலை நிலைகளை எடுத்துரைப்பதாக அமைகிறது. அச்சம்பவத்தின் நிலைமையை நயத்துடன் முன்வைக்க விளைவதை அறியலாம். இவ்விடயம் ஆபாசமாக இருந்த போதிலும் ஆபாசம் என்ற நிலையில் இருந்து விலகி இலக்கிய ரசனையுடன் அணுகப்படுகிறது.

(தொடரும்...)



letsumanan.a@thaiveedu.com



# தற்காலப் பாலஸ்தீனப் பெண் கவிதைசொல்லிகள்:

## எதிர்ப்பு, நெகிழ்ச்சி, அன்றாட வாழ்வின் குரல்கள்

### ஈழக்கவி

பாலஸ்தீனக் கவிதை என்பது நீண்ட காலமாகவே, ஒரு தேசிய அடையாளத்தின், எதிர்ப்பின் மற்றும் நீடித்திருக்கும் துயரத்தின் மிக முக்கியமான கலை வடிவமாக இருந்து வருகிறது. பெரும்பாலும் 'எதிர்ப்பின் இலக்கியம்' (Resistance Literature) என்று குறிப்பிடப்படும் இதன் மையத்தில், ஆக்கிரமிப்பு, நாடு கடத்தல் (நாக்பா), மற்றும் அன்றாட வாழ்வின் போராட்டங்கள் உள்ளன. இந்தக் கவிதை வெளியில், தற்காலப் பாலஸ்தீனப் பெண் கவிஞர்களான (Contemporary Palestinian Women Poets) ஹிபா அபு நாடா (Hiba Abu Nada, 1991-2023), மாயா அபு அல்-ஹையாத் (Maya Abu Al-Hayyat, 1980), சுஹைர் ஹம்மாத் (Suheir Hammad, 1973), ஷேக்கா ஹெல்லாவி (Sheikha Helawy, 1968), ரஃபீஃப் சியாதா (Rafeef Ziadah, 1979), டாரீன் டாடூர் (Dareen Tatour, 1982) முதலானோர் ஒரு தனித்துவமான மற்றும் சக்திவாய்ந்த அத்தியாயத்தை எழுதுகிறார்கள். அவர்களது குரல்கள் வெறும் தேசியவாதப் போராட்டத்தின் எதிரொலிகள் மட்டுமல்ல; அவை ஆழமான, சிக்கலான மற்றும் நுண்ணிய மனித அனுபவங்களின் பதிவுகளாகும்.

ஆக்கிரமிப்புக்கு எதிரான அரசியல்ரீதியான எதிர்ப்பு (Resistance) மட்டுமல்லாமல், இருத்தல் (Existence), மறக்க மறுத்தல் (Refusal to Forget), மற்றும் அடையாளத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய 'சுமூத்' (Sumud - நிலைத்திருத்தல் / உறுதி) முதலான கருத்தாக்கங்களைப், பெண்ணின் பார்வையில் முன்வைக்கின்றனர். பெரும் துயரங்கள், இழப்புகள் மற்றும் தொடர்ச்சியான வன்முறைக்கு மத்தியிலும் நம்பிக்கையையும், வாழ்விற்கான உறுதியையும், மீண்டும் கட்டியெழுப்பும் சக்தியையும் வெளிப்படுத்துதல் என்பது அவர்களது நெகிழ்ச்சி (Resilience) ஆயிற்று. பெரிய அரசியல் களத்திற்கு அப்பால், வீடு, குடும்பம், தாய்மை, நட்பு, தெருக்கள் மற்றும் தனிப்பட்ட உணர்வுகள் மூலம் ஆக்கிரமிப்பின் பாதிப்பை இக்கவிதைகள் பேசிச் செல்கின்றன. இக்கவிதைகள் போராட்டத்தை ஒரு மனிதமயப்படுத்தப் பட்ட, தனிப்பட்ட தளத்திற்குக் கொண்டு வருவதோடு அன்றாட மனித வாழ்வின் குரல்களாகவும் (Voices of Everyday Life) ஓங்கி ஒலிக்கின்றன.

பாலஸ்தீனப் பெண் கவிதைசொல்லிகளின் கவிதைகள், நாட்டின் ஆக்கிரமிப்பு, இடம்பெயர்வு (Diaspora) மற்றும் ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பின் குரலாகவும், அதே நேரத்தில் அன்றாட வாழ்வின் மென்மையான மற்றும் சவாலான தருணங்களைப் பேசும் குரலாகவும் ஒலிக்கின்றன. ஃபத்வா துக்கான் (Fadwa Tuqan - 1917–2003) போன்ற முன்னோடிகள் இக்கவிதைகளுக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளனர். துக்கானின் கவிதைகள் தனிப்பட்ட உணர்வுகளையும், தேசத்தின் போராட்டத்தையும் பிணைத்துக் காட்டின. தற்காலப் பெண் கவிஞர்கள் இந்த மரபைத் தொடர்வதோடு மட்டுமல்லாமல், பாலினச் சமத்துவமின்மை (Feminism), தாயகம், இழப்பு, நம்பிக்கை மற்றும் தனிப்பட்ட அடையாளம் போன்ற பரந்த தலைப்புகளில் எழுதுகின்றனர்.

இவர்கள் தங்கள் கவிதைகள் மூலம் தனிப்பட்ட மற்றும் சமூகத்தின் கூட்டு அனுபவங்களைப் பிணைத்து, உலகிற்கு ஒரு சக்திவாய்ந்த மற்றும் நீடித்த செய்தியை வழங்குகிறார்கள். அவர்களின் இலக்கியப் பங்களிப்பு பாலஸ்தீன மக்களின் மீள்திறன் (resilience) மற்றும் சகிப்புத்தன்மையின் சான்றாகும் இக்கவிதைகள் பாலஸ்தீனப் போராட்டத்தையும், தனிமனித உணர்வுகளையும், பெண்ணியக் கண்ணோட்டத்தையும் வெளிப்படுத்துகின்றன.

**தற்காலப் பாலஸ்தீனப் பெண் கவிதைசொல்லிகளின் கவிதைகளில் பொதுவாகக் காணப்படும் கருப்பொருள்கள்:**

- **நிலமும் – தாயகமும்:** பாலஸ்தீன நிலத்தின் மீதான உரிமை, தாயகம் மீதான ஏக்கம் (nostalgia) மற்றும் அதி லிருந்து பிரிந்த துயரம்.
- **பெண் அடையாளம்:** ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப் புகளை எதிர்த்தல், குடும்பம், தாய்மை மற்றும் தனிப்பட்ட ஆசைகள் ஆகியவற்றை ஆக்கிரமிப்புப் பின்னணியில் ஆராய்தல்.
- **நீதி மற்றும் எதிர்ப்பு:** ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமு றைக்கு எதிரான வெளிப்படையான அரசியல் எதிர்ப்பு. அமைதியைக் கெடுக்கும் சக்திகளுக்கு மத்தியில் நீதிக்கான அழைப்பு.
- **அன்றாட மனித அனுபவங்கள்:** போரின் நடுவே உள்ள சமையலறை, குழந்தைகள், பூங்கா போன்ற எளிய அன்றாட வாழ்வின் விவரங்களைப் பதிவு செய்து, அதன் மூலம் மனிதத்தன்மையை வலியுறுத்துதல்.
- **மொழி மற்றும் இடப்பெயர்வு:** அரபு மொழியின் மீதான அன்பு, அதே சமயம் ஆங்கிலம் அல்லது பிற மொழிகளில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள் வதன் சவால்.

பாலஸ்தீனப் பெண் கவிஞர்கள் தங்கள் வாழ்வின் வலி, உறு திப்பாடு மற்றும் கவிதைச் செயல்பாட்டின் மூலம் அரசியல், சமூக மாற்றத்தை உருவாக்கும் கருவிகளாகச் செயல்படுகி றார்கள். இக்கவிகளின் கவிதைகளின் பல அடுக்குள்ள உள்ளடக்கத்தை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

## தேசியப் போராட்டத்தில் தனிப்பட்ட குரல்கள் (Individual Voices in the National Struggle):

முன்னோடிப் பெண் கவிஞரான ஃபத்வா துக்கான் போன்றோரின் பாதையில் பயணிக்கும் தற்கால பெண் கவி ஞர்கள், பாரம்பரியமாக ஆண்களின் ஆதிக்கத்திலிருந்த தேசியப் போராட்டக் கவிதையிலிருந்து விலகி, தனிப்பட்ட மற்றும் உணர்ச்சிகரமான அனுபவங்களை முதன்மைப்படுத் துகின்றனர். பெண்ணின் உடலும், பாலஸ்தீன நிலமும் (Land) பிரிக்க முடியாத பகுதிகளாக, இரண்டும் ஆக்கிரமிக்கப் பட்டு, இரண்டின் மீதான உரிமையும் மறுக்கப்படும் குறியீடுக ளாகக் கவிதைகளில் சித்தரிக்கப்படுகின்றன. வீடு என்பது பாதுகாப்பான புகலிடமாக அல்லாமல், நிலையற்ற மற்றும் இடிக்கப்படக்கூடிய இடமாகவும், புலப்பெயர்வு என்பது வெறும் புவியியல் நகர்வாக அல்லாமல், தலைமுறை தலை முறையாக நீளும் உளவியல் காயமாகவும் பார்க்கப்படு கிறது. பாலஸ்தீனப் பெண் கவிஞர்கள் தேசியப் போராட் டத்தை (National Struggle) வெறும் அரசியல் கோஷங்களிலி ருந்து விலக்கி, தனிப்பட்ட, உணர்ச்சிகரமான மற்றும் மனிதம யப்படுத்தப்பட்ட களத்திற்குக் கொண்டு வருகிறார்கள்.

### ‣ பெண்ணின் உடல் மற்றும் நிலம் (The Female Body and the Land):

**குறியீட்டு ஒருங்கிணைப்பு:** பாலஸ்தீனக் கவிதைகளில், பெண்ணின் உடலும் நிலமும் (Land/ Al-Ard) ஒன்றோ டொன்று இணைந்த குறியீடுகளாகக் கருதப்படுகின்றன. நிலத்தின் மீதான ஆக்கிரமிப்பு, பெண்ணின் சுதந்திரம் மற்றும் உரிமை மீதான ஆக்கிரமிப்பாகப் பார்க்கப்படு கிறது.

நிலத்தைப் பாதுகாப்பது என்பது, பெண் தன் மீதான உரி மையையும், தன் இருப்பையும் (Existence) காத்துக் கொள்வதைக் குறிக்கிறது. ஃபத்வா துக்கான் போன்ற மூத்த கவிஞர்கள் இதை முதன்முதலில் தீவிரமாகப் பயன் படுத்தினர்.

**வளமான தாய்மை:** நிலம் தாய்மையுடனும், வளத்துடனும் (Fertility) இணைக்கப்படுகிறது. ஆக்கிரமிப்பானது இந்த வளமான தொடர்பைத் துண்டிக்க முயற்சிக்கிறது. ஆனால் கவிஞர்கள், தங்கள் கவிதைகள் மூலம் இந்தத் தொடர்பை மீண்டும் நிறுவுகிறார்கள்.

### ‣ வீடும் புலப்பெயர்வும் (Home and Displacement – The Trauma of Nakba):

**‘வீடு’ (Al-Bayt) என்ற கருத்து:** பாலஸ்தீனர்களுக்கு, வீடு என்பது வெறும் நான்கு சுவர்கள் அல்ல; அது வரலாறு, நினைவகம் மற்றும் அடையாளம். ஆனால் ஆக்கிரமிப்பின் கீழ், வீடு என்பது நிலையற்ற, அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் ஒரு இடமாகிறது.

**புலப்பெயர்வின் உளவியல்:** நாக்பா (1948) மற்றும் அதன் பின்னரான புலப்பெயர்வுகளால் ஏற்படும் உடல் ரீதியான இழப்பை விட, கவிஞர்கள் அதன் ஆழமான உளவியல் காயங்களை வெளிப்படுத்துகிறார்கள். வேர்களை இழந்த ஒரு தலைமுறையின் தொடர்ச்சியான உணர்ச்சி இழப்பை (Emotional Loss) விவரிக்கிறார்கள்.

**தனிப்பட்ட சோகம்:** கைதுகள், தடுப்புகள் மற்றும் உறவி னர்களின் இழப்பு போன்ற தனிப்பட்ட சோகங்கள் (Personal Tragedies) தேசியப் போராட்டத்தின் மையக் கதையாக மாற்றப்படுகின்றன. இது போராட்டத்தை ஒரு குடும்ப அனுபவமாகவும் (Family Experience), நீடித்தி ருக்கும் துயரமாகவும் காட்டுகிறது.

## பெண்ணியம் மற்றும் பாரம்பரியத்தின் சவால்கள் (Feminism and Challenges to Tradition):

இவர்கள் ஒரே நேரத்தில் ஆக்கிரமிப்பிற்கும், தங்கள் சமூகத் திற்குள் நிலவும் ஆணாதிக்கக் கட்டமைப்புகளுக்கும் சவால் விடுக்கிறார்கள். தேசியப் போராட்டம் மற்றும் பாலினச் சமத் துவம் ஆகிய இரட்டைப் போராட்டங்களைக் கையாள்வதால், இவர்களின் கவிதைகள் பல பரிமாணங்களைக் கொண் டுள்ளன. அவர்கள் தங்கள் கவிதைகளைப் பயன்படுத்தி, பாரம்பரிய எல்லைகளை உடைத்து, கல்வி, காதல், திருமணத் தேர்வுகள் மற்றும் சமூகத்தில் பெண்ணின் பங்கு குறித்துப் பேசுகின்றனர். பாலஸ்தீனப் பெண் கவிஞர்கள் தேசிய விடுதலைக்காகப் போராடும் அதே வேளையில், தங் களுக்குள்ளேயே உள்ள சமூக மற்றும் பாரம்பரியக் கட்டுப் பாடுகளுக்கு எதிராகவும் கவிதை எழுதுகிறார்கள்.

### ‣ இரட்டைப் போராட்டம் (The Double Struggle):

**பாலினச் சமத்துவம்:** தேசிய முன்னுரிமை காரணமாக, பாலினச் சமத்துவப் பேச்சுக்கள் (Gender Equality)

பெரும்பாலும் 'பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று ஒத்தி வைக்கப்படுகின்றன. இதை எதிர்த்து, தற்காலப் பெண் கவிஞர்கள் தேசிய விடுதலைக்குள்ளேயே பெண்ணின் விடுதலையையும் இணைக்கிறார்கள்.

**ஆணாதிக்கக் கட்டமைப்பு:** தேசியக் கவிதைக் களத்திலும், சமூகக் கட்டமைப்பிலும் இருக்கும் ஆணாதிக்கக் கருத்துக்களையும், பிரதிநிதித்துவங்களையும் (Patriarchal Representations) இவர்கள் கேள்வி கேட்கின்றனர். பெண் என்பவள் 'தியாகம் செய்யும் தாய்' அல்லது 'தியாகியின் மனைவி' என்ற ஒரே பரிமாணப் பாத்திரத்தில் அடைக்கப்படுவதை எதிர்க்கிறார்கள்.

- **பாலியல் மற்றும் காதல் வெளிப்பாடுகள் (Expressions of Sexuality and Love):**

**உணர்ச்சி வெளிப்பாடு:** பாலஸ்தீனச் சமூகத்தில் பொதுவாகத் தடைசெய்யப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப் பட்ட பாலியல் (Sexuality), காதல், மற்றும் இச்சை (Desire) போன்ற தனிப்பட்ட உணர்ச்சிகளை இவர்கள் வெளிப்படையாகப் பேசத் துணிகின்றனர். இது அவர்களின் முழுமையான மனித இருப்பை (Wholeness of their human existence) நிலைநிறுத்துகிறது.

**தனிநபர் தெரிவு (Individual Choice):** கவிதைகள், திருமணத் தேர்வுகள், கல்விக்கான உரிமை, மற்றும் பொதுவெளியில் பெண்ணின் சுதந்திர நடமாட்டம் (Mobility) போன்ற தனிநபர் உரிமைகள் பற்றிப் பேசுகின்றன. பாரம்பரிய எதிர்பார்ப்புகளுக்கு எதிராகப் பெண் தன் வாழ்க்கையின் உரிமையாளராகத் தன்னை நிலைநிறுத்துவதைச் சித்திரிக்கின்றன.

## கவிதை வடிவத்தின் பரிணாமம் (The Evolution of Poetic Form):

பாலஸ்தீனப் பெண் கவிஞர்கள் பாரம்பரிய அரபு கவிதை வடிவங்களை மட்டுமன்றி, சுதந்திர வசனம் (Free Verse), உரைநடைக் கவிதை (Prose Poetry) மற்றும் சமூக ஊடகங்களில் பகிரப்படும் குறுகிய கவிதை வடிவங்களையும் பயன்படுத்துகின்றனர். பல கவிதைகள், துயரங்களுக்கு, குறிப்பாக வன்முறைகள், இழப்புகள் மற்றும் சிறை அனுபவங்களுக்கு நேரடிச் சாட்சியமளிக்கும் ஆவணங்களாக (Testimonials) செயல்படுகின்றன. தற்காலப் பெண் கவிஞர்கள் பாரம்பரியக் கவிதை வடிவங்களைத் தாண்டி, தங்கள் கருத்துக்களைச் சமகால உலகத்திற்குக் கடத்தப் பயன்படுத்தும் புதுமையான வடிவங்களை (Innovative Forms) இந்தப் பகுதி விவரிக்கிறது.

- **பாரம்பரியத்தில் இருந்து நவீனத்திற்கு மாறுதல்:**

**சுதந்திர வசனம் (Free Verse):** பாரம்பரிய அரபு கவிதையின் கடுமையான தாளம் மற்றும் சந்த விதிகளை (Metre and Rhyme Schemes) உதறித் தள்ளிவிட்டு, கவிஞர்கள் சுதந்திர வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். இது அவர்களின் உணர்ச்சி ஓட்டம் மற்றும் அன்றாடப் பேச்சின் இயல்பான தாளத்திற்கு ஏற்ப எழுத உதவுகிறது.

**உரைநடைக் கவிதை (Prose Poetry):** இது கவிதைக்கும் உரைநடைக்கும் இடையேயான எல்லையை மங்கலாக்கி, மிகவும் நேரடியான, சாட்சியமளிக்கும் தொனியில் (Testimonial Tone) எழுதுவதற்கு உதவுகிறது. இது ஆக்கிரமிப்பு மற்றும் வன்முறையின் அனுபவங்களை அதிகத் தீவிரத்துடனும் நம்பகத்தன்மையுடனும் பதிவு செய்யப் பயன்படுகிறது.

- **சாட்சியமளித்தல் மற்றும் ஆவணமாக்கல் (Testimony and Documentation):**

**நேரடி அனுபவப் பதிவு:** கவிதைகள் வெறும் கலை வெளிப்பாடுகளாக அல்லாமல், ஆக்கிரமிப்பின் கீழ் வாழும் வாழ்க்கையின் நேரடி ஆவணங்களாகவும் (Direct documentation) செயல்படுகின்றன. எல்லைச் சாவடிகள் (Checkpoints), ஊரடங்குச் சட்டம் (Curfew), மற்றும் சிறைவாசம் (Imprisonment) போன்றவற்றை இவர்கள் நுணுக்கமாகப் பதிவு செய்கிறார்கள்.

**சமூக ஊடகங்களின் தாக்கம்:** சில இளம் கவிஞர்கள், பாரம்பரிய வெளியீட்டு தளங்களைத் தாண்டி, சமூக ஊடகங்கள் (Social Media) மூலம் தங்கள் கவிதைகளை உடனடியாகப் பரப்புகிறார்கள். இது அவர்களின் குரல்களை உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களுக்குக் கொண்டு சேர்க்கிறது.

கோட்பாட்டுக் கருத்தாக்கங்களான எதிர்ப்பு, நெகிழ்ச்சி, மற்றும் அன்றாட வாழ்வின் குரல்கள் ஆகியவற்றை எவ்வாறு கவிதைகளில் நடைமுறைப்படுத்தியுள்ளார்கள் என்பதை உதாரணங்களுடன் அவதானிக்கலாம். கவிதை உதாரணங்களின் பகுப்பாய்வை விரிவாக மூன்று முக்கியத் தலைப்புகளில் நோக்க முடியும்.

## எதிர்ப்பு (Resistance) மற்றும் சாட்சியமளித்தல்:

தற்காலப் பெண் கவிஞர்களுக்கு, எதிர்ப்பு என்பது வெறுமனே ஆயுதமேந்திய போராட்டம் அல்ல; அது இருத்தலையும், நினைவுகளையும், நீதியையும் கோரும் ஒரு நேரடிச் சாட்சியமளித்தல் ஆகும்.

- **நேரடிச் சாட்சியமளிப்பின் வலிமை**

பகுப்பாய்வு: கவிதைகள், ஊரடங்குச் சட்டம் (Curfew), எல்லைச் சாவடிகள் (Checkpoints), வீடுகளை இடித்தல் மற்றும் சிறைவாசம் போன்ற அன்றாட ஆக்கிரமிப்பின் அனுபவங்களை நேரடியாகவும், விவரமாகவும் பதிவு செய்கின்றன. இது, போராட்டத்தை ஓர் அரசியல் பிரச்சாரமாக அல்லாமல், மனிதத் துயரத்தின் ஆவணமாக (Humanitarian Document) உலகிற்கு முன்வைக்கிறது.

உதாரணம்: ஹிபா கமல் அபு நாடாவின் 'இரவு வணக்கம், காஸா' கவிதையில் வரும், 'குண்டுகளின் சத்தத்தைத் தவிர அமைதியாக' என்ற வரி, அமைதி என்பதே வன்முறையால் சிதைக்கப்பட்டுள்ளது என்பதைச் சாட்சியம் அளிக்கிறது.

- **நிலம் (Land) மற்றும் உடல் (Body) குறியீடுகள்**

  பகுப்பாய்வு: பெண் கவிஞர்கள், தங்கள் உடலையும் பாலஸ்தீன நிலத்தையும் (Al-Ard) பிணைத்து, இரண்டும் ஒரே வகையான ஆக்கிரமிப்பு மற்றும் உரிமைகோரல் அச் சுறுத்தலை எதிர்கொள்வதைக் காட்டுகிறார்கள். நிலத்தைப் பாதுகாப்பது என்பது, தன் சுயம் மற்றும் கௌரவத்தைப் பாதுகாப்பதாகும்.

  உதாரணம்: ஃபத்வா துகானின் கவிதைகளில் காணப் படும், 'நாம் நிலத்துடன் வேரூன்றி நிற்கிறோம்' என்ற கருத்தாக்கத்தின் நவீன வடிவம் இது. இங்கு, மண்ணில் வேரூன்றி நிற்பது என்பது ஆக்கிரமிப்பாளரின் அழிக்கும் சக்திக்கு எதிரான ஒரு நிலையான எதிர்ப்பைக் குறிக்கிறது.

## நெகிழ்ச்சி (Resilience ) மற்றும் உளவியல் உறுதி:

கவிஞர்கள், சுமூத் என்ற கருத்தாக்கத்தை, வெளிப்புறப் போராட்டத்தில் இருந்து உட்புறமான, உளவியல் உறுதியாக (Psychological Steadfastness) மாற்றுகிறார்கள்.

- **நம்பிக்கை மற்றும் ஒளியின் குறியீடுகள்**

  பகுப்பாய்வு: கவிதைகள், பேரழிவின் இருளுக்கு மத்தியில், நம்பிக்கையின் சிறிய தீப்பொறிகள், ஒளி மற்றும் ஆன்மீக ஆறுதல் ஆகியவற்றைக் குறியீடுக ளாகப் பயன்படுத்துகின்றன. இந்த உளவியல் நெகிழ்ச்சியே, எதிர்ப்பை நீடிக்கச் செய்கிறது.

  உதாரணம்: 'எனக்குள்ளே இருக்கும் சிறிய ஒளியே, அணைந்துவிடாதே' போன்ற வரிகள், நம்பிக்கையையும், மனிதத்தன்மையின் சாராம்சத்தையும் உள் மனதின் ஆழத்தில் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத் துகின்றன. இந்த உள்ளொளி (Inner Light) அணைய மறுப்பதே, நடைமுறை சுமூத் ஆகும்.

- **கவிதை ஓர் அடைக்கலமாக**

  பகுப்பாய்வு: சில பெண் கவிஞர்கள், தங்கள் கவிதை களைப் பாதுகாப்பான புகலிடமாக (Refuge) அல்லது ஆறுதல் அளிக்கும் இடமாக (Sanctuary) முன்வைக்கி றார்கள். வன்முறை உலகிலிருந்து தங்கள் அன்புக்குரிய வர்களைக் காக்கும் ஒரு மென்மையான கோட்டையாக இது செயல்படுகிறது.

  உதாரணம்: ஹிபா அபு நாடா, 'என் கவிதை உனக்கான புகலிடம்' என்று கூறுவது, கவிதை எழுதுவது என்பது வெறும் வெளிப்பாடு அல்ல, மாறாக துயரத்திற்கு எதிரான ஒரு தற்காப்பு நடவடிக்கை என்பதைக் காட்டுகிறது.

## அன்றாட வாழ்வின் குரல்கள் (Voices of the Everyday):

பெண் கவிஞர்களின் தனித்துவமான பங்களிப்பினைச் சுட்டி நிற்கும் இக்கவிதைகள் தேசியப் போராட்டத்தை வீடு, குடும்பம் மற்றும் தனிப்பட்ட உறவுகளின் நுண்ணிய களத் திற்குள் கொண்டு சேர்த்தன.

- **வீடும் தனிப்பட்ட துயரமும்**

  பகுப்பாய்வு: தேசியப் போராட்டம் என்பது கைதுகள், இழப்புகள், மற்றும் பயத்தால் நிரம்பிய வீட்டிற்குள்ளேயே நடத்தப்படுகிறது. கவிதைகள், குழந்தைகள், கணவர்கள், மற்றும் தாயின் துயரம் ஆகியவற்றை விவரிப்பதன் மூலம், ஆக்கிரமிப்பின் பாதிப்பை மனிதமயப்படுத்துகின்றன (Humanizing the Conflict).

  உதாரணம்: கைது செய்யப்பட்ட மகனுக்காக ஒரு தாய் பாடும் தாலாட்டு அல்லது தடைசெய்யப்பட்ட தெருக் களில் விளையாட முடியாத குழந்தைகளின் தனிமை ஆகியவை, போராட்டத்தை குடும்ப அனுபவமாக மாற்று கின்றன.

- **பெண்ணியச் சவாலும் வேட்கையும்**

  பகுப்பாய்வு: இக்கவிதைகள் காதல், பாலியல் உணர் வுகள், கல்விக்கான உரிமை மற்றும் சுய விருப்பம் (Individual Desire) போன்றவற்றைத் துணிச்சலாகப் பேசு கின்றன. இது, தேசிய விடுதலைக்கான போராட்டத்தில், சமூக மற்றும் பாலின விடுதலையையும் இணைக்கும் ஒரு பெண்ணியச் சவாலாகும்.

  உதாரணம்: கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், தன் காதலைப் பற்றிப் பேசும் வரிகள், ஆணாதிக்கக் கட்ட மைப்புகளுக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிரான இரட்டை எதிர்ப்பாகச் செயல்படுகின்றன.

இக்கவிதைகளை ஆழமாகப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், பாலஸ்தீனத் தற்காலப் பெண் கவிதைசொல்லி களின் படைப்புகள் வெறும் அரசியல் முழக்கங்கள் அல்ல, மாறாக ஆழமான உளவியல், சமூக மற்றும் மனித அனுபவங்களின் சிக்கலான பதிவுகள் என்பதை நிரூபிக்க முடியும். இதற்கு மிகச் சரியாகப் பொருந்தக்கூடிய, மிகவும் சக்திவாய்ந்த ஒரு கவிதையாக, பாலஸ்தீனத் தற்காலப் பெண் கவிஞர் ஹிபா கமல் அபு நாடாவின் (Hiba Kamal Abu Nada) இறுதி நாட்களில் எழுதப்பட்ட கவிதையை எடுத்துக்காட்டலாம். இது, எதிர்ப்பு, நெகிழ்ச்சி மற்றும் அன்றாட வாழ்வின் குரல்கள் ஆகிய மூன்று ஆய்வுக்கருக்களையும் ஒரே நேரத்தில் வெளிப்ப டுத்தும் ஒரு நேரடிச் சாட்சியமாகும்.

**'இரவு வணக்கம், காஸா'**
(உரைநடைக் கவிதை - அக்டோபர் 2023)

*காஸாவின் இரவு*
*ராக்கெட்டுகளின் ஒளியைத் தவிர*
*இருட்டாக இருக்கிறது.*
*குண்டுகளின் சத்தத்தைத் தவிர*
*அமைதியாக.*
*பிரார்த்தனையின் ஆறுதலைத் தவிர*
*திகிலூட்டும்.*
*தியாகிகளின் ஒளியைத் தவிர*
*கருப்பு.*
*இரவு வணக்கம், காஸா.*
*மரணத்தின் வாயிலில் இருந்து எழுதப்பட்டு,*
*உயிர்ப்பின் மடியில் இருந்து அனுப்பப்படுகிறது.*

இக்கவிதை, ஆய்வின் மூன்று முக்கியக் கருப்பொருள்க ளையும் எவ்வாறு ஆழமாகப் பிரதிபலிக்கிறது என்பதைப் பார்ப்போம்.

## அன்றாட வாழ்வின் குரல்:

கவிதை, இரவு என்ற ஒரு சாதாரண அன்றாட நேரத்தைத் தேர்வு செய்கிறது. இரவு என்பது பொதுவாக ஓய்வு, அமைதி மற்றும் பாதுகாப்பிற்கானது. ஆனால் ஹிபாவுக்கு, காஸாவின் இரவு என்பது முற்றிலும் மாற்றப்பட்டுள்ளது.

'காஸாவின் இரவு ராக்கெட்டுகளின் ஒளியைத் தவிர இருட்டாக இருக்கிறது.' இயற்கையான இரவு இருள் (Darkness) மின்வெட்டு மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக ராக்கெட்டுகளின் வெளிச்சத்தால் மட்டுமே கிழிக்கப்படுகிறது. இது ஒரு சாதாரண இரவின் இயல்பு நிலை எவ்வாறு பறிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. 'குண்டுகளின் சத்தத்தைத் தவிர அமைதியாக.' அமைதி (Silence) என்பது வன்முறையால் சிதைக்கப்பட்டுள்ளது. சத்தம் இல்லாத நிலை, குண்டுச் சத்தத்தின் எதிர்பார்ப்பால் நிரப்பப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு, சாதாரண மனிதனின் உளவியல் ஓய்வை எப்படிப் பாதிக்கிறது என்பதைக் காட்டும் அன்றாட வாழ்வின் குரல் இது. 'இரவு வணக்கம், காஸா.' கவிதையின் இறுதியில் வரும் இந்தச் சாதாரணமாக வாழ்த்து, பெரும் அழிவின் மத்தியிலும் மனிதத்தன்மையின் தொடர்ச்சியைப் பேண வேண்டும் என்ற விருப்பத்தைக் காட்டுகிறது. இது, போராட்டத்தை மனிதமயப்படுத்தும் பெண்ணின் குரலாகும்.

## எதிர்ப்பு:

இக்கவிதை வெளிப்படையான அரசியல் முழக்கங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அதன் ஒவ்வொரு முரண்பாடும் (Paradox) ஓர் எதிர்ப்புக் கருவியாகும். திகிலூட்டும்/ பிரார்த்தனையின் ஆறுதல் - வெளிப்புற அச்சமும், திகிலும் நீங்காத நிலையில், கவிஞர் பிரார்த்தனை என்ற உள் வலிமையை நாடுகிறார். இது, எதிரியை உடல் பலத்தால் எதிர்க்க முடியாவிட்டாலும், ஆன்மீக பலத்தால் எதிர்க்க முடியும் என்ற கருத்தை முன்வைக்கிறது. தியாகிகளின் ஒளியைத் தவிர கருப்பு - முழுமையான நம்பிக்கை இழப்பின் (கருப்பு) நிலையில், தியாகிகளின் மரணத்தை அர்த்தமுள்ளதாக்கும் 'ஒளி' மட்டுமே நீடிக்கிறது. இது, பாலஸ்தீன விடுதலைக்கான சமூக மற்றும் தேசிய நினைவை மறக்க மறுக்கும், நீதியை நிலைநாட்டும் எதிர்ப்பு வடிவமாகும். மரணத்தின் வாயிலில் இருந்து எழுதப்பட்டு - எழுதும் செயலே ஒரு எதிர்ப்பு. மரணம் நெருங்குகிறது என்பதை அறிந்தும், தன் அனுபவத்தைப் பதிவு செய்யும் நேரடிச் சாட்சியமளிப்பு (Testimony), எழுதும் செயலே ஒரு எதிர்ப்பு. மரணம் நெருங்குகிறது என்பதை அறிந்தும், தன் அனுபவத்தைப் பதிவு செய்யும் நேரடிச் சாட்சியமளிப்பு (Testimony), ஆக்கிரமிப்பாளர் உண்மையை மூடிமறைக்கச் செய்யும் முயற்சிக்கு எதிரான ஒரு நேரடியான எதிர்ப்பாகும்.

## நெகிழ்ச்சி:

ஹிபா கவிதையின் தனித்துவமான முத்திரை, உளவியல் நெகிழ்ச்சியை (Psychological Resilience) நிலைநிறுத்துவதாகும். உயிர்ப்பின் மடியில் இருந்து அனுப்பப்படுகிறது - இது சுமூத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடு. வெளிப்புறமாக 'மரணத்தின் வாயிலில்' இருந்தாலும், கவிஞரின் உள் மனம் வாழ்வின் ஆதாரம் அல்லது மடியில் (Lap of Life) உறுதியாக நிலைபெற்றுள்ளது. இந்த அசைக்க முடியாத உள் அமைதியே உண்மையான நெகிழ்ச்சி ஆகும். இருள் / அமைதி / திகில் - இந்த எதிர்மறைக்கூறுகளை அவர் தெளிவாகவும், தைரியமாகவும் பட்டியலிடுகிறார். துயரத்தை ஒப்புக்கொள்வது, அதை மறுக்காமல் ஏற்றுக்கொள்வது - இதுவே உளவியல் ரீதியான சிதைவைத் தவிர்ப்பதற்கான முதல் நிலைப்பாடு ஆகும். துயரத்தின் மீதான இந்த அதிகாரம் நெகிழ்ச்சியை அளிக்கிறது.

'இரவு வணக்கம், காஸா' என்ற இந்தக் கவிதை, பாலஸ்தீனத் தற்காலப் பெண் கவிஞர்களின் பங்களிப்பைத் துல்லியமாக வரையறுக்கிறது. இது:

**எதிர்ப்பு:** தனது அனுபவத்தைச் சாட்சியமளித்து, நீதிக்காகக் குரல் எழுப்புகிறது.

**நெகிழ்ச்சி:** மரணத்தின் மத்தியிலும் ஆன்மீக உறுதியையும், வாழ்வின் மீதுள்ள பற்றையும் நிலைநாட்டுகிறது.

**அன்றாட வாழ்வு:** காஸாவின் ஓர் இரவின் பயங்கரத்தை ஒரு பெண்ணின் நுண்ணிய பார்வையில் இருந்து எடுத்துரைக்கிறது.

இந்தக் கவிதை, பாலஸ்தீனப் பெண் கவிதைசொல்லிகள், தங்கள் கவிதையின் மூலம் எப்படி வாழ்வுக்கும் மரணத்திற்கும் இடையிலான சண்டையில் நெகிழ்ச்சியின் பாலமாக (Bridge of Resilience) செயல்படுகிறார்கள் என்பதற்கான சிறந்த உதாரணம் ஆகும்.



eelakavi@thaiveedu.com

      

# வரலாற்றில் ‘ஊடல்’

## திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் 4

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்



### முன்னைய இதழ்களில்...

தலைவன் தலைவியரிடையே ஏற்படும் பிணக்கு, பொய்ச்சினம், பகைத்தல், வெறுத்தல் முதலான செயல்களைக் குறிக்கும் ஒற்றைப் பதமான ‘ஊடல்’, காலம், இடம், இனம், மொழி, பண்பாடு முதலாய எல்லைகளைக் கடந்து, எவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்புடைத்தாக, இனிய வாழ்விற்குப் பொருந்தும் அன்பின் நுணுக்கங்களைப் படிப்பார் மனதில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அனைத்து இலக்கணங்களையும் விஞ்சி நிற்கிறது திருக்குறள் என்பது கருதுகோளாகும்.

திருக்குறளில், ஊடல் பற்றிக் குறிப்பிடும் கருத்துகள் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் உரியனவாக அனைத்து இலக்கண இலக்கியங்களையும் விஞ்சி நிற்கிறது என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

**தொல்காப்பியத்தில் (இயல் 1):**

தொல்காப்பியத்தில் ‘ஊடல்’ என்னும் ஒழுக்கம் கற்பியல் என்னும் அதிகாரத்தின் முக்கிய பேசுபொருளாக இடம்பெறுகிறது. ஊடலை. ‘நடத்தை அறிவியல்’ அடிப்படையில் பல கோணங்களில் பகுத்து ஆயலாம். ‘நடத்தையியல் மேலை நாடுகளில் 19-ஆம் நூற்றாண்டில் உருவானது. தமிழில் இக்கலை தொல்காப்பியர் காலத்திலேயே வளர்ந்திருக்கிறது.

**சங்க இலக்கியங்களில் ஊடல் (இயல் 2):**

சங்க காலத்தில் ஊடல் பெரும்பாலும் பரத்தையிற்பிரிவு காரணமாக ஏற்பட்டதாக அறியப்படுகிறது. தலைவன் தலைவியிடம் கொண்ட நிரந்தர அன்பு, பரத்தையிடம் ஏற்படும் இன்பம் மீதான தற்காலிக உணர்வால் மறைக்கப்படுகிறது அல்லது தற்காலிகமாக ஒதுக்கி வைக்கப்படுகிறது.

**திருக்குறளில் ஊடல் (இயல் 3):**

திருக்குறள், காமத்துப்பாலில், புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை ஆகிய மூன்று அதிகாரங்களும் இனிமையான இல்லற வாழ்விற்கு இன்றியமையாதவையாக அமைந்திருக்கும் திறம் இன்று மட்டுமல்ல என்றும் எம்மக்களுக்கும் ஏற்புடையவையாக இருப்பது இதன் சிறப்பாகும்.

புலவி (சிறு பிணக்கு), ஊடல், துனி (பெரிய பிணக்கு) என்னும் பதங்கள், இந்த வகையான பிணக்கைக் குறிக்கும் படிநிலை வளர்ச்சிச் சொற்களாகும்.

புலவி - தொடர்ந்து அனுபவித்துவரும் கலவி இன்பம் தெகிட்டிவிடாமல் இருப்பதற்காக, கலவி இன்பத்திற்கு இடையேயான இடைவெளியைக் கூட்டுவதன் மூலம், கலவி இன்பத்தின் மேலான ஆர்வத்தைக் கூட்டி அவ்வின்பத்தின் தரத்தை உயர்த்துவதற்கான வழி வகைகளில் புலவியும் ஒன்றாகும்.

‘புலவி’ என்னும் அத்தியாயம், அடுத்தடுத்து வரும் புலவி நுணுக்கம், ஊடலுவகை ஆகிய அதிகாரங்களுக்குத் தோற்றுவாயாக அமைந்திருக்கின்றது.

**தொடர்கிறது...**

tg.theeban@gmail.com

## புலவி நுணுக்கம்:

'புலவி நுணுக்கம்' என்பது புலவியினது நுட்பம் என்று பொருள்தரும். புலவி நுணுக்கம் என்னும் இப் பகுதி ஒரு பெண்ணின் ஊடல், அதாவது பிரிவின்போது காதலன் மீதான கோபம், அதன் நுணுக்கமான அம்சங்களைப் பற்றிப் பேசுகிறது. புலத்தலுக்கான காரணமே இருக்காது. அல்லது காரணம் வெளிப்படையாகத் தெரியாது, புலவிக்கான காரணத்தை நுணுகித் தேடித்தான் காணவேண்டியுள்ளது. மிகச் சிறிதாக, நுட்பமாகப் புலப்படும் காரணத்தைப் பெரிதாக்கிக் கோபப்படல். புலவி நுணுக்கம் என்று கூறலாம். புலவியில், பொய்யாகப் புனையப்பட்ட காரணத்தால், இங்கு விளையாட்டுத் தன்மை, செல்லம், அழுகை, கண்ணீர் சிந்தல் முதலிய பண்புகளுக்கு அதிக இடமுண்டு. குற்றமற்ற தலைவனிடம் பொய்யாகப் பழி கூறி அவனது கலக்கத்தில் அவள் இன்பம் காண்கிறாள். இது, இலக்கியங்களில் சுவையை மிகுத்துக் காட்டுவதற்காகப் புலவர்களால் பெரிதும் கையாளப்படுவது.

'புலவி நுணுக்கம்' என்னும் இவ்வதிகாரம் ஊடலை வெளிப்படுத்தும் முறைகள் மற்றும் அதன் நுட்பமான தன்மைகள் பற்றி விளக்கமளிக்கிறது. புலவியின் பல்வேறு கட்டங்களை ஒரு நாடகப் பாங்கில் சுவைபடக் கூறுவதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

***'பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்***
***நண்ணேன் பரத்தநின் மார்பு'***

*குறட்பா 1311*

பெண்ணாகக் காணப்படுபவர்கள் எல்லோரும், உன்னைப் பொதுவாக நினைத்துத் தம் கண்களால் உண்பார்கள். அதனால் கற்பு நெறி தவறிய உன் பரந்த மார்பை நான் தழுவ மாட்டேன்.

தொல்காப்பியர் உலா பற்றிக் கூறிய நூற்பாவுடன் இக்குறட்பாவை இணைத்துப் பார்க்கவேண்டும்.

***'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப***
***வழக்கொடு சிவணிய வகைமை யான'***

*தொல்காப்பியம், புறத்திணையியல் நூ. 25*

அரசன் நகர்வலம் வரும்போது, பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறான பருவ மங்கையர், கற்பு, நிறை, நாண் முதலிய நற் குணங்கள் இன்றி, அவரவர் பருவத்திற்கேற்ப அரசனைக் காமுறுவர் என்று கூறப்படும் வழக்குப்பற்றி இந்நூற்பா கூறுகிறது. இத்தொல்காப்பிய நூற்பாவின் பொருளை ஒட்டியே திருவள்ளுவரும் இக்குறட்பாவை எழுதியிருக்க வேண்டும். குறட்பாவில், பெண்ணியலார் என்றது, பார்வைக்குப் பெண்போல் காணப்பட்டாலும் அவர்கள் பெண்மை இயல்புகள் அற்றவர்கள் என்பதாகும்.

குறிப்பிட்ட புலவி நுணுக்கம், முதலாம் குறட்பாவில் (குறள் 1311) பொதுப்பெண்டிர் பேசப்படுகிறார்கள். சங்க காலத்தில் தலைவன் பொதுப் பெண்டிரை நாடிச் செல்வது வெகு சாதாரண நிகழ்வு. பரத்தைமை (பரத்தையுடன் உறவாடுவது) சமூகத்தால் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கமும் ஆகும். இந்த ஒழுக்கம் பற்றிப் புரிந்து கொள்வதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு:

சங்க காலத் தமிழகத்தில் வாழ்ந்த வள்ளல்களில் கடைசியாக வரும் ஏழு வள்ளல்கள் கடையெழு வள்ளல்கள் என்று அழைக்கப்பட்டனர். கடை எழு வள்ளல்களில் ஒருவனான பேகன், ஆவியர் குடியில் பிறந்து, பொதினி மலையை (பழனி மலை) ஆண்டான். இவன், வையாவிக் கோப்பெரும் பேகன் என்று அறியப்படுகிறான். பேகன், குளிரால் நடுங்கிய மயிலுக்குப் போர்வை வழங்கிய வள்ளல் என்று கூறப்படும் கதை எம்மில் பலருக்கு நன்றாகத் தெரியும்.

பேகன் பற்றிய புறநானூற்றுக் கதை ஒன்று அக்காலத்தில் நிலவிய பரத்தையர் ஒழுக்கம் பற்றித் தெளிவாக விளக்குகிறது. பேகனின் மனைவி கண்ணகி. பேகன், அவன் நாட்டின் ஒரு பகுதியான, நல்லூர் என்னும் ஊரில் வாழ்ந்த பரத்தை ஒருத்தியுடன் புறஒழுக்கம் கொண்டான். நாளடைவில் பேகன்



> **சங்க காலத்தில், பரத்தையர் ஒழுக்கம், அதாவது ஆண்கள் இன்பம் கருதி பரத்தையர் என்று அறியப்பட்ட பொதுப் பெண்டிரை நாடிச் செல்வது இயல்பு, அது தற்காலிகமானது. பொதுப் பெண்டிரை நாடிச் செல்லும் தலைவன் அவளுடன் தங்கிவிடும் வழக்கம் இருந்ததாகக் கூறப்படவில்லை.**

நல்லூர் பரத்தையுடன் நெருங்கிப் பழகினான், கண்ணகியைத் துறந்து பரத்தையுடன் வாழத் தலைப்பட்டான். (இது, சிலப்பதிகாரக் கதையின் சாயலாக இருக்கிறதே என்று தோன்றுகிறதா? கதைப் பாங்கு மட்டுமல்லாது பெயரளவிலும் ஒழுக்கத்திலும் கூட ஒற்றுமை காணப்படுகிறது).

சங்க காலத்தில், பரத்தையர் ஒழுக்கம், அதாவது ஆண்கள் இன்பம் கருதி பரத்தையர் என்று அறியப்பட்ட பொதுப் பெண்டிரை நாடிச் செல்வது இயல்பு, அது தற்காலிகமானது. பொதுப் பெண்டிரை நாடிச் செல்லும் தலைவன் அவளுடன் தங்கிவிடும் வழக்கம் இருந்ததாகக் கூறப்படவில்லை. அது, ஊடல், கூடலுடன் முடிந்து விடக்கூடியது. ஆனால் பேகனது பரத்தையர் ஒழுக்க காலம் நீண்டது. பேகன் நல்லூர் பரத்தை வீட்டிலேயே தங்கியது கண்ணகிக்குப் பெரும் மன வருத்தத்தைத் தந்தது. பேகனைப் பாடிப் பரிசில் பெறச் சென்ற கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் முதலிய பாவலர்கள் கண்ணகியின் நிலை கண்டு வருந்தி அவளுக்காகப் பேகனிடம் சென்று அவனுக்குப் புத்திமதி கூறி அவனைக் கண்ணகியுடன் சேர்த்து வைத்தார்கள் என்பது இவர்கள் பாடல்கள் வழி அறியக்கிடக்கிறது.

பரணர், தனது பாடல்களில் வரலாற்றுச் செய்திகளை எடுத்து வருவதில் சிறந்தவராக அறியப்படுபவர். பரணர், பேகனது புறவொழுக்கம் பற்றிப் பாடிய பாடல் ஒன்று மிகத் தெளிவாக இச் செய்தியை எடுத்து வருகிறது.

***‘அருளா யாகலோ கொடிதே; இருள்வரச்***
***சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்***
***கார்எதிர் கானம் பாடினே மாக***
***நீல்நறு நெய்தலிற் பொலிந்த உண்கண்***
***கலுழ்ந்துவார் அரிப்பனி பூண்அகம் நனைப்ப***
***இனைதல் ஆனா ளாக, ‘இளையோய்***
***கிளையை மன்எம் கேள்வெய் யோற்கு’ என***
***யாம்தன் தொழுதனம் வினவக் காந்தள்***
***முகைபுரை விரலில் கண்ணீர் துடையா***
***யாம்அவன் கிளைஞரேம் அல்லேம்; கேள்இனி;***
***எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்***
***வரூஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்***
***ஒல்லென ஒலிக்கும் தேரொடு***
***முல்லை வேலி நல்லூ ரானே.’***

*புறநானூறு, பாடல் 144*

அந்திமாலை நேரத்திற்குரிய செவ்வழிப் பண்ணை, எமது சிறிய யாழில் இசைத்து, உன் மழைவளம் மிக்க கானைப் பாடினோம். அந்தப் பாடலைக் கேட்டு, ஆம்பலை ஒத்த கண்களையுடைய பெண் ஒருத்தி கலங்கி, கண்களில் நீர் பொழிந்தாள். நாம், அவளை நோக்கி, ‘பெண்ணே! நீ எமது நட்பை விரும்பும் பேகனுக்கு உறவினளா’ என்று கேட்டோம். அவளும் கண்ணீரைத் துடைத்தபடி, ‘நான் அவனுக்கு உறவினள் அல்ல. என் போன்ற ஒருத்தியின் அழகை விரும்பி, புகழ் மிக்க பேகன் தனது ஒலிமிக்க தேரில் ஏறி, முல்லையை வேலியாகவுடைய நல்லூர் என்னும் நகருக்குத் தினமும் வருவதாகக் கூறுகிறார்கள்.’ என்றாள். அப்படிப்பட்ட கண்ணகி மேல் நீ அருளில்லாமல் இருப்பது மிகவும் கொடியது என்பது இப்பாடலின் பொருள்:

இப் பாடல் மூலம் அறியவருவதாவது,

சங்கத் தமிழ் வரலாற்றுப் புகழ்பெற்ற கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பேகன் என்னும் மன்னனது பரத்தைமை ஒழுக்கம் பற்றி இப்பாடல் கூறுகிறது.

கண்ணகி, பேகனது மனைவி.

பேகன், தனது நாட்டின் எல்லைக்கு உட்பட்ட நல்லூர் என்னும் ஊரில் வசிக்கும் பரத்தை ஒருத்தியுடன் நீண்ட தொடர்பு கொண்டிருந்தான்.

இதனால் கண்ணகி கவலையுறுகிறாள்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் கற்பியலில் கூறப்படும் ‘பரத்தையர் ஒழுக்கமும் தலைமகள் ஊடலும்’ இப்பாடல் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

சங்க காலப் பெரும் புலவரான பரணர் மட்டுமல்ல அவரொத்த கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகியவர்களும் இப் பாடலில் பேகன் பற்றிக் கூறப்பட்ட தகவலை உறுதி செய்கிறார்கள்.

புலவி நுட்பத்தின் இரண்டாம் குறட்பா, பெரும்பான்மையானவர்கள் அறிந்த ஒன்று.

***‘ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை***
***நீடுவாழ் கென்பாக் கறிந்து.’***

*குறட்பா 1312*

இக்குறட்பாவில் ‘ஊடி இருந்தேமா’ என்று கூறும் பகுதி, வெகு அன்யோன்யமான இருவரிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தை என்று கொள்ளலாம். தலைவி தன் தோழியிடம், முன்னாள் இரவு, தனக்கும் தன் கணவனுக்குமிடையே நடந்த ஊடலைச் சுவைபடக் கூறுவதாகக் கொள்ளலாம். இவ்விடத்தில் திருவள்ளுவர் பேச்சு வழக்கைக் கையாண்டிருக்கிறார்.

தலைவனும் தலைவியும் ஊடி (பொய்க் கோபத்துடன்) இருக்கும்போது, தலைவன் தும்மினான். தும்மும்போது ஒரு கணம் மூச்சு நின்று வரும். அதனால்தான் ‘நீண்ட ஆயுளுடன் இருக்கவேண்டும்’ என்னும் பொருள்பட ‘நூறு ‘என்று வாழ்த்துகிறோம். இக்குறட்பா தலைவி தோழிக்குக் கூறுவதாக அமைந்திருக்கிறது.

நான் தலைவனுடன் ஊடல் கொண்டு இருந்தேனா, எனது ஊடலைத் தீர்த்துவைக்க நினைத்த தலைவன் தும்மினான். தும்மினால் நான் அவனை வாழ்த்துவேன், அத்துடன் ஊடல் தீர்ந்துவிடும் என்னும் நோக்கில் அவன் செய்த உபாயம் இது என்கிறாள் தலைவி.



மேலைத் தேயங்களிலும் தும்மும்போது இவ்வாறு வாழ்த்தும் (bless you) வழக்கம் உண்டு. அதாவது, இது, பண்பாடு களைக் கடந்த வழக்காகும். தும்மும் பொழுது எம்மை யாரோ நினைக்கிறார்கள் என்று கூறும் வழக்கு பண்டு தொட்டு தமிழர் பண்பாட்டில் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு இக் குறளே சான்று.

இக்குறட்பாவில், தலைவியுடன் ஊடல் கொண்டிருக்கும் பொழுது தலைவனுக்குத் 'தும்மல்' வந்துவிட்டது. அல்லது தலைவியின் ஊடலைத் தீர்க்கத் தலைவன் செய்த உபாயம் என்றும் கூறலாம். இயல்பாக ஏற்பட்ட தும்மலை, வேண்டு மென்றே செய்ததாகக் கொண்டால், அது புலவி நுணுக்கமா கிறது.

***'கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்***
***காட்டிய சூடினீர் என்று'***

*குறட்பா 1313*

இக்குறட்பாவைத் தலைவன் தோழியிடம் கூறுவதாகக் கொள்ளலாம்.

தலைவிமேல் கொண்ட காதலால் நான் அவள் தலையில் அழகிய மலர் மாலையைச் சூடினாலும் அவள், 'உன் காதலி ஒருத்திக்குச் சூட்டுவதற்காக எனது தலையில் வைத்து ஒத்திகை பார்க்கிறாய்' என்று கோபம் கொள்கிறாள். உன் தலைவி என்னோடு கோபம் கொள்வதற்குக் காரணமும் வேண்டுமா ? என்று ஒரு பெண்ணின் காரணம் அற்ற கோபத் தைக் குறிப்பதாக அமைகிறது இக்குறட்பா.

புலவி நுட்பத்தின் நான்காம் குறட்பா,

***'யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்***
***யாரினும் யாரினும் என்று'***

*குறட்பா 1314*

இக்குறட்பா தலைவன் கூற்றாக அமைந்திருக்கிறது.

தலைவன், 'நாம், காதலர் எவரையும்விட அதிகமான காத லையுடையவர்கள் என்று கூறினேன். அதற்கு அவள், நான் பலரைக் காதலிப்பதாகவும் அவர்களுள் இவள்மீது அதிக காதல் கொண்டிருக்கிறேன் என்றும் பொருள் திருத்துக் கொண்டு, 'எவளைக் காட்டிலும் எவளைக் காட்டிலும் என் மேல் காதல் கொண்டிருக்கிறாய்' என்று என்னைத் துளைத்து எடுத்துவிட்டாள். ஊடல் மிகக் கொண்டாள்' என்றான்.

இக்குறட்பா, இளம் காதலர்கள் வாழ்க்கையில் நேர்ந்தி ருக்கக் கூடியது. ஒரு தலைவன் தலைவியரிடையே அல்லது கணவன் மனைவியரிடையே ஏற்படக்கூடிய சிறு சிறு சண்டை கள், பொய்க் கோபங்கள், தவிப்புகள் எல்லாமே நம் வாழ்க் கையின் ஏதோ ஒரு கட்டத்தில் நடந்திருக்கும். அதனால் ஏற்பட்ட இன்பம், அதனை அனுபவித்தவர்களுக்குத் தான் புரியும். இந்த அனுபவம் கவிஞனின் வெறும் கற்பனை அல்ல.

***'இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்***
***கண்நிறை நீர்கொண் டனள்'***

*குறட்பா 1315*

இக்குறட்பாவும் தலைவன் கூற்றாகவே அமைந்திருக்கிறது.

காதலர்கள், காதல் மயக்கத்தில் ஏதேதோ சொல்லப்போக அதன் விளைவு வேறொன்றாக ஆகிவிடுவது வழக்கம். 'பிள் ளையார் பிடிக்கப்போய் அது குரங்காக ஆகிவிடுகிறது' என்ற பழமொழி அடிக்கடி பயன்படுத்தப்படுவது நாம் அறிந்ததே. இந்தக் குறட்பாவும் அப்படிப்பட்டதே.

***'உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்***
***றென்னைப்***
***புல்லாள் புலத்தக் கனள்'***

*குறட்பா 1316*

இந்தக் குறட்பாவும் தலைவன் கூற்றாகவே வருகிறது.

நான் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்றேனா, அப்படியானால் எப்பொழுது என்னை மறந்தாய் என்று போட்டாளே ஒரு போடு. அதாவது, நினைத்தேன் என்றால் நினையாது இருந்த வேளையும் இருக்கவேண்டுமே என்று மிக நுட்பமாக ‘இலக்கணப் பிழை’ கண்டு தலைவனிடம் ‘ஏன் மறந்தீர்’ என்று ஊடல் கொண்டாள். தலைவனை அணைக்கத் தலைப்பட்டவள் விலகிக் கொண்டாள்.

மிக நுட்பமாக அந்தச் சிறு ஊடலை வள்ளுவர் கூறும் திறம் உள்ளும் தோறும் உணர்வு பொங்கிவரும் திறம் மிக்கது.

***‘வழுத்தினாள் தும்மினேனாக அழித்து அழுதாள்***
***யார்உள்ளித் தும்மினீர் என்று’***

*குறட்பா 1317*

1312-ஆம் குறட்பாவுடன் தொடர்புடையது. 1312-ஆம் குறட்பாவில், தான் தும்மினால் தலைவி வாழ்த்துவாள் என்னும் வழக்கை, உத்தியாகக் கொண்டு தலைவியின் ஊடலை நீக்குவதற்காகத் தலைவன் தும்மினான்.

இந்தக் குறட்பாவில் தும்மல் ஊடலுக்குக் காரணமாயிற்று.

எனக்கு இயல்பாகவே தும்மல் வந்தது, தும்மினேன். நான் தும்மியபோது, வழமைபோல அவளும் என்னை வாழ்த்தினாள். வாழ்த்திய பின், என்னைத் தவிர வேறு யாரோ இவனை நினைத்திருக்கிறார்கள் போலும் என்னும் எண்ணம் சந்தேகமாக அவள் மனதில் தோன்றியது. தோன்றவே, ‘யார் உன்னை நினைத்ததால் உனக்குத் தும்மல் வந்தது? என்று கேட்டு முதலில் வாழ்த்தியதற்கு மாறாக அழத் தொடங்கினாள்,

என்பது குறட்பா விளக்கம். பொய்க் கோபம், ஆனால் சுவை மிக்கது.

***‘தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்***
***எம்மை மறைத்திரோ என்று’***

*குறட்பா 1318*

அடுத்து வரும் குறட்பா, முன்னைய (1317) குறட்பாவை விஞ்சிவிட்டது.

தலைவனுக்கு மெய்யாகவே தும்மல் வந்தது. தும்மினால் தலைவி ஊடல் கொள்வாளோ என்று பயந்து தும்மலை அடக்கிக் கொள்ளப்பார்த்தான். அதுவும் தப்பாகவே புரிந்து கொள்ளப்பட்டது. ‘உனக்கு வேண்டியவர்கள் உன்னை நினைப்பதை நான் அறியாது மறைக்கவேண்டித் தும்மலை அடக்கிக் கொள்கிறாயா’ என்று கேட்டு அழுதாள்.

தும்மினாலும் குற்றம், தும்மலை அடக்கினாலும் குற்றம். காதல் வாழ்க்கையில் காதலர்களின் ஒவ்வொரு செயலையும் அணுவணுவாக சுவைத்து அனுபவித்து எழுதப்பட்ட குறட்பாக்கள் ஒவ்வொன்றும் உளவியலை அடிப்படையாகக் கொண்டவை. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போன்றவை.

***‘தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கும்நீர்***
***இந்நீரர் ஆகுதிர் என்று’***

*குறட்பா 1319*

இக்குறட்பாவும் அத்தகையதே.

தலைவி ஊடல் கொண்டாள். தலைவன் மிகவும் சிரமத்தின் மேல் அவள் ஊடலைத் தீர்த்து அவளை மகிழ்விக்கிறான். அவளது மகிழ்ச்சி அதிகநேரம் நீடிக்கவில்லை. இவன், இப்படித்தான் மற்றப் பெண்களையும் சமாதானப்படுத்தி ஊடலைத் தீர்த்துவைத்திருப்பானோ என்று எண்ணத் தோன்றுகிறது. உடனே அவள், ‘நீ மற்றப் பெண்களின் ஊடலையும் இவ்வாறுதான் தீர்த்து வைப்பாயா?’ என்று கோபக் கணை தொடுக்கிறாள் என்கிறார் வள்ளுவர்.

ஊடலைப் பொறுத்தவரை, திருவள்ளுவர், பெருவழக்காகக் கூறியிருப்பது, ‘பெண்கள் தம் கணவன் / காதலன் தனக்கு மட்டுமே சொந்தம் என்று அந்த உறவின்மீது அதீத பற்றுக் கொள்கிறார்கள். அதாவது, ஆங்கிலத்தில் சொல்வதானால் Possessiveness எனலாம்.’

***‘நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்***
***யாருள்ளி நோக்கினீர் என்று’***

*குறட்பா 1319*

புலவி நுணுக்கம் என்னும் இந்த அதிகாரத்தின் இறுதிக் குறட்பா இது.

பேசினாலும் தப்பு, செயலில் அவளை அணைத்தாலும் தப்பு, அணைக்காவிட்டாலும் தப்பு, தும்மினாலும் தப்பு, தும்மலை அடக்கினாலும் தப்பு என்று எதற்கெடுத்தாலும் சிறு சிறு காரணங்களைக் காட்டி வேண்டுமென்றே (கூடுதல் இன்பத்திற்காக) ஊடும் பெண்ணிடம், சிறிது நேரம் பேசாமல் இருந்து பார்க்கலாம் என்று பேசாது அவள் அழகை அனுபவித்தபடி இருக்கிறான்.

அதற்கு அவள், எவள் உறுப்புப் போல இருக்கிறது என்று என்னைப் பார்க்கிறாய் என்று சொல்லிக் கோபப்படுகிறாள்.

இவ்வாறு, எதற்கெல்லாம் கோபப்படுவது, நியாயமான காரணமே அற்ற, விளக்கம் கொடுக்க முடியாத செயல்களுக்ெல்லாம் ஊடுவது என்பது இயல்பு வாழ்க்கையில் மிகச் சாதாரணமே.

திருக்குறளில், நான் மிகவும் இரசித்த பகுதிகளில் ஒன்றான ‘புலவி நுணுக்கம்’ என்னும் இந்த அத்தியாயத்தை இச்சஞ்சிகை வாயிலாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அடுத்த இதழில் ஊடல் உவகை என்னும் அத்தியாயம் தொடர்கிறது.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com

# சொல்லத்தான் நினைக்கிறேன் 2.0

## 01

– அருண்மொழிவர்மன்

லிடியன் நாதஸ்வரமும் அவர் சகோதரி அமிர்தவர்ஷினியும் இணைந்து திருக்குறளின் 1330 குறள்களையும், அவற்றிற்கு சக்திவாசன் எழுதியுள்ள பொருளையும் கிட்டத்தட்ட 1000 பாடகர்களின் குரல்களில் 'குறளிசைக்காவியம்' என்ற பெயரில் இசையமைத்துள்ளார்கள். இது பற்றிய பதிவுகளைப் பார்த்தபோது எனக்குப் பிடித்த சில திருக்குறள்களை, அவை ஏற்கனவே அவர்களின் யூடியூப் தளத்தில் கிடைக்கின்றனவா என்பதை ஆர்வத்துடன் தேடிப் பார்த்தேன். அப்போது இந்தக் குறள் பற்றிய நினைவுகள் வந்தன.

***'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யும் மழை'***

என்கிற இந்தக் குறளுக்கான பொருளாக பரிமேலழகர் முதல் சாலமான் பாப்பையா உள்ளிட்ட பலரும், 'பிற தெய்வங்களைத் தொழாமல் கணவனையே தெய்வமாகத் தொழுது வாழும் மனைவி, பெய் என்று சொன்னால் மழை பெய்யும்' என்ற பொருளிலேயே எழுதியுள்ளனர்.

பெண்கள் எப்படி இருக்கவேண்டும் என்கிற அறிவூட்டலாக இந்தக் குறளைச் சொல்லுவதை நாம் சிறுவயது முதலே பார்த்திருப்போம். இந்தக் குறளுக்கு இவர்கள் சொல்லும் பொருள், பெண்களை ஆணுக்கு அடங்கியிருக்கவேண்டும் என்று திணிப்பதாகவே அதுவரை வழங்கிவந்தது. அந்த நேரத்தில் கலைஞர் கருணாநிதி இதற்கு இப்படியொரு பொருளை எழுதியிருக்கின்றார்.

'கணவன் வாக்கினைக் கடவுள் வாக்கினை விட மேலானதாகக் கருதி அவனையே தொழுதிடும் மனைவி பெய் என ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையைப் போலத் தன்னை அடிமையாக எண்ணிக் கொள்பவளாவாள்'

எப்போது பெய்யவேண்டுமோ அப்போது பெய்யும் மழைதான் சிறப்புமிக்கது, அப்படியில்லாமல் மற்றவர்கள் கட்டளையிட்டுவிட்டார்கள் என்று பெய்யும்போது அதற்கான தனித்த பெருமையினை இழந்துவிடுவதுடன் காலந்தவறிப் பெய்யும் மழையாகவும் மாறிவிடுகின்றது. காலந்தவறிப் பெய்யும் மழை அழிவையே தரும்.

அது போலவே கணவனைத் தன் தோழனாக, தனக்கு நிகரானவனாக நினைக்காமல் அவன் சொல்பவற்றுக்கெல்லாம் ஆமாம் சொல்லிக் கொண்டு, அவன் தயவிலேயே தங்கியிருக்கின்ற பெண்கள் தாமும் அடிமைகளாக இருப்பதோடு அவர்களைச் சார்ந்திருப்போரின் அழிவிற்கும் காரணமாகிவிடுவார்கள் என்று கலைஞர் சொல்லும் பொருள் எனக்குப் பிடித்திருந்தது.

குறளோவியத்திலும் இந்தக் குறளைப் பற்றி கலைஞர் எழுதியிருந்தபோதும், அதில் பாரதிதாசன் எழுதிய பொருளையே அதற்கு முற்பட்டோர் சொல்லிய பொருளுக்கு மாற்றாக கலைஞர் சொல்லியிருக்கின்றார். 'கண்ணையும் மனதையும் கவர்வனவும் மிக்க பயன் விளைப்பனவும் ஆகிய தெய்வம், தன் கணவனைவிட வேறு இல்லை என்று எண்ணும் மனைவி, அக்கணவனுக்குப் பயன் மழை, பெய்யெனப் பெய்யும் மழை என்றது அளவறிந்து பெய்வதோர் பயன் மழையை' என்பது பாரதிதாசன் இக்குறளுக்கு வழங்கிய கருத்து. அதிலிருந்தும் மேம்பட்ட பொருளினைத் தனது திருக்குறள் உரையில் கலைஞர் எழுதியிருக்கின்றார். திராவிட இயக்கத்தவர்களும் திராவிடக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கலை இலக்கியத்தினை மக்களிடம் எடுத்துச்செல்லும்போது எவ்வளவு பிரக்ஞையுடன் இயங்கியிருக்கின்றார்கள் என்பதை இதுபோன்ற சின்னச் சின்ன விடயங்கள் கூடச் சுட்டிக்காட்டுகின்றன.

எனக்குப் பதினொரு வயதாக இருக்கும்போது திருக்குறளுக்கு மு. வரதராசன் உரையை வாங்கிப் பரிசளித்த பெரியப்பா, எனக்குப் பதினாறு வயதிருக்கும்போது குறளோவியத்தையும் பின்னர் 20 வயதாக இருக்கும்போது திருக்குறள் கலைஞர் உரை நூலையும் வாங்கிப் பரிசளித்தார். இவற்றினூடாக ஒரு பயணம் இருக்கின்றது.



tg.theeban@gmail.com

## 02

அனேகமான இடங்களில் கட்டாயப் பணிநீக்கங்கள் (Layoff) நடந்துகொண்டுள்ளன. இந்த வேலையிழப்புகள் பற்றிப் பேசும்போது பெரும்பாலானோர் இவற்றுக்குப் பின்னால் தானியக்கம் (Automation), எண்ணிமத் தொழில் நுட்பம் (Digitalization) ஆகியவற்றின் வளர்ச்சியும் அவை தொழிற்துறைகளில் ஏற்படுத்திய தாக்கத்தையும் இதற்குக் காரணமாகக் காட்டுகின்றார்கள். இது பற்றிப் புரிந்துகொள்வதற்காக வாசித்துக்கொண்டிருந்தபோது Cory Doctorow என்கிற கனடிய எழுத்தாளர் எழுதிய Enshittification: Why Everything Suddenly Got Worse and What to Do About It என்ற புத்தகம் கிடைத்தது. வேலை இழப்புகள், அதன் பாதிப்புகள் பற்றியதாக இந்தப் புத்தகம் நேரடியாக இல்லாதபோதும் இவற்றுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகின்ற எண்ணிமத் தளங்களின் (Digital Platforms) தற்போதைய நிலை என்னவாக இருக்கின்றது என்கிற மதிப்பீடாக அமைகின்றது.

எண்ணிமத் தளங்களின் உச்சம் என்று நாம் நினைக்கிற இந்தக் காலப்பகுதியில் உண்மையில் எண்ணிமத் தளங்கள் அவை வழங்குகின்ற சேவையின் தரத்தால் வீழ்ச்சியை அடைந்திருப்பதுடன் அவற்றின் சேவையின் தரம் குறித்த பயனாளிகளின் மதிப்பீட்டிலும் மனக்குறையைச் சந்தித்திருக்கின்ற காலப்பகுதியாக இருக்கின்றது என்று டொக்ரோவ் அடையாளம் காணுகின்றார். இந்த வீழ்ச்சியை சேவைத்தரத்தின் வீழ்ச்சி என்று மட்டும் பார்க்கமுடியாது; மாறாக எண்ணிமத் தளங்களிடையே இது ஒரு போக்காக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் டொக்ரோவ், பயனாளிகளின் தேவைகளை முதன்மைப்படுத்துவதாயும், பெரும்பாலும் இலவசமாக சேவைகளை வழங்கும் தளங்கள் என்றும் இயங்கத் தொடங்கிய இந்தத் தளங்கள் அவற்றின் தற்போதைய நிலையை மூன்று வெவ்வேறு படிகளினூடாக வந்தடைந்திருப்பதாக அடையாளம் காட்டுகின்றார்.

தொடக்கநிலையில் (Stage One: Good to users) பயனாளிகளை மையமாக வைத்து, அவர்களுக்குத் தரமானதும், திருப்தியளிக்கக்கூடியதுமான சேவையை வழங்குவதைத் தமது நோக்காகக் கொண்டு எண்ணிமத் தளங்கள் இயங்கத் தொடங்குகின்றன. இந்தக் காலப்பகுதிகளில் பயனாளிகளின் தேவையே முதன்மைப்படுத்தப்படுவதுடன் பெரும்பாலும் சேவைகள் பயனாளிக்கு இலவசமாகவே கிடைக்கின்றன.

அவற்றின் முதலாவது படிநிலையில் பயனாளிகளைப் பெருமளவில் பெற்றுக்கொள்கின்ற இந்த எண்ணிமத் தளங்கள், அவற்றின் அடுத்த படிநிலையில் (Stage Two: Good to Business Customers) தமது பயனாளிகள் எண்ணிக்கை, பயனாளிகள் மத்தியில் தமக்கிருக்கின்ற மதிப்பு ஆகியவற்றைத் தம் சந்தை மதிப்பாகக் காட்டி வணிக ரீதியில் விளம்பரதாரர்களிடம் தம்மைச் சந்தைப்படுத்துகின்றார்கள். இதன்மூலம் அவர்கள் பெருமளவு வணிகச் சந்தையைக் கட்டியெழுப்புவதுடன் பெருமளவு இலாபமீட்டும் நிறுவனங்களாகத் தம்மை நிலைநாட்டுகின்றார்கள்.

இந்த எண்ணிமத் தளங்களின் வளர்ச்சியில் அவற்றுடன் நீண்டகாலமாகப் பயனாளிகளாக இணைந்திருந்தவர்கள் ஒருவிதத்தில் அவற்றில் தங்கிவாழ்பவர்களாகவும் தமது தேவைகளையும் தொடர்பாடல்களையும் நிறைவேற்றுவதற்கான முதன்மை ஊடகங்களாகக் குறித்த எண்ணிமத் தளங்களை மட்டுமே தமக்காக ஒற்றைத் தேர்வாகவும் கொண்டிருப்பவர்களாகவும் மாறிவிடுகின்றார்கள். இந்த நிலையில் எண்ணிமத் தளங்கள் தம் மூன்றாவது படிநிலைக்குச் (Stage Three: A Gilant Pile of Shit) சென்றுவிடுகின்றார்கள். இதன்போது தமது வாடிக்கையாளர்களான (Business partners) விளம்பரதாரர்களிடம் அதிகளவிலான கட்டணத்தை அறவிடுபவர்களாக மாறிவிடுவதுடன், பயனாளிகளின் தேவையை முதன்மைப்படுத்தாமல் தமது வாடிக்கையாளர்கள் / விளம்பரதாரர்களது பொருட்களையும் சேவைகளையும் பயனாளிகள் மீது திணிப்பவர்களாகவும் மாறிவிடுகின்றார்கள்.



**“எண்ணிமத் தளங்களில் நீண்டகாலமாகப் பயனாளிகளாக இணைந்திருந்தவர்கள் ஒருவிதத்தில் அவற்றில் தங்கிவாழ்பவர்களாகவும் தமது தேவைகளையும் தொடர்பாடல்களையும் நிறைவேற்றுவதற்கான முதன்மை ஊடகங்களாகக் குறித்த எண்ணிமத் தளங்களை மட்டுமே தமக்காக ஒற்றைத் தேர்வாகவும் கொண்டிருப்பவர்களாகவும் மாறிவிடுகின்றார்கள்.”**




அமேசன், முகநூல், ஐபோன், ருவீற்றர் ஆகியவற்றை முன் வைத்து இந்த அவதானங்களை எழுதியிருக்கின்ற டொக்ரோவ் இந்தத் தளங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று படிநிலை மாற்றங்கள் எவ்விதம் தொழிற்பட்டிருக்கின்றன என்பதனை மிகத் தெளிவாகவும் எளிமையாகவும் பட்டியலிடுகின்றார்.

ஓர் எடுத்துக்காட்டுக்கு அமேசனை எடுத்துக்கொண்டால் தொடக்கநிலையில் பயனாளிகளை முக்கியப்படுத்திய போது குறைந்த விலையும், நிறையத் தெரிவுகளும் பயனாளிகளுக்குக் கிடைத்தன. அத்துடன் பயனாளிகள் தமது தேவைகளைத் தேடும்போது சுயாதீனமான விதத்தில் தேர்வுகளுக்காகப் பட்டியல்களும் தரப்பட்டன. இதனால் பயனாளிகளுக்குச் சிறந்ததோர் தேர்வாக அமேசன் அமைந்து பயனாளிகள் எண்ணிக்கை அதிகரித்தது. அதேநேரத்தில் விற்பனையாளர்களுக்கு விற்ற விலையை முழுமையாகக் கொடுத்த அமேசன், தொடக்கத்தில் முதலீடு செய்திருந்த பணம், பங்குச் சந்தையில் ஏற்பட்ட இலாபம் ஆகியவற்றைக் கொண்டு, பயனாளிகளுக்குக் குறைந்த விலையில் பொருட்களை விற்றதுடன், பொருட்களைத் திருப்பிக் கொடுத்து மீள்கட்டணம் பெறும் வசதியையும் இலவசமாகவே அளித்திருந்தது (refund policy with shipping costs)

இந்த அதிகரித்த பயனாளிகள் எண்ணிக்கையையும் நற்பெயரையும் தன் மூலதனமாக பயன்படுத்தத் தொடங்கிய அமேசன் அதன் அடுத்த படிநிலையில் விற்பனையாளர்களை விளம்பரம் செய்யத்தூண்டி அதன் மூலம் இலாப மீட்டுவது, விற்பனையாளர்களைத் தமக்கு அதிகக் கழிவு விலைக்குப் பொருட்களைத் தரவேண்டும் / விற்கின்ற விலையில் கணிசமான பகுதியைத் தரகுப்பணமாகத் தரவேண்டும் என்று கட்டாயப்படுத்துவது ஆகிய விடயங்களைச் செய்யத்தொடங்கியது. இந்தப் படிநிலையில் விற்பனையாளர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்க, பயனாளிகள் அனுபவித்த சேவையின் தரமும் தேர்வும் குறைகின்றன.

அமேசன் தளத்தினைப் பயன்படுத்துவோர் அதன் மூன்றாவது படிநிலையில் ஏற்பட்ட மாற்றங்களை உணர்ந்திருப்பர். விற்பனையாளர்களிடம் இருந்து சேவைக்கட்டணங்களை Fulfilled by Amazon என்கிற பெயரில் அறவிடுவது, விற்பனையாளர்களிடம் பொருட்களை விநியோகம் செய்வதற்காக அதிகளவிலான கட்டணங்களை அறவிடுதல் போன்றவற்றைச் செய்கின்றது. இதனால் அமேசன் மூலம் தனது பொருள் ஒன்றினை விற்கின்ற விற்பனையாளர் தனது இலாபத்தில் 45% முதல் 51% வரையானதை ஏதோ ஒரு விதத்தில் அமேசனுக்கே செலுத்தவேண்டியவராக இருக்கின்றார். அத்துடன் பயனாளிகளின் தேடல் முடிவுகள் பொருட்களின் தரம், அவை குறித்த மதிப்பீடுகளின் அடிப்படையில் இல்லாமல் விளம்பரம் தந்த விற்பனையாளர்களின் பொருட்களை தேடல் முடிவுகளில் முதன்மைப்படுத்துவது போன்றவற்றையும் அமேசன் செய்கின்றது. பயனாளி ஒருவர் பொருளொன்றை வாங்கத் தேடும்போது அமேசன் பரிந்துரைக்கின்ற பொருளொன்றின் விலையானது (தரம், வணிகப் பெயர் போன்றவற்றையும் வைத்துப் பார்க்கின்றபோது) நாம் நேரடியாகத் தேடிப் பார்த்து வாங்கக் கூடிய பொருளொன்றின் விலையைவிட 29% அதிகமானதாக இருக்கின்றது என்பதுடன், சராசரியாக அமேசன் பரிந்துரைக்கின்ற ஒழுங்கின்படி பார்த்தால் கிட்டத்தட்ட 17-வது இடத்திலேயே ‘உண்மையில்’ சரியான தேர்வு இருக்கும் என்பதையும், அமேசன் தனது இலாபம், தனக்குக் கிடைக்கும் விளம்பரம் போன்றவற்றை வைத்துப் பயனாளிகளின் தேவைகளுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை தமது முதன்மையான பரிந்துரைகளாகக் காட்டி பயனாளிகளை மூளைச் சலவை செய்வதாக டொக்ரோவ் சுட்டிக்காட்டுகின்றார். இவற்றின் அடிப்படையில் அமேசன் Enshittification என்கிற அவரது கருத்தாக்கத்தின் இறுதி நிலையை - அதன் அழிவு நிலையை - அடைந்துவிட்டதாக டொக்ரோவ் கூறுகின்றார். கூர்ந்த அவதானிப்புகளுடனும் தர்க்கரீதியிலான பார்வையுடனும் ஈர்க்கக்கூடிய எளிமையான மொழியில் டொக்ரோவ் எழுதியிருக்கின்ற இந்தப் புத்தகமானது எண்ணிமத்தளங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு உதவக்கூடியது. Tik Tok-ஐ வைத்து அவர் எழுதிய The ‘Enshittification’ of TikTok என்கிற கட்டுரை www.wired.com என்கிற இணையத்தளத்தில் வெளிவந்துள்ளது.



arunmozhivarman@thaiveedu.com

உங்கள்
நாட்காட்டியில்
இந்த நாளைக்
குறித்துவைக்கவும்.

டிசம்பர்

6

2025

சனிக்கிழமை

பிற்பகல்

3.00 மணி

இடம்

Scarborough Village Recreation Centre

3600 Kingston Rd

Scarborough, ON, CA

M1M 1R9




மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகத்தில்
திரைக்கதை, திரைப்பட வரலாறு, கோட்பாடு, படத்தயாரிப்பு
ஆகியவற்றைக் கற்பிக்கும்

**பேராசிரியர் சொர்ணவேல்**

அவர்களின் நூல் வெளியீடு.

# முதல் மூவர்

## ப்ரெஸ்ஸோன், புனுவல், ஓசு

ஆகிய திரையுலக ஆளுமைகள்,
அவர்தம் படைப்புகள் பற்றிய நூல்.

# கடலாதிக்க மூலோபாய மையமாகத் திருகோணமலையின் நிலைமாற்றம்

ச. சத்தியதேவன்

இன்று, திருகோணமலை எழில் கொஞ்சும் கடற்கரைகளுக்கும், வசீகரிக்கும் திமிங்கலங்களை வேடிக்கை பார்ப்பதற்கும் பெயர் பெற்ற ஓர் அமைதியான சுற்றுலாத் தலமாகவே அறியப்படுகிறது. ஆனால், சுற்றுலா வழி காட்டிகளைத் தாண்டிப் பார்த்தால், திருகோணமலையின் அமைதியான, ஜாலங்கள் நிறைந்த நீலக்கடல், காலனித்துவ சகாப்தத்தின் மூலோபாய இரகசியங்களைத் தன்னுள் மறைத்து வைத்துள்ளது. வழக்கமாகத் துறைமுகங்கள் வர்த்தகச் செல்வங்களால் புகழ் பெறும். ஆனால், இந்த கிழக்கு இலங்கைத் துறைமுகத்தின் மேன்மைக்குக் காரணம் தங்கமோ, நறுமணப் பொருட்களோ அல்லது இரத்தினங்களோ அல்ல; அதன் புவியியல் அமைப்பே. எந்தப் பருவ நிலையிலும் சுமார் நூற்றுக்கணக்கான கப்பல்களுக்குப் பாதுகாப்பான புகலிடம் அளிக்கும், இயற்கையாகவே அமைந்த இந்த ஆழ்கடல் விரிகுடாதான் இந்து சமுத்திரத்தில் இதைத் தனித்துவமானதாக மாற்றியுள்ளது.



> “ போர்க்கப்பல்கள் தங்குவதற்கும், பழுதுபார்ப்பதற்கும் மற்றும் வளங்களை மீள்நிரப்புவதற்கும் திருகோணமலையின் இயற்கை அமைப்பு ஒரு விலைமதிப்பற்ற தளமாக அமைந்தது. எனவே, ஆசியாவின் கடல் வணிகப் பாதைகள் மற்றும் இராணுவப் போக்குவரத்தின் மீதான தங்கள் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்த, ஒவ்வொரு ஐரோப்பிய சக்தியும் இத்துறைமுகத்தைக் கைப்பற்ற முயன்றன. ”

உலகின் மிகச்சிறந்த இயற்கை ஆழ்கடல் துறைமுகங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த நகரம், வெறுமனே ஒரு துறைமுகமாக மட்டும் இருக்கவில்லை; இது உலகளாவிய கடல் ஆதிக்கப் போட்டியில், இந்தியப் பெருங்கடலின் அசைக்க முடியாத ஒரு கேந்திர மையமாகவும் திகழ்ந்தது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து தங்கள் பேரரசுகளை நிர்வகித்த ஐரோப்பிய சக்திகளுக்கு, போர்க்கப்பல்கள் தங்குவதற்கும், பழுதுபார்ப்பதற்கும் மற்றும் வளங்களை மீள்நிரப்புவதற்கும் திருகோணமலையின் இயற்கை அமைப்பு ஒரு விலைமதிப்பற்ற தளமாக அமைந்தது. எனவே, ஆசியாவின் கடல் வணிகப் பாதைகள் மற்றும் இராணுவப் போக்குவரத்தின் மீதான தங்கள் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்த, ஒவ்வொரு ஐரோப்பிய சக்தியும் இத்துறைமுகத்தைக் கைப்பற்ற முயன்றன.

ஐரோப்பாவில் அதிகார மேலாதிக்கத்துக்காகப் போட்டியிட்ட சக்திகளில், கத்தோலிக்க நாடுகளான ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கலுக்கு இடையிலான மோதலைத் தவிர்ப்பதற்காக, போப் ஆறாம் அலெக்சாண்டரின் ஆணைப்படி 1494-ஆம் ஆண்டின் ‘தோர்டெஸிலாஸ் ஒப்பந்தத்தின்’ (Treaty of Tordesillas) கீழ் ஸ்பெயின் அமெரிக்கக் கண்டத்தை நோக்கித் திரும்பியது. இதன் விளைவாக, ஸ்பெயினைத் தவிர்த்த ஏனைய ஐந்து கடல் ஆதிக்கச் சக்திகளான போர்த்துக்கல், டச்சு (ஒல்லாந்து), பிரான்ஸ் மற்றும் பிரிட்டிஷ் (இங்கிலாந்து) ஆகியவை திருகோணமலையின் முக்கியத்துவம் கருதி அதனைக் கைப்பற்றின.

1500-களின் நடுப்பகுதி முதல் 1800 வரையான காலப்பகுதியில், பல்வேறு ஐரோப்பிய சக்திகளிடையே கைமாறிய இத்துறைமுகம், ஆசியாவில் மிகத் தீவிரமாகப் போரிடப்பட்ட களங்களில் ஒன்றாக அமைந்தது. இவை வெறுமனே நிர்வாக மாற்றங்கள் அல்ல; மாறாக, இதன் புவிசார் மூலோபாய முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் நிகழ்ந்த தொடர் கடற்போர்கள் மற்றும் முற்றுகைகளின் விளைவுகளே ஆகும். காலனித்துவக் கடல் ஆதிக்கத்தின் வரைபடம் மீண்டும் மீண்டும் மாற்றி வரையப்பட்டாலும், இராணுவ மற்றும் கடற்படை மூலோபாயத்தின் மையப்புள்ளியாகத் திருகோணமலை உறுதியாக நிலைத்திருந்தது.

போர்த்துக்கேயரின் தற்செயலான இலங்கை வருகையே, ஐரோப்பியக் கடல் ஆதிக்கப் போட்டியின் தொடக்கப்புள்ளியாக அமைந்தது. சீனாவிலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு செங்கடல் நோக்கிச் செல்லும் அரபுக் கப்பல்கள், போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டிலிருந்த மலபார் துறைமுகங்களைத் தவிர்த்து, வரி செலுத்தாமல் செல்வதை முறியடிக்கவே டொம் லொறான்சோ டி அல்மெய்டா (Dom Lourenço de Almeida) முயன்றார். இதற்காக, 1505-ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் ஒன்பது போர்க்கப்பல்களுடன் அவர் மாலைதீவை நோக்கிப் புறப்பட்டார். எனினும், வழியில் வீசிய கடும் கடற்புயலில் சிக்கி, அக்கப்பல்கள் எதிர்பாராதவிதமாக இலங்கையின் காலித் துறைமுகத்தை வந்தடைந்தன. இந்த நிகழ்வே, இலங்கை வரலாற்றில் ஐரோப்பிய ஆதிக்கத்திற்கான புதியதொரு அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தது.

டொம் லொறான்சோ டி அல்மெய்டாவின் கப்பல்கள் காலித் துறைமுகத்தில் ஒதுங்கிய தற்செயலான நிகழ்வு, போர்த்துக்கேயரின் கடல் ஆதிக்க வேட்கையை நிறைவேற்றுவதற்கான முதல் அடியை எடுத்து வைத்தது. இலங்கையின் முதன்மையான சக்தியாக அப்போது விளங்கிய கோட்டே இராச்சியத்துடன் அவர்கள் உடன்படிக்கை செய்துகொண்டனர். கடற்புயலால் ஏற்பட்ட சேதங்களை ஈடுகட்டவும், அரேபிய வணிகர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கவும் போர்த்துக்கேயர்கள் கோட்டே மன்னரை அணுகினர். போர்த்துக்கேயர்கள் கறுவா வணிகத்திற்காகக் கொழும்பில் ஒரு ‘ஃபேட்டோரியா’வை (Feitoria - பாதுகாப்புக் கோட்டையுடன் கூடிய வணிகக் கிடங்கு) நிறுவ அனுமதி வழங்கினார். இந்த உடன்படிக்கை, போர்த்துக்கேயர்களுக்கு இலங்கை வணிகத்தில் சட்டப்பூர்வமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. இந்த ஆரம்பக்கட்ட உறவு, இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளை மதிப்பிடுவதற்கு வாய்ப்பளித்ததுடன், கடற்கரைப் பகுதிகளின் மீது தங்கள் கட்டுப்பாட்டை மெதுவாக நிலைநாட்டத் தேவையான தளத்தையும் அமைத்துக் கொடுத்தது.

திருகோணமலை, அதற்கு முந்தைய சுமார் 1500 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியப் பெருங்கடல் வணிகப் பாதைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது. இருப்பினும், போர்த்துக்கேய மற்றும் டச்சு காலனிய ஆட்சிக் காலத்தில் அது முதன்மை வணிக மையமாக எழுச்சிபெறவில்லை. மாறாக, அதன் இயற்கைத் துறைமுகத்தின் தன்மை காரணமாக, அது அந்தக் கடல்சார் பேரரசுகளின் இராணுவ மற்றும் கடற்படை மூலோபாயக் கேந்திர மையமாகவே மாறியது.

16-ஆம் நூற்றாண்டில், திருகோணமலைத் துறைமுகம் கண்டி மற்றும் யாழ்ப்பாண இராச்சியங்களுக்கு இடைப்பட்ட ஒரு புவியியல் பகுதியில் அமைந்திருந்தது. இது பெயரளவிலேனும் கண்டி மன்னனுக்கு அடங்கியதாக விளங் கியது. கண்டி இராச்சியம், யானைகள் மற்றும் பாக்கு போன்ற முக்கிய ஏற்றுமதிகளுக்காகவும், பிற ஆசிய நாடுகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காகவும் இத்துறைமுகத்தைப் பயன்படுத்தியது. மேலும், திருகோணமலைக்கு அருகில் பாயும் மகாவலி கங்கையின் இருப்பு, கண்டி இராச்சியத்தினு

> “திருகோணமலைப் பகுதியில் போர்த்துக்கேயரின் ஆரம்பப் பிரவேசம் ஒரு நேரடிப் படையெடுப்பாக இருக்கவில்லை; மாறாக, அது கண்டி மன்னரான முதலாம் ஜயவீர பண்டாரவின் தந்திரோபாயக் கோரிக்கையின் பேரிலேயே நிகழ்ந்தது.”

டனான உள்நாட்டுப் போக்குவரத்து இணைப்புகளை இலகுபடுத்தியது. இதன் காரணமாகவே, திருகோணமலைத் துறைமுகம் வழியாக கண்டி அரசின் முக்கிய கடல்வழிப் போக்குவரத்து நடைபெற்றது.

திருகோணமலைப் பகுதியில் போர்த்துக்கேயரின் ஆரம்பப் பிரவேசம் ஒரு நேரடிப் படையெடுப்பாக இருக்கவில்லை; மாறாக, அது கண்டி மன்னரான முதலாம் ஜயவீர பண்டாரவின் (Jayaweera Bandara - I) தந்திரோபாயக் கோரிக்கையின் பேரிலேயே நிகழ்ந்தது. 1542-இல் கண்டியை அடைந்து, மன்னரின் ஆலோசகராகவும் செயலாளராகவும் விளங்கிய போர்த்துக்கேய சிப்பாயான நுனோ ஆல்வரஸ் பெரெய்ராவின் (Nuno Álvares Pereira) ஆலோசனையின் அடிப்படையில், மன்னர் ஜயவீர பண்டார, போர்த்துக்கேய ஆளுநர் மார்டிம் அபோன்சோ டி சூசாவிடம் (Martim Afonso de Sousa) இரண்டு முக்கியக் கோரிக்கைகளை முன்வைத்தார்:

- வெளிநாட்டு வணிகம் மற்றும் குடியிருப்பிற்காகப் பயன்படும் ஒரு ‘ஃபேட்டோரியா’வை (Feitoria - பாதுகாப்புக் கோட்டையுடன் கூடிய வணிக நிலையம்) ஒரு முகவருடன் திருகோணமலையில் நிறுவ அனுமதி கோருதல்.
- கண்டிக்குச் சில போர்த்துக்கேய இராணுவ வீரர்களை அனுப்பி வைக்குமாறு கோருதல்.

இக்கோரிக்கைகளின் அடிப்படையிலேயே, திருகோணமலைப் பகுதியில் போர்த்துக்கேயரின் நடவடிக்கை, ஒரு வர்த்தக மற்றும் பாதுகாப்பு உதவியாகவே முதன்முதலில் தொடங்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைக்கு ஈடாக, அவர் போர்த்துக்கேய மன்னருக்கு கப்பம் செலுத்தவும் உடன்பட்டார். மன்னரின் பிரதான இலக்கு, போர்த்துக்கேயர்களுடன் நேரடி வர்த்தக உறவுகளை நிறுவுவதைத் தாண்டி, கண்டியின் ஆட்சிக்கு உரிமை கோரிய அண்டை இராச்சியங்களான கோட்டே மற்றும் சீதாவாக்கைக்கு எதிராகப் போரிட இராணுவ உதவியைப் பெறுவதே ஆகும். இதனால், இந்த இராஜதந்திரத் தொடர்பே, திருகோணமலைக் கடற்கரையில் போர்த்துக்கேயர்களின் முதலாவது காலடித் தடத்திற்கு நேரடிக் காரணமாக அமைந்தது.

மன்னர் ஜயவீர பண்டாரவின் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, பெப்பிரவரி 1543-இல், அமாரோ மெண்டஸ் (Amaro Mendes) மற்றும் மிகுவல் ஃபெரேரா (Miguel Ferreira) ஆகியோரின் தலைமையில், சுமார் 60 முதல் 80 போர்த்துக்கேய வீரர்களைக் கொண்ட ஒரு சிறிய படை நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டுத் திருகோணமலை குடாவை அடைந்தது. மன்னர் ஜயவீர பண்டாரவும் தனது 2,000 வீரர்களையும், தூதர் நுனோ அல்வாரெஸ் பெரேராவையும் திருகோணமலைக்கு அனுப்பி வைத்தார். இந்த உள்ளூர் மற்றும் போர்த்துக்கேயப் படைகளின் நோக்கம், ஒரு சிறிய வர்த்தகத் தளத்தை நிறுவ உதவுவதும், பின்னர் கண்டிக்கு இராணுவ உதவியை வழங்குவதும் ஆகும். ஆயினும், போர்த்துக்கேயரிடமிருந்து வாக்குறுதியளிக்கப்பட்ட முழு ஆதரவு கிடைக்காததாலும், தளபதிகளுக்கிடையே ஒத்துழைப்புக் குறைபாடு நிலவியதாலும், இந்தப் பயணம் அதன் நோக்கங்களை அடையாமல் தோல்வியடைந்தது.

முதல் முயற்சி தோல்வியடைந்த போதிலும், 1545 முதல் சீதாவக்கை இராச்சியத்தின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு கண்டி இராச்சியம் உள்ளானதால், மன்னர் ஜயவீர பண்டார போர்த்துக்கேய இராணுவ உதவியை இரண்டாவது முறையாகக் கோரினார். இம்முறை, அவர் போர்த்துக்கேய மன்னருக்குக் கப்பம் செலுத்தவும், திருகோணமலைத் துறைமுகத்தில் ஒரு ‘ஃபேட்டோரியா’வை (Feitoria) கட்ட முழுமையான அனுமதி வழங்கவும் முன்வந்தார். மேலும், ஃபேட்டோரியா பணியாளர்களுக்கான ஊதியத்துடன், தலைநகரில் வசிக்கவிருந்த மேலும் 20 போர்த்துக்கேயப் பணியாளர்களுக்கான ஊதியத்தையும் ஏற்றுக்கொள்வதாக அவர் உறுதியளித்தார். இவற்றைத் தவிர, தன்னையும் தன் குடும்பத்தையும் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றுவதாகவும் அவர் உறுதியளித்தார். அண்டை இராச்சியங்களான கோட்டே மற்றும் சீதாவாக்காவின் ஆதிக்க அச்சுறுத்தலிலிருந்து தப்பிப்பதற்காக, கண்டி மன்னர் தனது இறையாண்மை மற்றும் மத நம்பிக்கைகள் உட்பட, மிக உயர்ந்த விலையைக் கொடுக்கத் தயாராக இருந்தார் என்பதை இந்தச் சலுகைகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

மன்னர் ஜயவீர பண்டாரவின் விரிவான சலுகைகள் மற்றும் மத மாற்ற உறுதிமொழியை ஏற்று, மார்ச் 1546-ஆம் ஆண்டில், போர்த்துக்கேய இந்தியாவின் ஆளுநரால் ஒரு புதிய இராணுவப் படை கண்டி இராச்சியத்திற்கு அனுப்பப்பட்டது. இந்தப் படையின் தலைவராக ஆண்ட்ரே டி சூசா (André de Sousa) இருந்தார். படை எந்தப் பாதை வழியாக வரவேண்டும் என்ற கேள்வி எழுந்தபோது, மன்னர் ஜயவீர பண்டார இம்முறையும் திருகோணமலை வழியாகவே வருமாறு உத்தரவிட்டார்.

போர்த்துக்கேயப் படைகளுக்கு உதவுவதற்காக, அரச தூதரான நுனோ அல்வாரெஸ் பெரேராவின் தலைமையில் ஒரு உள்ளூர் துணைப் படை திருகோணமலைக்கு அனுப்பப்பட்டது. ஆனால், சுமார் 150 வீரர்கள் என எதிர்பார்க்கப்பட்ட போர்த்துக்கேயப் படையில், 13 அல்லது 14 பேர் மட்டுமே எஞ்சியிருந்ததைக் கண்டியப் படைகள் பின்னர்

> “ போர்த்துக்கீயர்கள், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதியிலிருந்தும் திறை பெறத் தொடங்கினர். அத்துடன், திருகோணமலையில் அமைந்துள்ள புகழ்பெற்ற கோணேசர் (கோணேஸ்வரம்) கோவிலுக்கும்கூட, பாதுகாப்பு வரி விதித்தனர். ”

கண்டன. இதற்குக் காரணம், திருகோணமலைக்கு வந்த போர்த்துக்கேய வீரர்கள் அப்பகுதி மக்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு, பெரும் சேதத்துடன் நாகபட்டினத் திற்கே திரும்பிச் செல்ல நேர்ந்ததே ஆகும். இந்தத் தொடர்ச்சியான தோல்வி, போர்த்துக்கேயர்களின் ஆரம்பகால முயற்சிகளில் நிலவிய சிக்கல்களையும், உள்ளூர் எதிர்ப்பின் வீரியத்தையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. மேலும், இந்த நிகழ்வுகளிலிருந்து, திருகோணமலைப் பிரதேசம் பெயரளவில் கண்டி மன்னருக்கு உட்பட்டிருந் தாலும், அது கண்டி இராச்சியத்திற்கும்கூட முற்றிலும் கட்டுப்பட்டதாக இருக்கவில்லை என்பதும் புலனாகிறது.

வெற்றியளிக்காத இவ்விரு முயற்சிகளுக்குப் பின்னரும், மன்னர் ஜயவீர பண்டார போர்த்துக்கேயர்களின் உறவையும் உதவியையும் மீண்டும் கோரினார். இம்முறை, திருகோணமலைத் துறைமுக ஃபேட்டோரியாவின் முகவராக நூனோ ஆல்வரஸ் பெரெய்ராவை நியமிப்பதாக அவர் உறுதியளித்தார். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், 1547-ஆம் ஆண்டில், சுமார் 100 பேர் கொண்ட ஒரு புதிய போர்த்துக்கேயப் படைப்பிரிவு கிழக்குக் கரையை அடைந்தது. அந்தோனியோ மோனிஸ் பாரெட்டோவின் (António Moniz Barreto) தலைமையின் கீழ் வந்த இந்தப் படை, ஆரம்பத்தில் திருகோணமலையில் தரையிறங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், போர்த்துக்கேயர்கள் மட்டக்களப்பில் தரையிறங்கி, அந்த வழியாகவே கண்டியை அடைந்தனர். எனினும், இந்த மூன்றாவது முயற்சியும் போதிய பலனை அளித்ததாகத் தெரியவில்லை.

இருந்தபோதிலும், 1570-ஆம் ஆண்டு முதல், போர்த்துக்கேயர்கள் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் தங்கள் பொருளாதார ஆதிக்கத்தை வெளிப்படையாக விரிவாக்கினர். இதன் விளைவாக, அவர்கள் திருகோணமலைப் பிராந்தியத்தின் வன்னியர்களிடமிருந்தும் மட்டக்களப்புப் பகுதியிலிருந்தும் திறை பெறத் தொடங்கினர்.

அத்துடன், திருகோணமலையில் அமைந்துள்ள புகழ்பெற்ற கோணேசர் (கோணேஸ்வரம்) கோவிலுக்கும்கூட, போர்த்துக்கீயர்கள் பாதுகாப்பு வரி (ProtectionTax) விதித்தனர். இந்த இரண்டு முக்கியக் கிழக்குத் துறைமுகங்கள் வழியாக ஏற்றுமதி செய்யப்பட்ட குறிப்பிட்ட வணிகப் பொருட்களுக்குப் போர்த்துக்கீயர்கள் தொடர்ந்து வரி விதித்தனர். இது, போர்த்துக்கீயர்கள் இலங்கையின் கிழக்குக் கடலோர வர்த்தகத்தின் மீதும், அங்குள்ள முக்கியச் சமயத் தலங்களின் வருவாயின் மீதும் கொண்டிருந்த கட்டுப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

பொ.ஆ.பி. 1582-இல், சீதாவக்கைப் படைகளால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டபோது, கண்டி மன்னர் கரலியத்த பண்டாரா (கத்தோலிக்க பெயர் Dom João), தனக்கு உதவிய சில போர்த்துக்கேயர்களுடன் சேர்ந்து திருகோணமலையில் அடைக்கலம் புகுந்தார். அவர் இறுதியில் திருகோணமலையில்தான் பெரியம்மை நோயால் இறந்தார்.

குறுகிய கால அரசியல் நலன்களுக்காக, அயல் அரசுகளின் ஆதிக்க அச்சுறுத்தலிலிருந்து தப்பிப்பதற்காகப் போர்த்துக்கேயர்களிடம் கண்டி மன்னர்கள் ஏற்படுத்திய நட்பு, முதலாம் விமலதர்மசூரியன் (1591-1604) ஆட்சிக் காலத்தில் முழுமையாக முறிந்தது. விமலதர்மசூரியனைத் தனிமைப்படுத்தவும், கண்டிக்கு வெளியே இருந்து வரும் அனைத்து வணிக மற்றும் இராணுவ உதவிகளைத் தடுக்கவும் போர்த்துக்கேயர்கள் முயன்றனர். இதுவே பகைமையை மேலும் வளர்த்தது.

தென்னிந்தியாவில், போர்த்துக்கேயர்கள் வணிகம் மற்றும் அரசியலில் தலையிட முயன்றதால், தமிழ்நாட்டின் மதுரை நாயக்க மன்னர்கள் அவர்களுடன் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டிருந்தனர். செஞ்சியை ஆண்ட ஆட்சியாளர்களும் (முதன்மையாக செஞ்சி நாயக்கர்கள்) போர்த்துக்கேயர்களின் விரிவாக்கக் கொள்கையால் அச்சமடைந்திருந்தனர்.' என் எதிரியின் எதிரி, என் நண்பன்' என்ற நிலைப்பாடு, கண்டிக்கும் இந்தத் தென்னிந்திய அரசுகளுக்கும் இடையே ஒரு இயற்கையான கூட்டணியை உருவாக்கியது.

போர்த்துக்கேய எதிர்ப்புப் போராட்டங்களுக்காக, கண்டி மன்னர் இந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்தி, இந்தியாவின் மதுரை நாயக்கர்கள் மற்றும் செஞ்சி நாயக்கர்களிடமிருந்து துருப்புக்களையும் இராணுவ உதவிகளையும் பெற்றார். கண்டி மன்னர் மற்றும் தென்னிந்திய ஆட்சியாளர்களின் இந்தக் கூட்டிணைவு, இந்தியப் பெருங்கடல் வணிகத்தில் ஏகபோகத்தை (Monopoly) நிலைநிறுத்த விரும்பிய போர்த்துக்கேயர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இதன் காரணமாக, கண்டி அரசைப் பலவீனப்படுத்துவதே போர்த்துக்கேயர்களின் நீண்டகால நோக்கமாக இருந்தது.

இந்தச் சூழலில்தான், போர்த்துக்கேயர்களின் பிரதான போட்டியாளர்களான டச்சுக்காரர்களுக்கும் கண்டி மன்னருக்கும் இடையேயான முதல் தொடர்பு, ஜூன் 1602-ஆம் ஆண்டில் மட்டக்களப்புப் பகுதியில் நிகழ்ந்தது. டச்சு அட்மிரல் ஜோரிஸ் வான் ஸ்பில்பெர்கன் (Joris van Spilbergen) மட்டக்களப்பில் தரையிறங்கி, கண்டி நோக்கிப் பயணித்து, போர்த்துக்கேயர்களுக்கு எதிராக ஒரு கூட்டணியை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார். இதன் விளைவாக, ஸ்பில்பெர்கன் கண்டி மன்னரிடமிருந்து சாதகமான பாதுகாப்பு உடன்பாட்டைப் பெறுவதில் வெற்றி கண்டார்; அத்துடன் டச்சு வணிகர்களுக்கு வணிகச் சலுகைகளும் வழங்கப்பட்டன. இது இலங்கையின் கடலோர ஆதிக்கப்

போட்டியில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தது.

அட்மிரல் ஸ்பில்பெர்கன் வெளியேறியதைத் தொடர்ந்து, மூன்று மாதங்களுக்குப் பிறகு, வைஸ் அட்மிரல் செபால்ட் டி வீர்ட்டின் (Sebald de Weert) கட்டளையின் கீழ் மற்றொரு டச்சுப் படை மட்டக்களப்பை வந்தடைந்தது. கண்டி மன்னர் முதலாம் விமலதர்மசூரியன் அவர்களை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றார். இருப்பினும், டி வீர்ட் இரண்டாவது முறையாக மன்னரைச் சந்தித்தபோது, அவ்விருவருக்கும் இடையிலான நட்புறவில் விரிசல் விழுந்தது. அவரது முறையற்ற நடத்தை காரணமாக இருதரப்பு உறவுகளும் மேலும் மோசமடைந்தன. இதன் விளைவாக, அட்மிரல் டி வீர்ட் அங்கேயே கொல்லப்பட்டார். இச்சம்பவம் ஒருபுறம் இருக்க, டச்சு கடற்படைகள் தரையிறங்குவதற்கு விருப்பமான மூலோபாய இடமாக மட்டக்களப்பு தொடர்ந்தும் விளங்கியது.




டேனிஷ் மன்னர் 4 ஆம் கிறிஸ்டியனுக்கும் மார்செலிஸ் போஷோவருக்கும் இடையிலான ஒப்பந்தம்

1602-ஆம் ஆண்டில், திருகோணமலை மீதான போர்த்துக்கேயக் கவனம் இரட்டை மூலோபாயத்தின் அடிப்படையில் வலுப்பெற்றது. முதலாவதாக, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகள் ஜேசுயிட்டுகளின் ஆன்மீகப் பணிக்கு ஒதுக்கப்பட்டன. இது தேவாலயங்கள் அமைப்பதற்கும், மக்களை மத மாற்றம் செய்வதற்கும் ஒரு நிலையான அடித்தளத்தை ஏற்படுத்தியது.

இரண்டாவதாக, அதே ஆண்டில் திருகோணமலையில் கோட்டை கட்டுவதற்கான முதல் போர்த்துக்கேய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவு, 1602-இல் டச்சுக்காரர்களுக்கும் கண்டி மன்னருக்கும் இடையே ஏற்பட்ட முதல் தொடர்புக்கு ஒரு நேரடி மற்றும் அவசர எதிர்வினையாக அமைந்தது. ஏனெனில், போர்த்துக்கேயர்கள் திருகோணமலைத் துறைமுகத்தின் வழியாக கண்டி இராச்சியத்திற்குள் டச்சுத் துணைப் படைகள் அல்லது ஆயுதங்கள் நுழைவதைத் தடுக்க விரும்பினர்.

எனவே, திருகோணமலையைக் கட்டுப்படுத்துவது போர்த்துக்கேயர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது. கண்டி இராச்சியத்திற்கு வெளியில் இருந்து வரும் இராணுவ உதவியைத் துண்டிக்கும் ஒரு மூலோபாயத் தடுப்பரணாக (Strategic Buffer) திருகோணமலை விளங்கியமையே இதற்கு முக்கிய காரணம் எனலாம்.

1605 மற்றும் 1609-ஆம் ஆண்டுகளுக்கிடையேயான காலப்பகுதியில், டி. பிரான்சிஸ்கோ டி மெனெசஸ் (D. Francisco de Menezes) என்பவர் கண்டி மன்னருக்கு எதிரான இராணுவப் படையெடுப்புளின் போது இரண்டு முறை திருகோணமலைக்கு வருகை தந்தார்.

குறிப்பாக, 1606-இல் ஒரு கிளர்ச்சியை அடக்கும் வகையில், போர்த்துக்கேயச் சிப்பாய்களுடன் 4,000 முதல் 5,000 வரையிலான சிங்கள லாஸ்கரின்களையும்(lascarins) உள்ளடக்கிய ஒரு படை திருகோணமலையை நோக்கிச் சென்றது. திருகோணமலையை அடைந்த இந்தப் படை, சுமார் 200 ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கைது செய்தது. சிமாவ் கோரியா (Simão Correia) எனும் ஒரு சிங்களத் தளபதியின் உத்தரவின் பேரில், கைது செய்யப்பட்டோர் அனைவரும் கடுமையாக அடித்துக் கொல்லப்பட்டனர். மேலும், 'கருணை' காட்டும் செயலாக, கொல்லப்படுவதற்கு முன்பு அவர்களுக்கு கிறிஸ்தவ மதத்தில் திருமுழுக்கும் (Baptism) கொடுக்கப்பட்டது என்ற கொடூரமான விவரம், 1606-ஆம் ஆண்டின் ஜேசுயிட்டுகளின் வருடாந்திர அறிக்கையில் (annual relation of the Jesuits) விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1612-ஆம் ஆண்டில், டி. ஹையரோனிமோ டி அசேவெடோ (D. Hierónymo de Azevedo) தலைமையில் திருகோணமலைக்கான அடுத்த போர்த்துக்கேயப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. கனமழை காரணமாக ஏற்பட்ட பெரும் சிரமங்களுக்குப் பிறகு திருகோணமலை வந்தடைந்த டி. அசேவெடோ, அங்கு ‘ஒரு கோட்டையைக் கட்டுவதில் ஆர்வம் காட்டினார்.’ இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, அவர் யாழ்ப்பாண மன்னரின் உதவியை நாடினார்.

எனினும், அந்த உதவி கைகூடவில்லை. மேலும், டி. அசேவெடோ வைசிராய் பொறுப்பை ஏற்பதற்காக நவம்பர் 1612-இல் இலங்கையை விட்டு வெளியேறி கோவாவிற்குச் சென்றதாகத் தெரிகிறது. அவர், திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக் கோட்டைகளின் கட்டுமானத்திற்குத் தேவையான பொருட்களுடன் ‘ஆறு கப்பல்களை’ அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் அனுப்பத் திட்டமிட்டிருந்தார். அத்துடன், காலி கடற்கரையைக் கண்காணிக்க இரண்டு கப்பல்களையும், அடுத்து குளிர்காலத்தில் கோட்டைக் கட்டுமானத்திற்கு

உதவும் நோக்குடன், இந்தக் கப்பல்களைத் திருகோணம லையில் தங்கி இருக்கச் செய்யவும் அவர் திட்டமிட்டி ருந்தார்.

1617-இல், கண்டி மன்ன ருக்கும் போர்த்துக்கேயர்க ளுக்கும் இடையே ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற் பட்டது. அந்த ஒப்பந்தத்தில், இரண்டு தரப்புப் பிரதேசங் களுக்கு இடையேயான எல்லைகள் வரையறுக்கப் பட்டதுடன், குறிப்பாக கிழக் குக் கரையில் உள்ள எல் லைகளும் தெளிவாக நிர் ணயிக்கப்பட்டன. இந்த ஒப் பந்தத்தின்படி, திருகோ ணமலை மற்றும் மட்டக்க ளப்பு ஆகிய இரண்டு முக்கியத் துறைமுகங்களும் கண்டி இராச்சியத்தின் கட் டுப்பாட்டில் இருந்தன. மேலும், கண்டி மன்னரின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களின் எல்லை கள் கொட்டியாரம், மட்டக் களப்பு துறைமுகங்கள் வரை நீண்டிருந்தன என்றும் அந்த ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.



மார்செலிஸ் போஷோவர் டேனிஷ் மன்னரிடம் கையளித்ததாக நம்பப்படும் இலங்கை வரைபடம்.

விரட்ட முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்தார். எனவே, அவர் ஒரு நடைமுறை உத்தியை வகுத் தார்: அதாவது, ஒரு ஐரோப்பிய சக்தியை மற்றொரு ஐரோப்பிய சக்திக்கு எதிராகப் பயன் படுத்துவது. கடலில் போர்த்துக்கேயரைத் தோற்கடிக்க, மற்றொரு ஐரோப்பியக் கடற்படை பலத்தின் உதவி அவரு க்கு அத்தியாவசியமா கியது.

போர்த்துக்கேயரின் பிர தான போட்டியாளர்க ளான டச்சு கிழக்கிந்திய கம்பெனியை மன்னர் செனரத் முதலில் அணு கிய போதிலும், ஆரம் பத்தில் உருவான கூட் டணி நீடிக்கவில்லை. இந்தோனேசியா போன்ற லாபகரமான பகுதிகளில் தங்கள் வணிக நலன்க ளுக்கு முன்னுரிமை அளித்த டச்சுக்காரர்கள், கண்டிக்குத் தேவையான நிலையான இராணுவ உதவியை வழங்கத் தவறினர்.

இந்தியப் பெருங்கடலின் வணிகப் பாதைகளில் ஆதிக்கம் செலுத்த, ஐரோப்பாவின் இரு பெரும் கடற்படை சக்திகளான போர்த்துக்கேயர்களும் டச்சுக்காரர்களும் மோதிக் கொண்டி ருந்த இந்தச் சூழ்நிலையில், இந்த வரலாற்றுப் போட்டிக் களத்தில் யாரும் எதிர்பாராத ஒரு வட ஐரோப்பிய சக்தியான டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு, அந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு இந்தியப் பெருங்கட லுக்குள் உள்நுழைவதற்கான வாய்ப்பு உருவானதுது.

ஆசிய வர்த்தகக் கடற்பகுதிகள் போர்த்துக்கேயர் மற்றும் டச் சுக்காரர்களின் ஏகபோகக் கட்டுப்பாட்டில் இருந்தன. இந்த வர்த்தகத்தின் மூலம் அவர்கள் அபரிமிதமான செல்வத்தை ஈட்டினர். இந்தச் சூழ்நிலையில், டென்மார்க்கின் மன்னர் நான்காம் கிறிஸ்டியன் (King Christian IV), இந்தப் பொருளா தார நலன்களில் பங்கெடுக்க விரும்பினார். டச்சு கிழக் கிந்திய கம்பெனியின் (VOC) மாதிரியைப் பின்பற்றி உரு வாக்கப்பட்ட டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி, இந்து சமுத்தி ரத்தில் ஒரு தளத்தை நிறுவுவதை அதன் முதன்மை நோக் கங்களில் ஒன்றாகக் கொண்டிருந்தது.

இக்காலகட்டத்தில், கண்டி மன்னர் இரண்டாம் செனரத் (1604–1635), தமது இராச்சியத்திற்குச் சொந்தக் கடற்படை இல்லாமையாலும், முக்கியத் துறைமுகங்களுக்கான அணுகல் இல்லாமையாலும், போர்த்துக்கேயரைத் தனியாக

டச்சுக்காரர்களின் இந்த நம்பகத்தன்மையின்மையாலும், நிலைப்பாடின்மையாலும் விரக்தியடைந்த மன்னர் செனரத், ஒரு துணிச்சலான இராஜதந்திர நகர்வை மேற்கொள்ளத் தீர் மானித்தார். அதன்படி, அவர் முன்னாள் டச்சுத் தூதரான மார்செலிஸ் போஷோவரை (Marcelis Boshouwer) தனது அதிகாரப்பூர்வத் தூதராக ஐரோப்பாவிற்கு அனுப்பினார். இதன் பிரதான நோக்கம்: போர்த்துக்கேயர்களுக்கு எதிராகப் போராட ஒரு புதிய, நம்பகமான மற்றும் நிலையான கூட்டா ளியைக் கண்டறிவதே ஆகும்.

ஐரோப்பாவில், மன்னர் செனரத்துக்கு ஆதரவாக டச்சுக்கா ரர்களை ஒரு கூட்டணிக்குச் சம்மதிக்க வைப்பதில் தோல்விய டைந்த போஷோவர், அதன் பின்னர் டென்மார்க்கின் நான்காம் கிறிஸ்டியன் மன்னரை (King Christian IV) அணு கினார். அங்கு, போஷோவர் நான்காம் கிறிஸ்டியன் மன்னரை கண்டி அரசருக்கு உதவ சம்மதிக்கச் செய்தார். டேனிஷ் உதவியைப் பெறுவதற்காக, மார்செலிஸ் போஷோவர் ஒரு மிகையான தகவலைப் பயன்படுத்தினார்: அவர் கண்டி இராச் சியத்தின் வளங்களை மிகைப்படுத்திக் கூறியதுடன், இலங்கை முழுவதுமான (கண்டி) அரசர் சார்பாக ஒப்பந்தங் களைச் செய்ய தனக்கு அதிகாரம் உள்ளதாகவும் பொய்யாக உறுதிப்படுத்தினார். இதன் விளைவாக, மார்ச் 30, 1618 அன்று, டென்மார்க் மன்னர் நான்காம் கிறிஸ்டியனுக்கும், ‘இலங்கை பேரரசர் சார்பாக’ கையெழுத்திட்ட மார்செலிஸ்

போஷோவருக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. ஏழு ஆண்டுகள் செல்லுபடியாகும் இந்த ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையைப் பாதுகாப்பதற்காக டென்மார்க் ஒரு போர்க்கப்பலும் 300 காலாட்படை வீரர்களும் வழங்கக் கடமைப்பட்டது. இதற்கு ஈடாக இழப்பீடு வழங்கப்படும் எனவும் நிர்ணயிக்கப்பட்டது. மேலும், டென்மார்க் மற்றும் இலங்கை மக்கள் ஒருவருக்கொருவர் நாட்டில் சுதந்திரமாகப் பயணிக்கலாம் என்றும், மிக முக்கியமாக, ஆசியர்கள் ஆக்ஸ்பர்க் மதக்கொள்கையின்படி கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதைக் கண்டி அரசர் குறைந்தபட்சம் தடுக்க மாட்டார் என்றும் இந்த உடன்படிக்கை விதித்தது. இந்த இராஜதந்திர முன்னெடுப்பின் நேரடி விளைவாகவே, ஒரு டேனிஷ் கடற்படை இலங்கையின் கிழக்குக் கரையை அடைந்தது.

டென்மார்க் மன்னர் நான்காம் கிறிஸ்டியன் (Christian IV) தனது விரிவான வணிகக் கொள்கையின் ஒரு பகுதியாக, கோபன்ஹேகனுக்கும் இந்தியாவிற்கும் இடையே ஒரு நேரடி வர்த்தகப் பாதையை நிறுவ விரும்பினார். இந்தக் கனவைச் சாத்தியப்படுத்தவும், வர்த்தகப் போக்குவரத்தைப் பாதுகாப்பதற்காக முக்கிய ஆதரவுப் புள்ளிகளை நிறுவவும், இலங்கையின் ஆட்சியாளருடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு, அட்மிரல் ஓவ் கீடே (Ove Gjedde) (1594-1660) என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இளம் பிரபுவான கீட்டேவின் தலைமையின் கீழ், இந்தக் கடற்பயணத்திற்காக சுமார் 400 பேர் கொண்ட கடற்படை திரட்டப்பட்டது. கடற்கொள்ளையர்கள் மற்றும் எதிரிப் போர்க்கப்பல்களின் தாக்குதல்களிலிருந்து கடற்படையைப் பாதுகாப்பதற்காக, ‘எலிஃபண்ட்’ (Elephant) மற்றும் ‘டேவிட்’ (David) என்ற இரண்டு போர்க்கப்பல்களும், அத்துடன் ‘கோபன்ஹேகன்’, ‘கிறிஸ்டியன்’, மற்றும் ‘ஒஸ்டெண்ட்’ என்ற மூன்று வணிகக் கப்பல்களும் வழங்கப்பட்டன. இதில், கீட்டே தலைமைப் போர்க்கப்பலான ‘எலிஃபண்ட்’டில் பயணம் செய்தார். அதே சமயம், ஒப்பந்தத்தை உருவாக்கிய மார்ச்செலிஸ் டி போஷோவர் (Marcelis de Boshouwer) தனது குடும்பத்துடன் ‘டேவிட்’ கப்பலில் பயணித்தார். இறுதியாக, 1618 நவம்பர் மாதம், இந்தக் கப்பற்படையணி கோபன்ஹேகன் (Copenhagen) துறைமுகத்திலிருந்து புறப்பட்டது.

அட்மிரல் கீடேவின் ஒப்பீட்டளவில் அனுபவமற்ற முக்கிய கடற்பயணத்திற்கு வழிவகுக்கும் வகையில், டச்சு கிழக்கிந்திய நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான ரோலாண்ட் கிரேஃப் (Roelant Crape) கட்டளையின் கீழ் ‘ஓரெசுண்ட்’ (Øresund) என்ற கப்பல் ஒரு முன்னோடிப் படையாக அனுப்பப்பட்டது.ஒரு வர்த்தக நிலையத்தை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதும், உள்ளூர் ஆட்சியாளர்களுடன் ஆரம்பத் தொடர்பைத் தொடங்குவதும் இதன் முதன்மை நோக்கங்களாகும். டிசம்பர் 1619-இல், ஓரெசுண்ட் இலங்கையை அடைந்தது. இருப்பினும், மன்னர் செனரத் சமீபத்தில் போர்த்துக்கேயர்களுடன் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்ததால், டேனிஷ்காரர்களை தயக்கத்துடன் அணுகினார். இதன் காரணமாக, க்ரேப் தனது ஆரம்ப நோக்கங்களை முழுமையாக அடைய முடியவில்லை.




1635 இல் திருகோணமலைக் கோட்டை Drawing by PedroBarreto Resende for the Livro das Plantas by António Bocarro
(பட உதவி -நடராஜா கோபிநாத்)

ரோலாண்ட் கிரேஃப் தனது தந்திரோபாயங்களை மாற்றி, நாகப்பட்டினத்தைச் சுற்றியுள்ள போர்த்துக்கேயக் கப்பல் களைத் தாக்குவதன் மூலம் விரோதப் போக்கைத் தொடங் கினார். சோழமண்டல கடற்கரையில், ஆண்ட்ரே கோயல்ஹோ (André Coelho) தலைமையிலான போர்த்துக்கேயக் கடற்ப டையுடன் நடந்த கடற்படைப் போரில், ஒரு டேனிஷ் கப்பல் விரைவாக மூழ்கடிக்கப்பட்டு, கிரேஃப் கைப்பற்றப்பட்டார். பின்னர் அவர் தஞ்சாவூர் நாயக்கரிடம் ஒப்படைக்கப்பட்டார். அங்கு, அவர் இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி, ஆட்சியாள ரிடமிருந்து கடற்கரை நகரமான தரங்கம்பாடியில் (Tranquebar) ஒரு குடியேற்றத்தை நிறுவுவதற்கான முக்கியமான வாக் குறுதியை வெற்றிகரமாகப் பெற்றார்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு, 1620-இல், தளபதி ஓவ் கீடேவின் தலைமையில் பிரதான கடற்படை இலங்கையை வந்தடைந்தது. கீடே இலங்கையை அடைந்தபோது, மன்னர் செனரத் போர்த்துக்கேயர்களுடன் சமாதான ஒப்பந்தத்தில் இருந்தார். போர்த்துக்கேயர்களை இலங்கையிலிருந்து வெளி யேற்றுவதற்கு டேனிஷ் படைகளால் உண்மையில் இயலுமா என்பது மன்னருக்குச் சந்தேகமாகவே இருந்தது. மேலும், சிறிய டேனிஷ் பயணக்குழுவால் தீவில் போர்த்துக்கேயர்களின் ஆட்சியை அழிக்க முடியாது எனவும் அவர் நம்பினார்.

இலங்கைக்கு வந்த கீடே தாம் ஏமாற்றமடைந்தார். நீண்ட பய ணத்தின் இடைவழியில் மார்ச்செலிஸ் டி போஷோவர் இறந்து போயிருந்தார். மேலும், 1615-ஆம் ஆண்டு போஷோவர் மன்னர் நான்காம் கிறிஸ்டியனுக்கு அளித்த வாக்குறுதிகள் போலியானவை என்றும், செனரத் முழு இலங்கைக்கும் பேரர சராக இல்லாமல் கண்டி நகரத்தை மையமாகக் கொண்ட தீவின் ஒரு பகுதிக்கு மட்டுமே அரசர் என்றும் அவருக்குத் தெரியவந்தது. மன்னர் செனரத், போஷோவர் தனது சார்பாக ஒப்பந்தத்தில் 1618-ஆம் ஆண்டு டென்மார்க் மன்னர் நான்காம் கிறிஸ்டியன் மற்றும் போஷோவர் இடையே கையெ ழுத்தான ஒப்பந்தத்தை நிராகரித்தார். நிலைமையைப் புரிந்து கொண்ட கீடே, போஷோவரின் ஒப்பந்தத்தை ஏற்கவும், டென்மார்க்கின் செலவினங்களைத் திருப்பிச் செலுத்தவும் கண்டி அரசனுடன் தனிப்பட்ட முறையில் பேரம் பேசினார். இதன் விளைவாக, போர்த்துக்கேய எதிர்ப்பு நோக்கத்துடன், டேனிஷ்காரர்களுக்கும் மன்னர் இரண்டாம் செனரத்துக்கும் இடையில் 1620-ஆம் ஆண்டு ஒரு புதிய கூட்டணி ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாக மன்னர் செனரத் திருகோணமலையில் ஒரு கோட்டையைக் கட்ட டேனிஷ்காரர் களுக்கு அனுமதி வழங்கினார். இதற்குப் பதிலாக, போர்த் துக்கேயருக்கு எதிரான மன்னரின் போராட்டத்திற்கு டேனிஷ் காரர்கள் இராணுவ உதவி வழங்குவதற்கு உடன்பட்டனர். அத்துடன், டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு இலங்கையில் வர்த்தகம் செய்வதற்கான பிரத்தியேக உரிமைகள் வழங்கப் பட்டன. இந்த ஒப்பந்தம், போர்த்துக்கேயர்களுக்கு எதிரான



திருகோணமலையின்
பிரெட்ரிக் கோட்டையின் தோற்றம் (1672)

கண்டியின் போராட்டத்திற்கு டேனிஷ் ஆதரவை முறைப்படுத்தியதுடன், திருகோணமலையில் டேனிஷ் வர்த்தகத் தளம் அமைப்பதற்குச் சட்டபூர்வமான அடித்தளத்தையும் வழங்கியது.

மன்னர் இரண்டாம் செனரத்தின் அதிகாரப்பூர்வ ஒப்புதலைப் பெற்ற டேனிஷ்காரர்கள், உடனடியாகத் திருகோணமலையில் கோட்டை கட்டுவதற்கான வேலைகளைத் தொடங்கினர். இதற்காக, வரலாற்றுச் சிறப்புமிக்க கோணேச்சரம் கோயில் அமைந்திருந்த சுவாமிமலையை (Swamy Rock) அவர்கள் ஆக்கிரமித்தனர். இந்தக் கட்டுமானப் பணிகளுக்கு உதவுவதற்காக, செனரத் மன்னரும் 60 பேரைத் திருகோணமலைக்கு அனுப்பினார். கோட்டையின் கட்டுமானப் பொறுப்பையும், திரும்பப் பயணத்திற்கான பொருட்களைச் சேகரிக்கும் பணியையும் தனது உப தளபதி எரிச் க்ரூப்பேவிடம் (Erich Grubbe) ஒப்படைத்துவிட்டு, ரோலாண்ட் க்ரேப்பின் அழைப்பை ஏற்று தளபதி கீடே தரங்கம்பாடிக்குச் சென்றார்.

பொதுவான வரலாற்றுப் புரிதலுக்கு மாறாக, இந்து சமுத்திரத்தில் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆரம்பக் குடியேற்ற முயற்சியானது, இலங்கையின் திருகோணமலைக் கடற்கரையை மையமாகக்கொண்டு அமைந்தது. அவர்கள் கண்டியின் மன்னர் இரண்டாம் செனரத்துக்கும், போர்த்துக்கேய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையேயான இராஜதந்திரப் போராட்டச் சூழலை லாவகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தமது முதல் இராணுவக் கடற்படை மூலோபாயக் கோட்டையை நிறுவினர். இந்தக் கட்டுமானம் திருகோணமலையின் வரலாற்றுச் சிறப்புமிக்க கோணேஸ்வரம் கோயில் அமைந்திருந்த புனிதமான சுவாமிமலையில் மேற்கொள்ளப்பட்டது.

திருகோணமலையில் டேனிஷ்காரர்கள் நிறுவிய குடியேற்றம் ஒப்பீட்டளவில் குறுகிய காலமே நீடித்தது. இதற்கு முக்கியக் காரணம், டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் நிதி நெருக்கடிகள் காரணமாக, கோட்டைக்கான தொடர்ச்சியான ஆதரவு தடைபட்டது மற்றும் உள்ளூர் எதிர்ப்பு மற்றும் உணவு உதவிகள் கிடைக்காததாலும் தொடர்ந்து ஏற்பட்ட நோய்த்தொற்று காரணமாகவும் அங்கிருந்த டேனிஷ் படை பல கடுமையான சவால்களை எதிர்கொண்டது. எனினும், இந்த குறுகியகால மூலோபாய நகர்வு, போர்த்துக்கேயர்களின் ஆதிக்கத்திற்கு நேரடியான சவால் விடுத்ததுடன், இப்பிராந்தியத்தின் புவிசார் அரசியல் சமநிலையில் ஒரு முக்கிய மாற்றத்தை உருவாக்கியது.

இந்த புதிய ஊடுருவலை அவதானித்த போர்த்துக்கேயர்கள் உடனடியாகப் பதிலடி கொடுத்தனர்: அவர்களின் படைகள் திருகோணமலை வழியாக அணிவகுத்துச் சென்று, டேனிஷ் கப்பல்களைத் தாக்கின. இதன் விளைவாக, டேனிஷ்காரர்கள் இரண்டு கப்பல்களையும் சில வீரர்களையும் இழந்து, அங்கிருந்து அவசரமாகத் தப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் டேனிஷ்காரர்கள் 1621-ஆம் ஆண்டில் இந்த ஆக்கிரமிப்பு முயற்சியை முற்றிலுமாகக் கைவிட்டனர். டேனிஷ்காரர்களின் தோல்வியைத் தொடர்ந்து, இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் குறைந்தபட்சம் ஒரு கோட்டைத் தளத்தை (Fortress Base) நிறுவுவதன் அவசியத்தை போர்த்துக்கேயர்கள் தீவிரமாக உணர்ந்தனர். ஏனெனில், இது இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், கண்டி இராச்சியத்தை இறுக்கமான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவும் அத்தியாவசியம் என அவர்கள் உணர்ந்தனர்.

**“ செனரத்தின் ஒப்புதலைப் பெற்ற டேனிஷ்காரர்கள், உடனடியாகத் திருகோணமலையில் கோட்டை கட்டுவதற்கான வேலைகளைத் தொடங்கினர். இதற்காக, கோணேச்சரம் கோயில் அமைந்திருந்த சுவாமிமலையை ஆக்கிரமித்தனர். ”**



அட்மிரல் ஓவ் கீடே

முந்தைய டேனிஷ் ஊடுருவலின் தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொண்டதன் பின்னணியில், 1623-ஆம் ஆண்டில், கான்ஸ்டான்டினோ டி சா இ நோரோன்ஹா (Constantino de Sá de Noronha) இரண்டாவது முறையாக இலங்கையின் கேப்டன் ஜெனரலாகப் பொறுப்பேற்றார். வைஸ்ராய் டோம் பிரான்சிஸ்கோ ட காமாவிடமிருந்து பெற்ற குறிப்பிட்ட உத்தரவின்படி, அவர் நேரத்தை வீணடிக்காமல் ஜூலை 1623-இல் திருகோணமலைக் கோட்டையைக் கட்டும் பணியைத் தொடர்ந்தார். இந்தக் கோட்டையின் இரட்டை மூலோபாய இலக்குகள்: அராபிய வணிகர்கள் மூலம் கண்டி மன்னர் மற்ற ஆசிய இராச்சியங்களுடன் நடத்தி வந்த வர்த்தகத்தைத் தடுப்பதும்; எதிர்காலத்தில் பிற ஐரோப்பியப் போட்டியாளர்கள் திருகோணமலையைத் தளமாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதும் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.

**“ திருகோணமலை வரலாற்றின் பெருந்துயரமாக, கோணேஸ்வரர் கோயில் மிலேச்சத்தனமாக முழுமையாக அழிக்கப்பட்டது; அக்கோயிலின் கற்கள் நேரடியாகப் போர்த்துகீசியக் கோட்டையின் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப் பட்டன ”**

கோட்டை கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், டேனிஷ்காரர்களால் முன்னர் கட்டுமானம் அமைத்த, கோணேசர் கோயில் அமைந்திருந்த அதே சுவாமிமலையே ஆகும். இந்த நடவடிக்கையின் உச்சக்கட்டமாக, திருகோணமலை வரலாற்றின் பெருந்துயரமாக, கோணேஸ்வரர் கோயில் மிலேச்சத்தனமாக முழுமையாக அழிக்கப்பட்டது; அக்கோயிலின் கற்கள் நேரடியாகப் போர்த்துகீசியக் கோட்டையின் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. அங்கு புனிதத் தளத்தின் வளங்கள் ஒரு இராணுவ அமைப்பை உருவாக்கப் பயன்பட்டது, திருகோணமலை வரலாற்றில் இது ஒரு முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது.

திருகோணமலைக் கோட்டையைக் கட்டுவதற்கான செலவுகள், யாழ்ப்பாணத்தில் பெறப்

பட்ட வரிகளில் இருந்தே திரட்டப்பட்டன. கோட்டை கட்டுவதற்குத் தேவையான சுண்ணாம்பு, யாழ்ப்பாணத்தில் இருந்த போர்த்துக்கேய தளபதி ஒலிவேறாவினால் (Oliveira) யானைகள் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், கூலிகள், உணவுப் பொருட்கள் மற்றும் வெடிமருந்துகளும் யாழ்ப்பாணத்திலிருந்தே அனுப்பப்பட்டன. கோட்டை கட்டும் பணி சுமார் நான்கு மாதங்களில் முடிக்கப்பட்டது. இதனையடுத்து, கோட்டை, திருகோணமலைக்குப் பொறுப்பான பிரான்சிஸ்கோ பின்டோ பிமென்டாவின் (Francisco Pinto Pimento) தலைமையில், போர்த்துகேயர்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கூலிப்படைகளையும் கொண்ட ஒரு படைப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆரம்பத்தில், கோட்டையில் உடைந்த டேனிஷ் கப்பல்களிலிருந்து மிகுந்த சிரமத்துடன் எடுக்கப்பட்ட 14 பீரங்கிகள் (cannons) பொருத்தப்பட்டன.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, திருகோணமலை, அதன் ஆழ்ந்த, இயற்கையான துறைமுகம் மற்றும் தனித்துவமான புவியியல் அமைவிடம் காரணமாக, இந்தியப் பெருங்கடல் வணிகப் பாதைகளின் முக்கிய வர்த்தக மையமாகவும் பிராந்தியத்தின் தொடர்புச் சங்கிலியாகவும் திகழ்ந்தது. இந்தத் துறைமுகத்தின் கேந்திரமைய ஆற்றலை முதலில் உணர்ந்தவர்கள், இந்தியத் துணைக்கண்டத்தின் கடல் கடந்த பேரரசான சோழர்களே ஆவர். அவர்கள் இலங்கையை ஆக்கிரமித்தபோது, இந்தத் துறைமுகத்தை ஒரு சாதாரண வர்த்தக நிலையமாகக் கருதாமல், தீவின் கிழக்குக் கரையில் தங்கள் இராணுவ மற்றும் அரசியல் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த உதவும் ஒரு மூலோபாயத் தலைநகராகவே மாற்றினர். ஆயினும், சோழப் பேரரசுக்குப் பிறகும், போர்த்துக்கேயர்களின் வருகை வரைக்கும், திருகோணமலையின் வணிக முக்கியத்துவம் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ச்சியான ஆதிக்கத்துடன் விளங்கியது.

தற்செயலாக இலங்கைக்குள் நுழைந்த போர்த்துக்கேயர்கள் ஆரம்பத்தில், நாட்டின் தென்மேற்குக் கரைகளையும், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்குப் பகுதியையுமே கட்டுப்படுத்துவதில் தீவிரம் காட்டினர். ஆனால், டச்சுக்காரர்களின் பிரவேசம் ஐரோப்பியப் போட்டிகள் குறித்த அச்சத்தை விதைத்தது; அதன் உச்சக்கட்டமாக, டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆதரவுடன் டேனிஷ்காரர்கள் திருகோணமலையில் குடியேற்றம் செய்ய முயற்சித்த பின்னரே, கிழக்குக் கரையின் உண்மையான மூலோபாய முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்தனர். அத்துடன், கிழக்குக் கரைகளைக் கட்டுப்படுத்துவது, அவர்களது இந்தியப் பெருங்கடல் ஏகாதிபத்தியத்தின் இருப்பைத் தக்கவைக்க அவசியமான, கட்டாயமானதொரு நகர்வு என்பதையும் இது மற்ற ஐரோப்பிய காலனித்துவ சக்திகளுக்கு வலியுறுத்தியது.

ஏனைய ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள் நுழைந்தது போலன்றி, டேனிஷ்காரர்களின் வருகை, இலங்கை அரசியலில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக போர்த்துகேய ஆதிக்கத்தை முறியடிக்க விரும்பிய கண்டி மன்னர் இரண்டாம் செனரத்தால் விடுக்கப்பட்ட அழைப்பின் அடிப்படையிலான அரசியல் மற்றும் கடலாதிக்க மூலோபாய இராஜதந்திர நகர்வாகவே இதனைக் கருதலாம். இதன் விளைவாக, டேனிஷ்காரர்களின் திருகோணமலை வருகையும் அவர்களது குடியேற்ற முயற்சியும் வர்த்தகப் போட்டியாக மட்டும் அமையாமல், கண்டி இராச்சியத்தின் வெளியுறவுக் கொள்கையை ஆதரிக்கும் புவிசார் அரசியல் போட்டியாகவும், ஆசியாவின் கடல் வணிகப் பாதைகள் மற்றும் இராணுவப் போக்குவரத்தின் மீதான சர்வதேசக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான சர்வதேசச் சவாலாகவும் அவதானிக்கப்பட்டது.

இந்தப் பின்புலத்திலேயே, திருகோணமலை அதன் புவியியல் மூலோபாய அமைவிடம் காரணமாக, பெருங்கடல் வணிகப் பாதைகளின் நிலையைத் தீர்மானிக்கும் துறைமுக வணிக மையம் என்ற நிலையிலிருந்து, இந்தியப் பெருங்கடலின் மூலோபாய ரீதியிலான இராணுவ-கடற்படைக் கேந்திர மையமாக நிலைமாற்றம் பெற்றது. இந்த நிலைமாற்றம் மாறாக, சோழப் பேரரசு காலந்தொடங்கி, டேனிஷ் மற்றும் போர்த்துக்கேயர்களின் காலனியாதிக்கப் போட்டிகளின் உச்சக்கட்டம் வரை நீடித்த ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியினால் கட்டமைக்கப்பட்டதாகும். இதன் இயற்கைத் துறைமுகத்தின் ஆழம், அனைத்துக் காலநிலைகளிலும் கப்பல்களைத் தாங்கும் ஆற்றல், மற்றும் வங்காள விரிகுடா மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான மூலோபாய நுழைவாயில் ஆகிய காரணங்களால், ஓர் அழியாத கடற்படைத் தளமாக மட்டும் நிலைபெறும் நிலைக்கு உறுதியானது. இந்த இராணுவ-கடற்படைக் கேந்திர மையத்தின் நிலை இன்று வரை தொடர்வது, அப்பிராந்தியத்தில் அதன் நீடித்த புவியியல் மூலோபாய மதிப்பைப் பிரதிபலிக்கிறது.



sathiyathevan.s@thaiveedu.com

**குறிப்பு:** சில ஆண்டுகளுக்கு முன், ஆவணம் ஜூலை 93 (இதழ் 3) இதழில் அ. இராசேந்திரன் அவர்கள் எழுதிய 'கண்டி அரசர் தரங்கம்பாடி டேனிஷ் கவர்னருக்கு எழுதிய கடிதம்' என்ற குறிப்பினை வாசித்தேன். அதில், கண்டி அரசன் வீரபராக்கிரம நரேந்திரசிங்கன், தரங்கம்பாடி டேனிஷ் கவர்னருக்கு (முசல்யிட்டனுக்கு - Muheler Fort) தமிழில் எழுதிய கடிதத்தில் துப்பாக்கிகளும், 5000 வராகன் பணமும் கேட்டிருந்தது குறித்த தகவல்கள் ஆச்சரியமூட்டின. குறித்த கடிதம் அக்குறிப்பில் வெளியிடப்பட்டிருந்த போதும், மேற்கொண்டு கண்டி அரசுக்கும் டேனிஷ்காரர்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து வேறு தகவல்கள் எதனையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

இந்நிலையில், சில நாட்களுக்கு முன், எங்கள் தலைமுறையின் நம்பிக்கைக்குரிய வரலாற்று ஆய்வாளரான மருத்துவர் த. ஜீவராஜ் அவர்கள், திருகோணமலையில் டேனிஷ்காரர்களின் குடியேற்ற முயற்சிகள் குறித்த தகவலை எனக்குச் சொன்னதுடன், அவர் திரட்டிய தரவுகளையும் என்னுடன் பகிர்ந்துகொண்டார். அவருடனான உரையாடலே இந்தக் கட்டுரையின் உருவாக்கத்திற்கு ஊக்கமளித்து, மேற்கொண்டு தேடலுக்கு இட்டுச் சென்றது. இவ்வகையில், இக்கட்டுரைக்கு உதவியும், ஊக்கமும் அளித்த மருத்துவர் த. ஜீவராஜ் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.




# பாரதியார் பாடிய பத்திப் பாடல்

– கிருங்கை சேதுபதி –

மகாகவி பாரதியாரின் புதுவை வாழ்வில் இன்னும் கவனத்திற்கு வராத நிகழ்வுகள் பல நிறைந்திருக்கின்றன. பொதுவான நிலையில் அறியப்பெற்ற தகவல்களைச் சிறப் பான நிலையில் நோக்குகிறபோது பல அரிய தகவல்கள் நம்மை வந்தடைகின்றன என்பது அனுபவம்.

அதற்கான கூறுகளைத் தங்கள் அனுபவப் பதிவுகளில் பாரதி யாருடன் பழகிய அன்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனித்த நிலையில் அவர்கள் சார்ந்த அனுபவங்களாக அவை தெரிந்தாலும், பாரதியார் குறித்த வாழ்வியல் சித் திரத்திற்கு அவை இன்றியமையாத சான்றுகளாக அமை கின்றன.

அத்துடன், தன் காலத்தில் வாழ்ந்த அன்பர்களையும் தன் னொத்த முற்போக்காளர்களாக ஆக்கி அவர்களுக்குள்ளும் பாரதியப் பண்புகளைத் தோற்றுவிக்கிறவராக பாரதியார் திகழ்ந்தமையையும் கண்டுகொள்ள முடிகிறது. அவர்களில் நண்பர்களாகவும் சீடர்களாகவும் தொண்டர்களாகவும் விளங்கியவர்கள் பலர். அவர்களுள் சீடர்களாக அறியப் பெற்ற பாரதிதாசன், ரா. கனகலிங்கம், யதுகிரி அம்மாள், வ.ரா. ஆகியோர் வரிசையில் விளங்க வேண்டிய அத்தியந்த சீடராகிய குவளைக் கண்ணன் பெரிதும் கண்டுகொள்ளப் பெறாமல் போனதற்குக் காரணம் முன் சொன்னவர்களைப் போல், தன் அனுபவங்களை விரித்துத் தனி நூலையோ, கட் டுரைகளையோ அவர் எழுதவில்லை என்பதுதான்.

ஆனாலும், உரியவர்களிடம் அனுபவப் பேட்டிகளாக, நினை வுக் குறிப்புகளாக அவர் கொடுத்த தகவல்கள் அவரைப்

பற்றி மட்டுமல்லாமல் பாரதியார் குறித்த சில தெளிவான புரிதல்களுக்கும் உதவியிருக்கின்றன.

அப்படி ஒரு பேட்டியை, அவர் கவியரசு கி.வா. ஜகந்நாதன் அவர்களுக்குத் தந்திருக்கிறார். அதில், புதுச்சேரி வீராசாமிப்பிள்ளைத் தோப்புப் பற்றிக் குறிப்பிட்டு, அங்கு பாரதியார் அடிக்கடி சென்றுவருவார் என்பதைச் சொல்லியிருக்கிறார். அங்கே சமபந்தி போஜனம் செய்ததையும், வைதிக ஆசாரங்களைக் கடந்து மனிதப் பண்புடன் நடந்துகொள்ள, பாரதியார் பயிற்றுவித்ததையும் விவரித்திருக்கிறார். பிறர் அறியாமல் இரவு வேளைகளில் முதலியார் இல்லத்தில் சாப்பிட்டிருந்த குவளைக் கண்ணனைப் பட்டப்பகலில் பலரும் அறிய அவர் இல்லத்துச் சாப்பாட்டை, அத்தோப்பில் பலருடன் இருந்து உண்ணப் பணித்திருக்கிறார். லஜ்ஜையுடன் தயங்கிய குவளைக் கண்ணனிடம், 'சாப்பிடத்தான் வேண்டும்' என்று கட்டளையிட்டதோடு, 'வேளாளன் கொடுக்கிற அரிசி உதவும்; சோறு உதவாதா?' என்று கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார். 'எனக்கு அவரோடு வாய் கொடுக்கத் தைரியம் இல்லை; பேசாமல் நானும் சாப்பிட்டேன்' என்கிறார். இதைச் சொல்லும்போதே அவருக்கு மூச்சிரைத்திருக்கிறது. அதையும் அப்படியே பதிவிடுகிறார் கி.வா.ஜ. இது சொல்லப்பட்ட காலம், குவளைக் கண்ணனின் நிறைவுக் காலம். ஆனால், சொல்லப்பட்ட நிகழ்வு நடந்தது, பாரதியார் புதுவையில் வாழ்ந்த காலம். அதாவது, 1913-ஆம் ஆண்டு.

கி.வா.ஜ. எழுதுகிறார்:

'நடுநடுவே அவர் பெருமூச்சு வாங்கிக்கொண்டே சொன்னார். அவர் சாப்பிட்ட கதையை முடித்தவுடன், 'போதும்; பிறகு பேசிக்கொள்ளலாம்; சிரமமாக இருக்குமே' என்றேன்.

'இந்த விஷயம் அவ்வளவு முக்கியம் அல்ல; நான் சொல்ல வந்த சமாசாரமே வேறு' என்றார் அவர்.

'கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொள்ளுங்களேன்.'

'அதற்காகத்தான் இதைக் கேட்கச் சொல்கிறேன். பாரதியார் அன்றைக்கு 'யோகசக்தி'யைப் பாடிக் காட்டினார். ஆஹா! எத்தனை உற்சாகம்!'

எங்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்த குவளைக் கிருஷ்ணமாசாரியார் தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். ஒரு நிமிட நேரம் அப்படி இருந்துவிட்டு மறுபடியும் எங்களை நோக்கும்போது கண்ணைத் துடைத்துக்கொண்டார். அவர் உணர்ச்சி வசப்பட்டபோது இப்படிச் செய்வதைப் பலமுறை பார்த்திருக்கிறேன்'

என்கிறார். அந்த ஒரு நிமிட நேரம் அவர் அவ்வாறு இருந்தது எதற்காக? சென்ற காலத்தில் புகுந்து மீண்டும் நிகழ்காலத்திற்கு வருவதற்காக. அதாவது அந்த ஒரு நிமிட நேரம், அவர் பாரதி காலத்திற்குப் போய், அவருடன் இருந்த நிகழ்வை மீளவும் மனதில் நிறைத்து, அனுபவித்துவிட்டு வெளிவருவதற்குத் தேவையாக இருந்திருக்கிறது. அதன் பின் நிகழ்ந்தது என்ன?

கி.வா.ஜ. தொடர்கிறார்:

'துக்கம் தொண்டையை அடைத்தது. ஒரு மிடறு எச்சிலை விழுங்கிக்கொண்டார்.

***'விண்ணு மண்ணுந்தனி ஆளும் - எங்கள்***
***வீரை சக்திநின தருளே - என்றன்***
***கண்ணுங் கருத்துமெனக் கொண்டு - அன்பு***
***கசிந்து கசிந்துகசிந் துருகி'***

என்று பாட ஆரம்பித்துவிட்டார்.

'என்ன இது? பாட அல்லவா ஆரம்பித்துவிட்டீர்கள்? உங்களுக்குச் சக்தி இல்லையே! வேண்டாம். நிறுத்துங்கள்.'

'பாரதியார் பாட்டைச் சொல்லும்போது உயிர் போனால் போகட்டுமே; அதைக் காட்டிலுமா வேறு ஆனந்தம் இருக்கப் போகிறது!'

அந்த வார்த்தைகளிலேதான் எத்தனை ஆர்வம்! பாரதிப் பித்துக்குத்தான் எத்தனை வன்மை?

அவர் பதினைந்து நிமிஷம் 'யோகசித்தி'யிலிருந்து பல பாடல்களைச் சொல்லித்தான் நிறுத்தினார். அவர் எங்களுக்காகவா சொன்னார்? இல்லை, இல்லை, தமக்காகவே, தமது இன்பத்துக்காகவே, அந்தப் பழைய காட்சிகளை உள்ளத்திலே கண்டு அனுபவிப்பதற்காகவே அவர் பாடினார்.'

இன்பம் தரும் அந்தப் பாடலைப் பாரதியார் வாயிலாகப் பாடக் கேட்டவர் குவளைக் கண்ணன் என்றால், பாரதி பாடிய பாங்கிலேயே அவர் சீடர் பாடக் கேட்கக் கொடுத்துவைத்தவர் கி.வா.ஜ. பாடியதைக் கேட்டதோடு அது குறித்த தகவல்களையும் மறவாது குறித்து வைத்து எழுதியும் இருக்கிறார். இதே நிகழ்வை, முன் ஒருமுறை (ஹிந்துஸ்தான் பாரதி மலர், 10.11.1939) குவளைக் கண்ணன் பதிவிட்டும் இருக்கிறார். அதில் அப்பங்களாவைப் பற்றியும், அங்கு நடந்தவற்றைப் பற்றியும் விரிவாகச் சொல்லியிருக்கிறார். அந்தப் பதிவு பின்வருமாறு.

'புதுச்சேரிக்கு வடமேற்குப் பக்கமாக சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் ஒரு குளம் உண்டு. அதன் கிழக்குக் கரைமேல் ஒரு சிறு பங்களா உண்டு. இதற்கு, சின்னக்கண்ணு வீராசாமிப்பிள்ளை பங்களா என்ற பெயர். இந்தப் பங்களாவையும் குளத்தையும் சூழ்ந்து தென்னை மரங்களும் மாமரங்களும் உண்டு. அந்தக் குளத்து நீர் ஸ்நானபானாதிகளுக்கு ரொம்பவும் சிறந்தது.'

பருகவும் குளிக்கவும் ஏனைய பல பயன்பாடுகளுக்கும் உரியதாக அக்குளத்து நீர் இருந்திருக்கிறது. (ஸ்நான - குளியல், பான - பருகுதற்குரிய, ஆதி - முதலியவற்றிற்குப் பயன்படும் வகையில சிறந்து விளங்கிய குளம் அது.) என்பதனால் ஸ்நானபானாதிகளுக்கு ரொம்பவும் சிறந்தது என்கிறார் குவளைக்கண்ணன்.

'எப்போதும் பாரதியாருடன் காலங்கழிக்க விருப்பமுள்ள சிநேகிதர்களுடன் பாரதியார் ஒரு தினம் விருந்துக்கு ஏற்பாடு செய்ய யோசித்தார். அதன் பிரகாரம் விருந்துக்கு நாள் குறித்து விருந்துச் சாப்பாடு ஓட்டலிலிருந்து குறித்த காலத்தில் கொண்டுவர ஸ்ரீ வெ. கிருஷ்ணசாமி செட்டியார் ஏற்பாடு செய்தார். மேற்படி விருந்து சாப்பாடு பங்களாவுக்கு வர இரண்டு மணி முன்னாடியே ஸ்ரீ பாரதியைத் தலையாகக் கொண்ட சிநேகிதக் கூட்டம் அந்த பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்து, பாரதியாருடன் உல்லாசமாக இருந்தது. நண்பர்கள்

யாவரும் குளத்தில் ஸ்நானம் முதலியன செய்து முடித்துக் கொண்டனர்.'

இதில் சுட்டப்படுகிற ஸ்ரீ வெ. கிருஷ்ணசாமி செட்டியார் ஏற்பாடு செய்திருந்த விருந்துச் சாப்பாடு ஓட்டலில் இருந்து கொண்டு வருவதற்குள் அவரைக் குறித்துச் சில செய்திகளைச் சொல்லிவிடுவது பொருத்தமாய் இருக்கும்.

இவர், பாரதியாரால் 'வெல்லச்சுச் செட்டியார்' என்று செல்லம்மாக அழைக்கப் பெறுபவர். புதுவையில் உள்ள முத்தியாலுப் பேட்டை இவரது ஊர். நெசவுத் தொழில். 'இருபது வயது. குள்ளம். கெட்டியான இரட்டை நாடி சரீரம். சோர்வே அறியாத சுபாவம்' என்று இவரது இயல்பை எடுத்துரைப்பார் ரா.அ. பத்மநாபன்.

பாரதியார் பாடிய 'பிழைத்த தென்னந் தோப்பு' இவருடையது.



'வெல்லச்சு' கிருஷ்ணஸ்வாமி செட்டியார்

***சிறிய திட்டையிலே உளதோர்***
***தென்னஞ் சிறு தோப்பு***

என்று பாரதியாரால் வருணிக்கப்பெற்ற இத்தோப்பில், பாரதியார் 'தனியே ஆறு தல் கொள்ளுதற்காக வந்திருக்கிறார். எப்போது? புதுவையைப் புரட்டிப் போட்ட நள வருஷத்துப் புயலின் கோர தாண்டவத்திற்குப் பிறகு.

அப்போது அடித்த காற்றால் கணக்கற்ற மரங்கள், 'நாற்றினைப் போலே சிதறி நாடெங்கும் வீழ்ந்தனவே' என்கிறார் பாரதி. இந்த உவமை பாரதியார் கண்ட நேரடிக் காட்சியில் இருந்து பதிவானது. கிருஷ்ணசாமி செட்டியாரின் தோப்புக்குச் செல்லும் வழியில், வயல்கள் மடுக்கள் இருக்கின்றன. அவற்றைக் கண்டு கடந்து இந்தத் தோப்பிற்கு வந்திருக்கிறார் பாரதியார்.

***வயலின் இடையினிலே - செழுநீர்***
***மடுக்கரையினிலே -***
***அயல் எவரும் இல்லை***

அதனால், அக்காட்சிகள் மனச்சித்திரமாக, கவியுளத்தில் பதிவாகிக்கொண்டே வருகிறது. தனித்து ஆறுதல் கொள்ள வந்த வேளையில், வேர்கள் வெளித்தெரிய சிதறி வீழ்ந்திருக்கும் மரங்கள் கூடவே, நினைவிலும் நேரிலும் அறியவர, மரங்கள் நாற்றுகள் போல் கிடப்பதாகப் பாட்டு, பிறக்கிறது.

நெடிது உயர்ந்த மரங்கள் வீழ்ந்து கிடப்பதையும் பார்க்கிறார். மீந்து நிலைத்தவற்றையும் பார்க்கிறார். எது அதிகம்? கணக்கு, கவிதையாகிவிடுகிறது.

***வீழ்ந்தன சிலவாம் - மரங்கள்***
***மீந்தன பலவாம்***

இது எப்படிச் சாத்தியமானது? அடித்த புயற்காற்றில் அத்தனையும் அல்லவா, சரிந்திருக்க வேண்டும்? பேருக்குக் கொஞ்சம் மரங்களை வேருடன் சாய்த்துவிட்டு, இப்படி மிகுதியான மரங்களைக் காற்று விட்டுவிட்டதன் காரணம் என்ன?

கவியுளம் தேடிக் கண்டு காட்டுகிறது.

***வறியவன் உடைமை - அதனை***
***வாயு பொடிக்கவில்லை***

அடடா, ஏழை என்றால் இயற்கையும் இரக்கம் கொள்ளும் என்பதற்கு இதுவொரு சான்று. அன்றியும் 'பக்கத்திருப்பவர் துன்பம் பார்க்கப் பொறாத புண்ணிய மூர்த்தியாகவும் கிருஷ்ணசாமி செட்டி யார் இருந்திருக்கிறாரே. பாரதியாரின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து இருக்கிறாரே. அவரது தோற்றம் கருதியும் அன்பின் பண்பு கருதியும்தான் 'வெல்லச்சு' என்று விரும்பிச் செல்லப் பெயர் கொடுத்து அழைத்திருக்கிறார் பாரதியார்.

அந்தத் தோப்பில் வீழ்ந்த மரங்களுக்கு நடுவே, தனிமையில் இனிமை தேடி வந்த பாரதியாருக்குத் தேம்பாகு மதுர அமுது பருகக் கிடைத்திருக்கிறது. விழி வாயாகப் பருகிய விருந்து அது. வழங்கியது வானப் பரிதி. ஆம். பனி தொலைக்கும் வெயில் - அது பாரதியாருக்கு, தேம்பாகு மதுரமாக இனித்திருக்கிறது. (தோப்பு, வெல்லச்சுச் செட்டியாருடையது என்பதையும் இணைத்துச் சிந்தித்தால் இதன் இனிமை இன்னும் கூடுதலாகும்.)

இவ்வாறு தனிமையில் இருந்து பெற்ற இனிமையின் பலனாய் விளைந்த இயற்கையின் பாடல்களை செவியாரப் பருகியிருக்கிறார் பாரதியார்.

இரவி நின்றதுகாண் - சூரியன் நின்றது, எங்கே? 'விண்ணில்'. எப்படி? 'இன்ப ஒளித்திரளாய்.' கூர்ந்து கவனிக்கிறபோது, அவை 'பரவி எங்கணுமே கதிர்கள் பாடிக் களித்தனவே.' ஐம்புல நுகர்வின் ஆனந்தம் பொங்கிவர, வீழ்ந்து கிடந்த சில மரங்களுக்கு நடுவில் நின்ற பல மரங்களுக்கு இடையில் சிறியதோர் நிழலில் வந்து அமர்ந்தோ, அம்மரத்தில் சாய்ந்தோ இருந்து பாரதியார் பாடுகிறார்.

***நின்ற மரத்து இடையே - சிறிதோர்***
***நிழலினில் இருந்தேன்.***
***என்றும் கவிதையிலே - நிலையாம்***
***இன்பம் அறிந்து கொண்டேன்.***

இதுதான் பாரதியின் பரவச தரிசனம். அடுத்தடுத்து வந்து கெடுத்துத் துயர் கொடுக்கும் வாழ்வில் நித்திய அமுதமாக உயிர் அனுபவத்தை உயர் அனுபவமாகக் கொடுக்கும் கவிதையில் இருந்து, நம்பிக்கையோடு இன்பக் கனிரசம் பருகுவதோடு, அதனைத் தன் கவிதையின் வாயிலாகக் கொடுப்பதும் பாரதியின் வழக்கம். (மேலும், வெ. கிருஷ்ணசாமி செட்டியார் குறித்த தகவல்களை அறிந்துகொள்ள, எனது 'கண்முன் நிறைந்த காலத்தின் கூத்து' (தாய்வீடு, மே, 2023) 'பாரதி சொன்ன கதையும் பாரதிக்குச் சொன்ன கதையும்' (தாய்வீடு, மே, 2025 இதழில்) ஆகிய கட்டுரைகள் உதவும்.)

இதோ, விருந்துச் சாப்பாடு வந்துவிட்டது. அவர்கள் விருந் துண்ணப்போகிறார்கள். நாமும் குவளைக் கண்ணன் பாரதி யார் உள்ளிட்ட அன்பர்கள் நிறைந்திருக்கும் வீராச்சாமிப் பிள்ளை பங்களாவுக்குள் வருகிறோம். அதற்குள் ஓர் அற்பு தமான விருந்து அங்கே நடந்து முடிந்துவிட்டிருக்கிறது. அது என்ன விருந்து ?

பாரதியார் பாடிய பாட்டமுதம் பொங்கிப் பெருகி வந்து காற்றின் ஊடாகக் கேட்டிருப்போரின் செவிகளில் நிறைந்தி ருக்கிறது. பருகிக் களித்த பரவசத்தில் அன்பர்கள் இருக்கி றார்கள். அந்த அதிர்ஷ்டமுள்ள நேயர்களில் ஒருவராக இருந்த குவளைக்கண்ணன் இப்படிக் கூறுகிறார்:

‘விருந்து சாப்பாடு வருவதற்கும் சாப்பிடுவதற்கும் இடையே உள்ள நேரத்தை வீணாக்காமல், ஸ்ரீ பாரதியார் தாம் அப் போது தான் புனைந்த காளிப்பாட்டை, ‘(விண்ணும் மண்ணும் தனியாளும்’ என்று ஆரம்பிப்பது) தமது முழு ஆவேசத்துடன் தம்மைச் சூழ்ந்திருந்த நண்பர்களுக்கு பக்தி அர்த்தம் உருக் கமாக ஏற்படும்படி சுமார் அரை மணி காலம் பாடிக்கொண்டி ருந்தார். அந்தச் சமயத்தில் முதன்முதலாக கம்பீரமான குரலில் பாரதியார் பாடியதைக் கேட்ட அதிர்ஷ்டமுள்ள நேயர்களில் அடியேன் ஒருவன்.’

‘ஓர் உத்தம தேசாபிமானி’ என்ற புனைபெயரில் ஞானபாநு இதழில், (டிசம்பர், 1913) ‘யோகசித்தி’ என்ற தலைப்பில் வெளிவந்த இப்பாடல், பாரதியாரின் கையெழுத்து வடிவில் பாட்டுக்கொத்து பாடல் தொகுதியிலும் உள்ளது.

கையெழுத்துப் பிரதியில், ‘வரங்கேட்டல்’ என்ற தலைப் பிலும், தற்காலக் கவிதைத் தொகுப்புகளில், இவ்விரு தலைப்புகளிலும் இது வெளிவந்திருக்கிறது.

‘பாரதியார் தாம் அப்போதுதான் புனைந்த காளிப்பாட்டு’ என்று குவளைக்கண்ணன் ஹிந்துஸ்தான் மலரிலும், யோக சக்தி’ என்று கி.வா.ஜ. விடமும் கூறிய இப்பாடல் பிறந்த மாதம் டிசம்பருக்கு முன்னதாகவும், ஆண்டு, 1913-ஆகவும் இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

அன்பர்களுக்குப் பக்தி அர்த்தம் உருக்கமாக ஏற்படும் படியாக சுமார் அரைமணி நேரம் கம்பீரமான குரலில் பாரதி யார் பாடிய நெடும் பாடல், எந்த இராகத்தில் அமைந்தது, என்பதையும் இப்பாடல் குறித்த குறிப்புரையில் பாரதி தந்தி ருக்கிறார். அந்தக் குறிப்புடனும், கையெழுத்துப் பிரதிக்கும் அச்சேறிய வடிவிற்கும் இடையிலான பேதங்களுடனும் கூடிய அப்பாடலைத் தனித்துக் கவனத்தில் கொள்ளலாம்.



sethupathi@thaiveedu.com


சிந்தனைக் களம்
(இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்
Zoom ID: 832 7865 6646 Password: 655 952



உரைப் பொருள்:
‘கணியான் கூத்தில் செவ்விசை அம்சங்கள்’

உரையாளர்:
முனைவர் மு.சுபஸ்ரீ (M.A,M.Phil,Ph.D)
(துணைப்பேராசிரியர், இந்திய இசைத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.)

20 டிசம்பர் 2025 சனிக்கிழமை 8:00pm-10:00pm (கனடா-ரொறன்ரோ)
20 டிசம்பர் 2025 சனிக்கிழமை 5:00pm-7:00pm (கலிபோர்னியா)

21 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை 6:30am- 8:30am (இலங்கை, இந்தியா)
21 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை 11:00am-1:00pm (சிட்னி)

Website: www.chinthanaikkalam.org
E-mail: chinthanaikkalam@gmail.com



# ஈழத்து நவீன கவிதையில் தொன்மம்

## சி. ரமேஷ்

**சொற்பொருள் விளக்கம்:**

மித் (myth) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் பயன்படுத்தப்படும் தொன்மம், 'மித்தோஸ்' என்ற கிரேக்கச் சொல்லின் திரிபாகும். 'மித் என்ற சொல் தொடக்க காலத்தில் செய்தி, மொழி, உபதேசம் எனும் பல பொருளில் வழங்கி வந்து நிகழ்ச்சி, வரலாறு எனும் பொருள்களையும் தந்தது'. 'தொல்' என்பது பழைய என்ற பொருளையும் 'தொன்மம்' என்பது பழைமை' என்ற பொருளையும் குறிக்கும் என்பதை ந.சி. கந்தையா தம் செந்தமிழ் அகராதியில் எடுத்துக்காட்டுவார். தொல்காப்பியர் தொன்மத்தைச் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கூறி விளக்குவார்.

*'தொன்மை தானே சொல்லுங் காலை*
*உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே'*

- தொல்.பொருள். 53

தொன்மையாவது உரையோடு பொருந்திப் போந்த பழைமைத்தாகிய பொருண்மேல் வருவன என்பதே இதன் பொருள். இன்று தமிழில் தொன்மம் என்பது புராணக்கதை, பழங்கதை, தொல்பழங்கதை, கட்டுக்கதை, படைப்பு, புனைகதை என்று பல பெயர்களால் சுட்டப்படும்.

## தொன்மத்தின் வகைகள்:

உண்மையும் கற்பனையும் கலந்த கதை அல்லது உட்கரு என்ற பொருளையும் தரும் தொன்மத்தை, அதன் தோற்றம், முறைமை, முக்கியத்துவம் முதலானவற்றைக் கருத்தில் கொண்டு அதனைப் பல வகைக்குள் உட்படுத்தி ஆராய்வர். ‘உலகத்தின் தோற்றம் பற்றிய கதை, காதல் கதை, வெள்ளம், பஞ்சம் பற்றிய கதை, மாபெரும் வீரர்களின் கதை, பெரும் போர்கள் பற்றிய கதை, ஐம்பெரும் பூதங்கள் பற்றிய கதை என உலகங்கள் அனைத்திலும் தோன்றிய தொன்மங்களை ‘தூய தொன்மங்கள்’ அல்லது ‘ஆதிகாலத் தொன்மங்கள்’ என வகைப்படுத்துவார் க. பஞ்சாங்கம். எஸ்.எச். ஹக் என்பார் தொன்மங்களை சடங்குத்தொன்மங்கள், மூலத்தொன்மங்கள், மரபுத்தொன்மங்கள், பெருமிதத் தொன்மங்கள், அழிவுத் தொன்மங்கள் என ஐந்தாக வகுப்பார்’. கீழேத்தேய நாடுகளில் பண்பாட்டு வழக்கிலுள்ள புராணக்கதைகள், பஞ்சதந்திரக்க தைகள், நாட்டுப்புறக்கதைகள், புத்தஜாதகக் கதைகள், இதி காசங்கள், மாய தந்திரக்கதைகள் (விக்கிரமாதித்தன் கதை) முதலியனவும் தொன்மவழியே நோக்கப்படுகிறது.

ஈழத்துத் தமிழ்க்கவிதையில் கருத்து வெளிப்பாட்டின் பொருட்டுக் கையாளப்படும் தொன்மங்கள், சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாகவும் செறிவிறுக்கம் மிக்கவையாகவும் கவித்துவமான கலை வடிவமாகவும் காண ப்படுகின்றன. கவிஞர் தன் உள்ளத்துணர்வுகளைக் கவித்து வமாகவும் கலைவடிவமாகவும் குறிப்பாகவும் அதேசமயம் வெளிப்படையாகவும் முழுவீச்சோடு வெளிப்படுத்துவதற்குத் தொன்மங்கள் பயன்படுகின்றன. பழைய நிகழ்வுகளைப் புதிய சூழலில் இணைத்துக் கூறும்போது கவிதை காட்சிப்படி மமாகவும் கலைநுட்பம் கொண்ட கருத்துருவ விளக்கப்படமா கவும் பரிணாமம் கொள்கிறது.

## ஈழத்து நவீன கவிதைகளில் இலக்கிய, இதிகாசத்தொன்மம்:

ஈழத்துக்கவிதைகளில் ஆன்மீக மற்றும் ஆழ்நிலை இயல்பைச் சுட்டுவதற்கு இதிகாச இலக்கியங்களில் இடம் பெறும் பாத்திரங்கள் தொன்மங்களாகப் பயன்படுத்தப்படுத் தப்படுகின்றன. அகலிகை, கண்ணகி முதலான தொன் மங்கள் கற்புக் கோட்பாட்டை கட்டுடைப்பதற்கும் ஆழ்நிலை யதார்த்தத்தை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுகின்றன. சொல்லால் விவரிக்க முடியாத எண்ணங்களுக்கு இத்தொன் மங்கள் உயிர்கொடுக்கின்றன. ஜே.ஆர்.ஆர். டோல்கீன் கூறு வதுபோல ‘உண்மையான, கண்ணியமிக்க ஆழ்நிலை அர்த் தத்தை வெளிப்படுத்தும் நித்திய சத்தியத்தைப் பிரதிபலிப் பதாக இத்தொன்மங்கள் விளங்குகின்றன.

அகலிகை என்னும் தொன்மம் பாரம்பரிய கற்புக்கோட் பாட்டின் பிரதியுருவாகவே தமிழ்க் கவிதையில் இடம்பெறு கிறது. தனக்கு இழைக்கப்பட்ட அநீதி கண்டு தனக்குள் முடங்கிக்கொண்டு கோதமனுடன் இயல்பாகவே வாழ்கிறாள் அகலிகை. மஹாகவியின் கவிதையில் சராசரி குடும்பப் பெண்ணாக உருப்பெறும் அகலிகை என்னும் தொன்மம், புது மைப்பித்தனின் சாபவிமோசனத்தில் புதுமைப்பெண்ணாக உருமாறுகிறது. ஆணாதிக்கத்தின் மனோபாவத்தைக் கண் டிக்கிறது. இதனைச் செல்வமனோகரியின் கவிதையிலும் காணலாம். அடிமை வாழ்வைக் கடக்க முற்படும் சகியாக உருக்கொள்கிறாள் அகலிகை. கோதமனின் சாபத்தைக் கண்டித்து, உரிமைகளை வென்றெடுக்க முயலும் குடும்பப் பெண்ணாக வலம் வர முயல்கிறாள்.

*‘அகலிகை*
*கல்லாய்த் தவமிருந்தாள்*
*ஓர் இராமனிற்காயல்ல*
*வேறெந்த தேவனின் வரவிற்குமல்ல*
*உறவுகட் குருக்கொடுக்காமல்*
*உரிமைகளை வெத்துக்கொண்டு*
*சபிப்பதற்குனக்கு*
*உரிமையில்லை முனிவனே*
*அகலிகை அடிமையல்ல*
*சகி’*

*– மஞுங்கடிக்கப்பட்ட அடையாளங்கள் - பக். 21*

நவீன எழுத்துருவாக்கச் சிந்தனையின் வெளிப்பாடாகத் தோன்றிய வாசுகியின் ‘புதுயுகம் படைப்போம்’ என்ற கவிதை அகலிகை, பாஞ்சாலி, மாதவி முதலான பதிவிரதைகளைப் புதிய நோக்கில் நோக்குகின்றன.

*‘கௌதமர்களைக்*
*கல்லாக்கி*
*இராமர்களைத்*
*தீயில் இறக்கி*
*பாண்டவர்கள்*
*ஒவ்வொருவரையும்*
*பாஞ்சாலியாக்கி*
*மாதவியைத் தெய்வமாக்கி*
*இலக்கியங்களைப்*
*புதுப்பித்துப்*
*புதுயுகம் படைப்போம்*
*விரைந்து வாருங்கள்*
*பதிவிரதை*
*பத்தினி*
*கற்புக்கரசி எனும் சொற்களுக்கு*
*நமது அகராதியில்*
*புதிய அர்த்தம்*
*கொடுத்து புதுயுகம்*
*படைப்போம்.’*

அமைதிப்படை என்ற பெயரில் 1987-இல் நுழைந்த இந்திய இராணுவம் ஈழத்தின் அமைதியைக் குலைத்ததோடு அல்லாமல் பெண்களையும் வேட்டையாடியது. அதிகளவான பெண்கள் பாலியல் வன்கொடுமைக்குள்ளாகினர். பெண்கள் பயந்து பயந்து வாழநேர்ந்த துர்ப்பாக்கிய வாழ்வை பானுபா ரதியின் ‘அஞ்சறைப் பெட்டியில் அடங்கிய நீரும் நிலமும்’ என்ற கவிதை பதிவு செய்கிறது.

*‘ஆண்மையை நிரூபிக்க*
*அனுப்பி வைக்கப்பட்டவர்கள்போல்*
*சீதை, கண்ணகியின் கற்புருகி*
*கடைவாயிலில் வீணியாய்க் கொட்ட*
*பெண்குறிதேடி அலைகிறார்கள்*
*வீட்டுக்கு வீடாய்...’*

எம். புனிதகுமாரியின் கவிதையில் வரவேற்புக்கு கட்டிய வாழையும் மாவிலையும் புதிய வடிவம் கொள்கின்றன. கண்ணகியின் விரித்த கூந்தல் வாழை இலையாகவும் இருக்க இடமற்று நகரும் அகதிகள் மாவிலைத் தோரணமாகவும் வடிவம் கொள்கின்றன.

'மதுரை எரித்த கண்ணகியாய்
வாழைமரம் வாசலில்
தலைவிரித்து நிற்க
இருப்பிடமிழந்து
நகரும் அகதியாய்
தோரண மாவிலைகள்
இவற்றின்
நடுவே
கொட்டை எழுத்தில்
நல்வரவு
இன்முகத்துடன்
எல்லோரையும் வரவேற்றது
வெறித்து வெறித்துப் பார்க்கிறான்
பிச்சைக்காரன்!'

ஈழவாணியின் கவிதைகளில் இராமன் என்ற தொன்மம் மீள் வாசிப்புக்குட்படுகிறது. நேரடி அனுபவத்தின் வாயிலாக சீதையுடன் இணைத்து நோக்கப்படும் இராமன் இராவணனுடைய நற்குணப்பண்புகளுடன் இணைத்து ஆராயப்பட்டு தன்னுடைய அசல் தன்மையை இழக்கிறான்.

'சீதைக்கும் ராவணன்
சிறந்திருப்பான்
அழகிய தேசமொன்றை
அக்னி மூட்டியழித்து
அடங்காக்கிரமம் பண்ணி
அழைத்து வந்து தன்னை
ஊருக்கும் உறவுக்கும்
ஊறற்றவளென
உத்தமியாய்க் காட்ட
தீக்குள் தள்ளியவேளை
ராவணன் உயர்ந்திருப்பான்
ராமனிலும் அவள் மனத்தில்...'

- மூக்குத்திப் பூ - 103

ஈழவாணியின் 'அரக்கர் என்றால் அழகரோ' என்ற கவிதை இராவணனின் மனைவி மண்டோதரிக்கும் சீதைக்கும் இடையில் பேதைமை காணமுடியாத அனுமானின் அறியாமையை எள்ளி நகையாடுகிறது. மயனின் மகளான மண்டோதரி பேரழகு படைத்தவள். தெய்வீக சக்தி கொண்டவள், மிகவும் ஒழுக்கமுள்ளவள். பாவங்களைப் போக்கும் சக்தியைக்கொண்ட பஞ்ச கன்னிகைகளில் ஒருவராகவும் கருதப்படுகிறாள். இலங்கைக்குச் சென்ற அனுமன் இவ்வளவு சிறப்புகள் கொண்ட மண்டோதரியினை அசோகவனத்தினில் முதலில் பார்த்து இவளைச் சீதை என்று தவறாக நினைத்து விடுகிறான் என வால்மீகி குறிப்பிடுகிறார். மேன்மை பொருந்தியவளாய் அறவழியில் நிற்கும் மண்டோதரியை இலக்கியங்கள் அரக்கியாகச் சித்திரிப்பதை ஈழவாணியின் கவிதை எள்ளி நகையாடுகிறது.

'அரக்கர் என்றால் அழகரோ
சிவனின் மைந்தனோ இவன்
சிந்தித்தானாம் அனுமன்
இராவணன் மகன்
இந்திரஜித்தின் அழகில் மயங்கி
பின் அந்த அனுமன்
மண்டோதரியைக்
கண்ணுற்று
இவரே சீதை எனச் சிந்தித்தானாம்
இன்பத் திளைப்பில்
இருந்தமையால்
இவர்
துன்புற்றல்லே இருப்பார்
சீதை எனத் தெளிந்தானாம்
ஆக
பேரழகியான சீதையோடு
சிறந்தவர் அழகியான மண்டோதரி பின்
அரக்கர் என்பதேன்
அழகில் சிறந்தோர் என்பதாலே
அரக்கர் என்றால் அழகரோ?...'

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் முக்கிய பாத்திரங்களில் ஒன்று மாதவி. கணிகை மகளாகப் பிறந்தபோதிலும் நெறியோடு வாழ்ந்தவள். ஏழாண்டுக்குள் நடனக் கலைகள் பயின்று தேர்ச்சி பெற்றவள். தன்னை அணுகியவனிடத்தில் அன்பைப் பெற முயன்று வாழ்க்கையில் தோற்றுப்போன மாதவி பாத்திரம் மாதுமையின் ஒற்றைச் சிலம்பு கவிதையில் மீள் வாசிப்புக்குள்ளாகிறாள்.

'புதிய மாதவி நான்
ஒற்றைச் சிலம்பு அணிந்து
இருக்கிறேன்
தாகித்த போதெல்லாம்
தவம்
செய்கின்ற என் பெண்மையை தருவது
இன்னொரு
காலத்தில்
ஊரை அழிப்பதற்கல்ல
கற்புக்கும்
எனக்கும் சம்பந்தமில்லையெனக் கூறுபவர்களிடம்
கூட
என் ஒற்றைச் சிலம்பு கோபித்ததில்லை
உறைகளின் உபயத்தால்
மணிமேகலைகளும்
பிறப்பதில்லை
இருந்தும் நொந்து போகின்றேன்
ஒவ்வொரு மாதவிடாயின் போதும் ...'

இளங்கோ அடிகளாரின் கற்புக் கோட்பாடு தற்கால மாதுமையின் கவிதையில் விவாதப் பொருளாகிறது. 'கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை' எனக் கூறி ஔவையார் அதற்குப் புது வடிவம் கொடுக்கிறாள். பாரதியோ அதனைக் கடுமையாகச் சாடுகின்றார் 'கற்பு நிலை என்று

சொல்ல வந்தார் இரு / கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்' எனக்கூறி பாரதியார் கற்பை ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானதாகக் கருதினார். பாரதியின் பொதுநோக்கு மாதுமையின் கவிதையில் பங்கமில்லாப் புதுமைச் சிந்தனையாய் பரிணமிக்கிறது.

காலாகாலமாக வழக்கில் இருக்கும் மரபைச் சகித்துக் கொண்டு வாழும் பெண்களின் உணர்வுக் கோலத்தை மிக நுண்மையான தொன்மங்களின் ஊடாக வெளிப்படுத்துவதில் வல்லவர் செல்வமனோகரி. சிவன், கங்கை என்னும் தொன் மங்களின் வாயிலாக நிகழ்கால இருப்பைப் பதிவுசெய்யும் இக்கவிதை பெண்ணின் மளுங்கடிக்கப்பட்ட அடையா ளத்தை வெளிப்படுத்த முயல்கிறது.

*'இமயத்தில் ஜனித்தாலென்ன*
*சிவன் தலையில் தரித்(வசித்)தாலென்ன*
*கங்கை*
*வானம் தொடுவதில்லை!*
*தொடமுடிவதில்லை!*
*இன்று வரை*
*கங்கையின் வெள்ளம்*
*பூமிக்கும் கடலுக்கும் தானே?*

*- மளுங்கடிக்கப்பட்ட அடையாளங்கள் - பக். 10*

இங்கு உணர்வின் தொற்று தொன்மத்தின் வழி கடத்தப்படு கையிலே உணர்வு காட்சிப் படிமமாய் உருக்கொள்கிறது. விதித்தலின் வழி வாழ்ந்து மடிதல் பற்றிய அனுபவம் கண்டு பொருமும் பெண்ணின் மனோவியங்கியலை இக்கவிதை இயல்பாக வெளிப்படுத்தி நிற்கிறது. செல்வமனோகரியின் பெரும்பாலான கவிதைகள் 'கங்கை' பெண் என்னும் குறியீட் டுக்கூடாகவே தன்னை முன்மொழிகிறது. மனோகரியின் 'கங்கை' இந்து தர்மங்களுக்கூடாகவே கவிதைகளில் முகம் கொள்கிறது. அது புனிதமானது. வேதனைகளை உள்வாங் கிக்கொண்டு திசையற்றுப் பயணிக்கவல்லது. 'ஜலப்பிரளயம்', 'பெண்ணியம்' போன்ற கவிதைகளிலும் இதன் தொடர்ச் சியைக் காணலாம்.

## ஈழத்து நவீன கவிதைகளில் விவிலிய தொன்மம்:

ஈழத்தில் போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவப் புலவர்களால் விவிலியத் தொன்ம மரபு தமிழில் புகுந்தது. இயேசுவை அடியோடு அழிக்கப் பயன்படுத்தப்பட்ட சிலுவை என்ற கொலைக் கருவி, இயேசுவை என்றென்றும் நிலைக்கச் செய்யும் குறியீடாக இக்கால இலக்கியங்களில் கையாளப் பட்டது.

மனிதனை இரட்சிக்க வந்த தேவனின் சிலுவைப்பாடுகள் மனி தனுடைய பாவத்தைக் கழுவின. மற்றவருக்காய் துயர்சுமந்த தேவமைந்தனின் இப்படிமம் செல்வமனோகரியின் 'பாடுகள்' கவிதையில் புதிய பரிணாமம் கொள்கிறது. பாடுகளைச் சுமந்து வலி தாங்க மறுத்த மாசுகடிந்த மனிதத்தின் மனநுண் ணோட்டத்தைச் சிலுவைப்பாடுகளுக்கூடாகவும் மரியாம தலோனா என்னும் குறியீட்டுக்கூடாகவும் இக்கவிதை பேசு கிறது.

*'...தலைவனும் தொண்டனுமாய்*
*தோள்கள் சுமந்த*
*சிலுவைப் பாடுகள்*
*மனிதத்தின் பாடுகள்*
*சிலுவையிலறையப்பட்டது*
*உடலல்ல உணர்வுகள்தான்*
*பாவப்பட்டோருக்காய்*
*சிலுவை சுமந்தவனே*
*அவதாரங்களின் மீதான ஆணியடிப்புகள்*
*ஒரு போதும்*
*வலித்ததில்லை*
*நீ*
*மனிதன் என்பதால்*
*உனக்குள்*
*மனிதன் இருந்ததால்*
*வலித்தது*
*அழுத காற்றினை*
*சுவாசித்தபடி*
*தொடர்ந்த உனது பயணம்...*
*இயேசு*
*பிதாவே*
*மரியா மேல் கல்வீச*
*ஒரு யோக்கியனும் /*
*இங்கே*
*இன்னமும் அகப்படவில்லை'*

*- மளுங்கடிக்கப்பட்ட அடையாளங்கள் - பக். 03*

இயேசுவை அடியோடு அழிக்கப் பயன்படுத்தப்பட்ட சிலுவை புதிய தன்மையில் புதிய பாடுபொருளுக்கூடாக நோக்கப்படு கிறது. செல்வமனோகரியின் 'சந்தோசவேதனைக் கவிதையில் இயேசுவை ஈன்றெடுத்தமையால் சந்தோசவேதனையை அனு பவிக்கிறாள். 'ஒரு மரணத்தை எதிர்பார்த்து' கவிதையில் நாள்தோறும் புதல்வர்களின் மரணத்தை எதிர்பார்த்துக் காத் திருக்கும் ஈழத்துத் தாய்மார்களைப் போலவே அவளும் அன்று புதல்வனின் மரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து துயரெய்துகிறாள். 'முட்கிரீடம் சுமந்து சிலுவையில் அறையப் பட்ட அவரது ஒவ்வொரு தசை நாரினதும் வேதனையை மரியாள் உணர்ந்திருந்தாள்'. அவ்வேதனையையே சிலுவை யாய் சுமக்கும் மரியாளின் துயரம் ஈழத்தாயாரின் துயராய் வடிகிறது இக்கவிதையில்.

'பாவியாகிய ஒருவன் மனந்திருந்தி மீண்டும் மனிதனாக மாறும்போது மரித்தவன் மீண்டும் உயிர்த்தவனாகின்றான்' (கிறிஸ்தவ வேதகாமம் லூக்கா 15-ஆம் அத்தியாயத்தின் 11 முதல் 32 வரையான வசனம்). மிக நுட்பமான இத்தொன்மம் செல்வமனோகரியின் 'எதார்த்தம்' என்ற கவிதையில் இருகு மாரர்களுக்கூடாக வெளிப்படுகிறது. பைபிளில் தன்னை விட்டுச் சென்ற கெட்ட குமாரன் திருந்தி மீண்டும் அவன் வீட்டுக்கு வந்தபோது தந்தை வரவேற்கிறார். நல்லகுமாரனும் அதனை ஏற்றுக்கொண்டான். ஆனால் செல்வமனோகரியின் கவிதையில் நல்லகுமாரன் வெளியேறுகிறான்.

‘கெட்ட குமாறன்
வீடு திரும்பினான்
கறை படிந்த கால்களின்
அரங்கேற்றம்
தந்தையின்
மாடமாளிகையின்
ஆடம்பரங்கள்
அனைத்தும்
அவனை வரவேற்றன
நேர்மையும் உண்மையுமியல்
பேயான
நல்ல குமாறன்
காணாமற் போனான்’

*- மளுங்கடிக்கப்பட்ட அடையாளங்கள் - பக். 2*

விழுமியத்தைக் கடந்து நிற்கும் நடத்தைசார் மனித மனதின் இயல்புவழி இக்கவிதை தன்னை முன்மொழிகிறது.

### ஈழத்து நவீன கவிதைகளில் பௌத்த தொன்மம்:

ஈழத்து நவீன கவிதையில் வெளிப்படும் பௌத்த இறை தொன்மங்கள் புத்தர் என்னும் தனிமனிதருடைய வாழ்வுக்கூடாகவும் பௌத்த ஜாதகக்கதைகளுக்கூடாகவும் தமிழர் வாழ்வியல் அவலங்களை வெளிப்படுத்துகிறது. புத்தரின் வாழ்க்கையில் நடந்ததாகக் கூறப்படும் நிகழ்வுகளைச் சுற்றிப் பின்னப்படும் பௌத்த ஜாதகக்கதைகள் புத்தரின் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. புத்தரின் வாழ்க்கையின் நிகழ்வுகளாகக் கருதப்படுவதால், அவையும் தொன்மங்களாகவே கருதப்படுகின்றன. புத்தரின் கடந்தகால இல்லற வாழ்வு, துறவு, ஆன்மீகத் தேடல் என்பவற்றின் வழி தமிழர்களின் கடந்தகால அரசியல், சமூக வாழ்வைப் பேசிச் செல்லும் இக்கவிதைகள் கச்சிதமான மொழிக் கட்டுமானத்தில் அமைந்தவை.

தமிழ்நதியின் யசோதரா கவிதை புத்தரின் துறவுக்கூடாகப் பெண்ணின் இருப்பின் வலியைப் பதிவு செய்கிறது. புத்தரைப் பிரிந்த யசோதரையின் மன ஏக்கத்தையும் தனிமையின் அவஸ்தையையும் புத்தரின் மீது அவர்கொண்ட தீராத காதலையும் இக்கவிதை கூறிநிற்கிறது.

‘பூக்கள் இறைந்த கனவின் வழியில்
இதழ் பிரியச்
சிரித்த முகம் விலக்கி
இருளுள் கரைகிறான்
சித்தார்த்தன்
அரச மரத்தடியில் நெடிய
இமையிறுக்கி
மறந்து போகிறான் துணையை
...சாளரத்தின் ஊடே அனுப்பிய
யசோதரையின்
விழிகள் திரும்பவேயில்லை
பௌர்ணமி நாளொன்றில்
அவன் புத்தரானான்
அவள் பிச்சையாகினாள்
அன்பே என்னோடிரு என்னோடிரு கண்ணீரில்
நெய்த குரலை
அரண்மனை சுவர்கள் உறிஞ்ச
வரலாற்றிலிருந்தும் போனாள்
அவளும் போனாள்...’

கற்பகம் யசோதரவின் ஆழந்த பொருட் பிரமானமிக்க கவிதைகளில் சிங்கள இனத்தின் ஈனச் செயலுக்குத் துணைபோகும் ஒருவராகவே புத்தர் காணப்படுகிறார். இவருடைய ‘எங்கும் புத்தர்’ என்னும் கவிதை அமைதியின் மையான சூழலில் வன்முறை, புணர்ச்சி, அரசியல், ராணுவம் போன்ற சக்திகள் ஆட்சி செய்வதை சூசகமாகப் பேசுகிறது. புத்தரை மனித சமுதாயத்தின் பிரதிநிதியாகப் பார்க்கும் இக்கவிதை புத்தரின் அமைதி தத்துவம் தற்போது அமைதியை அழிக்கும் சக்தியாய் மாறிவிட்டதை வெளிப்படுத்தி நிற்பதுடன் ஆணாதிக்க அரசியல் வன்முறையையும் சாடிநிற்கிறது.

‘அவனது ஆண்குறியின் ஊன்றுகை
அவன் இருக்கும்
இடங்கள் தவிர்த்து
தேசமெங்கும் விரவ
கண்ணாடிப்
பெட்டிக்குள் ‘பாதுகாப்புடன்’ அவன்
இருந்தும்
‘கவனமாய்’
கண்களை மூடிக்கொண்டொரு
மோனத்
தவத்துடன்
காவியுடை வசீ...கரிக்க
எங்கும் புத்தர்
பேறுகால சிறு மார்பு பொங்க
நான் அழைத்தேன்
புணர்ச்சிக்கான அழைப்பு
புத்தனே யசோதரா
வந்திருக்கிறேன்...’

*- எனது மகள் கேள்வி கேட்பவள் - பக். 85*

காட்சிப்படிமமாய் விரியும் இக்கவிதை துறவு ஒரு மறைமுக வன்முறையாக மாறிவிட்டதை துலக்கமாகப் பதிவுசெய்கிறது. பிறிதொரு வகையில் கூறுவுதானால் அமைதி இழந்த துறவின் வன்முறைமயமான முகமே புத்தரின் முகமாக உருக்கொள்கிறது. அர்த்தத்தின் ஆழத்தில் கட்டுறும் இக்கவிதை வன்முறையாளரைச் சிந்திக்க வைக்கும், வாசகரைப் பதறச் செய்யும் கவிதையாகக் காணப்படுகிறது. ஈழப் போரின் காலத்தில் ‘அமைதி’ என்ற வார்த்தை மௌனத்தின் பாசாங்காகக் கருதப்பட்டது. இங்கு ‘மௌனம்’ வன்முறையை நியாயப்படுத்துகிறது. ‘மௌனம் பூண்ட வன்முறை மிகு துறவின் பாவனை’ என்ற வரி இதனை வெளிப்படுத்தி நிற்கிறது. ஈழப் போரின் இறுதிக்காலத்தில், ‘மௌனத்தின் பெயரால்’ ஆயிரம் ஆயிரம் உயிர்கள் அழிக்கப்பட்ட செய்தியை கூறி நிற்கின்றன. யசோதரா இங்கு மறைந்த மனிதத்தைத் தேடும்

அடையாளம். ஈழப்போரில் தமது பிள்ளைகளை இழந்த தாய்மையின் குரல் போரில் காணாமல் போன அன்பினரைத் தேடிச் சென்ற அவலத்தின் பிரதிநிதியாகவே யசோதரவைக் காண்கிறேன்.

T.S. Eliot தன்னுடைய 'The Waste Land' கவிதையில் ஆன்மீக வெறுமையை வெளிப்படுத்துவதைப்போல இக்கவிதையும் இருப்பின்மை அப்பால் ரத்த களரியுள் மௌனம் பூண்ட வன்முறை மிகு துறவைக் காட்சிப்படுத்தி நிற்கிறது. Pablo Neruda 'I Explain a Few Things' என்ற கவிதையில் ஸ்பானிய உள்நாட்டுப் போரின்போது அமைதியின் முகமூடி அணிந்த உலகத்தை எதிர்த்ததைப் போல 'எங்கும் புத்தர்' என்ற கவிதையும் மனித மரணத்தை அமைதி என பெயரிட்டு கடுமையாகச் சாடுகிறது. புத்தரின் புனித முகமூடி கிழித்தெறியப்பட்டு அதில் இருந்து வன்முறை குருதி சொட்டப்படுவதை வலியின் கனத்தொடு இக்கவிதை பதிவுசெய்கிறது.

## இஸ்லாமியத் தொன்மம்:

ஆழமான சிந்தனைக் கட்டுமானத்தில் எழும் ஆழியாளின் செங்கம்பளம் என்ற கவிதை முள்ளிவாய்க்காலின் அழிவைப் பாடுகிறது. இஸ்லாமியத் தொன்மங்களுக்கூடாகக் கட்டுண்ட இக்கவிதை அழிவின் முகம், மதத்தின் பெயரால் எல்லா இடங்களில் ஒரே மாதிரி என்பதை தத்துருபமாகப் பதிவுசெய்கிறது. இங்கு செங்கம்பளம் சிவப்பு - கம்பளம் என்ற இரு அடுக்குகளைக் கொண்டது. சிவப்பு என்பது ரத்தம், வன்முறை, நெருப்பு, தியாகம், கோபம் எனப் பன்முகத் தன்மை கொண்டது. கம்பளம் என்பது புனிதப்பரப்பு. மனிதர் மதத்தின் பெயராலும் இனத்தின் பெயராலும் தம்மைத் தாமே அழித்துக் கொள்வதைப் புனிதச்சின்னத்தின் ஊடாக இக்கவிதை முன்வைக்கிறது. அமைதியான வாழ்வு சிதைந்துள்ளமையை கம்பளம் என்ற குறியீட்டுக்கூடு அழியாள் முன்வைக்கிறார்.

'அறஃபா மலை இருந்து
மூன்று சாத்தான்களை
விரட்டிக் கொண்டிருக்கிறார்கள்
தைக்காத வெண்
ஆடைதரித்தவர்கள்
போ... போ நீ போ...
நரகத்துக்கே போய்விடு என்று
கூக்கிரலிட்டு
துரத்துகிறார்கள்...'

- *நெடுமரமங்களாய் வாழ்தல் - பக். 33*

சுவர்க்கத்திலிருந்து உலகிற்கு அனுப்பப்பட ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், ஹவ்வா அலைஹஸ்ஸாம் அவர்களும் முதன் முதலாக சந்தித்த இடம் அரஃபா ஆகும். அருளின் மலையாகிய அரஃபா மலை சவுதி அரேபியாவில் உள்ள மக்காவிற்கு கிழக்கே சுமார் 12 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது இஸ்லாமிய ஹஜ் யாத்திரையின் சின்னம். அங்கே யாத்திரிகர்கள் மனித மனத்தில் படிந்திருக்கும் அழுக்குகளைத் துரத்துவார்கள். இதுவே கவிதையில் வெண் ஆடை என்னும் புனிதரின் முகமூடிக்குள் ஒளிந்திருக்கும் மூன்று சாத்தான்களை (evil forces) விரட்டுதல் எனப் பொருள்படுகிறது. அது பாவத்திலிருந்து விடுதலையாகும். ஆனால் இதனை இங்கு கவிஞர் அதை உலகப் போரின் காட்சியாக மாற்றுகிறார். பல நூறாய் உருவெடுத்து உருமாறி ஓடித் தப்பின மூன்று சாத்தான்களும் நவீன உலகின் வன்முறையை விதைக்கின்றன. மீண்டும் புதிய வடிவெடுத்து உலகை எரிக்கிறது.

'மூன்று சாத்தான்களும்
பல நூறாய்
உருவெடுத்து உருமாறி
ஓடித் தப்பின.
வழிப்பட்ட ஊறில் இளைப்பாற
ஒரு குட்டி
கம்பளத்தை
உதறி விரித்தன
உதறலில்
பவளத் திவலைகள் தெறிக்கப்
பெருநெருப்புக்
கம்பளம்
உருண்டோடி
நெடும்நில விரிப்பாயிற்று
நிலங் கொடுநெருப்பாயிற்று '
ஒழுடுக்கு நகரமாயிற்று
அலப்போ
ஆறாக் கங்குகளின்
மனக்கிடங்காயிற்று.
ஓ முள்ளிவாய்க்காலாயிற்று
அலப்போ'

இங்கு இறை ஆசி வேண்டி விடுதலை பெற மனிதர் சாத்தானைத் துரத்துகிறார். ஆனால், கவிதையின் முடிவில் துரத்தும் அம்மனிதரே சாத்தானாகவும் மாறிவிடுகிறார். சமூக அதிகாரத்தை நிலைநாட்ட புனிதமான மதம் துணை போவதை இக்கவிதை எடுத்துரைக்கிறது. இதன் வாயிலாக Michel Foucault-இன் 'Power disguised as piety' என்ற கோட்பாட்டையும் இக்கவிதை நினைவூட்டிச் செல்கிறது. வன்முறைக்கு எல்லையில்லை அது மதம், இனங் கடந்து யாவற்றையும் அழிக்கும் தன்மை கொண்டது. ஆதலால் சிரியாவின் (அலப்போ) அழிவை முள்ளிவாய்க்காலின் அழிவோடு தொடர்புபடுத்தி ஆழியாள் கவிதையை முடித்திருக்கிறார்.

இலக்கியத்தில் தொன்மங்கள் புதிய வடிவங்களில் மீண்டும் மீண்டும் கையாளப்படுகின்றன. தொன்மம் என்பது பழைய கதையை மீண்டும் சொல்வதற்காகக் கையாளப்படும் அடையாளச் சின்னமல்ல. அது ஆழமான அர்த்தத்தைத் தரவல்ல கலைப்பெறுமானம். அது தொன்மையின் பெருமையை மாற்றியும் மறைத்தும் கூறவல்லது. எனவே தொன்மம் என்பது காலச் சுழற்சியில் உயிரோடு வாழும் நினைவு. அது நம்முடைய சிந்தனைக்கு கலைப்பெறுமானத்தைக் கொடுக்கவல்லது, நம்பிக்கையின் அடித்தளத்தில் எழும் தொன்மங்கள் கவிதையை செறிவாக்குவதுடன் அனுபவ நினைவின் வழி காலத்தால் அழியாதமொழியாகவும் நின்று நிலைக்கவல்லது.



ramesh.s@thaiveedu.com



15

# ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

## இதுவரை...

மகாவம்சம், பொ.ஆ.பி. 5-ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாக அறியப்படுகிறது. பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டளவில் பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது என்பதற்கான வலுவான சான்றுகள் உள. தேவநம்பியதீசன் கட்டிய மகா விகாரையில் பௌத்தபிக்குகள் கூடி, பௌத்தம் இந்தியாவில் தோன்றிப் பரவிய வரலாற்றையும் இலங்கையில் பௌத்தம் அறிமுகமான வரலாற்றையும் புத்தரது வரலாறு, பௌத்தமதத்தின் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றையும் இணைத்து பாளிமொழியில் 'அட்டகதா' என்னும் பெயரில் நாட்டார் பாடல்கள் பாடப்பட்டுவந்தன.

அவை ஒரு கட்டத்தில் காலவரிசைப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு அட்டகதா-மகாவம்சம் என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது. இந்த 'அட்டகதா-மகாவம்சம்' என்னும் செய்யுட்களைச் சான்றாகக் கொண்டு பொ.ஆ.பி. 4-ஆம் நூற்றாண்டில் தீபவம்சமும் பொ.ஆ.பி 6-ஆம் நூற்றாண்டில் மகாவம்சமும் தொகுக்கப்பட்டன. மகாவம்சத்தைப் பாளி மொழியில் தொகுத்தவர் மகாநாமதேரோ ஆவார்.

மஹிந்ததேரர்தான் ஈழத்திற்கு பௌத்தமதத்தைக் கொண்டு வந்தாரா ?

- இலங்கைப் பண்டைய வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம் ஆகிய இரு நூல்களிலும் மகிந்தர் இலங்கைக்குப் பயணம் செய்தது, தேவநம்பியதீசன் என்ற மன்னனை பௌத்தனாக மதம் மாற்றியது குறித்து தகவல்கள் தரப்பட்டுள்ளன.

  இவை இரண்டுமே மகிந்தர் பற்றிய முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன.
- கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகள் இலங்கையில் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்தம் பரவியதைக் காட்டுகின்றன.
- அசோகரின் மகன் மகிந்தன் இலங்கைக்கு வந்ததாகவும் அசோகரின் மகள் சங்கமித்தை பௌத்த துறவியாகி இலங்கைக்குப் போதிமரத்தைக் கொண்டுவந்ததாகவும் மகாவம்சம் கூறும் தகவலை அசோகர் குறிப்பிடவில்லை. அத்துடன்,
- சிங்களக்கலையின் தொடக்ககால ஓவியங்கள் அல்லது சிற்பங்கள் இவைபற்றிக் குறிப்பிடவில்லை. மகிந்தன் இலங்கை அரசரை மதம் மாற்றிய வரலாறே கேள்விக் குறியாகியுள்ளது.
- புத்தர் பற்றிய பல ஆய்வுகள் மேற்கொண்டவரும் பல பாளி மொழி நூல்களை மொழிமாற்றம் செய்தவரும் செர்மானியநாட்டைச் சேர்ந்தவருமான இந்தியவியலாளர் பேரா. எர்மன் ஓல்டென்பேர்க், மகிந்தரின் கதையை 'தூய கண்டுபிடிப்பு' என்று கூறியுள்ளார்.
- அசோகரும் இந்தியாவின் ஆரம்ப வரலாறும் என்னும் நூலை எழுதிய வி.ஏ. சிமித், இதனை 'அபத்தம்' என்று கூறியுள்ளார்.
- தன்மகன் மகிந்தனை பௌத்தமதம் பரப்புவதற்காக கோவிலுக்கு அர்ப்பணிப்பது பற்றியும் இலங்கை அரசரை மதம்மாற்றுவதில் மகிந்தனின் பங்குபற்றியும் அசோகரின் கல்வெட்டுகளில் கூறப்படவில்லை.

தொடர்கிறது...

### மகாவிகாரை:

அரசனுக்குச் சொந்தமான, அனைத்து வசதிகளும் நிரம்பிய நந்தவனத்தில் தேரர் அமர்ந்திருந்தார். ஏராளமான உயர் குடும்பப் பெண்களும் வந்திருந்தனர். அவர்கள் தேரரின் காலடியில் அமர்ந்திருந்தனர். அவர்களுக்குத் தேரர் பால பண்டிதசித்தாந்தத்தை உபதேசித்தார். ஆயிரம் பெண்கள் விமோசனத்திற்கான முதற்படியை அடைந்தனர். சோலையில் அவர்கள் இருந்தபோது மாலை நேரமும் வந்தது.

மலைக்குச் செல்லப்புறப்பட்ட தேரர்களை, மலை அதிக தூரத்தில் இருந்ததால் மன்னன், அவர்களை அந்த நந்தவனத்திலேயே தங்கலாம் என்று உபசரித்தான். நந்தவனம் நகருக்கு அருகில் இருந்ததால் அது தேரர்கள் தங்குவதற்கு ஏற்ற இடமல்ல என்று 'மகாமேகவனத்தில்' அவர்கள் தங்க வைக்கப்பட்டார்கள். தேரர்கள் அன்று இரவு அங்கு தங்கினார்கள். தேரர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்துதரப்பட்டன.

ஐந்நூறு பெண்களுடன் வந்திருந்த இராணி அனுலா, விமோசனம் அடைவதற்கான இரண்டாம் நிலையை அடைந்திருந்தார். அவர், தாங்கள் தீட்சைபெற வேண்டும் என்று அரசனிடம்



கூறினாள். பெண்களுக்குத் தீட்சை செய்துவைக்கத் தமக்கு அனுமதி கிடையாது என்று கூறியதேரர், 'எனது தங்கை சங்க மித்தை என்னும் தேவி பாடலிபுத்ரத்தில் இருக்கிறாள், முதிர்ந்த அனு பவசாலி. புத்தர் ஞானம் பெற்ற புனிதபோதி மரத்தின் தென்பகுதிக்கிளையுடன் இங்கு வருவாள். அவளு டன் புகழ்பெற்ற பிக்குணிகளும் வருவார்கள். இது குறித்து எனது தந்தையாகிய அரசனுக்குச் செய்தி அனுப்புங்கள். அவர்கள் இங்கு வந்ததும் இப்பெண்களுக்குத் தீட்சை செய்துவைப்பாள்.' என்றார்.

அரசன், மகிந்ததேரருடைய கையில் நீரை ஊற்றித் தாரை வார்த்துக் கொடுத்தான். 'இந்த மகாமேகவனத்தைப் பிக்கு சங்கத்திற்கு அளிக்கிறேன்.' என்றான். தண்ணீர் நிலத்தில் விழுந்தபோது பூமி அதிர்ந்தது. இலக்கியங்களில் தெய்வீகத் தன்மையைக் காட்டுவதற்காக இவ்வாறான கதைகள் கூறப் படுவது இயற்கை. இத்தீவில் இன்று முதல் தர்மம் வேரூன்றி விட்டது என்றார் மகிந்ததேரர். பாவம், இந்தத் தேரர் இன்று தமிழீழத்தில் ஈழத்தமிழருக்கு எதிராக நடக்கும் அராஜகங்க ளையும் அட்டூழியங்களையும் கண்டால் என்ன சொல்லியி ருப்பார்?

வரலாற்றுக்காலப் புத்தருக்கு முன்னர், இந்த யுகத்தில், காக சந்தர், கோநாகமனர், காச்யபா ஆகிய மூன்று புத்தர்கள் இருந்ததாகவும் அவர்களும் கௌதமபுத்தரைப்போலவே இலங்கைக்கு வந்தார்கள் என்றும் ஒரே மாதிரியான நிகழ்ச் சிகள் (பூமி அதிர்ந்தது) ஒவ்வொரு தடவையும் நடந்தது என்றும் கூறுவது புராணம். இப்புத்தர்கள் தம்வாழ்நாளில் பிக்குகளின் கடமை செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட இடம் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

'அம்மூன்று புத்தர்களுடைய போதிமரக்கிளை கொண்டுவரப் பட்டபோது இந்த இடத்தில்தான் நடப்பட்டது. அதேபோலவே இம்முறையும் போதிமரத்தின் கிளை இதே இடத்தில் நடப் பெறும்' என்றார் மகிந்ததேரர்.

சங்கமித்தை முதல் முதலில் வெள்ளரசு மரக்கிளை கொண்டு வந்த இடத்தில் தற்போது நினைவுச்சின்னம் ஒன்றும் விகாரை ஒன்றும் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. யாழ்ப்பாணத் திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காகப் புதிது புதிதாக எத்தனையோ இடங்கள் கண்டுபிடிக்கப்படுவது நாம் அறிந் ததே. பத்தோடு பதினொன்று.

மகிந்தன், இலங்கை மன்னனுக்குப் புத்தர் இருந்து ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளை ஒன்றைத் தருவதாக வாக் குறுதியளித்தான் என்றும் அதனை நிறைவேற்றும்முகமாக அசோக மன்னனே அந்த வெள்ளரசுக்கிளை இருக்கும் இடம் சென்று கிளை ஒன்று வெட்டுவித்தான் என்றும் மகாவம்சம் கூறுகிறது.

சங்கமித்தை, இந்த வெள்ளரசுக்கிளையை இலங்கைக்கு எடுத்துச்சென்றதையும் இலங்கையில் பெண் துறவிகளின் மரபுஒன்றை உருவாக்கியதையும் இலங்கையில், அரசகுல மகளிர் சிலரைப் பிக்குணிகளாக்குவதற்காகச் சங்கமித்தை இலங்கைக்கு அனுப்பப்பட்டதையும் மகாவம்சம் கூறுகிறது.

இவர்கள். யாழ்ப்பாணக்குடாவில் இறங்கியதாகவும், அங்கி ருந்து வெள்ளரசுக்கிளை தற்போது இருக்கும் அனுராதபு ரிக்குக் கிளையை எடுத்துச்செல்வதற்காக நெடுஞ்சாலை செப்பனிடப்பட்டதாகவும் வந்தவர்கள் தங்குவதற்காகக் கட்ட டங்கள் கட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சங்கமித்தையும் அவருடன் வந்த பிக்குணிகளும் ஈழத்தின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் வந்து இறங்கி னார்கள். இந்த இடம், முன்னர் ஜம்புகோளத்துறை என்றும் இன்று சம்புத்துறை என்றும் அழைக்கப்படுகிறது. இத்துறை முகம் யாழ்ப்பாணத்தில் உள்ள திருவடிநிலைக்குச் சிறிது தூரத்தில் இருக்கின்றது. இத்துறைமுகம் சிறந்த வாணிப நிலையமாக விளங்கியது. இது மாதகல் எனும் இடத்திற்கு அருகில் உள்ளது. இச்சம்புத்துறையிலிருந்தே தேவநம்பிய தீசனால் அசோக மன்னனிடம் அனுப்பட்ட தூதுவர்கள் மரக் கலம் ஏறிச்சென்றனர். பொ.ஆ.மு மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரேயே இப்பெயர் கொண்டதாக இவ்விடம் இருந்திருக் கிறது. சிங்கள இலக்கியங்களில் ஜம்புக்கோளம் என்று குறிப் பிடப்பட்டாலும் தமிழ் பெயரே முதன்மையானது.

*"சங்கமித்தையும் அவருடன் வந்த பிக்குணிகளும் ஈழத்தின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் வந்து இறங்கினார்கள். இந்த இடம், முன்னர் ஜம்புகோளத்துறை என்றும் இன்று சம்புத்துறை என்றும் அழைக்கப்படுகிறது."*

> ***உலகிலேயே அதிக அளவிலான சிலைகள் இருப்பது புத்தருக்குத்தான் என்று கூறப்படுகிறது. நின்ற நிலை, அமர்ந்தநிலை, தியானநிலை என்று இப்படிப் பல நிலைகளில் உள்ள புத்தர்சிலை பலவாறான வடிவங்களில் செதுக்கப்பட்டிருக்கின்றது.***

அனுராதபுரத்தில் நட்ட வெள்ளரசுக்கிளையில் உண்டான வெள்ளரசுமரக்கன்று ஒன்று ஜம்புக்கோளத்துறைமுகத்தில் வளர்த்ததாகவும் தேவநம்பியதீசன் அங்கு பௌத்தபிக்குகளுக்காக ஒரு விகாரை கட்டினான் என்றும் அது ஜம்புகோளவிகாரை என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மணிமேகலையில் குறிப்பிடப்படும் மணிபல்லவமும் ஜம்புக்கோளப்பட்டினமும் ஒன்று என்பர் சிலர்.

சங்கமித்தை வெள்ளரசுக்கிளையுடன் ஈழம் வந்தமைபற்றி மகாவம்சம் கூறும் தகவல்களைக் காணும் முன்பாக, குறிப்பிட்ட அக்காலப்பகுதியில் பௌத்தம் எவ்வாறு அயல்நாடுகளுக்கு, அதாவது, வடஇந்தியாவின் வடக்கு, வடமேற்கு, கிழக்கு, தெற்கு முதலாகிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பது மிகவும் பெரிய விடயம். அதுவும் வாகன வசதிகள் அற்ற அக்காலப்பகுதியில், சீனா, யப்பான், தென்கிழக்கு ஆசியா முதலிய நாடுகளுக்குப் பரவியது என்பது சாதாரணமான செயல் கிடையாது.

## புலம்பெயர் நாடுகளில் பௌத்தம்:

உலகிலேயே அதிக அளவிலான சிலைகள் இருப்பது புத்தருக்குத்தான் என்று கூறப்படுகிறது. நின்ற நிலை, அமர்ந்தநிலை, தியானநிலை என்று இப்படிப் பல நிலைகளில் உள்ள புத்தர்சிலை பலவாறான வடிவங்களில் செதுக்கப்பட்டிருக்கின்றது. பார்த்தவுடன் பிரமிக்கவைக்கும் உலகின் மிகப்பெரிய புத்தர் சிலை சீனாவில் இருக்கிறது. இச்சிலை, சீனாவில் இரு மலைகளின் மத்தியில் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை 233 அடி உயரமும் 92 அடி அகலமும் கொண்டது. இச்சிலை உருவாகியதற்கான காரணமும் வியப்பிற்குரியதே.





இந்தப் புத்தர் சிலை அமைந்திருக்கும் லெசான் மலைப்பகுதியைச்சுற்றி 'மின்சியாங்' என்ற ஆறு ஓடுகிறது. இன்று அமைதியாகக் காணப்படும் இந்த ஆறு பொ.ஆ.பி. 7-ஆம் நுற்றாண்டில் மிகவும் பயங்கரமானதாக இருந்ததாகக் கூறப்படுகிறது. அதிக இரைச்சலுடனும் அதிகமான இழுப்புசக்தியுடனும் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. இந்த ஆற்றைக் கடப்பதும் படகுகளில் பயணம் செய்து மறுகரை சேர்வதும் முடியாத காரணமாகவும் பெரும் சவாலாகவும் இருந்திருக்கிறது. அப்பகுதியைச் சேர்ந்தமக்கள் 'ஹைடாங்' என்ற பௌத்த துறவியின் உதவியை நாடினர்.

அவர்கள் நிலையை அறிந்த அந்தத் துறவி, ஆற்றின் ஒரு கரையில் புத்தர் சிலைஒன்று அமைக்கும்படி கூறினார். 'ஆர்ப்பரிக்கும் மனத்தையே தியானத்தால் அடக்கும் புத்தர் கட்டுக்கடங்காத ஆற்றையும் அடக்கிவிடுவார்' என்று நம்பிய மக்களும் சிலை வடிப்பதற்கு ஏற்ற இடமாக ஆற்றை ஒட்டியுள்ள மலையைத் தேர்ந்தெடுத்தார்கள்.

பொ.ஆ.பி. 713-இல் இப்பணி தொடங்கியது. சிலை பாதி வடிவமைக்கப்பட்ட நிலையில் சிலை அமைப்பதற்கு ஊக்கம் கொடுத்துவந்த துறவியான ஹைடாங் இறந்துவிட்டார். அதனால் சிலை வடிப்பு வேலை தொய்வுகண்டது. நாளடைவில் சிலை வடிக்கும் பணி நின்றுவிட்டது. ஆனால் ஆற்றின் வேகம் நின்றபாடில்லை. சுமார் 70 ஆண்டுகளின் பின், வெசான் நகரைப் பார்வையிடவந்த அப்பகுதியை ஆட்சிசெய்த டாக்வம்ச ஆளுநர், சிலை பற்றியும் அந்த வேலை பாதியில் நிற்பது பற்றியும் அறிந்தார். அவரது முயற்சியால் பொ.ஆ.பி. 803-இல் இப்புத்தர் சிலை முழுவடிவம் பெற்றது. சிலை முழுவடிவம் பெற்றதுமே மின்சியாங் ஆறு அமைதியாகி

tg.theeban@gmail.com



> **சீனாவில் பௌத்தம் நீண்டகாலமாக வேரூன்றிய ஒரு சமயம். சமயத்தில் மட்டுமல்லாமல் அரசியலிலும் வாழ்வியலிலும் மெய்யியலிலும் பௌத்தம் ஆதிக்கம் செலுத்துகிறது. பல இக்கட்டான அரசியல் பொருளாதார சூழ்நிலைகளில் பௌத்தம் வெகுவாகப் பரவியது.**

விட்டதாம். இந்தப் புத்தர் சிலையின் தலையில் 1021 சுருள் முடிகள் அமைக்கப்பட்டுள்ளன. புத்தரின் இச்சிலை முழுமையும் பாறையிலேயே அமைக்கப்பட்டது. புத்தரின் காதுகள் மட்டும் மரத்தால் ஆனது. காதுகளை மட்டும் மரத்தில் செய்து இணைப்பது என்பது அவ்வளவு இலகுவான செயல் அல்ல. இதற்காக மட்டுமே சுமார் ஆயிரம்பேர் தனிப்பட்ட முறையில் பணியாற்றியிருக்கிறார்கள்.

இந்தப் புத்தர் சிலையை வெயில், மழைபோன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து பாதுகாக்க அமைக்கப்பட்ட மரப்பந்தல்கள், டாங்வம்ச அரசர்களை எதிர்த்து நடந்த போர்களில் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால், புத்தர் மட்டும் அப்படியே புன்னகையுடன் காணப்படுகிறார்.

வடஇந்தியாவிலிருந்து நாலாபக்கமும் எடுத்துச்செல்லப்பட்ட பௌத்தம் பல்வேறு நாடுகளிலும் அவ்வந்நாடுகளின் தனிப்பட்ட அரசியல், சமூகக் காரணங்களால் வளர்ந்தும், நலிந்தும் போயின என்பதை அறியும் நோக்கத்திற்காகவே. சீனாவில் பௌத்தம் பற்றிய இப்பகுதி தேவைகருதி இங்கு எடுத்துவரப்பட்டது.

சீனபௌத்தம் தனித்துவமானது. அது, சீன மதிப்புக்களைப் பிரதிபலிக்கும் வகையில் உருவாகியிருக்கிறது. கன்பூசியன் மரியாதை மற்றும் மகப்பேறு பற்றிய கருத்துகள் தாவோயிஸ்ட் இயற்கையோடு இணக்கமான நம்பிக்கைகள் முதலியவை கலந்திருக்கின்றன. காலப்போக்கில், அது ஆன்மீக பயிற்சியை விட அதிகமாக மாறியது - அது ஒரு வாழ்க்கை முறையாக மாறியது.

கன்பூசியஸால் நிறுவப்பட்ட கன்பூசியனிசம், ஒழுக்கம், சமூக நல்லிணக்கம், பெரியவர்களுக்கு மரியாதை மற்றும் நெறிமுறை நிர்வாகம் ஆகியவற்றை வலியுறுத்தும் ஒரு சீன தத்துவமாகும். சீனாவின் கின்காலத்திற்கு முந்தைய காலத்தில் முக்கிய சிந்தனைப் பள்ளிகளில் ஒன்றான கன்பூசியனிசம், சோவ் வம்சத்தின் சடங்கு மற்றும் இசை மரபுகளிலிருந்து உருவானது. அதன் மையத்தில், கன்பூசியனிசம் மனித நெறிமுறைகளை வலியுறுத்துகிறது, தனிப்பட்ட மற்றும் சமூக உறவுகளில் அன்பு, மரியாதை மற்றும் நல்லிணக்கத்தை ஆதரிக்கிறது. கடுமையான பழைமைவாதத்தை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, அது சமநிலை, மிதமானதன்மை மற்றும் மாறிவரும் காலத்திற்கு ஏற்ப தகவமைப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

சீனாவில் பௌத்தம் நீண்டகாலமாக வேரூன்றிய ஒரு சமயம். சமயத்தில் மட்டுமல்லாமல் அரசியலிலும் வாழ்வியலிலும் மெய்யியலிலும் பௌத்தம் ஆதிக்கம் செலுத்துகிறது. பல இக்கட்டான அரசியல் பொருளாதார சூழ்நிலைகளில் பௌத்தம் வெகுவாகப் பரவியது. சீனாவில் பௌத்தம் தனித்துவமானது. அது சீன மதிப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் உருவாகியுள்ளது. சீனாவில் பௌத்தம் பற்றி அறிவதற்கு, நூல்கள், மொழிபெயர்ப்புகள், இணையவழி வளங்கள் என்று ஏராளமான வளங்கள் உள. இந்த ஆய்வுத்தொடரில் ஆங்காங்கே பௌத்தம் வளர்ந்தநாடுகள் பற்றிய தகவல்கள் எடுத்துவரப்படும்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com




> **நீதிமன்றிலே பொய்ச்சாட்சி கூறப்படுவது எவ்வளவு தீமையானது என்பதையும், அது பொய்ச் சாட்சி கூறியவரது குடியையே வேரோடு அறுத்துவிடும் என்பதையும் வலியுறுத்துவதற்காகக் கம்பர் இந்த உவமையைக் கையாண்டிருக்கின்றார்.**

முன்னைய தாய் வீடு இதழில் ஆறாவது படலமாகிய கரன் வதைப் படலத்தின் ஒரு பகுதியை எடுத்து வந்திருந் தேன். இராமனை எதிர்த்துப் போரிடவந்த அரக்கர்களுள் படைத் தலைவர்கள் பதினால்வர் தவிர அனைவரும் இறந் தொழிந்த செய்திகளை அறிந்துகொண்டோம். அதனைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கம்பரின் கவிநயத் தோடு இவ்விதழில் கண்டறிவோம். படைத்தலைவர்கள் பதி னான்கு பேரும் இராமனைச் சூழ்ந்து கொள்கிறார்கள். அவர் களுடன் இராமன் போரிட்டு அவர்களை அழித்துவிடுகிறான். அந்தச் செய்தியை 5 செய்யுள்களில் கம்பர் நயம்பட உரைத் திருக்கின்றார். அவற்றில் ஒன்றை இங்கே தருகிறேன்.

***கலைகளின் பெருங்கடல் கடந்தகல்வியான்***
***இலைகொள்வெம் பகழிஏழ் இரண்டும் வாங்கினான்***
***கொலைகொள் வெஞ்சிலையொடுபுருவம்***
***கோடினான்***
***மலைகளும் தலைகளும் விழுந்தமண்ணினே***

*கம்ப. ஆரணிய. 476*

கலைகளின் பெருங்கடல் கடந்தகல்வியான் - கலைகளாகிய பெருங்கடலைக் கடந்த முற்றுணர்ந்த அறிவுடையவனான இராமன், கொலைகொள் வெஞ்சிலையொடுபுருவம் கோடி னான் - தனது இரு புருவங்களையும் சினத்தினால் வளைத்த வாறுகொன்றழிக்கவல்லதான வில்லையும் வளைத்துக்கொண் டான். இலைகொள்வெம்பகழிஏழ் இரண்டும் வாங்கினான் - இலை வடிவம் கொண்ட பதினான்கு கொடிய அம்புகளை வில்லில் தொடுத்து எய்தான், மலைகளும் தலைகளும் விழுந்தமண்ணினே - அவன் எய்த அம்புகள் சென்று தைத்த போது அரக்கர் படைத் தலைவர்கள் அவன் மீது எறிவதற் காகக் கைகளில் ஏந்தியிருந்த மலைகளும் அவர்களுடைய தலைகளும் மண்ணிலே விழுந்து உருண்டன.

இராமன் வில்லை வளைத்தபோது இரண்டு புருவங்களையும் வளைத்தான் என அவனிடமிருந்த சினத்தைக் குறியீடாக உணர்த்துவதுபோல, கொலைகொள் வெஞ்சிலையொடு புரு வம் கோடினான் எனக் கம்பர் குறிப்பிடுவது நயம்மிக்கது. இவ்வாறு படைத்தலைவர்கள் பதினான்கு பேரும் கொல்லப் படவே, மேலும் வேறு பல அரக்கர்கள் பொங்கும் சினத்துடன் பல்வேறு போர்க்கருவிகளை வீசியபடி எல்லாப் பக்கங்களை யும் அடைத்தபடியே இராமனைச் சூழ்கின்றார்கள்.

***முழங்கினபெரும்பணைமூரி மால்கரி***
***முழங்கினவரிசிலை முடுகு நாணொலி***
***முழங்கினசங்கொடுபுரவிமுற்றுற***
***முழங்கினஅரக்கர்தம் முகிலின் ஆர்ப்பரோ***

*கம்ப. ஆரணிய. 479*

பெரும்பணை - பெரிய போர்ப்பறைகளும், மூரி மால்கரி முழங்கின - வலிய பெரிய யானைகளும் ஆரவாரித்து அதிர்ந் தன, முழங்கினவரிசிலை முடுகு நாணொலி - கட்டமைந்த விற்களிலே பூட்டப்பட்ட நாண்கள் ஒலித்து அதிர்ந்தன. முழங் கினசங்கொடுபுரவி - சங்கின் ஒலிகளும், குதிரைகளின் ஆர வாரிப்பும் முழங்கின, முற்றுறமுழங்கினஅரக்கர்தம் முகிலின் ஆர்ப்பரோ - அரக்கர்களின் கர்ச்சனைமேகத்தின் இடிபோல எங்கும் முழங்கின. இவ்வாறு பெரும் ஆரவாரத்துடன் அரக்கர் படைமேலும் அங்குவந்து இராமனைச் சூழ்ந்ததைக் கம்பர் தம் இனிய செய்யுளால் கூறிவைத்துள்ளார். இச்செய்யுளில் முழங்கின என்ற சொல் நான்கு அடிகளிலும் திரும்பத் திரும்ப வருவது சொற்பொருட் பின்வருநிலையணி என்னும் அணிநய மாகும். இவ்வாறு வந்து சூழ்ந்த அரக்கர் படைக்கு திரிசிரா என்பவன் தலைவனாக இருந்தான். அவனைப் பற்றிக் கம்பர் இவ்வாறு வருணனை செய்கிறார்.

***அத்தலைத் தானையன் அளவிலாற்றலன்***
***முத்தலைக் குரிசில் பொன்முடியன் முக்கணான்***
***கைத்தலைச் சூலமே அனையகாட்சியான்***
***வைத்தலைப் பகழியான் மழைசெய் வில்லினான்***

*கம்ப. ஆரணிய. 480*

அளவில் ஆற்றலன் - அளவில்லாத ஆற்றலை உடையவன், பொன்முடியன் - பொன்னாலான முடியைத் தரித்தவன், வைத் தலைப் பகழியான் மழைசெய் வில்லினான் - கூரிய நுனியை யுடைய அம்புகளைக்கொண்டு மழைபோலப் பொழிகின்ற வில்லினைக் கொண்டிருப்பவன், முத்தலைக் குரிசில் முக் கண்ணான் கைத்தலைச் சூலமே அனையகாட்சியான் - மூன்று கண் களையுடைய சிவபிரானது கையிலுள்ள சூலத் தைப்போல மூன்று தலைகளையுடைய திரிசிரா என்பவன் தான் அத்தலைத் தானையன் - சிறந்த அந்தப் படையின் தலைவனாக இருப்பவன் என்று அப்படையின் தலைவனின் ஆற்றலைக் கம்பர் வருணிக்கின்றார். மூன்று தலைகள் கொண்டவன் என்பதற்கும், அழித்தல் தொழிலைச் செய்கின் றவன் என்பதற்கும் சிவபெருமானது சூலத்தை உவமையாகக் கம்பர் காட்டியுள்ளார் எனக் கருதலாம். திரிசிரா என்பவனின் தலைமையில் வந்த அரக்கர் படையையும் இராமன் தனது வில்லாற்றலால் அழித்துவிடுகிறான்.

***கைக்கரிஅன்னவன் பகழிகண்டகர்***
***மெய்க்குலம் வேரொடும் துணித்துவீழ்த்தின***
***மைக்கருமனத்தொருவஞ்சன் மாண்பிலன்***
***பொய்க்கரி கூறியகடுஞ்சொல் போன்றவே***

*கம்ப. ஆரணிய. 491*

மாண்பிலன், மைக்கருமனத்தொருவஞ்சன் - பெருந்தன்மை இல்லாத, தீயமனத்தையுடைய வஞ்சகன் ஒருவன், பொய்க் கரி கூறியகடுஞ்சொல் போன்றவே - பொய்ச்சாட்சியாகச் சொன்ன கொடிய செற்களை ஒத்ததாக, கைக்கரி அன்னவன் பகழி - துதிக்கையையுடைய யானைகளைப் போன்ற இராம னது அம்புகள், கண்டகர் மெய்க்குலம் வேரொடும் துணித்து வீழ்த்தின - மிகக்கொடிய அரக்கர்களின் உடற்கூட்டங்களை அடியோடு அறுத்துத் தள்ளின.

பொய்ச்சாட்சி சொன்னவரது குலத்தை வேரோடு அறுத்தல் போல, இராமனது அம்புகள் அரக்கர் குலத்தை வேரோடு அறுத்துத் தள்ளின என்பது கம்பரின் புதிய சிந்தனையுடன் கூடிய உவமைச் சிறப்புகளுக்கு மேலுமொரு எடுத்துக்காட் டாகும். நீதிமன்றிலே பொய்ச்சாட்சி கூறப்படுவது எவ்வளவு தீமையானது என்பதையும், அது, பொய்ச்சாட்சி கூறியவரது குடியையே வேரோடு அறுத்துவிடும் என்பதையும் வலியுறுத் துவதற்காகக் கம்பர் இந்த உவமையைக் கையாண்டிருக் கின்றார். கம்பரின் இந்த நெறியைப் பின்பற்றியே பிற்கா லத்தில் ஔவையார், 'வேதாளம் சேருமே, வெள்ளெருக்குப் பூக்குமே, பாதாள மூலி படருமே, மூதேவி சென்றிருந்து வாழ்வளே, சேடன் குடிபுகுமே, மன்றோரம் சொன்னார் மனை' (நல்வழி 23) என்று பாடிவைத்தார். பொய்ச்சாட்சியால் குற்ற மற்ற ஒருவனுக்குத் தண்டனை கிடைத்துவிடலாம். ஆனால் அது பொய்ச்சாட்சி சொன்னவரின் குலத்தையே வேரோடு அறுத்துவிடும் என்பதைக் கம்பரும், அவரைத் தொடர்ந்து ஔவையாரும் அழகாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

திரிசிராவும் அவனது படையினரும் இராமனோடு நடத்திய போர்பற்றி 25 செய்யுள்களிலே கம்பர் வருணனை செய்கிறார்.

***ஆளிரண்டு நூறுஉளவெனஅந்தரத்துஒருவன்***
***மூளிரும் பெரும்மாயையின் செருமுயல்வானைத்***
***தாளிரண்டையும் இரண்டுவெங் கணைகளால் தடிந்து***
***தோளிரண்டையும் இரண்டுவெங் கணைகளால்***
***துணித்தான்***

*கம்ப. ஆரணிய. 501*

அந்தரத்து ஒருவன் - ஆகாயத்திலே ஒருவனாகத் தனியனாக நின்றுகொண்டே, மூள் இரும் பெரும் மாயையின் - மூண்டமி கப்பெரிய மாயையினால், ஆள் இரண்டு நூறு உளவென - அவன் இருநூறு பேர்கள்போலக் காட்டிக்கொண்டு, செருமு யல்வானை - போர்செய்கின்ற திரிசிரனை, தாள் இரண்டையும் இரண்டுவெங் கணைகளால் தடிந்து - இராமன் அவனது கால்கள் இரண்டையும் கொடிய இரண்டு அம்புகளால் துண்டித்து, தோள் இரண்டையும் இரண்டுவெங் கணைகளால் துணித்தான் - அவனது இரண்டு தோள்களையும் கொடிய இரண்டு அம்புகளால் துண்டித்து வீழ்த்தினான்.

தான் ஒருவன் போரிடுவதே, இருநூறு பேர் போரிடுவதைப் போலத் தோன்றும்படி பெரும் மாயையால் கடும்போர் செய்த திரிசிரனை, இராமன் அந்த மாயையை ஒழித்து அவனது கைகளையும் கால்களையும் துண்டித்து வீழ்த்தினான். பின் னர் அவனது தலையையும் கொய்து அவனைக் கொன்று தீர்த்தான்.






***திரிசிராவெனும் சிகரம் மண்சேர்தலும் செறிந்த***
***நிருதர் ஓடினர், தூடணன் விலக்கவும் நில்லார்***
***பருதிவாளினர், கேடகத் தடக்கையர், பரந்த***
***குருதிநீரிடைவார்கழல் கொழுங்குடர் தொடக்க***

*கம்ப. ஆரணிய. 503*

திரிசிராவெனும் சிகரம் மண்சேர்தலும் - திரிசிரா என்னும் தமது படைத்தலைவனாகிய மலைச்சிகரம் சாய்ந்து தரை மேல் விழுந்த அளவிலேயே, பருதிவாளினர் கேட்கத் தடக் கையர் - சூரியன் போல் விளங்குகின்ற வாட்படையை உடை யவர்களும், கேடகம் என்னும் கருவியைப் பிடித்த பெரிய கைகளை உடையவர்களுமாகிய, செறிந்த நிருதர் - அடர்ந்து நின்ற அரக்கர்கள், தூடணன் விலக்கவும் நில்லார் ஓடினர் - தூடணன் என்கின்ற படைத்தலைவன் ஓடாதீர்கள் நில்லுங் கள் என்று சொல்லவும் கேட்காமல் ஓடினார்கள். பரந்த குருதி நீரிடை, வார்கழல் கொழுங்குடர் தொடக்க - அவர்களில் சில ருடைய நீண்ட கால்கள் பரவியிருந்த குருதி வெள்ளத்திலே கிடந்த குடல்களிலே மாட்டிக்கொள்ளவும் அவற்றையும் இழுத்தபடி ஓடிக்கொண்டிருந்தார்கள். போரிலே எதிர்த்து நிற் கமாட்டாமல் அச்சத்துடன் போகின்ற நிலையிலும், அவர்கள் விரைந்து ஓடமுடியாதபடி ஊழ்வினை தடுத்ததாகக் கம்பர் குறியீடாகக் காட்டியிருப்பதுபோல் கொழுங்குடர் தொடக்க ஓடினார்கள் என்னும் தொடர் அமைந்துள்ளது.

தூடணன் என்பவன் கரனின் உடன் பிறந்தவன். ஓடுகின்ற திரி சிராவினது படைவீரர்களைத் தேற்றி அவர்களுக்கு அவன் வீரத்தை ஊட்டி அழைப்பதை 6 செய்யுள்களில் கம்பர் கூறி யிருக்கிறார். அவற்றில் ஒன்று:

***ஏக்கம் இங்கிதன் மேலுமுண் டோஇகல்மனிதன்***
***ஆக்கும் வெஞ்சமத்துஆண்மைஅவ்வமரர்க்கும்***
***அரிதாத்***
***தாக்கஅரும்புயத்துஉங்குலத் தலைமகன் தங்கை***
***மூக்கொடுஅன்றியும் முதுகொடும் போம்;பழிமு***
***யன்றீர்***

*கம்ப. ஆரணிய. 513*

இகல்மனிதன் - பகைமையுடைய இந்த மனிதனொருவன், ஆக்கும் வெஞ்சமத்துஆண்மை - செய்கின்ற கொடிய போர்த் திறமை, அவ்வமரர்க்கும் அரிதா - இந்திரன் முதலியதேவர்க் கும் அரிதானதா ? தாக்கஅரும்புயத்து - எவராலும் எதிர்த்துத் தாக்கமுடியாத தோள்வலிமையை உடைய, உங்குலத் தலை மகன் தங்கை - உங்கள் குலத்துத் தலைமகனாகிய இரா வணனது தங்கை சூர்பணகை, மூக்கொடுஅன்றியும் - மூக்கு அறுபட்டுப்போனதால் வந்த இழிவுமாத்திரமன்றி, முதுகொடும் போம் பழிமுயன்றீர் - நீங்கள் முதுகுகாட்டி ஓடுவதனாலும் உண்டாகும் பழிப்பையும் ஏற்படுத்தத் தொடங்கிவிட்டீர்கள், ஏக்கம் இங்கு இதன் மேலுமுண்டோ - இதற்குமேலும் இரங் கத்தக்க செயல் வேறு இருக்கிறதா ? என்று கேட்கிறான்.

இந்திரன் போன்றதேவர்கள் எதிரிலேயே பின்வாங்காத நீங் கள், இந்தனிமனிதனின் எதிரிலே பின்வாங்குகின்றீர்களே. தேவர்களுக்கும் இல்லாத போர்த்திறன் இம்மனிதனுக்கு என்ன இருக்கிறது ? எவராலும் எதிர்கொள்ளமுடியாத தோள் வலிமையுடையஉங்கள் தலைவனின் தங்கை அடைந்த இழி வைப் போர்செய்து பகைவனை அழித்துப்போக்கவேண்டி யதாய் இருக்க, அந்த அவமானத்தோடு நீங்களும் புறங் கொடுத்து ஓடுகின்ற அவமானத்தை மேலும் உண்டாக்குகின் றீர்களே என்று அவர்களுக்கு வீரத்தை ஊட்டுகிறான். தங்கை மூக்கொடு அன்றியும் முதுகொடும் போம் பழிமுயன்றீர் என்னும் சொற்றொடர் கம்பரின் பொருள்பொதிந்த சொல் லாட்சிக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

திரும்பிவந்த வீரர்களையும் சேர்த்துக்கொண்டு தனது வீரர்க ளுடன் சேர்ந்து தூடணன் இராமனை எதிர்த்துப் கடும்போர் புரிகிறான். அதனை 14 செய்யுள்களிலே கம்பர் வருணித்தி ருக்கின்றார். இராமனது கணையினால் தூடணனும் கொல்லப் படுகிறான்.

***தேவர் ஆர்த்தெழமுனிவர்கள் திசைதொறும் சிலம்பும்***
***ஓவில்வாழ்த்தொலிகார்க்கடல் முழக்கெனஓங்கக்***
***காவடாவிதுவல்லையேல் நீயெனக் கணையொன்று***
***ஏவினானவன் எயிறுடைநெடுந்தலை இழந்தான்***

*கம்ப. ஆரணிய. 528*

தேவர் ஆர்த்தெழ - தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரிக்கவும், முனிவர்கள் திசைதொறும் சிலம்பும் ஒவில் வாழ்த்தொலி - முனிவர்கள் எல்லாத் திசைகளிலும் நின்று ஆரவாரித்துக் கூறுகின்ற ஒழிவில்லாத வாழ்த்தொலி, கார்க்கடல் முழக்கெனஓங்கக் - கரியகடலின் அலைமுழக்கம்போல ஓங்கி ஒலிக்கவும், காவடா இது வல்லையேல் நீயென- 'நீவல்லவனானால் இந்த அம்பிலிருந்து உன்னைக் காத்துக்கொள்ளடா' என்று சொல்லிக்கொண்டு, கணையொன்று ஏவினான் அவன் எயிறுடைநெடுந்தலை இழந்தான் - இராமன் ஓர் அம்பைத் தொடுத்தான். அத்தூடணனின் கோரத் தந்தங்களுடைய தலை துண்டிக்கப்பட்டு அவன் வீழ்ந்து இறந்தான்.

தன்தம்பி தூடணன் இறந்துபட்டதையும், அரக்கர் படை சிதைந்து சிதறியதையும் அறிந்த கரன் வெகுண்டெழுந்தான். கரன் கொண்டுவந்த அரக்கர் படை இராமனைச் சூழ்ந்து மீண்டும் போரிடத் தொடங்குகின்றது. வாள் முதலிய படைக்கலங்களுடன் எதிர்நின்ற அரக்கர் தொகுதியை இராமன் தனது அம்புத்தொகுதியால் அழிக்கிறான்.

***கடுங்கரன் எனப்பெயர் படைத்தகழல்வீரன்***<br>
***அடங்கலும் அரக்கர் அழிவுற்றிடஅழன்றான்***<br>
***ஒடுங்கல்இல் நிணக்குருதிஓதமதில் உள்ளான்***<br>
***நெடுங்கடலில் மந்தரமெனத்தமியன் நின்றான்***

*கம்ப. ஆரணிய. 530*

அடங்கலும் அரக்கர் அழிவுற்றிடஅழன்றான் - அரக்கர் முற்றிலும் அழிவடைய சினமடைடைந்தவனாய், ஒடுங்கல்இல் - மேன்மேலும் அதிகரிக்கின்ற, நிணக்குருதிஓதம் அதில் உள்ளான் - நிணக்குருதிவெள்ளத்தில் உள்ளவனான, கடுங்கரன் எனப்பெயர் படைத்தகழல்வீரன் - கொடிய கரன் எனப் பெயரைக்கொண்ட வீரக்கழலையுடையவன், நெடுங்கடலில் மந்தரம் எனத் தமியன் நின்றான் - பெரிய கடலினிடையே மந்தர மலைபோலத் தன்னந்தனியனாக நின்றான்.

அரக்கர் படைமுற்றாக அழிந்துபோக, குருதி வெள்ளத்தின் நடுவே கரன் நிற்பதை, பாற்கடலிலே மத்தாக எழுந்த மந்தர மலைபோல அவன் நின்றான் என்னும் கம்பரின் உவமை நயம்மிக்கது. கரன் தனியனாக நின்று இராமனுடன் கடும் போர் புரிகின்றான். அந்தப் போரின் உக்கிரத்தைக் கம்பர் அழகிய பல செய்யுள்களில் வடித்திருக்கிறார்.

***தீஉருவகால்விசையசெவ்வியனவெவ்வாய்***<br>
***ஆயிரம் வடிக்கணைஅரக்கர்பதிஎய்தான்***<br>
***தீஉருவகால்விசையசெவ்வியனவெவ்வாய்***<br>
***ஆயிரம் வடிக்கணை இராமனும் அறுத்தான்***

*கம்ப. ஆரணிய. 539*

தீஉருவகால்விசையசெவ்வியனவெவ்வாய் - நெருப்பைப் போன்ற கொடிய வடிவை உடையவையும், காற்றுப்போன்ற வேகமுள்ளவையுமான செம்மையாக ஆக்கப்பட்டவையுமான, ஆயிரம் வடிக்கணை அரக்கர் பதிஎய்தான் - கொடியவாயையும், கூர்மையையும் உடைய ஆயிரம் அம்புகளை அரக்கர் தலைவனாகிய கரன் இராமன் மேல் எய்தான். தீ உருவகால் விசைய செவ்வியனவெவ்வாய் ஆயிரம் வடிக்கணை இராமனும் அறுத்தான் - அதே தன்மையுடைய ஆயிரம் அம்புகளை இராமனும் கரன்மேல் எய்தான்.



முன்னிரண்டு அடிகளிலுமுள்ள ஒரே சொற்றொடர் பின்னிரண்டு அடிகளிலும் வரக்கூடியதாகக் கம்பர் இயற்றியிருப்பது, 'கூறியது கூறல்' என்னும் குற்றத்துக்கு உட்படாது. இதிலே ஒரு சிறப்பு இருக்கிறது. போரிட்ட இருவரும் ஒருவருக்கொருவர் சரிநிகராகப் போரிட்டுக் கொண்டிருந்தார்கள் என்று கூறுகின்ற உத்தியாக அதனைக் காட்டியிருக்கும் கம்பரின் கவித்திறனை இதில் காண்கிறோம்.

ஒரேயொரு வில்லால் கரனை முடித்துவிடுகிறேன் என்று இராமன் வில்லை வளைக்கிறான். அப்போது யாரும் எதிர்பாராத வகையில் பேரோசையுடன் அவனது வில் முறிந்துவிழுகிறது. அடுத்த வினாடிக்குள் இராமன் தனது கையைப் பின்னே நீட்ட அவனது கையில் பரசுராமனிடமிருந்து பெற்று, இராமனால் வருணனிடம் கொடுக்கப்பட்ட திருமாலின் வில் வருணனால் அவனது கையில் கொடுக்கப்படுகிறது. தொடர்ந்து இருவருக்கிடையேயும் உக்கிரமான போர் நடக்கிறது. இறுதியில் இராமனின் கணையால் தோள்களும், தலையும் அறுபட்டுக் கரன் கொலையுண்டு போகிறான். கரன் இறந்து கிடந்த இடத்துக்கு வந்த சூர்ப்பணகை தனது வயிற்றில் அடித்தபடி, கரனின் உடலைத் தழுவி இரத்த வெள்ளத்திலே விழுந்து புரண்டு அழுகிறாள்.

***ஆக்கினேன்மனத் தாசையவ் வாசையென்***<br>
***மூக்கினோடுஒழியமுடித்திலேன்***<br>
***வாக்கினாலுங்கள் வாழ்வையும் நாளையும்***<br>
***போக்கினேன்கொடியேனென்றுபோயினாள்***

*கம்ப. ஆரணிய. 552*

ஆக்கினேன் மனத்தாசை - மனத்திலே இராமன் மீதான காதலை விளைவித்தேன், அவ்வாசை என்மூக்கினோடு ஒழியமுடித்திலேன் - அந்த ஆசையை எனது மூக்கு அறுபட்டதோடு மட்டும் ஒழிந்துபோகும்படி நான் முடித்துவிடவில்லை. வாக்கினால் உங்கள் வாழ்வையும் நாளையும் போக்கினேன் - அவ்வளவில் இறந்துபடாத நான் எனது வாய்மொழியால் உங்களுடைய வாழ்க்கையையும், வாழ்நாளையும் ஒழித்தேன். கொடியேனென்று போயினாள் - நான் மிகக் கொடியவளானேன் என்று சொல்லித் தன்னை நொந்தவண்ணம் சூர்ப்பணகை அங்கிருந்து போகிறாள். அவள் எங்கே போகிறாள், அடுத்து என்ன நிகழப்போகின்றது என்பவற்றை மாரீசன் வதைப்படலத்தில் கம்பனின் கவிநயத்தோடு சுவைத்து அறிய அடுத்த இதழ்வரை பொறுத்திருப்போம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 122

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-122 வினா

### இடமிருந்து வலம்

1 தாவரங்கள்
6 தன்பாட்டில் செல்லும் வாகனம்
7 தாழ்மை
8 ஒரு வாயளவு உணவு
9 கண்டிப்புடன் கூறு
11 துணை
12 அருச்சுனன் அம்பெய்து அக்கினிக்கு இரையாக்கிய இந்திரனது காடு
13 ஆக்கம்
15 ஒரு காப்பியம்
16 இலக்கு

### மேலிருந்து கீழ்

1 நியூ யோர்க் மாநகராதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்
2 நிருபர்
3 பெருங்களவு
4 ஒழுங்கின்றி
5 பெரும்பறை
8 வட இலங்கையில் பழைமை வாய்ந்த பௌத்த தலம்
9 வட இலங்கையில் ஓர் இடம்
10 ஒரு பண்
13 மூங்கில்
14 நுழை

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-121-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 ஆ | ■ | ■ | 2 மோ | ■ | 3 க | ■ | 4 வி | டை |
| ■ | 5 க | ந் | த | ர் | பி | ச் | சை | ■ | ■ |
| ■ | க | ■ | ■ | ■ | ■ | சா | ■ | ■ | 6 சி |
| 7 கா | வி | ய | 8 நா | ய | 9 க | ன் | ■ | 10 ஊ | று |
| ■ | ■ | ■ | ள | ■ | ரு | ■ | 11 அ | ■ | த் |
| ■ | 12 ஆ | ■ | ங் | ■ | 13 வி | ல் | வி | த் | தை |
| 14 ப | ழி | வா | ங் | கு | ■ | ■ | சா | ■ | ■ |
| கு | ■ | ■ | கா | ■ | ■ | 15 கா | வ | ல | ர் |
| த் | ■ | 16 அ | டி | மை | த் | த | னை | ■ | ■ |
| 17 து | ணை | ■ | ■ | ■ | ■ | ம் | ■ | 18 கோ | ரை |

## தமிழ்வலை-121 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்
மேரி கெலன் தேவதாஸ்,நோத்யோர்க்.
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ.
கனகராஜா சிவகுரு, வவுனியா.
இராசாத்தி தேவதாஸ், ரொறன்ரோ.
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

**உமா கதிர்,**
**ஏஜக்ஸ்.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# முளையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை - 10




**மா.சித்திவினாயகம்**

இராமேஸ்வரத்தில் நம்பிக்கைதரும் பொழுதாக அந்தப் பொழுது கணே சனுக்கும், செம்பகத்திற்கும் அமைய வில்லை. கண்ணெதிரே காய்ந்து வெடித்த அந்த நிலத்தினுள்ளும் ஒரு புழுவையெடுத்து நம்பிக்கையோடு தன் குஞ்சிற்கு ஊட்டிக்கொண்டிருந்தது ஒரு சிட்டு.

வரண்டு கபாளமாய் வெடித்த பூமியில் மீண்டும் மழை பெய்து பயிர் விளையுமென விதை நெல் எடுத்து வைக்கிற நம்பிக்கைக்கா பஞ்சம். நம்பிக்கை தானே வாழ்க்கை.

இத்தகு நம்பிக்கை பூத்த அன்றைய நாட்களில்தான் தெருத்தெருவாகப் பிணங்கள் குவிந்தன. ஒவ்வொருவர் வீட்டின் முன்வாசலிலும் யாருடையதோ பிணம் எரிந்து கொண்டிருந்தது. வாந்தியும், இருமலும் கொடுந் தொற்று நோயாக ஊரெல்லாம் பரவியது. பட்டி னியோடு பரிதவித்துக் கிடந்த மக்களை இந்த நோய் மேலும் மேலும் படாதபாடு படுத்தியது. இந்த நோய்க்கு எங்கும் மருந்தில்லை. உள்ளூர்ப் பரியாரிகள் யாவரும் மனிதருக்குக் கிட்டே வரவே அஞ்சினர். கோவில்களில் மனிதர் தவங்கிடந்து செத்தனர். எல்லாக் கடவுளும் கைவிட்ட வேளை, பிணங்களை வைக்கப் பெட்டி செய்வது யார் ? துணிகளில் சுற்றி இழுத்துச் சென்று எரித்தனர். இழுத்தவர்களுக்கே அந்நோய் தொற்றி அதிலேயே விழுந்து இறந்தனர் பலர். தெருவிலேயே ஓலைகளைப் போட்டுத் தெருநாயை எரிப்பது போலப் பலரையும் கொழுத்தினர்.

மானிட வாழ்வானது அனைத்தும் வீண் என்கிற கொடூரத்தின் காலம். கணேசனுடன் கூட வந்தவன் நெடுங்கிடையாய் வீழ்ந்து கிடந்தான். அவனிற்கு மூச்சிருக்கின்றதா என்று தொட்டுப் பார்க்கக்கூட பயம் விடுவதாயில்லை. அவனிலிருந்து நோய்க் கிருமி தொற்றி விட்டால்... அவனைப் பார்த்தும், பார்க்காதது போல போகின்ற கணேசனது இதயத்திலும் நெஞ்சிலும் மனச்சாட்சி சம்மட்டிகொண்டு அடித்தது. யாரோ பலமாகக் கன்னத்தில் அறைந்தது போல் ஓர் உணர்வு கணேசனுக்கு.

சக மனிதர்கள், நண்பர்கள், உறவினர்கள் மரணிக்கின் றார்களே என்பதைவிடவும், தாங்கள் அந்த மரணத்தின் கொடுமையிலிருந்து தப்ப வேண்டும் என்கிற சுயநல உணர்வே அங்கு அனைவரையும் பற்றிக்கொண்டது. குடும் பம் குடும்பமாகக் கண்ணெதிரே காவு கொண்டு போனது அந்தக் கொடூர நோய்.

தாயை, தந்தையைத் தொடாமலேயே எரித்து நிற்கிற பிள்ளைகள், நோய் பட்டிறந்த பிள்ளைகளை எரியாமலேயே விட்டு வந்த பெற்றோரெனக் கறை படிந்த உலகத்தின் காட் சியாகவும், சாட்சியாகவும் அந்தத் தாது வருடப் பஞ்ச நாட்கள் இருந்தன.

கணேசன் கலக்கமுற்றவனாய் நண்பன் உடலைப் பார்த்தும் பார்க்காதவாறு வெளியே வந்து உட்கார்ந்துகொண்டான். இவன் வெளியே வந்த சில நிமிடங்களுக்குள்ளாகவே அவனது உடலை ஓலைகளைப் போட்டுக் கொழுத்தி எரித் தார்கள். உயிரிருந்ததா என்பதைக்கூட திட்டவட்டமாகச் சொல்ல முடியாப் பொழுது அது.

ஊர்வலம் இல்லை. தெருத்தான் சுடலை. இரத்த வெடிலும் பிண வாடையும் ஓயாக் கதறலும்தான் இந்த மண்ணின் விதி யாகிவிடுமோ? இயற்கை பழி தீர்க்கிற இந்த வாழ்வு இப்பு வியில் இன்னும் எத்தனை காலம் நீடிக்கப் போகிறது. உண்மையில் இது இயற்கையாய் வந்ததா? ஏகாதிபத்திய கொடூரர்கள் ஏற்படுத்திய பஞ்சமும் நோயுமா? எவருக்கும் விடை தெரியாதிருந்தது. இப்போ தமிழகத்தில் வந்த இந்தப் பேரிடர் போல் இதை விடவும் கொடியதாக உலகத்தை பெரு நோயாலும், பஞ்சத்தாலும் அச்சுறுத்தி அழிய வைத்தது 'உருளைக்கிழங்கு இனப்படுகொலை'.

இந்த உலகின் பெரும் பஞ்சமாக அயர்லாந்து தேசத்தை 1845-ஆம் ஆண்டை அண்டிய நாட்களில் மரணக்குழியில் தள்ளிய கொடூரம் அது. ஏறத்தாழ ஒரு மில்லியன் மக்கள் பட் டினியாலும் நோயாலும் செத்தொழிந்தனர். கண்ணிற்கு முன் னால் சக மனிதர் அழிகின்ற கொடூரத்திற்குப் பயந்து கலங்கி, அங்கிருந்து பல மில்லியன் மக்கள் வேறு நாடு களுக்குத் தப்பியோடினர். சென்ற திசையெங்கும் அவர்கள் செத்து மடிந்தார்கள். ஐரிஸ் மக்கள் தொகையில் கால் வாசிக்கு மேல் தின்று தீர்த்த இந்த நோயும் பஞ்சமும் இயற்கை யால் வந்தது போலக் காணப்பட்டாலும் பிரித்தானிய மேலா திக்கச் சூழ்ச்சி வலையென்றே அன்று மக்கள் பேசிக்கொண் டார்கள். இந்தியா மற்றும் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இந்த நோயும், பஞ்சமும் அதே போன்று வெள்ளையர்கள் ஏற் படுத்திய பஞ்சமாகத்தானிருக்கும். நோய் கொடுத்தழித்து அதிலிருந்து மீட்டெடுப்பதாய் வரலாறு எழுதும் நாடகமாடத் தெரிந்தவர்கள் வெள்ளையர்கள். ஐரிஸ் பஞ்சமென்றும், பெரும் பசி என்றும் வர்ணிக்கப்பட்ட அந்த வரலாற்றை எந்த அயர்லாந்து மனிதனும் இன்று பேச விரும்பமாட்டான். அழிக் கப்பட்ட வரலாறு அது.

தம் வரலாறே உலகவரலாறென எழுதிக்கொண்டிருந்த பிரித் தானிய சாம்ராட்சியத்திற்கெதிராக எவனும் வாய் திறக்க முடியாதே.

வர்ணாச்சிரமத்தால், சாதியாய்ப் பிரித்தெறிந்து சாகும் வரை யிலும் சாதிப் பிறழ்வோடு மாரடிக்கும் இந்த மனிதர்கள் பஞ் சத்தாலும், நோயாலும் மேலும் சிறகொடிந்து அங்கு மாண்டு கொண்டிருந்தார்கள்.

மீசை மயிரும், முன்தலையும் வழித்துப் பின்கொண்டை போட்டுப் பூணூல் தரித்த பார்ப்பன வேலுப்பிள்ளைதான் அவ்வூரில் கம்பீரமாக கைவிசுக்கி நடப்பவர். அவர்தான் இராமேஸ்வரத்து மூப்பர். மூத்த பிராமணர். காலங்காலமாக அவர் சொன்னால் ஊரார்க்கு அதுதான் வேதவாக்கு.

தன் முதுகைச் சால்வையால் சுற்றியபடியே மெதுவாக நடந்து வந்தார். அவரைத் தொடர்ந்து முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் நம்பிக்கையற்ற கண்களோடு பலரும் பின் தொடர்ந்தார்கள். தெருவோரங்களில் கலங்கிய மக்கள் கண் ணீரோடும், பசித்த பெரு வயிற்றோடும் அதைப் பார்த்த வண் ணம் நின்றிருந்தார்கள். ஆலமரத்தின் கீழேயுள்ள வட்டக்கல் இருக்கையில்தான் அக்காலக் கிராமப் பஞ்சாயத்து நடக் கும். அந்த வட்டக்கல்லில் அவர் வந்து அமர்ந்தார். அருகில் நின்ற மக்களைப் பார்த்து,

'ஏன் மக்களே இன்று நாம் நம் தெருவில் செத்தொழிந்து அழிகிற காரணமென்ன? நோயும் பசி பட்டினியும் எம்மை வாட்டும் கொடூரமென்ன? எதனால் இது நடக்கிறது? எத னால் மனிதர்கள் சாகின்றார்கள்? நீங்கள் சிந்திப்பதுண்டா?

எல்லாம் தெய்வக் குற்றந்தான். தெய்வத்திற்குப் படையல் வைத்தால் தரித்திரம் தானே விலகியோடும். பூணூலை உருட்டி உருட்டி அதைச் சரி பண்ணினார். உருத்திராட்ச மாலையின் நடுவே பூட்டிய முத்துக்கள் சூரிய ஒளியில் பளப ளத்தது.

ஊருக்குள் இத்துணை பட்டினியிலும், நோயிலும் அவ ருக்கோ சற்றும் தளராத பளபளத்த தேகம்.

தொலைவிலிருந்த மக்கள் கூட்டம் ஆவலோடு அவரை நெருங்கி வந்தது. தெய்வத்திற்குப் படையல் வைத்தால் பட்டினி எவ்வாறு தொலையும், நோய் எவ்வாறு குறையும் என்று கேட்பார் அங்கு எவருமில்லை. கேள்விகேட்பது தெய்வக் குற்றமாகிவிடும் என்று அவர்கள் நம்பினார்கள். பார்ப்பான் வாக்கு தேவ வாக்கு. காலங்காலமாக அவர்கள் அப்படித்தான் நம்ப வைக்கப்பட்டிருந்தார்கள்.

மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம், பன்னீர், அத்தர், கற் பூரம், ஊதுபத்தி, எண்ணைய் திரிச்சீலை, முடித்தேங்காய், முடியற்ற தேங்காய், வாழையிலை, தயிர், நெய், தேன், கும் பத்திற்கு அரிசி, வெற்றிலை, எலுமிச்சம் பழம், பழங்கள், குடம், பெரிய கத்தி, சிறிய கத்தி, குத்துவிளக்கு, நல் லெண்ணெய், வேஸ்டி சால்வை, ஐயர் அம்மாவிற்கு சேலை, அரிசி, காய்கறி, பருப்பு, உப்பு, புளி, உட்காரப் பாய், கறுப்பு எள்ளு, இஞ்சி, அரிசி மா, தானத்திற்கு ஆடு, மாட்டுக்கன்று விரும்பினால் கோழி மூச்சிரைக்க அவர் பட்டியல் நீண்டது. பட்டியல் பொருள்கள் அவருக்கானது. அவற்றை வேண்டும் பொறுப்பு அப்பாவி மக்களிற்கானது. மணி ஆட்டுவது அவர் வேலை. அதற்காக மகிழ்ந்து கூலி கொடுப்பது மக்களின் கடமை.

இந்தியாவில் இருக்கிற வெள்ளையப் பிரித்தானியப் பிரதி நிதி போல இந்தப் பார்ப்பனன் இங்கு கடவுள் பிரதிநிதி.

நோயிலும், பட்டினியிலும் கிடந்த அந்த மக்கள் விழி பிதுங்க முழித்தார்கள்.

ஊரே பட்டினியால் தவிக்கிறது பார்ப்பான் எழுதிய பொருட் களை எங்கிருந்து எடுப்பது? அப்படி எடுக்காவிட்டால் அது தெய்வ குற்றம்!

ஐயர் குடும்பியை சரி செய்தவாறே ஆளுக்காள் உதவினால் அத்தனையும் அம்மன் கொடுப்பா. கை, காதிலுள்ளவற் றைக் கொண்டு அம்மன் கோவிலிற்கு நாளை வாருங்கள். ஹோமம் வளர்ப்போம், யாகமும் வேள்வியும் செய்வோம் தரித்திரம் தானே விலகும் வரம் தருவாள் அம்மன் என்றார் பிராமணர். ஊர் மக்கள் நம்பினார்கள்.

நம்பிக்கைதான் வாழ்க்கை என்கின்ற தத்துவம் எதை நம்பு வது, எதை விடுவது என்று இந்த மக்களுக்கு இன்னமும் கற் பித்துக் கொடுக்கவில்லை.

எந்தக் கண்ணகி அம்மன், தன் முலை திருகி எறிந்து இந்தக் கொடிய மனிதர்களின் கொடூரங்களுக்கெதிராகச் சபித் தாளோ அந்த அம்மனுக்கே பூசை செய்கின்றோமென்ற பெயரில் அதே கொடியவர்கள் இந்த ஊரை, அப்பாவி மக்களை ஏமாற்றி, வருத்தி தங்கள் வயிற்றினை வளர்க்க சுயநலப் படையல் செய்வதை தடுப்பது யார்? அநீதி கண்டு மார்பு திருகி எறிந்த அம்மன்கள் எல்லாம் இன்று எங்கே?

ஆண்டுகளும், மாதங்களும், நாட்களும் மக்களுக்கானதென் பார்கள். ஆனால் அந்த ஆண்டுகளையும், மாதங்களையும் ஏன் நிமிடங்களையும்கூடத் தமக்காக்கி வைத்துக்கொண்டு அதன் விநியோகஸ்தர்களாக இருப்பவர்கள் பார்ப்பனர்கள்.

வளரும் தேயும் என்று சூரியனையும், சந்திரனையும் வைத்து அவர்கள் விட்ட புரளி இன்றைக்கும் அவர்களுக்குப் பண வருவாய் தருகின்ற தொழில்.

ஆண்டின் மொத்த நாட்களுக்கும் அவனே சொந்தக்காரன். அவனிடமிருந்துதான் நல்ல நாட்களை நாம் பெறவேண்டும். எமகுண்டம், குளிகை, இராகு காலம், அஷ்டமி, நவமி, என் றெல்லாம் கல்யாணத்திற்கு, பிள்ளை பிறக்க, காது குத்த, நிலம் வாங்க, வீடு கட்ட, வாகனமோட்ட ஏன் கேவலம் முத லிரவிற்குக்கூட எந்த நேரம் சூத்திரன் புணர வேண்டுமென அவனிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்ள வைத்தி ருக்கிற சாணக்கியம் பார்பனருடையது. சூத்திரன் பிறக்கும் நேரத்திற்கும், இறக்கும் நேரத்திற்கும் உத்தரவாதம் கொடுப் பவன் பார்ப்பனன்தான்.

பரணியில் பிறந்த ஆண் தரணியாள்வான் என்றும் மூலத்தில் பிறந்த பெண் குடும்பத்தை நிர்மூலமாக்குவாள் என்றும் பெண்ணைக் கீழ்மையாக்கி எழுதியுள்ள பார்ப்பனக் கணக் கில் ஆணிற்கும் பெண்ணிற்கும் தீராப்பகை. பார்ப்பன ருக்கோ அத்தனை அமாவாசைகளும், நிர்மூலங்களும், செவ்வாய் குற்றங்களும் அவர்களின் பூசைக்குக் கட்டுப் படும் என்று சூத்திரனை ஏமாற்றுவதை சூத்திரனே கொண் டாடி மகிழ்ந்தான். அதை இன்றைக்கும் நம்பிக் கெடுகின் றார்கள் இந்த அறிவிலி ஜடங்கள்.

மனித குலத்தின் நலமிக்க நிலையான இருப்பு என்பது மனித சமுதாயம் நீதியானதாயும், சமத்துவமானதாயும் சகமனி தனை மதித்துச், சிந்திக்கின்றபோதே அமையும். மதங்கள் எப்போதுமே ஆதிக்கச் சமூகத்தின் சுரண்டல்தான். மனிதரின் அன்றாட வாழ்விலும், பண்பாட்டிலும் மத நம்பிக்கைகளும், மதஞ்சார்ந்த சடங்குகளும் நித்தம் மனித உணர்விற்குள் விச ஊசிகளாகத் திணிக்கப்படுகின்றன. இது அனைத்து மதத் திற்கும் பொருந்தும்.

ஆலயங்கள் பெருமளவில் வட்டிக்கடையாக, நில உடமை யாக, பொற்களஞ்சியமாக, ஆதிக்கத்தின் அதிகார பீடமாக விளங்குகின்றது. திருட்டு, சுரண்டல், ஒழுக்கக்கேடு, போலிச் சான்று காட்டுதல், கோவில் சொத்தைக் கொள்ளையடித்தல், ஏமாற்றுதல் முதலான மோசடி ஊழல்களின் மொத்த உரு வங்களாக விளங்கிய பார்ப்பனர்களைப் போலவே மற்றைய மத அயோக்கியக் குருமாரும் மனிதர்களைச் சாக்காட்டு கின்ற நோயிலும், பட்டினியிலும் தமக்குப் படையல் வேண்டு மென்பவர்கள்தான்.

பிராமணருக்குத் தெரியாமல் அந்த ஊரில் ஒரு ஈ காக்கா கூட வராத ஊர்களாகத்தான் தென்னிந்திய ஊர்கள் அன்றி ருந்தன. இராமேஸ்வரத்தில் கூடி நிற்கிற மக்களில் பெரும் பாலோர் இராமேஸ்வர ஊரைச் சார்ந்தவர்களல்ல. அவர் களில் பலரும் அழுத கண்ணீரோடு தமிழகத்தின் எல்லாப் பாகங்களிலும் இருந்து வறுமையைப் போக்க புலம்பெ யர்ந்து செல்லுவதே ஒரேவழி என வந்த அப்பாவிகள்.

திருச்சி மாவட்டத்திலிருந்து 150 மைல் வரை கால்கடுக்க நடந்து வந்தவர்கள்கூட அதில் இருந்தார்கள். முலை வரிக்குத் தப்பி கேரளமிருந்து கன்யாகுமரியூடாக தப்பிவந்த கணேசன் செம்பகம் போன்ற பலர் இருந்தார்கள். அவர்கள் இப்போ பஞ்சத்திற்கும், நோய்க்கும் தப்ப முடியாதவர்களாக இங்கு சிக்கிக்கொண்டார்கள்.

கேரளாவின் சேர்த்தலையில் வாழ்ந்த நங்கேலி முலை வரிக் கெதிராக மூட்டிய பேரெதிர்ப்பில் தன்னிடம் வரிகேட்ட பார்ப் பனர்களின் முன்னால் தனது மார்பகங்களை வெட்டி எறிந் தாள். வீடு திரும்பிய கணவன் சிறுகண்டன், இரத்த வெள் ளத்தில் இறந்து கிடந்த மனைவி நங்கேலியைக் கண்டு அலறினார், துடித்தார். மறுநாள், மனைவியின் சிதைக்குத் தீமூட்டி, அதில் பாய்ந்து தன்னையும் மாய்த்துக்கொண்டதை கண்ணுற்று வந்தவர்கள் கணேசனும் செம்பகமும். ஓர் ஆண் உடன்கட்டை ஏறிய முதன்மைச் சம்பவம் அது. அவ்வாறான வீர வரலாறுகள் இங்கு பேசப்படுவதும், எழுதப்படுவது மில்லை. முலையறுத்தெறிந்து நங்கேலி இறந்த நாள் இந்தி யாவின் அடிமைகளும் புரட்சி செய்வார்கள் என்பதை பூமிக் குணர்த்திய நாள்.

கேரளத்தில் அவளின் சாவிற்குப் பின்னால்தான் தோள் சீலைப் போராட்டம் பெருங்கிளர்ச்சியாக அங்கு நடை பெற்றது. அந்தக் கொடூரங்களிலிருந்து தப்பித்து எப்படி யாவது அந்த ஊரை விட்டு வெளியேறி இந்த நாட்டை விட்டு இலங்கை போய்விட வேண்டும் என்று இராமேஸ்வரத்திற்கு வந்த செம்பகத்தையும், கணேசனையும் இந்த தாது வருடப் பஞ்சம் அலைக்கழித்தது.

இவர்கள் எல்லோரும் இராமேஸ்வரமிருந்து கப்பலின் மூலம் 30 மைல் இந்துக் கடலைக் கடந்து தலைமன்னார் செல்லத் துணிந்து வந்திருந்தார்கள். இவர்களை ஆசைகாட்டி கண் டிச் சீமையில் தேனும் பாலும் ஓடுவதாகவும், இவர்களுக் கென்று பெருவாழ்வு அங்கிருப்பதாகவும் கங்காணி இவர்க ளுக்கு ஆசை வார்த்தை சொல்லி மயக்கியிருந்தான். பஞ் சத்துள் இருந்த மக்கள் அவனை நம்பினார்கள். தலை மன்னார் சென்ற பின் அங்கிருந்து 140 மைல் தூரம் அடர்ந்த கானகத்துள் கொசுக்கடியிலும், பாம்புக் கடியிலும், அட் டைக் கடியிலும், புகையிரதப் பாதையமைப்பதிலும் இந்தத் தொழிலாளிகள் உயிர் நீத்துவிடுவார்கள் என்று அந்தக் கங் காணி சொன்னவனல்ல. உண்மையில் தன் சொந்த வீட்டை, நாட்டைத் துறந்து கூலி அகதியாதல் என்பது பெருந்துயர்!

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

# இந்தியன் முகாம்



ஏணெஸ்ற் ஹெமிங்வே ■ தமிழில்: என்.கே.மகாலிங்கம்

(ஏணெஸ்ற் மில்லர் ஹேமிங்வே (1899-1961) புகழ்பெற்ற ஓர் அமெரிக்க எழுத்தாளர். ஓக் பாக், இல்லி நொயிசில் வசதியான குடும்பத்தில் பிறந்தவர். நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர், ஊடகவியலாளர். சுருக்கமான, குறைத்துக் கூறப்படும் நடைக்காக இருபதாம் நூற்றாண்டு எழுத்தாளர்கள் பலரில் செல் வாக்குச் செலுத்தியவர். அவருடைய சாகச வாழ்வாலும் ஆளுமையாலும் அவர் பலரை ஈர்த்தவர். வெளிப்டையாகப் பேசும் தன்மையாலும் மழுப்பல் இல்லாத பேச்சுக்காகவும் அவருக்கொரு பொதுப் படிமம் வாசகர் மத்தியில் இருந்தது. அவருடைய படைப்புகளில் இருந்த தீவிரமான ஆண்மைத்தன் மையாலும் பெருமளவு பிரசுரமான வெளிப்படையான வாழ்க்கையாலும் எண்ணிக்கையற்ற வாசகர் களால் அவர் விரும்பப்பட்டார்.

ஆரம்பத்தில் அவர் அமெரிக்க இராணுவத்தில் சேருவதில் ஆர்வம் காட்டினார். கண் பிரச்சினையால் பலமுறை நிராகரிக்கப்பட்டார். இறுதியில் அமெரிக்கன் செஞ்சிலுவைச் சங்கத்தில் அம்புலன்ஸ் சாரதி யாகச் சேர்ந்து முதலாம் உலகப் போரில் இத்தாலியில் பங்குபற்றினார். அங்கே படுகாயம் உற்றார். அங்கே வீரதீரத்திற்காக அலங்கரிக்கப்பட்டார். ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளிநாட்டு நிருபராக பிரான்சில் சிறிது காலம் வேலை செய்தார். அப்பொழுதுதான் தீவிரமாக புனைகதைகளை எழுதிப் பிரசுரித்தார். 1926-இல் The Sun Also Rises என்ற நாவலை எழுதிப் பிரசுரித்தார். அது அவ ருக்குப் புகழைத் தேடித் தந்தது. பின் Farewell to Arms என்ற நாவலை எழுதினார். அது மேலும் புகழைத் தேடித் தந்தது. காளைச் சண்டையில் பெருவிருப்பம் கொண்டவர். அதோடு ஸ்பெயின் தேசத்திலும் பற்றுக் கொண்டவர். அதை வைத்து அவர் எழுதிய நாவல் Death in the Afternoon. தூண்டிலல் வீசி மீன் பிடிப்பதில் விருப்பம் கொண்டவர். அதற்காக ஃப்ளோரிடாவில் ஒரு வீடும், சொந்தமாக மீன்பிடி வள்ளமும் வாங்கினார். அப்போது கரிபியன் தீவிலிருந்த ஓர் அஞ்சாநெஞ்சனை வைத்து To Have and Have Not என்ற சிறிய நாவலை எழுதினார். அப்பொழுது ஸ்பெயினில் உள் நாட்டுச் சண்டை நடந்தது. அவர் ப்ராங்கோவிற்கு எதிராக பணம் சேகரித்து அனுப்பினார். Fifth Column என்ற ஒரு நாடகத்தையும் எழுதினார். ஸ்பெயினில் அவருக்குக் கிடைத்த அனுபவத்தை வைத்து For Whom the Bell Tolls என்ற நாவலை எழுதினார். அந்த நாவலை மற்ற எல்லா நாவல்களையும் விட சிறந்தது என்று சில விமர்சகர்கள் கருதுகின்றனர். ஐரோப்பாவில் நடந்த போர்களுக்குப் பிறகு அவர் கியூபா திரும்பினார். அங்கே எழுதிய நாவல்தான் The Old Man and the Sea. அதற்குப் புலிட்சர் பரிசு கிடைத்தது.

அவர் பல போர்களில் பங்குபற்றினாலும் போர் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது என்பதில் நம்பிக்கை உள்ளவர்.

அவரின் நாவல்கள் அனைத்திலும் அவர் வாழ்ந்த சாகச அனுபவம் உள்ளது. ஒருமுறை தன் நான்காம் மனைவியுடன் சென்ற போது விமானம் விபத்துக்குள்ளானது. இரண்டாம் முறை அதிலிருந்து கதவைத் தலையால் உடைத்து வெளியே வந்தார். விமானம் எரிந்துவிட்டது. அவர் இறந்துவிட்டார் என்று எல்லாப் பத்திரிகைகளும் எழுதின. அதை அவர் காலையில் வாசித்துச் சிரித்துக்கொண்டார்.

1960-இல் அமெரிக்காவிற்குத் திரும்பினார். அப்பொழுது அவர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு இரண்டு முறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். மருத்துவமனையில் இருந்து வந்த இரண்டாம் நாள் அவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அவரின் குடும்பத்தில் ஏழு பேர் தற்கொலை செய்துள்ளனர் என்று கூறப்படுகிறது. நாலு முறை திருமணம் செய்தவர். மூன்று முறை விவாகரத்துப் பெற்றவர். மூன்று ஆண் குழந்தைகளுக்குத் தந்தை.

ஆறு நாவல்கள், ஆறு சிறுகதைத் தொகுதிகள், இரண்டு அல்புனைவு நூல்கள் அவருக்கு அமெரிக்க இலக்கியத்தில் செவ்வியல் தகுதியை கொடுத்தன. 1954-இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு அவருக்கு அளிக்கப்பட்டது. மேல்வரும் சிறுகதை நூறு ஆண்டுகளுக்கு முன் 1924-இல் பிரசுரமானது.)

■ ■

tg.theeban@gmail.com



வாவிக் கரைக்குத் துடுப்பால் வலிக்கும் இன்னொரு சிறிய படகு வந்து சேர்ந்தது. இரண்டு இந்தியர்கள் அதற்காகக் காத்திருந்தார்கள்.

நிக்கும் அவனுடைய தந்தையும் படகின் பின்புறம் ஏறினார்கள். இந்தியர்கள் படகைத் தள்ளினார்கள். அவர்களில் ஒருத்தன் படகை வலிக்க அதில் ஏறினான். ஜோர்ச் மாமா முகாம் படகில் பின்புறம் ஏறி இருந்துகொண்டார். இளம் இந்தியன் முகாம் படகைத் தள்ளி விட்டு ஜோர்ச் மாமாவை வலித்துக்கொண்டு போக உள்ளே ஏறினான்.

இரண்டு படகுகளும் இருட்டில் வெளிக்கிட்டன. அடுத்த படகின் துடுப்புப் பூட்டுகளின் சத்தம் நிக்கிற்குக் கேட்டது. அந்தப் படகு அவர்களுக்கு முன்னால் சற்றுத் தள்ளி பனிப்புகாரில் போய்க் கொண்டிருந்தது. இந்தியர்கள் படகைத் துடுப்பால் வெட்டி வெட்டி வலித்தார்கள். தந்தையின் கைகள் அணைத்துக் கொள்ள நிக் படுத்துக் கிடந்தான். வாவி நீர் குளிராக இருந்தது. அவர்களை அழைத்துச் செல்லும் இந்தியன் படகை மிகவும் கஷ்டப்பட்டு வலித்தான். பனிப்புகாரில் சென்றுகொண்டிருந்த முதல் படகு எல்லா நேரமும் அவர்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்தது.

‘அப்பா, நாங்கள் எங்கே போகிறோம் ?’ என்று நிக் கேட்டான்.

‘இந்தியர்களின் முகாமுக்கு. அங்கே ஒரு இந்தியப் பெண் மிகவும் நோயுற்று கிடக்கிறாள்.’

‘ஓ,’ என்றான் நிக்.

குடாவின் அடுத்த பக்கத்தில் அடுத்த படகு கரையை அடைந்திருந்தது. ஜோர்ச் மாமா இருட்டில் சுருட்டொன்றைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தார். இளம் இந்தியன் வாவிக் கரையில் இருந்து வெகு தூரத்தில் படகை நிறுத்தியிருந்தான். ஜோர்ச் மாமா இரண்டு இந்தியர்களுக்கும் சுருட்டுக் கொடுத்தார்.

வாவிக் கரையிலிருந்து புல்தரை ஊடாக அவர்கள் மேலே நடந்தார்கள். புல்தரை பனித்துளிகளால் மிகவும் ஈரமாகியிருந்தது. அவர்கள் இருவரும் இளம் இந்தியனைப் பின் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தார்கள். இளம் இந்தியன் ஒரு அரிக்கன் விளக்கைக் கையில் பிடித்துக்கொண்டு முன்னால் சென்றுகொண்டிருந்தான். அதன் பின் அவர்கள் காட்டுக்குள் நுழைந்து ஒற்றையடிப் பாதையொன்றால் தொடர்ந்து சென்றார்கள். அது சிறிய குன்றுகளுக்கு இட்டுச் செல்லும் மரங்கள் வெட்டப்பட்டு அமைக்கப்பட்ட ஒரு தெருவுக்குக் கொண்டு சென்றது. மரங்கள் வெட்டப்பட்டு அமைக்கப்பட்டதால் அந்தத் தெருவில் இரண்டு பக்கமும் மரங்கள் செறிவாக இல்லை. இளம் இந்தியன் நின்று, தான் வைத்திருந்த அரிக்கன் விளக்கை ஊதி அணைத்தான். பின் அவர்கள் அனைவரும் தெருநீளம் நடந்தார்கள்.

ஒரு திருப்பத்தை வந்து சேர்ந்தபோது நாயொன்று குரைத்துக்கொண்டு வந்தது. அதற்கப்பால் மரப்பட்டை உரிக்கும் இந்தியர்கள் வசிக்கும் குடிசைகளிலிருந்து வெளிச்சம் வந்தது. இன்னும் பல நாய்கள் அவர்களை நோக்கி விரைந்து வந்தன. இரண்டு இந்தியர்கள் அவற்றைக் குடிசைகளுக்குத் திருப்பி அனுப்பினார்கள். தெருவின் அருகாமையிலிருந்த குடிசையின் யன்னலில் இருந்து ஒரு வெளிச்சம் வந்தது. முதியவள் ஒருத்தி விளக்கை ஏந்தியபடி கதவடியில் நின்றாள்.

குடிசையின் உள்ளே மரக்கட்டிலில் இளம் பெண்ணொருத்தி படுத்திருந்தாள். அவள் இரண்டு நாட்களாகக் குழந்தை பெறுவதற்காக முயன்று கொண்டிருந்தாள். கூடாரத்திலிருந்த முதிய பெண்கள் அனைவரும் அவளுக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். ஆண்கள் அனைவரும் அவள் போடும் சத்தத்திலிருந்து விலகித் தெருவுக்கு அப்பால் இருட்டில் இருந்து புகைப் பிடிக்கப் போய்விட்டார்கள். நிக்கும் இரண்டு இந்தியர்களும் அவனுடைய தந்தையையும் அங்கிள் ஜோர்ச்சையும் தொடர்ந்து குடிசைக்குள் போனபோது அவள் கிரீச்சிட்டு அலறினாள். அவள் கீழ்க் கட்டிலில் மெத்தைக்கு அடியில் பெரிதாகக் கிடந்தாள். அவளுடைய தலை ஒரு பக்கம் சரிந்திருந்தது. மேல் கட்டிலில் அவளுடைய கணவன் கிடந்தான். மூன்று நாட்களின் முன் கோடரி ஒன்றால் தன் பாதத்தை ஆழமாக வெட்டியிருந்தான். அவன் குழாயில் புகை பிடித்துக் கொண்டிருந்தான். அறை மோசமாக மணத்தது.

நிக்கின் தந்தை அடுப்பில் கொஞ்ச தண்ணீரைச் சூடாக்கச் சொன்னார். அது சூடாகிக் கொண்டிருந்தபோது அவர் நிக்குடன் பேசினார்.

‘இந்தப் பெண் குழந்தை ஒன்றைப் பெறப் போகிறாள், நிக்,’ என்றார்.

‘எனக்குத் தெரியும்,’ என்றான் நிக்.

‘உனக்குத் தெரியாது,’ என்றார் தந்தை. ‘நான் சொல்லுவதைக் கேள். அவள் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதை பிரசவ வலி என்று அழைப்பார்கள். குழந்தை பிறக்க முயல்கின்றது. அவளும் குழந்தையைப் பெற விரும்புகிறாள். எல்லாத் தசைகளும் குழந்தை வெளியேறுவதற்காக முயல்கின்றன. அவள் அலறும்போது அது தான் நடக்கிறது.’

‘அப்படியா ?’ என்றான் நிக்.

அந்த நேரத்தில் அந்தப் பெண் அலறினாள்.

‘அப்பா, அவள் அலறுவதை நிறுத்த ஏதாவது மருந்து கொடுக்க முடியாதா ?’ என்றான் நிக்.

‘இல்லை. என்னிடம் மயக்க மருந்தொன்றும் இல்லை. ஆனால் அவளுடைய அலறல் முக்கியமில்லை. அது எனக்குக் கேட்கவில்லை. ஏனென்றால் அவை எனக்கு முக்கியமில்லை,’ என்றார் அவன் தந்தை.

மேல் கட்டிலில் படுத்திருந்த அவளுடைய கணவன் இப்போது சுவர்ப்பக்கம் திரும்பிப் படுத்திருந்தான்.

சமையலறையில் இருந்த பெண் நீர் சூடாக இருக்கிறது என்று மருத்துவருக்கு சைகையில் காட்டினாள். நிக்கினுடைய தந்தை சமையலறைக்குச் சென்று பெரிய கேத்திலில் இருந்து பாதி நீரை ஒரு பேசினில் ஊற்றினார். கேத்திலில் இருந்த மீதி நீருக்குள் ஒரு கைக்குட்டையை அவிழ்த்து அதிலிருந்த பல பொருட்களைப் போட்டார்.

‘அவை எல்லாம் அவிய வேண்டும்,’ என்று சொல்லிவிட்டு, தன் கைகளை பேசினுக்குள் இருந்த நீருக்குள் விட்டுத் தான் முகாமிலிருந்து கொண்டு வந்த சவர்க்காரத்தைப் போட்டுத் தேய்த்தார். இரண்டு கைகளையும் சவர்க்காரத்தால் மாறி மாறி தேய்ப்பதை நிக் கவனித்துக் கொண்டிருந்தான். அவனுடைய தந்தை தன் கைகளை மிகவும் கவனமாகவும் உள்ளும் புறமும் கழுவிக் கொண்டே கதைத்தார்.

‘உனக்குத் தெரியுமா, குழந்தைகள் பிறக்கும்போது முதலில் தலைதான் பொதுவாக வெளியே வரும். ஆனால் சிலவேளை அப்படிப் பிறப்பதில்லை. அப்படிப் பிறந்தால் அவை எல்லோருக்கும் பெரிய பிரச்சினைகளைக் கொண்டு வரும். சிலவேளை இந்தப் பெண்ணுக்கு நான் சத்திர சிகிச்சை செய்ய வேண்டிவரும். அது கொஞ்ச நேரத்தில் எங்களுக்குத் தெரியவரும்.’

தன் கைகளைக் கழுவுவதில் திருப்தியடைந்தவுடன் அவர் வேலை செய்ய உள்ளே சென்றார்.

‘அந்த மெத்தையை இழுத்தெடு ஜோர்ச். அதை நான் தொட விரும்பவில்லை.’ என்றார் தந்தை.

பின் அவர் வெட்டத் துவங்கும்போது அங்கிள் ஜோர்ச்சும் இன்னும் மூன்று இந்தியர்களும் அந்தப் பெண் அசையாமல் இருக்க அவளைப் பிடித்துக் கொண்டார்கள். அவள் அங்கிள் ஜோர்ச்சை கையில் கடித்துவிட்டாள். அங்கிள் ஜோர்ச், ‘படு வேசை!’ என்று திட்டினார். அங்கிள் ஜோர்ச்சை படகில் அங்கே அழைத்து வந்த இளம் இந்தியன் அவரைப் பார்த்துச் சிரித்தான். நிக் தந்தைக்காகப் பேசினைக் கையில் ஏந்திக் கொண்டிருந்தான். அவை அனைத்தும் நடக்க நீண்ட நேரம் பிடித்தன.

அவனுடைய தந்தை குழந்தையை மேலே தூக்கிப் பிடித்து அது மூச்செடுப்பதற்காக முதுகில் தட்டிய பின் முதிய பெண்ணிடம் அதைக் கொடுத்தார்.

‘பார், நிக், இது ஒரு ஆண் குழந்தை. ஒரு மருத்துவ மாணவனாக இப்போது நீ எப்படி உணர்கிறாய்,’ என்றார் அவர்.

‘நன்றாகவே இருக்கிறது.’ அவன் தந்தை செய்வதைப் பார்க்காமல் இருக்க அவன் வேறெங்கோ பார்த்துக்கொண்டிருந்தான்.

‘சரி, புரிந்ததா ?’ என்று சொல்லிக்கொண்டே அவர் பேசினுக்குள்ளே எதையோ போட்டார்.

அதை நிக் பார்க்கவில்லை.

‘இப்போ, சில கட்டுகள் போட இருக்கின்றன. அதை நீ பார்க்கலாம், அல்லது பார்க்காமல் விடலாம், நிக். உன் விருப்பம். வெட்டிய இடத்தை நான் தைக்கப் போகிறேன்,’ என்றார் தந்தை.

நிக் அதைப் பார்க்கவில்லை. அவனுடைய ஆர்வம் எப்போதோ மறைந்துவிட்டது.

அவனுடைய தந்தை தைப்பதை முடித்துவிட்டு எழுந்தார். அங்கிள் ஜோர்ச்சும் மூன்று இந்தியர்களும் எழுந்தார்கள். நிக் பேசினை சமையலறையில் கொண்டு போய் வைத்தான்.

அங்கிள் ஜோர்ச் தன் கையைப் பார்த்தார். இளம் இந்தியன் முந்திய நிகழ்வை நினைத்துச் சிரித்தான்.

‘ஜோர்ச், அந்தப் புண்ணில் கொஞ்ச பெராக்சைட்டைப் போட்டு விடுகிறேன்,’ என்றார் மருத்துவர்.

அவர் இந்தியப் பெண்ணைக் குனிந்து பார்த்தார். இப்பொழுது அவள் அமைதியாகக் கிடந்தாள். அவள் கண்கள் மூடியிருந்தன. அவள் வெளிறிப் போய் இருந்தாள். அவளுடைய குழந்தைக்கு என்ன நடந்தது, எது நடந்தது என்று அவளுக்குத் தெரியாது.

‘நான் காலையில் வருகிறேன்,’ என்றார் மருத்துவர், எழுந்து கொண்டே.

‘தாதி புனித இக்னேசிலிருந்து மதியம் வருவாள். எங்களுக்குத் தேவையானவை எல்லாவற்றையும் அவள் கொண்டு வருவாள்.’

அவர் தன்னைப் பற்றிப் பெருமையாக உணர்ந்தார். அத்துடன் அதிகம் கதைத்துக்கொண்டும் இருந்தார், காற்பந்தாட்டக்காரர்கள் விளையாட்டு முடிந்த பின் ஆடை மாற்றும் அறையில் நின்று ஆரவாரமாகக் கதைப்பதைப் போல.

‘ஜோர்ச், இது மருத்துவ சஞ்சிகையில் எழுதப்படும் ஒரு கட்டுரைக்குரிய நிகழ்வு,’ என்றார் அவர்.

‘சிசேரியன் அறுவைச் சிகிச்சையை பேனாக் கத்தியால் செய்ததும் அதை ஒன்பது அடி நீளத் தூண்டில் கயிற்றால் தைத்ததும் சாதனைதான்,’ என்றார்.

தன் கையைப் பார்த்துக் கொண்டு, அங்கிள் ஜோர்ச் சுவருக்கு எதிரில் நின்றார்.

‘ஓ, நீங்கள் ஒரு பெரிய ஆள்,’ என்றார் ஜோர்ச் மாமா.

‘அந்தக் குழந்தையின் பெருமைக்குரிய தந்தையை பார்க்க வேண்டும். அவர்கள் தான் வழக்கமாக இந்தச் சிறிய சிறிய விஷயங்களுக்காக மிகவும் துன்பம் அடைபவர்கள்,’ என்றார் மருத்துவர். ‘அவன் எல்லாவற்றையும் பொதுவாக அமைதியாகவே எடுத்துக் கொண்டான் என்றே நினைக்கிறேன்,’ என்றார்.

அவர் இந்தியனின் தலையை மூடியிருந்த போர்வையை இழுத்தார். அவருடைய கை நனைந்துவிட்டது. கீழ்ப் படுக்கை விளிம்பில் ஒரு கையில் விளக்குடன் ஏறி அவனைப் பார்த்தார். இந்தியன் தன் முகத்தை சுவர்ப்பக்கம் திருப்பிக் கொண்டு படுத்திருந்தான். அவனுடைய கழுத்து ஒரு பக்க காதிலிருந்து மறுபக்கக் காதுவரை வெட்டப்பட்டிருந்தது. அவன் கிடந்த படுக்கையில் உள்ள தாழ்வான இடத்தில் இரத்தம் குளம் போலக் கிடந்தது. தலை அவனுடைய இடது கையில் கிடந்தது. கழுத்தை வெட்டிய சவரக்கத்தி போர்வையில் கூர்ப்பக்கம் மேலே திரும்பக் கிடந்தது.

‘நிக்கை குடிசையிலிருந்து அழைத்துக் கொண்டு போ, ஜோர்ச்,’ என்றார் மருத்துவர்.

இப்போது அதற்குத் தேவையிருக்கவில்லை. நிக் சமையலறைக் கதவடியில் நின்று அவன் தந்தை விளக்குடன் மேல் கட்டிலில் ஏறி போர்வையை இழுத்து இந்தியனுடைய தலையைச் சாய்த்தபோதே அவன் அந்தக் காட்சியை நன்றாகவே பார்த்து விட்டான்.

மரங்களை வெட்டி தயாரித்த தெருவால் அவர்கள் வாவியை நோக்கித் திரும்ப நடந்து போய்க்கொண்டிருந்தபோது காலை வெளிச்சம் வரத் துவங்கியிருந்தது.

‘நிக், உன்னை அழைத்து வந்ததற்கு நான் மிகவும் வருந்துகிறேன்,’ என்றார் தந்தை. சத்திர சிகிச்சை அளித்த உற்சாகம் எல்லாம் வடிந்துவிட்டது. ‘உன்னைப் பயங்கரமான குழப்பமான நிலைக்கு ஆளாக்கிவிட்டேன்,’ என்றார்.

‘குழந்தைகள் பெறும்போது பெண்கள் இப்படியான மோசமான நிலைக்கு ஆளாவார்களா?’ என்று நிக் கேட்டான்.

‘இல்லை, இது மிக மிக விதிவிலக்கானதொன்று.’

‘அவன் ஏன் தன்னைத்தானே கொன்றான், அப்பா?’

‘எனக்குத் தெரியாது, நிக். நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து அவனால் தாங்கிக் கொள்ள முடியாதிருந்திருக்கலாம் என்று நான் ஊகிக்கிறேன்.’

‘அப்படிப் பல ஆண்கள் செய்வார்களா?’

‘அப்படிப் பலர் செய்வதில்லை, நிக்.’

‘பல பெண்கள் செய்வார்களா?’

‘மிக மிகக் குறைவாகவே பெண்கள் தற்கொலை செய்து கொள்வார்கள்.’

‘அப்படிச் செய்வதே இல்லையா?’

‘ஓ, செய்வார்கள். சிலவேளைகளில்.’

‘அப்பா?’

‘என்ன?’

‘அங்கிள் ஜோர்ச் எங்கே போய்விட்டார்?’

‘எப்படியும் அவர் திரும்பி வருவார்.’

‘சாவது அப்படிக் கஷ்டமானதொன்றா?’

‘இல்லை, நிக். அது மிகவும் சுலபமானது. அது எல்லாவற்றையும் பொறுத்தது.’

அவர்கள் படகில் அமர்ந்திருந்தார்கள். நிக் பின்புறமும், அவன் தந்தை படகை வலித்துக்கொண்டும் இருந்தார். பகலவன் மலைகளுக்கிடையே மேலெழுந்து வந்துகொண்டிருந்தான். பாஸ் மீன் ஒன்று நீரில் வட்டமிட்டுத் துள்ளியது. நிக் நீரைக் கையால் அளைந்து கோடு கிழித்துக்கொண்டிருந்தான். கடுமையாகக் குளிர்ந்த அந்தக் காலையில் நீர் சூடாக இருந்தது.

அதிகாலை நேரத்தில் அந்த வாவியில் அவன் தந்தை படகை வலித்துக்கொண்டிருக்கும்போது தான் சாகவே மாட்டேன் என்று நிக் உறுதியாக நம்பினான்.

*(இங்கே இந்தியன் என்றது அமெரிக்கப் பூர்வீகக் குடிகளை)*



mahalingam.k@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radiusfinancial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner
Chairman's Club Award Winner
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8

# STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

**SARVAA CPA**
PROFESSIONAL CORPORATION

**Our passion is to solve your tax problems:**

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

**Shawn Y. Sarvaa, CPA, CGA**
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER **604 398 7272**
TORONTO **647 219 3110**
CALGARY **403 879 7272**







NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9855
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

